707

தமிழ் நாடு
சட்ட மன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

VOL-30 APR-1990 NO-2

D
V211,31'N90
N90.30.2
4374

வெளியீடு 20-2-1991 Issued 20-2-1991

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 24, 1990 - தொகுதி 30 - எண் 2

Tuesday, the 24th April 1990-Volume 30-No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3-00

## உள்ளடக்கம்.

**24-4-1990**

பக்கங்கள்.


1. வினாக்கள்-விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 121—157

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 157—292

2. தகவல் கோரல்—

(அ) காமராசர் மாவட்டத்தில் சுந்தரராஜபுரம், கிருஷ்ணாபுரம் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஒரு கொலையையொட்டி மக்களிடையே ஏற்பட்டுள்ள கலவர நிலை குறித்து .. 292—300

(ஆ) கைத்தறி நெசவாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி நடத்தும் மறியல் போராட்டம் குறித்து .. 300—302

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அம்சியில் பள்ளிச் சிறுமியை ஆசிரியர் கற்பழித்துள்ளது தொடர்பாக காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்காதது குறித்து .. 302—304

(ஈ) காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லியில் பிரதமரைச் சந்தித்துப் பேசியது குறித்த விவரம் .. 304—312

(உ) சென்னை ஆர். கே. நகர்ப் பகுதியில் சுவர் இடிந்து விழுந்ததால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்தல் .. 315—319

3. கவன ஈர்ப்பு—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் சிவந்திபுரத்தில் ஊராட்சி வழங்கும் குடிநீரால் மக்களுக்கு ஏற்படும் கேடுகள் குறித்து .. 313—315

(ஆ) திருச்சி மாவட்டத்தில் சில கூட்டுறவுச் சங்கங்களின் அலுவலர்கள் விசைத்தறி உருப்படிகளை கைத்தறி உருப்படிகளாக விற்பனை செய்த மோசடிகள் குறித்து .. 315—318

| | பக்கங்கள். |
|---|---|
| 4. அறிக்கை அளித்தல்— | |
| அரசு உறுதிமொழிக் குழு .. | 319 |
| 5. மானியக் கோரிக்கைகள், 1990–91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. | |
| கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். | |
| மாண்புமிகு திரு. கோ. சி. மணி .. | 319—504 |
| | 461—496 |
| *திரு. க. பழனிசுவாமி .. .. | 321—327 |
| திரு. எஸ். பி. கண்ணன் .. .. | 328—330 |
| திரு. கே. ரவி அருணன் .. .. | 331—335 |
| *திரு. மு. க. ஸ்டாலின் .. .. | 337—347 |
| திரு. எஸ். ஏ. தங்கராஜன் .. .. | 347—352 |
| திரு. எம். அப்துல் லத்தீப் .. .. | 353—354 |
| | 356—365 |
| *திரு. எல். மூக்கையா .. .. | 366—371 |
| திரு. கே. ஆர். இராமசாமி .. .. | 371—376 |
| திரு. செங்கைசிவம் .. .. | 377—379 |
| திரு. ஜி. பழனிச்சாமி .. .. | 380—386 |
| திரு. கோ. பூவராகன் .. .. | 387—393 |
| திரு. என். கணபதி .. .. | 394—396 |
| திரு. மு. சின்னக்குழந்தை .. .. | 397—402 |
| திரு. பி. எச். பாண்டியன் .. .. | 402—407 |
| திரு. டி. ஆர். கஜபதி .. .. | 408—413 |
| *திரு. ஜெ. அசேன் .. .. | 413—418 |
| திருமதி பி. வெட்சுமி .. .. | 419—423 |
| திரு. ரா. சொக்கர் .. .. | 423—429 |
| திரு. கே. ஆர். சுந்தரம் .. .. | 429—435 |
| *திரு. ஏ. செங்குட்டுவன் .. .. | 435—439 |
| திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் .. .. | 440—444 |
| திரு. பெ. வெங்கடாசலம் .. .. | 444—450 |
| திரு. கே. ஏ. செங்கோட்டையன் .. | 450—463 |
| 6. அரசினர் தீர்மானம்— | |
| பேரவை விதிகள் 36 மற்றும் 37-ஐத் தளர்த்தி விதி 95 இன் கீழ் ஒரு தீர்மானத்தை அவையில் எடுத்துக் கொள்ளுதல் .. | 354 |
| 7. அரசினர் தனித் தீர்மானம்— | |
| காவிரி நீர்ப் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு விட வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்க மத்திய அரசைக் கோருதல் .. | 354—356 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். | 504—505 |


144374
சென்னை-600

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 11, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021,

1990 ஏப்ரல் 24, செவ்வாய்க்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில், காலை 9-00 மணியளவில், பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்".

மலைபோல உயர்ந்த நிலையில் உள்ளவரும், ஒன்றுபட்டு இயங்காமல், அழிவுக்குக் காரணமான செயல்களை, ஒரு குன்றிமணியளவு செய்தாலும், அழிந்து போய் விடுவர்.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

கல் மெருகூட்டும் தொழிற்சாலை.

* 4366—திரு. வி. தமிழ்மணி :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கற்பட்டு தாலுகா, புலிக்குன்றம் கிராமப் பகுதியில் எடுக்கப்படும் கல்லைக் கொண்டு பாலிஷிங் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதற்கான தனியான திட்டம் ஏதும் தேவையில்லை. ஏற்கனவே அரசுத் துறையில் இந்த மாவட்டத்தில் 100 விழுக்காடு ஏற்றுமதிக்கேற்ற மெருகூட்டும் தொழிற்சாலை மணலியில் 1986-ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

திரு. வி. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு வட்டத்தில், செங்கல்பட்டு தொகுதி என்பது, மிகவும் பின்தங்கிய தொகுதி. செங்கற்பட்டு வட்டத்தில் இரண்டு தொகுதிகள் இருக்கின்றன. அதிலே, செங்கற்பட்டுத் தொகுதியில் இதுவரையில் எந்தவிதமான ஒரு தொழிற்சாலையும் அரசாலோ, தனி நபராலோ ஆரம்பிக்கப்படவில்லை. இங்கே மிக அருமையான கற்கள் கிடைப்பதால், ஒரு பெருகூட்டும் தொழிற்சாலை ஏற்படுத்தினால், அந்தக் கற்களை பெருகூட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், அதிக அந்நியச் செலாவணி ஈட்டுகின்ற நிலை ஏற்படும். அந்த வகையிலே, அங்கே ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை-அண்ணா மாவட்டம், சம்புவராயர், வட ஆற்காடு அம்பேத்கார், தென்னாற்காடு, சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில், இந்தக் கல்லைக் கொண்டு போய் ஏற்றுமதி செய்வதற்கு, பெருகூட்டுகின்ற பணிகள் பல இடங்களில் நடைபெறுகின்றன. குறிப்பாக, செங்கை-அண்ணா மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மணலியில் இந்தத் தொழிற்சாலை இயங்கி வருகிறது. தனியாக ஒரு திட்டத்தை ஏற்படுத்துகின்ற அளவுக்கு இப்போது எந்த யோசனையும் செய்யப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினரின் யோசனையைக் கொண்டு, அதுபற்றிப் பிறகு ஆராயலாம்.

திரு. வி. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் புலிக் குன்றம் தொகுதியிலே இதுவரையில் எடுக்கப்பட்டிருக்கிற கல்லின் அளவு எவ்வளவு? இதனால் அங்கே பயன்படுகின்ற தொழிலாளர்கள் எவ்வளவு? இப்போது அது லாபத்தில் இயங்கி வருகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் இங்கே கல்லே எடுக்கவில்லை என்று கேள்வி கேட்டார். இப்போது, எவ்வளவு கல் அங்கே எடுக்கப்படுகிறது என்று கேட்கிறார். பொதுவாக செங்கை-அண்ணா மாவட்டத்தில், பரவலாக இந்தக் கற்கள் எடுக்கப்பட்டு, தொழில் நடைபெறுகிறது.

**பைபர் பிளாஸ்டிக் குழாய்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.**

* 4507— திரு. எஸ். என். எம். உபயதுல்லா :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசு முதலீட்டில் பைபர் பிளாஸ்டிக் குழாய்கள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை தஞ்சையில் அமைக்க அரசு முன்வருமா?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சையில் பைபர் பிளாஸ்டிக் குழாய்கள் தயாரிக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளாஸ்டிக் தொழிற்சாலை, குறிப்பாக, High Density Poly Propylene (HDPP) தொழிற்சாலை, தமிழகத்தில் மிகுந்த நலிந்த நிலையில் உள்ளது. இதற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற கச்சாப் பொருட்கள் Granules போன்றவைகளுக்குச் சலுகைகள் அளிப்பதற்கு, மத்திய அரசை, இந்த அரசு வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தேவை ஏற்படின், மத்திய அரசுக்குக் கோரிக்கை வைக்கும்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரப் பகுதிகளில் போடப்படும் ஆழ்துளைக் கிணறுகளுக்கு, இந்த பிளாஸ்டிக் பைப்புகள் உபயோகப்படுத்துகின்ற வகையில், தஞ்சையில் தொழிற்சாலை அமைப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக, நான் இதற்கு விடையளிக்க இயலாது. அதனுடைய தேவையை உணர்ந்து அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலை தஞ்சையிலே அமைக்கலாமா என்பது குறித்துப் பின்னர்தான் பரிசீலிக்க வேண்டும்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளாஸ்டிக் குழாய் தொழிற்சாலை, தஞ்சையிலே அமைக்கிற உத்தேசம் இல்லையென்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பிளாஸ்டிக் தேவை அதிகமாக அதிகரித்து வருவதால், வேறு எங்காவது தமிழ்நாட்டில் இந்தத் தொழிற்சாலை அமைக்கக்கூடிய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

காலை 9.05

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடலூரில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இத்தகைய தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டு, அது மிகுந்த இழப்பீட்டுக்கிடையே நடைபெற்று இப்போது இந்த அரசு அதிலே சில மாற்றுத் திட்டங்களை உருவாக்கி, இலாபகரமாக அதை இயக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிளாஸ்டிக் குழாய் தயாரிக்கின்ற தொழிற் சாலை தஞ்சை மாவட்டத்திலே அமைக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து இங்கே மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்டிருக்கிறார். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், தஞ்சையை, industrially most backward என்று அறிவித்திருக் கின்றார்கள். அதைப் பயன்படுத்தியாவது, தஞ்சையிலே பிளாஸ்டிக் குழாய் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைப்பதற்கு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர் களே, பின் தங்கிய பகுதிகள் என்று அரசு அறிவித்துள்ள இடங்களை ஆங்காங்கு உள்ள தொழில் முனைவோர்கள்தான் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமேயல்லாமல், அரசே அதைப் பயன்படுத்திக் கொள்வதென்பது இயலாத காரியம்.

### கைதிகள் செய்யும் வேலைகளுக்கு ஊதியம் வழங்குதல்.

*7042—பேராசிரியர் க. பொன்னுசாமி :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) மத்திய சிறைகளில் கைதிகள் செய்யும் வேலை களுக்கு அரசு வழங்கும் ஊதியத்தை உயர்த்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே,

(அ) ஆம். ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டது.

(ஆ) அரசாணை எண் 1287, உள் (சிறை 3) துறை, நாள், 11—7—1989-ல் தேர்ச்சி அடைந்தவர்களுக்கு ரூ. 1.00 என்றிருந்தது ரூ. 2.00 ஆகவும், அரைத் தேர்ச்சியடைந்தவர்கள் ரூ. 0.50 என்றிருந்தது ரூ. 1.00 ஆகவும், தேர்ச்சி பெற்றவர்கள் ரூ. 0.25 என்றிருந்ததை ரூ. 0.50 ஆக மாற்றி யமைத்து ஆணை வெளியிடப்பட்டது.



திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட காரணங்களுக்காக, அதாவது ஒரு 'sudden provocation' காரணமாகக் குற்றம் புரிந்து, தண்டனை அடைந்து ஆயுள் கைதியாகப் பலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வழக்கமாகக் குற்றம் புரிபவர்கள் அல்லர். சிறைச்சாலையிலுள்ள அதிகாரிகள், அவர்கள் இனி மேல் குற்றம் புரிய மாட்டார்கள் என்று அவர்களுக்குப் பரிந்துரை செய்யக்கூடிய. பட்சத்தில் ஓராண்டுக் காலம் அவர்களைப் பார்த்து, அவர்களை வெளியே அனுப்பினால் ஆபத்தில்லை என்ற சூழ்நிலையில் பகலிலே தனியார் தொழிற்சாலையிலோ அல்லது அரசுத் தொழிற்சாலையிலோ அவர்கள் தொடர்ந்து தொழில் புரிய, இரவு நேரங்களில் தண்டனைக் காலம் முடியும் வரையிலும் அவர்களைச் சிறைச்சாலையிலே வைத்தால், கைதிகளுக்குப் புனர்வாழ்வு அளித்தது போலவும் இருக்கும். அவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தேடிக் கொடுத்தும், விடுதலை ஆகி வந்த பிறகும் தொடர்ந்து அவர்கள் பணியிலே இருக்கக் கூடிய வகையிலே செய்ய முடியும் என்ற காரணத்தால் இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய நீண்ட கேள்வியை எழுதி அனுப்பினால், அதற்கு ஒரு விளக்கமான பதில் அளிக்கலாம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாள் சிறைத் தண்டனை அடைந்து சிறைகளிலே இருக்கக் கூடிய கைதிகளைக் கொண்டு அரசுத் துறை அணைக்கட்டுகள் மற்றும் பாலங்கள் போன்ற வெளியிலே நடக்கக் கூடிய வேலைகளுக்கு, அந்தக் கைதிகளைக் கொண்டு வந்து வேலை வாங்கும் பழக்கம் முன்பு இருந்ததாகத் தெரிகிறது. அதை மீண்டும் கொண்டு வந்து, அந்தக் கைதிகளை வெளியிலே வேலைகளுக்குப் பயன்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அப்படி முன்பு இருந்ததாக எனக்குத் தெரியாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இதை ஒப்புக் கொள்கிறாரா என்பதும் ஒரு கேள்வி. அப்படி சிறைக் கைதிகளைக் கொண்டு போவதானால், பாதுகாப்பு எல்லாம் தேவையாக இருக்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை வேண்டு மானால் பரிசீலிக்கலாம்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறையிலுள்ள கைதிகள் ஆடை நெய்வது, தச்சு வேலை செய்வது, காலணி செய்வது போன்ற வருவாய் பெறக் கூடிய வேலைகளைச் செய்கிறார்களே, அவர்களுக்கு இப்போது நிச்சயித்துள்ள கூலியை உயர்த்திக் கொடுக்க அரசு ஏதாவது முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியைப் போலவே இருக்கிறது. விடை தேவை இல்லை. (குறுக்கீடு) ஒரு சிறிய அறிவிப்பு. வினாக் கேட்கிறவர்கள் மூலக் கேள்வியையும் படித்துப் பார்க்க வேண்டும். காதால் கேட்டுக் கொள்ள வேண்டும். அதற்குப் பிறகும் மூலக் கேள்வியையே திரும்பவும் மூன்றாவது தடவையாகக் கேட்டால் என்ன பொருள்? (குறுக்கீடு) அது மூலைக் கேள்வியாக இருக்க வேண்டும். (சிரிப்பு)

### சார்நிலை நீதிபதி பணியிடங்கள்.

* 8342—திரு. ஆ. அறிவழகன் :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது நமது மாநிலத்தில் 60 சார்நிலை நீதிபதிகளின் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தகுதியான நபர்களைத் தேர்வாணையத்தின் மூலமாக தேர்வு செய்து நிரந்தரமாக நியமனம் செய்ய அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. ஆ. அறிவழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நீதிபதி ஓய்வு பெறுகின்றார் என்பது எப்போதோ மாநில சட்டத் துறைக்கும், நீதித் துறைக்கும் நன்கு தெரியும். அப்படியிருக்கும்போது, அவர் ஓய்வு பெறும் வரை காத்திருந்து, பின்னர் 6, 7 மாதங்கள் அப்பணியிடத்தைக் காலியாக வைத்திருந்து, பிறகு சட்ட மன்றத்தில் இதுபோன்ற வினாக்களை எழுப்பிய பிறகு இடங்களை நிரப்ப வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. முன்கூட்டி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபோன்ற வாக்கியம் எல்லாம் சொல்லக் கூடாது. சட்ட மன்றத்திலே எழுப்பினால் தான் நிரப்புவார்கள் என்பது குற்றச்சாட்டு மாதிரி ஆகிவிடும். வினா மட்டும் கேளுங்கள்.





காலை 9-10 மணி

திரு. ஆ. அறிவழகன் : முன்கூட்டியே தகுதியான ஆட்களைத் தேர்வு செய்து, ஓய்வு பெறுகின்ற நீதிபதியை நிரப்ப வேண்டுமென்ற என்னுடைய அவாவை, இந்தத் திட்டத்தை அமைச்சர் நிறைவேற்றுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீதிபதியை நிரப்புவதா? அல்லது நீதிபதியினுடைய இடத்தை நிரப்புவதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை எழுப்புவதற்கு முன்னாலே அரசின் மூலமாகவும், உயர்நீதி மன்றத்தின் மூலமாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 1988—89 ஆம் ஆண்டில் மாவட்ட முன்சீப்களாக 128 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு ஏற்பட்ட நிலைமை காரணமாக 60 இடங்கள் காலியாகலாம் என்றும், ஆக மொத்தம் 75 பேரைத் தேர்ந்தெடுக்கலாம் என்றும் அரசும் நீதிமன்றமும் முடிவு செய்து தேர்வாணையத்திற்கு தெரிவிக்கப் பட்டிருக்கிறது. 75 பேரை நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்ய வேண்டுமென்று உயர்நீதி மன்றம் செய்த பரிந்துரையை ஏற்றுக் கொண்டு, அப்பரிந்துரைக்கு ஏற்ப 75 பேர்களைத் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று தேர்வாணையம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விகளை வைத்து, தேர்வாணையமும் கால தாமதம் செய்யாமல் இந்தத் தேர்வை நடத்தும் என நான் நம்புகிறேன்.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு அதிக எண்ணிக்கையில் நீதிபதிகளின் பணியிடங்கள் காலியாக இருப்பதால் எவ்வளவு ஆயிரம் வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்பது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். தாமதிக்கப்பட்ட நீதி என்பது மறுக்கப்பட்ட நீதிக்குச் சமமாகும் என்று சொல்வார்கள். எனவே, அப்பணியிடங்களை விரைவில் நிரப்ப அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபற்றி 9 மாதங்களுக்கு முன்னாலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. உயர் நீதிமன்றத்திடம் கருத்து கேட்கப்பட்டது. அந்தக் கருத்து வந்த பிறகும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, தேர்வாணையமும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. நான் விளக்கமாகச் சொல்வேன், தேர்வாணையம் இந்தத் தேர்வை நடத்த வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினரின் கேள்வி

குறித்து தேர்வாணையம் விரைவில் இவைகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்று நான் நம்புகிறேன். 67 இடங்கள் காலியாக இருப்பதால் எவ்வளவு வழக்குகள் தேங்கியிருக்கின்றன என்பதைப் பற்றிய குறிப்பு இல்லை.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மாவட்ட முன்சீப்களைத் தேர்ந் தெடுக்க வேண்டுமென்று தேர்வாணையத்திற்கு அறிவுறுத்தியும் கூட மீண்டும் தேர்வாணையத்திலிருந்து அரசுக்கு எக்சாமி னேஷன் வைத்த பின்பு இந்த டிஸ்ட்ரிக்ட் முன்சீப் எடுக்க முடியும் என்று அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்களா? அந்த நிலை நீடித்தால் மீண்டும் 6 மாத காலம் தாமதமாகுமே. ஆகவே அரசு தொடர்ந்து என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தேர்வாணையம் ஒரு சுயாட்சி அமைப்பு, Autonomous body. எனவே, அதில் தலையிட நமக்கு அதிகாரம் இல்லை. அவர் ஏதாவது கருத்தைச் சொன்னால், பரிசீலித்து நாம் முடிவு செய்து அரசாங்கத்தின் சார்பில் தெரிவிக்கலாம்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதிகள் இல்லாமல் வேறு நீதிபதிகள் வாரத்திற்கு ஒரு முறை வந்து கோர்ட்டுகளை நடத்திக் கொண்டிருக்கிறார் களே, அப்படிப்பட்ட கோர்ட்டுகளுக்கு எல்லாம் நீதிபதிகளை நியமிக்கின்ற உத்தேசம் இருக்கிறதா? அப்படி என்று சொன்னால் தமிழகத்தில் நீதிபதிகள் தொடர்ந்து இல்லாத அதுபோன்ற கோர்ட்டுகள் எத்தனை இருக்கின்றன என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர் களே, 60 இடங்கள் காலியாக இருக்கின்றன என்றுதான் குறிப்பு இருக்கிறது. எதிர்காலத்தை மனதில்கொண்டு 75 பேரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று அரசு முடிவு செய்திருக் கிறது. சில இடங்களில் 'Camp Court ஆக' நீதிமன்றங்கள் நடைபெறுகின்றன. இந்த 75 இடங்கள் நிரப்பப்படுமேயானால், அந்த 'Camp Court' தேவையில்லாமலே போகலாம் என்று நான் கருதுகிறேன்.

திரு. வை. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது காலியாக இருக்கின்ற சார்நிலை நீதிபதி களுடைய பணியிடங்கள் நிரப்பப்படுகின்றபோது அவர்கள் எல்லாம் நேரடியாக நிரப்பப்படுவார்களா? அல்லது ஏற் கெனவே முன்சீப்களாக இருக்கின்றவர்கள் சார்நிலை நீதிபதி களாக உயர்த்தப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, ஒரு சார்நிலை நீதிமன்றம் என்பது Subordinate Judiciary அது சப்-ஜட்ஜுகளைக் குறிக்கும். டிஸ்டிரிக்ட் முன்சீப்களையும் குறிக்கும். சப்-ஜட்ஜுகளைப் பொறுத்த வரையில் டிஸ்டிரிக்ட் முன்சீப்களிலிருந்து பதவி உயர்வு அளிக்கப் படுகிறது. அது நீதிமன்றம் செய்கின்ற வேலை. மாவட்ட முன்சீப்புகளைப் பொறுத்துதான் இப்போது பிரச்சினை. அவர் களைத் தேர்ந்தெடுப்பதற்குத்தான் இந்தத் தேர்வாணையம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

### ஆக்கிரமிப்புக்கு இலக்காகியுள்ள பொது நிலங்கள்.

*1457—திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆக்கிரமிப்புக்கு இலக்காகியுள்ள பொது நிலங்களை ஆட்சேபத்துக்குரிய அல்லது ஆட்சேபத்துக்குரியவை அல்லாத ஆக்கிரமிப்புகள் என்று வகைப்படுத்துவதில் என்ன கோட்பாடு கடைபிடிக்கப்படுகிறது?

(ஆ) இந்தக் கோட்பாடுகள் நிலமற்ற ஏழைகள், மற்றவர்கள் என்ற அடிப்படையில் மறுபரிசீலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு அரசு நில ஆக்கிரமிப்புச் சட்டத்தில் கண்டுள்ள சரத்துக்களின்படியும், அவ்வப்போது அரசு வெளியிடும் ஆணைகளின்படியும், நில ஆக்கிரமிப்புகள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவை ஆட்சேபனைக்குரியவை மற்றும் ஆட்சேபனை அற்ற ஆக்கிரமிப்புகள் என்று வகைப்படுத்தப் பட்டுள்ளன. இவற்றில் அரசுப் புறம்போக்கு நிலமாக இருந்து, அந்நிலங்கள் பொது நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்பட்டு வரும் நிலங்கள், அதாவது கால்வாய் புறம்போக்கு இடுகாட்டுப் புறம்போக்கு, போககுவரத்துச் சாலைகள், மேய்ச்சல் புறம்போக்குகள், நீர்நிலைப் புறம்போக்கு போன்ற அரசு நிலங்களில் செய்யப்படும் ஆக்கிரமிப்புகள் ஆட்சேபனைக் குரியவையாகும்.

இது தவிர ஏனைய ஆக்கிரமிப்புகள் அரசுக்கோ, பொது நலன்களுக்கோ பயன்படாத புறம்போக்காக இருந்தால் அவைகள் ஆட்சேபனையற்ற ஆக்கிரமிப்புகளாகும்.

(ஆ) ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்களில் நில
ஆக்கிரமிப்பாளர்கள் மிகவும் ஏழைகளாக இருந்தால் இவர்கள்
இலவசமாக நிலப் பட்டா பெறத் தகுதியுடையவர்களாவர்.
நில ஆக்கிரமிப்பாளர்கள் வசதி படைத்தவர்களாக இருந்தால்
நிலத்தின் அன்றைய மதிப்பு அவர்களிடமிருந்து வசூல் செய்த
பின்பு நிலம் ஒப்படை செய்யப்படுகின்றது.

9-15 மணி

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழ்நாட்டில் ஆக்கிரமிப்பு நிலங்களைப் பற்றி
யெல்லாம் ஒரு சோதனை ஆய்வு நடத்தியதிலே 75 விழுக்காடுக்கு
மேற்பட்ட ஆக்கிரமிப்புகள் எல்லாம், வசதி படைத்தவர்கள்,
ஒரு ஏக்கரா அல்லது மூன்று ஏக்கராவுக்கும் அதிகமாக உள்ளவர்
கள்தான் செய்திருக்கிறார்கள் என்று தெரியவந்துள்ளது.
ஆர்ஜிதம் அற்றவை என்று வரையறை செய்யப்பட்டு, அவை
யெல்லாம் சரியான முறையிலே இருக்கிற காரணத்தினால்,
அந்த நிலங்களைக் கூட ஏழை மக்களுக்கு நிலமற்ற வீட்டுமனை
யற்ற ஏழை மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு இல்லாத
நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இவற்றைப் பாகுபடுத்துவதிலும்,
நிலமற்ற ஏழைகள், மற்றவர்கள் என்ற வகையிலே பாகுபடுத்த,
மறுபரிசீலனை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பைப் பொறுத்த
வரையில், சென்னை, செங்கை—அண்ணா மாவட்டம் ஆகிய
இரண்டு மாவட்டங்களிலேதான் அதிகமான ஆக்கிரமிப்புகள்
நடைபெறுகின்றன. இதிலே வகைப்படுத்தப்பட்ட சில நிலங்
களைப் பற்றிச் சொன்னார்கள். ஆட்சேபத்திற்குரிய நிலங்கள்
அரசுக்குரிய நிலங்கள் என்பதைப்பற்றி சொன்னார்கள்.
ஏற்கனவே, இந்த மாமன்றத்தில் நான் பேசும்போது ''கிளாஸி
பிகேஷனை''ப் பொறுத்தவரையில் மாறுதல் தேவை என்று நான்
குறிப்பிட்டிருக்கிறேன். முதலமைச்சரோடு கலந்து பேசி, அதுபற்றி
தீர்மானிக்கலாம் என்று நான் சொல்லியிருக்கிறேன். இப்போது
இருக்கிற நிலைமை, ஏராளமான ஆக்கிரமிப்புகள் எங்கேயும்
நடைபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன்
அவர்கள் தெரிவித்ததைப் போல, ஏறத்தாழ 60 விழுக்காடு,
70 விழுக்காடு என்ற அளவுக்கு ஆக்கிரமிப்புகள் நடைபெறு
கின்றன. கலெக்டர்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்
கின்றன. அப்படி ஆக்கிரமிக்க யாராவது முயற்சிப்பார்களே
யானால், குடிசைப் போடுவார்களேயானால், உடனடியாக
அவர்களைத் தடுத்து நிறுத்தி, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு
வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று
கலெக்டர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். நிலமுள்ள





விவசாயி, நிலமற்ற விவசாயி என்று இரண்டாகப் பிரிக்க
வேண்டுமென்று திரு. வரதராசன் அவர்கள் தெரிவித்தார்கள்.
நிலமற்ற விவசாயிகளுக்கு கொடுப்பதுதான் இந்த அரசின்
பொறுப்பான கடமை, இந்த அரசின் கொள்கை என்பதையும்
நான் மீண்டும் ஒரு முறை வலியுறுத்தி, நிலமற்ற விவசாயிகளுக்கு
நிலம் வழங்குகின்ற முயற்சியில், நிச்சயமாக இந்த அரசுக்கு
யாராவது ஆக்கிரமிப்பு செய்ய முனைவார்களேயானால், அவர்
களை இனம் கண்டு கொண்டு, கண்டித்து, எங்களுக்குத் தெரி
விக்க வேண்டுமென்று, மாண்புமிகு உறுப்பினர், திரு. வரதராசன்
அவர்கள் இந்தப் பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஆட்சேபத்திற்குரியது என்று வகைப்படுத்துவதிலே,
நீர் வழி புறம்போக்கு, கால்வாய் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்
போக்கு போன்றவை எல்லாம் இருக்கின்றன. பல இடங்களிலே
அவை அந்த உபயோகத்திற்கு—நீர் வழி அல்லது ஏரிக்குப்
போகக்கூடிய வாய்ப்புகள் இல்லாமல் இருக்கக்கூடிய
நிலைமை ஏற்படுகிறது. உதாரணமாக, அம்பத்தூர் ஏரியிலே
உள்ள பகுதி, இன்றைக்கு வீட்டுவசதி வாரியத்தால் ஆர்ஜிதம்
செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு வரப்பாக
உள்ள பகுதிகளிலே, நீர்நிலை புறம்போக்கு என்று வகைப்
படுத்தப்பட்டு, அங்கே குடியிருக்கக்கூடிய ஏழை மக்களுக்கு
வீட்டு மனைப் பட்டா வழங்குவது என்பது தடைப்பட்டிருக்
கிறது. ஆகவே, இடத்தை மாற்றி, உண்மையிலேயே நீர்
நிலைகளாக பயன்படுத்த உள்ளதைத் தனியாகவும், நீர்
நிலைகளாக பயன்படுத்த இயலாதவற்றை ஆட்சேபத்திற்குரியது
என்ற பட்டியலிலிருந்து அகற்றி, ஏழை மக்களுக்கு வீட்டு
மனைப் பட்டா வழங்குவதற்குரிய மாற்றம் செய்யப்படுமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, விடை அளித்தால் புரிந்து
கொள்கிற ஆற்றல், திரு. வரதராசன் அவர்களுக்கு உண்டு
என்பது எனக்குத் தெரியும். 'Reclassification' தேவை
என்ற கருத்து அரசுக்கு இருக்கிறது என்று ஏற்கனவே சொன்
னேன். மேய்ச்சல் நிலம் என்று சொல்லப்படும் இடத்தைப்
பற்றிக்கூட இந்த மாமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். ஒரு
புல் கூட அங்கே முளைக்காது. அப்படி தப்பித் தவறி ஒரு
புல் முளைத்தால்கூட, அந்தப் புல்லைச் சாப்பிடுவதற்கு,
100 மைல் தூரத்திலிருந்து ஆடுமாடுகள் வரவேண்டியிருக்கும்.

ஆகையினாலே அப்படிப்பட்ட நிலங்கள் நிலம் என்ற தகுதியை இழந்த நிலங்களாகக் கருதப்படவேண்டு மென்பதில், அரசிற்கு ஆட்சேபனை இல்லை. அதுகுறித்து யோசிக்க அரசு தயாராக இருக்கிறது என்று நான் திருப்பி இங்கே சொல்லியிருக்கிறேன். திரு. வரதராசன் அவர்கள் விளங்கிக் கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். மேய்ச்சல் திருப்பித்

9-20 மணி

திரு. வி. **தம்புசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சேபனைக்குரிய இடம் என்று தெரிந்த பிறகு, அதில் நிலமற்றவர்கள் குடியிருப்பார்களேயானால், அவர்களுக்கு மாற்றுக் குடிமனை வழங்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக யோசித்து அரசு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. **அழகர்சாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது புல் தரையோ, ஓடைப் புறம்போக்கோ, சாதாரண கால்வாய்ப் புறம்போக்கோ என்ற இடங்கள் இப்போது அதேமாதிரி கால்வாயி னுடைய உபயோகத்திற்காகவோ, ஓடையினுடைய உபயோகத் திற்காகவோ, மேய்ச்சல் உபயோகத்திற்காகவோ தேவை இல்லாமல் இருப்பதாகச் சொன்னார்கள். அப்படிப்பட்ட பல இடங்களில் குடிசை போட்டு இருக்கிறவர்களுக்கு, காலத்திலே நிலத்தினுடைய தரங்களை மாற்றிக்கொடுக்கக்கூடிய அந்த ஏற்பாடு ரெவின்யூ டிபார்ட்மெண்ட்டால் செய்யப்படவேண்டுமே, ஓடைப் புறம்போக்கு என்று இருக்கிறது, இப்போது ஓடையே அந்த இடத்தில் அவசியம் இல்லை, ஓடையும் இல்லை, அதேமாதிரியாக, இருக்கிற நிலையில் உடனடியாக அந்தத் தரங் களை மாற்றக்கூடிய அந்தப் பணிகளை சீக்கிரமாகச் செய்து. ஆங்காங்கு குடியிருக்கக்கூடிய ஏழைகளுக்குப் பட்டா வழங்குகிற ஏற்பாட்டை துரிதம் ஆக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : அண்ணன் அழகர்சாமிக்கு ஒரு கேள்வி கேட்கவேண்டும் என்பதற்காக..— (சிரிப்பு) நான்தான் சொல்லியாகிவிட்டதே முதலிலேயே, ரீகிளாசிபிகேஷன் (குறுக்கீடு) வேகமாகச் செய்யவேண்டுமா, (குறுக்கீடு) சரி, செய்யலாம்,**





**திருமதி ஏ. எஸ்.** பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலிலே நீர் வரக்கூடிய இடங்களில் எல்லாம், அதற்கு எல்லாம் கிளாசிபி கேஷன் செய்ய இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், சில இடங்களில் கண்மாய்கள் இருக்கின்றன. அந்த பிரைவேட் கண்மாய்களை சர்க்காருக்குத் தானமாகக் கொடுத்து, அதை அரசாங்கம் புறம்போக்காக டிக்ளேர் பண்ணி, பொதுமக்களுக்குத் தேவையான சமயத்திலே அவர்கள் உபயோகப்படுத்தச் செய்யவேண்டும் என்று இருக்கிறது. அப்படியே கொடுத்திருக் கிறோம், பல பேர்களுக்கு. ஆனால், அந்த நிலங்களிலே, நிலம் உள்ளவர்களுக்கே பட்டாப் போட்டுக் கொடுத்து, விவசாயம் செய்கின்ற காரணத்தினாலே, அந்த ஊர் மக்களுக்கு மாடு, கன்று விடுவதற்கோ, தண்ணீர் தேக்குவதற்கோ சிரமமான சூழ்நிலை இருக்கிறதே, இதையெல்லாம் பரிசீலனை செய்து, எங்கெங்கெல்லாம் 1958-க்கு முன்பாகவே புறம்போக்காக இருந்ததோ, அந்த நிலங்களை மீண்டும் புறம்போக்காக ஆக்கிக் கொடுத்து, மக்கள் பயன்படக்கூடிய அளவிலே செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.** நாஞ்சில் இ. **மனோகரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த இடங்களில் அப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகின்றன என்று மதிப் பிற்குரிய அக்கா பொன்னம்மாள் அவர்கள் தெரிவிப்பார்களா னால், உடனடியாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டா வழங்குதல்.

*3554—திரு. எல். மூக்கையா :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) கொடைக்கானல் மேல்மலைப் பகுதியிலும், கீழ்மலைப் பகுதியிலும் 15 ஆண்டுக் காலத்திற்கு மேலாக விவசாயிகள் சொந்தமாக வைத்து விவசாயம் செய்து கொண்டிருக்கும் நிலங்களுக்கும், குடியிருக்கும் வீடுகளுக்கும் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பட்டாக்கள் வழங்கப் படும்?

[1990 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இது போன்ற செயற்குறிப்பு எதுவும் அரசிடம் தற்
பொழுது இல்லை.

(ஆ) மாநிலத்தில் உள்ள அனைத்து மலைப்பிரதேசங்
களிலும் விவசாயத்திற்கு ஒப்படை வழங்குவதற்கு அரசாணை
நிலை எண். 1168, வருவாய், நாள் 25-7-1989-இல் தடை
விதிக்கப்பட்டுள்ளது. எனவே, உறுப்பினர் குறிப்பிட்டுள்ள
கொடைக்கானல் பகுதியில் விவசாயத்திற்கு நில ஒப்படை
வழங்க இயலாது. வீட்டுமனையைப் பொறுத்த வரையில் ஆக்
கிரமிப்பில் உள்ள இடம் தன்மையைப் பொறுத்து, தகுதியின்
அடிப்படையில் விதிகளின்படி ஒப்படை வழங்கப்படும்.

திரு. எல். மூக்கையா : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கொடைக்கானல் மேல்மலைப் பகுதியிலும், கீழ்
மலைப் பகுதியிலும் நிலமற்ற ஏழை விவசாயிகள் அரசு
புறம்போக்கு நிலங்களை ஒரு ஏக்கரா, இரண்டு ஏக்கரா என்று
வைத்து, 10, 12 ஆண்டுக் காலமாக சொந்தமாக விவசாயம்
செய்தும், அதே இடத்தில் குடியிருப்பு வீடுகளைப் போட்டும்
குடியிருந்து வருகிறார்கள். கடந்த 10, 12 ஆண்டுக் கால
மாக பட்டாக்கள் வழங்கவேண்டும் என்று எவ்வளவோ
முயற்சி செய்தும், கடந்த கால ஆட்சியில் பட்டாக்கள்
வழங்கப்படவில்லை, இந்த அரசு அந்த ஏழை எளிய மக்களுக்குப்
பட்டாக்கள் வழங்க முன் வருமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத்
தலைவர் அவர்களே, நிச்சயமாக இந்த அரசு முன் வரும் என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தக்காவிக் கடன்கள்.

*4398—திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1979 ஆம் ஆண்டே ரத்து செய்யப்பட்டதாக
அரசு அறிவித்த தக்காவிக் கடன்களை திரும்ப வசூலிக்க விவ
சாயிகள் மீது நடவடிக்கை எடுத்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், முன்பு அறிவித்ததை அரசு அமுல்படுத்து
மா?



1990 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1979 ஆம் ஆண்டு ரத்து செய்யப்பட்ட தக்காவிக்
கடன்கள் திரும்ப வசூலிக்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

9-25 மணி

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 1979 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்
டிருக்கின்ற தக்காவிக் கடன்கள் ரத்து செய்யப்பட்டன என்றும்,
அதைத் திரும்ப வசூலிக்க நடவடிக்கை எடுக்கவில்லை
என்றும் மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்ததற்கு நன்றி.
ஆனால் அப்படி 1979 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டதற்குப்
பிறகும், புதுக்கோட்டை மாவட்டத்திலே அந்தத் தக்காவிக்
கடன்களை வசூலிப்பதற்கு வருவாய்த்துறை மூலமாக விவ
சாயிகள் நெருக்கப்படுகிறார்கள் அல்லது வசூலிக்க நிர்பந்
திக்கப்படுகிறார்கள் என்ற முறையீடு வந்ததன் காரணத்தால்
தான் இந்தக் கேள்வியை நான் அமைச்சருடைய கவனத்திற்குக்
கொண்டு வந்துள்ளேன். அப்படி ஏதாவது நடவடிக்கை எடுக்
கப்பட்டிருந்தால் அதை நிறுத்துவதற்கு அரசு அறிவிக்க முன்
வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் அரசுக்கு
இதுவரை கிடைக்கவில்லை. ஏற்கெனவே சில சலுகைகளை
நாம் வழங்கியிருக்கிறோம். அதன் விளைவாக ரூ.7.33 கோடி
கடன் தொகை தள்ளுபடி செய்யப்பட்டது. அதனால்
9,30,856 விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். புதுக்
கோட்டையைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை. அவர்
தகவல் தந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 1979 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அந்த அறி
விப்பில் பயன் பெற்றவர்களை பற்றிச் சொன்னார்கள். அப்படி
அறிவிக்கப்பட்டதற்குப் பிறகும்கூட, தக்காவிக் கடன்கள்
கொடுக்கப்பட்டன. நிலுவையில் இருப்பதாக அரசின்
கணக்கில் இருக்கிறதா? அப்படியிருந்தால் அது எவ்வளவு
தொகை என்பதை அரசு அறிவிக்குமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இருப்பதாக எனக்கு
நினைவு இல்லை. தகவலும் இல்லை.

[1990 ஏப்ரல் 24

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தக்காவிக் கடன் என்பது வறட்சி வருகின்ற நிலைமைகளுக்கேற்ப அரசாங்கம் அளிக்கின்ற சலுகை. ஆனால் தற்சமயம் 50 விழுக்காடுகள் வரை விளை பொருட்கள் விளைந்திருக்குமென்றால் அந்த இடங்களில் விவசாயிகள் விளைபொருட்களை இழக்க நேரிடுகிறது. ஆனால் சில வருவாய்த்துறை அதிகாரிகள் உண்மையான நிலைமையில் வறட்சி முழுமையாக ஏற்பட்டிருந்தாலும் கூட, அரசுக்கு இழப்பு ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கையின் அடிப் படையில் தவறான தகவலை இன்றைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே உண்மையிலே வறட்சியிருக் கின்ற இடங்களை மறு ஆய்வு செய்வதற்கு இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர்கள் உத்தரவு வழங்குவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தரவு வழங்கப்படும்.

## நீர் வரி.

5985—திரு. வ. முல்லைவேந்தன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடை யளிப்பாரா :

(அ) ஏரி மற்றும் அணைக்கட்டுகளில் இருந்து நீர்ப் பாசனம் பெறும் நிலங்களுக்கு நீர்வரி முழுமையாக வசூலிக் கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், தருமபுரி மாவட்டத்தில் நீர்வரி வசூலிக்கப்படும் மொத்த நிலப்பரப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டத்தில் நீர்வரி வசூலிக்கப்படும் மொத்த நிலப்பரப்பு 8372.98.5 ஹெக்டேர் ஆகும்.



1990 ஏப்ரல் 24]

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் பட்டும் பட்டினி, கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி என்பதைப்போல என்னுடைய பகுதியில் லாணியாறு, ஈச்சம்பாடி அணைகள் இருந்தும் முறையாக தண்ணீர் விட வேண்டிய கால்வாயில் விடாமல், நீர் வரி வசூலிக்கப்படுகிறது. விவசாயிகள் நீர்ப்பாசன வசதி பெறாமலேயே, அவர்களிடமிருந்து நீர் வரி வசூலிக்கப்படுகிறது. இந்த நிலை அகற்றப்படுமா? வறட்சிக் காலங்களில் நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முல்லைவேந்தனுக்கு திருமணம் செய்து வைத்தவன் நான், ஆகவே அவர் பிரம்மச்சாரி இல்லை என்று நான் கருதுகிறேன், அவர் கேட்ட கேள்விக்குப் பதில், நிச்சயமாக ஆலோசித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் வரி மூலம் இந்த அரசு ஓராண்டில் பெறுகிற வருமானம் எவ்வளவு? அதில் தர்மபுரி மாவட்டத்தில் எந்த அளவிற்கு நீர் வரி வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் பயன் பெற்ற பாசனப் பரப்பு 3,978 எக்டேர். சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தின் மூலம் பயன்பேற்ற பாசனப் பரப்பு 1,008 எக்டேர், பழைய பாசன ஆதாரங்கள் மூலம் பயன் பெற்ற பரப்பு 3,386 எக்டேர். தொகை பற்றிய குறிப்பு என்னிடம் இல்லை.

### பணிமனை மற்றும் நகரப் பேருந்து

* 395—திரு. எம். அண்ணாமலை :

மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊத்தங்கரை வட்டம், ஊத்தங்கரை நகரில்
அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தின் மூலம்
டெப்போ கட்டவும் இப்பகுதி கிராமங்களுக்கு நகரப் பேருந்து
விடவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

(ஆ) ஊத்தங்கரையில் அன்னை சத்யா போக்குவரத்துக்
கழகத்தின் சார்பில் பணிமனை அமைக்கும் திட்டம் உள்
ளது. இதற்காக ஊத்தங்கரையில் நில ஆர்ஜிதம் செய்ய
நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த நிதி ஆண்டில்
பணிமனை கட்டுமானப் பணிக்கு இக் கழகத்தின் நிதி அறிக்கை
யில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

9-30 மணி

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் ஊத்தங்கரை அன்னை சத்யா
போக்குவரத்துக்கு டிப்போவிற்கான இடம் ஒதுக்கீடு செய்யப்
பட்டுள்ளது என்பதை இங்கே அறிவித்தார்கள். இதனுடைய
வேலையைத் துரிதமாக மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்
குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே,
ஏற்கனவே, ஊத்தங்கரை தாலுக்கா காண்டியப்பனூர் என்கிற கிரா
மப் பகுதியில் $2\frac{1}{4}$ ஏக்கரா நிலம் அதற்காக பார்க்கப்பட்டது.
அது பற்றி பேச்சு வார்த்தை நடக்கின்ற நேரத்தில் உரிமையா
ளர்களில் ஒருவர் தன்னுடைய சொந்தக் காரணங்களினால் அந்த
இடத்தைக் கொடுப்பதற்கு இயலாத நிலையிருக்கிறது என்பதைத்
தெரிவித்தார். அதற்குப் பிறகு பக்கத்திலே இருக்கக் கூடிய நிலத்
தையே தருவதற்காக பக்கத்து நிலத்தினுடைய சொந்தக்காரர்



முன்வந்து காண்டியப்பனூர் கிராமம் சர்வே எண். 54 மற்றும்
57 இந்த இரண்டு 'சர்வே' எண்ணுள்ள $2\frac{1}{4}$ ஏக்கர் நிலத்தை இப்
போது விலை மதிப்பீடு சான்றிதழ் அனுப்ப மாவட்ட ஆட்சித்
தலைவரிடம் கேட்கப்பட்டுள்ளது. இந்தச் சான்றிதழ்கள் எல்
லாம் வந்தவுடன் அந்த இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு நட
வடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த டிப்போ கட்டும் வேலை முடிவதற்குள்ளாக
திருப்பத்தூரிலும், தர்மபுரியிலும், இருக்கக் கூடிய நகரப்
பேருந்துகளை பயன்படுத்தி பிற்பட்ட மக்களின் நலனைக்
கருதி சில விதிமுறைகள் இருப்பினும் திருத்தம் அளித்து,
அந்தப் பகுதி கிராமங்களுக்கு நகரப் பேருந்து விட அரசு முயற்
சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே,
தற்போது 5 இடங்களுக்கு ஊத்தங்கரையிலிருந்து நகரப்
பேருந்துகள் செலுத்தப்படுகின்றன. அந்தப் பேருந்துகள் எல்
லாம் திருப்பத்தூர் கிளை பணிமனையிலேதான் இரவில்
தங்கலுக்காக கொண்டு செல்லப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பி
னர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று ஊத்தங்கரையிலிருந்து
மேலும் 3 இடங்களுக்குக் கூடுதல் நகரப் பேருந்துகள் விடுவதற்கு
நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும்.

### சேலத்தில் விமான நிலையம் அமைத்தல்

*526—திரு. பொன். விஜயராகவன்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலத்தில் விமான நிலையம் அமைக்கும் திட்டம்
உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலத்தில் விமான நிலையம் அமைக்க மாநில அரசு
சுமார் ரூ. 70.15 இலட்சம் செலவில் 130 ஏக்கர் நிலத்தினை
கையகப்படுத்தி தேசிய விமான நிலையக் குழுமத்திற்கு இலவச
மாக ஒப்படைத்துள்ளது. மேலும் நிலத்தினை சமன் செய்யும்

பணிக்காக ரூ. 60.00 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. இணைப்புச் சாலை, குடிநீர், மின் இணைப்பு ஆகிய பணிகளுக்காக மாநில அரசு ரூ. 15.37 இலட்சம் வழங்கியுள்ளது. நிலத்தினை சமன் செய்யும் பணி முடிவடைந்தவுடன் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படும் என தேசிய விமான நிலையக் குழுமம் தெரிவித்துள்ளது.

திரு. கே. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் விமான தளம் அமைப்பதற்கு கையகப்படுத்துவதற்கு ரூ.60 லட்சம் என்று அமைச்சர் கூறியிருக்கிறார். என்னுடைய டேபிளில் வைத்திருக்கக் கூடிய அறிக்கையில் ரூ.50 லட்சம்தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தற்போது அங்கே எல்லா ரக விமானங்களும் இறங்குவதற்கு வசதியான அளவிற்கு இடம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறதா அல்லது குறிப்பிட்ட ரக விமானங்கள் மட்டும்தான் அங்கே இறங்கும் என்ற அளவிற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறதா? எல்லா ரகமான விமானங்களும் இறங்குவதற்கு போதிய நிலம் இப்பொழுதே ஆர்ஜிதம் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

9-35 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, சேலம் விமான தளத்திற்கு 130 ஏக்கர் நிலம் ரூ. 70.15 லட்சம் செலவில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதனை சமன் செய்யும் பணிக்காகத்தான் ரூ. 60 லட்சம் செலவிடப்பட்டுள்ளதாக என்னுடைய அறிக்கையில் நான் குறிப்பிட்டுள்ளேன். கையகப்படுத்துவதற்கு ரூ. 70.15 லட்சம். அந்த அளவிலே தான் இப்போது கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு அதற்குத் தேவையான குடிநீர், பாதை அமைப்பு மின் இணைப்பு ஆகிய பணிகளுக்காக நம் அரசின் சார்பில் ரூ. 15,37,000 வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் எல்லாம் இப்போது விரைவாக நடைபெற்று வருகின்றன. தேசிய விமான குழுமம் கட்டிமுடிக்கப்பட வேண்டிய கட்டுமானப் பணிகளை விரைவில் தொடங்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். எத்தகைய விமானங்கள் அங்கே இறங்குவதற்கான விமான தளம் என்கின்ற விவரக் குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. கோ. பூவராகன்: தலைவர் அவர்களே, சேலம் நகரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அங்கே ஒரு விமான தளம் அமைப்பதற்கு நம்முடைய அரசு முயற்சி எடுத்து வருகிறது.





நீண்ட நாட்களாக. மத்திய அரசாங்கத்திலே விரைவுபடுத்
தும் திட்டத்தின் கீழே இந்த ஆண்டில் அவர்கள் அதிக நிதியை
ஒதுக்கி விரைவிலே அந்த தளம் அமைக்கப்பட்டு அந்த விமானங்
கள் வந்து இறங்கிச் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்வதற்கு
அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே,
நம்முடைய மாநில அரசின் சார்பில் நிலம் கையகப்படுத்துவது,
பாதைகள் அமைப்பது, குடி தண்ணீர் வசதி, மின்சார வசதி
அத்தனை ஏற்பாடுகளையும் நாம் செய்துகொண்டிருக்கிறோம்.
இந்தப் பணியை விரைவுபடுத்த வேண்டும் என்பதுதான் நம்
முடைய அரசின் நோக்கம். எனவே மாண்புமிகு உறுப்பினர்
அவர்களுடைய கருத்துப்படி விரைவில் இப்பணியை முடிக்க
வேண்டுமென்று ஏர்போர்ட் அத்தாரிட்டியை நம்முடைய மாநில
அரசு வலியுறுத்தும்.

கடையத்தை மையமாக வைத்துப் பேருந்துகள் இயக்குதல்.

* 7127—திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடையத்தை மையமாக வைத்து பேருந்துகளை இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே,
(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. கே. ரவி அருணன்: தலைவர் அவர்களே, கடையம்
என்பது ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிடமாகும்.
ஆகவே, கடையத்தை மையமாக வைத்து நகரப் பேருந்துகள்
இயக்காமல் இருப்பதால் அதைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்
களுக்கு நேரடியாக பேருந்து வசதி செய்ய முடியாத சூழ்நிலை
இருந்து வருகிறது. ஆகவே இந்த அரசு இந்த முடிவை மறு பரி
சீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, தற்போது தென்காசி, சுரண்டை, ஆலங்குளம், அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரம், பாபநாசம், பாவூர்சத்திரம், முக்கூடல் போன்ற ஊர்களுடன் கடையம் நகரப் பேருந்துகளால் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று கடையத்தை நகரப் பகுதியாக அறிவித்து பேருந்து தொடர்புகளால் இணைக்கப்பட வேண்டுமா என்பதைப் போக்குவரத்துத் துறை பரிசீலனை செய்யும்.

திரு. கே. ரவி அருணன்: தலைவர் அவர்களே, கடையம் பேருந்து நிலையத்தில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடியைப் போக்கி அந்தப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அந்தப் பேருந்து நிலையத்தை ஊராட்சி மன்றம் நடத்துகிறதா அல்லது ஊராட்சி ஒன்றியம் நடத்துகிறதா என்பது பற்றி எனக்குத் தெரியாது. அது உள்ளாட்சித் துறையுடையது. அவர்களுடைய மானியம் இன்றைக்கு விவாதத்திற்கு வருகிறது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிப்பார்கள்,

திருமதி ரமணி நல்லதம்பி: தலைவர் அவர்களே, இப்படி ஒரு இடத்தை மையமாக வைத்துப் பேருந்துகளை இயக்க அனுமதிக்கின்ற அதிகாரம் யார் கையில் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு பேரூராட்சிப் பகுதியும், நகரப் பகுதியாக அறிவிக்கப்பட்டு அந்த இடத்திலிருந்து பேருந்துகள் புறப்பட்டுச் செல்வதற்கான அதிகாரத்தை அரசுதான் அறிவிக்க வேண்டும்.

### சுற்றுலா மையமாக்குதல்

* 5293—திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பவானி—காவிரி ஆறுகள் கலக்கும் பவானி கூடுதுறையையும் அருகிலுள்ள அணைத் தோப்பையும் சுற்றுலா மையமாக்க அரசு திட்டம் மேற்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

(அ) பெரியார் மாவட்டத்தில் பவானி—காவிரி ஆறுகள் கலக்கும் பவானி கூடுதுறை மட்டும் மாவட்ட சுற்றுலாத் தலமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அருகில் உள்ள அணைத் தோப்பு பற்றி பரிசீலனை செய்வோம்.

(ஆ) அதன் மேம்பாட்டுப் பணிகளுக்காக அரசு ரூபாய் இரண்டு இலட்சம் அளித்துள்ளது. மற்றும் அதற்காக சேரன் போக்குவரத்துக் கழகம் மூன்று இலட்சம் ரூபாய் நிதியுதவி செய்துள்ளது. இது தவிர பொதுப் பணித் துறையின் மூலம் பவானி கூடுதுறையில் உள்ள படித்துறையை சீர்செய்திட ரூபாய் 17,32,000 ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி: தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் மேலும் சில இடங்களைச் சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தப் பிரச்சினை அவையிலே எழுப்பப்பட்டு பவானிசாகர் இடத்தை நான் நேரிலே பார்வையிட்டு அதற்குப் பிறகு அதையும் மாவட்டத்தினுடைய இரண்டாவது சுற்றுலாத் தலமாக தேர்வு செய்யலாம் என்று நான் அறிவித்திருக்கிறேன்.

9–40 மணி

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல் பெரியார் மாவட்டத்தில் கொடுமுடிக்கு ஏராளமான யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள். ஆகவே அந்த இடத்தை சுற்றுலா மையமாக ஆக்க அரசு முடிவு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கொடுமுடியில் இருக்கக்கூடிய புகழ் பெற்ற கோவிலுக்குப் பக்தர்களும், யாத்திரிகர்களும் வருகின்றார்கள். அங்கே அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரலாம். ஆனால் ஒரு மாவட்டத்தில் 2 மாவட்ட உலாத் தலம் என்று சொல்லுகிறபோது அது பவானிசாகரா அல்லது கொடுமுடியா என்பதை நாம் முடிவு செய்யலாம்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி கூடுதுறைக்குச் சுற்றுப் பகுதியில் இருக்கக் கூடிய 3, 4 மாவட்டங்களில் இருந்து தினசரி ஆயிரக்கணக்கான பேர் வந்து செல்கின்ற இடம். விசேஷ நாட்களில் பல ஆயிரக் கணக்கான மக்கள் கூடுகின்ற இடம் அது. அதை சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கு உண்டான முயற்சிகளில் ஈடுபட்டு இருப்ப தாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆதற் கிடையில் ஒரு தங்கும் விடுதி ஓட்டல் இல்லாவிட்டாலும் குறைந்தபட்சம் மோட்டல் என்ற அளவில் ஒரு தங்கும் விடுதி அங்கே அமைக்கக்கூடிய நிலைமையை அரசு உருவாக்குமா என விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பவானி கூடுதுறையில் சங்கமேஸ்வரர் கோவில் புகழ்பெற்ற கோவில். அந்தக் கோவில் வளாகத்தில் தங்கும் விடுதி இருக்கிறது. மேலும் சில தங்கும் விடுதிகள் அங்கே அமைக்கத் திட்டம் இருக்கிறது. ஆனால் சுற்றுலாத் துறையின் மூலமாக அங்கே தங்கும் விடுதி வேண்டுமானால் அதை நாம் பரிசீலனை செய்ய லாம்.

நாமக்கல் அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோவில்

*8056—திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :

(அ) நாமக்கல்லில் உள்ள அருள்மிகு ஆஞ்சநேயர் திருக் கோவிலின் பழுதடைந்த சுற்றுப்புறச் சுவர்களைச் சீர்படுத்த இந்து சமய அறநிலையத்துறை நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இத் திருக்கோவிலின் தெற்குச் சுவரில் 6 அடி அளவில் ஏற்பட்ட பழுதினை சரி செய்யவும், மற்ற சுவர்களையும் நன்கொடையாளர்கள் மூலம் புதுப்பிக்கவும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணி விரைவில் தொடங் கப்படும்.



திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல்லில் அமைந்து உள்ள அருள்மிகு ஆஞ்சநேயர் கோவில் உலகப் புகழ் பெற்ற கோவில் ஆகும். தமிழ்நாட்டில் இருந்து மட்டும் அல்லாமல் வட மாநிலங்களில் இருந்தும் சுற்றுலாத் துறையின் மூலமாகவும் அங்கு அமைந்துள்ள இறைவனை வழிபட நிறைய மக்கள் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் தெற்குப் புறமாக அமைந்துள்ள அந்த ஒரு சுவர் மட்டும் அல்லாமல் நாலு புறமும் அமைந்துள்ள சுற்றுச் சுவர்கள் அதேபோல் கோவிலினுடைய தரைப் பகுதி பழுதடைந்து இருப்பதால் பக்தர்கள் அங்கு பிரதட்சனம் செய்வதற்கு மிகவும் சிரமப்படு கிறார்கள். ஆகவே அவை அனைத்தையும் கருத்தில் கொண்டு பழுதடைந்த நாலு புறமும் அமைந்துள்ள சுற்றுச் சுவர்களையும் தரைப் பகுதியையும் விரைவில் பழுது பார்க்க துறையினர் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Rubber தளமாக போட்டால் நன்றாக இருக்குமா ! (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருக்கோவிலில் ஏற் கெனவே குடமுழுக்கு நடைபெற்று எத்தனை ஆண்டுகள் ஆகின்றன என்பதை இங்கே தெரிவித்தால் இதற்குப் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவிலுக்கு அசையும்சொத்து, அசையாசொத்து எவ்வளவு இருக் கிறது ? உண்டியல் மூலமாக எவ்வளவு வருமானம் கிடைக்கிறது? இந்த வருமானத்தைக் கொண்டு இந்தக் கோவில் முன்னேற்றத் திற்கு இந்தத் துறையினர் என்ன என்ன காரியங்கள் செய்து இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நடைபெற்ற குடமுழுக்கு பற்றி கேட்டேன், பதில் வரவில்லை. 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு நடந்து இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, விரைவில் அங்கே கும்பாபிசேகம் நடக்கின்ற அளவுக்கு அந்தக் கோவிலில் எல்லா வகையான தரைகளையும், மதில்களையும் கோபுரத்தையும் எல்லாவற்றையும் புதுப்பிக்க மதிப்பீடுகள் தயார் செய்து அதற்காக ஒரு திருப்பணிக் குழு அமைத்து அந்த வேலைகள் அங்கே தொடங்கப்படும். அது தவிர இந்தக் கோவிலின்

வருவாய் பற்றி கேட்டார்கள். வருவாய் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 5 லட்சம் ரூபாய்-4 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய்-என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதேபோல் இதுவரை உள்ள உபரி நிதியிலிருந்து ஏறத்தாழ 7 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் வங்கியில் இருப்பாக இருக்கிறது.

9-45 மணி

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைசாமி அவர்கள் ஆஞ்சநேயர் கோயிலிலே அசையும் சொத்து எவ்வளவு, அசையாச் சொத்து எவ்வளவு இருக்கிறது என்று கேட்டார்கள். அசையும் சொத்து அங்கே வந்து போகின்ற பக்தர்கள்: அசையாச் சொத்து ஆஞ்சநேயர் (சிரிப்பு).

## நியாயவிலைக் கடைகள்

***996—திருமதி பாப்பா உமாநாத் :**
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நியாய விலைக் கடைகளில் நுகர்வோர் விரும்பாத சில பொருட்களையும் வாங்கியாக வேண்டுமென்ற நிபந்தனை மாநிலத்தின் பல பகுதிகளில் அமுலாக்கப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நியாய விலைக் கடைகளில் நுகர்வோர் விரும்பாத எந்தப் பொருளையும் கட்டாயப்படுத்தி நுகர்வோர்களுக்குக் கண்டிப்பாக விநியோகம் செய்யக்கூடாதென்று தெளிவாக அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நடத்தக் கூடிய கடைகளில் அல்லாத கோ-ஆப்பரேடிவ் ஸ்டோர்ஸ் கடைகள் அதாவது சிந்தாமணி, அமராவதி போன்று நடத்தக்கூடிய கடைகளில், உணவுப் பொருட்களை வாங்கவேண்டுமென்று சென்றால், அந்தக் கடைகளில் மோசமான சோப்பு, அதாவது துணிகளையே கிழித்துவிடக்கூடிய அளவிற்கு உள்ள சோப்பு,



உளுத்துப்போன பருப்பு போன்றவற்றையெல்லாம் கட்டாயமாக வாங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். 'பிச்சை எடுத்ததாம் பெருமாளு, அதைப் பிடுங்கியதாம் அனுமாரு' என்ற ஒரு பழமொழி இருக்கிறது.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது நாமக்கல் அனுமாரா? (சிரிப்பு).

**திருமதி பாப்பா உமாநாத் :** ஆகவே, கஷ்டப்பட்டு அரிசி வாங்க வருகிறார்கள் என்று சொன்னால், அவர்களிடம் இது போன்ற பொருட்களை வாங்கச் சொல்லும்போது, ஏழைகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதுகுறித்து நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் சில இடங்களில், அத்தியாவசியப் பண்டங்கள் தவிர்த்து மற்ற பொருள்கள் விற்பனை செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டதற்குக் காரணம்—அவையெல்லாம் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தாலே — ஓரளவிற்கு நஷ்டத்தை ஈடுகட்டுவதற்காக. ஆகவே, அப்படிப்பட்ட அனுமதி வழங்கப்பட்டது. ஆனாலும்கூட நுகர்வோர்கள் விரும்பாத கட்டத்தில் அந்தப் பொருட்களை வலுக்கட்டாயமாக வாங்கச் சொல்லக்கூடாது என்று அவ்வப்போது கூட்டுறவுத் துறையின் சார்பாக சுற்றறிக்கைகள் விடப்பட்டுள்ளன. 31—10—1988 ஆம் தேதி 14—2—1989 ஆம் தேதி ஆகிய தேதிகளில் கூட்டுறவுத்துறையின் சார்பாக, நுகர்வோர்களைக் கட்டாயப்படுத்தி, அத்தியாவசியப் பண்டங்களைத் தவிர, மற்ற பொருட்களை, கட்டாயமாக வாங்கவேண்டுமென்று பணிக்கக்கூடாது என்று சுற்றறிக்கைகள் விடப்பட்டுள்ளன. வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எங்காவது அந்தக் குறைபாடுகள் இருக்குமேயானால் தனிப்பட்ட முறையிலே, எழுத்து மூலமாக தெரிவிப்பார்களேயானால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியவாறு 3 முறை, 4 முறை உத்தரவு போட்டும் அமல்படுத்தப்படவில்லை என்பது அறிய முடிகிறது. ஆகவே, அந்த உத்தரவை அச்சிட்டு அல்லது மக்களுக்குப் புரியக் கூடிய முறையில் ஒவ்வொரு கடைக்கும் முன்னாலே ஒட்டி வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1990 ஏப்ரல் 24

**மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது புகார்கள் வருகின்றபொழுது அவைகளைச் சரியாக அலுவலர்கள் கடைப்பிடிக்கிறார்களா என்பதைக் கண்காணிக்கவும் அவர்கள் தொடர்ந்து அந்த நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காகவும் சுற்றறிக்கைகள் அவ்வப்போது விடப்படுகின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த ஆலோசனையையும் அரசு பரிசீலிக்கும்.

**திரு. அ. இரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் பொருள்களைப் பெற முடியாத நிலையில், ஏழையெளிய மக்கள், மத்திய தரக் குடும்பத்தைச் சேர்ந்த மக்கள் பலருக்கு ரேஷன் கார்டுகள் கிடைக்காமல் இருக்கின்றன. எனவே, அவர்களுக்கெல்லாம் விரைவிலே புதிய ரேஷன் கார்டுகள் எப்போது கிடைக்கும் என்பதை அரசு அறிவிக்குமா என்றும் அதைப்போலவே, அரிசி, பாம் ஆயில், மண்ணெண்ணெய், சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருள்கள், ஏற்கெனவே, இந்திரா காங்கிரஸ் ஆட்சியின்போது அளவு குறைக்கப்பட்ட காரணத்தினாலே கிடைக்கவில்லை. இப்போது புதிதாக பொறுப்பேற்றுக்கொண்டிருக்கின்ற மத்திய அரசு அவைகளையெல்லாம் சரியாக வழங்கி இருக்கிறதா ? அதில் ஏதேனும் வெட்டு இருக்கிறதா ? ஒழுங்காக அவை தரப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய குடும்ப அட்டைகள் இல்லாதவர்களுக்கு 100 சதவீத பரிசோதனைக்குப் பின்னாலே அவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று சொல்லி 16—3—1990 ஆம் நாள் அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட குடும்ப அட்டைகள் யாருக்காவது வேண்டுமேயானால் அவர்கள் முறைப்படி விநியோக அதிகாரியிடம் மனு செய்து, இந்தப் பரிசோதனைக்கு உட்பட்டு குடும்ப அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இன்னொரு வினாவை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பினார்கள். மத்திய அரசு இப்போது வழங்குகின்ற அரிசியின் அளவு உயர்த்தப்பட்டு இருக்கிறது. பாம் ஆயிலைப் பொறுத்தமட்டில் அது இன்றைக்கு 1,250 மெட்ரிக் டன்னாக இருந்து 2 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மண்ணெண்ணெயைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வந்த அளவு குறையாமல் 3 காலமாகப் பிரித்து இப்போது மத்திய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 24]

**திரு. கே. ஆர். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ரேஷன் கார்டுகள் வழங்குவதில் அரசு இப்போது புதிதாக ஒரு உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக அறிகிறேன். புதிய கார்டுகள் வழங்கப்படுவதற்கு முன்பாக அந்தப் பகுதியில் 10 பழைய கார்டுகளைத் திரும்பப் பெற்றால், 5 கார்டுகள்தான் வழங்கப்படுவதாக அறிகிறேன். அதை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

9—50 மணி

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நிர்வாக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட அறிவுரை. அதைப்பற்றி தாங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் தொகுதியில் உள்ளவர்கள் யாருக்காவது குடும்ப அட்டை தேவைப்படுமானால் உரிய அதிகாரிகளிடம் சென்று மனு அளித்து, விவரங்களைச் சொல்லி புதிய அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாவட்டக் கூட்டுறவு வங்கி அமைத்தல்

* 2160—**திரு. என். பெரியசாமி :** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சிதம்பரனார் மாவட்டத்தில் மாவட்டக் கூட்டுறவு வங்கி அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. என். பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலிருந்து வ.உ.சி. மாவட்டம் பிரிக்கப்பட்டு நான்காண்டுகளாகியும், இதுவரைக்கும் அங்கே மத்திய கூட்டுறவு வங்கி அமைக்கப்படாமல் இருக்கிறது. அதை அமைக்க உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் :** நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலே உள்ள மத்திய வங்கி நலிந்த வங்கியாக தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சித்துறை வங்கியால் கருதப்பட்டு, இப்போது புனர் அமைப்புத் திட்டத்தின் கீழ் இருந்துகொண்டிருக்கிறது. இந்தக் கால கட்டத்தில் அதை இரண்டாகப் பிரித்து தூத்துக்குடியை தலைநகராகக் கொண்ட

வ.உ.சி. மாவட்டத்தில் புதிய மத்திய வங்கியொன்றை உருவாக்குவது என்பது இயலாத ஒன்று என்பது இந்திய தலைமை வங்கியின் கருத்து. இப்போது புனர் அமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற மத்திய வங்கி, நிதிநிலைமையில் சீரடைந்த பின்னரே, தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்ட வ.உ.சி. மாவட்டத்தில் புதிய மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம்

* 3078—திரு. இரெ. இராசமாணிக்கம் :
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், பழைய கூடலூர் கிராமத்தில் இயங்கி வரும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கான பரிந்துரை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிட்டுள்ள அரசு நெல் கொள்முதல் நிலையம், மயிலாடுதுறை வட்டத்தில் அதிகமாக நெல் கொள்முதல் செய்யப்படுகிற இடமாகும். அங்கு அரசு நேரடிக் கொள்முதல் நிலையக் கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்போது ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சொந்தக் கட்டிடம் கட்ட பரிந்துரை இல்லையென்றாலும், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டிடத்திலாவது அதைச் சேர்த்து அவசியமான அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7-வது திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 35 நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு, இன்னும் 15 நேரடி



கொள்முதல் நிலையங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற
இந்தச் சூழ்நிலையில் 8-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள நேரடிக்
கொள்முதல் நிலையம் கட்டுவதற்கான செயற்குறிப்பை
அரசு பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த
வரையில் உற்பத்தியாகக் கூடிய நெல் அனைத்தையும்
அரசே நேரடியாகக் கொள்முதல் நிலையங்கள் மூலமாகக்
கொள்முதல் செய்கிறது. கிராமங்களில் கொள்முதல் செய்த
நெல்லை வைப்பதற்குக் கட்டிடங்கள் கிடைப்பதற்குக்
கஷ்டமாக இருப்பதால், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த
வரையில் எல்லா கொள்முதல் நிலையங்களுக்கும், அரசின்
மூலமாகக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க ஆவன செய்யப்
படுமா என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாகத் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, படிப்படியாக அரசாங்கம்
நேரடிக் கொள்முதல் நிலையங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிட மாணவர் விடுதி

* 6746—டாக்டர் பெ. துரைபாண்டியன் :
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்
கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், மானாமதுரை
தாலுகா, திருப்பாச்சேத்தி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு
ஆதிதிராவிட மாணவர் விடுதி தொடங்கப்படுமா ?

9—55 மணி

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய பரிசீலனையில்
தற்போது இல்லை.

டாக்டர் பெ. துரைபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த திருப்பாச்சேத்தி கிராமத்திலிருக்கும் அரசு
மேல்நிலைப் பள்ளி 1,310 மாணவ, மாணவிகளைப் படிக்க
வைக்கக் கூடிய பள்ளியாகும். நான் அமைச்சர் அவர்களிடம்
பேசும்போது கடந்த ஆண்டு இந்த ப்ரப்போஸல் வந்த பிறகு

அது நின்றுவிட்டது என்றும், இந்த ஆண்டு அவசியம் செய்து
தாருங்கள் என்றும் கேட்டிருக்கிறேன். இந்தப் பள்ளி வைகை
ஆற்றின் கரையில் இருக்கின்றது. தற்போது ஐந்தாறு வருடமாக
தண்ணீர் வராமல் இருப்பதால் மாணவர்கள் போய் வரக் கஷ்டம்
இல்லாமல் இருக்கிறது. ஆனால் வைகையில் வெள்ளம் வரும்
காலத்தில் ஆற்றுக்கு அந்தப் பக்கம் இருப்பவர்கள் பள்ளிக்கு வர
முடியாத சூழ்நிலை ஏற்படும். எனவே மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் நான் கேட்டுக் கொண்டதை நினைவில் கொண்டு,
இந்தக் கேள்வியையும் மனதில் கொண்டு இந்த ஆண்டே அதை
முடித்துத் தருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
களுடைய கோரிக்கையை ஏற்று தக்க நடவடிக்கை எடுத்து அந்த
மாணவர் விடுதி அமைக்க தக்க ஏற்பாடு செய்யப்படும் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் பெ. துரைபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அப்படி அமைத்துத் கொடுத்தால் எதிர் காலத்திலே
மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும்
சேர்த்து, மாண்புமிகு ஆதி திராவிட நல அமைச்சர் அவர்களை
யும் சேர்த்து, இந்தச் சிறுவன் படித்த அந்தப் பள்ளியின் காலத்
தைப் பற்றிப் பேசும்போது இவர்களுடைய காலத்தில்தான் அந்த
விடுதி வந்தது என்ற பெருமை நம் எல்லோருக்கும் கிடைக்கும்
என்று கூறி அமைச்சரின் பதிலுக்கும் நன்றி கூறி விடை பெறு
கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விடையே பெறுகிறீர்களா !
(சிரிப்பு).

### அரசினர் தோட்டம் அரசு மருத்துவமனையை விரிவாக்குதல்

* 2624—**திரு. அ. இரகுமான்கான் :**
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா :

சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள்,
ஊழியர்கள் வசிக்கும் சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள
அரசு மருத்துவமனையை விரிவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்
படுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :**
பேரவைத் தலைவர் அவர்களே,





அரசினர் தோட்டத்திலுள்ள அரசு மருத்துவமனையை
விரிவாக்கும் நடவடிக்கை எதுவும் தற்போது அரசின் பரிசீலனை
யில் இல்லை.

**திரு. அ. இரகுமான்கான் :** பேரவைத் தலைவர் அவர்களே,
அரசினர் தோட்டத்தில் ஏராளமான இடம் காலியிடமாக இருக்
கிறது. ஏற்கெனவே கலைவாணர் அரங்கத்தின் அருகில் பழைய
அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அலுவலகத்திலிருந்து மருத்
துவமனை இப்போது பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு
முன்பாக சின்னஞ்சிறு அறைக்குள் செயல்பட்டு வருகிறது. எனவே
இதை நவீனப்படுத்தி எல்லா வசதியுடன் கூடிய ஒரு மருத்துவ
மனையாக ஏற்படுத்தி, அரசினர் தோட்டத்தில் இதனுடைய
விரிவாக்கத்தைக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :**
பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் விடுதி
யில் இருக்கிற மருத்துவமனை பகுதி நேர மருத்துவமனையாக
காலை 7 மணியிலிருந்து மாலை 1–00 மணி வரையில் தான்
செயல்பட்டு வருகிறது. இதற்கு அருகாமையில் 1கிலோ மீட்டர்
தூரத்திலே பொது மருத்துவமனை இயங்கி வருகிறது. இதற்கு
வேண்டிய சிறப்பு வசதிகள் அனைத்தும் பொது மருத்துவமனை
யிலே செய்து கொடுக்கப்படுகிறது. எனவே இது ஒரு பகுதி நேர
மருத்துவமனையாக மட்டுமே செயல்பட்டு வருகிறது என்பதை
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

**திரு. அ. இரகுமான்கான் :** தலைவர் அவர்களே, பக்கத்திலே
பொது மருத்துவமனை இருக்கின்றது என்று சொல்கிற காரணம்
எனக்குச் சரியாகத் தெரியவில்லை. அரசினர் தோட்டத்திலே
பல சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நம்முடைய
இலக்கியச் செல்வர் திரு. குமரி அனந்தன், திரு. இளம்வழுதி,
அண்ணன் லத்தீப் போன்ற....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தப் பட்டியலை வேண்டு
மானால் நான் அப்புறமாக அவைக்கு அனுப்புகிறேன். இப்போது
கேள்வியை மட்டும் கேளுங்கள். (சிரிப்பு).

**திரு அ. இரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.
நோய் பகுதி நேரமாக வராது (சிரிப்பு). மக்களுக்குச் சேவை
செய்கின்ற காரணத்தால்—திடீரென்று இருதய நோய் பாதிப்பு
ஏற்பட்டால் எக்ஸ்ரே எடுக்கக்கூடிய (குறுக்கீடு) ஹாஸ்பிட்டல்
என்று சொன்னார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டமன்ற உறுப்பினர்
களுக்கு எல்லாம் இருதய நோய் இருப்பது மாதிரி ஏதாவது
பிரச்சினை இருக்கிறதா? (சிரிப்பு).

[1990 ஏப்ரல் 24

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கக்கூடியதை ஹாஸ்பிட்டல் என்று சொன்னார்கள். ஆனால் அங்கே எக்ஸ்ரே, ப்ளட் டெஸ்ட், யூரின் டெஸ்ட், இ. சி. ஜி. போன்ற வசதிகள் எதுவும் இல்லை. வெறும் டாக்டர், டாக்டர் அம்மா, இரண்டு பேர்தான் இருக்கிறார்கள். அத்தோடு ஒரு ரெக்கார்ட் கிளார்க் இருக்கிறார். அத்தோடு ஒரு பீமேல் அட்டெண்டர் இருக்கிறார். அந்த சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய அரசினர் தோட்டத்தில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் மக்கள் தான். எனவே பக்கத்திலே ஹாஸ்பிட்டல் இருக்கிறது என்பதற் காக இந்த மருத்துவமனையில் எதுவும் இல்லாத நிலை இருப்பது சரியல்ல. ஆகவே இங்கே எல்லா வசதியும் செய்து கொடுக்க அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருந்தகம் பெரும்பாலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்றே உருவாக் கப்பட்டிருக்கிறது. உடனடியாக முதலுதவி செய்கிற மருத்துவ மனையாக மட்டுமே அது செயல்படுகிறது. தேவைப்படுமேயானால் உடனடியாக அவர்களை எடுத்துச் செல்வதற்கு நோயாளி ஊர்தி ஒன்றும் தயார் நிலையில் வைக்கப்பட்டு இருக்கிறது. ஆக இப்படி அவர்களை எடுத்துச் செல்வதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இதை மேம் படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதை உறுப்பினர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

*3247—திரு. ஆ. பாலையா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மணவாளக்குறிச்சியிலும், ஆளூரிலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அவை தொடங்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டம் குருந்தன் கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மணவாளக்குறிச்சி யிலும், ஆளூரிலும் ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது அமைப் பதற்கு சாத்தியம் இல்லை.



1990 ஏப்ரல் 24]

10–00 மணி

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சியிலும், ஆளூரிலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது என்பது மிகவும் தேவையான ஒன்று. காரணம் இந்த ஆளூர் கிராமத்திலே பெரும்பாலும் அரிஜனப் பெருங்குடி மக்களும், மணவாளக்குறிச்சியில் மீனவப் பெருங்குடி மக்களும் அதிகமாக வாழகிறார்கள். ஆகவே, அவர் களுக்கு மருத்துவ வசதி கிடைக்க வாய்ப்பாக இந்த இரண்டு இடங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்க அரசு மறுபரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திலே ஏற்கெனவே, முட்டம், குருந்தன்கோடு, வெளிச்சந்தை மற்றும் சேனம்விளை ஆகிய 4 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. மேலும் இந்த ஆண்டு நடுவூர்கரை கிராமத்திலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் துவக் கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரே ஊராட்சி ஒன்றியத்திலேயே 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருப்பதால் மேலும் அங்கே உருவாக்குவதற்கு வாய்ப்புகள் இல்லை. 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒன்று என்ற அடிப்படையிலே அங்கே இவை நிறுவப் பட்டிருக்கின்றன. 20 ஆயிரம் மக்களுக்கு ஒன்று என்று விரிவு படுத்துகிற நிலை வருகிறபோது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு ஏற்றுக் கொள்ளும்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சி, ஆளூர் இரண்டிலும் அமைக்கா விட்டாலும், ஆளூரில் மாத்திரமாவது அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் அங்கே இருக்கின்ற மக்கள் இன்றைக்கு நாகர்கோவிலுக்குச் சென்று சிகிச்சை பெறு கிறார்கள். அப்படி இல்லையென்றால் பத்மநாபபுரத்திற்குச் சென்று சிகிச்சை பெறுகிறார்கள். ஆளூரைப் பொறுத்த வரையிலும், ஆளூர் கிராமத்தையும், வில்லுக்குறியையும் சேர்த்து அங்கே 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கிராமங் களில் வாழ்வதால் இதை மறுபரிசீலனை செய்து அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான கருத்துருவைப் பரிசீலிக்கிற போது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையையும் இந்த அரசு பரிசீலிக்கும்.

### பீப் சிஸ்டம்

* 5535—**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசின் முக்கிய மருத்துவமனைகளில் அவசரக் காலங்களில் தேவைப்பட்ட மருத்துவர்களை உடனடியாக அழைக்க பீப் சிஸ்டம் (Beep System) கொண்டுவரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இல்லை.

**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான அரசு பொது மருத்துவமனையில் கூட ஒரு வார்டில் சேர்க்கப்பட்டுள்ள வியாதியஸ்தரை அவசரமாகக் கவனிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், அந்த நேரத்தில் ட்யூட்டி டாக்டர் மருத்துவமனை வளாகத்திற்குள் வேறு எங்கேயாவது போயிருந்தால், வார்ட் பாய் அல்லது நர்ஸ் நேரில் சென்று அவரை அழைத்து வர வேண்டுமானால் ஒரு மணி நேரம் ஆகிவிடுகிறது. நான் இங்கே சொல்லியுள்ள பீப் கருவி இருந்தால் 5 நிமிடத்திற்குள் மருத்துவர் அங்கே திரும்பி வந்து நோயாளியின் உயிரைக் காப்பாற்றும் நிலை ஏற்படும். ஆகவே, இந்த முறைகளைக் கொண்டுவர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து ஏற்கக் கூடிய ஒன்றாக இருந்தாலும், மேல்நாடுகளில்தான் இது போன்ற முறை பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில், வேலூரில் இருக்கிற கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒரு சில துறைகளில் இந்த முறை பின்பற்றப்படுகிறது. அது போல பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் தனியார் மருத்துவமனைகளில் இது பின்பற்றப்படுகிறது. ஆகவே, அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட முறையைக் கொண்டு வர 2 அல்லது 3 இலட்சம் ரூபாய்தான் ஆகிறது. தனியார் மருத்துவமனைகளில்தான் இப்போது இப்படிப்பட்ட வசதி இருக்கிறது. அது கூட இங்கே நம்முடைய மாநிலத்தில் சி.எம்.சி.யைத் தவிர வேறு எங்கும் இல்லை. இந்த அரசு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியில் ஏழை எளிய மக்களுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக, இருதய நோயாளிகளுக்கு



பை-பாஸ் சர்ஜரி செய்வதற்காக ஒரு கோடி ரூபாய் அவருடைய நிவாரண நிதியிலிருந்து ஒதுக்குகிறார்கள். அதுபோல சிறுநீரகத்திலிருந்து கற்களை அகற்றுவதற்காக, அறுவை சிகிச்சை இல்லாமல் செய்வதற்காக 2 கோடி ரூபாய் அவருடைய நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கி ஏழை எளிய மக்களுடைய உயிரைக் காப்பாற்றுவது பாராட்டத்தக்கது. ஆனால், இந்தக் கருவிகளை வாங்க 2 அல்லது 3 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகாது. ஆகவே, அதே மாதிரியான வியாதியஸ்தர்களுடைய உயிரைக் காப்பாற்ற இந்த முறையைக் கொண்டு வர உடனடியாக இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**10–05 மணி**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏழை மக்களுக்கு இலவசமாக வைத்திய வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, கலைஞர் அவர்கள் கொண்டு வந்துள்ள திட்டங்களை எல்லாம் சுட்டிக் காட்டினார்கள். இது அடிப்படைத் தேவை என்ற காரணத்தால், கலைஞர் அவர்கள் அதற்கு ஆணை இட்டிருக்கிறார்கள். தனியார் மருத்துவ மனைக்குச் சென்றால் 50,000 ரூபாய், 1 இலட்சம் ரூபாய் ஆகும். அரசு மருத்துவ மனையிலே செலவு இல்லாமல் செய்ய முடியும் என்ற அடிப்படையிலேதான் அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ''பீப் சிஸ்டம்'' என்பது அதனுடைய அத்தியாவசியத்தைக் கருதி, நாளடைவில் படிப்படியாக உயர்த்தப்பட வேண்டிய ஒன்றுதான் என்ற அடிப்படையிலே அரசு உறுப்பினர் அவர்களுடைய கருத்தைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

### (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

### 1—கர்நாடக அரசிடமிருந்து தமிழகம் பெற்ற நீரின் அளவு.

**வினா எண். 43—திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1976 முதல் 1988 ஆம் ஆண்டுகள் வரையில் தமிழ் நாட்டிற்கு கர்நாடக அரசிடமிருந்து கேட்டுப் பெற்ற தண்ணீரின் அளவு எவ்வளவு?

(ஆ) தண்ணீருக்குப் பதிலாக தமிழ்நாடு அரசு மாற்றுப் பொருள் ஏதாவது கொடுத்துள்ளதா ?

விடை—

(அ) 1976 முதல் 1988 ஆம் ஆண்டுகள் வரை கர்நாடக அரசிடமிருந்து தமிழகம் பெற்ற நீரின் அளவு கீழே தரப்பட்டுள்ளது :—

| வருடம் / காலம். | நீரின் அளவு (டி.எம்.சி.) |
|---|---|
| 1976/77— | |
| (1) | (2) |
| 31—7—1976 முதல் 15—8—1976 வரை ... | 20.00 |
| 24—8—1976 முதல் 27—8—1976 வரை .. | 05.00 |
| 1—9—1976 முதல் 6—9—1976 வரை .. | 10.00 |
| 9—9—1976 முதல் 11—9—1976 வரை .. | 10.00 |
| 19—9—1976 முதல் 29—9—1976 வரை .. | 10.00 |
| 14–10—1976 முதல் 18–10—1976 வரை .. | 05.00 |
| மொத்தம் — | 60.00 |
| 1982/83— | |
| 22—7—1982 முதல் 30—7—1982 வரை — | 12.0 |
| 14—9—1982 முதல் 18—9—1982 வரை .. | 05.0 |
| 30—9—1982 முதல் 6–10—1982 வரை .. | 05.0 |
| 23—2—1983 முதல் 28—2—1983 வரை .. | 03.4 |
| மொத்தம் — | 25.4 |



| வருடம் / காலம். | நீரின் அளவு. (டி.எம்.சி.) |
|---|---|
| (1) | (2) |
| 1983–84— | |
| 29—1—1984 முதல் 3—2—1984 வரை .. | 05.0 |
| 1985–86— | |
| 21—8—1985 முதல் 25—8—1985 வரை .. | 05.0 |
| 19—9—1985 முதல் 25—9—1985 வரை .. | 05.0 |
| 22—12—1985 முதல் 28–12—1985 வரை .. | 05.0 |
| 15—2—1986 முதல் 17—2—1986 வரை .. | 02.1 |
| மொத்தம் .. | 17.1 |
| 1986–87— | |
| 1—1—1987 முதல் 7—1—1987 வரை ... | 04.6 |
| 1—2—1987 முதல் 6—2—1987 வரை .. | 05.0 |
| 21—3—1987 முதல் 26—3—1987 வரை .. | 01.8 |
| மொத்தம் .. | 11.4 |
| 1987–88— | |
| 20—2—1988 முதல் 24—2—1988 வரை .. | 04.0 |
| 1988–89— | |
| 28–12—1988 முதல் 4—1—1989 வரை .. | 05.0 |
| 29—1—1989 முதல் 1—2—1989 வரை .. | 02.0 |
| 21—2—1989 முதல் 23—2—1989 வரை .. | 03.0 |

(ஆ) 1985–86 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து கர்நாடக அரசு, தான் விடுவித்த நீருக்குப் பதிலாக, இந்நீரிலிருந்து கர்நாடக அரசு இழக்கும் மின்சாரத்தை தமிழகத்திலிருந்து ஈடு செய்ய வேண்டுமென்று கோரத் துவங்கியது.

[1990 ஏப்ரல் 24

இதனைத் தொடர்ந்து 1985-86 ஆம் ஆண்டிலிருந்து தமிழக அரசும் தான் பெற்ற நீருக்குப் பதிலாக மின்சாரத்தை வழங்கியது. அதன் விவரங்கள் வருமாறு:—

| | |
|---|---|
| 1985-86 | 84.252 மில்லியன் யூனிட். |
| 1986-87 | 59.500 மில்லியன் யூனிட். |
| 1987-88 | 33.796 மில்லியன் யூனிட். |
| 1988-89 | இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. |

2—செங்கற்பட்டு தாலுக்காவில் குடும்ப அட்டைகள்.

வினா எண். 102—திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கற்பட்டு தாலுக்காவில் எத்தனை குடும்ப அட்டைகள் உள்ளன?

(ஆ) அந்த கார்டுகளுக்கு எவ்வளவு அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் அளிக்கப்படுகிறது?

(இ) குறைவாக உள்ள ரேசன் எப்போது நிறைவு செய்யப்படும்?

விடை—

(அ) செங்கற்பட்டு தாலுக்காவில் உள்ள மொத்த குடும்ப அட்டைகள் 1,06,607.

(ஆ) 1. அரிசி:—பெரியவர் ஒருவருக்கு மாதம் 4 கிலோ வீதமும், சிறியவர் ஒருவருக்கு மாதம் 2 கிலோ வீதமும் மொத்தத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதத்திற்கு 12 கிலோவிற்கு மேற்படாமலும் வழங்கப்படுகிறது.

(2) சர்க்கரை:—நபருக்கு மாதத்திற்கு 500 கிராம் என்ற விகிதத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது.

(3) மண்ணெண்ணெய்:—குடும்ப அட்டைக்கு மாதத்திற்கு கீழ்க்கண்ட விகிதத்தில் வழங்கப்படுகிறது:—

| | |
|---|---|
| மாவட்ட தலைமையிட நகராட்சி .. | 10 லிட்டர். |
| பிற நகராட்சி .. .. .. | 6 லிட்டர். |
| நகர பஞ்சாயத்து/நகரியம் .. .. | 5 லிட்டர். |
| பிற கிராமப்புறம் .. .. .. | 3 லிட்டர். |



1990 ஏப்ரல் 24]

மேற்படி குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்ட அத்தியாவசியப் பண்டங்கள் ஒதுக்கீடு: செங்கற்பட்டு வட்டத்திற்கு கீழ்க்கண்ட அத்தியாவசியப் பண்டங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

| மாதம். (1) | அரிசி. (2) | சர்க்கரை. (3) | கோதுமை. (4) |
|---|---|---|---|
| நவம்பர் 1988 .. .. | 6,810 | 1,912 | 2,335 |
| டிசம்பர் 1988 .. .. | 6,870 | 1,912 | 1,335 |
| ஜனவரி 1989 .. .. | 10,500 | 2,206 | 2,335 |
| பிப்ரவரி 1989 .. .. | 10,055 | 1,858 | 2,335 |
| மார்ச் 1989 .. .. | 8,454 | 1,754 | 2,335 |
| ஏப்ரல் 1989 .. .. | 5,553 | 1,130 | 3,480 |

| | பாமாயில். | | மண்ணெண்ணெய் (கி.லி.) |
|---|---|---|---|
| | உதிரி. | பாக்கெட். | |
| (1) | (5) | (6) | (7) |
| நவம்பர் 1988 .. .. | 532.97 | 51.83 | 2,708 |
| டிசம்பர் 1988 .. .. | 1,065.98 | 51.83 | 2,861 |
| ஜனவரி 1989 .. .. | 1,065.98 | 51.83 | 2,712 |
| பிப்ரவரி 1989 .. .. | 757.09 | 51.83 | 2,715 |
| மார்ச் 1989 .. .. | .. | 45.51 | 2,295 |
| ஏப்ரல் 1989 .. .. | 48 | .. | 2,295 |

(இ) அரிசி விநியோகத்தினைப் பொறுத்தவரையில் முந்தைய மாத நுகர்வின் அடிப்படையில் மாதாந்திர ஒதுக்கீடு வழங்கப்படுகின்றது. தற்போது சர்க்கரை மற்றும் சமையல் எண்ணெய் இந்திய அரசின் ஒதுக்கீடு, குடும்ப அட்டைகளின் அடிப்படையில் மாவட்டங்களுக்கு பிரித்து வழங்கப்படுகின்றது. இந்திய அரசுக்கு அரிசி, சர்க்கரை மற்றும் சமையல் எண்ணெய் ஒதுக்கீட்டை தமிழ் நாட்டுக்கு கூடுதலாக்கி வழங்க பிரேரணைகள்

அனுப்பப்பட்டு உள்ளன. இவற்றின் மீதான ஆணைகள் வழங்கப்பட்டு இந்திய அரசு ஒதுக்கீடு கூடுதலாக்கி வழங்கப்படின் நியாய விலைக் கடைகளுக்கு 100 சதவீதம் ஒதுக்கீடு வழங்க இயலும்.

3— பழனி சித்த மருத்துவக் கல்லூரி.

வினா எண். 311—திரு. என். பழனிவேல் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா :

(அ) பழனியில் உள்ள சித்த மருத்துவக் கல்லூரியில் சுமார் 200 மாணவர்களுக்கு 4 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர் என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், ஆசிரியர்கள் எண்ணிக்கை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) தற்போது இக்கல்லூரியில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர் :—

| | |
|---|---|
| முதல்வர் .. .. .. .. | 1 |
| பேராசிரியர் .. .. .. .. | 1 |
| இணைப் பேராசிரியர் .. .. .. | 1 |
| விரிவுரையாளர் .. .. .. | 2 |
| உதவி விரிவுரையாளர் .. .. | 3 |
| உதவிப் பேராசிரியர் (உயிர் வேதியல்) .. | 1 |
| உதவிப் பேராசிரியர் (மருத்துவதாவரயியல்) .. .. | 1 |
| உடற் பயிற்சி இயக்குநர் .. .. | 1 |
| ஆய்வக நுட்பப் பணியாளர் .. .. | 1 |
| ஆய்வகத் துணையாள் .. .. | 1 |
| உடற்கூறு இயல் பணியாளர் .. .. | |





(ஆ) கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆணை எண். 1077, சுகாதாரம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மற்றும் குடும்பநலத்துறை, நாள் : 23—6—1989இல் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன :—

மூன்றாம் ஆண்டு

| | |
|---|---|
| பேராசிரியர் | 1 |
| இணைப் பேராசிரியர் .. .. .. | 2 |
| விரிவுரையாளர் .. .. .. | 2 |
| உதவி விரிவுரையாளர் .. .. .. | 2 |
| மருந்தாளுநர் (சித்தா) .. .. .. | 2 |
| அட்டண்டர் .. .. .. | 2 |
| உதவியாளர் .. .. .. | 1 |
| இளநிலை உதவியாளர் .. .. .. | 1 |
| தட்டச்சர் .. .. .. | 1 |
| அலுவலக உதவியாளர் .. .. .. | 1 |
| காவலர் .. .. .. | 1 |

நான்காம் ஆண்டு

| | |
|---|---|
| பேராசிரியர் .. .. .. | 2 |
| இணைப் பேராசிரியர் .. .. .. | 2 |
| உதவி விரிவுரையாளர் .. .. .. | 3 |
| லாப் டெக்னீசியன் .. .. .. | 2 |

சத்துணவுத் திட்டம்.

4—

வினா எண். 334—திரு. ஆர். அண்ணாநம்பி: மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் எப்போது கொண்டுவரப்பட்டது ?

(ஆ) இத்திட்டம் விரிவு செய்யப்படுமா ?

(இ) சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்க அரசுக்கு உத்தேசமுண்டா ?

விடை—

(அ) 1—7—1982 முதல் கிராமப் புறங்களிலும் 15–9–82 முதல் நகர்ப்புறங்களிலும் தொடங்கப்பட்டது.

(ஆ) இத்திட்டம் ஏற்கெனவே 15—1—1983 முதல் முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் 1—1—1984 முதல் முன்னாள் இராணுவத்தினர் மற்றும் அவர்தம் விதவை மனைவியர்களுக்கும் 15—9—1984 முதல் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

(இ) இத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கும் உத்தேசம் இல்லை. ஆனால் அவர்களை நிரந்தர பகுதிநேர உள்ளாட்சி மன்ற ஊழியர்களாகக் கருதும்படி அரசு உத்தரவிட்டுள்ளது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பணி புரிகின்றவர்கள் மட்டும் நிரந்தரப் பகுதி நேர ஊழியர்களாகக் கருதப்படமாட்டார்கள்.

5—

வாசுதேவநல்லூர் தொகுதியில் நெடுஞ்சாலைகள்
பழுது பார்த்தல்:

வினா எண். 584—திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாசுதேவநல்லூர் தொகுதியில் நெடுஞ்சாலைகள் பழுதடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவைகளைப் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) வாசுதேவநல்லூர் தொகுதியில் கடந்த 1986-87 முதல் 1988–89 ஆம் ஆண்டு முடிய 29.2 கிலோமீட்டர் நீளமுள்ள 13 சாலைகள் ரூ. 13,81,568 செலவில் சீரமைக்கப்பட்டன. 12.4 கிலோ மீட்டர் நீளமுள்ள 9 சாலைகள் 1988-89 ஆம் ஆண்டில் ரூ. 9,53,000 அளவில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. 13 கிலோ மீட்டர் நீளமுள்ள 11 சாலைகள் சீரமைப்பிற்கு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு பணி தொடங்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 35 கிலோ மீட்டர் நீளமுள்ள 19 சாலைகள் பழுது பார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இச்சாலைகளை சீரமைக்க ரூ 35.00 இலட்சம் தேவைப்படும். மேற்படி சாலைகளின் சீரமைப்புப்பணி நிதி நிலைமைக்கு ஏற்ப படிப்படியாக மேற்கொள்ளப்படும்.



6—

மதுரை, திருச்சி மற்றும் கோவை சட்டக் கல்லூரிகளுக்கு
விடுதி வசதி.

வினா எண் 636—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை, திருச்சி மற்றும் கோவை சட்டக் கல்லூரிகளுக்கு விடுதி வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அம்மாணவர்களுக்கு விடுதி கட்டித்தர அரசு முன் வருமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) மதுரை சட்டக் கல்லூரி—மதுரை சட்டக் கல்லூரிக்கென 40 மாணவர்கள் மற்றும் 12 மாணவியர்கள் தங்கு
கல்லூரிக்கென 40 மாணவர்கள் மற்றும் 12 மாணவியர்கள் தங்கு
வதற்கு ஏற்ப மாணவ மற்றும் மாணவியர் விடுதிகள் உள்ளன.
மேலும் 210 மாணவர்கள் மற்றும் 40 மாணவியர்கள் தங்குவதற்
கேற்ப தனித்தனியே கூடுதல் விடுதிகள் கட்டுவது நிதி நிலை
காரணமாக அரசினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

திருச்சி சட்டக் கல்லூரி:—திருச்சி சட்டக் கல்லூரிக்கு கட்ட
டம் மற்றும் விடுதிக் கட்டடம் கட்டுவதற்கு பாரதிதாசன் பல்
கலைக் கழகத்துக்குச் சொந்தமான நிலத்தில் 20 ஏக்கர்
நிலத்தை ஒதுக்கீடு செய்து தருமாறு பல்கலைக் கழகத்திடம்
கோரப்பட்டுள்ளது. நிலம் கிடைத்த பின் கட்டடங்கள் விரை
வில் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கோவை சட்டக் கல்லூரி—கோவை சட்டக் கல்லூரிக்குச் சொந்தமான கட்டடம் இல்லாததால் மாணவர்களின் நலனைக் கருதி மாணவர்கள் விடுதி தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

பாரதியார் பல்கலைக் கழக வளாகத்தில் 20 ஏக்கர் நிலம்
கோவை சட்டக் கல்லூரிக் கட்டிடம் கட்ட அப்பல்கலைக் கழகம்
இசைவு தந்துள்ளது. அவ்வளாகத்தில் கல்லூரிக் கட்டடம் மற்
றும் விடுதி கட்ட ரூ. 94.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்
பட்டுள்ளது. பொதுப் பணித் துறையினர் கட்டிடம் கட்ட
மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

7—

## அரசு வேளாண்மை விதைப் பண்ணைகள்

வினா எண் 667—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் அரசு வேளாண்மை விதைப் பண்ணைகள் எங்கெங்கு உள்ளன?

(ஆ) அவற்றில் உற்பத்தி செய்யப்படும் விதைகளின் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) விரிவான விளக்கக் குறிப்புரையொன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை.

தமிழகத்தில் வேளாண்மை இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அரசு வேளாண்மை விதைப் பண்ணைகள் விவரம் :

| வரிசை எண். | மாவட்டம். | அரசு விதைப் பண்ணைகளின் பெயர்கள். | ஆரம்பிக்கப் பட்ட தேதி. | மொத்த பரப்பளவு (ஏக்கர்). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | செங்கை—அண்ணா | காஞ்சிபுரம். | 2–2–62 | 58.76 |
| 2 | ,, .. | கொளந்தலூர் | 1–4–58 | 50.72 |
| 3 | திருவண்ணாமலை சம்புவராயர். | அத்தியந்தல் | 1–9–57 | 53.23 |
| 4 | ,, | வாழவச்சனூர். | 16– 3–60 | 191.05 |
| 5 | தென் ஆற்காடு. | மீர்ராலூர் | 2– 2–58 | 46.98 |
| 6 | ,, | வன்ராயன் பட்டு. | 4– 1–58 | 50.99 |
| 7 | ,, | இருவேல்பட்டு. | 14– 8–61 | 52.09 |
| 8 | ,, | காகுப்பம் .. | 1– 1–57 | 70.84 |
| 9 | தென் ஆற்காடு | வானூர் .. | 31–12–57 | 60.53 |
| 10 | ,, | வடகுநந்தல் .. | 3–10–57 | 47.06 |
| 11 | தஞ்சாவூர் .. | சாக்கோட்டை. | 11–10–56 | 98.59 |
| 12 | ,, | நாகமங்கலம் | 4– 8–57 | 63.91 |
| 13 | ,, | திருக்கடையூர். | 17– 3–58 | 48.04 |
| 14 | ,, | ஒரத்தூர் .. | 13–10–50 | 49.93 |
| 15 | ,, | தேவாம்பாள் பட்டினம். | 19– 3–57 | 92.72 |
| 16 | ,, | காஞ்சிக்குடி காடு. | 1– 6–57 | 53.70 |
| 17 | ,, | கிராந்தி .. | 20–10–56 | 55.70 |
| 18 | ,, | மூங்கில்குடி | 21– 6–61 | 47.63 |
| 19 | ,, | சிக்கல் .. | 15– 7–60 | 56.50 |
| 20 | ,, | நெடும்பாளம் | 5–10–56 | 63.22 |
| 21 | ,, | தியாகராய புரம். | 10– 9–82 | 212.68 |
| 22 | ,, | சக்கரமங்கலம் | 11– 9–82 | 111.45 |
| 23 | ,, | செல்லூர் .. | 12– 9–82 | 268.10 |
| 24 | திருச்சி .. | நெய்குப்பை புதூர் | 1– 7–63 | 38.57 |
| 25 | ,, | புதூர்பாளையம் | 3– 5–60 | 75.97 |
| 26 | ,, | இறுங்கூர் .. | 8– 3–63 | 205.44 |
| 27 | புதுக்கோட்டை | அண்ணா பண்ணை. | 29– 8–67 | 636.39 |
| 28 | மதுரை .. | வினாயகபுரம் | 6–11–63 | 45.52 |
| 29 | ,, | கீலகடலூர் .. | 29– 5–63 | 47.86 |
| 30 | ,, | வைகை அணை. | 14– 6–62 | 53.79 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 31 | மதுரை | வைகை அணை | 17- 4-64 | 105.00 |
| 32 | காமராஜர் | தேவதானம் | 15-7-57 | 52.07 |
| 33 | திருநெல்வேலி-கட்ட பொம்மன். | கரையிருப்பு | 1-10-57 | 83.59 |
| 34 | ,, | மேலகரம் | 10- 9-63 | 40.52 |
| 35 | கன்யாகுமரி .. | திருப்பதிசாரம். | 1914** | 59.63 |
| 36 | கோவை .. | கன்னம் பாளையம். | 25-9-57 | 50.66 |
| 37 | ,, | பாப்பான்குளம். | 22- 7-61 | 46.36 |
| 38 | ,, | பொங்களூர் .. | 6-10-56 | 39.05 |
| 39 | பெரியார் .. | பவானிசாகர் | 1- 3-60 | 50.82 |
| 40 | ,, | சத்திய மங்கலம். | 1- 3-60 | 42.39 |
| 41 | ,, | பவானி .. | 23- 9-57 | 86.85 |
| 42 | சேலம் .. | டேனிஷ்பேட். | 18-3-60 | 86.45 |
| 43 | ,, | மேட்டூர் அணை. | 30-5-63 | 57.90 |
| 44 | தர்மபுரி .. | பாப்பாரப் பட்டி. | 1-7-57 | 55.20 |

** இப்பண்ணை கேரளா அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு மாநிலங்கள் திருத்தி அமைக்கும்பொழுது மாற்றப் பட்டது.

2. அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதைகளின் விபரம் :

அரசு விதைப் பண்ணைகளில் நெல் மற்றும் கேழ்வரகு, கம்பு, சோளம், மக்காச்சோளம் ஆகிய சிறு தானியங்கள், உளுந்து, பச்சைப்பயிறு, துவரை, காராமணி போன்ற பயிர் வகைகள், நிலக்கடலை, எள் போன்ற எண்ணை வித்து பயிர்கள், பருத்தி காய்கறி பயிர்கள் ஆகியவைகளின் விதைகள் உற்பத்தி படுகின் றன.





1987-88 ஆம் ஆண்டில் அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்த விதைகளின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | சிறு தானிய வகைகள். | உற்பத்தி செய்த விதைகளின் அளவு (மெட்ரிக் டன்) 1987-88. |
|---|---|---|
| 1 | நெல் ... ... ... ... | 3,131.5 |
| | சிறு தானிய வகைகள். | |
| 2 | கேழ்வரகு ... ... ... | 24.3 |
| 3 | சோளம் ... ... ... | 22.6 |
| 4 | கம்பு ... ... ... ... | 36.5 |
| 5 | மக்காச்சோளம் ... ... ... | 43.7 |
| 6 | மிகச் சிறுதானியம் (சாமை) ... | 0.3 |
| | பயறு வகைகள். | |
| 7 | உளுந்து ... .. ... .. | 50.9 |
| 8 | பச்சைப் பயிறு ... ... ... | 8.7 |
| 9 | துவரை .. ... ... ... | 1.3 |
| 10 | காராமணி ... ... ... | 12.4 |
| 11 | மற்றவை ... ... ... ... | 1.3 |
| | எண்ணெய் வித்துக்கள். | |
| 12 | நிலக்கடலை ... ... ... | 37.8 |
| 13 | எள் ... ... ... ... | 6.7 |
| 14 | பருத்தி ... ... .. | 17.8 |
| 15 | காய்கறிகள் ... ... ... | 19.2 |

## இணைப்பு II,

(அ) தமிழகத்தில் எண்ணெய் வித்து இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அரசு விதைப் பண்ணைகள் அமைந்துள்ள இடங்கள் விபரம்.

| வரிசை எண்ணும் அரசு விதைப் பண்ணை பெயரும். | இருப்பிடம். | மாவட்டம். | மொத்த பரப்பளவு. | சாகுபடி பரப்பளவு. | பாசன வசதி உள்ள பரப்பளவு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (எக்டேர்) | | |
| 1 ஆதார விதை உற்பத்தி மையம் | வெள்ளாள விடுதி .. | புதுக்கோட்டை .. | 177.28 | 147.80 | 70.00 |
| 2 டிை .. | மூசரவாக்கம் .. | செங்கை-அண்ணா .. | 61.98 | 58.50 | 20.00 |
| 3 ஆதார விதைப் பண்ணை .. | நவ்லாக் .. .. | திருவண்ணாமலை சம்புவராயர். .. | 34.20 | 27.40 | 27.40 |
| 4 மண்டல ஆதார விதைப்பண்ணை, | வடகரை .. .. | திருநெல்வேலி கட்டபொம்மன். .. | 23.00 | 18.00 | 8.00 |
| 5 டிை .. | பவானிசாகர் .. | பெரியார் .. .. | 7.50 | 5.83 | 5.83 |
| 6 டிை .. | துரைராஜ் நகர் .. | வட ஆற்காடு .. | 19.65 | 18.85 | 2.00 |
| 7 எண்ணெய் வித்துப் பண்ணை .. | அச்சிப்பள்ளி .. | தர்மபுரி .. .. | 8.80 | 7.58 | 2.00 |
| 8 தென்னை தாய் மரத்தோட்டம் (கருவித்துப்பண்ணை) | நெய்வேலி .. .. | தென்னாற்காடு .. | 152.08 | 132.80 | 12.20 |
| 9 தென்னை தாய் மரத் தோட்டம் (எண்ணெய் வித்துப் பண்ணை). | புட்லூர் .. .. | செங்கை-அண்ணா .. | 22.08 | 19.24 | 19.24 |

## இணைப்பு 2

1987–88.

(ஆ) அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதை விபரம்

| வரிசை எண்ணும் விதைப் பண்ணையின் இருப்பிடமும். | பயிர் வகைகள். | | பயிரிடப்பட்ட பரப்பளவு (எக்டேர்). | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | கோடை. | காரீப். | ராபி. | மொத்தம். |
| (1) | (2) | | (3) | (4) | (5) | (6) |
| 1 ஆதார விதை உற்பத்தி மையம், வெள்ளாள விடுதி, புதுக்கோட்டை மாவட்டம். | மணிலா (ஆ. நி.) | .. | 5.400 | 26.500 | 33.200 | 65.100 |
| | எள் .. | .. | .. | .. | 24.200 | 24.200 |
| | சூர்யகாந்தி .. | .. | .. | 15.200 | 3.800 | 19.000 |
| | ஆமணக்கு .. | .. | 3.200 | 28.300 | .. | 31.500 |
| | மொத்தம் | .. | 8.600 | 70.000 | 61.200 | 139.800 |
| 2 ஆதார விதை உற்பத்தி மையம், மூசரவாக்கம், செங்கை-அண்ணா மாவட்டம். | மணிலா (குவி.) | .. | .. | 5.690 | 4.000 | 9.960 |
| | மணிலா (ஆ.நி.) | .. | | 27.640 | 9.000 | 36.640 |
| | மணிலா (இக்ரிசாட்) | .. | .. | 2.500 | 0.800 | 3.300 |
| | மொத்தம் | .. | .. | 36.100 | 13.800 | 49.900 |
| | எள் .. | .. | .. | .. | 2.180 | 2.180 |
| | ஆமணக்கு .. | .. | .. | 3.940 | .. | 3.904 |
| | மொத்தம் | .. | .. | 40.040 | 15.980 | 56.020 |

இணைப்பு 2—தொடர்ச்சி.

1987–88— தொடர்ச்சி.

(ஆ) அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதை விபரம்— தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் விதைப் பண்ணை இருப்பிடமும். (1) | பயிர் வகைகள். (2) | உற்பத்தி செய்த விதைகள் (மெ. டன்.). கோடை (7) | கார்ப். (8) | ராபி. (9) | மொத்தம். (10) |
|---|---|---|---|---|---|
| 1 ஆதார விதை உற்பத்தி மையம், வெள்ளாள விடுதி, புதுக்கோட்டை மாவட்டம். | மணிலா (ஆ.நி.) | 5.150 | 12.130 | 11.996 | 29.276 |
| | எள் .. .. .. | .. | .. | 0.589 | 0.589 |
| | சூரியகாந்தி .. .. | .. | 1.521 | 0.352 | 1.873 |
| | ஆமணக்கு .. .. | 0.223 | 6.399 | .. | 6.622 |
| | மொத்தம் .. | 5.373 | 20.050 | 12.937 | 38.360 |
| 2 ஆதார விதை உற்பத்தி மையம், முசரவாக்கம், செங்கை-அண்ணா மாவட்டம் | மணிலா (குவி.) .. | .. | 3.267 | 3.537 | 6.804 |
| | மணிலா (ஆ.நி.) .. | .. | 10.047 | 6.638 | 16.685 |
| | மணிலா (இக்ரிசாட்) .. | .. | 3.445 | 1.731 | 5.176 |
| | மொத்தம் .. | .. | 16.759 | 11.906 | 28.665 |
| | எள் .. .. .. | .. | .. | 0.412 | 0.412 |
| | ஆமணக்கு .. .. | .. | 1.350 | .. | 1.350 |
| | மொத்தம் .. | .. | 18.109 | 12.318 | 30.427 |
| 3. ஆதார விதைப் பண்ணை, நல்லாக், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 16.960 | 13.800 | 30.760 |
| | நெல் .. .. | .. | 10.200 | 1.800 | 12.000 |
| | மொத்தம் .. | .. | 27.160 | 15.600 | 42.760 |
| 4 மண்டல ஆதார விதைப் பண்ணை, வடகரை, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம். | மணிலா (ஆ.நி) .. | .. | 10.900 | 2.930 | 13.830 |
| | சூரியகாந்தி .. .. | .. | 5.400 | 8.000 | 13.400 |
| | எள் .. .. | .. | .. | 6.000 | 6.000 |
| | மொத்தம் .. | .. | 16.300 | 16.930 | 33.230 |
| 5 மண்டல ஆதார விதைப் பண்ணை, பவானி சாகர், பெரியார் மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 5,300 | 6,150 | 11.450 |
| | ஆமணக்கு .. .. | .. | 0.470 | .. | 0.470 |
| | மொத்தம் .. | .. | 5.770 | 6.150 | 11.920 |

இணைப்பு 2—தொடர்ச்சி.

1987–88—தொடர்ச்சி.

(ஆ) அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதை விபரம்—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் விதைப்பண்ணை இருப்பிடமும் | பயிர் வகைகள் | உற்பத்தி செய்த விதைகள் (மெ. டன்) | | | |
|---|---|---|---|---|---|
| | | கோடை | காரீப் | ராபி | மொத்தம் |
| (1) | (2) | (7) | (8) | (9) | (10) |
| 3 ஆதார விதைப் பண்ணை, நவ்லாக், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 2.652 | 5.441 | 8.093 |
| | நெல் .. .. | .. | 15.912 | 3.644 | 19.556 |
| | மொத்தம் .. | .. | 18.564 | 9.085 | 27.649 |
| 4 மண்டல ஆதார விதைப் பண்ணை, வடகரை, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் | மணிலா (ஆ.நி.) .. | .. | 7.810 | 0.950 | 8,760 |
| | சூரியகாந்தி .. .. | .. | 2.580 | 2.102 | 4.683 |
| | எள் .. .. | .. | .. | 0.035 | 0.035 |
| | மொத்தம் .. | .. | 10.390 | 3.088 | 13.478 |
| 5 மண்டல ஆதார விதைப் பண்ணை, பவானிசாகர், பெரியார் மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 6.551 | 5.050 | 11,601 |
| | ஆமணக்கு .. | .. | 0.068 | .. | 0.068 |
| | மொத்தம் .. | .. | 6.619 | 5.050 | 11.669 |



இணைப்பு 2—தொடர்ச்சி.

1987–88—தொடர்ச்சி

(ஆ) அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதை விபரம்—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் விதைப் பண்ணை இருப்பிடமும். | பயிர் வகைகள். | பயிரிடப்பட்ட பரப்பளவு (எக்டேர்). | | | |
|---|---|---|---|---|---|
| | | கோடை. | காரிப். | ராபி. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 6 மண்டல ஆதார விதைப் பண்ணை, துரைராஜ் நகர், வட ஆற்காடு மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 10.000 | 1.700 | 11.700 |
| | எள் .. .. | .. | .. | 2.000 | 2.000 |
| | ஆமணக்கு .. .. | .. | 13.000 | .. | 13.000 |
| | சோயா .. .. | .. | .. | 0.350 | 0.350 |
| | மொத்தம் .. | .. | 23.000 | 4.050 | 27.050 |
| 7 எண்ணெய் வித்துப் பண்ணை, அச்சிப்பள்ளி, தர்மபுரி மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 6.260 | 0.500 | 6.760 |
| | சூரியகாந்தி .. .. | .. | .. | 0.500 | 0.500 |
| | மொத்தம் .. | .. | 6.260 | 1.000 | 7.260 |
| 8 கருவித்துப் பண்ணை, நெய்வேலி, தென்ஆற்காடு மாவட்டம். | மணிலா (க.வி.) .. | .. | 14,570 | 4.000 | 18.570 |
| | மொத்தம் .. | .. | 14.570 | 4.000 | 18.570 |

இணைப்பு 2—தொடர்ச்சி.

1987–88—தொடர்ச்சி.

(ஆ) அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதை விபரம்—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் விதைப்பண்ணை இருப்பிடமும். | பயிர் வகைகள். | பயிரிடப்பட்ட பரப்பளவு (எக்டேர்) கோடை. | காரீப். | ராபி. | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (7) | (8) | (9) | (10) |
| 6 மண்டல ஆதார விதைப் பண்ணை, துரைராஜ் நகர், வட ஆற்காடு மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 1.933 | 1.240 | 3.173 |
| | என் .. .. | .. | .. | 0.260 | 0.260 |
| | ஆமணக்கு .. .. | .. | 0.034 | .. | 0.034 |
| | சோயா .. .. | .. | .. | 0.013 | 0.013 |
| | மொத்தம் .. | .. | 1.967 | 1.513 | 3.480 |
| 7 எண்ணெய் வித்துப் பண்ணை, அச்சிப்பள்ளி, தர்மபுரி மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 3.804 | 0.510 | 4.314 |
| | சூரியகாந்தி .. .. | .. | .. | 0.185 | 0.185 |
| | மொத்தம் .. | .. | 3.804 | 0.695 | 4.499 |
| 8 கருவித்துப் பண்ணை, நெய்வேலி, தென் ஆற்காடு மாவட்டம். | மணிலா (க.வி.) .. | .. | 2.427 | 0.890 | 3.317 |
| | மொத்தம் .. | .. | 2.427 | 0.890 | 3.317 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 எண்ணெய் வித்துப் பண்ணை, புட்லூர், செங்கை-அண்ணா மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 2.000 | 2.000 | 4.000 |
| | மணிலா (இக்ரிசாட்) | .. | 1.200 | 1.200 | 1.200 |
| | என் .. .. | .. | .. | 1.000.. | 1.000 |
| | மொத்தம் .. | .. | 2.000 | 4.200 | 6.200 |

| (1) | (2) | உற்பத்தி செய்த விதையளவு (மெ. டன்). கோடை. | காரீப். | ராபி. | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| | | (11) | (12) | (13) | (14) |
| 9. எண்ணெய் வித்துப் பண்ணை, புட்லூர், செங்கை-அண்ணா மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 0.065 | 2.484 | 2.549 |
| | மணிலா (இக்ரிசாட்) .. | .. | .. | 3.119 | 3.119 |
| | என் .. | .. | .. | 0.104 | 0.104 |
| | மொத்தம் | . | 0.065 | 5.707 | 5.772 |

இணைப்பு—3.

1988–89.

(ஆ) அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதை விபரங்கள் :

| வரிசை எண்ணும் விதைப்பண்ணை இருப்பிடமும். | பயிர் வகைகள். | பயிரிடப்பட்ட பரப்பளவு (எக்டேர்). கோடை. | காரீப். | ராபி. | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. ஆதார விதை உற்பத்தி மையம், வெள்ளாள விடுதி, புதுக்கோட்டை மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 118.600 | 26.800 | 145.400 |
| | மணிலா (க.வி.) .. | .. | .. | 20.220 | 20.220 |
| | மணிலா (இக்ரிசாட்) .. | .. | 1.600 | .. | 1.600 |
| | ஆமணக்கு .. | .. | 120.200 | 47.020 | 167.220 |
| | மொத்தம் .. | .. | 143.360 | 47.020 | 190.380 |
| 2. ஆதார விதை உற்பத்தி மையம், முசரவாக்கம், செங்கை-அண்ணா மாவட்டம். | மணிலா (க.வி.) .. | .. | 8.700 | 4.240 | 12.940 |
| | மணிலா (ஆ.நி.) .. | .. | 20.420 | 6.260 | 26.680 |
| | மணிலா ((இக்ரிசாட்) .. | .. | 8.460 | 1.200 | 9.660 |
| | எள் .. | .. | 37.580 | 11.700 | 49.280 |
| | மொத்தம் .. | .. | 52.580 | 11.700 | 64.280 |



| வரிசை எண்ணும் விதைப் பண்ணை இருப்பிடமும். | பயிர் வகைகள். | உற்பத்தி செய்த விதைகள் (மெ.டன்). கோடை. | காரீப். | ராபி. | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (7) | (8) | (9) | (10) |
| 1. ஆதார விதை உற்பத்தி மையம், வெள்ளாள விடுதி, புதுக்கோட்டை மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 84.134 | .. | 84.134 |
| | மணிலா (க.வி.) .. | .. | .. | .. | .. |
| | மணிலா (இக்ரிசாட்) .. | .. | 0.211 | .. | 0.211 |
| | ஆமணக்கு .. | .. | 84.345 | .. | 84.345 |
| | மொத்தம் .. | .. | 86.073 | .. | 86.073 |
| 2. ஆதார விதை உற்பத்தி மையம், முசரவாக்கம், செங்கை-அண்ணா மாவட்டம். | மணிலா (க.வி.) .. | .. | 9.521 | .. | 9.521 |
| | மணிலா (ஆ.நி.) .. | .. | 7.848 | .. | 7.848 |
| | மணிலா (இக்ரிசாட்) .. | .. | 3.949 | .. | 3.949 |
| | எள் .. | .. | 21.318 | .. | 21.318 |
| | மொத்தம் .. | .. | 24.318 | .. | 24.318 |

இணைப்பு 3—தொடர்ச்சி.

1988-89—தொடர்ச்சி.

(ஆ) அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதை விபரங்கள்—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் விதைப் பண்ணை இருப்பிடமும். | பயிர் வகைகள். | உற்பத்தி செய்த விதைகள் (மெ.டன்). கோடை. | காரிப். | ராபி. | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 3. ஆதார விதைப் பண்ணை, நவ்லாக், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 12.800 | 12.800 | 24.800 |
| | நெல் .. .. | .. | 14.400 | .. | 14.400 |
| | சோயா .. .. | .. | .. | 0.400 | 0.400 |
| | மொத்தம் .. | .. | 27.200 | 12.400 | 39.600 |
| 4. மண்டல ஆதார விதைப் பண்ணை, வடகரை, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 8.400 | .. | 8.400 |
| | சூரியகாந்தி .. | .. | 1.600 | 6.000 | 7.600 |
| | மொத்தம் .. | .. | 10.000 | 6.000 | 16.000 |
| 5. மண்டல ஆதார விதைப் பண்ணை, பவானி சாகர், பெரியார் மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | 6.000 | .. | 5.830 | 11.830 |
| | மணிலா (இக்ரிசாட்) | .. | 0.360 | .. | 0.360 |
| | எள் .. .. | .. | 1.000 | .. | 1.000 |
| | சூரியகாந்தி .. | .. | 3830 | .. | 3.830 |
| | மொத்தம் .. | 6.000 | 5.190 | 5.830 | 17.020 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. ஆதார விதைப் பண்ணை, நவ்லாக், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம். | மணிலா (ஆ.நி.) — | .. | 3.070 | — | 3.070 |
| | நெல் .. .. | .. | .. | .. | .. |
| | சோயா .. .. | .. | .. | .. | .. |
| | மொத்தம் .. | .. | 3.070 | — | 3.070 |
| 4. மண்டல ஆதார விதைப் பண்ணை, வடகரை, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 1.869 | .. | 1.869 |
| | சூரியகாந்தி .. | .. | 0.069 | .. | 0.069 |
| | மொத்தம் .. | .. | 1.938 | .. | 1.938 |
| 5. மண்டல ஆதார விதைப் பண்ணை, பவானி சாகர், பெரியார் மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | 6.743 | .. | .. | 6.743 |
| | மணிலா (இக்ரிசாட்) | .. | 0.311 | .. | 0.311 |
| | எள் .. .. | .. | 0.229 | .. | 0.229 |
| | சூரியகாந்தி .. | .. | 1.866 | .. | 1.866 |
| | மொத்தம் .. | 6.743 | 2.406 | .... | 9.149 |

இணைப்பு—3—தொடர்ச்சி.

1988—89—தொடர்ச்சி.

**(ஆ) அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதை விபரங்கள்—தொடர்ச்சி.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **6. மண்டல ஆதார விதைப் பண்ணை, துரை ராஜ் நகர், வடாற்காடு மாவட்டம்.** | மணிலா (ஆ.நி.) .. | .. | 15.120 | 1.040 | 16.160 |
| | மொத்தம் .. | .. | 15.120 | 1.040 | 16.160 |
| **7. எண்ணெய் வித்துப் பண்ணை, அகசிப்பள்ளி, தர்மபுரி மாவட்டம்.** | மணிலா (ஆ.நி.) .. | .. | 6.400 | 2.000 | 8.400 |
| | சூரியகாந்தி .. | .. | .. | 1.000 | .. |
| | மொத்தம் .. | .. | 6.400 | 3.000 | 8.400 |
| **8. கருவித்துப் பண்ணை, நெய்வேலி, தென்னாற்காடு மாவட்டம்.** | மணிலா (ச.வி.) .. | .. | 4.000 | 4.400 | 8.400 |
| **9. எண்ணெய் வித்துப் பண்ணை, புட்லூர், செங்கை-அண்ணா மாவட்டம்.** | மணிலா (ஆ.நி.) .. | .. | .. | 2.000 | 2.000 |
| | மணிலா (இக்ரிசாட்) .. | .. | 1.200 | 1.200 | 2.400 |
| | ஆமணக்கு .. | .. | 10.000 | .. | 10.000 |
| | மொத்தம் .. | .. | 11.200 | 3.200 | 14.400 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. மண்டல ஆதார விதைப் பண்ணை, துரை ராஜ் நகர், வடாற்காடு மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 5.217 | .. | 5.217 |
| | மொத்தம் .. | .. | 5.217 | .. | 5.217 |
| 7. எண்ணெய் வித்துப் பண்ணை, அகசிப்பள்ளி, தர்மபுரி மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | 2.742 | .. | 2.742 |
| | சூரியகாந்தி .. | .. | .. | .. | .. |
| | மொத்தம் .. | .. | 2.742 | .. | 2.742 |
| 8. கருவித்துப் பண்ணை, நெய்வேலி, தென்னாற்காடு மாவட்டம். | மணிலா (க.வி.) .. | .. | 1.002 | .. | 1.002 |
| | மொத்தம் .. | .. | 1.002 | .. | 1.002 |
| 9. எண்ணெய் வித்துப் பண்ணை, புட்லூர், செங்கை-அண்ணா மாவட்டம். | மணிலா (ஆ.நி.) .. | .. | .. | .. | .. |
| | மணிலா (இக்ரிசாட்) | .. | 1.047 | .. | 1.047 |
| | ஆமணக்கு .. | .. | 0.065 | .. | 0.065 |
| | மொத்தம் .. | .. | 1.112 | .. | 1.112 |

இணைப்பு– 4.

1. தமிழ்நாடு அரசு தோட்டக் கலைத் துறை கட்டுப்பாட்டின் கீழ் காய்கறி விதை உற்பத்தி மையங்கள் சேலம் மாவட்டம் கருமந்துறையிலும், உதகை மாவட்டம் குன்னூரிலும் செயல்படுகின்றன.

2. கருமந்துறை காய்கறி விதை உற்பத்தி மையத்தில் பீர்க்கு, பாகல், பீன்ஸ், தக்காளி, கத்தரி, வெண்டை போன்ற காய்கறி விதைகளும் குன்னூர் செடி மற்றும் உற்பத்தி நிலையத்தில் பீன்ஸ் மற்றும் பூகோசு காய்கறி விதைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஆண்டுதோறும் மேற்கூறிய தோட்டக் கலைப் பண்ணைகளிலிருந்து 4.50 டன் அளவிற்கு காய்கறி விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.



8. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் வருமானம்.

வினா எண் 699—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் வருமானம் எவ்வளவு? (1980 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு வாரியாக இனவாரியாக)

விவரம் பின்வருமாறு:

விடை—

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் வருமான விபரங்கள்.

| எண் மற்றும் விபரம். | 1980–81 | 1981–82 | 1982–83 | 1983–84 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 நிலங்கள் மூலம் வரவு .. .. | 1,43,869.62 | 1,18,346.03 | 1,04,626.90 | 57,722.97 |
| 2 கட்டிடம் காலியிடங்கள் .. .. | 2,19,583.65 | 2,13,535.13 | 2,37,363.46 | 2,62,301.28 |
| 3 உண்டியல்கள் மூலம் வரவு .. .. | 72,00,650.15 | 80,75,870.14 | 85,64,687.69 | 89,15,830.21 |
| 4 முடி, காதுகுத்தல், சில்லறை குத்தகைகள் | 11,58,137.67 | 5,86,046.00 | 10,36,396.00 | 8,40,374.00 |
| 5 செலவுபோக அபிஷேக அர்ச்சனை கட்டணம். | 9,64,575.41 | 11,89,363.59 | 13,04,462.00 | 12,00,137.70 |
| 6 பிரார்த்தனைகளும் உபயங்களும் .. | 29,71,600.01 | 15,81,181.44 | 15,96,101.44 | 20,39,155.87 |
| 6 (அ) கும்பாபிஷேகம் மூலம் வரவு .. | .. | .. | .. | .. |
| 7 கிராண்டுகள்— | | | | |
| (அ) மோகினிதல்திக் .. .. | இல்லை. | இல்லை. | 7,057.60 | 7,057.60 |
| 8 சேமிப்பு நிதிகளின் வருமானம் .. | 32,42,926.72 | 29,31,978.93 | 25,39,916.03 | 49,41,724.93 |
| 9 பஞ்சாமிர்தம் விற்பனை மூலம் வரவு .. | 15,94,707.50 | 20,29,357.50 | 25,25,095.80 | 33,37,484.10 |
| 10 தங்கரதம் மூலம் வருமானம் .. | .. | 17,39,797.71 | 21,34,649.80 | 23,84,743.08 |
| 11 மின்இழுவை ரயில் மூலம் வரவு .. | 6,93,303.75 | 8,96,196.85 | 8,93,144.16 | 9,27,188.50 |
| 12 தண்டபாணி நிலையம் மற்றும் தங்கும் விடுதி. | 8,12,534.40 | 8,93,363.00 | 9,62,093.90 | 10,03,212.25 |
| 13 இதர வருமானங்கள் .. .. | 5,39,278.14 | 11,07,344.00 | 12,13,725.64 | 12,52,912.31 |



| எண் மற்றும் விவரம். | 1984–85 | 1985–86 | 1986–87 | 1987–88 |
|---|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) | (9) |
| 1 நிலங்கள் மூலம் வரவு .. .. | 1,73,347.80 | 1,37,057.60 | 1,60,139.11 | 1,58,027.60 |
| 2 கட்டிடம் காலியிடங்கள் .. .. | 2,87,630.80 | 3,32,117.80 | 4,08,769.70 | 4,43,038.80 |
| 3 உண்டியல்கள் மூலம் வரவு .. .. | 1,11,47,097.83 | 1,20,81,465.66 | 1,29,14,801.33 | 1,36,73,294.36 |
| 4 முடி, காதுகுத்தல், சில்லறை குத்தகைகள் | 11,41,811.00 | 15,07,828.00 | 3,77,818.00 | 5,13,202.00 |
| 5 செலவு போக அபிஷேக அர்ச்சனை கட்டணம். | 11,88,272.00 | 12,09,554.27 | 13,60,996.93 | 13,21,301.72 |
| 6 பிரார்த்தனைகளும் உபயங்களும் .. | 19,62,490.20 | 21,72,023 | 23,81,304.31 | 27,52,297.69 |
| (அ) கும்பாபிஷேகம் மூலம் வரவு .. | .. | .. | .... | 9,43,745.00 |
| 7 கிராண்டுகள்— | | | | |
| (அ) மோகினிதல்திக் .. .. | 7,057.60 | 7,057.60 | 7,057.60 | 7,057.60 |
| 8 சேமிப்பு நிதிகளின் வருமானம் .. | 70,71,866.38 | 73,81,377.44 | 88,79,311.19 | 1,51,24,899.06 |
| 9 பஞ்சாமிர்தம் விற்பனை மூலம் வரவு .. | 41,38,459.50 | 48,22,506.50 | 49,06,395.50 | 45,85,940.00 |
| 10 தங்கரதம் மூலம் வருமானம் .. | 26,90,386.00 | 31,44,693.00 | 33,63,258.00 | 37,24,423.50 |
| 11 மின்இழுவை ரயில் மூலம் வரவு .. | 10,83,495.00 | 15,82,721.50 | 18,95,915.50 | 21,30,182.00 |
| 12 தண்டபாணி நிலையம் மற்றும் தங்கும் விடுதி. | 11,83,967.40 | 14,97,460.45 | 16,32,324.50 | 17,78,342.50 |
| 13 இதர வருமானங்கள் .. .. | 12,41,073.63 | 12,74,521.18 | 36,21,886.03 | 32,99,934.93 |

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் வருமான விவரங்கள்—தொடர்ச்சி.

| எண் மற்றும் விவரம். | 1980–81 | 1981–82 | 1982–83 | 1983–84 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 14 மூலதன வரவுகள் .. .. .. | 11,80,682.60 | 15,48,776.94 | 16,59,601.01 | 21,22,437.74 |
| 15 டெபாசிட்டுகள் .. .. .. | 10,18,768.17 | 9,52,650.46 | 13,66,164.64 | 17,83,462.35 |
| 16 முன்பணத்தின் வரவு .. .. | 17,31,674.16 | 24,76,510.20 | 14,16,248.67 | 28,59,744.97 |



| எண் மற்றும் விவரம். | 1984–85 | 1985–86 | 1986–87 | 1987–88 |
|---|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) | (9) |
| 14 மூலதன வரவுகள் .. .. .. | 1,78,18,156.27 | 2,66,146.93 | 3,98,161.00 | 20,86,507.00 |
| 15 டெபாசிட்டுகள் .. .. | 18,52,127.32 | 30,45,885.03 | 24,34,784.11 | 29,97,103.72 |
| 16 முன்பணத்தின் வரவு .. .. | 13,76,744.45 | 20,65,542.31 | 23,43,701.12 | 31,42,880.67 |

[1990 ஏப்ரல் 24

## 9—சென்னை இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் சாலை பராமரிப்பு.

வினா எண் 790 —திருமதி எஸ். பி. சற்குணம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியிலுள்ள எல்லைய முதலித் தெரு, மணலி சாலை பராமரிப்புக்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

(ஆ) மேற்படி தொகுதியில் தனியாருக்குச் சொந்தமான வீதிகள் எத்தனை ?

(இ) கோவிலுக்கு சொந்தமான வீதிகள் எத்தனை ?

விடை—

(அ) சென்னை இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியிலுள்ள எல்லைய முதலித் தெரு, பராமரிப்புக்கு எடுக்கப்பட்டு உள்ளது. அச்சாலையின் முழு நீளம் 3 கி.மீ. அதில் 0.64 கி.மீ. நீளம் பழுது பார்க்கப்பட்டு மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதியில் 0.84 கி.மீ. நீளச் சாலை நடப்பு ஆண்டில் (1989-90) புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இது போக மீதமுள்ள கடைசிப் பகுதியில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், கழிவு நீர் வெளியேற்றும் கால்வாய் அமைக்கத் திட்டமிட்டு இருப்பதால் இந்தப் பணி முடிந்த பின்னர் சாலை புதுப்பிக்கப்படும். மணலி சாலை நன்றாக உள்ளது. அவ்வப்போது ஏற்படும் சேதப்பட்ட பகுதிகளைஉஷ்ணக் கலவை கொண்டு உடனுக்குடன் சரிப்பார்க்கப் படுகிறது.

(ஆ) இந்தத் தொகுதியில் தனியாருக்குச் சொந்தமான வீதிகள்:

| | |
|---|---|
| கோட்டம் 7 | ஒன்று. |
| கோட்டம் 8 | இரண்டு. |
| கோட்டம் 18 | பதினொன்று. |
| கோட்டம் 19 | ஒன்று. |
| கோட்டம் 20 | நான்கு. |
| கோட்டம் 21 | இரண்டு. |

(இ) கோவிலுக்குச் சொந்தமான வீதி கோட்டம் 8-ல் ஒன்று மட்டும் உள்ளது.



1990 ஏப்ரல் 24]

## 10—வேலை இழந்த கள் இறக்குவோருக்கு உதவித் தொகை

வினா எண் 1081—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1—1—1987 முதல் வேலை இழந்த கள் இறக்குவோருக்கு பதநீர் இறக்கவும், பனை வெல்லம் தயாரிக்கவும், கருவிகள் வாங்கி கொள்ளவும் அரசு வழங்கியுள்ள மொத்த உதவி தொகை எவ்வளவு ?

(ஆ) எவ்வளவு பேருக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டது ?

(இ) நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் எத்தனை ?

விடை—

(அ) தமிழ்நாடு அரசு 1—1—1987 முதல், பகுதி மது விலக்கு அமுல் படுத்தியதை தொடர்ந்து கள இறக்கி வேலை இழந்த தொழிலாளர்களுக்கு பதநீர் இறக்கவும், பனை வெல்லம் தயாரிக்கவும், கருவிகள் வாங்கி கொள்ளவும், ரூ. 3 கோடியை மானியமாகவும், ரூ. 3 கோடியை வட்டியில்லா கடனாகவும் ஆக மொத்தம் ரூ. 6 கோடி வழங்கியுள்ளது.

(ஆ) அரசினால் வழங்கப்பட்ட ரூ. 6 கோடி நிதியை பனை மரத் தொழிலாளர் ஒருவருக்கு தலா ரூ. 1,000 மானியமாகவும், ரூ. 1,000 வட்டியில்லாக் கடனாகவும், ஆக மொத்தம் ரூ. 2,000 வீதம் 30 ஆயிரம் நபர்களுக்கு உதவித் தொகை அளிக்கப் பட்டது.

(இ) பல்வேறு பனைத் தொழிலாளர் சங்கங்களிலிருந்தும் ஆரம்ப பனைவெல்ல கூட்டுறவு சங்க தலைவர்களிடமிருந்தும் கள் இறக்க வேலை இழந்த தொழிலாளர்கள், மேலும் பலர் நிதியுதவி பெறாமல் விடுபட்டுள்ளனர் என்றும், அவர்களுக்கும், நிதியுதவி வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று வந்த கோரிக்கைகளின்படி, மேலும் கூடுதலாக 13,516 நபர்களுக்கு நிதியுதவி வழங்க அரசுக்கு அனுப்பப்பட்ட வாரியத்தின் பரிந்துரை அரசின் பரிசீலனையிலுள்ளது.

11—

### மோட்டார் வாகன வரி ஏய்ப்பு கண்டுபிடிக்கப்பட்ட வாகனங்கள்

வினா எண் 1087—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1985-86, 1986-87, 1987-88 மற்றும் 1988-89 ஜனவரி மாதம் முடிய மோட்டார் வாகன வரி ஏய்ப்பு கண்டு பிடிக்கப்பட்ட எண்ணிக்கை ஆண்டுவாரியாக எவ்வளவு ?

(ஆ) இவற்றினால் வாகனவரி எந்த அளவில் அரசுக்கு கிடைத்தது ஆண்டுவாரியாக ?

விடை—

(அ) 1985-86 ஆண்டு முதல் 1988-89 (ஜனவரி மாதம் முடிய) மோட்டார் வாகன வரி ஏய்ப்பு கண்டுபிடிக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு :—

| ஆண்டு. | வாகனங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1985-86 | 7,204 |
| 1986-87 | 8,895 |
| 1987-88 | 9,287 |
| 1988-89 (31—1—1989) முடிய | 11,420 |

(ஆ) அரசுக்கு கிடைத்த வாகனவரியின் விவரம் கீழ் வருமாறு :—

| ஆண்டு. | அரசுக்கு கிடைத்த வாகன வரி. |
|---|---|
| 1985-86 | ரூ. 24,18,313.00 |
| 1986-87 | ரூ. 31,67,455.00 |
| 1987-88 | ரூ. 35,24,833.00 |
| 1988-89 (31—1—1989 முடிய) | ரூ. 49,15,957.00 |

12—

### 20 அம்ச திட்டம்

வினா எண் 1101—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1985-86 முதல் 1988 டிசம்பர் மாதம் முடிய 20 அம்சத் திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றி முதலிடம் பெற்ற மாவட்டம் எது ?

(ஆ) எந்தெந்த மாவட்டங்கள் பின்தங்கி இருந்தன?



விடை—

| (அ)—வருடம். | இருபது அம்சத் திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றியதில் முதலிடம் வகித்த மாவட்டங்கள். |
|---|---|
| (1) | (2) |
| 1985-86 | 1 கோயம்புத்தூர்<br>2 வட ஆற்காடு |
| 1986-87 | 1 திண்டுக்கல் காயிதே மில்லத்<br>2 திருச்சிராப்பள்ளி<br>3 பசும்பொன் தேவர் திருமகன்<br>4 கோயம்புத்தூர் |
| 1987-88 | 1 கோயம்புத்தூர்<br>2 மதுரை<br>3 பசும்பொன் தேவர் திருமகன்<br>4 காமராஜர்<br>5 புதுக்கோட்டை<br>6 சென்னை. |
| 1988-89 | 1 கோயம்புத்தூர்<br>2 மதுரை<br>3 திருச்சிராப்பள்ளி<br>4 திண்டுக்கல் காயிதே மில்லத்<br>5 சென்னை |

| (ஆ)—வருடம். | இருபது அம்ச திட்டத்தை நிறைவேற்றியதில் கடைசி ஐந்து இடங்களை வகித்த பின்தங்கிய மாவட்டங்களின் விபரங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன. |
|---|---|
| (1) | (2) |
| 1985-86 | 1 பசும்பொன் தேவர் திருமகன்<br>2 காமராஜர்<br>3 தென் ஆற்காடு<br>4 திருநெல்வேலி-கட்டபொம்மன்.<br>5 கன்னியாகுமரி |
| 1986-87 | 1 சிதம்பரனார்<br>2 இராமநாதபுரம்<br>3 தருமபுரி<br>4 சென்னை<br>5 வட ஆற்காடு |

| (1) | (2) |
|---|---|
| 1987-88 | 1 இராமநாதபுரம் |
| | 2 கன்னியாகுமரி |
| | 3 திண்டுக்கல் காயிதே மில்லத் |
| | 4 நீலகிரி |
| | 5 செங்கை-அண்ணா |
| 1988-89 | 1 தென் ஆற்காடு |
| | 2 சிதம்பரனார் |
| | 3 வட ஆற்காடு |
| | 4 சேலம் |
| | 5 பெரியார் |

13—

சென்னையில் உள்ள பொது மருத்துவமனையிலிருந்து மருந்து திருடியதாக நிலுவையில் உள்ள வழக்குகள்.

வினா எண். 1281—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையில் உள்ள பொது மருத்துவமனையில் மருந்து திருடியதாக நிலுவையில் உள்ள வழக்குகள் எத்தனை?

(ஆ) திருட்டுகளை தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) சென்னையில் உள்ள பொது மருத்துவ மனைகளில் மருந்து திருடியதாக 7 வழக்குகள் உள்ளன. அவைகளில் 4 வழக்குகள் சென்னை பொது மருத்துவமனையிலும், 1 வழக்கு ஸ்டான்லி மருத்துவமனையிலும், 1 வழக்கு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் மற்றும் 1 வழக்கு அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனையிலும் நிலுவையில் உள்ளன. இவ் வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் அரசு ஊழியர்களே. மேற்படி ஊழியர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



(ஆ) திருட்டுக்களைத் தடுக்க கீழ்க்கண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொது மருத்துவமனைகளில் தக்க காவல் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காவல் துறை பிரிவில் உள்ள துணை ஆணையர், ஆய்வாளர், துணை ஆய்வாளர்கள், தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்கள் மூலம் மருந்து திருடு போவதைத் தடுக்க பல முக்கிய பகுதிகளில் ரோந்து பணி மேற்கொண்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. காவலர்கள் சாதாரண உடையில் முக்கிய இடங்களை கண்காணிக்கவும், மருத்துவமனைகளுக்கு வந்து போகும் வாகனங்களைச் சோதனையிடவும் சந்தேகிக்கக் கூடிய நபர்களை விசாரிக்கவும் காவல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1. மருத்துவ மனைகளில் பிரதான மருந்து கிடங்கிலுள்ள சில அத்தியாவசியமான மற்றும் உயிர்க்காக்கும் மருந்துகளின் கையிருப்பு உரிய அதிகாரிகளின் மூலம் அடிக்கடி சோதனை செய்யப்பட்டு சரிபார்க்கப்படுகிறது. இது தவிர நோயாளிகளுக்கு மருந்துகள் வழங்கப்படும் பல்வேறு நிலையங்களில் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2. சார்பு மருந்து கிடங்குகள் திடீர் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு பண்டக சாலையில் பெறப்படும் தேவைப்பட்டியல்கள் அதன் மீதான கணக்குகள் சரிபார்க்கப்படுகின்றன.

3. அரசு உத்தரவின்படி த!அ போன்ற லோகோ முத்திரையிட்ட மருந்துகளை வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவதோடு மருத்துவ அடையாள முத்திரையும், மருந்துகள், சீசாக்கள் மீது பொறிக்கப்படுகின்றன.

4. பிரதான மருந்து பண்டகசாலை மருந்தகம், சார்பு பண்டகப் பிரிவுகள், சிறப்பு துறைகள் ஆகியவற்றில் பணிபுரியும் தலைமை மருந்தாளுநர்கள், மருந்தாளுநர்கள் அனைவரையும் சுழற்சி முறையில் வெவ்வேறு துறைகளுக்கு மாற்றம் செய்து பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

14—

மதுராந்தகம் நகரத்தில் பூந்தோட்ட மான்ய நிலம் ஆக்கிரமிப்பு

வினா எண் 1296—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், மதுராந்தகம் நகரத்தில் பூந்தோட்ட மான்ய நிலத்தை தனியார் ஆக்கிரமித்து உள்ளனர் என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மதுராந்தகம் வட்டம், மேற்படி நகரம் பூந்தோட்டம் மான்ய நிலத்தை தனியார் ஆக்கிரமித்துள்ளார்களா என்பது தொடர்பாக மேற்படி நகரம் புல எண் 194-இன் மொத்த விஸ்தீரணம் 0.27.5 ஹெக்டேர் உடைய நந்தவனம் புறம்போக்கு என கிராம கணக்குகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப் புலனில் 8 நபர்கள் கட்டிடங்கள் கட்டி அனுபவித்து வருகின்றனர்.

(ஆ) இப் புலனில் உள்ள அனுபவதாரர்களை அப்புறப்படுத்த தமிழ்நாடு ஆக்கிரமிப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கையை வட்டாச்சியர் மேற்கொள்ளுகையில் அனுபவதாரர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு எண் 10230 முதல் 10236/86 மற்றும் டபிள்யு. எம். பி. 15439 முதல் 15445/86 நாள் 29—9—1986இன்படி இடைக்கால தடை ஆணை வழங்கியதின் மீது 21—7—1987இல் மேற்படி தடையை நிரந்தர தடையாணையாக பிறப்பிக்கப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே இதில் ஆக்கிரமிப்புச் சட்டத்தின்படி மேல் நடவடிக்கை தொடர இயலாத நிலையில் உள்ளது.

15—

## மீனவர்களுக்கு இலவச வீடுகள்.

வினா எண் 1355—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள மீனவர்களுக்கு எங்கெங்கு அரசு வீட்டு மனைகள் கட்டித் தந்துள்ளது ?

(ஆ) செங்கை—அண்ணா மாவட்டத்தில் எங்கெங்கு அரசு வீடுகளைக் கட்டித் தந்துள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ): மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டி அளிக்கும் திட்டம் 1975-76 முதல் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் கடலோரம் வாழும் மீனவர்கள் இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்படாத வகையில் தக்க வீடுகள் கட்டி அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் செங்கை மற்றும் இதர மாவட்ட வாரியாக கட்டப்பட்ட வீடுகள் பற்றிய விவரங்கள் இணைப்பு-I-ல் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட வேண்டிய வீடுகளின் விவரங்கள் இணைப்பு-II இல் கொடுக்கப்பட்டுள்ளன.



## இணைப்பு I

செங்கை—அண்ணா மாவட்டம்

| வரிசை எண்ணும் கிராமத்தின் பெயரும். | கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1 கத்திவாக்கம் | 95 |
| 2 பாலவாக்கம் | 50 |
| 3 ஈகாட்டூர் சீரக்காட்டுக்குப்பம் (முட்டுக்காடு) | 119 |
| 4 கோவளம் | 215 |
| 5 கல்பாக்கம் (நெமிலி) | 101 |
| 6 மகாபலிபுரம் | 97 |
| 7 வெம்புருஷகுப்பம் | 35 |
| 8 கோகிலமேடு | 57 |
| 9 சட்ராஸ்—உமரிக்குப்பம் | 270 |
| 10 ஆரும்பாக்கம் | 75 |
| 11 ஆண்டிக்குப்பம் | 47 |
| 12 சால்வன்குப்பம் | 11 |
| 13 ஈஞ்சம்பாக்கம் | 82 |
| 14 லைட்ஹவுஸ்குப்பம் | 69 |
| 15 பெரிய நீலங்கரை | 94 |
| 16 பாட்டைக்குப்பம் | 75 |
| 17 பட்டிபுலம் | 75 |
| 18 தேவனேரி | 85 |
| 19 பனையூர்குப்பம் | 100 |
| 20 கானாத்தூர் ரெட்டிக்குப்பம் | 80 |
| 21 நைனார்குப்பம் | 115 |
| | 1,947 |

990 ஏப்ரல் 24]

### தென் ஆற்காடு மாவட்டம்.

| வரிசை எண்ணும், கிராமத்தின் பெயரும். | கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1 கோமுட்டிச்சாவடி | 120 |
| 2 தாழங்குடா | 150 |
| 3 சாமியார்பேட்டை | 134 |
| 4 செட்டிநகர் | 144 |
| 5 பரங்கிப்பேட்டை | 250 |
| 6 கிள்ளை | 100 |
| 7 நல்லவாடு | 82 |
| 8 சின்னார்புதுப்பேட்டை | 50 |
| 9 அனுமந்தை | 100 |
| 10 ரெட்டியார்பேட்டை | — |
| 11 அன்னப்பன்பேட்டை | 79 |
| 12 டி.வி.எஸ். பேட்டை | 64 |
| | 1,273 |



1990 ஏப்ரல் 24]

### தஞ்சாவூர் மாவட்டம்.

| வரிசை எண்ணும் கிராமத்தின் பெயரும் | கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1 நாகப்பட்டினம் | 58 |
| 2 மல்லிப்பட்டினம் | 100 |
| 3 மருதான்பள்ளம் | 217 |
| 4 நெய்தவாசல் | 73 |
| 5 சாமஞ்சப்பேட்டை | 130 |
| 6 தாழம்பேடு | 150 |
| 7 வேளாங்கண்ணி | 146 |
| 8 பிள்ளையார் திடல் | 53 |
| 9 புதுப்பேட்டை | 250 |
| 10 சின்னக்குடி | 50 |
| 11 வெள்ளக்கோயில் | 100 |
| 12 விழுந்தாமாவடி | 50 |
| 13 நம்பியார் நகர் | 192 |
| 14 சேதுபாவாசத்திரம் | 25 |
| 15 தரங்கம்பாடி | 420 |
| 16 சந்திரபாடி | 300 |
| 17 சின்னவாணகிரி | 46 |
| 18 செருதூர் (பிரதமாரம்புரம்) | 50 |
| 19 காமேஸ்வரம் | … |
| 20 கணேசபுரம் | — |
| 21 அந்தோணியார்புரம் | 65 |
| 22 கிழத்தோட்டம் | 150 |
| | 2,425 |

### புதுக்கோட்டை மாவட்டம்.

| வரிசை எண்ணும், கிராமத்தின் பெயரும். (1) | கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1 கட்டுமாவடி | 77 |
| 2 கோட்டைப்பட்டினம் | 121 |
| 3 புதுக்குடி | 170 |
| 4 புதுப்பட்டினம் | 150 |
| 5 வடக்கம்மாபட்டினம் | ... |
| 6 அய்யம்பட்டினம் | 25 |
| 7 முத்துக்குடா | .. |
| | 543 |

### இராமநாதபுரம் மாவட்டம்.

| வரிசை எண்ணும், கிராமத்தின் பெயரும். (1) | கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1 தேவிப்பட்டினம் | 104 |
| 2 ஏர்வாடி | 60 |
| 3 நம்புதலை | 150 |
| 4 முள்ளிமுனை | 50 |
| 5 கீழமுண்டல் | 50 |
| 6 காள்கொள்ளம்பட்டினம் | 50 |
| 7 பாசிப்பட்டிணம் | 50 |
| 8 பாம்பன் | 100 |
| 9 வாலிநோக்கம் | 120 |
| 10 மூக்கையூர் | 50 |
| 11 தொண்டி | 100 |
| 12 முடிவீரன்பட்டிணம் | 64 |
| 13 திருப்பாலைக்குடி | 220 |
| 14 ஓலைக்குடா | 50 |
| 15 மண்டபம் | 100 |
| 16 கீழக்கரை | .. |
| 17 நரேந்தல் | 20 |
| 18 மோர்ப்பனை | 50 |
| | 1,388 |





### திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.

144374

| வரிசை எண்ணும் கிராமத்தின் பெயரும். (1) | கட்டப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1 கூட்டப்புளி | 300 |
| 2 இடிந்தகரை | 300 |
| 3 கூட்டப்பனை | 84 |
| 4 பெருமணல் | 86 |
| 5 கூடுதாழை | 30 |
| | 800 |

### சிதம்பரனார் மாவட்டம்.

| வரிசை எண்ணும், கிராமத்தின் பெயரும். (1) | கட்டப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1 திருவைக்குளம் | 100 |
| 2 அமலிநகர் | 280 |
| 3 பெரியதாழை | 430 |
| 4 மணப்பாடு | 109 |
| 5 புன்னக்காயல் | 100 |
| 6 பழையகாயல் | 55 |
| 7 வேம்பார் | 50 |
| 8 கீழவைப்பார் | 75 |
| 9 சிப்பிக்குளம் | 25 |
| 10 ஆலந்தலை | 125 |
| 11 திரேசாபுரம் (தூத்துக்குடி) | 69 |
| 12 இரட்சன்யபுரம் | 30 |
| | 1,448 |

D
V211,31 N90
N90 30:2

53-127—11

கன்னியாகுமரி மாவட்டம்.

| வரிசை எண்ணும், கிராமத்தின் பெயரும். | கட்டப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1 சின்னமுட்டம் .. .. .. .. | |
| 2 பெரியவிளை .. .. .. .. | 160 |
| 3 முள்ளூதுறை .. .. .. .. | 110 |
| 4 ராமன்துறை .. .. .. .. | 140 |
| 5 புத்தன்துறை .. .. .. .. | 33 |
| 6 கேசவபுத்தன் துறை .. .. .. | 50 |
| 7 பொழிக்கரை .. .. .. .. | 50 |
| 8 நீரோடை .. .. .. .. | 50 |
| 9 மார்த்தாண்டம்துறை .. .. .. .. | 11 |
| 10 இணையம்புத்தன்துறை .. .. .. | 4 |
| 11 இணையம் .. .. .. .. .. | 22 |
| 12 வள்ளவிளை .. .. .. .. | 117 |
| 13 இணையம் சின்னதுறை .. .. .. | 74 |
| 14 சின்னவிளை .. .. .. .. | 8 |
| 15 குறும்பனை .. .. .. .. | 30 |
| 16 இராஜக்காமங்கலம் .. .. .. | 50 |
| 17 நடுத்துரை .. .. .. .. .. | 60 |
| 18 பெரியக்காடு .. .. .. .. | 80 |
| 19 மேலமணக்குடி .. .. .. .. | 30 |
| 20 பூத்துறை .. .. .. .. .. | 100 |
| 21 ஆரோக்கியபுரம் .. .. .. | 50 |
| 22 தூத்தூர் .. .. .. .. | .. |
| 23 வாணியக்குடி .. .. .. .. | 50 |
| 24 கடியபட்டிணம் .. .. .. .. | 29 |
| 25 குளச்சல் .. .. .. .. .. | 50 |
| | 50 |
| | 1,608 |





இணைப்பு II.

அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை விவரம்.

| வரிசை எண், மாவட்டம் மற்றும் கிராமத்தின் பெயர். | அங்கீகரிக்கப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | கட்டி முடிக்கப் பட்டவை. | கட்டுமான நிலையில் உள்ளவை/ எடுத்துக் கொள்ள வேண்டியவை. | குறிப்புரைகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 தஞ்சாவூர் மாவட்டம் சின்ன வானகிரி. | 100 | 40 | 54 | ஆறு வீடுகள் கூரை வரை வந்து இடிபாடுகளுடன் காணப்பட்டமையால் திரும்பவும் கட்டுமாறு கண்காணிப்பு பொறியாளருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன. மீதமுள்ள வீடுகளையும் விரைவில் கட்டுமாறு பணிக்கப் பட்டுள்ளது. |
| 2 கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல். | .. | .. | 47 | டெண்டர்கள்கேட்டு துரித மேல் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கண்காணிப்புப் பொறியாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

| வரிசை எண், மாவட்டம் மற்றும் கிராமத்தின் பெயர். | அங்கீகரிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | கட்டி முடிக்கப்பட்டவை. | கட்டுமான நிலையில் உள்ளவை/ எடுத்துக்கொள்ள வேண்டியவை. | குறிப்புரைகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 3 செங்கை—அண்ணா மாவட்டம் சுண்ணாம்புக்குளம் | 150 | — | 150 | மீனவர்களுக்காக 150 வீடுகள் கட்டுவது தொடர்பாக ஒப்பந்தப் புள்ளி (டெண்டர்) திரு. ஜீ. கலியசுந்தரம், தலைவர் பொறியாளர்கள் குழு, பொதுப்பணித் துறை சேப்பாக்கம் அவர்களுக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 4 செங்கை—அண்ணா மாவட்டம் திருச்சினாங்குப்பம் — | 492 | ... | 492 | 492 வீடுகள் கட்டுவது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. |

இவையடக்கி 1989–90 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பாது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி 1989–90-ல் மீனவர்களுக்காக 3,000 டுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.



16—

திருக்கழுக்குன்றம் பட்சி தீர்த்தக் கோயிலுக்கு சொத்துக்கள்.

**வினா எண் 1358—திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை அண்ணா மாவட்டம், திருக்கழுக்குன்றம் பட்சி தீர்த்த கோயிலுக்கு சொத்துக்கள் எவ்வளவு ?

(ஆ) மேற்படி திருக்கோயிலுக்கு மதுராந்தகம் வட்டத்தில் எவ்வளவு சொத்துக்கள் உள்ளன ?

(இ) அச் சொத்துக்களிலிருந்து குத்தகை, வாடகை ஆகியவை சீராக வசூல் ஆகின்றனவா ?

விடை—

(அ) திருக்கழுக்குன்றம் பட்சி தீர்த்த கோயிலுக்கு கீழ்க்கண்ட சொத்துக்கள் உள்ளன :—

| | ஏ.செ. |
|---|---|
| (1) நஞ்சை நிலம் .. .. .. | 19.94 |
| (2) புஞ்சை நிலம் .. .. .. | 36.49 |
| (3) மனைப் பகுதிகள் .. .. .. | 188 |
| (4) கடைகள் .. .. .. .. | 2 |
| (5) வீடுகள் .. .. .. .. | 7 |
| (6) கட்டிடங்கள் .. .. .. | 2 |
| (7) வீடுகள் (சென்னையில்) .. .. | 2 |

(ஆ) மேற்படி கோயிலுக்குச் சொந்தமாக மதுராந்தகம் வட்டத்தில் கீழ்க்கண்ட சொத்துக்கள் உள்ளன :—

| | நஞ்சை. ஏ. | நஞ்சை. செ. | புஞ்சை. ஏ. | புஞ்சை. செ. |
|---|---|---|---|---|
| (1) செம்பூர் .. .. .. | .. | .. | 0 | 65 |
| (2) கடப்பாக்கம் .. .. | .. | .. | 3 | 07 |
| (3) போந்தூர் — .. | 2 | 32 | 1 | 38 |
| மொத்தம் .. | 2 | 32 | 5 | 10 |

(இ) இச்சொத்துக்களிலிருந்து குத்தகை பாக்கி சீராக வசூலாவதில்லை. நீதி மன்றத்தில் வழக்கு எண். 140/89 முதல் 152 முடிய 13 வழக்குகள் தொடரப்பட்டு குத்தகை பாக்கி மற்றும் வாடகை பாக்கிகளை வசூலிக்க செயல் அலுவலரால் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

17—

## நகர்ப் புற நிலவரி.

**வினா எண் 1450—திரு. உ. ரா. வரதராசன்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 31-3-1987 முடிய நிலுவையாக உள்ள ரூ. 21.46 கோடி நகர்ப்புற நிலவரியில், ரூ. 2 இலட்சத்துக்கு மேல் நிலுவை வைத்துள்ளவர்கள் யார் யார் ?

(ஆ) அவர்களின் நிலுவைத் தொகைகள் எவ்வளவு ?

விடை—

(அ) மற்றும் (ஆ): விடை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.



விடை—

இன்றைய தேதியில் தண்டல் செய்யப்படாமல் ரூபாய் இரண்டு இலட்சத்துக்கு மேல் நகரக நிலவரி நிலுவை வைத்திருக்கும் நபர்களின் எண்ணிக்கை 81 ஆகும். அவர்களிடமிருந்து தண்டல் செய்யப்பட வேண்டிய மொத்த நிலவரித் தொகை ரூபாய் 510.63 இலட்சங்களாகும். நபர்கள் வாரியாக நிலுவையில் உள்ள நகரக நிலவரி பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வரிசை எண்ணும், நகர நிலவரி நிலுவைதாரரின் பெயரும். | விளைச்சல் ஆண்டு. | நிலுவைத் தொகை. | குறிப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| சென்னை மாவட்டம். | | (ரூபாய்) | |
| 1 பின்னி நிறுவனம், பெரம்பூர் — | 1385–98 | 9,35,615.40 | .. |
| 2 பாலகிருஷ்ணா தாக்கல், செம்பியம் | ஷெ | 2,59,946.70 | .. |
| 3 தமிழ்நாடு மின்வாரியம், அண்ணா சாலை, சென்னை-2. | 1397–98 | 3,53,575.40 | தடை ஆணை, சென்னை உயர் முறை மன்றம். |
| 4 இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு, அண்ணாசாலை, சென்னை-2. | 1394–98 | 5,13,699.50 | ஷெ |
| 5 திருவாளர்கள் சிவராஜ், தேவராஜ் மற்றும் நவரத்தினம், அண்ணா சாலை, சென்னை-2. | 1394–98 | (ரூபாய்) 6,06,603.00 | தடை ஆணை, சென்னை, உயர் முறை மன்றம். |
| 6 ஜெமினி பிக்சர்ஸ், சென்னை-6 | ஷெ | 2,78,907.00 | ஷெ |

| வரிசை எண்ணும், நகர நிலவரி நிலுவைதாரரின் பெயரும். (1) | விளைச்சல் ஆண்டு. (2) | நிலுவைத் தொகை. (3) | குறிப்புகள். (4) |
|---|---|---|---|
| 7 பிரிமென் ஹால் டிரஸ்டு, சென்னை-8. | 1394-98 | 2,96,437.50 | தடை ஆணை, சென்னை உயர்முறை மன்றம். |
| 8 ஏ.வி.எம். சாரிட்டிஸ், மைலாப்பூர் | 1385—98 | 2,48,168.20 | ஷை |
| 9 அய்யணஞ் செட்டி மற்றும் சிலர் | ஷை | 13,65,786.50 | ஷை |
| 10 அனுமந்தராவ் ... ... ... | ஷை | 2,49,969.00 | ஷை |
| 11 சென்னை ரேஸ் கிளப் ... ... | ஷை | 7,21,512.00 | ஷை |
| 12 அஞ்சுமான்-இ-இமாய்-இஸ்லாம்.. | 1373—98 | 13,21,152.40 | சிறப்பு ஆணையர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர். |
| 13 இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் | 1385—98 | 4,26,096.40 | சென்னை உயர் முறை மன்றம். |
| 14 எஸ்.கே.ப்பி.ட்டி. சாரிட்டிஸ் | 1385—94 | 8,53,409.00 | ஷை |
| 15 பல்லவன் போக்குவரத்துக் கழகம் | 1394 | 47,75,606.00 | அரசு தடை ஆணை. |
| 16 ட்டி. ஆர். கண்ணன் ... .. | ஷை | 14,60,942.00 | டிரிபூனல் தடை ஆணை |
| 17 திருமதி. துரைசாமி அம்மாள் .. ப்பி. ஆர். செட்டியார் | ஷை | 2,62,212.30 | தடை ஆணை, சென்னை உயர்முறை மன்றம். |
| 18 சங்வீர் மற்றும் பலர் .. .. | 1398 | 2,20,542.60 | ஷை |
| 19 தென்னிந்திய சர்ச் .. .. | 1394 | 5,52,659.00 | ஷை |
| 20 பச்சையப்பா டிரஸ்ட், சென்னை | 1385—1398 | 26,30,308.80 | ஷை |
| 21 இந்து கல்வி நிறுவனம் .. .. | ஷை | 2,87,053.20 | தடையாணை சி. ஆ. மற்றும் நிலச் சீர் திருத்த ஆணையர். |
| 22 இராமகிருஷ்ணா மடம், சென்னை. | ஷை | 5,34,035.60 | ஷை |
| 23 இஸ்மாயில் சேட் வக்ப் எஸ்டேட் | ஷை | 5,21,810.00 | ஷை |
| 24 ஸ்ரீ காசி விஸ்வநாதசாமி கோயில், சென்னை. | ஷை | 5,13,641.20 | ஷை |
| 25 வாலண்டரி ஹெல்த் சர்வீஸ், அடையார். | ஷை | 3,56,230.00 | ஷை |
| 26 ப்பி. ட்டி. சி. சென்னை-2.. .. | ஷை | 4,84,059.00 | ஷை |
| 27 எம்.எம். சாரிட்டிஸ் அபீசியல் டிரஸ்ட். | ஷை | 3,69,287.80 | ஷை |
| 28 கஸ்தூரி எஸ்டேட், சென்னை .. | ஷை | 16,00,219.60 | ஷை |
| 29 ஹரிச்சந்த் மற்றும் சிலர் .. | ஷை | 8,08,847.20 | ஷை |

| வரிசை எண், நகர நிலவரி நிலுவைதாரரின் பெயர். (1) | விளைச்சல் ஆண்டு. (2) | நிலுவைத் தொகை. (3) | குறிப்புகள். (4) |
|---|---|---|---|
| சென்னை மாவட்டம்—தொடர்ச்சி. | | ரூபாய். | |
| 30 டஸ்டகீர் ஷெரீப் .. .. | 1385–1398 | 2,76,150.00 | தடையாணை சி. ஆ. மற்றும் நிலச் சீர் திருத்த ஆணையர். |
| 31 டின்ரோஸ் எஸ்டேட், சென்னை | டிை | 26,92,123.00 | டிை |
| 32 பி. எல். என். செளல்ட்ரி, கிரீன்வேஸ் ரோடு. | டிை | 5,75,106.00 | டிை |
| 33 செளந்தரியா நர்சரி .. .. | டிை | 3,52,299.60 | டிை |
| 34 டிரஸ்டி அப்பாசாமி கோயில் .. | டிை | 2,35,659.20 | டிை |
| 35 தாராபூர் அண்டு கம்பெனி .. | டிை | 2,21,940.00 | தடையாணை. |
| 36 இராணி கல்யாண் .. .. | டிை | 3,89,760.00 | டிை |
| 37 ஆர். கே. மணிலால் .. .. | டிை | 4,07,984.00 | டிை |
| 38 எம். எம். அப்துல்லா .. .. | டிை | 3,19,580.00 | டிை |
| 39 நிஜாமுதீன் .. .. .. | டிை | 6,29,777.74 | டிை |
| 40 மதர் சுப்பீரியர் புனித தாமஸ் .. | டிை | 8,28,709.00 | டிை |
| 41 சிட்டி எஸ்.பாய்ஸ் பேப்பிடஸ் ஹை ஸ்கூல். | டிை | 4,68,645.80 | டிை |
| 42 காந்திநகர் கூட்டுறவு வீடுகட்டும் சங்கம். | டிை | 6,39,828.00 | .... |
| 43 வாசன் சாரிடபிள் டிரஸ்டு .. | டிை | 4,59,766.50 | .... |
| 44 சி. எஸ். சாஸ்திரி, கிரீன்வேஸ் ரோடு. | டிை | 3,76,252.80 | .... |
| 45 கடப்பன் சாரிடிஸ் .. .. | டிை | 2,44,072.80 | .... |
| 46 இராஜா சர் முத்தையா செட்டியார் சாரிடிஸ். | டிை | 5,95,342.50 | தடையாணை |
| 47 இரமா வர்மா, திருவாங்கூர் .. மகாராஜா. | டிை | 4,28,509.40 | .... |
| 48 பத்மநாபதனுவர்மா .. . | டிை | 7,91,350.00 | தடையாணை. |
| 49 திராவிட முன்னேற்றக் கழக டிரஸ்டு, அண்ணாசாலை, சென்னை-18. | டிை | 8,65,662.00 | சென்னை உயர்முறை மன்றம் மீண்டும் ஆய்வு செய்ய அரசைப் பணித்துள்ளது. |
| 50 திருவாளர்கள் யூனியன் கம்பெனி | டிை | 2,57,611.60 | .... |
| 51 டி. வி. சுந்தரம் அய்யங்கார் .. | டிை | 6,27,181.60 | .... |
| 52 திருவாளர்கள் கே.சி.பி. லிமிடெட் | டிை | 2,76,783.20 | .... |
| 53 இந்தியன் வங்கி .. .. | டிை | 2,73,526.00 | .... |
| 54 நியூ உட்லண்ட்ஸ் .. | டிை | 5,00,696.40 | .... |

| வரிசை எண், நகர நிலவரி நிலுவைதாரரின் பெயர். (1) | விளைச்சல் ஆண்டு. (2) | நிலவரித் தொகை. (3) ரூபாய். | குறிப்புகள். (4) |
|---|---|---|---|
| **சென்னை மாவட்டம்—தொடர்ச்சி** | | | |
| 55 வேதாந்த தேசிகர் தேவஸ்தானம் | 1385–1398 | 3,87,310.00 | தடையாணை. |
| 56 ப்பி. இராமநாதன் செட்டியார் | டிை | 4,26,700.00 | டிை |
| 57 மெட்ராஸ் புராபர்ட்டீஸ் .. | டிை | 3,05,469.50 | டிை. |
| 58 ப்பி. எஸ். நாராயணன் மற்றும் சிலர் | டிை | 2,29,166.60 | .... |
| மொத்தம் .. | | 3,88,91,509.10 | |
| **கோயம்புத்தூர் மாவட்டம் :** | | | |
| 59 ஸ்ரீரங்கவிலாஸ் மில்ஸ், கோயம்புத்தூர். | 1393–1398 | 2,84,053.20 | .... |
| 60 சத்தியவள்ளியம்மாள் எஸ்டேட் காம்பவுண்ட், கோயம்புத்தூர். | 1385–1398 | 2,50,845.00 | .... |
| 61 பைமெட்டல் பியரிங்ஸ் லிமிடெட் | 1388–1398 | 2,52,754.70 | தடையாணை (டபிள்யூ. பி.) 3664/79). |
| 62 சோமசுந்தரம் செட்டியார் .. | 1381–1398 | 5,21,139.95 | .... |
| 63 கோயம்புத்தூர் வீட்டுவசதி வாரியம். | 1393–1398 | 9,38,405.40 | .... |
| மொத்தம் .. | | 22,47,198.25 | |



| வரிசை எண், நகர நிலவரி நிலுவைதாரரின் பெயர். (1) | விளைச்சல் ஆண்டு. (2) | நிலவரித் தொகை. (3) ரூபாய். | குறிப்புகள். (4) |
|---|---|---|---|
| **மதுரை மாவட்டம் :** | | | |
| 64 பெர்னர் இண்டியா .. .. | 1388–1398 | 2,89,041.60 | .... |
| 65 வட்டார இயக்குநர், இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன், சென்னை. | 1385–1398 | 3,07,045.80 | .... |
| 66 வியாசராய மடம் .. .. | 1381–1385 | 2,41,073.90 | நீதிமன்றத் தடையாணை |
| 67 மதுரா கோட்ஸ் லிமிடெட் .. | 1395 | 2,09,378.20 | தடையாணை சி.ஆ. மற்றும் நி.சி. ஆணையர். |
| மொத்தம் .. | | 10,46,539.50 | |
| **சேலம் மாவட்டம் :** | | | |
| 68 செயலர், சர்ச் ஆப் சவுத் இண்டியா டிரஸ்ட் அசோசியேசன். | 1382–1398 | 2,75,429.80 | .... |
| மொத்தம் .. | | 2,75,429.80 | |
| **செங்கை—அண்ணா மாவட்டம் :** | | | |
| 69 6/85, சாத்தாங்காடு டபிள்யூ. பத்மினி மற்றும் சிலர். | 1385–1398 | 3,14,748.00 | .... |
| 70 45/85, மணலி எஸ். எஸ். மகாலிங்கம். | 1385–1398 | 5,42,240.00 | .... |

| வரிசை எண், நகர நிலவரி நிலுவைதாரரின் பெயர். (1) | விளைச்சலாண்டு. (2) | நிலுவைத் தொகை. (3) ரூபாய். | குறிப்புகள். (4) |
|---|---|---|---|
| **செங்கை—அண்ணா மாவட்டம்—தொடர்ச்சி.** | | | |
| 71 30/85, திருவொற்றியூர் பிஸ்டா பாரா மற்றும் பராசி பானா. | 1385–1398 | 10,711.00<br>2,04,243.00 | .... |
| 72 38/85, திருவொற்றியூர் ஜி. ரத்தினாசா பீவி. | 1385–1398 | 2,44,664.00 | .... |
| 73 1/85, திருவொற்றியூர் இண்டியன் ஸ்டாண்டர்டு மெட்டல் கம்பெனி லிமிடெட். | 1385–1398 | 2,33,600.00 | .... |
| 74 19/85, திருவொற்றியூர் திரெயிடு கோ-ஆப்ரேட்டிவ் டிம்பர்ஸ் அர்பன் லிமிடெட். | 1385–1388<br>1398 | 2,876.00<br>2,34,212.00 | .... |
| 75 754/85, அம்பத்தூர் தமிழ்நாடு பால் வளர்ச்சிக் கழகம். | 1385–1398 | 4,99,961.00 | .... |
| 76 19/85, திருவொற்றியூர் ஜே.ஜி. ராஜா சண்முகம். | 1385–1398 | 2,90,320.00 | .... |
| 77 30/85, திருவொற்றியூர் பாரத் பல்வராசிங் மில்ஸ். | 1385–1398 | 10,41,292.00 | .... |



| | | | |
|---|---|---|---|
| 78 1/85, பாடி ஆசியாடிக் ஆக்ஸிசன் லிமிடெட். | 1385–1398 | 4,79,765.00 | .... |
| 79 102/85, மாதவன் விஸ்னுதாஸ் ஹரிதாஸ். | 1383<br>1387–1398 | 15,029.00<br>1,83,348.00 | ....<br>.... |
| 80 5/85, பல்லாவரம் குரோம் லெதர் கம்பெனி (பி) லிமிடெட். | 1385–1398 | 22,29,110.00 | .... |
| 81 4/85, அம்பத்தூர் டன்லப் இண்டியா லிமிடெட். | 1386<br>1387–1398 | 1,15,176.00<br>19,61,616.00 | ....<br>.... |
| மொத்தம் .. | | 86,02,911.00 | |

18—

**மதுராந்தகம் தொகுதியில் நெடுஞ்சாலைப் பிரிவால் பராமரிக்கப்படும் சாலைகள்.**

**வினா எண் 1509—எஸ். டி. உகம்சந்த்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுராந்தகம் தொகுதியில் நெடுஞ்சாலைப் பிரிவால் பராமரிக்கப்படும் சாலைகள் எவையெவை ?

(ஆ) மதுராந்தகம் நகராட்சி எல்லைக்குள் தேரடித் தெரு நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படுகின்றதா?

(இ) இச்சாலையில் இருபுறமும் வடிகால் வசதி செய்து தரப்பட்டு உள்ளதா ?

விடை—

(அ) மதுராந்தகம் தொகுதியில் 42 சாலைகள் [மாவட்ட பிரதான சாலைகள் தலைப்பின்கீழ் இருசாலைகளும் இதர மாவட்ட சாலைகள் (ODR) தலைப்பின் கீழ் நாற்பது சாலைகளும்] நெடுஞ்சாலைப் பிரிவினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சாலைகளின் விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மதுராந்தகம் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள தேரடித்தெரு, நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட வில்லை. இச்சாலை மதுராந்தகம் நகராட்சியால் பராமரிக்கப் பட்டுவரும் நகராட்சி சாலையாகும். இதன் நீளம் 0.62 கி.மீ. ஆகும்.

(இ) தற்போது இச்சாலையில் திறந்தவெளி வடிகால் மட்டுமே உள்ளது. இச்சாலையில் வடிகால் வசதி செய்ய வேண்டியது மதுராந்தகம் நகராட்சியின் பொறுப்பாகும். இச் சாலை தற்சமயம் மிகவும் தாழ்வாக உள்ளது. இதனை உயர்த்தி வடிகால் வசதி செய்ய தோராயமாக ரூ. 8.00 இலட்சங்கள் (ரூபாய் எட்டு இலட்சங்கள்) தேவைப்படும்.

இணைப்பு

(அ) மதுராந்தகம் தொகுதியில் அடங்கியுள்ள நெடுஞ் சாலைப் பிரிவில் பராமரிக்கப்படும் அரசு சாலைகள் விவரம்—

மாவட்ட பிரதான சாலைகள்.

(1) மதுராந்தகம்—வெண்ணாங்குப்பட்டு சாலை கி.மீ 0/0-8/0.

(2) கிழக்குக் கடற்கரை சாலை கி.மீ. 19/6–41/0.



இதர மாவட்ட சாலைகள்.

(3) மதுராந்தகம்—வெண்ணாங்குப்பட்டு சாலையிலிருந்து தச்சூர் சாலை கி.மீ. 0/0—11/8.

(4) ஜி. எஸ். டி. சாலையிலிருந்து செய்யூர் (வழி) படாளம் சாலை கி.மீ. 3/2-32/0.

(5) நெல்வாய்—திருக்கழுக்குன்றம் சாலை கி.மீ. 11/2—20/8.

(6) முதுகரை—கடலூர் சாலை கி.மீ. 0/0—28/8.

(7) பவுஞ்சூர் அணைக்கட்டு சாலை கி.மீ. 0/0—8/0.

(8) கூவத்தூர்—அடையாளச்சேரி சாலை கி.மீ. 0/0—3/6.

(9) எண்டத்தூர்—மருவலம் சாலை கி. மீ. 0/0—5/6.

(10) கொடூர் சாலை கி. மீ. 0/0—4/8.

(11) முதுகரை—கடலூர் சாலையிலிருந்து அணைக்கட்டு (வழி) வானோடை சாலை கி.மீ. 0/0—4/2.

(12) முருகம்பாக்கம் சாலை கி.மீ. 0/0—3/8.

(13) வீரானகுண்ணம் சாலை கி.மீ. 0/0—3/0.

(14) கொடூர்-சீக்கனாங்குப்பம் சாலை கி.மீ. 0/0—5/0.

(15) கிணார்—கீழ்வளம் சாலை கி.மீ. 0/0—7/4.

(16) செய்யூர்—பனையூர் சாலை கி.மீ. 0/0—3/6.

(17) மோச்சேரி சாலை கி.மீ. 0/0—2/0.

(18) பாக்கம் சாலை கி.மீ. 0/0—0/750.

(19) ஓனம்பாக்கம்—வெண்மணி சாலை கி.மீ. 0/0—4/2.

(20) மருவளம்—வெண்மணி சாலை கி.மீ. 0/0—4/2.

(21) அரியனூர்—நெப்பாக்கம் சாலை கி.மீ. 0/0—2/4.

[1990 ஏப்ரல் 24

(22) பவுஞ்சூர் அணைக்கட்டு சாலையிலிருந்து கி.மீ. 0/0—3/6 கல்குளம் சாலை.

(23) ஜானகிபுரம்—மேட்டுப்பாளையம் சாலை கி.மீ. 0/0—2/0.

(24) முதுகரை—கடலூர் சாலையிலிருந்து மணிக்குப்பம் சாலை கி.மீ. 0/0—3/0.

(25) விழுதமங்கலம்—நெல்வாய் சாலை கி.மீ. 0/0—5/4.

(26) கிழக்குக் கடற்கரை சாலையிலிருந்து கூசத்தூர் சாலை கி.மீ. 0/0—0/8.

(27) லத்தூர் யூனியன் சாலை கி.மீ. 0/0—2/4.

(28) கொடூர் யூனியன் சாலை கி.மீ. 0/0—0/6.

(29) லத்தூர் சாலை கி.மீ. 2/0—2/4.

(30) முதுகரை கடலூர் சாலையிலிருந்து அரியலூர் சாலை கி.மீ. 2/0—2/4.

(31) முதுகரை கடலூர் சாலையிலிருந்து படாளம் செய்யூர் சாலை கி.மீ. 0/0—1/2.

(32) திருவாதூர் அரிஞூர் சாலை கி.மீ. 0/0—2/0.

(33) மதுராந்தகம் வெண்ணாங்குப்பட்டு சாலையிலிருந்து நீர் பெயர் வேட்டூர் (வழி) மேல்வகல் சாலை கி.மீ. 0/0—5/4.

(34) செய்யூர் வந்தவாசி சாலையிலிருந்து ஜமீன் புதூர் சாலை கி.மீ. 0/0—2/6.

(35) விளாங்கனூர் வேட்டூர் சாலையூர் சாலை கி.மீ. 0/0—6/0.

(36) ஜி. எஸ். டி. சாலையிலிருந்து பழையனூர் அரிசனக் காலனி சாலை கி.மீ. 0/0—3/320.

(37) படாளம் செய்யூர் சாலை கி.மீ. 25/6-லிருந்து இவன் குன்னம் (வழி) மேலப்பட்டு சாலை கி.மீ. 3/6—5/4.

(38) படாளம் செய்யூர் சாலை கி.மீ. 15/2-லிருந்து நீலமங்கலம் ஈசூர் சாலை கி.மீ. 0/0—5/2.



1990 ஏப்ரல் 24]

(39) கொடூரிலிருந்து செய்யூர் (வழி) வீரபோகம் சாலையிலிருந்து கி.மீ. 1/8—9/250.

(40) நல்லாமூர் சாலை கி.மீ. 0/0—0/7.

(41) குருபாதமேடு சாலை கி.மீ. 0/0—3/2.

(42) புக்கத்துறை யூனியன் சாலை 0/0—2/2.

19—

## திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் தேவஸ்தானத்திற்கு நஞ்செய், புஞ்சை நிலம்.

வினா எண். 1609—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் தேவஸ்தானத்திற்கு எந்தெந்த ஊரில் எத்தனை ஏக்கர் நஞ்செய், புஞ்செய் நிலம் உள்ளது ?

(ஆ) அவைகளின் வருமானம் எவ்வளவு ?

(இ) வருமானம் வராத நிலங்களின் குத்தகைதாரர்களை மாற்றி அமைக்கும் எண்ணம் உண்டா ?

விடை—

(அ) திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் ஆலயத்திற்குக் கீழ்க்கண்டவாறு நிலங்கள் உள்ளன:—

| வரிசை எண்ணும் நிலங்கள் உள்ள கிராமமும். | நஞ்சை. | புஞ்சை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. திருக்கழுக்குன்றம் .. .. | 3,41 | 7.44 | 10.85 |
| 2. ருத்ரகோட்டி .. .. | 0.23 | 3.19 | 3.42 |
| 3. கீரப்பாக்கம் .. .. | 2.81 | .. | 2.81 |
| 4. குழிப்பாந்தண்டலம் .. | 0.53 | .. | 0.53 |

[1990 ஏப்ரல் 24

| வரிசை எண்ணும் நிலங்கள் உள்ள கிராமமும். | நஞ்சை. | புஞ்சை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 5. பட்டிக்காடு .. .. | 0.43 | .. | 0.43 |
| 6. நெரும்பூர் .. .. | 1.30 | .. | 1.30 |
| 7. நடுவக்கரை .. .. | .. | 13.08 | 13.08 |
| 8. குள்ளவாக்கம் .. .. | 1.78 | .. | 1.78 |
| 9. நெய்குப்பி .. .. | 0.64 | 1.25 | 1.89 |
| 10. பயிலுப்பை .. .. | 3.31 | .. | 3.31 |
| 11. கிழவேடு .. .. | .. | 0.47 | 0.47 |
| 12. தாழம்பேடு .. .. | 1.61 | .. | 1.61 |
| 13. பொருந்தவாக்கம் .. .. | 1.32 | .. | 1.32 |
| 14. இரும்பிலி .. .. | 0.42 | .. | 0.42 |
| 15. ஆத்தூர் .. .. | 1.74 | .. | 1.74 |
| 16. மணப்பாக்கம் .. .. | 1.41 | .. | 1.41 |
| | 19.94 | 25.43 | 45.37 |
| 17. திருக்கழுக்குன்றம் (விவசாயத்திற்கு லாயக்கற்றது). | 11.06 | .. | 11.06 |
| **மதுராந்தகம் வட்டம்:** | | | |
| 18. செம்பூர் .. .. | .. | 0.65 | 0.65 |
| 19. கடப்பாக்கம் .. .. | .. | 3.07 | 3.07 |
| 20. போத்தூர் .. .. | 2.32 | 1.38 | 3.70 |
| மொத்தம் .. | 2.32 | 5.10 | 7.42 |



1990 ஏப்ரல் 24]

(ஆ) மேற்கண்ட நிலங்களிலிருந்து கீழ்க்கண்டவாறு வருமானம் வருகிறது:—

ரொக்கம் .. .. ரூ. 1,865.00.

தானியம் .. .. 182 கலம் 6 மரக்கால்.

(இ) அனைத்து நிலங்களும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இதில் பாக்கி வைத்துள்ளவர்களை வெளியேற்ற வருவாய் நீதி மன்றம் மூலம் வழக்கு எண் 140/89 முதல் 152/89 முடிய 13 வழக்குகள் தொடரப்பட்டு நடைபெற்று வருகின்றது. வழக்கின் முடிவு தெரிவித்த பின்னரே இது தொடர்பாக முடிவெடுக்க இயலும்.

20—

### எஸ். பி. நத்தம் இராமத்தில் புதிய கண்மாயின் கலிங்கலை உயர்த்திக் கட்டுதல்.

வினா எண். 1779—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம் எஸ். பி. நத்தம் கிராமத்தில் புதிய கண்மாயின் கலிங்கலை (கண்மாய் நிரம்பியதும் நீர் வடியும்) உயர்த்திக் கட்டும் ஆணை 1975-ல் பிறப்பிக்கப்பட்டும் இன்னும் முடிக்கப்படாததன் காரணம் என்ன ?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ): மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம் 145, எஸ். பி. நத்தம் கிராமத்தில் சர்வே எண் 281/1-ல் அமைந்துள்ள எஸ். பி. நத்தம் புதிய கண்மாய் கள்ளிக்குடி பஞ்சாயத்து யூனியனின் பராமரிப்பில் உள்ளது. இதன் பாசனப் பரப்பு 18.26 ஹெக்டேர். 1974-75-ல் 306 ஏ.எம்.ஐ.பி. வேலைத்தலைப்பில் ரூ.38,000-க்கு மதிப்பீடு தயாரித்து அதன் ஒரு பகுதியாக கண்மாய் கரை பலப்படுத்தும் வேலை ரூ. 8,169 செலவினத்தில் செய்து முடிக்கப்பட்டது. மீதி வேலையான வாய்க்கால் வேலை மற்றும் தலை மதகு கட்டும் வேலை கண்மாயின் கீழ்ப்பகுதி விவசாயிகளால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் அரசு ஆணைப்படி இப்பணிகள் செய்யப்படாமல் மதிப்பீடு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

மற்றும் புதியகண்மாய் கலிங்கலை நீர்வடியும் பகுதியில் உயர்த்திக் கட்ட எவ்விதமான மதிப்பீடோ அல்லது அரசு ஆணையோ தரப்படவில்லை. மேலும் கண்மாயில் தற்போதுள்ள பாசனப் பரப்பு அதன் பதிவு செய்யப்பட்ட பாசனப் பரப்பை விட 7.5 சதவீதம் அதிகம் உள்ளது. இக்கண்மாயின் விவர பதிவேட்டின்படி கண்மாயின் ஆயக் கட்டிற்குத் தேவையான நீரின் கொள்ளளவு 6.92 மி.கன அடி ஆகும். ஆனால் தற்போதுள்ள கொள்ளளவு 7.19 மீ. கன அடியாக கூடுதலாக இருப்பதால் நீர் வடியும் பகுதியை உயர்த்திக் கட்டத் தேவை எழவில்லை. மேலும் கண்மாய்க்குக் கீழே உள்ள சூரர்யூர் வரிசையிலுள்ள கண்மாய்களில் பாசனப் பரப்பின் இடைவெளி 566.82 ஏக்கர் இருப்பதால் இந்தக் கலிங்கலை உயர்த்திக் கட்டுவதற்கு ஆயக் கட்டுதாரர்களின் எதிர்ப்பு ஏற்பட்டது.

21—

கோயம்புத்தூர் கோனியம்மன் திருக்கோயில் திருப்பணி.

வினா எண் 1828—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயம்புத்தூர் கோனியம்மன் திருக்கோயில் திருப்பணி முற்றுப் பெற்று விட்டதா ?

(ஆ) இந்தப் பணியின் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) இது வரை ஆன செலவு எவ்வளவு ?

(ஈ) இதன் விவரமென்ன ?

விடை—

(அ) திருப்பணி முற்றுப் பெற்று விட்டது.

(ஆ) இராஜகோபுரத் திருப்பணி உள்பட மொத்த மதிப்பீடு ரூ. 6,97,250.

(இ) மொத்தம் ரூ. 10,37,244.



(ஈ) திருப்பணி விவரம்:—

| | ஏற்பட்ட செலவினம். |
|---|---|
| (1) | (2) |
| | ரூ. |
| (1) இராஜகோபுரத் திருப்பணி .. .. | 1,25,244 |
| (2) கர்ப்பகிரகம், அர்த்த மண்டபம், விநாயகர் சந்நிதி மற்றும் சுப்பிரமணியர் சந்நிதி. | 4,00,000 |
| (3) முன் மண்டபம் .. .. .. | 3,65,000 |
| (4) விநாயகர் சந்நிதி முன் மண்டபம் .. | 55,000 |
| (5) சுப்பிரமணியர் சந்நிதி முன் மண்டபம் .. | 55,000 |
| (6) மடப்பள்ளி .. .. .. | 30,000 |
| (7) நவக்கிரக மண்டபம் .. .. | 7,000 |
| கூடுதல் .. | 10,37,244 |

22—

காற்றின் விசையைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்தல்.

வினா எண். 1862—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காற்றின் விசையைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) விரிவான பதில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு.

காற்றின் வேகத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் பணியில் கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தமிழ்நாடு அடைந்து உள்ளது.

(1) தூத்துக்குடிக்கு அடுத்த முல்லைக்காடு என்னும் கடற்கரையை ஒட்டியுள்ள இடத்தில் ஜனவரி 1986 முதல் ஒவ்வொன்றும் 55 கிலோவாட் சக்தி வாய்ந்த பத்து காற்றாலைகள் நிறுவப்பட்டு செயல்படத் தொடங்கின. இதே இடத்தில் மேலும் பத்து காற்றாலைகள் (ஒவ்வொன்றும் 55 கிலோவாட்) செப்டம்பர் 1986-லிருந்து செயல்படத் தொடங்கின.

இவ்விருபது காற்றாலைகளும் சேர்ந்து 1.1 மெகாவாட் திறன் கொண்ட மேற்கண்ட காற்றுப்பண்ணை 28—2—1989 வரை 31,64,075 யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்து தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் தடத்திற்கு வழங்கியுள்ளது.

(2) சிதம்பரனார் மாவட்டம் கோவில்பட்டி தாலுக்காவிலுள்ள கயத்தாறு என்னுமிடத்தில் ஒவ்வொன்றும் 90 கிலோ வாட் திறன் கொண்ட பதினைந்து காற்றாலைகள் அமைக்கப்பட்டு 1988 ஏப்ரல் 7 ஆம் நாள் முதல் செயல்படத் துவங்கின. இக்காற்றுப் பண்ணை பிப்ரவரி 1989 வரை (பதினொரு மாதங்களில்) 21,33,737 யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்து தமிழ்நாடு மின்சார வாரிய மின் தடத்திற்கு வழங்கியுள்ளது.

(3) (அ) டேனிஷ் பல்நாட்டு மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் (DANIDA) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரி ரெங்காபுரம் கிராமத்தைச் சேர்ந்த புளியங்குளம் என்னும் இடத்தில் 90 கிலோ வாட் திறன் கொண்ட ஒரு காற்றாலை முன்னோடித் திட்டமாகப் பரிசோதனைக்கு நிறுவப்பட்டு1988 ஜூன் திங்களிலிருந்து செயல்பாட்டில் உள்ளது. 1989 பிப்ரவரி முடிய 65,330 யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்துளளது.

(3) (ஆ) அதே போன்று கோவை மாவட்டம் பல்லடம் வட்டம், வாரப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சுல்தான் பேட்டை என்னுமிடத்தில் மற்றொரு 90 கிலோ வாட் திறன் கொண்ட காற்றாலை பரிசோதனை முன்னோடித் திட்டமாக நிறுவப்பட்டு ஜூன் 1988 முதல் செயல்படுகிறது. பிப்ரவரி 1989 முடிய இது 67,755 யூனிட் மின்சாரம் வழங்கியுள்ளது.

(4) இவை தவிர, டேனிடா உதவியுடன் மொத்தம் 10 மெகா வாட் திறன் கொண்ட இருபெரும் காற்றுப் பண்ணைகள் சிதம்பரனார் மாவட்டம், கயத்தாறு அருகில் (கயத்தாறு 11)



ஒன்றும் (6 மெகா வாட் திறன் கொண்டது) கன்னியாகுமரி மாவட்டம் தோவளை வட்டம் ஆரல்வாய்மொழி கிராமத்தைச் சேர்ந்த முப்பந்தல் என்னுமிடத்தில் ஒன்றும் (4 மெகா வாட் திறன் கொண்டது) நிறுவ திட்டம் தீட்டி நிலம் கையகப்படுத்தி கட்டுமான வேலைகள் துவங்கப் பெற்றுள்ளன. இவை இரண்டும் 1990 ஆண்டு மத்தியில் செயல்படத் துவங்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

23—

ஆவடியூர் இராமத்தில் ஆதிதிராவிட மயானம் ஆக்கிரமிப்பு.

வினா எண். 1870—திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம் கீழத் தெரு ஆவடியூர் கிராமத்தில் ஆதிதிராவிட மயானம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்முகம் கிராமத்தில் புல எண் 30/3-இல் உள்ள 1.54 ஏக்கர் (0.62.5 ஹெக்டேர்) அளவுள்ள மயான இடம் ஆவடியூர் கிராமம் கீழத் தெரு ஆதிதிராவிட மக்கள் பயன்படுத்தி வரும் மயானமாகும். மேற்குறிப்பிட்ட புல எண். 30/3இல் உள்ள இடம் கிராமக் கணக்குகளில் கோவில் புறம்போக்குக்காக உள்ளது. இந்த இடம் ஆதி திராவிடர்களின் முன்னிலையில் சேரன் மகாதேவி நில அளவை சார் ஆய்வாளரை வைத்து நான்கு எல்லை காட்டி அளந்து தரப்பட்டது. நில அளவைப்படி ஆக்கிரமிப்பு எதுவும் இல்லை. ஆகையால், இந்த ஆதிதிராவிட மயானத்தில் எந்த விதமான ஆக்கிரமிப்பும் இல்லை.

24—

பனைப் பொருட்களை மூலப் பொருள்களாகக் கொண்டு தொழிற்சாலை துவக்குதல்.

வினா எண். 1913—: திரு. எஸ். டி. உகம்சந்த்—மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம் செய்யூர் வட்டம் ஆகிய பகுதிகளில் பனைப் பொருள்களை மூலப் பொருட்களாக கொண்டு தொழிற்சாலை துவக்க அரசு திட்டம் வகுத்துள்ளதா ?

விடை—

விவர அறிக்கை.

செய்யூர் வட்டத்திலுள்ள கடப்பாக்கம் கிராமத்தில் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக மாநில இணையத்தின் கிளை நிலையம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இக்கிளை மூலம் இப்பகுதியில உள்ள ஏழை எளிய மக்களுக்கும், நலிந்த பிரிவினருக்கும் பனைத் தொழிலில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நலிந்த பிரிவினைச சேர்ந்த மரமேறும் தொழிலாளர்களுக்கு செயல்படும் திட்டங்கள் மூலம், நிதியுதவியும் அளிக்கப்பட்டு வருகிறது. கடப்பாக்கத்தில் பனந்தும்பு சுத்திகரிப்பு நிலையமும், தினம் 1/3 டன் உற்பத்தித் திறனுள்ள பனஞ்சீனி ஆலையும நிறுவப்பட்டுள்ளது. பனந்தும்பு சுத்திகரிப்பில முப்பது தொழிலாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பினைப் பெறுகின்றனர். பனஞ்சினி ஆலைக்குத் தேவையான பாகினை உற்பத்தி செய்வதற்காக, அருகிலுள்ள சங்கங்களுக்கு மாநில இணையம் நிதியுதவியும் அளித்துள்ளது. செய்யூர் வட்டத்தில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு ஏற்கனவே ஒரு கிளை நிலையம் இயங்கி வருவதால், புதியதாகவும் தனியாகவும் பனைப் பொருள் உற்பத்தி மையம் அமைக்க அவசியம் ஏற்படவில்லை. மதுராந்தகம் வட்டத்தில், அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் வேடந்தாங்கல் பகுதியைச் சுற்றிலும் பயன் படுத்தப்படாமல் உள்ள பனை மரங்களைப் பயன்படுத்துவதற்காகவும், ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கிக் கொடுப்பதற்காகவும், ரூ. 12,365 இலட்சம் மதிப்பீட்டில் வேடந்தாங்கலில் பனைப் பொருள்கள் உற்பத்தி மையம் துவக்கப்பட்டுள்ளதால், புதிதாக மதுராந்தகம் வட்டத்தில் பனைப் பொருள் உற்பத்தி மையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் எதுவுமில்லை. இப்பகுதி மக்கள் இம்மையத்தைப் பயன்படுத்திப் பயனடையலாம். இப்பகுதியில் சுமார் 25 பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

25—

காவலர்களுக்கு வீட்டு வசதி.

வினா எண். 2196—திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) காவலர்களுக்கு வீட்டு வசதிக்கென தனித் தலைவர் கீழ் இயங்கும் இயக்ககம் இதுகாறும் காவலர்களுக்கு கட்டிக் கொடுத்துள்ள இல்லங்கள், குடியிருப்புகள் 1975 ஆம் ஆண்டு முதல் எவ்வளவு ?

(ஆ) ஒதுக்கீடு முறை எப்படி நடைபெறுகின்றது ?



விடை—

(அ) காவல் பணியாற்றுவோருக்கு ''உங்கள் சொந்த இல்லம்'' திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுப்பது என்ற நோக்கத்தின்கீழ் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் அரசு ஆணை எண். 2500, உள் துறை, நாள் 27-9-1980ன் படி 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ஆம் நாள் துவக்கப்பட்டு கீழ்க்காணும் இடங்களில் பலதரப்பட்ட வீடுகள் கட்டி முடித்து காவலர்களுக்கு வழங்கியுள்ளது.

| வரிசை எண். | கட்டி முடிக்கப் பட்ட ஆண்டு. | திட்டத்தின் பெயர். | கட்டப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | வாடகை குடியிருப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | 1981—82 | பாங்கிமலை .. | .. | 16 |
| 2 | 1984—85 | நாவல்பட்டு (திருச்சி) | 670 | .. |
| 3 | 1986—87 | தொரப்பாடி (வேலூர்), வட ஆற்காடு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம். | 65 | .. |
| 4 | 1986—87 | திம்மராஜபுரம் (திருநெல்வேலி கட்டபொம்மன்). | 247 | .. |
| 5 | 1986—87 | கணபதி (கோவை மாவட்டம்). | 432 | .. |
| 6 | 1988—89 | திம்மராஜபுரம் விரிவாக்கம் (திருநெல்வேலி கட்டபொம்மன்). | 140 | .. |
| 7 | 1988—89 | அலமாதி (ஆவடி) .. | .. | 84 |
| | | | 1,554 | 100 |

(ஆ) சொந்த இல்லங்கள் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற மற்றும் பணியிலுள்ள காவலர்களுக்கு அவர்கள் மேற்படி வீடுகளுக்கு விண்ணப்பிக்கும் தேதியைப் பொறுத்து, முதலில் விண்ணப்பம் செய்தவர்களுக்கு முதலில் என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. (இக்கழகம் அரசு ஆணை எண். 527, உள் துறை, நாள் 31–3–1989-ல் கலைக்கப்பட்டு மேற்படி பணி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் தொடரப்படுகிறது).

**26—**

**மயிலாடுதுறை டான்சி தொழிற்சாலை.**

**வினா எண். 2355—திரு. ஏ. செங்குட்டுவன் :** மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மயிலாடுதுறை நகரில் உள்ள டான்சி தொழிற்சாலையிலிருந்து வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ள கருவிகளை மீண்டும் அத்தொழிற்சாலைக்குக்கொண்டு வந்து பொருத்த அரசு முயற்சிக்குமா ?

விடை—

ஒரு தகடு வளைக்கும் இயந்திரம் மயிலாடுதுறையிலுள்ள டான்சி என்ஜினியரிங் ஓர்க்சிலிருந்து தூத்துக்குடியிலுள்ள டான்சி என்ஜினியரிங் ஓர்க்ஸ்க்கு மாற்றப்பட்டது. மயிலாடுதுறையிலுள்ள டான்சி என்ஜினியரிங் ஓர்க்ஸில் இவ்வியந்திரம் செய்யக்கூடிய பணிகள் கிடைக்கவில்லை. ஆனால் தூத்துக்குடியிலுள்ள டான்சி என்ஜினியரிங் ஓர்க்ஸ் இவ்வியந்திரம் செய்யக்கூடிய பணிகளைத்தொடர்ந்து பெற்றுக் கொண்டிருக்கிறது. ஆதலால் இவ்வியந்திரத்தை மீண்டும் மயிலாடுதுறையிலுள்ள டான்சி என்ஜினியரிங் ஓர்க்ஸ்க்குத் திரும்பவும் மாற்றம் செய்ய உத்தேசம் தற்போது இல்லை.

**27—**

**சென்னை மாநகராட்சியில் தீவிர துப்புரவுப் பணித் திட்டம்.**

**வினா எண். 2457—திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மாநகராட்சியில் தீவிர துப்புரவுப் பணித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.



(ஆ) சென்னை மாநகராட்சி தீவிர துப்புரவுப் பணித் திட்டம் ஒன்றை ஒவ்வொரு வட்டத்திலும் வாரத்திற்கு மூன்று நாட்கள் அமுல்படுத்தி வருகிறது. ஒரு நாளைக்கு ஒரு சரகத்தில் ஒரு கோட்டம் வீதம் மூன்று நாட்களுக்கு மூன்று கோட்டங்களில் தீவிர துப்புரவுப் பணித் திட்டத்தின்படி கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படுகிறது:

(1) தெருக்களிலும், சாலை ஓரங்களிலும், சாலைகளிலும் உள்ள குப்பை, கூளங்கள் லாரிகளின் மூலமாக அகற்றப்படுகிறது.

(2) முட் செடிகள் அகற்றப்படுகிறது.

(3) சாலைகளில், தெருக்களில் உள்ள குழிகளையும் பள்ளங்களையும் தார் கலவைகள் கொண்டு சீர் செய்யப்படுகிறது.

(4) கழிப்பிடங்களிலும், சாலை ஓரங்களிலும், தண்ணீர் தேங்கும் இடங்களிலும் சுண்ணாம்பு தெளிக்கப்படுகிறது.

(5) நடை பாதை ஓரங்களில் கருப்பு, வெள்ளை வண்ணங்கள், தார் மற்றும் சுண்ணாம்பால் அடிக்கப்படுகிறது.

(6) மழை நீர் வடிகால்களில் கொசு உற்பத்தியைத் தடுக்க கொசு மருந்து அடிக்கப்படுகிறது.

**28—**

**சென்னைப் பல்கலைக் கழக அலுவலர்களுக்கு வீடுகள்.**

**வினா எண். 2705—திரு. நா. இராமகிருஷ்ணன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை பல்கலைக் கழக அலுவலர்களுக்கு சென்னை, பாலவாக்கத்தில் கட்டப் பெற்றுள்ள வீடுகளுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரங்கள் யாவை ?

விடை—

(அ) தற்காலிக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) —

| வீடுகள் வகை. | பரப்பளவு. | வீடுகள் எண்ணிக்கை. | தற்காலிக விலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | சதுர அடி. | | |
| 1வது வகை .. | 551 | 100 | 83,500 |
| 2வது வகை .. | 360 | 40 | 63,000 |
| 3வது வகை .. | 268 | 28 | 48,800 |

29—

போக்குவரத்துக் கழகங்களில் டிக்கட் இல்லாப் பயணிகளைத் தடுக்கச் சிறப்புத் திட்டம்.

வினா எண். 2726—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களில் டிக்கெட் இல்லாப் பயணிகளைத் தடுக்க சிறப்புத்திட்டம் ஏதாவது நடைமுறைப்படுத்த உள்ளதா ?

விடை—

டிக்கட் இல்லாத பயணத்தைத் தடுக்க பயணச் சீட்டு ஆய்வாளர்களை நியமித்து ஆங்காங்கே பேருந்துகளை சோதனை செய்து, அவ்வாறான பயணிகளைக் கண்டு பிடித்து, தண்டத் தொகை அதாவது நகரப் பேருந்தாக இருப்பின் அவர்களின் பயணக் கட்டணத்தில் பத்து மடங்கும், புறநகர் பேருந்தாக இருப்பின், அதிக பட்சம் ரூ. 5-ம் வசூலிக்கப்படுகிறது. பயணிகள் மிக அதிகமான அளவில் பயன்படுத்தும் முக்கியமான பேருந்து நிறுத்தங்களில் நடத்துனர்களைப் போட்டு பயணிகளுக்கு முன்னதாகவே பயணச் சீட்டு வழங்கும் திட்டம் பற்றி பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இதனால் டிக்கெட் இல்லாமல் செல்லும் பயணிகள் குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.





30—

மண் வளப் பாதுகாப்புத்துறை மூலம் நிலங்களைச் சீர் செய்யும் திட்டம்.

வினா எண். 2813—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மண்வளப் பாதுகாப்புத்துறை மூலம் நிலங்களைச் சீர் செய்யும் திட்டம் அரசால் செயல்படுத்தப்படுகின்றதா ?

(ஆ) அதற்கான விதிகள் என்ன ?

விடை—

(அ) மண்வளப் பாதுகாப்புத் துறை மூலம் நிலங்களைச் சீர் செய்யும் திட்டம் அரசால் செயல்படுத்தப்படுகின்றது. தமிழ் நாட்டில் உள்ள மானாவாரி நிலங்களிலும், மலைப் பகுதிகளிலும், மண் அரிமானம் உண்டாக்குதலைத் தடுத்து, பெய்த மழை நீரைத் தேக்க வைத்து ஈரப்பதத்தை அதிகரித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு, இந் நிலங்களில் விளை திறனைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் வேளாண்மைப் பொறியியல் துறை மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. மண்வளப் பாதுகாப்புத் திட்டம் கீழ்க்கண்டவாறு செயல்படுகிறது. தமிழ் நாடு மாநிலம், பாசனத் திட்டங்கள் இதர வேளாண்மைப் பணிகளைத் திட்டமிடுவதற்காக 33 பெரிய நீர்வடிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 33 பெரிய நீர்வடிப் பகுதிகள் ஒவ்வொன்றும், உப, சிறிய மற்றும் மிகச் சிறிய நீர்வடிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்துவதற்கு எளிதாக இருக்கும் பொருட்டு சுமார் 400—500 ஹெக்டேர் (சுமார் 1,000—1,250 ஏக்கர்) பரப்புள்ள நீர்வடிப் பகுதிகளில் திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 100—120 நீர்வடிப் பகுதிகளில் சுமார் 50,000 ஹெக்டேர் மானாவாரி நிலங்கள் பயனடையும் வகையில் மண் வளப் பாதுகாப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மண் அரிமானத்தால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட/பாதிக்கப்பட வாய்ப்புள்ள நீர்வடிப் பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அவ்வகையான நீர்வடிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. இப்பணிகள், நீர்வடிப் பகுதிகளின் பக்கத்தில் உள்ள பரப்பில் தொடர்ந்து செய்யப்படுகின்றன.

[1990 ஏப்ரல் 24

கீழ்க்கண்ட மண்வளப் பாதுகாப்புப் பணிகள், மண்ணின் தன்மைக்கேற்பவும் சரிவுக் கேற்பவும், செயல்படுத்தப்படுகின்றன:

(1) சம உயர வரப்பிடுதல்;
(2) சம உயர கற்சுவர் அமைத்தல்;
(3) தடுப்பணைகள் கட்டுதல்;
(4) சம உயர உழவுப் பணி;
(5) ஆழ உழுதல் ;
(6) இந்து-ஆதி திராவிடர் நிலங்களில் மட்டும் நிலச்சமன் செய்தல்;
(7) ஓடைகளின் கரைகளைப் பாதுகாத்தல்;
(8) பயன்தரும் மரங்கள் நடுதல்.

(ஆ) ஒவ்வொரு நிதியாண்டு துவங்குவதற்கு முன் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வேளாண்மைப் பொறியியல் துறை செயற் பொறியாளர்கள் மற்றும் உதவி செயற் பொறியாளர்கள் நீர்ப் பிடிப்புப் பகுதிகளைப் பார்வையிட்டு, ஆராய்ந்து, மண் அரிமானம் அதிகமுள்ள நீர்வடிப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பகுதி விவசாயிகளைக் கலந்து ஆலோசித்து விவசாயி களின் கருத்துக்களைக் கேட்டறிந்து நீர்வடிப் பகுதிகளின் மேம் பாடுக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, ஒவ்வொரு பயனடையும் விவசாயியும் ஒப்பந்தப் பத்திரத்தில் ஒப்புதல் பெற்று திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. 25 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. மீதமுள்ள பணத்தை கடனாகப் பாவித்து, 10 ஆண்டுத் தவணையில் வட்டியுடன் வசூலிக்கப்படுகிறது.

கூடுமானவரையில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் விவசாயிகள் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. பயனடையும் விவசாயிகள் முன்வராவிட்டால், சிறிய ஒப்பந்தக்காரர் மூலம் திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

31—

**அரசுத் துறைகள் மற்றும் பொது நிறுவனங்களில் தமிழ் மொழியைப் பயன்படுத்துதல்.**

வினா எண். 2818—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் உள்ள எல்லா துறைகள், பொது நிறுவனங்களில் தமிழ் மொழிதான் உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்று அரசு உத்திரவிட்டுள்ளதா?

(ஆ) இதை அமுல்படுத்தாத துறைகள் ஏதாவது உள்ளதா?

(இ) அதற்கான காரணம் என்ன ?



1990 ஏப்ரல் 24]

விடை—

(அ) தமிழகத்திலுள்ள எல்லா அரசுத் துறைகள் மற்றும் பொது நிறுவனங்களில் விலக்களிக்கப்பட்ட இனங்கள் நீங்கலாக தமிழ்மொழிதான் பயன்படுத்தப்பட வேண்டுமென அரசு ஆணை யிட்டுள்ளது.

(ஆ) தேசிய மாணவர் படைத்துறைக்கு தமிழ்த் திட்டச் செயலாக்கத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(இ) தேசிய மாணவர் படைத்துறையின் இயக்ககம், தலைமையலுவலகங்கள் மற்றும் சார்நிலை அலுவலகங்களில் உள்ள அலுவலர்கள் அனைவரும் நாட்டின் முப்படைப் பிரிவி லிருந்தும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்தவர்கள் என்பதால் தமிழ் மொழியினைப் புரிந்து கொள்ளவியலாத நிலை அவர்களுக்கு நேரிடுகிறது. இவ்வலுவலர்களும் 2 ஆண்டு முதல் 3 ஆண்டுக் காலத்திற்கு மட்டுமே நியமனம் பெறுகின்றனர். பணியாளர்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவர் கள் என்றாலும் அலுவலர்கள் தமிழ் மொழி தெரியாதவர்களாக வுள்ள நிலையில் நிர்வாகச் சிக்கல் ஏற்படுமாதலால் இத்துறைக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

32—

**மண்வளப் பாதுகாப்புத் துறையின் மூலம் ஊரணிகள்.**

வினா எண் 2837—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை-அண்ணா மாவட்டத்தில் மண்வளப் பாது காப்புத்துறையின் மூலம் எத்தனை ஊரணிகள் கட்டப்பட்டுள் ளன ?

(ஆ) அவைகளால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்றன ?

விடை—

(அ) வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம், பாசன வசதிக்கான ஊரணிகள் கட்டப்படுவதில்லை. மண்ணரிப்பைத் தடுத்தும், வீணாகும் மழை நீரைத் தேக்கி வைப்பதன் மூலம், நீர்வளம் பெருக்கும் நோக்கத்துடன் கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கும் பணி வேளாண்மைப் பொறியியல் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கசிவு நீர்க் குட்டைகளில் தேங்கும் நீர், நேரடி நீர்ப்பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுவ தில்லை. இங்கு தேங்கும் நீர், நிலத்திற்குள் கசிந்து, நிலத்தடி நீர்வளத்தை மேம்படுத்தி கசிவு நீர்க் குட்டைகளின் அருகாமை யிலுள்ள கிணறுகளில் நீர் மட்டம் உயர வழி வகுக்கிறது.

வேளாண்மைப் பொறியியல் துறையினால், செங்கை அண்ணா மாவட்டத்தில் 1988-89 ஆம் ஆண்டு முடிய 278 கசிவு நீர்க் குட்டைகள் ரூ. 234.08 இலட்சங்கள் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் (1989-90), ரூ. 62.50 இலட்சங்கள் செலவில் 50 கசிவு நீர்க் குட்டைகள் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட இருக்கின்றன.

(ஆ) இத்துறையின் மூலம் கட்டப்படும் கசிவு நீர்க் குட்டைகளிலிருந்து நேரடி பாசனத்திற்கு வழி வகைகள் செய்யப்படுவதில்லை. ஆகையினால், இவ்வினாவிற்கு இடமில்லை.

33—

## தமிழகத்தில் முந்திரி உற்பத்தி.

**வினா எண் 2838—திரு. எஸ். டி. உகம்சந்த்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் முந்திரி உற்பத்திப் பெருக்கத்திற்காக 1985 முதல் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) வருடத்திற்கு சராசரி முந்திரிக் கொட்டை உற்பத்தி எவ்வளவு?

**விடை—**

(அ) தமிழகத்தில் முந்திரி அபிவிருத்திக்காக திட்டம் ஒன்று செங்கை அண்ணா, தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, பசும்பொன் தேவர் திருமகனார், இராமநாதபுரம், திருநெல்வேலி கட்டபொம்மன், கன்னியா குமரி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் மூலம் செலவழிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:—

| ஆண்டு. (1) | | செலவழிக்கப்பட்ட தொகை. (2) (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 1985–86 | .. .. .. .. | 11.08 |
| 1986–87 | .. .. .. .. | 9.65 |
| 1987–88 | .. .. .. .. | 4.00 |
| 1988–89 | .. .. .. .. | 21.19 |
| 4 ஆண்டுகளுக்கு மொத்தம் | .. | 45.92 |



(ஆ) வருடத்திற்குத் தமிழகத்தில் சராசரியாக, 9,336 டன் முந்திரிக் கொட்டை உற்பத்தி செய்யப்படுகிறது.

34—

## காவிரி ஆற்றுப் பகுதியில் பாசனத்தைப் பெருக்க குழாய்க் கிணறுகள் அமைக்க ஆய்வு.

**வினா எண் 2895—திரு. எஸ். டி. உகம்சந்த்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு குழாய் கிணற்றுக் கழகம் மூலம் 1984-ல் இருந்து 1988 வரை தஞ்சை மாவட்டத்தில் காவிரி ஆற்றுப் படுகையில் பாசனத்தை பெருக்க குழாய்க் கிணறுகள் அமைக்க ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) தற்பொழுது அதன் நிலை என்ன?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் தஞ்சை ஆற்றுப் படுகையில் 205 ஆழ் குழாய்களை ரூ. 4.75 கோடி மதிப்பீட்டில் அமைக்கும் திட்டம் பொதுப்பணித் துறையில் (நில நீர்ப் பிரிவு) தயாரிக்கப்பட்டு 11–7–1986 நாளிட்ட 1787 எண் கொண்ட அரசாணையில் ஒப்புதல் அளிக்கப்பட்டு தமிழ்நாடு குழாய்க் கிணற்றுக் கழகத்தால் நிறைவேற்ற ஆணையிடப்பட்டது. மொத்த மதிப்பீடான ரூ.4.75 கோடியில் 50 விழுக்காடு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (Integrated Rural Devalopment progr mme) மற்றும் வேளாண்மை உற்பத்தி பெருந் திட்டம் (Mass Agriculture Production Programme) மூலமாக மானியமாகவும் மீதி 50 விழுக்காடு வங்கிக் கடனாகவும் பெற ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் வங்கிகள், தாங்கள் அளிக்கும் கடன் முன் பணத்தை நாபார்டு (NABARD) மூலம் திரும்பப் பெற அரசு உத்திரவாதம் தேவை எனவும், மேலும் இத் திட்டத்தின் மூலம் அமைக்கப்படும் குழாய்க் கிணறுகளை தமிழ்நாடு குழாய்க் கிணற்றுக் கழகமே நிர்வகிக்க வேண்டும் எனவும் கூறினார்கள். முதலில் 140 மீட்டர் ஆழம் அமைக்கப்படும் ஒரு குழாய் கிணற்றின் மதிப்பீடு ரூ. 1.90 லட்சமாகத் தீர்மானித்து, பின் நாபார்டின் (NABARD) கருத்துப்படி ரூ. 1.77 லட்சமாகக் குறைக்கப்பட்டது. அதே சமயத்தில் மேற்குறிப்பிட்ட திட்டங்களின் கீழ் 50 சதவீத மானியத் தொகை ஒரு சில குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு மட்டுமே போதுமானதாக உள்ளது என்று அறியப்பட்டது. மேலே சொன்ன சூழ்நிலைகளால் இந்தத் திட்டத்தை செயல்படுத்த முடியவில்லை என்றாலும் தஞ்சை ஆற்றுப் படுகையில் ஆழ் குழாய்க் கிணறுகள் அமைப்பது குறித்து தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளருடன் கலந்து அரசு மேலும் பரிசீலனை செய்து வருகிறது.

[1990 ஏப்ரல் 24

35—

பூந்தமல்லி பிள்ளைப்பாக்கம் (வழி) திருப்பெரும்புதூர்—வலத்தாஞ்சேரி புதிய பேருந்து விடுதல்.

வினா எண் 3162—திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பூந்தமல்லி—பிள்ளைப்பாக்கம் (வழி) திருப்பெரும்புதூர்—வலத்தாஞ்சேரி வழித் தடத்தில் புதிய பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

பூந்தமல்லி—பிள்ளைப்பாக்கம் (வழி) திருப்பெரும்புதூர்—வலத்தாஞ்சேரி தடத்தின் நீளம் 33.5 கி. மீ. ஆகும். அரசு ஆணைப்படி 30.0 கி.மீ. வரைதான் நகரப் பேருந்து இயக்க இயலும். 33.5 கி. மீட்டருக்கு புறநகர் வழித் தடத்தை இயக்கினால் கட்டணமாகிய ரூ. 3.30 வசூலிக்கப்படுவதால் பொதுமக்கள் புறநகர் பேருந்தில் செல்ல விரும்பமாட்டார்கள். புறநகர் பேருந்தில் குறைந்த பட்சக்கட்டணம் ரூ. 1.00 ஆகும். ஏற்கனவே பூந்தமல்லி—பிள்ளைப்பாக்கம் (வழி) திருப்பெரும்புதூர்—பட்டுநூல் சத்திரம் வழித்தடத்தில் ஒரு நகரப் பேருந்து ஓடிக்கொண்டிருக்கிறது. எனவே புதிய புறநகர் பேருந்து விரைவில் குறிப்பிடப்பட்டுள்ள வழித்தடத்தில் இயக்கினால், பயணம் செய்வோரின் விகிதாச்சாரமும், அதனால் வருவாயும் மிக்க குறைந்ததாக இருக்கும். எனவே மேற்கண்ட தடத்தில் புறநகர் பேருந்தும் இயக்க இயலாது.

36—

போக்குவரத்து விபத்துக்கள்.

வினா எண் 3264—திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1987-88-ல் தமிழகத்தில் போக்குவரத்தினால் எத்தனை விபத்துக்கள் நடந்துள்ளன?

(ஆ) எத்தனை உயிர் சேதம் ஏற்பட்டுள்ளன?



1990 ஏப்ரல் 24]

விடை—

(அ) தமிழ்நாட்டில் 1987 மற்றும் 1988-ல் போக்குவரத்தினால் ஏற்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | | | | |
|---|---|---|---|---|
| 1987 | .. | .. | .. | 27,588 |
| 1988 | ... | ... | .. | 28,581 |

(ஆ) இவ்விபத்துக்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | | | | |
|---|---|---|---|---|
| 1987 | .. | .. | .. | 5,264 |
| 1988 | .. | .. | .. | 5,791 |

37—

வெள்ளையாற்றில் வெள்ளம் வந்தபோது உடைபட்ட கரைகள் சீர் செய்தல்.

வினா எண் 3426—திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாகை வட்டத்தில் உள்ள சோழவித்தியாபுரம், கருங்கண்ணி ஆகிய இடங்களில் வெள்ளையாற்றில் வெள்ளம் வந்தபோது உடைபட்ட கரைகள் இதுவரை சீர் செய்யப்படாததால் அப்பகுதி மக்களுக்கு ஏற்படும் அவதி குறித்து அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை சீர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) : நாகப்பட்டினம் வட்டம், சோழவித்தியாபுரம், கருங்கண்ணி ஆகிய இடங்களில், வெள்ளையாறு இடது கரை மைல் 91/6—330 முதல் 93/0 வரை உள்ள பகுதியில் 1988 ஆம் ஆண்டு பெய்த கடும் மழையின் காரணமாக சிற்சில இடங்களில் அரித்தோடிகளும், கரை பொழிவும் ஏற்பட்டுள்ளன. கரை உடைந்து ஆழமாக அரிமானம் ஏற்பட்ட இடங்களில் உடனடியாக தற்காலிகமாக மணல் மூட்டைகளைக் கொண்டு பாதுகாப்பு செய்யப்பட்டது. இப்பகுதிகளை நிரந்தரமாக பலப்படுத்துதற்குரிய மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. விரைவில் மேற்படி வேலை செய்து முடிக்கத் தேவையான விரைவு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[1990 ஏப்ரல் 24

38—

பரமக்குடி தாலுக்காவில் உள்ள சாலைகளைச் சீர் செய்தல்.

வினா எண் 3598— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

பரமக்குடி தாலுகாவில் உள்ள சாலைகளைச் சீர்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

இச்சாலைகள் பராமரிப்புக்காக 1989-90 ஆம் ஆண்டில் மாநிலச்சாலைகள் தலைப்பின் கீழ் ரூ. 0.48 இலட்சமும், மாவட்ட முக்கிய சாலைகள் தலைப்பின் கீழ் ரூ. 13.70 இலட்சமும், இதர மாவட்ட சாலைகள் தலைப்பின் கீழ் ரூ. 7.10 இலட்சமும் பரமக்குடி உட்கோட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாநில நெடுஞ்சாலையில் பார்த்திபனூர் நகரில் சாலையை உயரப்படுத்தும் வேலை ரூ. 1.50 இலட்சத்திற்கு ஒரு பணியும், மாவட்ட முக்கிய சாலைகள் தலைப்பில் ரூ. 5.16 இலட்சம் மதிப்பீட்டில் 7 பணிகளும், மற்றும் இதர மாவட்டச் சாலைகள் தலைப்பில் ரூ. 12.59 இலட்சம் மதிப்பீட்டில் 13 பணிகளும் 1989-90 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கான தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஆண்டு பராமரிப்பு நிதியினைக் கொண்டு அரசு சாலைகள் அனைத்தும் வாகனப்போக்குவரத்துக்கு ஏற்றவகையில் நல்ல முறையில் பராமரிப்பு செய்யப்பட்டு வருகின்றன.

39—

சம்பா மற்றும் குறுவை ரகங்கள் கொள்முதல்.

வினா எண் 3805 —திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1988-89 நிதியாண்டில் சம்பா மற்றும் குறுவை ரகங்கள் எவ்வளவு கொள்முதல் செய்ய அரசு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது?

(ஆ) கொள்முதல் செய்யப்பட்டது எவ்வளவு?

(இ) கொள்முதல் இலக்கு குறைந்ததற்குக் காரணம் என்ன?



1990 ஏப்ரல் 24]

விடை—

(அ) கொள்முதல் இலக்கு சாதாரணமாக நிதியாண்டிற்கு நிர்ணயிப்பதில்லை. ஆனால் பயிராண்டிற்குத்தான் நிர்ணயிக்கப்படுகிறது. அதாவது அக்டோபர் முதல் டிசம்பர் 15 ஆம் தேதி முடிய குறுவையும், டிசம்பர் 16 முதல் அடுத்த செப்டம்பர் முடிய சம்பாவும் ஆகும். 1988-89 ஆம் ஆண்டு குறுவையில் 2,72,300 டன் நெல்லும், சம்பாவில் 17,75,000 டன் நெல்லும் 1989 குறுவைக்கு 2,90,000 டன் நெல்லும் கொள்முதல் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1988-89 குறுவையில் 1,91,401 டன் நெல்லும், 1988-89 சம்பா பருவத்தில் 9,16,949 டன் நெல்லும், 1989 அதாவது நடப்புக் குறுவையில் 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27 ஆம் நாள் வரை 25,235 டன் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

(இ) கொள்முதல் இலக்கு 1988 ஆம் ஆண்டு குறுவையில் இருந்ததைவிட 1989 ஆம் ஆண்டு அதிகமாகவே உள்ளது.

40—

தென் பொதுவக்குடி வழியாகப் பேருந்து.

வினா எண் 3998 —டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரமக்குடி தொகுதி, பரமக்குடியிலிருந்து புழுதிகுளம் வழியாக முதுகுளத்தூர் செல்லும் பேருந்தை தென் பொதுவக்குடி வழியாகச் செல்ல அனுமதிக்கப்படுமா ?

விடை—

தென்பொதுவக்குடி கிராமம் புழுதிக்குளத்திலிருந்து 1.0 கி.மீ. தூரத்திலும் பரமக்குடி முதுகுளத்தூர் பிரதானச் சாலையிலிருந்து 1.3 கி.மீ. தூரத்திலும் உள்ளது. மேற்படி இருபுற சாலைகளும் பேருந்து செல்ல முடியாத அளவிற்கு குண்டும் குழியுமாக மிகக் குறுகலாக உள்ளது. மேலும் பரமக்குடி முதுகுளத்தூர் பிரதான வழித் தடத்தில் ஓடும் பேருந்துகளின் விபரம் பின்வருமாறு :—

பரமக்குடி—முதுகுளத்தூர் :

மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம்—நகரப் பேருந்து 11—54 நடைகள்.

மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம்—புறநகர் பேருந்து 8—28 நடைகள்.

பரமக்குடி—புழுதிக்குளம் ;

மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம்—நகரப் பேருந்து 2—16 நடைகள்.

41—

**உயர்நீதி மன்றத்திலிருந்து திருவொற்றியூருக்கு இரவு நேரப் பேருந்து.**

வினா எண் 4166—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளுவர் போக்குவரத்து மூலம் இரவில் சென்னைக்கு வரும் வட சென்னை வாசிகள் போக்குவரத்தில் ஏற்படும் சிரமங்களைக் குறைக்க உயர்நீதி மன்றத்திலிருந்து–திருவொற்றியூருக்கு இரவு நேர பல்லவன் பஸ்கள் விடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

ஏற்கெனவே தடம் 1வீ-ல் ஆறு பேருந்துகள் இரவு நேர பேருந்துகளாக திருவொற்றியூருக்கு 13—4—1988 முதல் இயக்கப்படுகின்றது. இப்பேருந்துகளில் மொத்தம் 36 பயணத் தடவைகள் 30 நிமிட இடைவெளியில் இரவு 11-00 மணியிலிருந்து விடியற்காலை 4-00 மணிவரை இயக்கப்படுகின்றன. மேலும் தடம் எண் 56-ஏ யில் இரு பயண தடவைகள் எண்ணூருக்கு திருவொற்றியூர் வழியாக உயர்நீதி மன்ற நிறுத்தத்தில் நின்று செல்லும் வண்ணம், அண்ணா சாலை, வெலிங்டன் பேருந்து நிறுத்தத்திலிருந்து இயக்கப்படுகின்றது. இது தவிர பாரி முனைப் பகுதியில் இயக்கப்படும் அனைத்து இரவு நேரப் பேருந்துகளும், திருவள்ளுவர் பேருந்து நிலைய நிறுத்தத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றிச் செல்ல உத்தரவிடப்பட்டுள்ளது.

42—

சாலை பராமரித்தல்.

வினா எண் 4234—திரு. எம். முத்தையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பசுவந்தனையில் இருந்து குலையநல்லூர்—ஓசனூத்து மங்கலம் வழியாக ஒட்டப்பிடாரம் செல்லும் சாலையைப் பழுது பார்க்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?





விடை—

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது, கீழ்கண்டுள்ள இரண்டு சாலைப்பகுதிகளைக் கொண்டதாகும்.

(1) கோவில்பட்டி—பசுவந்தனை—ஓசனூத்து சாலை கி.மீ. 22/8—35/2.

இதில் கி.மீ. 23/0—25/0 வரை தார்தளம் புதுப்பிக்கும் பணி நடப்பு ஆண்டு பராமரிப்பு நிதியின் மூலம் மேற்கொள்ளப் படவுள்ளது. கி.மீ. 31/0 முதல் 32/0, 34/0—35/2 வரை சாலை நல்ல நிலையில் உள்ளது. எஞ்சியுள்ள பகுதியான கி.மீ. 22/8—23/0, 30/0—31/0 மற்றும் 32/0, 33/0 வரையில் பழுதடைந்து உள்ள பகுதிகளை சரிபார்த்து வாகனப் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத முறையில் பராமரிக்கப்படுகின்றது. பராமரிப்பு நிதிக்கேற்ற வகையில் சாலைபுதுப்பிக்கும் பணியை மேற்கொள்ள தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(2) பாளையங்கோட்டை—அருப்புக்கோட்டை சாலை கி.மீ. 36/6—41/6.

இச்சாலையில் மிகவும் பழுதடைந்த பகுதியான கி.மீ. 36/0—37/0-ல் தார் புதுப்பிக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப் படவுள்ளது. எஞ்சியுள்ள பகுதிகள் நல்ல முறையில் பராமரிக்கப் பட்டு வருகிறது.

43—

**வேளாண்மை கூட்டுறவு பொறியியல் இணையகம்.**

வினா எண் 4306—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு வேளாண்மை கூட்டுறவு பொறியியல் இணையகத்தால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நன்மைகள் என்ன ?

(ஆ) தமிழகத்தில் எத்தனை கிளை மையங்கள் உள்ளன ?

விடை—

(அ) தமிழ்நாடு வேளாண்மை பணிக்கூட்டுறவு இணையகம் 169 வட்டார மையங்களும், 12 மாவட்ட அளவிலான சங்கங்களும் இணைந்த மாநில அளவிலான கூட்டுறவு இணையமாகும். இவற்றின் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான விவசாய இயந்திரங்களையும், சாதனங்களையும் வாடகைக்கு விடுதல், விவசாய இயந்திரங்களைப்பழுது பார்த்தல், விவசாயத்திற்குத் தேவையான இடுபொருட்களாகிய விதை, உரம், பூச்சி மருந்து விநியோகம் செய்தல், விவசாயக் கருவிகள், பயிர் பாதுகாப்பு சாதனங்கள்

முதலியவற்றை செய்து வழங்குதலும், தனியார் துறைகளினால் ஏற்படக்கூடிய கள்ளச் சந்தை, பதுக்கல், விலையேற்றம், தரக் குறைவான பொருட்கள் வழங்குதல் ஆகியவற்றைத் தடுத்து, விவசாயிகளுக்கு நன்மைகள் ஏற்பட உதவுகிறது.

(ஆ) 169 வட்டார அளவிலான மையங்களும், 12 மாவட்ட அளவிலான சங்கங்களும் தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையகத்தின் ஆளுகையின் கீழ் உள்ளன.

44—

சென்னை-சேலம் (வழி) ஆரணி, திருவண்ணாமலை பேருந்து.

வினா எண் 4435—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையில் இருந்து ஆரணி, திருவண்ணாமலை வழியாக சேலம் வரை சென்ற திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) அதை மறுபடியும் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னையில் இருந்து ஆரணி—திருவண்ணாமலை வழியாக சேலத்திற்கு ஒரு பேருந்து இரண்டு ஒரு வழிப்பயணங்களுடன் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டது. ஆனால், இத்தடத்தைப் பயன்படுத்தும் பயணிகளின் விகிதாச்சாரம் மிகவும் குறைவாக இருந்தமையால் இத்தடத்தில் இயக்கப்பட்ட பேருந்து நிறுத்தப்பட்டது. சேலத்திலிருந்து பாப்பிரெட்டி, அரூர், ஊத்தங்கரை, செங்கம், திருவண்ணாமலை, போளூர், ஆரணி, செய்யார், காஞ்சிபுரம் வழியாக ஒரு பேருந்தை இரண்டு ஒரு வழிப் பயணங்களுடன் விரைவில் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

45—

நவீன வசதிகளுடன் இறைச்சி வெட்டுமிடம்.

வினா எண் 4884—திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் நவீன வசதிகளுடன் இறைச்சி வெட்டுமிடம் அமைக்கும் பணியினை விரைவுபடுத்த அரசு பரிசீலனை செய்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், தமிழ்நாடு இறைச்சிக்கழகம் எந்தெந்த இடங்களில் அமைக்க முடிவு செய்துள்ளது ?



விடை—

(அ) பெரம்பூர் இறைச்சிக் கூடத்தை நவீன வசதிகளுடன் அமைக்க ரூபாய் 200 இலட்சத்திற்கு தமிழ்நாடு இறைச்சி கழகத்தால் அனுப்பப்பட்ட கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முதல் கட்டமாக மாடுகள் அறுவைகூடம் கட்டுவதற்கு ரூபாய் 60 இலட்சம் (மத்திய மற்றும் மாநில அரசுகள் 50 : 50 அடிப்படையில்) வழங்கப்பட இருக்கிறது. மத்திய அரசிடமிருந்து அதன் பங்குத் தொகையான ரூபாய் 30 இலட்சம் கேட்டு கடிதம் எழுதப்பட்டுள்ளது. மத்திய அரசின் பங்குத் தொகை வந்த உடன் கட்டுமான வேலைகள் தொடங்கப்படும். 8-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 140 இலட்சம் (மத்திய மற்றும் மாநில அரசுகள் 50 : 50 அடிப்படையில்) ஆடுகள் அறுவை கூடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ்நாடு இறைச்சிக் கூடம் மதுரை மற்றும் கோயமுத்தூரில் உள்ள மாநகராட்சிகளின் கீழ் இயங்கிவரும் இறைச்சி கூடங்களையும் நவீனப்படுத்த திட்டமிடப்பட்டு தேவையான கருத்துரு 8 வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

46—

அம்மன்பேட்டை நவீன அரிசி ஆலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர்.

வினா எண் 4917—திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் தாலுகா, அம்மன்பேட்டை நவீன அரிசி ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் அப்பகுதியில் ஓடும் பாசன வாய்க்காலில் கலப்பதால் விவசாய நிலங்களுக்கும், கால்நடைகளுக்கும், பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : 1974ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1981-ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் ஆகியவற்றின் கீழ் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதிக்கு (consent) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், அம்மன்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நவீன அரிசி ஆலை கிளை விண்ணப்பித்துள்ளது,

[1990 ஏப்ரல் 24

ஆனால் ஆலை கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்யாமல் வெளியேற்றுவதால் மாசுக் கட்டுப்பாடு வாரிய அனுமதி வழங்கப்படவில்லை. கழிவுநீரைச் சுத்தம் செய்ய சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும் என்று வற்புறுத்தி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆலைக்கு அறிவுறுத்தியுள்ளது. சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது தொடர்பாக ஆலை மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கையை மாசுக் கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது.

47—

**கதர் துணி மற்றும் இராமத் தொழில் பொருட்கள் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி.**

வினா எண் 4933—திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் உற்பத்தியாகும் கதர் துணி மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த பொருட்கள் எந்தெந்த நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன?

(இ) மத்திய அரசு ஊக்குவிப்பு தொகை வழங்குகிறதா? எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பனந்தும்பும், பனை ஓலைப் பொருட்களும் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இங்கிலாந்து, அமெரிக்கா, பெல்ஜியம், பிரான்சு, அயர்லாந்து, பின்லாந்து, ஆலந்து, இத்தாலி, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்கு பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இங்கிலாந்து, பிலிப்பைன்ஸ், ஜப்பான், தாய்லாந்து, ஆஸ்திரேலியா, பிரான்சு மற்றும் இதர மேற்கத்திய நாடுகளுக்கு பனை ஓலையினால் செய்யப்பட்ட பரிசுப் பெட்டகங்கள், கூடைகள், கொட்டான்கள், தொப்பிகள் மற்றும் அழகிய தட்டுகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

(இ) இதுவரையில் ஊக்குவிப்புத் தொகை ஏதும் மத்திய அரசால் வழங்கப்படவில்லை. ஊக்குவிப்புத் தொகை பெறத் தக்க வகையில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்



1990 ஏப்ரல் 24]

பொருட்களின் பட்டியலில் பனந்தும்பையும் சேர்த்துக்கொள்ள வேண்டி மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளப்பட்டு அப்பொருள் பரிசீலனையில் உள்ளது.

48—

**வன இலாகாவிற்குச் சொந்தமான பகுதிக்குள் தனியார் வைத்திருக்கின்ற எஸ்டேட்டுகளை அரசு எடுத்துக் கொள்ளும் திட்டம்.**

வினா எண் 5067— திரு. சு. குருநாதன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வன இலாகாவிற்குச் சொந்தமான (Reserve Forest) பகுதிக்குள் தனியார் வைத்திருக்கின்ற எஸ்டேட்டுகளை அரசு எடுத்துக்கொள்ளும் திட்டம் உள்ளதா?

(ஆ) இல்லை எனில், அவைகளின் அழிவைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) தனியார் வசம் உள்ள காடுகளின் அழிவை தடுக்க அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. முக்கியமாக Tamil Nadu Preservation of Private Forest Act. 1949 தனியார் காடுகள் பராமரிப்பு சட்டம் 1949, (Tamil Nadu Hill Area Preservation of Trees Act, 1955) தமிழ்நாடு 1955 மலைப்பகுதி (மரங்கள் பாதுகாப்பு) சட்டம், ஆகிய இரு சட்டங்கள் மூலமாக தனியார் காடுகளில் மரம் வெட்டுவதற்கு அம்மாவட்டங்களில் இதற்கென அமைக்கப்பட்டுள்ள குழுவின் அனுமதி பெற்றே ஆகவேண்டும். அக்குழுவில் மாவட்ட ஆட்சியாளர் தலைவராகவும் மாவட்ட வன அலுவலர், வட்டாட்சியர், வேளாண்மைத்துறை, செயற் பொறியாளர் ஆகியோர் உறுப்பினர்களாகவும், மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் செயலாளராகவும் செயல்படுவர். இவர்கள் தனியார் காடுகளில் மரம் வெட்டுவதற்கான ஒவ்வொரு மனுவையும் நன்கு பரிசீலித்த பின்பே, அனுமதி வழங்குவர். தனியார் காடுகள் பராமரிப்பு சட்டத்தின் கீழ் எந்த ஒரு தனியார் காடுகள் உரிமையாளரும். இக்குழுவின் முன் அனுமதியின்றி தன் வசம் உள்ள காட்டை விற்கவோ அடகு வைக்கவோ குத்தகைக்கு விடவோ முடியாது. இச்சட்டங்களின் கீழ் தேர்வு முறையில் முதிர்ச்சி அடைந்த மரங்கள் வெட்டுவதற்கும் கூட மரத்தின் உயரம், சுற்றளவு இவைகளை பொறுத்தே அனுமதி வழங்கப்படுகிறது. இச்சட்டங்களை மீறுவோருக்கு ஓராண்டு முதல் இரண்டு ஆண்டுகள் வரைசிறைத் தண்டனையும் ரூபாய் 5,000 (ரூபாய் ஐந்து ஆயிரம்) வரை அபராதமும் வழங்க விதிகள் உள்ளன.

[1990 ஏப்ரல் 24

49—

திருவண்ணாமலை நகரிலிருந்து புதிய பேருந்து விடும் திட்டம்.

வினா எண் 5113—திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை நகரிலிருந்து கோவை, மதுரை, திருப்பதி, பெங்களூர் போன்ற தொலை தூர ஊர்களுக்குச் செல்லுவதற்கு புதிய திருவள்ளுவர் பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு இடங்களிலிருந்து 24 திருவள்ளுவர் விரைவுப் பேருந்துகள் திருவண்ணாமலை வழியாக பல்வேறு இடங்களுக்கு கீழே குறிப்பிட்டவாறு இயக்கப்படுகின்றன—

| | |
|---|---|
| திருச்சி—வேலூர் .. .. .. .. | 2 |
| நாகர்கோயில்—வேலூர் .. .. .. | 4 |
| வேளாங்கன்னி—வேலூர் .. .. .. | 2 |
| சென்னை—கோயம்புத்தூர் .. .. .. | 2 |
| பாண்டிச்சேரி—பெங்களூர் .. .. .. | 2 |
| கடலூர்—பெங்களூர் .. .. .. | 2 |
| கும்பகோணம்—பெங்களூர் .. .. .. | 2 |
| திருச்சி—திருப்பதி .. .. .. .. | 2 |
| வேளாங்கன்னி—பெங்களூர் .. .. .. | 2 |
| செங்கோட்டை—திருப்பதி .. .. .. | 2 |
| திருநெல்வேலி—திருப்பதி .. .. .. | 2 |
| | 24 |



1990 ஏப்ரல் 24]

திருவள்ளுவர் கழகத்தைச் சார்ந்த பேருந்துகளைப் பராமரிப்பதற்கான பணிமனை எதுவும் அங்கு இல்லையாதலால், திருவண்ணாமலை நகரிலிருந்து கோவை, மதுரை, திருப்பதி, பெங்களூர் போன்ற பெரு நகரங்களுக்குப் புதிய திருவள்ளுவர் பேருந்துகள் விடும் திட்டம் தற்போது இல்லை.

50—

தமிழகத்தில் புதிய விமான நிலையங்கள் ஏற்படுத்துதல்.

வினா எண் 5134—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் புதிய விமான நிலையங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் சேலத்திலும் தூத்துக்குடியிலும் புதிய விமான நிலையங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் விமான நிலையம் அமைக்க மாநில அரசு ரூபாய் 8,74,000 செலவில் 180 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி தேசிய விமான நிலைய குழுமத்திற்கு ( National Airport Authority) இலவசமாக அந்நிலத்தினை அளித்துள்ளது. நிலத்தினை சமன் செய்யவும் அணுகுபாதை அமைக்கவும், நீர் மின் இணைப்புகளுக்காகவும் ரூபாய் 20.50 இலட்சம் மாநில அரசு சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கியுள்ளது. இது தவிர கட்டுமானப் பணிக்காகும் செலவில் 50 விழுக்காடு அல்லது ரூபாய் 40 இலட்சம் வரை அளிக்கவும் மாநில அரசு முன் வந்துள்ளது.

சேலத்தில் விமான நிலையம் அமைக்க மாநில அரசு ரூபாய் 70,15,000 செலவில் 130 ஏக்கர் நிலத்தினை கையகப் படுத்தி இலவசமாக தேசிய விமான நிலைய குழுமத்திற்கு ( National Airport Authority ) அளித்துள்ளது. நிலத்தினை சமன் செய்யும் பணிக்காக தேசிய விமான நிலையக் குழுமத்திற்கு மாநில அரசு ரூபாய் 50 இலட்சம் அளித்துள்ளது. இதுதவிர, அணுகுபாதை அமைக்கவும் உயர் மின் அழுத்த இணைப்புக்களை மாற்றவும் நீர், மின் இணைப்புக்களுக்காகவும், ரூபாய் 15,37,000 மாநில அரசு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கி யுள்ளது. கட்டுமானப் பணிகளை தேசிய விமான நிலையக் குழுமம் விரைவில் துவக்கும்.

51—

குடமுருட்டி ஆற்றின் குறுக்கே புதிதாகப் பாலம் கட்டுதல்.

வினா எண். 213—திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவையாறு ஊராட்சி ஒன்றியம், மணத்திடல்-வளப்பக்குடி ஊர்களுக்கிடையே ஓடும் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே புதிதாகப் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

இப்பணியினை நடப்பு ஆண்டில் எடுத்துச் செய்யும் சாத்தியக்கூறுகளில்லை. இப்பணியினை மத்திய அரசு வெளியிடும் வழிமுறைகளுக்கு உட்பட்டும், நிதி நிலைமைக்குட்பட்டும் 1990—91-ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய சாத்தியக் கூறுகள் உள்ளனவா என்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

52—

துறையூர் நகரில், அண்ணா பேருந்து நிலையத்திற்கு எதிர்புறம் கடைகள் கட்டும் திட்டம்.

வினா எண். 543—திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உப்பிலியாபுரம் தொகுதி துறையூர் நகரில் அண்ணா பேருந்து நிலையத்திற்கு எதிர்புறம் கடைகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) துறையூர் நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தின் எதிர்புறம் அமைந்துள்ள சிங்கஏரி சர்வே எண். 176-ல் பொதுப் பணித்துறைக்குச் சொந்தமான நிலத்தை கடைகள் கட்டுவதற்காக துறையூர் நகராட்சி பொதுப்பணித் துறையிடம் ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுள்ளது. இக்கோரிக்கை இப்போது பொதுப் பணித்துறையின் ஆய்வில் உள்ளது. நிலம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் கடன் வசதி பெறப்பட்டு நகராட்சியால் கடைகள் கட்டுவதற்கு தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.



53—

கப்பி சாலையை தார் சாலையாக மாற்றும் திட்டம்.

வினா எண் 2361—திரு. ஏ. செங்குட்டுவன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்தில் மேலாநல்லூர் செல்லும் கப்பிச் சாலையை மேலாநல்லூர்-வில்லியநல்லூர், மேலாநல்லூர்-பாலாக்குடி மேலாநல்லூர்-சேத்தூர் வரையில் தார்சாலையாக மாற்றி அமைக்கும் திட்டம்அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): தார் சாலையாக மாற்றி அமைக்கும் கருத்துரு அரசிடம் தற்போது இல்லை.

54—

கிராம நெடுஞ்சாலை அமைக்கும் செயற்குறிப்பு.

வினா எண் 4202—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊத்தங்கரை வட்டம், காட்டேரி ஊராட்சி மக்களின் நலனைக் கருதி சேலம்-திருப்பத்தூர் நெடுஞ்சாலையில் இருந்து ஒண்ணகரை (வரை) ஆலமரத்துக் கொட்டாய்-லக்கம்பட்டி வரை கிராம நெடுஞ்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

சேலம்-திருப்பத்தூர் நெடுஞ்சாலையில் இருந்து ஒண்ணகரை (வரை) ஆலமரத்துக்கொட்டாய்-லக்கம்பட்டி வரை கிராம நெடுஞ்சாலை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

55—

பாச்சலூர்-பெரும்பள்ளம் சாலை அமைக்கும் திட்டம்.

வினா எண். 4325 :—திரு. என். பழனிவேல், திரு. வி. இராமசாமி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பாச்சலூரிலிருந்து பெரும்பள்ளம் வரை சுமார் 39 கிலோ மீட்டர் சாலை அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

விடை—

மேற்படி சாலையை மேம்பாடு செய்ய அரசளவில் கருத்துரு ஏதுமில்லை.

56—

காயாவூர்-பாதரங்கோட்டை சாலையை கப்பிச் சாலையாக்கும் திட்டம்.

வினா எண். 4610—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், காயாவூர்-பாதரங்கோட்டை சாலையை ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் கப்பிச் சாலையாக அமைக்கவும், சாலையின் குறுக்கே ஓடும் இரண்டு ஓடைகளுக்கு இடையே இரண்டு சிறிய பாலம் கட்டவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டமும், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டமும் ஒன்றாக இணைக்கப்பட்டு நடப்பு ஆண்டு முதல் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இப்பொருள் குறித்து அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

57—

ஆவணம் பனிரெண்டாக்குளம் பெரிய ஏரியை பராமரித்தல்.

வினா எண் 4730—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, ஆவணம் பனிரெண்டாக்குளம் பெரிய ஏரியைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

கல்லணைக் கால்வாய் பாசன எல்லைக்குள் உள்ள ஏரிகளில் ஆவணம் பனிரெண்டாக்குளம் பெரிய ஏரியும் ஒன்று. இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள், ஆண்டு பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியில் இருந்து, இயன்ற அளவு செய்யப்பட்டு வருகின்றன.

58—

கோட்டாகுடி பெரிய ஏரியைப் பராமரித்தல்.

வினா எண், 4738—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, கோட்டாகுடி பெரிய ஏரியை பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

கல்லணைக் கால்வாய் எல்லைக்குள் உள்ள ஏரிகளில் கோட்டாகுடி பெரிய ஏரியும் ஒன்றாகும். இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள் ஆண்டு பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியில் இருந்து இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

—

பெருமகளூர் பெரிய ஏரியைப் பராமரித்தல்.

வினா எண் 4741—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, பெருமகளூர் பெரிய ஏரியை பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

கல்லணைக் கால்வாய் பாசன எல்லைக்குள் உள்ள ஏரிகளில் பெருமகளூர் பெரிய ஏரியும் ஒன்று. இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள், ஆண்டு பராமரிப்பு நிதியிலிருந்து இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

60—

விளாங்குளம் பெரிய ஏரியைப் பராமரித்தல்.

வினா எண் 4742—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, விளாங்குளம் பெரிய ஏரியை பராமரிக்க அரசு ஆவண செய்யுமா?

விடை—

கல்லணைக் கால்வாய் பாசன எல்லைக்குள் உள்ள ஏரிகளில் விளாங்குளம் பெரிய ஏரியும் ஒன்று. இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள் ஆண்டு பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியிலிருந்து இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

61—

பூவளூர் அரயன்குளம் ஏரியைப் பராமரித்தல்.

வினா எண். 4753 : திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, பூவளூர் அரயன்குளம் ஏரியை பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

கல்லணைக் கால்வாய் பாசன எல்லைக்குள் அமைந்துள்ள ஏரிகளில் பூவளூர் அரயன்குளம் ஏரியும் ஒன்றாகும். இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள் ஆண்டு பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியிலிருந்து, நிதி நிலைமைக்கேற்ப பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

62—

கொள்ளுக்காடு புதுநகர் ஆதி திராவிடர் தெருவிற்கு மயானச் சாலை அமைத்தல்.

வினா எண். 4778. திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவோணம் ஒன்றியம், கொள்ளுக்காடு புதுநகர் ஆதி திராவிடர் தெருவிற்கு மயானச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?



விடை—

பட்டுக்கோட்டை வட்டம், கொள்ளுக்காடு கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு மயானப் பாதை செய்து கொடுப்பதற்காக நில ஆர்ஜிதம் செய்ய நில எடுப்புச் சட்டத்தின் பிரிவு 4(1) மற்றும் 6-ன் கீழ் அறிவிக்கைகளுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

63—

தமிழக ஆதி திராவிட பழங்குடியினர் நலத்துறை வட்டாட்சியர்களுக்கு ஜீப் வழங்கும் திட்டம்.

வினா எண் 4835—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழக ஆதி திராவிட பழங்குடியினர் நலத் துறை வட்டாட்சியர்களுக்கு ஜீப் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை.

64—

சித்துக்காட்டில் சீர்மரபினர் மாணவர் விடுதி துவங்கும் திட்டம்.

வினா எண். 4859—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி ஒன்றியம், சித்துக்காட்டில் சீர்மரபினர் மாணவர் விடுதி ஒன்று துவக்க அரசு திட்டமிட்டு உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் பேராவூரணி ஒன்றியம் சித்துக்காட்டில் சீர்மரபினர் மாணவர் விடுதி துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

65—

வியாபாரிகளுக்கு ஆர். சி. கட்டணம்.

வினா எண் 5036—திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிறு வியாபாரிகளுக்கும், பெரிய வியாபாரிகளுக்கும் ஆர்.சி. கட்டணம் ஒரே போல்தான் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆண்டு ஒன்றுக்கு பதிவு கட்டணம் ரூ. 100 என்பது அதிகமில்லை. ஆண்டு தொடக்கத்திலேயே ஒரு வணிகர் சிறு வியாபாரியா அல்லது பெரிய வியாபாரியா என்று தீர்மானிக்க இயலாததால் தற்போதைய நிலை தொடரும்.

66—

பாளையங்கோட்டை நகருக்கு அருகில் பெரிய பஸ் நிலையம் அமைக்கும் திட்டம்.

வினா எண். 5082—திரு. சு. குருநாதன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பாளையங்கோட்டை நகருக்கு அருகாமையில் பெரியதாக பஸ் நிலையம் அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

விடை—

பாளையங்கோட்டை வட்டம், குலவணிகர்புரம் கிராமம், வார்டு எண். 3, பிளாக் 23, ந.அ. எண் 1709/1 பி-ல் 20.00 ஏக்கர் நிலத்தில் பேருந்து நிலையம் அமைக்க நகராட்சியால் தீர்மானிக்கப்பட்டது—ஆனால் நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களை மாற்றத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் வருவாய்த் துறையால் முதலில் இதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில், இந் நிலத்தை அரசுத் துறைகளுக்கும் தனியார்களுக்கும் ஒதுக்கக்கூடாதென ஆயக்கட்டுதாரர்கள் சார்பில் உரிமையியல் வழக்கு திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட



முன்சீப் நீதிமன்றத்தில் தொடரப்பட்டு தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது. நகராட்சியின் சார்பில் பயன்தரத்தக்க திட்டமோ பேருந்து நிலையமோ அமைப்பதாக இருப்பின் வழக்கை திரும்பப் பெற்றுக் கொள்வதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளதால், இவ் விவரம் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டு அவருடைய பதில் கிடைக்கப் பெற்றது. தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

67—

ஆதி திராவிடர் மக்களுக்கு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள்.

வினா எண் 5112—திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1987–88-ல் திருவண்ணாமலை ஒன்றியத்தில் ஆதி திராவிட மக்களுக்குக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் எத்தனை?

(ஆ) 1988–89-ல் கட்டப்படவிருக்கும் தொகுப்பு வீடுகள் எத்தனை?

விடை—

(அ) 176.
(ஆ) 123.

68—

வடமணப்பாக்கம் ஏரி வரத்துக் கால்வாய் தூர் வாரும் பணி.

வினா எண். 5246—திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செய்யாறு தொகுதியில் உள்ள வடமணப்பாக்கம் ஏரி வரத்துக் கால்வாய் தூர் வாரும் பணி செய்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், செய்யாறு தொகுதியில் உள்ள வடமணப்பாக்கம் ஏரி வரத்துக் கால்வாய் தூர் வாரும் பணிக்கு 1987—88-ம் ஆண்டில் வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின் கீழ் ரூ. 20,000-க்கு மதிப்பீடு அங்கீகரித்து பணியும் செய்து முடிக்கப்பட்டுள்ளது. கால்வாய் தற்பொழுது நல்ல நிலையில் உள்ளது.

69—

**கீர்த்திமான் ஆற்றில் முஸ்டக்குடி எல்லை வாய்க்கால் தலைப்பில் தடுப்பு சுவர்.**

**வினா எண் 5351**—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் வட்டம், பரவக்கரை கிராம விவசாயிகள் பயனடைய கீர்த்திமான் ஆற்றில் முஸ்டக்குடி எல்லை வாய்க்கால் தலைப்பில் தடுப்புச் சுவர் அமைக்க கோரிக்கை மனு வந்துள்ளதா:

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம். வந்துள்ளது.

(ஆ) 1989-ல் கும்பகோணம் வேளாண்மை கருத்தரங்கில் பரவக்கரை கிராம மக்களிடம் இருந்து ஒரு கோரிக்கை மனு பெறப்பட்டது. மனுவில் தெரிவித்த கோரிக்கை சம்பந்தமாக கீர்த்திமானாற்றில் நடப்பு ஆண்டில் தண்வாரி இயந்திரம் மூலம் மண் திட்டுகள் அகற்றப்பட்டு ஆழப்படுத்தப்பட்டுள்ளது. இப்பருவ காலத்தில் நீர் எவ்வளவு பாசனம் அளிக்கிறது என ஆராய்ந்து கோடையில் தேவையிருப்பின் தடுப்புச்சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போது பாசனம் நல்ல முறையில் நடைபெறுகிறது.

70—

**வீரசோழன் ஆற்றில் ரெகுலேட்டர் கட்டுதல்.**

**வினா எண். 5355**—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், கோமல் விவசாயிகள் பாசனம் பெறும் வகையில் கோமல் புதுவாய்க்கால் தலைப்பில் வீரசோழன் ஆற்றில் ரெகுலேட்டர் கட்டிக் கொடுக்க வேண்டி அரசுக்கு கோரிக்கை மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

71—

**துளசிக்காட்டு பிரிவில் இருந்து ரெட்டிபாளையம் வரை ரோடு போடும் செயற்குறிப்பு.**

**வினா எண் 5471**—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அந்தியூர் தொகுதியில், வெள்ளித்திருப்பூர், ரெட்டிப்பாளையம் ரோட்டில், துளசிக்காட்டு பிரிவில் இருந்து ரெட்டிப்பாளையம் ஆதி திராவிடர் காலனி வரை ரோடு போட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

துளசிக்காட்டு பிரிவில் இருந்து ரெட்டிப்பாளையம் ஆதி திராவிடர் காலனி வரை சாலை அமைக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

72—

**ரெட்டிபாளையம் ஆதிதிராவிடர் காலனி சென்ராயினூர் கோவில் சாலையை தார் சாலையாக்கல்.**

**வினா எண் 5472**—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ரெட்டிப்பாளையம் ஆதி திராவிடர் காலனியிலிருந்து சென்ராயினூர் கோவில் வரை உள்ள ரோட்டை அகலப்படுத்தி தார் சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் அம்மாப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ரெட்டிப்பாளையம் ஆதி திராவிடர் காலனியிலிருந்து சென்ராயினூர் கோவில் வரை உள்ள ரோட்டை அகலப்படுத்தி தார் சாலையாக மாற்ற செயற்குறிப்பு ஏதும் இல்லை.

73—

காட்டம்பட்டியில் திருமண மண்டபம் கட்டுதல்.

வினா எண் 5489—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிணத்துக்கடவு தொகுதியிலுள்ள காட்டம்பட்டியில் திருமண மண்டபம் கட்ட அற நிலையத்துறை மூலம் ஆணை யிடப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பு யாது?

(இ) அம்மண்டபம் கட்டி முடிக்கப்படாமல் பாதியில் நிற்பதை அரசு அறியுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1975-ம் ஆண்டின் முதல் மதிப்பீட்டின்படி ரூ. 60,000 ஆகும். இதில் ரூ. 19,500-க்கு வேலைகள் முடிக்கப்பட்டு மீதி வேலைகளுக்கு ரூ. 1.05 இலட்சத்திற்கு 1981-ம் ஆண்டில் மறு மதிப்பீடு செய்யப்பட்டது.

(இ) மேற்படி திருமண மண்டபம் முழுவதும் கட்டி முடிக்கப்படவில்லை. இதை கட்டி முடிக்க இன்னும் ரூ. 2 இலட்சம் தேவைப்படும். இத்திருக்கோயிலுக்கு நிதி வசதி இல்லை. வருமானமில்லாத சிறிய கோயிலாகும். எனவே, பொது மக்கள் தாங்களாகவே முன்வந்து நன்கொடை மூலம் மேற் கொண்டு கல்யாண மண்டபத்தை கட்டி முடிப்பதை எதிர் நோக்கி மேல் நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.



74—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்ட குற்றவியல் நீதிமன்றப் பிரிவில் முதல் மாடி அமைத்தல்.

வினா எண் 5512—திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்ட நீதிமன்ற கட்டிடத்தில் குற்றவியல் நீதிமன்றப் பிரிவில் (Criminal Court Block) முதல் மாடி இல்லாமையால் மூன்று குற்ற வியல் நீதிமன்றங்கள் பழைய இடமான கொக்கிர குளத்திலேயே இயங்கி வருவதால், முதல் மாடி கட்ட வேண்டுமென்ற கோரிக்கை திருநெல்வேலி வழக்கறிஞர் சங்கத்திலிருந்து அரசிற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு இது குறித்து என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூ. 38.50 இலட்சம் செலவில் திருநெல்வேலி-கட்ட பொம்மன் மாவட்டம், பாளையங்கோட்டையில் உள்ள குற்ற வியல் நீதிமன்றக் கட்டிடத்தில் முதல் மாடி அமைத்து அதில் கொக்கிர குளத்தில் இயங்கி வரும் நான்கு குற்றவியல் நீதி மன்றங்களை இடம் பெறச் செய்வது குறித்த உயர்நீதி மன்றத்தின் செயற் குறிப்பு 1986-87-ம் ஆண்டு பகுதி இரண்டு திட்ட மாகப் பரிசீலிக்கப்பட்டு நிதி பற்றாக்குறை காரணமாக தள்ளி வைக்க ஆணையிடப்பட்டது. எனினும் வழக்கறிஞர் சங்க கோரிக்கையினைத் தொடர்ந்து, தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) புதிதாக செயற்குறிப்பு திருத்தப்பட்ட திட்டம் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை தலைமைக் கட்டிடக் கலைஞ ரிடமிருந்து பெற்று உயர்நீதிமன்றத்தின் வழியாக மேலனுப்பு மாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். மேற்கண்ட செயற் குறிப்புகள் உயர்நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்டவுடன், நிதிநிலைக்கேற்ப அதனை அரசு பரிசீலிக்கும்.

75—

திருப்பத்தூரிலுள்ள பத்திர பதிவு அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம்

வினா எண் 5530—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வட ஆற்காடு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரிலுள்ள பத்திரப் பதிவு அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

திருப்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகம் 1899-ல் கட்டப்பட்ட அரசு கட்டிடம். இதில் அவ்வப்போது பழுது சீர் செய்யப்பட்டுள்ளது. அதனால் புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

76—

ஒப்பந்த தொழிலாளர் ஒழிப்பு சட்டம்.

வினா எண் 5585— திரு. இளம்வழுதி : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஒப்பந்த தொழிலாளர் ஒழிப்புச் சட்டம் நடைமுறையில் இருந்தாலும், ஒப்பந்த தொழிலாளர் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகிறதைத் தவிர்க்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

விடை—

1970-ம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டத்தின்படி, ஒப்பந்தத் தொழிலாளர் பணியை முறைப்படுத்தவும், அதனைத் தடைசெய்யவும் அரசுக்கு அதிகாரம் உள்ளது. அதன்படி, அரசு சில நேர்வுகளில் அதனை முறைப்படுத்தியும், சில நேர்வுகளில் ஒப்பந்தத் தொழிலாளரை வேலையில் அமர்த்துவதை தடை செய்யும் ஆணைகள் வழங்கியுமுள்ளது. மேலும், அச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மாநில ஆலோசனைக் குழுவுடன் கலந்து, ஒப்பந்தத் தொழிலாளர்களின் துயரங்களைத் தீர்க்க அரசு தக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

77—

பரமக்குடி நகராட்சி அபிவிருத்தித் திட்டம்.

வினா எண் 5627—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உலக வங்கி உதவியுடன் பரமக்குடி நகராட்சி அபிவிருத்தித் திட்டம் தொடங்கப்படுமா?

விடை—

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் பல்வேறு திட்டங்கள் பரமக்குடி நகராட்சியில் செயல்படுத்த திட்ட மேலாண்மைக் குழுவினால் முன்னுரிமை எண் 14 வழங்கப்பட்டு தக்க பிரேரணைகள்



நகராட்சி ஆணையரிடமிருந்து கேட்கப்பட்டுள்ளன. பிரேரணைகள் பெறப்பட்டவுடன் திட்ட மேலாண்மைக் குழுவிற்கு திட்ட அறிக்கைகள் தயாரிக்க தக்க கலந்தாய்வர்கள் (Consultants) நியமிக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலனுப்பி வைப்பார்.

78—

இராமநாதபுரம் மாவட்டத்தில் நடமாடும் கால்நடை மருத்துவமனை.

வினா எண் 5730—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டத்தில் நடமாடும் கால்நடை மருத்துவமனை உள்ளதா?

விடை—

தற்பொழுது இராமநாதபுரம் மாவட்டத்தில் நடமாடும் கால்நடை மருந்தகம் ஏதும் செயல்படவில்லை.

79—

பழனி தேவஸ்தானத்தின் மூலம் பஞ்சாமிர்தம் தயாரித்து விற்பனை.

வினா எண் 5859—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானத்தின் மூலம் பஞ்சாமிர்தம் தயார் செய்யப்பட்டு விற்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், கடந்த 1987–88 மற்றும் 1988-89-ம் ஆண்டுகளில் விற்பனை எவ்வளவு?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1987–88-ல் ரூ. 45,85,940.00-க்கும், 1988-89-ல் ரூ. 57,22,190.50-க்கும் விற்பனை ஆகியுள்ளது.

80—

தஞ்சை ஆவுடையார் கோயில் ஆத்மநாதசுவாமி நில ஆர்ஜிதம் செய்யும் திட்டம்.

வினா எண் 5931 —திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் காலகம் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் இவைகள் கட்ட இடவசதியில்லாததால் ஆவுடையார் கோவில் ஆத்மநாதசுவாமி நிலத்திலிருந்து ஆர்ஜிதம் செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

செயற்குறிப்பு எதுவும் இல்லை.

81—

காலகம் கைகாட்டி திருச்சிற்றம்பலம் சாலை அமைக்கும் திட்டம்.

வினா எண் 5944 —திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் கைகாட்டியிலிருந்து கொன்றைக்காடு, ஆணைக்காடு, கல்லூரணிக் காடு வழியாக திருச்சிற்றம்பலம் சாலை வரை ஆர்.எல்.ஈ.ஜி.பி. திட்டத்தில் சேர்த்துச் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டமும், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டமும் ஒன்றாக இணைக்கப்பட்டு நடப்பு ஆண்டு முதல் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஜவஹர் வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் இப்பொருள் குறித்து அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.



82—

நெடுங்குளம் குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற நான்கு கோட்டங்கள்.

வினா எண் 5974—திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், நெடுங்குளம் குடிநீர் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற நான்கு கோட்டங்கள் (டிவிஷன்) உருவாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு அமைக்கப்படும்?

விடை—

(அ) சேலம் மாவட்டத்தில் நெடுங்குளம் குடிநீர் திட்டம் என்ற ஒரு திட்டம் இல்லை. அதற்காக 4 கோட்டங்கள் உருவாக்கத் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ இடமில்லை.

83—

பாப்பம்பட்டி குடிநீர் திட்டம்.

வினா எண் 5998— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பழனி வட்டம், பாப்பம்பட்டி கிராமத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

விடை—

பாப்பம்பட்டி குடிநீர் திட்டம் முடிக்கப்பட்டு, உபயோகத்தில் உள்ளது.

84—

ஒட்டன்சத்திரத்தில் தீயணைப்பு நிலையம்.

வினா எண் 6042—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஒட்டன்சத்திரத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்தித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) மற்றும் (ஆ): திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் அரசு ஆணை எண் எம். எஸ். 2310, உள்துறை, நாள்: 13—9—1979-ல் ஒப்பளிக்கப்பட்டவாறு 26—5—1980 முதல் ஏற்கனவே தீயணைபபு நிலையம் திறக்கப் பட்டு செயல்பட்டு வருகிறது.

85—

நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம்.

வினா எண் 6128—திரு. பி.என். வல்லரசு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகாவில் உசிலம்பட்டி, பண்ணைப்பட்டி, வில்லாணி, பெருமாள்பட்டி—ஒத்தைப்பட்டி—மூப்பபட்டி நெடுஞ்சாலையை மேம்படுத்தும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

86—

சோத்துபாறை அகமலை சாலைப்பணி.

வினா எண் 6217—திரு. எல். மூக்கையா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள சோத்துப்பாறை-அகமலை சாலை (ஆர்.எல்.ஈ.ஜி.பி. மூலமாக) அமைத்துக் கொண்டிருந்த பணி தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா?



(ஆ) ஆம் எனில், அப்பணியை மீண்டும் தொடரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ): சோத்துப்பாறை-அகமலை சாலை வேலைக்கு ரூ. 97 இலட்சம் மதிப்பீட்டில் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

87—

பசுவந்தனையில் காவல் நிலையம் கட்டி காவலர் குடியிருப்பு வசதி செய்யும் செயற் குறிப்பு.

வினா எண் 6250—திரு. எம். முத்தையா: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஒட்டப்பிடாரம் தாலுகாவில் உள்ள பசுவந்தனையில் காவல் நிலையக் கட்டிடம் கட்டவும், காவலர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து கொடுக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

ஒட்டப்பிடாரம் தாலுகாவில் உள்ள பசுவந்தனையில் காவல் நிலையக் கட்டிடம் கட்டவும், காவலர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்துக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

88—

பரமக்குடி தாலுகா காவல் நிலையத்திற்கு டெலிபோன்.

வினா எண் 6263—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகா காவல் நிலையத்திற்கு டெலிபோன் வழங்க அரசு முன்வருமா?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகா காவல் நிலைய தொலைபேசி இணைப்புக்கு 13—8—1987 நாளிட்ட பொது (தொலைபேசி) துறையின் ஆணை எண் 1286-ல் ஆணை வழங்கப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டம், தொலைபேசித் துறையில் காத்திருப்போர் பட்டியலில் இத்தொலைபேசி இணைப்பு வரிசை எண் 34-ல் உள்ளது.

89—

**நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கல்.**

வினா எண் 6265—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சியில் பொன்னையாபுரத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

90—

**காங்கேயம் நீதிமன்றங்களுக்கு அரசு நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு.**

வினா எண் 6316—திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) காங்கேயம் நீதிமன்றங்களுக்கு அரசு நீதிமன்றக் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

விடை—

(அ) மற்றும் (ஆ) : பெரியார் மாவட்டம் காங்கேயம் நகரிலுள்ள முன்சீப் நீதிமன்றத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேற் கண்ட நீதிமன்றக் கட்டிடம் கட்டுவதற்கான வரைபடமும் மதிப் பீடும் உயர்நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்டால் அரசு அதனை பரிசீலிக்கும்.

91—

**சென்னை கன்னியாகுமரி (வழி) ராதாபுரம் அஞ்சுகிராமம் வழித்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து.**

வினா எண் 6345—திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை-கன்னியாகுமரி (வழி) ராதாபுரம், அஞ்சு கிராமம் வழித்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகப் பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

்னில், எப்போது செயல்படுத்தப்படும்?





விடை—

(அ) மற்றும் (ஆ) சென்னை-கன்னியாகுமரி (வழி) ராதா புரம் அஞ்சு கிராமம் வழித்தடத்தில் பேருந்து இயக்குவது பற்றி திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் பரிசீலிக்கப்பட்டு 1990 ஆம் வருடம் ஏப்ரல் மாதத்திற்குள் முடிவு எடுக்கப்படும்.

93—

**சிறுபாசனத் திட்டங்களின் வரத்துக் கால்வாய்கள் மராமத்துப் பணி.**

வினா எண் 7458—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சிறுபாசனத் திட்டங்களின் வரத்துக் கால்வாய்கள் ஆர்.எல்.ஈ.ஜி.பி., என்.ஆர்.ஈ.பி. திட்டத்தில் மராமத்துச் செய்யப்படுமா?

விடை—

1—4—1989 முதல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி யளிப்புத் திட்டம் ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் என செயலாக்கத்தில் உள்ளது. மேற்படி திட்டத்தில் சிறுபாசன திட்டங்களின் வரத்துக் கால் வாய் மராமத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

93—

**செய்யூர் வட்டத்தில் பொதுப்பணித்துறை மூலம் பராமரிக்கப்படும் ஏரிகள்.**

வினா எண் 6643—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம் மற்றும் செய்யூர் வட்டத்தில் பொதுப்பணித்துறை மூலம் பரா மரிக்கப்படும் ஏரிகள் எவை?

(ஆ) அவைகளின் ஆயக்கட்டு எவ்வளவு?

விடை—

(அ) செங்கை அண்ணா மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் 128 ஏரிகளும், செய்யூர் வட்டத்தில் 141 ஏரிகளும் பொதுப் பணித்துறை மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) மதுராந்தகம் வட்டத்தில் 31,033 ஏக்கரும், செய்யூர் வட்டத்தில் 30,764 ஏக்கரும் ஆயக்கட்டுகளாகும்.

04—

கால்நடை பட்டி அமைக்கும் திட்டம்.

வினா எண் 6820—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டத்தில் கால்நடைகளை அடைக்க பட்டி அமைக்கும் திட்டம் எந்தெந்த ஊர்களுக்கு தயாரிக்கப்பட்டு வருகிறது.

விடை—

புதியதாகக் கால்நடைப் பட்டிகள் கட்டுவதற்கு முன் மொழிவுகள் இல்லை.

95—

அரசுப் போக்குவரத்து கழகத்தின் மூலம் பழங்குடியினருக்கு ஓட்டுநர் பயிற்சி.

வினா எண் 6946—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழங்குடியினருக்கு ஓட்டுநர் பயிற்சி அரசு போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



96—

தமிழ்நாட்டில் நடமாடும் நூலகங்கள்.

வினா எண் 7307—திரு எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் நடமாடும் நூலகங்கள் செயல்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் மொத்தம் 9 நடமாடும் நூலகங்கள் செயல்படுகின்றன. அதன் விவரம் வருமாறு :—

| மாவட்டம். | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. சென்னை | .. | 2 |
| 2. மதுரை | .. | 1 |
| 3. திருநெல்வேலி | .. | 1 |
| 4. கோயம்புத்தூர் | .. | 4 |
| 5. பெரியார் | .. | 1 |
| மொத்தம் | .. | 9 |

97—

நகராட்சிகளில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற அரசு மான்யம்.

வினா எண் 7311—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழகத்தில் உள்ள நகராட்சிகளில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற அரசு எவ்வளவு மான்யம் வழங்குகின்றது?

விடை—

[1990 ஏப்ரல் 24

தமிழகத்தில் உள்ள நகராட்சிகளில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற அரசு மான்யம் வழங்குவதில்லை.

98—

நயினார் கோயில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கல்.

வினா எண் 7516—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில், நயினார்கோவிலில் உள்ள உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுமா?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி நயினார்கோவிலில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கான கருத்துரு சம்மந்தப் பட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவின் பரிந்துரைக்கேற்பவும், அரசின் நிதி நிலைமைக்கு ஏற்பவும் பரிசீலிக்கப்படும்.

99—

காடர்ந்தகுடி, கீரம்பாண்டி ஆகிய ஊர்களில் குடிசைத் தொழில் பயிலகங்கள்.

வினா எண் 7525—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி நயினார்கோவில் ஒன்றியத்தில் காடர்ந்தகுடி, கீரம்பாண்டி ஆகிய ஊர்களில் தையல் பயிற்சி மையங்கள் மற்றும் குடிசைத் தொழில் பயிலகங்கள் தொடங்கப்படுமா?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி நயினார்கோவில் ஒன்றியத்தில் காடர்ந்தகுடி, கீரம்பாண்டி ஆகிய கிராமங்களில் தையல் பயிற்சி மையங்கள் அல்லது குடிசைத் தொழில் பயிற்சி மையங்கள் தொடங்கும் திட்டம் ஏதும் இல்லை.



1990 ஏப்ரல் 24]

100—

பரமக்குடியிலிருந்து தடுத்தலான் கோட்டை, செம்பிலான்குடி வழியாக பிரிசை வரை நகரப் பேருந்து.

வினா எண். 7586—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி பரமக்குடி ஒன்றியம், தடுத்தலான்கோட்டை, செம்பிலான்குடி, பிரிசை ஆகிய ஊர்களுக்கு நகரப் பேருந்து விடப்படுமா?

விடை—

பரமக்குடியிலிருந்து பிரிசை வழி தடுத்தலான்கோட்டை செம்பிலான்குடி தூரம் 36.5 கி. மீ. ஆகும். இது நகரப் பேருந்து ஓட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட தூரமான 30.0 கி.மீ. காட்டிலும் அதிகமாக உள்ளது. எனவே இவ்வூர்களுக்கு பேருந்து இயக்க இயலாது. மேலும் பிரிசை என்ற கிராமம் பரமக்குடி-வீரசோழன் பிரதானச் சாலையிலிருந்து 3.5 கி.மீ. தூரத்தில் உள்ளது. செம்பிலான்குடி கிராமம் தடுத்தலாங்கோட்டைக்கும் பிரிசைக்கும் இடையில் பிரிந்து 2.0 கி.மீ. தூரத்தில் உள்ளது. இச்சாலையில் உள்ள 5.5 கி.மீ. தூரம் முழுவதும் போக்கு வரத்து அற்ற மண் சாலையாகவும் பேருந்து செல்ல தகுதியற்ற நிலையிலும் உள்ளது.

101—

ஆதி ஆந்திர மக்களுக்குப் பட்டா.

வினா எண் 493—திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை பூங்கா நகர் தொகுதியில் பெருமாள் கோயில் தோட்ட தெருவில் வசிக்கும் ஆதி ஆந்திர மக்களுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) கோயில் நிலங்களை இனாமாக பட்டா வழங்க இந்து சமய அறநிலைய சட்ட விதிகளில் இடம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

102—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

வினா எண் 1014—திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை ஒன்றியம், சாவல்பூண்டி கிராமத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்ட குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

ஆம். சாவல்பூண்டி கிராமத்தில் குறைந்த பட்ச தேவைத் திட்டத்தின் கீழ் 1990–91-ல் குடிநீர் திட்டம் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

103—

ரணச் சிகிச்சைப் பிரிவு :

வினா எண் 1739—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேலூர் சட்ட மன்றத் தொகுதி வாச்சாம்பட்டி கீழ்வளவு கிராமத்திலுள்ள கால்நடை மருந்தகத்திற்கு தேவையான ரணச் சிகிச்சைப் பிரிவு எப்போது கட்டி முடிக்கப் பெறும் ?

விடை—

நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு இல்லாததால் வாச்சாம்பட்டி கீழ்வளவு கிராமக் கால்நடை மருந்தகத்தில் ரணச் சிகிச்சைப் பிரிவு வரும் நிதியாண்டில் தகுந்த அரசாணை பெற்று கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

104—

மயிலாடுதுறை அரசு மருத்துவமனை.

வினா எண் 2373—திரு. ஏ. செங்குட்டுவன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மயிலாடுதுறை அரசு மருத்துவமனை ஸ்பெஷல் வார்டில் பத்து படுக்கைகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?



விடை—

(அ) இதற்கான சூழ்நிலைகள் ஏற்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

105—

செங்கல்பட்டு—மரக்காணம் போக்குவரத்து.

வினா எண் 3008—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கல்பட்டு—மரக்காணம் வரை பல்லவன் போக்குவரத்தால் ஓட்டப்பட்ட 81-சி தடம் தந்தை பெரியார் போக்குவரத்தால் நிறுத்தப்பட்டு உள்ளது என்பது உண்மையா ?

(ஆ) இந்த தடத்தில் மீண்டும் டி. பி. டி. சி. மூலம் பஸ் விடப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) முன்னாள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் (புறநகர்) செங்கல்பட்டு, மரக்காணம் (வழி) புதூர், தர்ச்சூர், அரியனூர், செய்யூர், இயக்கி வந்த பேருந்துக்கு பதிலாக தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் சென்னை—மரக்காணம் (வழி) செங்கல்பட்டு, மதுராந்தகம், சோத்துப் பாக்கம், செய்யூர் நேர்டி பேருந்து 6 நடைகள் இயங்கு கிறது.

106—

பாலம் கட்டுதல்.

வினா எண் 3402—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, கொன்றைக்காடு, ஆணைக் காடு இடையில் வாரியில் (இடையில்) ஒரு பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

107—

பாலம் கட்டுதல்.

வினா எண் 3405—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி அலிவலம் ஆதி திராவிடர் பள்ளிக்கருகில் சி. எம். பி. வாய்க்காலில் ஒரு பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

108—

மேலப்பாளையம் அரசினர் மருத்துவமனை.

வினா எண் 3467—திரு. சு. குருநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், மேலப்பாளையம் அரசினர் மருத்துவமனையில் மூடப்பட்டுள்ள வார்டுகளை திறக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

விடை—

இதுநாள் வரை இம்மருத்துவமனையில் எந்த மருத்துவப் பகுதியும் மூடப்படவில்லை என்பதால் இக் கேள்விக்கிடமில்லை.

109—

பெண் மருத்துவர் எண்ணிக்கை.

வினா எண் 3674—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடி பெண்கள்/குழந்தைகள் மருத்துவமனையில் பெண் மருத்துவர் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.



110—

புதிய காவல் நிலையம்.

வினா எண் 4848—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி தாலுகாவில் நீராவி என்னுமிடத்தில் ஒரு புதிய காவல் நிலையம் திறக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும் ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி தாலுகாவில் உள்ள, நீராவி என்னும் இடத்தில் புதிய காவல் நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

111—

ஆதி திராவிடர் நலத்துறை மாணவர் விடுதிக்குப் புதிய கட்டிடம்.

வினா எண் 3850—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முதுகுளத்தூர் தாலுகா அலங்கானூர் ஆதி திராவிட நலத் துறை மாணவர் விடுதிக்குப் புதிய கட்டிடம் கட்ட திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது புதிய கட்டிடம் கட்டப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

[1990 ஏப்ரல் 24

112—

குடிநீர்த் தொட்டி.

வினா எண் 4033—திரு. பொ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை — சம்புவராயர் மாவட்டம் நார்த்தாம்பூண்டியில் குடிநீர் தொட்டி போதிய அளவில் இல்லையென அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) அதன் மீது அரசு எடுக்க உள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.

113—

ஐஸ் உற்பத்தி நிலையம்.

வினா எண் 4657—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரையில் ஐஸ் உற்பத்தி நிலையம் செயல்படாததை மீண்டும் செயல்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

114—

புறம்போக்கு நிலத்தை மீனவ மக்களுக்கு வழங்குதல்.

வினா எண் 4664—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;



1990 ஏப்ரல் 24]

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஏரிப்புறக்கரை சர்வே நம்பர் 57/2 இல் உள்ள அரசின் புறம்போக்கு நிலம் 3 ஏக்கரை, ஏழை மீனவ மக்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு இலவசமாக வழங்கும் செயற்குறிப்பு, அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

115—

விசை பம்பு பராமரிப்பாளர்கள்.

வினா எண் 4681—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளின் விசை பம்பு பராமரிப்பாளர்களை நிரந்தர பணியாளர்களாக நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

116—

கால்நடை மருத்துவ கிளை நிலையங்கள்.

வினா எண் 4712—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் கால்நடை மருத்துவ கிளை நிலையங்கள் எத்தனை ?

(ஆ) இதில் இயங்குகின்ற கால்நடை மருத்துவ கிளை நிலையங்கள் எத்தனை ?

(இ) மூடிக் கிடக்கின்ற கால்நடை மருத்துவ கிளை நிலையங்கள் எத்தனை ?

விடை—

(அ) கால்நடை கிளை நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 1,200.

(ஆ) இயங்குகின்ற, கால்நடை கிளை நிலையங்களின் எண்ணிக்கை 1,010.

(இ) மூடிக் கிடக்கின்ற கால்நடை கிளை நிலையங்களின் எண்ணிக்கை 190.

117—

திருவண்ணாமலை ஆலயம்.

வினா எண் 5103—திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை ஆலயத்தின் வருமானத்தைக் கொண்டு கல்விச் சாலை, மருத்துவமனை ஏற்படுத்துவது போன்ற பொது நலப் பணிகள் நடைபெறுகின்றனவா ?

விடை—

திருவண்ணாமலை ஆலயத்தின் வருமானத்தைக் கொண்டு, கல்விச் சாலை மற்றும் மருத்துவமனை முதலியன நடைபெற வில்லை. ஆனால், இத்திருக்கோயிலில் அன்பு இல்லம் மட்டும் நடத்தப்பட்டு வருகிறது.

118—

கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சியில் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 5146—திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

உலக வங்கி மூலம் திருவண்ணாமலை தொகுதி, கீழ் பெண்ணாத்தூர் பேரூராட்சியில் தொடங்கப்பட்டுள்ள குடிநீர்த் திட்டம் எப்பொழுது முடிவடையும் ?

விடை—

இத்திட்டம் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிவடையக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.



119—

வேளாண்மைக் கல்லூரி.

வினா எண் 5151—திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலைத் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

120—

ஊராட்சி தலைவர் தேர்தல் நடத்தப்பட வேண்டிய ஊராட்சிகள்.

வினா எண் 5228—திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ் நாட்டில் ஊராட்சி தலைவர் தேர்தல் நடத்தப் பட வேண்டிய ஊராட்சிகள் எத்தனை ?

விடை—

ஊராட்சி தலைவர் தேர்தல் நடத்தப்பட வேண்டிய ஊராட்சிகளின் எண்ணிக்கை 380.

121—

கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 5414—திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெருப்பூரில் உள்ள ஆதி திராவிட நலத் துறையின் கீழ் இயங்கும் நடுநிலைப் பள்ளிக்கு, கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

நெருப்பூரிலுள்ள ஆதி திராவிடர் நலத் துறையின் கீழ் இயங்கும் நடுநிலைப் பள்ளிக்கு அடுத்த நிதியாண்டில் கட்டிடம் கட்ட முன்னுரிமை அடிப்படையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

122—

கடைகள் கட்டுதல்.

வினா எண் 5517—திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி நகரில், சுவாமி நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான தாமரைக் குளத்தில் திருக்கோயில் வருமானத்தைப் பெருக்க கடைகள் கட்டுகின்ற திட்டம் அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) வேலை எப்பொழுது துவங்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூ. 41,20,000.

(இ) உத்தேச மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டவுடன் இப் பணி துவங்கப்படும்.

123—

குளம் குட்டைகளை நிரப்புதல்.

வினா எண் 5649—திரு. பி. மாரப்பன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காங்கேயம் தொகுதியில், பி.ஏ.பி. வாய்க்கால் மூலம், 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விட்டு, குளம் குட்டைகளை நிரப்பும் திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

124—

சுற்றுலா மையம்.

வினா எண் 5650—திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காங்கேயம் தொகுதியில் உள்ள சிவன் மலை, சென்னி மலை, மலைக் கோயில்களைச் சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

125—

கருங்காளியம்மன் கோயில்.

வினா எண் 5653—திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காங்கேயம் தொகுதி, பரஞ்சேர் வழி கிராமத்தில் உள்ள கருங்காளியம்மன் கோயிலை அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

பெரியார் மாவட்டம், காங்கேயம் தொகுதி, பரஞ்சேர் வழி அருள்மிகு கருங்காளியம்மன் திருக்கோயில் இந்துசமய அறநிலையத் துறை ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டு கோவை துணை ஆணையரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

126—

சத்துணவுக் கூடம் அமைத்தல்.

வினா எண் 5659—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடி தொகுதி, பி. புத்தூரில் சத்துணவுக் கூடம் அமைக்கப்படுமா ?

விடை—

மேற்கண்ட ஊரில் ஏற்கனவே பால்வாடி மையம் இயங்கி வருகின்றது.

127—

கைத்தறி தொழில் நுட்ப பட்டப் படிப்பு.

வினா எண் 5728—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) இந்திய கைத்தறி வளர்ச்சித் தொழில் நுட்பக் கழகம் கைத்தறித் தொழில் நுட்பப் பட்டப் படிப்பு (3 வருடம்) நடத்தி வருவதில் தமிழக மக்கள் எத்தனை பேர் (1988—89)-ல் பயின்றுள்ளனர் ?

(ஆ) பயின்ற பின் தமிழகத்தில் வேலையில் அமர்த்தப் பட்டுள்ளனரா ?

விடை—

(அ) 12 மாணவர்கள் பயின்றுள்ளனர்.

(ஆ) இல்லை.

128—

கால்நடை மருந்தகம்.

வினா எண் 5947—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம் அதம்பை கிராமத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



விடை—

இல்லை.

129—

உதவி கால்நடை மருந்தகம்.

வினா எண் 5952—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகத்தில் உதவி கால்நடை மருந்தகம் தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

130—

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் பள்ளி இறுதித் தேர்வு எழுதிய மாணவர்கள்.

வினா எண் 5993—திரு. எஸ். பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1987–88 ஆம் ஆண்டில் தமிழக அரசு ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் பள்ளி இறுதித் தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அதில் தேர்ச்சி பெற்றவர்கள் எவ்வளவு பேர்கள் ?

விடை—

(அ) 1987–88 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் பள்ளி இறுதித் தேர்வு எழுதிய மாணவர்கள் எண்ணிக்கை 5,006.

(ஆ) அதில் தேர்ச்சி பெற்றவர்கள் எண்ணிக்கை 1,376.

131—

சுற்றுலா மையம்.

வினா எண் 6323—திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், கொடுமணலில் சுற்றுலா மையம் ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) காங்கேயம் தொகுதி சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் கொடுமணலில் சுற்றுலா மையம் ஆரம்பிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

132—

ஜீப் வழங்குதல்.

வினா எண் 6372—திரு. சு. குருநாதன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வன இலாகாவிலுள்ள எல்லா ரெகுலர் ரேஞ்சுகளுக்கும் ஜீப் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) எத்தனை ரேஞ்சுகளுக்கு ஜீப் வழங்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மொத்தம் 25 சரகங்களுக்கு இதுவரை ஜீப் வழங்கப்பட்டுள்ளது.



133—

பை-பாஸ் ரோடு.

வினா எண் 6447—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடி நகருக்கு பை-பாஸ் ரோடு போடப்படுமா ?

விடை—

பரமக்குடி நகருக்கு பை-பாஸ் ரோடு போடும் திட்டம் எதுவும் தற்பொழுது இல்லை.

134—

தார் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 6569—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம்—அதம்பை கரம்பக்குடி வழி அனந்தகோபாலபுரம், மேல கொள்ளுக்காடு சாலை ஆர். ஆர். திட்டத்தின் கீழ் தார் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

135—

காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம்.

வினா எண் 6676—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம், திருப்பூரில் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் துவக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

விடை—

(அ) கோவை மாவட்டம், திருப்பூரில் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் துவக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

136—

மூத்திரக் கோளாறு சிகிச்சைக்கு தனிப் பிரிவு.

வினா எண் 6730—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அனைத்து மாவட்ட மருத்துவ நிலையங்களிலும் மூத்திரக் கோளாறு சிகிச்சைக்கு என தனிப் பிரிவு அமைக்கப் பட்டுள்ளனவா ?

(ஆ) இல்லையெனில், எந்தெந்த மாவட்ட மருத்துவ மனையில் இந்த வசதியில்லை ?

(இ) எல்லா மாவட்ட மருத்துவ மனைகளிலும் இந்த வசதி செய்து தர அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

(அ) சேலம் மாவட்ட அரசு தலைமையிட மருத்துவ மனையில் மட்டுமே சிறுநீரக மற்றும் (ஆ) சிகிச்சைப் பிரிவு (Nephrology) இயங்கி வருகிறது.

(இ) இல்லை.

137—

தாம்பல் அணை.

வினா எண் 6844—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், அம்மாபேட்டை, பெண்ணை ஆற்றின் குறுக்கே உள்ள தாம்பல் அணையை செப்பனிடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?



விடை—

இந்த அணைக்கட்டு நல்ல நிலையில் உள்ளது என்றும் அதற்கு எந்த மராமத்தும் தேவையில்லை என்றும் தலைமைப் பொறியாளர் (சிறு பாசனம்) அறிக்கை தந்துள்ளார்.

138—

கடன் வழங்குதல்.

வினா எண் 6849—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குறைந்த வருமானமுடையவர்களின் வீடுகள் தீ விபத்து மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டால் அவர்களின் வீடுகளை புதுப்பித்துக் கட்ட ரூ. 5,000 வரை கடன் வழங்கும் திட்டம் தற்சமயம் அமுலில் உள்ளதா ?

விடை—

இல்லை.

139—

மாணவர் விடுதி கட்டுதல்.

வினா எண் 6891—திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேடசந்தூர் வட்டத்தில் இயங்கி வரும் ஆதி திராவிட மாணவர் விடுதியில் வேடசந்தூர், குஜிலியம்பாறை, எரியோடு, வடமதுரை ஆகியவற்றிற்கு மாணவர் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு எடுத்துக் கொள்ளப் படுமா ?

விடை—

(அ) அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**140—**

நடுநிலைப் பள்ளியாக மாற்றுதல்.

வினா எண் 7067—திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருத்துறைப்பூண்டி அபிஷேகக் கட்டளை ஆதி திராவிட நலத் துறை ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்ற அரசுக்கு உத்தேசம் உள்ளதா?

விடை—

தற்சமயம் இல்லை.

**141—**

அரசினர் உறைவிடப் பள்ளி.

வினா எண் 7155—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் ஒன்றியம் பர்கூர் ஊராட்சிக்குட்பட்ட சோழகணை குட்டையூர் ஒந்தனை போன்ற இடங்களில் ஆதி திராவிடர் நலத் துறை மூலம் அரசினர் உறைவிடப் பள்ளி திறக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும் ?

விடை—

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**142—**

அந்தியூர் அரசினர் மருத்துவமனை.

வினா எண் 7173—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் அரசினர் மருத்துவ மனைக்கு போதிய கட்டிடம், படுக்கை வசதிகள், குளியலறை, கழிப்பிட வசதி, பிண அறுவை கட்டிடம், மின்சார வசதி இல்லாது இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மேற்படி வசதிகள் செய்து தரப்படும் ?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**143—**

ஆதி திராவிடர் தொடக்கப் பள்ளி

வினா எண் 2186—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், புனவாசல் ஊராட்சி வாடிக் காட்டில் ஆதி திராவிடர் தொடக்கப் பள்ளி துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

**144—**

தாட்கோ மூலம் வீடு கட்டுதல்

வினா எண். 7283—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒத்தாகுதி குப்பாண்டம்பாளையம் கிராமம், கரல்வாடி புதூர் ஆதி திராவிடர்கள் காலனிக்கு தாட்கோ மூலம் வீடு கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வீடு கட்டும் வேலை ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) 1989-90-ல் தாட்கோ மூலம் ஆதி திராவிடர் களுக்கு வீடு கட்டும் திட்டம் ஏதும் தனியே இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

145—

ஊராட்சி பகுதி நேர காலரா மசுதூர்கள், எழுத்தர்களை முழு நேரப் பணியாளர்களாக மாற்றுதல்.

வினா எண் 7321—திரு. எஸ். டி. உதம்சந்த்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி பகுதி நேர காலரா மசுதூர்கள், எழுத்தர்களை முழு நேரப் பணியாளர்களாக நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

146—

பால்வாடி மையம்

வினா எண் 7463—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதி சோமநாதநகரில் பால்வாடி மையம் ஆரம்பிக்கப்படுமா?

விடை—

மேற்கண்ட ஊரில் 1—1—90 முதல் பால்வாடி மையம் இயங்கி வருகிறது.

147—

நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றுதல்.

வினா எண் 7469—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் அரியனந்தல், எம். நெடுங்குளம் ஆகிய ஊர்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப் படுமா ?



விடை—

இல்லை. இது தொடர்பாக கருத்துரு பெறப்பட்டால் அரசு பரிசீலிக்கும்.

148—

தினசரி காய்கறி சந்தை.

வினா எண் 7520—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள தினசரி காய்கறி சந்தையை திரௌபதி அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள இடத்தில் கட்ட அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

149—

மருதூர் இராமத்தில் கால்நடை மருந்தகம்

வினா எண் 7527—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, நயினார்கோவில் ஒன்றியத்தில் மருதூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கப்படுமா ?

விடை—

இல்லை.

150—

### மயானத் திடலுக்குப் பாதை.

வினா எண் 7591—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள காக்காய் தோப்பு மயானத் திடலுக்குப் பாதை அடைப்பட்டு இருப்பது அரசின் கவனத்தில் வந்துள்ளதா ?

(ஆ) அதனைத் திறக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள காக்காய் தோப்பு மயானத்திற்குச் செல்லும் நான்கு வழிகளில் எதுவும் அடைக்கப்படவில்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.

[குறிப்பு : ஓர் உரையின் துவக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 2, தகவல் கோரல்.

(அ) காமராசர் மாவட்டத்தில் சுந்தரராஜபுரம், கிருஷ்ணாபுரம், மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஒரு கொலையை யொட்டி மக்களிடையே ஏற்பட்டுள்ள கலவர நிலை குறித்து.

*திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காமராஜர் மாவட்டத்தில் சுந்தரராஜபுரம் கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலே கிராமத் தகராறு என்ற முறையில் பிரச்சினைகள் உருவாகியிருந்தாலும்கூட, ஒரு கொலையின் காரணமாக ஏற்பட்ட சந்தேகத்தின் காரண மாக அங்கே இருக்கிற மக்களிடத்தில் ஏற்பட்ட பதட்ட நிலையின் காரணமாக கிராமத் தகராறு என்று முதலிலே



அறிவிக்கப்பட்டிருந்தாலும், அதற்குப் பின்னால் அதிலே ஜாதி யும் கலந்து கொண்டிருக்கிறது என்று கேள்விப்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தக் கொலையின் சந்தேகத்தின் காரணமாக எழுந்த நிலையில் இன்றைக்கு அங்கே மிகப் பெரிய பாதிப்புக்கு மக்கள் உள்ளாகி இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டியாக வேண்டும். பல ஏக்கர் பருத்தி பயிர் செய்யப்பட்ட நிலங்கள் அத்தனையும் பாழ் படுத்தப்பட்டிருக்கிறது. பல பம்பு செட்டுகள் பாழாக்கப் பட்டிருக்கின்றன. தென்னை மரங்கள் சில, அடிப்படை நிலையிலேகூட அழிக்கப்பட்டுள்ளதாக தந்திகள் தந்திருக் கிறார்கள். அதைப்போல பல்வேறு இடங்களிலே இருக்கிற வீடுகள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. இப்படி ந்தப் பிரச்சினை ஒரு பயங்கரமான கலவரமாக ஏற்பட்டு, ஒவ்வொரு கிராமமாகப் பரவி, பக்கத்திலே உள்ள கிராம மக்கள் ஒருவருக்கொருவர் துணை செய்யும் நிலைமை ஏற்பட்டிருப் பதாகவும், இப்போது தகவல் வந்து கொண்டிருக்கிறது. நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை ஒன்று கேட்டுக் கொள்வேன். இந்தப் பிரச்சினை எழுந்த நேரத்தில் நம்முடைய காவல் துறை உரிய நேரத்தில் உடனடியாக நடவடிக்கை எடுத்து இருப்பார்களானால் இப்படிப்பட்ட நிலைகளைத் தவிர்த் திருக்க முடியும்.

ஆனால் காவல் துறைக்கு இந்தத் தகவல்கள் கொடுக்கப் பட்டு, இந்தக் கொலையில் ஏற்பட்டுள்ள சந்தே கத்தைத் தெரிவித்த பின்னரும், பல மணி நேரமானதற்குப் பின்னரும், காவல் துறை நடவடிக்கை மிக மந்தமாக இருந்த காரணத்தாலே இந்தச் சூழ்நிலை உருவாகி, பதட்ட நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. பதட்ட நிலை ஏற்பட்டதற்குப் பின்னாலேயாவது காவல் துறை கொஞ்சம் சுறுசுறுப்பாகி, கொலை நடைபெற்றதற்கான காரணங்களை அல்லது கொலை யாருடைய நிலையால் ஏற்பட்டது என்று பார்த்து, யாரையாவது கைது செய்து, அந்த மக்களிடத்திலே ஒரு நிலையைத் தெளிவு படுத்தி இருப்பார்களானால், பயங்கரமான கலவரம் உண்டாவதைத் தடுத்திருக்கலாம். ஆனால், காவல் துறை எடுத்துக் கொண்ட நடவடிக்கை பற்றி அங்கே இருக்கிற வர்கள் சொல்கிற பேச்சைக் கேட்கும்போது, மிக மந்தமான நிலையிலே ஏதோ கொலை நடைபெற்றது என்று சொன்ன நேரத்தில், கொலை செய்யப்பட்டது என்று தெரிந்ததற்குப் பின்னரும், பல மணி நேரங்களுக்குப் பின்னாலே, விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்னாலே, அங்கே இருக்கிற கிராம மக்கள் பகை உணர்ச்சி வளர ஆரம்பித்து, ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ளும் நிலை, பொருள்களை சேதப்படுத்தி கொள்ளும் நிலைமைகள் உருவாகியிருக்கிறது. இன்றைக்கு அதிகமான அளவுக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி வருகிற நேரத்திலே, தாழ்த்தப்பட்ட மக்க ளாலே பல பாதிப்புகள் எங்களுக்கு உருவாகி இருக்கின்றன

என்று மற்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் தந்திகள் கொடுத்த
வண்ணம் இருக்கிறார்கள். எனவே இந்தச் சூழ்நிலைகள்
தவிர்க்கப்பட வேண்டுமானால், அந்த மாவட்டத்திலே இருக்கிற
காவல் துறையை பலப்படுத்தியாக வேண்டும். இப்படிப்பட்ட
நேர்வுகள் ஏற்படுகிற நேரத்திலே அருகிலே உள்ள பெரிய
நகரமாக இருக்கிற மதுரை அல்லது திருநெல்வேலியில் உட
னடியாக நடவடிக்கை எடுக்க காவல் துறையை ஏற்படுத்தி
வைக்க வேண்டும். ஏனென்றால் தொடர்ந்து அந்தப் பகுதி
யிலே மூன்று இடங்களிலே கலவரங்கள் உருவாகிற சூழ்நிலை
உருவாகியிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.
போடி வந்ததற்குப் பின்னாலே திண்டுக்கல் வந்தது.
இப்படி ஒவ்வொன்றாக வந்து கொண்டிருக்கும் நிலைமையில்
நாம் கொஞ்சம் காவல் துறையை அதிகமான அளவுக்கு பலப்
படுத்தி, இப்படிப்பட்ட நிலைமைகள் வரும்போது உடனடி
யாக நடவடிக்கை எடுக்க காவல் துறையை ஏற்படுத்தினால்,
அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் மூலமாகத்தான் இப்படிப்
பட்ட கொலைகளையும், உயிர்ச் சேதங்களையும், பொருட்
சேதங்களையும் தடுக்கக் கூடிய நிலைமை ஏற்படும். எனவே
மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதில் உடனடியாகத் தலை
யிட்டு, இந்தப் பிரச்சினையை தீர்க்க காவல் துறையில் துரித
நடவடிக்கை எடுத்து, அங்கே ஏற்பட்டுள்ள கொலைக்குப் பரி
காரம் காணுவதோடு, அங்கே பொது மக்களுக்கு ஏற்பட்டிருக்
கிற பல்வேறு பிரச்சினைகளுக்கும், அவர்கள் சாகுபடி செய்த
பயிர்களுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கும் நிவாரணம் தரும்
அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி,
அதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

10–10 மணி

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்
களே, காமராசர் மாவட்டத்திலே சுந்தரராஜபுரம், கிருஷ்ணா
புரம் என்று சொல்கிற இந்த இரண்டு ஊர்களுக்கும் இடையிலே
19 ஆம் தேதி ஒருவர் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார்.
இதனுடைய ஆரம்பத்தை—மற்றவைகளை எல்லாம் எதிர்க்
கட்சித் தலைவர் அவர்கள் சொல்லிவிட்ட காரணத்தினால்—
ஒரு நிமிடம் மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஆக சுந்தரராஜ
புரத்துக்கும், கிருஷ்ணாபுரத்துக்கும் இடையிலே ஒருவர்
கொலை செய்யப்பட்டு கிடந்தார் என்றால் உடனடியாக
அந்தச் சடலத்தைக் கைப்பற்ற வேண்டிய புலன் விசாரணை
யிலே அரசாங்க அதிகாரிகள் இறங்குவதற்கு தாமதம் ஆகி
இருக்கிறது. எனவே மக்கள் கூடி இருக்கிறார்கள். மக்கள்
கூடி அங்கே ஒரு பரபரப்பு ஏற்பட்டு இருக்கிறது. கொலை
யுண்டவர் சுந்தரராஜபுரத்தைச் சேர்ந்தவராக இருந்த கார
ணத்தினாலே சிலர் கிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்தவர் கொன்று
இருப்பார்களோ என்று ஐயம் ஏற்பட்டது. ஆனாலும் கொலை





யுண்டவருடைய தந்தை கிருஷ்ணாபுரத்துக்காரர்களும் நாமும்
ஒன்றாக இருக்கிற நேரத்திலே அவர்கள் ஆளைக் கொலை
செய்வதற்கு எந்த வாய்ப்பும் இல்லை ; எனவே என்னிடம்
பிணத்தைக் கொடுத்து விடுங்கள என்று தந்தை சொன்ன போதும்
கூட பிணத்தைக் கொடுப்பதிலே கால தாமதம் ஆனதினாலே.
மீண்டும் கூட்டம் கூடுகிறது. பிறகு டி. எஸ். பி. வருகிறார்.
போலீஸ் நாய் வரவழைக்கப்படுகிறது. போலீஸ் நாய் நேரே
எந்த ஊர்க்காரர் செத்தாரோ அந்த சுந்தரராஜபுரத்துக்கே
போய்விடுகிறது. எனவே கிருஷ்ணாபுரத்துக்கு இதிலே சம்
பந்தம் இல்லை என்று விட்டுவிடுகிறார்கள். ஆனாலும் இந்தப்
பிரச்சினை நடந்துகொண்டு இருக்கிற நேரத்திலேயே
உணர்ச்சி அதிகப்பட்டு சுந்தரராஜபுரத்துக்கு ஆதரவாக
கணபதி சுந்தரராஜபுரம் என்று சொல்லுகின்ற ஊரைச் சேர்ந்த
வர்கள் கிருஷ்ணாபுரத்து மக்களுடைய சொத்துகளை அழிக்க
ஆரம்பிக்கிறார்கள் ; பம்பு செட்டுகளை உடைக்க ஆரம்பிக்
கிறார்கள் ; தென்னை மரங்களை வெட்ட ஆரம்பிக்கிறார்கள்.

இப்படி இந்தச் சூழ்நிலை இருக்கிறபோது—இது 19 ஆம்
தேதி, பிறகு கலைந்து போகிறார்கள். 20 ஆம் தேதி கிருஷ்ணா
புரத்தைச் சேர்ந்த நாலு பேரை கைது செய்கிறார்கள். ராம
சுந்தரம், கலைச் செல்வம், நம்பிராஜன், மற்றும் ஒருவர்—
இந்த நாலு பேரை கைது செய்கிறார்கள் மீண்டும் அங்கே பரபரப்பு
ஏற்படுகிறது. இரவு போலீஸ் அங்கே மேலும் புலன் விசாரணைக்கு
வருகிறபோது பெண்கள் எல்லாம் சோந்து அந்தப்
போலீஸை உள்ளே வரவிடாமல், எங்கள் ஊர்க்காரப்
பையன்களைத் திருப்பிக் கொண்டுவந்து விடுங்கள் என்று
சொல்கிறார்கள். 1 மணிக்கு அந்த போலீஸ் அந்த நாலு
தோழர்களைக் கொண்டுவந்து சேர்க்கிறார்கள். அதன் பிறகு
அந்த கிருஷ்ணாபுரத்துக்காரர்கள எங்களுடைய சொத்துகள்
எல்லாம் நாசம் ஆகிவிட்டது ; எவ்வளவு சொத்து நாசம் ஆகி
இருக்கிறது என்று பார்வையிட வாருங்கள் என்று அதிகாரிகளைக்
கேட்கிறார்கள். அதிகாரிகள் போகாத காரணத்தினாலே சொத்
துக்கள் ஏறத்தாழ 15 அல்லது 20 இலட்சம் ரூபாய் சொத்து
போய்விட்டது என்று அவர்கள் கணக்குப்படி தெரிகிற காரணத்
தினால் பஸ்ஸை மறிக்கிறார்கள். திருப்பியும் அந்தக் கலவரம்
வருகிறது. பஸ்ஸை மறித்த உடனேயே இவர்கள் பஸ்ஸை
மறிக்கிறார்கள் என்றால் இன்னொரு ஊர்க்காரர்கள் இவர்கள்
பஸ்ஸை மறிப்பதற்கு சாலையிலே இருக்கும்பொழுது,
இன்னும் சிலர், சேர்ந்து அவர்களுடைய ஊருக்குள்ளே புக
நினைக்கிறார்கள். உடனே சாலையிலே இருப்பவர்கள் அங்கே
ஓடுகிறார்கள். மோதல் ஏற்படுகிறது, அங்கே இருந்த நாலு
பெண்களைக் கைது செய்கிறார்கள். பெண்களை. ஏன் கைது
செய்கிறீர்கள் என்று கேட்டபோது மீண்டும் கலவரம் வருகிறது.
துப்பாக்கிச் சூடு நடக்கிறது. நாலு இளைஞர்கள் துப்பாக்கிச்
சூட்டிலே காயப்படுகிறார்கள். இன்னும் மேற்கொண்டும் பல
சொத்துக்கள் சேதங்கள் பற்றி எங்கள் கையிலே இருந்தாலும்

[திரு. குமரி அனந்தன்] [1990 ஏப்ரல் 24

நான் அவைகளை எல்லாம் விவரித்துக் கொண்டு போக
வில்லை. ஆனால், இந்த துப்பாக்கிச் சூடு நடந்தது நான்கா
வது நாள். அந்தப் பிணம் விழுந்து கடந்த நாலாவது நாள்
ஆக 19-ஆம் தேதி அந்தக் கொலை செய்யப்பட்டவருடைய
சடலம் அங்கே கிடக்கிறது. 22-ஆம் தேதி துப்பாக்கிச் சூடு
நடந்து இருக்கிறது. நாலு நாட்களுக்குள் இந்தக் கலவரம்
இவ்வளவு பரவாமல், என்றும் சகோதரர்களாக வாழ்ந்து
கொண்டிருக்க வேண்டிய சுற்றுப்புறத்தில் இருக்கின்ற மக்களை
எல்லாம் ஒன்றுபடுததி வைப்பதற்குரிய பெரிய முயற்சியிலே
தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்தியோ அல்லது பெரிய
அதிகாரிகள் அதற்கான முயற்சியிலே ஈடுபட்டோ இந்தக்
கலவரம் பரவாமல் செய்து இருந்தால் துப்பாக்கிச் சூடு நடந்து
இருக்காது. இன்று ஏழு பெண்கள் கைது செய்யப்பட்டு,—
கிருஷ்ணாபுரத்தைச் சார்ந்தவர்கள் தனுசு, சரஸ்வதி, கங்கேஸ்
வரி, புஷ்பவல்லி, சீதாலட்சுமி, சுந்தரம், தங்கம் என்று சொல்
கிற பெண்மணிகள் எல்லாம் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டு
இருக்கிறார்கள். அந்த ஊர்காரர்கள் சென்னைக்கே வந்து
இருக்கிறார்கள். அதை விரிவாகச் சொல்ல விரும்பாததற்குக்
காரணம் இப்படிப்பட்ட சம்பவங்கள் தமிழ்நாட்டில் நடப்பது
என்பது கூடாது என்பதற்காகத்தான். இப்படிப்பட்ட சம்ப
வங்கள் நடக்கின்ற காலத்திலே குற்றம் செய்தவர் யாராக
இருந்தாலும் சில குலங்கள் அழிக்கப்படுகின்றன. சில இனங்
கள் அழிக்கப்படுகின்றன ; சிலர் பாதிக்கப்படுகிறார்கள்.
எனவே குற்றவாளி என்று சொல்கிறவர்கள் யார் என்று
கண்டுபிடிப்பதற்குப் பதிலாக, எந்த ஊர் என்று தேடுகிறார்கள்
பிறகு எந்த சாதி என்று தேடுகிறார்கள் ; இப்படிச் சண்டை
வளர்ந்து கொண்டே போகிற காரணத்தினாலே ஏற்கெனவே
நடந்துவிட்ட கலவரங்கள் எல்லாம் இருக்கின்ற காரணத்தி
னாலும், நேற்றே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய
கவனத்துக்கு 'நான் கொண்டுவந்தபோது அவர்கள், நான்
விசாரித்துச் சொல்கிறேன்' என்று சொன்னார்கள். என்னு
டைய பணிவான வேண்டுகோள் என்னவென்றால் குற்றங்
களைக் கண்டுபிடிக்கட்டும் ; ஆனால் குற்றமற்ற மக்கள்
தண்டிக்கப்படக் கூடாது ; அவர்களுடைய சொத்துகள் அழிக்க
படக் கூடாது. என்றும் தொடர்ந்து எல்லோரும் நல்ல
முறையிலே வாழ்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயலவேண்டும் என்றும்
கேட்டு அமைகிறேன்.

10-15 மணி

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவை
தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டம் சேத்
தூர் காவல் நிலைய சரகத்திலே உள்ள சில கிராமங்களில்
ஆதி திராவிடர்களுக்கும் இன்னொரு இனத்தாருக்கும் இடையே



1990 ஏப்ரல் 24] [டாக்டர் மு. கருணாநிதி]

சில காலமாக விரோதம் இருந்து வருகிறது. 19-4-1990
அன்று இரவு சுந்தரராஜபுரத்தில் வசிக்கும் கருப்பையா
என்பவருடைய மகன் கோட்டமலையான் என்பவர் இராஜ
பாளையத்திலேயிருந்து பேருந்திலே வந்திறங்கி சுந்தரராஜ
புரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது அவரை யாரோ
குத்திக் கொலை செய்திருக்கிறார்கள். இது குறித்து வழக்கு
ஒன்று பதிவு செய்யப்பட்டது. வழக்கு விசாரணையின்போது,
சுந்தரராஜபுரத்தைச் சேர்ந்த ஆதி திராவிடப் பெருமக்கள்
அந்தக் கொலையை ஜாதி இந்துக்கள் சிலர் செய்திருக்கலாம்
என்று சந்தேகிப்பதாகவும், துப்பு துலக்குவதற்குப் போலீஸ்
நாயை வரவழைக்க வேண்டுமென்றும், இல்லையென்றால்
பிரேதத்தைப் பிரேதப் பரிசோதனைக்குத் தர மாட்டோம்
என்றும் கூறித் தடுத்து விட்டார்கள்.

தகவல் அறிந்து சிவகாசி ஆர். டி. ஓ. மற்றும் காவல் துறை
அதிகாரிகள் சென்று விசாரணை பற்றிய விவரத்தைக் கூறிய
பிறகு கூட்டம் கலைந்தது. பிரேதம் பரிசோதனைக்காக இராஜ
பாளையம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.
போலீஸ் மோப்ப நாய்களும் வரவழைக்கப்பட்டன. போலீஸ்
நாய் உடல் கிடந்த இடத்திலேயிருந்து கணபதி சுந்தரநாச்சி
யார்புரம் வரை சென்று திரும்பியது. கோட்டமலையான்.
கொலை வழக்கு விசாரணைக்காக ஆதி திராவிடர்களால்
சந்தேகிக்கப்பட்ட கிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்த கலைச்
செல்வன், இராமச்சந்திரன், நம்பிராஜன், இராமராஜன் ஆகிய
நான்கு பேரைக் காவல் துறையினர் 20-4-1990 அன்று இரவு
அழைத்துச் சென்று விசாரணை செய்தனர்.

அவர்களை உடனடியாக விடுதலை செய்யக் கோரி கிருஷ்ணா
புரத்தைச் சேர்ந்த 400-க்கும் மேற்பட்டவர்கள், இவர்கள்
இந்த விசாரணைக்கு உதவியாக வந்திருந்த கிராம நிர்வாக
அதிகாரி மற்றும் மூன்று தலையாரிகள் தங்கியிருந்த கட்டிடத்தை
வெளிப்பக்கமாகப் பூட்டி, கட்டிடத்தைச் சூழ்ந்து கொண்டு
கற்களால் எறிந்து, டியூப் லைட்டுகள், சைக்கிள் மற்றும் கதவு
ஆகியவற்றைச் சேதப்படுத்தினார்கள். கட்டிடத்திற்குள்ளே
இருந்த தலையாரி கோசலிங்கம் என்பவருக்குக் காயமேற்
பட்டது. இதற்கிடையிலே, சேத்தூர் காவல் நிலையத்திற்கு
விசாரிக்க அழைத்து வரப்பட்ட நான்கு பேரும் விசாரணை
முடிந்து விடுவிக்கப்பட்டார்கள்.

இந்த விவரத்தைக் காவல் துறையினர் எடுத்துக் கூறியதன்
பேரில், கட்டிடத்திற்குள் அடைக்கப்பட்டிருந்தவர்கள் விடு
விக்கப்பட்டார்கள். எனினும் அவர்கள், தாங்கள் தாக்கப்
பட்டது குறித்துப் புகார் கூறி, அதன் மீது ஒரு வழக்குப் பதிவு
செய்யப்பட்டது.

இதற்கிடையே 20–4–1990 இரவு சோலைச்சேரி வாசிகள்,
பரமேஸ்வரன் என்ற ஆதி திராவிடருடைய கரும்புத்
தோட்டத்திற்குத் தீ வைத்து, அதனால் ஐம்பதாயிரம் ரூபாய்
அளவிற்குச் சேதம் ஏற்பட்டு விட்டதாக புகாரின் ஒன்றின்
மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

21–4–1990 அன்று கிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்தவர்கள்
காலை 8 மணி முதல் 12 மணி வரை இராஜபாளையம்—தென்
காசி சாலையிலே சுந்தரநாச்சியார்புரத்திற்கு அருகிலே
உட்கார்ந்துகொண்டு, தங்களின் பயிர்களுக்கும், பம்பு
செட்டு மற்றும் விவசாயப் பொருட்களுக்கும் ஆதி திராவிட
இனத்தவர் ஏற்படுத்தியிருக்கும் சேதத்திற்கு நஷ்டயீடு கோரி
உட்கார்ந்து விட்டார்கள். இதைக் கேள்விப்பட்ட சுந்தரராஜ
புரத்தைச் சேர்ந்த 400-க்கும் மேற்பட்டவர்கள் பயங்கர
ஆயுதங்களோடு புறப்பட்டு வந்தார்கள். அவர்கள் வருவது
தெரிந்ததும், சாலையிலே அமர்ந்திருந்த ஜாதி இந்துக்கள்
கலைந்து சென்று விட்டார்கள். காவல்துறையினரும் சென்று
ஆதிதிராவிடர்களைத் தடுத்து விரட்டி விட்டார்கள். புதிய
பாதுகாப்பு ஏற்பாடுகளும் அங்கு செய்யப்பட்டன.

எனினும் 22–4–1990 அன்று பகல் ஒரு மணிக்கு மீண்டும்
சுந்தரராஜபுரம் கண்மாய் அருகில் ஜாதி இந்துக்கள் 400 பேரும்.
ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் 300 பேரும் பயங்கர
ஆயுதங்களோடு இரண்டு பிரிவுகளாக நின்றுகொண்டு மோது
வதற்குத்தயாராக இருந்தார்கள். காவல்துறையினர் மோதுதலைத்
தடுக்கக் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினார்கள். அப்படி
யும் கூட்டம் கலைந்து செல்லவில்லை. நிலைமை மோச
மாகவே போலீசார் வானத்தை நோக்கி பக்ஷாட் சுட்டார்கள்.
அதற்குப் பிறகு கூட்டம் கலைந்தது.

மீண்டும் அன்று மாலை ஐந்து மணி அளவில் கிருஷ்ணாபுரம்
கிராமத்தினர் சுமார் 500 பேர் சோலைச்சேரி கிராமத்தைத்
தாக்கச் சென்று கொண்டிருந்தார்கள். காவல் துறையினர்
தடுத்தும் கூட்டத்தினர் கேட்கவில்லை. போலீசார் ஒருவர்
வைத்திருந்த துப்பாக்கி மீதே அரிவாள் வெட்டு விழுந்தது.
உயிர்ச் சேதம் ஏற்படக் கூடாது என்பதற்காகக் காவல்
துறையினர் பின் வாங்கி விட்டார்கள். நான்கு புறம் இருந்
தும் கற்கள் வீசப்பட்டன. பாதுகாப்புப் பணியிலே ஈடு
பட்டிருந்த ஒரு துணைக் கண்காணிப்பாளர், ஒரு ஆய்வாளர்,
17 காவலர்கள் மற்றும் இரண்டு பெண் காவலர்கள், தாசில்
தார் ஆகியோர் கல்வீச்சிலே காயமடைந்தார்கள். கூட்டத்
தைக் கலைக்கக் கண்ணீர்புகைக் குண்டுகள் வீசப்பட்டன.
நான்கு பக்ஷாட்டுகள் வானை நோக்கிச் சுடப்பட்டன.
இவைகளிலே கூட்டம் கலையவில்லை, நிலைமை கட்டுக்கு
அடங்காமற் போகவே பின்னர் போலீசார் கூட்டத்தை
நோக்கித் தரையிலே எட்டு முறை சுட்டிருக்கிறார்கள்.



அதிலே ஏழு பேர் காயம் அடைந்தார்கள். காயம் அடைந்த
அனைவரும் இராஜபாளையம் மருத்துவமனையில் சிகிச்சை
பெற்று, தற்போது மதுரை அரசு இராஜாஜி மருத்துவ
மனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.
வழக்குப் பதிவு செய்யப்பட்டு 26 பேர்கள் கைது செய்யப்பட்
டிருக்கிறார்கள். மேலும் 22-4-1990 அன்று பகல் 11-00
மணிக்கு இராஜபாளையம் ஜெயரங்கா மில் அருகில்
ராமசாமி என்பவரை பால்சாமி மற்றும் 10 பேர்கள்
சேர்ந்து வெட்டி கொலை செய்துவிட்டார்கள் என்று பால
கிருஷ்ணன் கொடுத்த புகாரின் பேரில் மேலும் ஒரு வழக்குப்
பதிவு செய்யப்பட்டுள்ளது.

10-20 மணி

இதைக் கேள்வியுற்ற மங்காபுரத்தைச் சேர்ந்த ஆதிதிரா
விடர் 50 நபர் ஒன்று சேர்ந்து மதியம் 1¼ மணிக்கு தளவாய்
புரத்தைச் சேர்ந்த கணிதப்ப நாடார் மகன் முனியாண்டியை
இராஜபாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் மடக்கி
தோள்பட்டையில் அரிவாளால் வெட்டி ரத்த காயம் ஏற்
படுத்தி இருக்கிறார்கள். இது குறித்தும் வழக்குப் பதிவு செய்
யப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் சரக காவல்துறை துணைத் தலைவர்,
காமராசர் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், புதுச்கோட்டை
மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் மேற்பார்
வையில் தேவையான காவல் படையோடு பாதுகாப்பு பணிகள்
செய்யப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவரும் பாதிக்
கப்பட்ட பகுதிகளில் இருந்து தேவையான நடவடிக்கைகளை
எடுத்து வருகிறார்கள். மிகுந்த எச்சரிக்கையோடு நிலைமை
தொடர்ந்து கவனிக்கப்பட்டு வருகிறது. ஐ.ஜி.பி. ராஜமோகன்
அவர்களும் பாதுகாப்பு பணிகளைக் கவனிக்க இராஜபாளை
யம் சென்று இருக்கிறார்கள். இங்கே போலீசார் காலந்
தாழ்ந்து இந்தப் பிரச்சினையில் தலையிட்டார்கள் என்று
கூறப்பட்ட கூற்றினை ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஏனென்
றால், கோட்டமலையான் 19 ஆம் தேதி இரவு கொலையுண்ட
பிறகு அந்த செய்தி வந்தவுடன் 20 ஆம் தேதியே, போலீசார்
மறுநாள் காலையிலேயே அதுகுறித்து விசாரணையில் ஈடு
பட்டிருக்கிறார்கள். விசாரணை செய்ய வந்த போலீசாரை
தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள். இருபுறத்திலும் இங்கே
400 பேர், அங்கே 500 பேர் என்று கூடிக்கொண்டு போலீ
சாரை அவர்களுடைய பணியைச் செய்யவிடாமல் தடுத்தும்
கூட, மூன்று நாட்களுக்கு பிறகு தான் போலீசார் கண்ணீர்
புகை, துப்பாக்கிப் பிரயோகம் என்ற அளவிற்கு வந்திருக்
கிறார்கள் என்றால், போலீசார் எவ்வளவு லாவகமாக இந்தப்
பிரச்சினையை அணுகி இருக்கிறார்கள். எதுவும்
முடியாத நேரத்தில்தான் அதுவும் தரையை நோக்கி சுட்டார்கள்.

ஏழு பேர் காயமுற்றார்கள் என்ற அளவிற்கு நான்காவது
நாள்தான் போலீசார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்
பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். எனவே, 19 ஆம்
தேதி கொலை என்றால் 20 ஆம் தேதியே போலீசார் உடனடி
யாக நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அவர்கள்
பிரேத பரிசோதனைக்குக் கூட பிரேதத்தைத் தராமல் கூட்டத்
தினர் சுற்றி வளைக்கும்போது போலீசார் எப்படி அந்தப்
பிரச்சினையை அணுக வேண்டுமென்று, அணுக வேண்டி
யிருக்கும் என்பதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்
திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

எனினும், தொடர்ந்து அங்கே நிலைமை அமைதியாக
ஆக்குவதற்கான முயற்சிகளில் காவல்துறையினர் ஈடுபட்டிருக்
கிறார்கள். அதிகாரிகளும் ஈடுபட்டிருக்கிறார்கள். இதுபோன்ற
வகுப்புக் கலவரங்கள் நடக்காத வண்ணம் நாம் மாநிலம் தழு
விய அளவில் ஒரு முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று
ஏற்கனவே இந்த அவையில் கூறப்பட்டிருக்கிறது. அதற்கு
எல்லா உறுப்பினர்களும் தங்களுடைய வரவேற்பை தந்திருக்
கிறார்கள். அந்த முயற்சியிலே நாம் தொடர்ந்து ஈடுபட
வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த அளவிற்கு நான்
என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

(ஆ) கைத்தறி நெசவாளர்கள் தங்கள் கோரிக்கைகளை
வலியுறுத்தி நடத்தும் மறியல் போராட்டம் குறித்து.

*திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும்
இன்றைக்கு கைத்தறி நெசவாளிகள் ஒரு மறியல்
போராட்டத்தை நடத்துகிறார்கள். அதற்கு இருக்கிற
பிரதானகாரணம் தொழிலாளர் நலச் சட்டங்கள் என்று சொல்லக்
கூடிய முக்கியமான இரண்டு சட்டங்கள் அவர்களுக்கு இருந்
தும், அந்தச் சட்டங்கள் பயன்படுத்தப்படாமல், தேவையான
அளவிற்கு அந்தச் சட்டங்கள் அமலாக்கப்படாமல், கைத்
தறித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் உட்பட இந்தச்
சட்டத்தை இப்போது உடனே அமலாக்கினால் ரொம்பவும்
செலவு ஏற்படும் என்றெல்லாம் அவர்கள் எதிர்வாதம் கூறும்
ஒரு மோசமான நிலைமை உருவாகி இருக்கிறது.

தொழிலாளர் நலச் சட்டம் என்று சொல்லும்போது கைத்
தறி நெசவாளர்கள் பாதுகாப்புச் சட்டம் என்று இதே அவை
யில் சில ஆண்டுகளுக்கு முன்பு நிறைவேற்றப்பட்டு, எல்லா
கட்சியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சட்டம், அதை
முன்பிருந்த அரசு தகுந்த கவனத்தோடு நடைமுறைபடுத்தாத
பெரும் குறை ஏற்பட்டுள்ளது. அது நீடிக்கிறது. அதேமாதிரி
குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யும் சட்டம். மிகவும்





கீழ்மட்டத்தில் கிடக்கும்படியான, எந்த நியாயத்திற்கும்
உட்பட்ட கூலி முறை உருவாக்கப்படாத, குறைந்த கூலி
பெறக் கூடியவர்களுக்கு அடிக்கடி கூலி உயர்வு கொடுப்பதற்கு
இருக்கும்படியான மத்திய சட்டம், அந்தச் சட்டத்தின் கீழ்
நிர்ணயிக்கப்பட்டிருக்கிற கூலியும் அவர்களுக்கு அமலாக்கப்
படாமல் இருக்கிறது.

10-25 மணி

அதுமட்டுமல்ல, இந்தக் கூலிச் சட்டத்தில் என்ன நிர்ண
யிக்கப்பட்டு அரசு ஏற்றுக்கொண்டு பிரகடனப்படுத்தப்பட்டு
இருக்கிறதோ, அதற்குக் கீழே போய் அதைவிடக் குறைவான
கூலிக்கு ஒப்பந்தம் பண்ணும்படியான நிர்ப்பந்தம் அந்தக்
கைத்தறி முதலாளிகளாலேயும், பலவிதமான வெஸ்டட்
இன்டரஸ்ட் என்று சொல்லக்கூடிய அந்தத் தொழிலிலே
இருக்கும்படியான அப்படிப்பட்ட சக்திகளாலும் நிர்ப்பந்தத்
திற்கு ஆளாக்கப்பட்டு, ஹைகோர்ட்டிலே ஸ்டே போன்ற
தடைகளும் உருவாக்கப்பட்டு, அந்தக் கூலி நிறை
வேற்றப்படாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு மோசமான
நிலையைத் தொடர்ந்து அவர்கள் அரசுக்கு அப்பீல் செய்து
கொண்டிருக்கிறார்கள். இன்னும் அவர்களுக்கு இதிலே ஒரு
முடிவு ஏற்படவில்லை.

அதோடு இன்றைக்கு அவர்களுக்கு இருக்கிற கஷ்டம்
அரசுக்குத் தெரியும். இந்த அரசும் கைத்தறி நெசவாளர்களுடைய
முன்னேற்றத்திற்கான பல நடவடிக்கைகளை எடுத்துக்
கொண்டு வருகிற ஒரு அரசு. அதனால்தான் அவர்கள் நம்
பிக்கையோடு கேட்கிறார்கள். அவர்களுடைய நூல் விலையைக்
குறைப்பதற்கு, பயங்கரமான அளவிற்கு நூல் விலை ஏற்றத்
தினுடைய விளைவாக, அவர்களுடைய தொழிலிலே இன்
றைக்கு சீரழிவு ஏற்பட்டு, பல ஆயிரக்கணக்கான பேர்கள்
வேலையும் கிடைக்காமல், கிடைத்த வேலைக்கு நியாய
மான கூலியும் கிடைக்காமல் திணறுகிறார்கள். அந்தக்
காரணத்தாலேதான் அவர்கள் இன்றைக்கு மறியல் செய்கிறார்
கள். ஆகவே அவர்களுடைய சட்டபூர்வமான உரிமையை,
குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை விட்டுவிடாமல் அதிகாரி
களுக்கும் அரசு உத்தரவிட்டு, அதன் பக்கத்தில் தொழி
லாளர் நலச் சட்டங்களைப் பாதுகாக்கும் வகையில், அவர்
களுக்கு அதை உறுதி செய்யவும், இதுமாதிரி இந்தக் கைத்தறி
நெசவாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்துவதற்
கும் வேண்டிய நடவடிக்கையை அரசு எடுப்பதற்கு நமது
முதலமைச்சர் அவர்கள் எல்லா விதத்திலும் இன்றைக்கு
அதற்கு ஆதரவு தந்து அந்த நடவடிக்கைக்கு முன்வரவேண்டும்
என்று ஒரு விஷயத்தை நான் முன்வைக்கிறேன். இதைப்பற்றி
ஒரு தகுந்த பதில் எனக்குக் கிடைக்கும் என்று நான் எதிர்
பார்க்கிறேன்.

[1990 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்
படையில் விரைவில் இதுகுறித்து பரிசீலனை செய்து ஆவன
செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) கன்னியாகுமரி மரவட்டத்தில் அம்சியில் பள்ளிச் சிறுமியை
ஆசிரியர் கற்பழித்துள்ளது தொடர்பாக காவல் துறையினர்
உரிய நடவடிக்கை எடுக்காதது குறித்து.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 10 வயது பள்ளிச்
சிறுமி ஆசிரியரால் கற்பழிக்கப்பட்ட ஒரு கொடூரமான சம்
பவத்தை வேதனையோடு நான் முதல்வர் அவர்களுடைய
கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

விளவங்கோடு தாலுக்கா தேங்காய்ப்பட்டணத்தை
அடுத்து இருக்கிற அம்சியில் டி. முருகேசனுடைய மகள் தனம்
என்பவர் எஸ்.எம்.எஸ். ஆரம்பப்பள்ளியில் ஐந்தாவது வகுப்பு
படிக்கிறார். அவள் 10 வயது பள்ளிச் சிறுமி.
22-3-1990 அன்று, வியாழக்கிழமை மாலையிலே அதே பள்ளி
யில் ஆசிரியராக இருக்கிற டி. நல்லதம்பி என்பவர் அந்தப்
பள்ளிச் சிறுமியை நீ டியூசனுக்கு வா என்று சொல்லி, வீட்
டுக்கு அழைத்துச் சென்று ஐந்தாம் வகுப்பு படிக்கின்ற
அந்த 10 வயது பள்ளிச் சிறுமியைக் கதறக் கதற கற்பழித்
திருக்கிறார்.

இதுகுறித்து மறுநாள், அவருடைய பெற்றோருடன்
சென்று, பக்கத்தில் இருக்கிற காவல் நிலையத்தில் புகார் தரப்
பட்டு இருக்கிறது. காவல் நிலையத்தார் அந்தப் பள்ளிச் சிறுமி
யினுடைய பாவாடை உள்ளிட்ட பல்வேறு தடயங்களைப்
பெற்றிருக்கிறார்கள். அந்தப் பள்ளிச் சிறுமி மருத்துவமனை
யிலும் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார். இப்படி கற்பழிக்கப்
பட்டது உண்மையான சம்பவமாக இருந்தபிறகும் கூட,
அங்கேயிருக்கிற காவல் நிலைய அதிகாரிகள் அதைக் கற்
பழிப்பு என்ற வகையில் முறையாக நடவடிக்கை எடுப்பதற்
குப் பதிலாக கற்பழிப்பு முயற்சி என்ற வகையில் அந்த வழக்கை
ஓரளவு சமாளிப்பதற்கான நடவடிக்கையிலே ஈடுபட்டு
இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே அந்த மாவட்டத்திலே
இருக்கிற ஒரு வகுப்புவாத ஸ்தாபனத்தினுடைய தலைவ
ராக இருக்கிற டி. நல்லதம்பி என்பவருக்கு அந்தப் பகுதியிலே
இருக்கிற காவல் நிலைய அதிகாரிகள் மீது ஏற்கனவே இருக்கிற
நெருக்கத்தின் காரணமாக இப்படி மறைமுகமாக அவர்
களைத் தப்புவிக்கின்ற ஒரு முயற்சி நடப்பதாக அந்தப் பகுதி
யிலே உள்ள மக்கள் கருதுகிறார்கள். இதுகுறித்து ஏற்கனவே
அந்தப் பகுதியிலே இருக்கிற ஜனநாயக மாதர்சங்கம், அதை



1990 ஏப்ரல் 24] [திரு. செ. நூர்முகமது]

போல அந்தப் பகுதியிலே செயல்படுகின்ற அம்சி அம்மன்
தேவஸ்தானத்தைச் சார்ந்த பொதுமக்கள் எல்லாம் கடுமை
யான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசையும், அதி
காரிகளையும் வற்புறுத்தி பல்வேறு போராட்டங்களை நடத்
திக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே முதல்வர்
அவர்களை மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்வதெல்
லாம், பெண்களைப் பாதுகாப்பதற்காக பல்வேறு நட
வடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிற நேரத்தில்
பெண் குழந்தைகள் கொலை செய்யப்படக்கூடாது என்பதற்
காக தகுந்த ஏற்பாடுகளை வேதனையோடு முதல்வர் அவர்
கள் இந்த அவையிலே அறிவித்திருக்கிற இந்த நேரத்தில்,
நம்முடைய அரசு நடத்துகின்ற ஒரு இடத்திலே இப்படிப்பட்ட
பள்ளிச் சிறுமி ஒருவர் அவருடைய ஆசிரியராலே கற்பழிக்கப்
பட்ட கொடுமை நடந்திருக்கிறது. இது நம்மை எல்லாம்
வெட்கப்படச் செய்யக்கூடிய, வேதனைப்படச் செய்யக்கூடிய,
அரசுக்கு சவால் விடுகின்ற ஒரு செயல். ஆகவே இந்தச் செய
லிலே ஈடுபட்ட ஆசிரியர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்
கப்படவேண்டும். காவல்துறை நடவடிக்கை மாத்திரம் அல்ல.
அவர் ஆசிரியராக இருக்கின்ற பள்ளியில், நிர்வாக நடவடிக்கை
எடுக்கவேண்டும். அதற்குத் துணை நின்று இருக்கக்கூடிய அதி
காரிகள் மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
நான் முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்
கிறேன்.

10-30 மணி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி குறித்து
மாண்புமிகு உறுப்பினர் திரு. நூர்முகமது அவர்கள் குறிப்பாகச்
சொல்லுவார், என்னிடத்திலே உள்ள விவரமான விளக்கத்தை
அளிக்கலாம் என்றிருந்தேன். என்னிடத்திலே இருக்கின்ற
விவரமான விளக்க அமைப்பையும் அவரே சொல்லிவிட்டிருக்
கிறார். எனவே திரும்ப இந்த விஷயத்தைச் சொல்வதற்கு
என் வாய் கூசுகிறது. இருதயம் கூட கூசுகிறது. இருந்தாலும்கூட
இந்த நிகழ்ச்சியை யாரோ ஒரு வகுப்புவாதக் கட்சிக்கு அங்கே
தலைவராக இருக்கின்றவரோடு போலீஸீக்குத் தொடர்பு
இருக்கின்ற காரணத்தால்தான் அலட்சியப்படுத்தப்பட்டு விடும்
என்கிற சந்தேகத்தை மாண்புமிகு உறுப்பினர் எழுப்பினார்.
அந்த சந்தேகத்திற்கு எள் அளவும் இடம் இல்லாத அளவிற்கு
உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அவை
யிலே இந்தப் பிரச்சினை பேசப்பட்டது ஒன்றே அத்தகைய
நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக அமையும் என்ற உறுதியை
மாண்புமிகு உறுப்பினருக்கும், அவைக்கும் அளித்து அமைகிறேன்.

[1990 ஏப்ரல் 24

(அ) காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லியில் பிரதமரைச் சந்தித்துப் பேசியது குறித்த விவரம்.

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து இங்கே இருக்கின்ற சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் எல்லாம் எடுத்த ஏகமனதான முடிவின்படி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை தமிழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மரியாதைக்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலே நேற்றைய தினம் டெல்லியில் சந்தித்ததாக பத்திரிகை செய்திகள் எல்லாம் வந்திருக்கின்றன. இந்த முக்கியமான பிரச்சினையிலே அந்தத் தூதுக் குழு சந்தித்த விவரம் பற்றி, அதிலே கலந்து கொண்டு தமிழகத்தினுடைய ஏகமனதான குரலை எதிரொலிப்பதற்கும் வந்தவர்கள் யார் யார் என்பதைப் பற்றியும், அப்பொழுது அந்தத் தூதுக் குழுவிற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் என்ன உறுதி மொழியை அளித்திருக்கிறார்கள் என்பதையும் இந்த அவைக்கும், தமிழ் நாட்டிற்கும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று தங்கள் மூலமாக பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காணப்படாவிட்டால் அந்தப் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு விட்டுவிடுவதுதான் ஒரே வழி, எனவே இந்தப் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு விட வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்த தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியப் பிரதமர் மாண்புமிகு திரு. வி.பி. சிங் அவர்களை சந்திக்கலாம் என்ற முடிவினை 19, 20 ஆகிய தேதிகளில் கூடிய இம்மாமன்றத்தினுடைய கட்சித் தலைவர்கள் எடுத்த முடிவிற்கேற்ப 23 ஆம் தேதி இந்தியப் பிரதமரை சந்திப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டு 22 ஆம் தேதி காலை டெல்லிக்கு விமானம் மூலம் புறப்படுவது என்ற முடிவு எடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கட்சித் தலைவர்களை எல்லாம் சந்தித்து அந்தக் கட்சியிலே இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் யார் வருகிறார்கள் என்ற விவரங்களை எல்லாம் பற்றி, இந்தப் பயணத்திற்கு ஒரு ஒருங்கிணைப்பு ஏற்படுத்தும்படி நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் எனக்கு உத்திரவிட்டார்கள். அதன் அடிப்படையில் ஒவ்வொரு கட்சித் தலைவர்களையும், அநேகமாக யார் யார் உங்களுடைய உறுப்பினர்கள் வருகிறார்கள் என்று நான் கேட்டேன். காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவராக இருக்கிற திரு. குமரி அனந்தன், திரு. பாலசுப்பிரமணியம் அவர்களை அணுகிக் கேட்கப்பட்டது. எங்களுடைய கட்சியின் சார்பில்



1990 ஏப்ரல் 24] [திரு. துரைமுருகன்]

10-35 மணி

யார் யார் வருகிறார்கள் என்ற விபரத்தை நாங்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறோம் என்று தெரிவித்தார்கள். அதன்படி ஒரு பட்டியலைக் கொடுத்தார்கள் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. இராதா அவர்களை சந்தித்து உங்கள் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் யார் வருகிறார்கள் என்று நான் கேட்டேன். பல பேர் டெல்லியிலே இருக்கிறார்கள், இன்னும் சிலபேர் ஊரிலே இருக்கிறார்கள், சரியான விவரங்கள் இலலை, இருந்தாலும் வந்துவிடுவார்கள் என்று அவர் தெரிவித்தார். இருந்தாலும் அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை 22 ஆம் தேதி, அமைச்சரவைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. அதைக் கூட நான் இடையிலே விட்டுவிட்டு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. இராதா அவர்களோடு தொடர்பு கொண்டேன். தொலைபேசியில், வீட்டுக்கு. அப்பொழுது அவர் சொன்னார், பெரும்பாலான உறுப்பினர்கள் டெல்லியிலே இருக்கிறார்கள். நீங்கள் அங்கேயும் முயற்சித்துப் பாருங்கள் வருவார்கள் என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும் அவர்கள் தனியாகப் பார்ப்பதைப் போல் ஒரு முயற்சி நடைபெறுவதாகவும் அறிகிறேன் என்று அவர்கள் சொன்னார்கள். நான் திருப்பி அவர்களிடத்திலே சொன்னேன். இது கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்சினை. இதில் தமிழகத்தின் ஏகோபித்த குரல் ஒலிக்க வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். எனக்கு இதிலே மாறுபட்ட கருத்து இல்லை, இது தமிழகத்தின் ஒட்டுமொத்த பிரச்சினை. எனவேதான் மாண்புமிகு முதலமைச்சர் அழைத்த அந்த எதிர்கட்சி தலைவர்களுடைய கூட்டத்திற்குக் கூட நான் வந்து என் கருத்தைத் தெரிவித்தேன் என்று அவர்கள் பெருந்தன்மையோடு பதில் அளித்தார்கள். பிறகு நம்முடைய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மதிப்பிற்குரிய வீரையன் அவர்களைக் கேட்டேன். அவர்களுடைய தலைவர் நல்லசிவம் இராமேஸ்வரத்தில் இருந்தார்கள். இங்கிருந்து தொலைபேசிமூலம் பேசி, அவர் கட்சியின் சார்பிலே மதுரையிலிருந்து கார் அனுப்பி அவரை அழைத்துவர ஏற்பாடு செய்தார்கள். மாண்புமிகு அழகர்சாமி அவருடைய கட்சியைக் கேட்டேன். செல்வராஜ் டெல்லியிலே இருக்கிறார். நாங்கள் சொல்லியிருக்கிறோம். நீங்கள் தொடர்பு கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய தா. பாண்டியன் அவர்களோடு தொடர்பு கொண்டு பேசினேன். அவர்கள் தெரிவித்தார்கள். எனக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன. இருந்தாலும் அதைவிட முக்கியமான வேலை இந்த வேலைதான். எனவே என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். நான் விமான நிலையத்திற்கு வந்து விடுகிறேன் என்று சொன்னார்கள், நான் அப்போது எல்லோரிடத்திலும் சொன்னேன். தமிழக அரசின் சார்பில்தான் இந்தத் தூதுக் குழு செல்கிறது. எனவே உங்கள் அத்தனை பேர்களுக்கும் விமான டிக்கெட்டை தமிழக அரசே

எடுக்கிறது என்று சொன்னேன். தாராளமாக எடுத்து வையுங்
கள். நான் வந்துவிடுகிறேன் என்று சொன்னார். அதே போல
முஸ்லீம் லீக் கட்சியினுடைய தலைவர்களில் ஒருவரான
அப்துல் சமத் அவர்களைத் தொடர்பு கொண்டு பேசினேன்.
அவர் சொன்னார். என்னால் மாலையிலே வர முடியாது.
டிக்கெட்டை மட்டும் அனுப்பிவிடுங்கள், நான் காலையிலே
வந்து சேர்ந்துவிடுகிறேன் என்று சொன்னார். ஆக அதன்
அடிப்படையிலே இங்கிருந்து புறப்படுகின்றபோது காங்கிரஸ்
கட்சியினுடைய சார்பில் வருவார்கள் என்று என்னிடத்தில்
கொடுக்கப்பட்டது, திரு. குப்புசாமி, எம்.பி., திரு. தேவராஜன்,
எம்.பி., திரு. அருணாசலம், எம். பி., திரு. சிங்காரவடிவேல்,
எம்.பி., திரு. எம். பழனியாண்டி, எம்.பி., திரு. திண்டிவனம்
கே. ராமமூர்த்தி, எம்.பி., திருமதி ஜெயந்தி நடராஜன், எம்.பி.,
திரு. எல். பலராமன், எம். பி., திரு. என். சுந்தரராஜன்,
எம்.பி., திரு. ஈ.எம்.எஸ். பக்கீர் முகமது, எம்.பி., ஆகிய
இத்தனை எம்.பிக்கள் வருவார்கள் என்று தெரிவித்தார்கள்.
இதிலே அருணாசலம் ஏற்கனவே டெல்லியிலே இருந்துவிட்டார்.
பக்கீர் முகமது வரவில்லை. மற்றவர்கள் எல்லாம் வந்திருந்
தார்கள். அதே போன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பில் திரு. வை. கோபால்சாமி, திரு. டி. ஆர். பாலு, திரு.
தா. கிருஷ்ணன், திரு, விடுதலை விரும்பி, திரு. ஜே. எஸ். ராஜு,
திரு. மிசா. கணேசன், திரு, கே.கே. வீரப்பன், திரு, முகமது
சகி, திரு. ஜி. வெங்கட்டராமன் ஆகிய எம் பிக்கள் வந்திருந்
தார்கள். இங்கிருந்து நாங்கள் டெல்லிக்குப் புறப்படுவதற்கு
முன்னால் இந்தத் தமிழகத்தினுடைய ஒரு பெரிய நல்ல
காரியத்திற்காகப் போகிறோம் என்ற எண்ணத்தில் நம்
முடைய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் சாதிக்பாட்சா,
மாண்புமிகு கோ. சி. மணி, மாண்புமிகு பொன். முத்துராம
லிங்கம், மாண்புமிகு நேரு ஆகிய அமைச்சர்கள் எல்லாம்
வந்திருந்து எல்லோரையும் வழி அனுப்பி வைத்தார்கள். நான்
தனிப்பட்ட முறையிலே சொல்ல வேண்டுமானால் காங்கிரஸ்
கட்சியினைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிர
மணியம் அவர்கள் உடனிருந்து எல்லோரிடத்திலும் பேசு
வதற்கும் எப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற
அறிவுரை எல்லாம் வழங்கியது மட்டுமல்லாமல் அந்த
மெமோராண்டத்திலே காங்கிரஸ்காரர்கள் கையெழுத்தை
யெல்லாம் உடனிருந்து வாங்கி எங்களை உற்சாகமாக வழி
யனுப்பினார். அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்
கிறேன். பிறகு பத்திரிகைகளிலே படம் எடுத்தார்கள். வீடியோ
எடுத்தார்கள். எல்லாம் நடந்தது. பத்திரிகைகளுக்கெல்லாம்
கொடுத்தோம். பிறகு அரசாங்கத்தின் சார்பிலே டெல்லிக்குச்
சொல்லி அவர்கள் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள், சாப்
பாடு மற்றவற்றை எல்லாம் செய்யச் சொல்லிவிட்டு அங்கிருக்
கின்ற தமிழக இல்லத்திலிருந்து கார்களை எல்லாம் வர
வழைத்து, அவர்கள் எல்லாம் இருப்பிடம் போய்ச் சேர்வதற்
கான ஏற்பாடுகள் எல்லாம் தமிழக அரசின் சார்பிலே செய்யப்





பட்டது. பிறகு நாங்கள் இங்கிருந்து போனோம். இறங்கி
னோம். பிறகு அவர்கள் இருப்பிடத்திற்கு காரில் ஏற்றி
அனுப்பினோம். பிரதம அமைச்சர் எங்களைச் சந்திப்பதாக
ஒத்துக்கொண்டார். அவர் சிக்கிமிலிருந்து வந்த பிறகு எத்தனை
மணிக்கு, எங்கே சந்திப்பது என்பது மட்டும் தான் தெரியாமல்
இருந்தது. ஆனால் எதிர்பாராத விதமாக அன்று அவருக்கு
உடல்நிலை கொஞ்சம் பாதிக்கப்பட்டது. அவருடைய கேள்
விக்குக்கூட பாராளுமன்றத்திற்கு வரவில்லை. புதிய அமைச்
சர்களை அறிமுகப்படுத்துகின்ற அந்த நிலைக்குக் கூட பாராளு
மன்றத்திற்கு அவரால் வர இயலவில்லை. ஆக அவர் எப்போது
வருவார், எந்த நேரம் தருவார் என்று நாங்கள் உட்கார்ந்திருந்த
பொழுது எனக்குப் பகலில் 11, 12 மணி வாக்கிலே சில செய்தி
கள் வந்தன. காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே கையெழுத்
திட்டு வந்தது வந்தார்கள். ஆனால் தூதுக் குழு போய் பிரத
மரைச் சந்திக்கின்றபொழுது அதில் பங்கு ஏற்பதா, இல்லையா
என்கின்ற ஒரு பட்டிமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது
என்று என்னிடத்திலே தெரிவித்தார்கள். பிறகு எனக்கு
செய்தி சொல்லியனுப்பப்பட்டது. நாங்கள் வருவதற்கில்லை
என்று மட்டும் சொன்னார்கள். அப்படியானால் நீங்கள்
மெமோராண்டத்திலே கையெழுத்துப் போட்டிருக்கிறீர்களே,
அந்த மெமோராண்டத்தை எடுத்து விடலாமா, வேறு
மெமோராண்டம் தரலாமா என்று கேட்ட போது, இல்லை,
இல்லை, அது இருக்கட்டும் ; எங்கள் கையெழுத்து இருக்கட்டும்,
ஆனால் எங்களால் வர இயலாது என்பதை மட்டும் அவர்கள்
தெரிவித்து அனுப்பினார்கள். அதற்குப் பிறகு உள்ளே நடந்தது
எல்லாம் இந்த மன்றத்திற்கு நான் தெரிவிக்க வேண்டியது என்
னுடைய வேலையும் இல்லை, அது எனக்குத் தெரியவும்
தெரியாது. எனவே வந்தவர்களை எல்லாம் அழைத்துக்
கொண்டு செல்லவேண்டும் என்ற எண்ணத்தோடு நம்முடைய
அந்தத் தூதுக் குழுவிலே பிரதம அமைச்சரை சந்திக்கச் செல்
கின்றபோது நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு
வாளர்கள் வை. கோபால்சாமி, டி.ஆர். பாலு, வெங்கட்ட
ராமன், முகமது சகி, வீரப்பன், மிசா. கணேசன், தா. கிருஷ்ணன்,
ஜே. எஸ். இராசு, விடுதலை விரும்பி, அப்துல் சமத், நல்லசிவம்
(சி.பி எம்.), செல்வராஜ் (சி.பி.ஐ.) காங்கிரஸ் கட்சியின்
சார்பில் திருமதி வைஜெயந்திமாலா பாலி ஆகியோர் அந்தத்
தூதுக் குழுவோடு வந்தார்கள். பிரதமர் அவர்களைச் சந்
தித்தார்கள். பிரதமர் அவர்கள் எங்களுடைய கோரிக்கை
களைக் கனிவோடு கேட்டார்கள். பிரச்சினைகளைப் பற்றி
ஒவ்வொருவரிடமும் கேட்டார்கள் பிறகு நான் இது குறித்து
ஆவன செய்கிறேன் என்று அவர்கள். தெரிவித்தார்கள். இதிலே
கூட சில பேர் சொன்னார்கள், பத்திரிகைகளில் கூட பார்த்
தேன், திராவிட முன்னேற்றக் கழகம் லீடு பண்ணுகிற அந்த
டெலிகேஷனில் போவதா; அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகம் லீடு பண்ணுகிற டெலிகேஷனில் போவதா,
என்று. இது திராவிட முன்னேற்றக் கழகம் அழைத்துச்
செல்லும் தூதுக் குழுவே அல்ல. அந்த மெமோரண்டத்தைப்
பார்த்தால்கூட எழுதி இருக்கும். கவர்ண்மெண்டு ஆப் தமிழ்நாடு

என்று தான் அந்த மெமோரண்டத்தில் போடப்பட்டு இருக்கும். அரசாங்கத்தின் சார்பில் தான், அரசாங்க கஜானாவில் இருந்து தான் பணம் எடுத்து டிக்கெட் வாங்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தினுடைய விருந்தாளிகள் போல் நடத்த வேண்டும் என்று தமிழக இல்லத்திற்கு இங்கிருந்து தாக்கீதுகள் அனுப்பப்பட்டிருக்கிறது. இதிலே நான் சென்றேன் என்றால் பொதுப் பணித் துறை அமைச்சர் என்ற முறையில் இந்த இலாக்காவைக்கையில் வைத்து இருக்கிறவன், சில நேரங்களில் பிரதமர் அவர்கள் சில புள்ளி விவரங்களைக் கேட்டால் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும் என்ற வகையில்தான் நான் அதிலே பொறுப்பு ஏற்றுக் கொண்டேனே தவிர, இன்னும் சொல்லப்போனால் நான் வெளிப்படையாகவே சொல்கிறேன், அதிலே எதிலாவது எங்களுடைய துரைமுருகன் இந்த டீமில் லீடு பண்ணுகிறார் என்று நாங்கள் அறிவித்து இருக்கிறோமா? இல்லை. இது பாராளுமன்ற மாண்புமிகு உறுப்பினர்கள்—தமிழகத்திலிருந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பாரதப் பிரதமரைச் சந்திப்பது. இதிலே யார் யாருக்கு தமிழ்நாட்டின் மீது அக்கறை உண்டா? இல்லையா? என்று நிரூபிக்கிற ஒரு காலக் கட்டம். இதிலே சிலபேர் நிரூபித்து இருக்கிறார்கள். நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் ஒன்றை இந்த மன்றத்திற்கு நான் தெரிவிக்க விரும்புவது, நாங்கள் பிரதம அமைச்சரை சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் கர்நாடகத்தினுடைய முதல் அமைச்சா தலைமையில் ஒரு குழு உள்ளே நுழைகிறது. எங்களோடு பேசிக் கொண்டு இருந்த பிரதமர் நீங்கள் இந்த அறையில் உட்கார்ந்து இருங்கள்; அவர்கள் அடுத்த அறையில் உட்கார்ந்து இருக்கிறார்கள். நான் அங்கே சென்று பேசி விட்டு திரும்ப வருகிறேன் என்று மறுபடியும் அங்கே சென்றார்கள். நான் பார்த்தேன், மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு. வீரேந்திர பாட்டில், அவர்களுக்குத் துணையாக முன்னாள் முதலமைச்சர் திரு. இராமகிருஷ்ண எக்டே, அவர்களோடு இருந்து எலியும், பூனையுமாக அரசியல் நடத்திக் கொண்டிருக்கிற முன்னாள் முதலமைச்சர் திரு. பொம்மை, மற்றும் இருக்கிற பல்வேறு கட்சிக்காரர்கள் அத்தனை பேரும் ஓர் அணியில் திரண்டு அந்த இடத்திற்கு வந்து பிரதமரைச் சந்தித்தபோது என் நெஞ்சம் பதறிப் போய் விட்டது. இந்தக் கேடு கெட்ட தமிழ் ஜாதிக்கு மட்டும் இந்த உணர்வு இல்லாமல் போய் விட்டதே என்று நான் வருத்தப்பட்டேன். இது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பிரச்சினை அல்ல இது தமிழ்நாட்டினுடைய பிரச்சினை. இதிலே என்ன குறை? உங்களை முதலமைச்சர் அழைத்துப் பேசவில்லையா? பேசினோம். ஒவ்வொருவரிடமும் நாங்கள் பேசியிருக்கிறோம். எனவே, இந்தப் பிரச்சினையிலே நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் கனிவோடு அணுகி இருக்கிறார்கள். நல்ல முடிவு வரும் என்று நாங்கள் நினைக்கிறோம். அந்த முடிவோடு நாம் இருக்க வேண்டும் என்று இந்த மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களைக். கேட்டுக் கொள்கிறேன், **நன்றி,** **வணக்கம்.**



10–45 மணி

*திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டிய முறையில் நடைபெற்ற நடவடிக்கைகளை விளக்கினார்கள் என்று சொன்னாலும் நான் நேற்றைக்கே இந்தப் பிரச்சினையில் முடிவாகச் சொல்ல வேண்டும் என்ற அளவில் இதிலே நம்முடைய ஒற்றுமைக்குப் பங்கம் வந்து விடக்கூடாது என்ற அடிப்படையில் தான் எங்களுடைய கருத்தை நான் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட கடைசியாக பதில் தெரிவிக்கிற நேரத்தில் இதிலே இருக்கிற ஒற்றுமையினுடைய கூர் மழுங்கி விடக் கூடாது என்பதையும் அவர்கள் சொன்னார்கள். அதனால் திரும்பத் திரும்ப, மீண்டும், மீண்டும், இதுபற்றி விவாதிக்க வேண்டாம் என்ற நிலையில் நாங்கள் வளையாத நிலையில் இருக்கிறோம், தனியாக எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்ற நிலையை நேற்றைக்கே நான் தெரிவித்தேன். ஆனால் இங்கே தெரிவித்த கருத்து இன்று காலைப் பத்திரிக்கைகள் பலவற்றில் செய்தியாக வந்து இருந்தாலும் கூட, நேற்றைக்கு டி.வி.யிலே ஒளிபரப்புகின்ற நேரத்தில் முதல் பகுதி செய்தியை மட்டும் சொல்லிவிட்டு பின் பகுதியில் எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன் கூட்டியே பிரதமரைச் சந்திக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று நான் சொன்னதை இருட்டடிப்பு செய்து ஒருவகையில் இந்தச் செய்தியை மறைக்கின்ற முயற்சி ஏற்பட்டது. நான் முதல் நாள் நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டத்திற்கு வந்த நேரத்திலேயே இந்தப் பிரச்சினையை சட்டமன்ற சர்வ கட்சி என்றில்லாமல் அனைத்துக் கட்சித் தலைவர்களையும், அழைத்து நாம் பேச வேண்டுமென்ற கருத்தை அன்றைக்கே நான் வற்புறுத்தினேன். ஆனால் முதல்வர் அவர்கள் பதில் சொல்லாமல் இருந்தார்கள். அவர்கள் எதற்காக பதில் சொல்லவில்லை என்பதை நான் கேட்டறியவில்லை. காரணம் என்னவென்றால், அவர்கள் பேசிவிட்டு வரட்டும், அதற்குப் பின்னால் நிலைமைகளைத் தெரிந்து கொள்ளலாம் என்று இருந்தேன். ஆனால் அவர்கள் பேச்சு வார்த்தைக்குச் சென்ற பின்னால் கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், பேச்சு வார்த்தையிலே என்ன நடைபெற்றது என்பதை அவரே ஒரு அறிக்கை கொடுத்து அவர் தமிழ்நாட்டிற்கு எந்த வகையிலே பாதகமான கருத்துக்களைச் சொல்ல வேண்டுமோ அந்தக் கருத்துக்களையும் எடுத்துச் சொல்லி விட்டார்கள். அதைத் தொடர்ந்து நான் நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்திலே எடுத்துச் சொன்னேன். இந்த நிலைமை இருக்கும்பொழுது, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து சொன்னால் என்னவென்று. அவர்களிடத்திலே திரும்பத் திரும்ப வற்புறுத்தியது இந்தப் பிரச்சினையில் கர்நாடக மாநிலத்திலேயிருந்து முதல் அமைச்சர் அவர்களும் மற்ற சர்வ கட்சித் தலைவர்களும் சேர்ந்து ஒரே நிலையிலே வருகிறார்கள். எனவே அந்த வகையில் தமிழ்நாட்டிலேயிருந்து முதலமைச்சர் அவர்களும், காங்கிரஸ்

கட்சியிலே இருந்து ராமமூர்த்தி அவர்களும், மூப்பனார் அவர்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து எஸ்.டி.எஸ். அவர்களும், மற்றவர்களும் இங்கே வரட்டும்; நாங்களும் சேர்ந்து ஒன்றாகப் போவதிலே ஒன்றும் ஆட்சேபணை இல்லை, அதற்கான முயற்சியிலே ஈடுபடுங்கள் என்று அறிவித்தார்கள். இங்கே அதை எடுத்துத் தெரிவிக்க வேண்டிய நிலைமை வருகிற நேரத்திற்கு முன்பாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திக்கிறார்கள் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். ஆனால் அந்தக் கருத்தை உடனே நான் எழுந்து மறுத்திருக்க வேண்டும். ஆனால் நான் மறுக்காமல் இருந்ததற்குக் காரணம் இது விவாதப் பிரச்சினையாக ஆகி மீண்டும், மீண்டும் நாம் விவாதிக்கக் கூடாது. .. .. .. .. ..

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே என்ன மறுப்பது? உங்களிடம் பட்டியலைக் காட்டுகிறேன், இன்னின்னார் போகிறார்கள் என்று. நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தனிடம் பட்டியலைக் காட்டுகிறேன். இரண்டு பேரும் தலையசைத்து, பத்திரிகைகளுக்குக் கொடுக்கலாம் என்று சொல்கிறீர்கள், பிறகு கொடுக்கிறேன். இதிலே என்ன மறுக்கப் போகிறீர்கள்?

**திரு. எஸ். ஆர். இராதா:** மறுப்பு சொல்லி இருக்கலாம். (குறுக்கீடு) நான் உங்களுக்குத் தனியாக பதில் சொல்ல முடியாது. நான் இங்கே பேசிக் கொண்டு இருக்கும்போது, நீங்கள் அங்கேயிருந்து பேசினால், உங்களிடம் பதில் சொல்ல முடியாது. (குறுக்கீடு) அப்படிப் பேசுவதாக இருந்தால் உங்களிடம் நேராகப் பேசுகிறேன்.

எனவே அதை உடனே நான் சொல்ல வேண்டி, எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், இங்கே சர்வ கட்சி கூடுகிற நேரத்திலேயே, அவர்கள் தனியாக பிரதமரைச் சந்திப்பதற்காக, அவர்கள் நாள் குறிப்பிட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதோடு காங்கிரஸ் கட்சியையும் அவர்கள் இணைத்துக்கொண்டு, அவர்கள் சேர்ந்து போக வேண்டுமென்று மெமோராண்டம் தயாரித்து இருக்கிறார்கள். அவர்கள் கேட்டுக் கொண்டது, அரசாங்கத்தின் சார்பில் நடுவர் மன்றம் வற்புறுத்தப்படுகிறதா என்று அறிய வேண்டுமென்று கேட்டார்கள். நானும் அவர்களிடத்திலே, நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்திலே சொன்னேன். நடுவர் மன்றத் தீர்ப்பை அரசாங்கமும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் வற்புறுத்துகிறது, அதே நிலையிலே நீங்களும் வற்புறுத்த வேண்டுமென்று கேட்டேன். ஆனால் நடைபெற்று இருக்கிற இந்த நிலைமையில் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், நீங்கள் திரும்பத் திரும்ப இந்தப் பிரச்சினையைப் பேசி இதிலே இருக்கிற பல்வேறு நிலைகளை எடுத்துச் சொல்வதாக இருந்தால் நானும் பழைய நிலைகளை எடுத்துச் சொல்லக்கூடிய நிலைமை வரக் கூடாது என்று நான் விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது).



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு சிறிய அறிவிப்பு. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வரதராசன் அவர்கள், டெல்லிக்குச் சென்று வந்ததினுடைய விவரத்தை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களும் அறிவித்தார்கள். அவர் ஒன்றும் உங்களையெல்லாம் குற்றம் சாட்டவில்லை. போன நிலைமைகளைத் தெளிவுபடுத்திச் சொன்னார். இதிலே மேலும் மேலும் வாதம் தேவையா? நீங்கள் சொன்னால் நாங்கள் சொல்ல வேண்டுமென்ற வாதம் தேவைதானா? நீங்களே யோசித்துப் பாருங்கள். (குறுக்கீடு) உங்களை ஒன்றும் தனிப்பட்ட முறையிலே குற்றம் சொல்லவில்லையே, வந்தவர்கள் இன்னார்; போனவர்கள் இன்னார் என்றுதான் சொன்னார். அதற்கப்புறம் உங்களை அவர் சொல்லவில்லை. ஒரு வரி, ஒற்றுமையாக இருந்தால் நல்லது என்ற விவரத்தைச் சொன்னார். அதற்குப் பிறகு நீங்கள் ஏன் வாதத்திலே இறங்க வேண்டும்? இது தேவைதானா என்று யோசித்துக் கொண்டு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) ஒவ்வொன்றுக்கும் வாதம் யாரும் செய்யவில்லை. அவர் கேட்டார், இவர் அறிவிப்பைச் சொல்லிவிட்டார்; முடிந்து விட்டது. அதோடு முடித்து விடலாமே. இதிலே மேலும் வாதம் தேவைதானா என்பதை நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள்.

**திரு. எஸ். ஆர். இராதா:** தலைவர் அவர்களே, இதிலே வாதம் வேண்டாம் என்று சொல்கிற கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், அவர்கள் தொலைபேசியிலே கேட்டார்கள் என்றும், தொலைபேசியிலே கேட்கும்பொழுதே, அவர்கள் தனியாகப் பார்க்கப் போகிறார்கள் என்பதையும் நான் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். அதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**10-50 மணி**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக முதலமைச்சர் அவர்கள் முன்கூட்டி ஒரு அறிக்கையை வெளியிட்டுவிட்டார் என்றும், அதனால் முடிவு எடுத்துவிட்டோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். கர்நாடகத்தில் இப்போது சட்டசபைக் கூட்டம் நடக்கவில்லை. எனவே அவர்களால் முன்கூட்டி அறிக்கையை விட முடியும். ஆனால் நான் சட்டசபைக்குக் கட்டுப்பட்டவன். சட்டசபை நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில் 19-ந் தேதி நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விபரங்களைப் பத்திரிகைகளில் வெளியிட்டால் மறுநாள் அவையில் உரிமைப் பிரச்சினை வரும். உரிமைப் பிரச்சினை வரும் என்பதற்காக மட்டுமல்ல, இந்த சட்டமன்றத்தை மதிப்பவன் என்ற முறையிலும் இந்த அவைக்கு மரியாதை

தரவேண்டுமென்ற முறையிலும் நான் அதை அங்கே வெளியிட வில்லை. நிருபர்கள் என்னை எவ்வளவோ துருவித் துருவிக் கேட்டபோதும் கூட, சட்டமன்றத்தில்தான் அதை அறிவிப்பேன். சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, உங்க ளிடத்தில் அதை அறிவிக்க இயலாது என்று நான் கூறிவிட் டேன். அதனால் அறிவிக்கவில்லை. அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைக்கவில்லை, சட்டமன்றக் கட்சித் தலைவர் கள் மாத்திரம் போதாது என்பதற்காக நான் பதில் அளிக்க வில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

இந்த காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி—கடந்த காலத்திலும் சரி, இப்போதும் சரி—சட்டமன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்துபேசி, முடிவுகளை எடுப்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அப்போது முன்னாள் முதலமைச்சராக இருந்த பெரியவர்கள், பெருந்தலைவர் காமராஜர் அவர்களிடத்திலும், அப்போது முதலமைச்சராக இல்லாமல் ஓய்வு பெற்றிருந்தாலும் கூட, பெரியவர் பக்தவத்சலம் அவர்களிடத்திலும், சென்று ஒவ் வொருமுறையும் கலந்து பேசி, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தையும் கூட்டி அவர்களுடைய கருத்துக்களையும் கேட் டேன். அதைப்போல திரு. சி. எஸ். அவர்களிடம் தனிப்பட்ட முறையில் சென்று அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு விவாதித்திருக்கிறேன். டெல்லிக்குச் சென்றபோதெல்லாம் திரு. கே. எல். ராவ் போன்றவர்களுடன் சந்தித்து, அங்கே என்ன பேசுவது என்று அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட் டத்திலும், பெரியவர் பக்தவத்சலம், பெருந்தலைவர் காம ராஜர், திரு. சி. எஸ். அவர்களிடத்தில் எல்லாம் கலந்துகொண்டு செல்வதும் வழக்கம். அதைப்போல ஆர். வி. அவர்களிடத் திலும் கலந்து கொள்வது வழக்கம். அந்த அளவுக்கு இந்த விஷயத்தில் அதிகத் தொடர்பு கொண்டவர்களிடத்திலேயெல் லாம் எந்த அளவுக்குத் தொடர்பு கொள்ளவேண்டுமோ அந்த அளவுக்குக் கலந்து பேசியிருக்கிறேன். இப்போது எனக்கு ஏற்பட்ட புது அனுபவம், அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு வருகின்ற பிரதிநிதிகள் தங்களுடைய கட்சித் தலைமையோடு தொடர்பு கொண்டிருப்பார்கள் என்று நான் எண்ணினேன். அந்தத் தொடர்பு சில பிரதிநிதிகளுக்கு இல்லை என்கிற உண்மை இப்போது எனக்குப் புரிகிறது. இந்த உண்மை யைத்தான் நான் இப்போது தெரிந்து கொண்டிருக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** தலைவர் அவர்களே, இதுவே நல்லதல்ல. எல்லாக் கட்சிகளுக்கும் அவர்களுடைய தலைமை யுடன் தொடர்பு இருக்கிறது. தொடர்போடு இருப்பார்கள்.



## 3. கவன ஈர்ப்பு.

**(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் சிவந்திபுரத்தில் ஊராட்சி வழங்கும் குடிநீரால் மக்களுக்கு ஏற்படும் கேடுகள் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கே. ரவி அருணன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வொன்றை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.... (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. நஞ்சப்பன். ஆளாளுக்குப் பேச வேண்டுமா ? (குறுக்கீடு) இப்போது ஒன்றும் நிலைமைகளை அறிவிக்கவில்லை. அவர்கள் ஓர் அறிவிப்பைச் சொல்லியிருக் கிறார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் (குறுக்கீடு). திரு. நஞ்சப்பன் அவர்கள் பேசியது எதுவும் பதிவாகாது. உட்காருவீர்கள் என்று நம்புகிறேன். திரு. கே. ரவி அருணன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே. ரவி அருணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் சிவந்திபுரம் ஊராட்சி மூலம் வழங்கப்படும் குடிநீர், பொது மக்களுக்கு சுகாதாரக் கேட்டை விளைவிப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட விவர அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்:

### அறிக்கை.

1981 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டத்தின் மூலம் சிவந்திபுரம் ஊராட்சிக்கு தற்பொழுது நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. இத் திட்டத்திற்கான நீராதாரம் தாமிரபரணி ஆறு. ஆற்றின் மேலோடும் நீரை சுத்திகரித்து சிவந்திபுரம் ஊராட்சிக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் தலைமை இடத்திற்கு அருகில் 'மதுரா கோட்ஸ்' ஆலை இருப்பதால், இங்கிருந்து விடப்படும் கழிவு சாயங்கள் ஆற்று நீருடன் கலந்து, மார்ச் முதல் மே மாதம் வரையில் (விவசாயத்திற்காக நீர் விடாத காலத்தில்) எடுக்கப்படும் நீரானது சுத்திகரிக்கப்பட்டாலும் மாற்று நிறத்தோடே காணப்படுகிறது. இத்தன்மையைப் போக்க தற்போதுள்ள நீராதாரத்திற்கு 7.5 கி. மீட்டர்

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி] [1990 ஏப்ரல் 24

ஆற்றின் மேல் பகுதியில் ஒரு தலைமையிடம் ஏற்படுத்தி அந் ந்ரை ஊராட்சிக்குக் கொண்டுவந்து விநியோகிக்க சுமார் ரூ. 65 இலட்சம் மதிப்பீட்டில் உத்தேச மதிப்பீடு என்று மாவட்ட ஆட்சியரிடம் தரப்பட்டுள்ளது. அவர் இத்திட்டத்திற்கு ஆகும் செலவிற்கான நிதியை, மேற்சொன்ன அம்பாசமுத்திரத்திலுள்ள 'மதுரா கோட்ஸ்' ஆலை நிர்வாகத்திடம் பெற முயற்சிக்கிறார். நிதி சம்பந்தமாக முடிவான அறிக்கை பெற்றவுடன், இம்மாற்றுத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிவந்திபுரம் கிராமத்தில் ஏறத்தாழ 12,000 பொதுமக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் தாமிரபரணி நதிக் கரையின் ஒரத்தில் இருந்துகொண்டு குடிநீருக்காக கண்ணீர் வடிக்கின்ற சூழ்நிலை நிலவி வருகிறது. கடந்த ஆண்டு இதே பிரச்சினையை நான் தெரிவித்தபோது, அங்கே உள்ள மதுரா கோட்ஸ் நிறுவனம் 300 ஏக்கர் நிலம் வாங்கவேண்டுமென்றும், அதிலே கழிவு நீரை விடவேண்டுமென்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் அந்த முயற்சி கைவிடப்பட்டதாகத் தெரிகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது கொடுத்துள்ள விவர அறிக்கையில், மதுரா கோட்ஸ் நிறுவனத்திடமிருந்து 65 லட்ச ரூபாய் மாவட்ட ஆட்சித் தலைவர் பெற முயற்சிப்பதாகத் தெரிவித்திருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் இதிலே எடுத்த முயற்சி என்ன ? அந்த நிதி ஆதாரத்தை...............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள். நீங்கள் ஓர் அறிக்கையையே கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் ....

திரு. கே. ரவி அருணன்: அந்த நிதி ஆதாரத்தை மதுரா கோட்ஸ் நிறுவனம் தர மறுத்தால், அரசே இந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நீர் ஆதாரமாக இருக்கிற அந்த இடத்திலேயிருந்து தாமிரபரணி ஆற்றிலிருந்து 7.5 கிலோ மீட்டர் மேற்குப் பகுதியிலிருந்து குடிநீர் கொண்டுவர ஏற்பாடு செய்து அதற்கான திட்டமொன்று தீட்டப்பட்டிருக்கிறது. அதற்கான நிதி ஆதாரத்தை அங்கேயுள்ள மதுரா கோட்ஸ் நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து பதில் வந்தபிறகு, மேற்படி நிதி ஆதாரங்களை எப்படி அந்த இடத்திற்குக் கொடுப்பது என்பதைப்பற்றி அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களுக்கு குடிநீராக வழங்கப்படும் ஆற்று நீரை மாசு படுத்துகிற மதுரா கோட்ஸ் நிறுவனத்தின் மீது மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

10-55 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்ப் பிரச்சினை தொழிற்சாலைகள் வளரவேண்டும் என்பதற்கு இடையூறாக இருக்கக்கூடாது. ஆகவேதான் அங்கே ஆகிற செலவை அந்த மதுரா கோட்ஸ் நிறுவனமே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அந்த நிறுவனத்தின் மீது அரசு விதியினை விதித்து இருக்கிறது.

(ஆ) திருச்சி மாவட்டத்தில் சில கூட்டுறவுச் சங்கங்களின் அலுவலர்கள் விசைத்தறி உருப்படிகளை கைத்தறி உருப்படிகளாக விற்பனை செய்த மோசடிகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி பாப்பா உமாநாத், திரு. சி. கோவிந்தராஜன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திருமதி பாப்பா உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டத்தில் மண்டலக் கைத்தறிக் கொள்முதல் அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள் துணையோடு விசைத் தறிகளில் உற்பத்தியாகும் வேட்டிகளைக் குறைந்த விலைக்கு வாங்கி, கைத்தறி ரகம் என்று முத்திரை குத்தி அதிக விலைக்கு விற்றதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை.

திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம், உதயநத்தம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து கைத்தறி வேஷ்டிகளுக்குப் பதிலாக 200 விசைத்தறி வேஷ்டிகள் கோ-ஆப்டெக்ஸ் சேமிப்புக் கிடங்கிற்கு 29-3-1990 அன்று அனுப்பப்படுவதாக வந்த புகார்களின் அடிப்படையில் மேற்படி சங்கத்தின் தனி அலுவலர் 31-3-1990 அன்று விசாரணை

செய்து விசைத்தறி உருப்படிகளை 2-4-1990 அன்று கைப்பற்றினார். இச்சங்கத்தில் தற்காலிகமாக வேலை பார்த்து வந்த திருவாளர்கள் பாலசுப்பிரமணியம் மற்றும் பன்னீர் செல்வம் ஆகியவர்கள் இத்தகைய மோசடியில் ஈடுபட்டதாகக் கருதப் பட்டு தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

2. மேலும் உடையார்பாளையம் வட்டம் கோடாலிகருப்பூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 200 உருப்படி கைத்தறி வேஷ்டிகளுக்குப் பதிலாக விசைத்தறி வேஷ்டிகளை இரண்டு பண்டில்களில் ஜெயம்கொண்டம் ஏ.பி.டி. லாரி பார்சல் ஆபீசில் புக்செய்து லேபிள் செய்யப்பட்டுள்ள சமயத்திலேயே தவறு கண்டுபிடிக்கப்பட்டு வேஷ்டிகள் அனைத்தும் 2-4-1990 அன்று சங்கத்தின் தனி அலுவலரால் முடக்கப்பட்டுவிட்டன. மேற்படி சங்கத்தில் கணக்கர் வேலை பார்த்து வரும் என். தியாகராசனை 2—4—1990 பிற்பகல் முதல் தனி அலுவலர் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்ய உத்திரவிட்டுள்ளார்.

3. மேலும் சின்னவளையம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து வந்த வேஷ்டிகளில் 43 வேஷ்டிகள் சேலம் சரகத்தைச் சேர்ந்தவை என்றும், இவை மறு கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாகவும் உள்ளது. இத்தகைய மோசடிகள் தக்க சமயத்தில் கண்டுபிடிக்கப்பட்டு தடுக்கப்பட்டுவிட்டது.

4. ஜெயங்கொண்டத்தில் கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் அதிகாரியாகப் பணியாற்றி வரும் திரு. கோபி தான் இத்தகைய செயல்களைச் செய்யாவிடில் சரக்குகளைக் கொள்முதல் செய்ய மாட்டேன் என்று பயமுறுத்தினார் என்று சம்பந்தப்பட்ட பணியாளர்கள் வாக்குமூலம் கொடுத்துள்ளனர்.

5. மேலும் இவர் சேலத்தில் உள்ள என். ஆர். பி. டெக்ஸ் டைல்ஸ் மில்லில் இருந்து விசைத்தறி வேட்டிகளை வாங்கி யுள்ளதாகத் தெரிகிறது. எனவே, திரு. பி. கே. கோபி, கோ- ஆப்டெக்ஸ் கொள்முதல் அதிகாரி அவர்கள்தான் இந்தக் குற்றச் சாட்டுகள் அனைத்திற்கும் காரணம் என்று தெரிய வருகிறது. இவர் தற்போது தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேற்படி மோசடியில் ஈடுபட்ட நபர்கள் நிச்சயம் சட்டப்படி தண்டிக்கப்படவும், இனி இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறா வண்ணம் அனைத்து தடுப்பு நடவடிக்கைகளையும் மேற் கொள்ளுமாறும் கோ-ஆப்டெக்ஸின் தனி அலுவலருக்கு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே கொள்முதல் செய்யப்பட்ட சுமார் ரூ. 8,000 (ரூபாய் எட்டாயிரம் மட்டும்) மதிப்புள்ள விசைத்தறித் துணிகள் அனைத் தும் கிடங்குக்கு அனுப்பப்படும் நிலையிலேயே நிறுத்தப்பட்டு விட்டதால் மோசடி நிகழுமுன் தடுக்கப்பட்டுவிட்டது. ஆகையால் லட்சக்கணக்கான மோசடி என்று ஏதும் நிகழவில்லை; விசைத் தறித் துணிகள் ஏதும் விநியோகிக்கப்படவில்லை.



திருமதி. பாப்பா உமாநாத் : பேரவைத் தலைவர் அவர் களே, திருச்சி மாவட்டம் உடையார்பாளையத்தில் ஏறத்தாழ 33 கைத்தறி சொசைட்டிகளிலே 10,000 பேர் வேலை செய்கிறார்கள். அவர்களுக்குத் தொடர்ந்து வேலை கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த அரசு ஜனதா ரக வேட்டிகளை உற்பத்தி செய்ய அனுமதி கொடுத்தது. ஆனால் வேலியே பயிரை மேய்கிறது என்ற அடிப்படையில் ஜெயங்கொண்டம் கைத்தறி கொள்முதல் அலுவலர், திருச்சி மண்டல கைத்தறி கொள் முதல் அலுவலர் ஆகியோர் மோசடி செய்து பல இலட்சம் ரூபாய் சுருட்டியிருக்கிறார்கள். 13 ரூபாய்க்கு விசைத்தறி வேட்டியை வாங்கி 33.50 ரூபாய்க்கு விற்று இருக்கிறார்கள். இப்படி ஒரு வேட்டிக்கு 20 ரூபாய் என்று அடித்திருக்கிறார்கள். இந்த மோசடியை சி.ஐ.டி.யு. தொழிற்சங்க அமைப்பு சம்பந் தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்து இருக்கிறது, அதுமட்டுமல்ல. இந்த சொசைட்டியைப் பாது காப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் உதயநத்தம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 200 வேட்டிகளும், அதேபோல் உடையார்பாளையம் கோடாலி கருப்பூர் என்ற கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 200 வேட்டிகளும் விசைத்தறித் துணிகள் என்று துறை அதிகாரி களுக்கு 29 ஆம் தேதி கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் 2—4—1990 அன்று அந்தத் துணிகளை எல்லாம் கொள்முதல் செய்து ஏ. பி. டி. லாரி பார்சல் அலுவலகத்தில் வைக்கப் பட்டிருந்தது கையகப்படுத்தப்பட்டு இருக்கிறது. அந்த கோ- ஆப்டெக்ஸ் கொள்முதல் அதிகாரி கோபி என்பவரின் ஆளு கைக்கு உட்பட்ட அந்த நெசவாளர் சங்கத்தில் மட்டும்தான் இந்தத் தவறு நடந்திருக்கிறது என்பது ஊர்ஜிதம் ஆகிறது. அந்த கோபி என்பவருக்கு என். ஆர். பி. டெக்ஸ்டைல்ஸ் இட மிருந்து எழுதப்பட்ட கடிதம் மற்றும் டி.வி.எஸ். அந்த கோபி என்பவருக்கு அனுப்பிய லாரி ரசீது ஆகியவை அரசுத் துறை அதிகாரிகளால் கையகப்படுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தால் அந்த கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் அதிகாரி கோபி என்பவர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார். அவருடைய ஆளுகைக்கு உட்பட்ட இந்த இரண்டு சங்கங்களில்தான் இப்படிப் பட்ட தவறு நடந்திருக்கிறது. மேலும் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் இருக்கும் வண்ணம் கைத்தறித்துறை தனி அதிகாரி அவர்களுக்கும், உதவி இயக்குநர் அவர்களுக்கும், கைத்தறி இயக்குநர் அவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதோடு கோ-ஆப்டெக்ஸ் கிட்டங்கியின் திருச்சி மேனேஜர் அவர்களும் இதற்கு கூட்டாளியாக இருந்து அவருடைய உறவினராகிய ஒருவரிடமிருந்து, அதாவது சேலத்திலிருந்துதான் விசைத்தறி வேட்டிகளை வாங்கியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடுகூட சமீபத்தில் திருச்சி கிடங்கில் பரிசோதனை செய்ததில் 10,000-க்கு மேற்பட்ட இதுபோன்ற மாறுபட்ட வேட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. ஆகவே விசாரணை முழுமையாக நடக்கும் வரையில் இந்த வேட்டிகளை வேறு மாநிலங்களுக்கு அனுப்பாமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக கைத்தறித் தொழில் என்பது சவலைப்பிள்ளை மாதிரி கீழே விழுந்து கிடக்கிறது. அப்படிப்பட்ட பல கூட்டுறவு சொசைட்டிகள் நலிந்துபோய் இருக்கின்றன. இதுபோன்ற பெருச்சாளிகள் மீது நடவடிக்கை எடுத்து அந்தத் தொழிலைப் பாதுகாக்க கறாராக, உறுதியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். சம்பந்தப்பட்டவர்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்வதோடு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையும் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*11-00 மணி*

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தவறுகள் எங்களுடைய கவனத்திற்கு வந்ததற்குப் பின்னால் சென்னையிலே இருக்கும் அதிகாரிகள் நேரிலே சென்று விசாரித்து அறிக்கை தந்திருக்கிறார்கள். இதுசம்பந்தமாக மேலும் இப்படிப்பட்ட தவறுகள் நிகழா வண்ணம் நடவடிக்கை மேற்கொண்டு உள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2. தகவல் கோரல்— தொடர்ச்சி.

**(உ)** சென்னை ஆர். கே. நகர்ப்பகுதியில் சுவர் இடிந்து விழுந்ததால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்தல்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை ஆர். கே. நகர் பகுதி, 4-வது வட்டத்தில், செரியன்நகர் பகுதியில் ஒரு வீட்டின் சுவர் இடிந்து 3 குழந்தைகள் பலியாகி இருக்கிறார்கள். 6 பேர் காயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தகவலை அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திருமதி சற்குணம் அவர்கள் என்னிடத்தில் தந்து, அதற்கு அரசின் சார்பிலே உதவி கேட்டிருக்கிறார்கள். அது கவன ஈர்ப்புத் தீர்மானமாக வந்தும்கூட, அதை உடனடியாக இன்று



இங்கு எடுத்துக்கொள்ள முடியாத சூழ்நிலையில், இந்தப் பிரச்சினையின் அவசர முக்கியத்துவம் கருதி, இந்த அறிவிப்பைச் செய்கின்றேன். இந்த வீட்டினுடைய சொந்தக்காரர் ஏற்கெனவே இறந்துவிட்ட காரணத்தினால், பிள்ளையற்ற சொத்து என்ற முறையில், வளர்ப்பு மகன் ஒருவன் இந்த வீட்டைப்பெற்று, பழுது பார்க்காது இருந்துவிட்ட காரணத்தால் அது இடிந்து விழுந்து இத்தகைய விபத்து ஏற்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் மாண்டுவிட்ட 9 வயது நிரம்பிய சங்கீதா, 8 வயது நிரம்பிய அஜீமா, 7 வயது நிரம்பிய சித்திக் ஆகிய இந்த 3 குழந்தைகளின் சாவுக்காக அந்தக் குடும்பத்திற்குத் தலா 5 ஆயிரம் ரூபாய் வீதம் 15 ஆயிரம் ரூபாய் அரசின் சார்பாக வழங்கப்படுகிறது. காயமுற்ற கைரூன், வகீலா பானு, நபீசா, ரமேஷ், வசந்தா, கவுரி ஆகியவர்களுக்கு சிகிச்சை செலவுக்காக தலா 500 ரூபாய் வீதம் 3 ஆயிரம் ரூபாய் அரசின் சார்பில் வழங்கப்படுகிறது(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ்.டி. உகம்சந்த் அவர்களும், திரு. ஆர். சிங்காரம் அவர்களும் கவன ஈர்ப்புத் தீர்மானம் தந்திருப்பதாக நம்முடைய கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். ஆகவே, அதுவும் அவைக் குறிப்பில் இடம்பெறுகிறது.

## 4. அறிக்கை அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும் —தொடர்ச்சி

### கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும்—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: —

''மானியக் கோரிக்கை எண்.28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும் — என்ற தலைப்பின்கீழ் ரூ. 224,86,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

[1990 ஏப்ரல் 24

திரு. எஸ். டி. உகம்சந்த் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பெரிய ஊராட்சி மன்றங்கள் ஊராட்சி ஒன்றியங்களை பிரிப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.—

''மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும்— என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 224,86,92,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள ஊராட்சி மன்றங்களின் தெரு விளக்குகளைப் பராமரிக்க அரசு செலவில் 5 ஊராட்சிக்கு ஒரு லைன்மேன் ( Lineman ) என்ற அடிப்படையில் லைன்மேன் நியமிப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்சப்பெறுகின்ற ரூ. 224,86,92,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

திரு. வி. [illegible] : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள திருச்செங்கோடு மற்றும் குமாரபாளையம் நகராட்சிகளை அபிவிருத்தி செய்வதற்கான நடைமுறைகளைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

'' மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 224,86,92,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயநல வளர்ச்சித் திட்டங்ளும் நகராட்சி நிருவாகமும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்* அவைமுன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டிலே பதிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைச் சொன்ன பிறகு என் பதிலை அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*384—466-ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.



1990 ஏப்ரல் 24]

11-05 மணி

திரு. க. பழனிசுவாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சமுதாய வளர்ச்சித் திட்டங்களும் மற்றும் நகராட்சி நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புற மக்கள், நகரப்புற மக்களுடைய அன்றாட வாழ்க்கையின் அடிப்படையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய முறையில் முக்கியப் பங்கு உள்ளாட்சி நிர்வாகத்திற்கு இருக்கிறது என்பதையும், அவர்களுடைய பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த இந்தத் துறை முக்கியப்பங்கு வகிக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்—ஐ.ஆர்.டி.பி.— வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களை உயர்த்துவதற்காக, அவர்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிப்பதற்காக மத்திய, மாநில அரசுகள் இரண்டும் சேர்ந்து, 1980–81ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தி வருகின்றன. இந்தத் திட்டத்தில் பல குறைகள் இருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவற்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் கடன் வழங்க அரசு செயல்முறைக் குழுவை அமைத்து, அதன் மூலமாக கடன் பெறுகிற குடும்பங்களைத் தேர்வு செய்யும் அதிகாரத்தை அவர்களுக்கு அளித்திருந்தது. ஆனால் ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒன்றியச் செயலாளர்கள் அந்தக் குழுவில் பினாமியாக அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களை நியமித்து, அந்தக் குழுவில் இருப்பவர்களுக்குக் கூட பயனீட்டாளர்கள் யார் என்று தெரியாத அளவுக்கு, தங்களுக்கு வேண்டப்பட்டவர்களை எல்லாம் கடன் பெறத் தகுதியானவர்கள் என்று தேர்வு செய்து கடன் வழங்கப்பட்டுள்ளதைத் தவிர்த்து, உண்மையாக வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களைத் தேர்வு செய்து கடன் வழங்கவும், ஏற்கனவே இருந்தபடி பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், ஊராட்சி ஒன்றியத்தலைவர் ஊராட்சி மன்றத் தலைவர்....

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் இங்கே ஒரு தவறான அறிவிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்குவதற்காக டாஸ்க் போர்ஸ் கமிட்டி என்று ஒரு குழு நியமிக்கப்படுகிறது. அந்தக் குழு தான் பயனீட்டாளர்களைத் தேர்வு செய்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டும் தேர்வு செய்வதாக ஒரு தவறான தகவலைத் தருகிறார்கள்.

திரு. க. பழனிசுவாமி : பேரவைத் தலைவரவர்களே, நான் உண்மையைத் தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி என்றால் நீங்கள் பொறுப்பு ஏற்க வேண்டியிருக்கும். குறிப்பிட்டுச்சொல்லி, பொறுப்பு ஏற்றுக்கொள்கிறீர்களா ?

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குழுவில் யார் யார் போடப்பட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே கொண்டு வந்திருக்கிறேன். அதை உறுப்பினரவர்களுக்குச் சொல்கிறேன்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. இல்லை. அதை ஒரு குற்றச்சாட்டாக்கிவிட்டு, நீங்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்ளுங்கள். அதை வாங்கிப் பார்க்கலாம்.

திரு. பழனிசுவாமி : பேரவைத் தலைவரவர்களே, அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். தங்களிடம் பிறகு தருகிறேன் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கூறிய குற்றச் சாட்டுக்குப் பொறுப்பு ஏற்கிறார். அவர் ஆதாரங்களைத் தருவார். அதற்குப்பிறகு பேசலாம்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, அவர் குற்றச்சாட்டு சொல்லவில்லை. ஆளுங் கட்சிக்குத் தந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. இல்லை. ''Task Force Committee'' என்று இருக்கிறது. உங்களுக்குத் தெரியும். வட்டாட்சியர், ஒன்றிய ஆணையர், பிறகு ஊராட்சி மன்றத் தலைவர்—3 பேர்கள் பயனீட்டாளர்களைத் தேர்ந்தெடுக்கிற குழுவைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படிக் குழுவைத் தேர்ந்தெடுத்த பிறகு 10 பேரைத் தேர்ந்து எடுக்கிறார்கள் என்கிறார்கள். தவறான தகவல் கொடுத்தால் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டியது தான். பொறுப்பு அவர் ஏற்றுக்கொள்ளட்டும்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர் பொறுப்பு ஏற்காவிட்டினும் கூட அவர் வைத்திருக்கிற குறிப்பைத் தங்களிடம் தந்தால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார். நீங்கள் ஏன் கவலைப் படுகிறீர்கள் ? (குறுக்கீடு) எல்லோரும் குற்றச்சாட்டுகளை அள்ளி வீசுவதை விட்டு, பொறுப்பு ஏற்றுக்கொண்டால் நல்லது தானே !



திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொறுப்பு ஏற்றுக்கொள்வது என்றால் என்ன என்பதை உறுப்பினர்களுக்கு விளக்கினால்தான் அது எவ்வளவு சிக்கலான பிரச்சினை என்பது தெரியும். எதையும் சொல்லிவிட்டு பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன், பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்றால் எல்லோரும் அதை ஒரு வழக்கமான தேசிய கீதமாகப் பயன்படுத்திவிடுவார்கள். ஆகையால் அவர்களுடைய பதவிகளே போகிற அளவுக்குப் பயங்கரமானது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை, திரு. பழனிசுவாமி அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள். அதை ஏன் நீங்கள் கிளறுகிறீர்கள் ? (குறுக்கீடு) இல்லை, இல்லை. விடுங்கள். (குறுக்கீடு) அவர் குற்றச்சாட்டைச் சொல்கிறார். ஆதாரம் கையிலே வைத்திருக்கிறார். நிரூபிக்கத் தயாராக இருக்கிறார். நிரூபிக்க முடியவில்லை என்றால் அதைப் பேரவைத் தலைவர் முடிவு செய்வார். (குறுக்கீடு). நீங்கள் விடுங்கள். அவர்தான் பொறுப்பு ஏற்றுக்கொண்டு விட்டாரே. பிறகு விதிமுறைகளைச் சொல்லலாம்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: பேரவைத் தலைவரவர்களே, பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்பதற்கு வேண்டிய விதிகளைப் பற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே இந்த மன்றத்திலே பிரேமா கொலை வழக்கு போன்றவற்றுக்கு எல்லாம் ஆதாரம் தருகிறேன் என்று சொல்லி, இதுவரையில் ஆதாரங்கள் வரவில்லை. அவர்கள் எல்லாம் இதைப் பற்றிப் பேசுவது எந்த விதியிலே வருகிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவரவர்களே, மதுராந்தகம் ஞானசவுந்தரி கொலைக்கெல்லாம் மூல காரணமான சில நபர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டு .. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடுமையாக வேண்டாம்.
(குறுக்கீடு). உட்காருங்கள். அவர் ஏதோ விதிமுறைகளைச்
சொன்னார். (குறுக்கீடு). நீங்கள்தான் ஆரம்பிக்கிறீர்கள்.
வம்பை விலைக்கு வாங்குகிறீர்கள். (குறுக்கீடு). உட்காருங்கள்,

11-10 மணி

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மறுபடியும் சொல்கிறேன். அவர் விதிமுறைகளைப் பற்றி சொன்னார். உங்களைப் பற்றிக் குற்றச்சாட்டு ஏதாவது சொன்னாரா ? நீங்கள் எதற்கு எழுந்து மறிக்கிறீர்கள் ? (குறுக்கீடு). இல்லை, இல்லை. கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள். அவர் வந்து பொறுப்பு ஏற்பது என்பது ரொம்பக் கடுமையானது என்று விதிமுறைகளைச் சொல்கிறார். நீங்கள் எதற்குக் குறுக்கே வருகிறீர்கள் ? நீங்கள் யார் அதற்கு ? எதிர்க்கட்சித் தலைவர் சொல்லட்டும் என்ன விளையாட்டு? எப்பொழுது பார்த்தாலும் எழுந்து குற்றம் சாட்டுவதா ?

திரு. எஸ். ஆர். இராதா : அவர் குற்றச்சாட்டு சொன்னார். பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னார். ஆனால் இடையிலே அவர் மதுராந்தகம் தொகுதி என்று சொல்லி .. ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அவர் ஒன்றும் சொல்லவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே....

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே.... (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீங்கள் எல்லோரும் இருங்கள். அவர் ஒன்றும் மதுராந்தகம் பற்றிச் சொல்லவில்லை : திரு. உகம்சந்தைக் கூப்பிடவில்லை. 'பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன்' என்று சொல்கிறார் ; கடுமையான செய்தி ; அதனால் விதிமுறைகளைத் தெளிவுபடுத்த வேண்டும் ; அப்படி வந்து பொறுப்பு ஏற்றுக் கொண்டால் நாளைக்கு அவர் சிரமப்பட வேண்டி இருக்கும் என்ற நல்ல எண்ணத்தோடுதான் சொன்னார். வேறு ஏதாவது குற்றஞ் சாட்டினாரா ? (குறுக்கீடு). ஒன்றும் இல்லை. அப்புறம் இவர் எதற்கு எழுந்து கொண்டு கடந்த காலத்தில் சில பேர் பொறுப்பு ஏற்றார்கள் என்று கூறினார். இது தேவையா என்று நான் கேட்கிறேன். இது தேவையல்லவே! அப்புறம், அவர் உங்களுக்குத் திருப்பிச்சொல்வார் அல்லவா ? இந்த மாதிரித் தேவை இல்லாததை நீங்கள் கிளப்பிப் பழைய வரலாற்றை இழுத்து, திரு. உகம்சந்த் இந்த மாதிரிச் செய்தால் நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கும். உட்காருங்கள்,



திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, விளக்கம் சொல்ல வேண்டும் அல்லவா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். இனிமேல் நீங்கள் தேவை இல்லாமல் பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டு இருந்தால் நான் கடுமையாக இருப்பேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்** : தலைவர் அவர்களே, தாங்கள் நிற்கிறபோது மாண்புமிகு உறுப்பினரோ அல்லது யாருமோ நின்று கொண்டு பேசக் கூடாது. நீங்கள் எழுந்தால் அல்லது நீங்கள் தீர்ப்புச் சொல்கிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் அமருவதுதான் மரபு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. பழனிசுவாமி தொடர்ந்து பேசலாம். வேறு யாரும் பேசக் கூடாது.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் குழுக்களிலே பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், வட்டார வளர்ச்சி அதிகாரிகள் ஆகியோர்களை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். தற்போது மக்கள் நலப் பணியாளர்கள் 25 ஆயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. இவர்களை நியமனம் செய்வதில் சில முறைகேடுகள் நடைபெறுவதாகத் தெரிய வருகிறது. வேலை வாய்ப்பு பெறுவதற்காக ஆண்களும், பெண்களும் ஆயிரக் கணக்கான பேர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து பல ஆண்டுக் காலமாகக் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு கல்விக்குத் தகுந்தாற்போல் வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இடைப்பாடி நகரம் தற்போது தூய்மையாக இல்லாமல் நரகமாக இருந்துகொண்டு இருக்கிறது. அரசு அங்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இடைப்பாடி நகராட்சி போதுமான நிதி ஆதாரம் இல்லாமல் நலிந்த நகராட்சியாக இருக்கின்றது. அதற்குக் கூடுதலான நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இடைப்பாடி நகராட்சியில் வெள்ளாண்டிவலசு, கவுண்டம்பட்டி, நைனாம்பட்டி, சின்னமனலி ஆழிச்சம்பாளையம், ஆவணியூர்கோட்டை, தாவாந்தெரு போன்ற பகுதிகளில் சாக்கடை வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆழிச்சம்பாளையத்துக்கு கடந்த 6 மாத காலமாக இடைப்பாடியிலிருந்து காவிரித் தண்ணீர் கிடைக்கவில்லை. அங்கு வரும் குடிநீரை அண்ணா

போக்குவரத்து நிர்வாகப் பணிமனை இடையில் மோட்டார் பொறுத்தி தண்ணீரை எடுக்கிறார்கள். தற்போது ஆழிச்சம் பாளையத்திற்கு குடிநீர் செல்வதில்லை. இப்பகுதியில் 6 ஆயிரம் மக்கள் வசிக்கக்கூடிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால், பாதிக்கப்பட்டவர்களுக்கு அங்கு ஒரு ஆழ்துளைக் கிணறு போட்டு இருக்கின்றார்கள். அதிலே 4 அங்குலத் தண்ணீர் இருப்பதாக வாட்டர் போர்டு அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். இதைப் பயன்படுத்தி ஆழ்துளைக் கிணற்றில் விசைப் பம்பு பொறுத்தி, ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டி இப் பகுதிக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெள்ளாண்டிவலசில் மேல்நிலைத் தொட்டி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் வீரப்பன்பாளையம், கவுண்டம்பட்டி, நைனாம்பட்டி, ஆவணியூர்கோட்டை போன்ற பகுதிகளுக்கு ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இடைப்பாடி பஸ் நிலையத்தை யொட்டி உள்ள சரபங்கா நதியின் குறுக்கே பாலம் சிறிதாக குறுகி இருக்கின்ற காரணத்தால் விபத்து ஏற்படுகிறது. அந்தப் பாலத்தை அகலப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இடைப்பாடி நகரத்தில் வெள்ளாண்டிவலசு, கவுண்டம்பட்டி, வீரப்பன்பாளையம், ஆழிச்சம்பாளையம், ஆவணியூர்கோட்டை போன்ற பகுதிகளில் பெண்களுக்கு நவீன முறையில் கழிப்பிட அறை வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இடைப்பாடி நகரத்தில் வீரப்பன்பாளையத்திலும், ஆழிச்சம்பாளையத்திலும் அதிகமாக ஆதிதிராவிடர்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இடைப்பாடி நகரத்தில் குறிப்பாக ஜலகண்டாபுரம் பிரியும் ரோட்டிலிருந்து மோட்டூர் வரையிலும் நாச்சிபுளியம் ரோடு, வெள்ளநாயக்கன்பாளையம் ரோடு ஆகியவைகளை தார்ச் சாலையாக அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இடைப்பாடி நகரமன்ற உறுப்பினர்கள், புதிதாகக் கட்டப் பட்டுள்ள அரசு பொது மருத்துவமனைக்கு முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆரின் பெயரை வைக்க நகரமன்றத் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். ஆகவே அரசு இடைப்பாடி பொது மருத்துவமனைக்கு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரை வைக்க அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



எனது தொகுதியில் எடங்கணசாலை பேரூராட்சி சுமார் 24 ஆயிரம் மக்கள் கொண்ட பேரூராட்சியாக இருக்கிறது. அதை ஒரு பேரூராட்சியாகவும், இரண்டு ஊராட்சி களாகவும் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இடைப் பாடி ஊராட்சி ஒன்றியத்தில் சித்தூர் ஊராட்சியில் அதிக மக்கள் தொகை கொண்ட ஊராட்சியாக இருக்கின்ற காரணத் தால் அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

11-15 மணி

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் இருக்கின்ற மெரினா கடற்கரை தற்போது பொதுக் கழிப்பிடமாக மாறி வருகிறது. இதை மாற்றி நல்ல சுகாதாரமான முறையிலே வைத்துக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு அங்கு அதிக சுற்றுலா மக்கள் வருவதால் அவர்களைக் கவருகின்ற வகையிலே கோல்டன் பீச்சைப்போல உருவாக்க வேண்டுமென்றும் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அங்கு ஒரு ஓட்டலை நகராட்சி மூலமாகக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஊராட்சியிலும் பணம் கட்டிப் பல ஆண்டுக் காலம் ஆகியும் இன்னும் தெரு விளக்குகள் போடப்படாமல் இருக்கிறது. எனது மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலும் சுமார் 1,500 லைட்டுக்கு மேல் பணம் கட்டப்பட்டு பல ஆண்டு கள் ஆகின்றன. அவற்றிற்கெல்லாம் மின் இணைப்புக் கொடுக்க அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சியிலும் 500-க்கும் மேற்பட்ட லைட்டுகளுக்குப் பணம் கட்டிப் பல ஆண்டுக்காலம் ஆகிறது. அங்கும் தெரு விளக்குகளுக்கு மின் இணைப்புகள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

**திரு. எஸ். பி. கண்ணன்** : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, 1990-91 ஆம் ஆண்டுக்கான உள்ளாட்சி மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக மாண்புமிகு முதல்வரவர்களுக்கு அணைக் கட்டுத் தொகுதி மக்களுடைய சார்பாக என்னுடைய நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1958-ஆம் வருஷம் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டப்படி, தமிழ் நாட்டிலே தற்போதுள்ள ஊராட்சி நிர்வாகம் நடைமுறை யிலே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது, அதற்கு முன்பாக நாட்டாண்மைக் கழகம் என்றும், ஊராட்சிகள் என்றும், சமு தாய வளர்ச்சி வட்டாரங்கள் என்றும் இந்த மாநிலத்திலே நடைபெற்றுக் கொண்டிருந்தன.

ஊராட்சிகள் பொறுப்பேற்ற பிறகு அது மத்திய சர்க்காரிலே போடுகின்ற திட்டங்களானாலும் அல்லது மாநிலத்திலே போடுகின்ற திட்டங்களானாலும் அந்தத் திட்டங்களை நேரடியாக மக்களிடத்திலே அணுகி நடைமுறைப்படுத்துகின்ற நல்லதொரு ஆசானாக, நல்லதொரு தொண்டனாக அந்த ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஊராட்சி மன்றத்திலே தெரு விளக்குகளைப் பராமரிப்பதானாலும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதானாலும், சாலைகளைப் பராமரிப்பதானாலும் அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட ஊராட்சி பள்ளிக் கட்டிடங்களானாலும், இதைப் பராமரிக்கின்ற பொறுப்பு ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்ததாகும்,

ஆனால், இதைப் பராமரிக்கின்ற வகையிலே அந்த ஒன்றியத்திலே, அந்த ஊராட்சிகளிலே சரியான முறையில் நிதி கிடைக்காததன் காரணமாக மக்கள் சொல்லுகின்ற அந்தக் குறைகளை, எடுத்துச் சொல்லுகின்ற தருணத்திலே அந்தக் குறைகளைத் தீர்க்க முடியாத காரணத்தினாலே, அந்த ஊராட்சிகளிலே மக்கள் சொல்லுகின்ற குறையைத் தீர்க்க முடியாமல் இருக்கிறது. ஆக, அந்தக் குறையை உடனடியாகப் போக்க வேண்டுமென்றால் ஊராட்சிகளுக்கோ, ஊராட்சி ஒன்றியங்களுக்கோ, பேரூராட்சிகளுக்கோ நகராட்சிகளுக்கோ அரசாங்கம் போதுமான நிதியை ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், பள்ளிக் கட்டிடங்கள் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரத்திலே, அந்தப் பழுதடைந்த கட்டிடங்களை ஊராட்சி ஒன்றியங்கள் பழுது பார்த்த பிறகு, அந்தப் பழுது பார்த்த பொருட்களை இரவோடு இரவாக, அந்நக் கதவானாலும், ஜன்னலானாலும் களவாடப்படுகின்றன காரணம் என்னவென்றால், அந்தப் பள்ளிக் கட்டிடங்களைக் காவல் புரிவதற்காக இரவுக் காவலர்கள் இல்லாத காரணத்தினால் அந்தக் களவுகள் ஏற்படுகின்றன. அந்த நிலையைப் போக்க வேண்டுமென்றால், போதுமான இரவுக் காவலர்களை நியமிக்க அரசாங்கம் உத்தரவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தெரு விளக்குகளைப் பராமரிக்கின்ற நேரத்திலே, ஊராட்சிகளிலே போதிய நிதி ஆதாரம் கிடைப்பதில்லை. தெருக்களிலே பல்புகள் பழுதடைந்து விட்டால் உடனடியாகப் பல்பு வாங்குவதற்குக்கூட அந்த ஊராட்சிகளிலே நிதி இல்லை. அந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் பெருந்தலைவரிடத்திலே எடுத்துக் கூறுகின்ற நேரத்திலே, அந்தப் பொது நிதியிலேயிருந்து எடுத்துக் கொடுப்பதற்குக்கூட சட்டம் இடம் கொடுப்பதில்லை,



ஆக, மக்களுடைய குறையை உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்றால் அந்த நிதியாதாரம் தேவை ஆக, இந்த நிதியாதாரத்தை மனதிலே கொண்டு, முன்பு எப்படி அந்த விளக்குகளை மின்சாரத் துறையே பராமரித்ததோ, அதைப்போல, அந்த விளக்குகளைப் பராமரிக்கின்ற பொறுப்பை மின்சாரத் துறைக்கே கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

11-20 மணி

பள்ளிகளில் வழங்கப்படுகிற தளவாட சாமான்கள் 1976-ம் ஆண்டிற்கு முன்பாக ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றியிருந்த விவசாயத் துறையானாலும், கல்வித் துறையானாலும், சுகாதாரத் துறையானாலும், இந்த மூன்று துறைகளும் அந்தப் பொறுப்புகளை செவ்வனே செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் 1976-க்கு பிறகு அந்தப் பொறுப்புகளை ஒன்றியத்திலிருந்து நீக்கிவிட்ட பிறகு, அந்தப் பொறுப்புகளை செவ்வனே செய்ய முடியாத காரணத்தால் பள்ளிகளில் இருக்கிற தளவாட சாமான்களை ஒன்றியத்திலிருந்து கொடுக்க வேண்டுமா, கல்வித் துறையிலிருந்து கொடுக்க வேண்டுமா என்ற இக்கட்டான நிலையிருக்கிற காரணத்தால் பள்ளிகளுக்கு சென்று பார்க்கிற நேரத்தில் ஆசிரியர்கள் உட்காருவதற்கு நாற்காலி கூட இல்லாமல், பிள்ளைகள் எல்லாம் தரையில் உட்கார்ந்து படிக்கிற அவல நிலை இருக்கிறது. இதனை மனதில் கொண்டு இந்தக் கல்விக் கூடங்களை ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில், மேற்பார்வையில் கொண்டு வந்தால் இந்த அவல நிலையைப் போக்க உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றியங்களில் குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களை இன்றைக்கு நிரந்தரமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். குடும்ப நலத் திட்டம் என்பது முக்கியமான ஒரு தேசிய திட்டமாகும். அங்கே சுகாதார இலாக்கா பொறுப்பில் இருக்கிற ஒரு மாவட்ட குடும்ப நல அலுவலர் இருந்து வருகிறார், அந்த அலுவலர் இருந்தும் கூட அந்தப் பொறுப்புகளை, குடும்ப நலத் திட்டப் பணிகளை ஒன்றியத்தில் ஒப்படைத்து, அங்கே இருக்கிற சத்துணவு அமைப்பாளர்கள் ஆயாக்களை வற்புறுத்தி குடும்ப நலத் திட்டப் பணிகளை விரிவுபடுத்த உத்தரவிடுகிறார்கள். ஆகவே, இந்தத் திட்டங்களை சுகாதாரத் துறைக்கே ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஊராட்சிகளுக்கு இன்றைக்குப் போதுமான நிதியாதாரம் இல்லாத காரணத்தால் இருக்கிற சாலைகளை செவ்வனே பழுது பார்க்க முடியாத நிலை இருக்கிறது. எனவே, அரசாங்கம் நிலவரியைப் போடுகிற நடைமுறையில் ஏறக்குறைய $2\frac{1}{2}$ ரூபாய் அதிகப்படுத்தி போடுகிற அளவிற்கு வரியை இன்னும் உயர்த்தித் தந்தால் நிதியாதாரத்தைப் பெறுவதற்கு வழி வகை கிடைக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் கிராமங்களுக்கு குடிநீர் வழங்குகிற நேரத்தில், குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர்த தொட்டிகளைக் கட்டி, அந்தப் பொறுப்புகளை ஊராட்சிகளுக்குக் கொடுக்கிற போது, பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தில் அந்த மின் மோட்டாரை இயக்குகிற நேரத்தில் வருகிற செலவினங்களைக் கூட ஊராட்சிகள் கொடுப்பதற்கு நிதி நிலை இல்லாத காரணத்தால் மக்களுக்குப் போதுமான குடிநீர் கொடுக்க முடியாத அவல நிலை ஏற்படுகிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியான அணைக்கட்டுத் தொகுதியைப் பற்றி ஒரு சில குறைகளை, கருத்துக்களை எடுத்துக்கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். அணைக்கட்டுத் தொகுதி, அணைக்கட்டு ஒன்றியம் இந்த இரண்டிற்கும் தலைமைப் பீடமாக அணைக்கட்டு அமைந்து இருக்கிறது. அணைக்கட்டிலே ஒரு காவல் நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட காலமாக விடுத்தும், இந்நாள் வரையில் அங்கே காவல் நிலையம் ஏற்படுத்தப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

11–25 மணி

ஆகவே ஓர் ஆண்டுக் காலத்திற்குமுன்பாக காவல் துறையினர் அங்கே ஆய்வு செய்த நேரத்தில் அங்கே காவல் நிலையம் வரும் என்று கூறினார்கள். எப்போது வரும் என்று கேட்கிற நேரத்தில், அந்த மாவட்டம் பிரிந்த பிறகு அணைக்கட்டுக்கு காவல் நிலையம் வரும் என்று கூறினார்கள். ஆனால் மாவட்டம் பிரிந்து, ஏறக்குறைய ஒரு ஆண்டுக் காலம் ஆகிறது. இன்னும் அந்தக் காவல் நிலையம் அணைக்கட்டிலே ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே மக்களுடைய பாதுகாப்பைக் கருதி விரைவிலே அங்கே ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், அணைக்கட்டிலே தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், அணைக்கட்டிலே ...... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்): உள்ளாட்சித் துறை மானியம் குறித்து மட்டும் பேசினால் நலமாக இருக்கும்.

திரு. எஸ். பி. கண்ணன் : அடுத்தபடியாக இந்த ஊராட்சியிலே ஏற்படுகின்ற நிதி நிலைப் பற்றாக் குறையின் காரணமாக, இந்த மின்சாரத்திற்குக் கூட அங்கே பணம் இல்லாத காரணத்தால், அந்த நிதி நிலையை உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு.......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்) : அவர்கள் இப்போது தான் முதன் முதலாகப் பேசுகிறார். அதனால், அவருடைய கன்னிப் பேச்சிலே குறுக்கீடு இருக்கக் கூடாது என்பது தங்களுக்குத் தெரியும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : இதற்கு முன்பு பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கண்ணன் அவர்கள் இப்போது தான் பேசுகிறார். எனவேதான் தொகுதி கோரிக்கைகளை எல்லாம் எடுத்து வைக்கிறார்கள். என்பதை சுட்டிக் காட்டி, அவர்களுடைய உற்சாகத்தைக் குறைக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். பி. கண்ணன் : மாண்புமிகு உறுப்பினருக்கு என்னுடைய நன்றியைக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே என்னுடைய தொகுதியிலே தீயணைப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம், அணைக்கட்டிலே இருந்து, வேலூரானாலும் அல்லது, குடியாத்தமானாலும், அங்குள்ள தீயணைப்பு நிலையத்திற்கும் அணைக்கட்டுக்கும் ஏறக்குறைய 20, 25 கிலோ மீட்டர் தொலைவு உள்ளது. எனவே அங்கே திடீரென்று தீப்பற்றிக் கொண்டால், உடனடியாக தொலை பேசி மூலமாக அவர்கள் தகவல் தந்தாலும்; அவர்கள் விரைவாக வந்து அந்தத் தீயை அணைக்கின்ற நேரத்திற்குள், அங்கே வந்து சேருவதற்குள், தீ அனைத்தும் எரிந்து விட்டு, அங்கே சாம்பல் தான் நிற்கிறது. ஆகவே இந்த நிலையைப் போக்க அங்கே தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமுதாயநல வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகத்தின் கீழ் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாயத்தில் நிரந்தரமாகச் சொத்துக்களை ஏற்படுத்துவதற்காகவும், அதன் மூலம் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கும் விவசாயக் கூலிகளுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய வகையில் ஏற்படுத்தப்பட்ட ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் இன்று பொது மக்கள் மத்தியிலே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. மக்கள் தொகை அடிப்படையில் அந்த ஒதுக்கீட்டை ஊராட்சிகளுக்குப் பிரிப்பதால், இன்று நிதி ஆதாரங்கள் இல்லாத ஊராட்சி மன்றங்கள் தன்னுடைய அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே இந்தத் திட்டம் அமைந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன், பல

ஆண்டுக் காலமாக நிதி ஆதாரங்கள் இல்லாத ஊராட்சி மன்றங்கள் இந்த ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தை ஒரு வரப் பிரசாதமாகக் கருதுகின்றனர். இந்தத் திட்டம், இந்த நிதியாண்டும் செயல்படுத்தப்படும் என்று அறிவித்திருப்பது மகிழ்ச்சி தரக் கூடிய ஒன்றாகும். இந்த அருமையான திட்டத்தை நமக்கு அளித்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஒப்பந்தக்காரர்களை அமர்த்தக் கூடாது என்ற விதி முறை இருந்தும் கூட இன்றைக்கு பெரும்பாலான ஊராட்சி மன்றங்களிலே அந்த வேலைகளை ஒப்பந்தக்காரர்களே செய்து வருகின்றனர். நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு வழங்கப்படும் அரிசி, கோதுமை போன்ற பொருட்கள், வெளி மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்கப்பட்டு, அந்த ஒப்பந்தக் காரர்களால், இந்தத் திட்டத்தில் முறைகேடுகள் நடைபெற்று வருகின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த நோக்கத்திற்காக .. .. ..

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களை இந்தத் திட்டத்தை கைவிடலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. கே. ரவி அருணன்: இந்தத் திட்டம் நல்ல திட்டம்தான் ஆனால் எந்த நோக்கத்திற்காக இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறதோ, அந்த நோக்கம் தமிழகத்திலே நிறைவேற்றப்பட வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்கள் இன்றைக்கு பேரூராட்சிப் பகுதிக்கு விரிவுபடுத்தப்படுவதாக அறிவித்துள்ளது வரவேற்கக் கூடிய ஒன்றாகும். ஆனால் இந்தத் திட்டத்தைப் பேரூராட்சிப் பகுதிக்கு விரிவுபடுத்தும் போது, நிதி ஒதுக்கீடு போதிய அளவிலே உயர்த்தாமல் இருப்பது ஏற்கனவே கடந்த ஆண்டு ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு குறைய வாய்ப்பு உள்ளது. ஆகவே நிதி ஒதுக் கீட்டை அதிகப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

11-30 மணி

சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஏராளமான ரூபாய்கள் செலவிடப்படுகின்றன. ஆனால் இன்று தமிழகத்திலே ஊராட்சி ஒன்றியங்களில் அந்தத் திட்டம் சரிவர செயல்பட வில்லை. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் அந்தத் திட்டத்திற்கான



ஒதுக்கீடுகளை எவ்வாறு செலவு செய்ய முடியும் என்று எண்ணு கிறார்களே ஒழிய, அந்தக் கன்றுகளை நட்ட பின்பு அந்த கன்றுகளை பராமரிப்பதற்கோ, அல்லது தொடர்ந்து அதைக் கண்காணிப்பற்கோ எந்தவிதமான முயற்சிகளையும் எடுக்காததால் அந்தத் திட்டத்திற்கு செலவிடப்படுகின்ற பெரும்பாலான தொகை பாழடிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்ததாக சாண எரிவாயுத் திட்டத்தின் கீழ் 90,000 கலன்கள் இதுவரை அமைக்கப்பட்டதாக அமைச்சர் அவர்களின் கொள்கைக் குறிப்பிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் சாண எரிவாயுக் கலங்களில் பெரும்பாலானவை வேலை செய்யாமல் இருக்கின்றன. கடன் வாங்கிக் கலங்களை அமைத்த ஏழை விவசாயிகள், ஏழைத் தொழிலாளர்கள் தங்கள் கடன் களை திருப்பி செலுத்த முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஏனென்றால் கலன்கள் பாதிக்கு மேல் வேலை செய்யவில்லை. ஏற்கெனவே இருக்கின்ற கலன்களைப் பழுது பார்த்தால்தான் திட்டம் பொது மக்களுடைய நம்பிக்கையைப் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக வேலை வாய்ப்பு அலுவலகங்களில் ஏராளமான படித்த இளைஞர்கள் இருந்தும் கூட இன்றைக்கு மக்கள் நலப் பணியாளர்களை நேரடியாக தேர்வு செய்வது எவ்வாறு நியாய மானது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கக் கடமைப் பட் டிருக்கிறீர்கள்.

என்னுடைய தொகுதியில் விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி யைப் பொறுத்த வரையில் விக்கிரமசிங்கபுரத்தில் சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. ஆகவே சாலைகள் எல்லாம் ஓடைகளாகக் காட்சியளிக்கின்றன. பேரூராட்சி மன்றத்திலே இந்தச் சாலைகளைப் பராமரிக்க போதுமான நிதி இல்லை. ஆகவே விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சிக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள் கிறேன்.

விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சிப் பகுதியில் பெண்களுக் கான கழிப்பிட வசதி இல்லை. எனவே விக்கிரமசிங்கபுரம் பகுதியில் பெண்களுக்கான தனி கழிப்பிட வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள் கிறேன்.

சிவந்திபுரத்திலுள்ள மக்கள் தாமிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீரை குடிநீராகப் பயன்படுத்தி வருகின்றனர். அதற்கு அருகாமையிலுள்ள மதுரா கோட்ஸ் நிறுவனத்தினுடைய கழிவு நீர் அந்த ஆற்றில் விடப்பட்டு, அந்தக் கழிவு நீருடன் கலந்த

நீரை அவர்கள் குடிநீராகப் பயன்படுத்தி வருகின்றனர். ஆகவே சிவந்திபுரம் பேரூராட்சி மக்களுக்கு குடிநீர் வடிகால் வாரியத் நின் மூலம் அங்கே ஒரு ஒரு நல்ல திட்டத்தை தயாரிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மணிமுத்தாறு நகரத்திற்குப் போதுமான நிதி வசதி இருந்தும் கூட, அங்கே அந்தப் பொது மக்களின் அடிப்படைத் தேவை யான சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி போன்ற பணிகள் அங்கே பூர்த்தி செய்யப்படவில்லை. அந்த நகரத்தில் கூட்டம் நடந்து கூட பல மாதங்கள் ஆகின்றன. என்னுடைய தொகுதியில் பள்ளிச் சிறுவர்கள் பொழுது போக்குக்காக அவர்கள் செல்லும் ஒரே இடம் மணிமுத்தாறு ஆகும். மணி முத்தாற்றில் இருக்கின்ற பூங்கா பல ஆண்டுகளாக பராமரிக்கப் படாமல் உள்ளது. அந்தப் பூங்காவை பராமரிக்கின்ற பொறுப்பை மணிமுத்தாறு நகரியம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் ஒன்றியத்திலுள்ள சிவந்திபுரம் ஊராட்சி யிலும், கடையம் ஒன்றியத்திலுள்ள வெங்காடம்பட்டி ஊராட்சி யிலும் அதிக மக்கள் வசித்து வருகின்றனர். அந்த ஊராட்சி களை இரண்டாகப் பிரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்ப நலத் திட்டம் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள அதிகாரிகளால் அமல் படுத்தப்படுவதால், அந்தத் திட்டத்தில் பல முறைகேடுகள் நடைபெற்று வருகின்றன. உதாரணத் திற்கு தென்காசி, கடையநல்லூர், கடையம் போன்ற பகுதி களில் ஒன்றியங்களிலிருந்து இந்தத் திட்டத்திற்கு கேரள மாநிலத்திலிருந்து ஆட்களைக் கொண்டுவந்து அங்கே அந்தத் திட்டம் நிறைவேறப்பட்டதாக எண்ணிக்கை காட்டிக் கொண் டிருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத் திற்கு கொண்டு வருகிறேன்.

அடுத்ததாக இந்த ஊராட்சி மன்றத் தலைவர்களும், பொது மக்களும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு வரும்போது அங்கே ஆணையாளர்களோ, கிராம சேவக்குகளோ அல்லது மற்ற அதிகாரிகளோ அங்கே பெரும்பாலான நாட்களில் இருப்பதில்லை. ஏனென்று கேட்டால், வாரத்திற்கு 4 நாட்கள் அவர்களுக்கு மீட்டிங் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே போட்டிருக்கின்றார்கள் என்று சொல்கிறார்கள். ஒரு நாளைக்கு சிறு சேமிப்புத் திட்டம் என்கிறார்கள், ஒரு நாளைக்கு ஊரக வளர்ச்சி திட்ட மீட்டிங் என்கிறார்கள். ஒரு நாளைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டம் கூட்டியிருக்கிறார்கள் என்கிறார்கள். ஆகவே இந்தக் கூட்டங்கள் நடைபெறும் நாட்களை குறைத்து ஏதாவது ஒரு தினத்தில் மட்டும் கூட்டம் கூட்டி, மற்ற தினங்களில்



அனைத்து அதிகாரிகளும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே இருக்கும்படியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்

11–35 மணி

*.திரு மு.க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிர்வாகமும், மாநகராட்சிகளும் — கோரிக்கை எண். 28-அடிப்படையில் நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் நானும் கலந்து கொண்டு என்னுடைய கருத்துக் களை எடுத்துச் சொல்லுகின்ற வாய்ப்பினை பெற்றமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும்
நல்லுலகத்தின் தலைநகரமாம் சென்னை'

ஆம். அந்த சென்னை மாநகராட்சிக்கு நம்முடைய அரசு சுமார் ரூ. 35 கோடி இன்றைக்கு ஒதுக்கியிருக்கிறது. 1985–86-ல் ரூ. 7.21 கோடியும், 1986–87-ல் ரூ. 9.23 கோடியும், 1987–88ல் ரூ. 11.15 கோடியும், 1988–89ல் ரூ. 10.95 கோடியும், 1989-90-ல் ரூ. 20 கோடியும், 1990–91-ல் நடப்பாண்டில் ரூ. 25 கோடியும், பார்ட் ஒன்றில் ரூ.4.73 கோடியாகவும், பார்ட் இரண்டில் ரூ. 70 இலட்சமாக பல்வேறு சிறப்பு திட்டங்களுக்காக ரூ. 6 கோடியும் ஆக மொத்தம் சுமார் 35 கோடி ரூபாயை இன்றைக்கு நம்முடைய அரசு நம்முடைய சென்னை மாநக ராட்சிக்கு ஒதுக்கித் தந்து பல்வேறு சிறப்பான திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்கிற உணர்வோடு இன்றைக்கு அந்த ஒதுக்கீட்டை செய்து தந்திருக்கிறது. ஆக அப்படிப்பட்ட அந்த ஒதுக்கீட்டை பயன்படுத்தி நம்முடைய மாநகராட்சி பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற முன் வந்திருக்கிறது. குறிப் பாக இன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு அண்ணன் திரு. கோ.சி. மணி அவர்கள் அந்த பொறுப்பினை ஏற்றுக் கொண் டதற்குப் பிறகு குறிப்பாக நாம் இருக்கிற சென்னை மாநகரத்தில் பல ஆண்டு காலமாக மலை போல் குவிந்திருக்கிற குப்பை களை, துர்நாற்றம் அடித்துக் கொண்டிருந்த சாக்கடைகளைச் சிறப்பான வகையில் அனைத்தையும் சுத்தப் படுத்த வேண்டும் என்கிற உணர்வோடு மாண்புமிகு அமைச்சர் அவர்களே எந்த நேரத்திலே எந்த தெருவுக்கு வருகிறார் என்று தெரிய முடியாத நிலைமையில் சோதனைகளை நடத்தி, அந்த சோதனைகள் மூல மாக இன்றைக்கு சென்னை நகரமே ஒரு சிறப்பான சென்னை நகரமாக மாறியிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் சென்னை நகர மக்களின் சார்பில், அதிலும் குறிப்பாக ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலும், அவர்களுக்கு வாழ்த்து சொல்லு கின்ற அளவுக்கு எனக்கு வயது இல்லா விட்டாலும், அவருக்கு

என்னுடைய பணிவான நன்றியை, வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வந்திருக்கிற நேரத்தில் அதில் சில குறைபாடுகளை இங்கே நான் எடுத்துச் சொல்லி அவைகளையும் களைவதற்கான முயற்சிகளிலும் நம்முடைய அரசு ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகராட்சியினுடைய மக்கள் தொகை 45 இலட்சம் என்று மக்களுடைய கணக்குத் தொகை இப்பொழுது கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆக மக்களுடைய அன்றாட பிரச்சினையாக இருக்கிற பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியது நம்முடைய அரசினுடைய தீராத கடமையாகும். அதிலே முக்கியமானது போக்குவரத்து நெரிசல். இன்றைக்கு சென்னை நகரத்தில் எங்கு பார்த்தாலும் எங்கு போனாலும் போக்குவரத்தால் பாதிக்கப்பட்டு பல்வேறு சிரமத்திற்கு ஆளாக்கப்படுகிறோம். ஆகவே, இந்த போக்குவரத்தினை சரி செய்வதற்கு சாலைகள் கூட பெரிதாக போடப்படுகிறது அல்லது விரிவு படுத்தப்படுகிறது. அந்த நிலைமைகளையெல்லாம் நம்முடைய அரசு இன்றைக்கு கையாண்டு கொண்டிருக்கிறது. ஆக அப்படிப்பட்ட பணிகளால் நடைபாதைகள் பாதிக்கப்படுகின்றன. ஆக சாலைகளை விரிவுபடுத்த வேண்டும் என்கிற உணர்வோடு இன்றைக்கு நடைபாதைகள் ஆங்காங்கே அகற்றப்படுகின்றன. அந்த நிலைமைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

11-40 மணி

சில இடங்களில் நடைபாதைகள் இருந்தால் கூட அந்த நடைபாதைகளில் குடிசைகள், கடைகள் ஆகியவை அந்த நடைபாதைகளை ஆக்கிரமித்துக் கொள்கிற காரணத்தினாலே நடந்து செல்பவர்கள் கூட, நடைபாதையிருந்தும் அதை பயன்படுத்த முடியாமல் நடைபாதையினர் இக்கட்டான நிலையில் இருக்கின்றனர். ஆக இந்த நிலை ஏற்படுகின்றபோது ஆங்காங்கே பல்வேறு விபத்துக்கள் எல்லாம் இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே நான் பணிவோடு இந்த அவையிலே நம்முடைய தலைவர் அவர்கள் மூலமாக நம்முடைய அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, போக்குவரத்துக்காக நடைபாதைகளை எடுப்பதை—நோய்க்கு மருந்து தான் முக்கியமே தவிர டானிக் அல்ல—நடைபாதை இல்லாத சாலைகளே சென்னை நகரத்தில் இல்லை என்கிற ஒரு நிலைமையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நான் அமைச்சர் அவர்களிடத்திலே பல நேரங்களில் சொல்லியிருக்கிறேன். அவர் சோதனையிட வந்த நேரத்திலேயெல்லாம் நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். நடைபாதைகள் இருக்கின்ற சாலைகளைப் பாருங்கள் சுத்தமாக இருக்கின்றன, ஆனால் நடைபாதைகள் இல்லாத சாலைகளையெல்லாம் பார்க்கின்றபோது அவைகள் சீரழிந்த



நிலையில் இருக்கின்றன என்ற அந்த உண்மைகளை நான் அவரிடத்திலே பலமுறை எடுத்துக் காட்டியிருக்கிறேன். ஆகவே இதில் நம்முடைய அமைச்சர் அவர்கள் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கின்றேன்.

அடுத்து பூங்காக்கள். இன்றைக்கு சென்னை நகரத்தில் பல பூங்காக்கள் இருக்கின்றன. ஆனால் இருக்கின்றனவே தவிர, அவைகளை யாரும் பயன்படுத்த முடியாத நிலையிலே தான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக பூங்காக்களுடைய பெயர்களைப் பார்த்தால், இந்த நாட்டினுடைய பல்வேறு தலைவர்கள், இந்தச் சமுதாயத்திற்காக, வாழ்ந்திருக்கின்ற தலைவர்கள், இனத்திற்காக, மொழிக்காக தங்களுடைய உயிரை அர்ப்பணித்திருக்கின்ற தியாகிகள் பெயரால் கூட இன்றைக்கு பூங்காக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக நேரு பூங்கா, நேப்பியர் பூங்கா, ராபின்சன் பூங்கா, கோ. சு. மணி பூங்கா, பனகல் பூங்கா, திரு. வி. க. பூங்கா, இது போன்ற பல்வேறு தலைவர்கள் பெயரைத்தான் அந்த பூங்காக்கள் பெற்றிருக்கின்றனவே தவிர, அந்தப் பூங்காக்களில் பல்வேறு சமூக விரோத செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பூங்காக்களாகத்தான் இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கின்றன. ஆக இவைகளை எல்லாம் சீர்படுத்த வேண்டும். முக்கியமாக விளக்குகள் எல்லாம் அந்தப் பூங்காக்களில் பொருத்தப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக இதே மன்றத்தில் அன்றைக்கு அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த நம்முடைய மாண்புமிகு வீரபாண்டி ஆறுமுகம் அவர்களிடத்திலே நான் ஒரு கேள்வியைக் கேட்டேன். பூங்காக்களில் தொலைக்காட்சிப் பெட்டிகளை வைக்கின்ற உத்தேசம் உண்டா என்று நான் கேட்டேன். நிச்சயமாக அதற்குரிய பணியை அரசு செய்யும் என்று அவரும் உறுதிமொழி தந்திருக்கிறார்கள். ஆக அந்தப் பணியையும் நம்முடைய அமைச்சர் அவர்கள் தன்னுடைய மனதிலே நிலைநிறுத்தி அந்தக் காரியத்தையும் நிறைவேற்றித்தர வேண்டும். ஆக பூங்காவைப் பொறுத்தவரையில் பொழுதைக் கழிக்கின்ற ஒரு புனிதத் தன்மையோடு அந்தப் பூங்காக்கள் அமைவதற்கு நம்முடைய அரசு எல்லா பணிகளையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து மாநகராட்சிப் பள்ளி. இன்றைக்கு கார்ப்பரேஷன் ஸ்கூல் என்று சொன்னாலே மக்கள் வெறுக்கின்ற ஒரு பள்ளியாகத் தான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்றால் அந்த மாநகராட்சிப் பள்ளிகளில் நூறுக்கு தொண்ணூறு சதவிகிதம் ஏன் நூற்றுக்கு தொண்ணூற்றி ஒன்பது சதவிகிதம் கட்டிடங்கள் இடிந்த நிலையில், பராமரிக்கப்பட முடியாத நிலையிலே தான் இன்றைக்கு செயலாற்றிக் கொண்டு இருக்கின்றன. நாற்காலிகள், மேஜைகள் இல்லாத நிலையிலே தான் இன்றைக்கு அந்தப் பள்ளிகள் இருந்து கொண்டிருக்கின்றன.

ஆகவே நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவது இன்றைக்கு கல்லூரிகளில் அதே போல அரசு உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை அடிப்படையில், அந்த விகித்தாச்சார அடிப்படையில் ஆசிரியர்களை நியமித்து பணியாற்றிக்கொண்டிருக்கின்றனர். ஆகவே, அந்த அடிப்படையில் மாநகராட்சிப் பள்ளியைப் பொறுத்தவரையில் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், விகிதாச்சார அடிப்படையில் ஆசிரியர்களை நியமனம் செய்து இருக்கின்ற குறைபாடுகளை எல்லாம் நிவர்த்தி செய்து அந்த மாநகராட்சிப் பள்ளிகள் எல்லாம் சிறப்பான வகையில் செயலாற்றுகின்ற அந்தக் காரியத்தை ஆற்றிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

'' என்னருந் தமிழ்நாட்டின்கண் எல்லோரும் கல்வி கற்று
பன்னருங் கலைஞானத்தால் பராக்கிரமத்தால் அன்பால்
உன்னத இமய மலைபோல் ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர் இயம்பக் கேட்டிடல்
எந்நாளோ ''.

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதைக்கு உயிரூட்ட இன்றைக்கு நம்முடைய அரசு பல்வேறு திட்டங்களை மாணவர்கள் படிக்க வேண்டும் என்ற உணர்வோடு இலவசக் கல்வி, இலவச உடை, இலவச பஸ் பாஸ் அதிலும் குறிப்பாக பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு பல்வேறு சலுகைகளை இன்றைக்கு வழங்கியிருக்கின்றது. அவர்கள் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற அந்த உணர்வோடு இன்றைக்கு இந்தத் திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறது. ஆக இந்தத் திட்டங்கள் முழு அளவிற்கு நிறைவேற்றப்பட வேண்டும். இன்றைக்கு சென்னையில் இருக்கின்ற நம்முடைய மாநகராட்சிப் பள்ளிகள் அனைத்தையும் சீர்படுத்துகின்ற பணியில் நம்முடைய அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சத்துணவுக் கூடங்கள். இன்றைக்கு சத்துணவைப் பொறுத்தவரையில் முட்டையோடு கலந்த சத்துணவு, அதே போல வைட்டமின் மாத்திரையோடு ஊட்டச் சத்துணவாக அந்த சத்துணவை வழங்க வேண்டும். அந்த சத்துணவைச் சாப்பிடுகின்ற குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்கிற உணர்வோடு அந்தத் திட்டங்களையெல்லாம் இன்றைக்கு நம்முடைய அரசு செயலாற்றிக் கொண்டிருக்கின்றது.

**11-45 மணி**

ஆனால், அதே நேரத்தில் அந்த சத்துணவுக் கூடங்களில் சாப்பிட வருகிற குழந்தைகளுக்கு அந்த இடத்திலே குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இருக்கின்ற குடிநீர்த் தட்டுப்பாடு, ஆகவே, அந்தக் குழந்தைகள் சாப்பிட்டுவிட்டு, பக்கத்து வீட்டிற்கு அல்லது எதிர் வீட்டிற்குச் சென்று தண்ணீர் குடிக்க வேண்டிய சோகமான ஒரு சூழ்நிலை அமைந்திருக்கின்றது.



அது மாத்திரமல்ல. அந்தச் சத்துணவுக் கூடங்களைப் பார்க்கின்றபோது, அதைச் சுற்றி ஒரு சுகாதார நிலை இல்லாமல் அதைக் கழிப்பிடங்களாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற ஒரு நிலையிலேதான் அந்தச் சத்துணவுக் கூடங்களெல்லாம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, நான் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். குறளிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிற,

'' நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் ''.

என்ற அந்தக் குறளுக்கு எற்ப, நாம் என்னதான் குழந்தைகள் ஆரோக்கியமாக வாழவேண்டும் என்ற உணர்வோடு திட்டங்களை அறிவித்துக் கொண்டிருந்தாலும், அந்த அடிப்படைக் காரணங்களைப் புரிந்து கொண்டு, அதிலும் நம்முடைய அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, மாநகராட்சி சுகாதார நிலையம், இன்றைக்கு மாநகராட்சி சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையில் அங்கொன்றும், இங்கொன்றுமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. நான் அனைத்தையும் குறைசொல்லிப் பேசவில்லை. ஆனால் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புவது, இன்றைக்கு நம்முடைய அரசு தீவிரமாகப் பிரச்சாரம் செய்கிறது. என்ன பிரச்சாரம்? குழந்தைகளுக்கு போலியோ வராமல் தடுக்க வேண்டும். அதற்காக முன்னெச்சரிக்கையாக தடுப்பூசிகள் எல்லாம் போடவேண்டும் என்று இன்றைக்கு வானொலியில் தொலைக் காட்சியில், விளம்பரப் பலகைகள் மூலம், பேனர்கள் மூலமாக இன்றைக்கு அரசு அதற்காக நிதியைக் கூட ஒதுக்கீடு செய்து அந்தப் பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. ஆகவே, '' ப்ரிவென்ஷன் இஸ் பெட்டர் தேன் க்யூர் '' ( prevention is better than cure ) என்று சொல்வார்களே, வருமுன் காப்பது அந்த உணர்வோடு அந்தத் தடுப்பூசிகள் போடப்படுகின்றன. ஆனால் இதை இன்றைக்கு சென்னையிலே இருக்கிற எல்லா ஏழை மக்களும், குடிசைப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகிறார்களா என்றால் பயன்படுத்தவில்லை. ஆகவே, நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். சென்னையிலே இருக்கிற ஒவ்வொரு வட்டத்திலும் இந்த மாநகராட்சி சுகாதார நிலையங்களை ஏற்படுத்தி, அதன் மூலமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன.

அடுத்து, மாநகராட்சி விளையாட்டுத் திடல். விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில், நம்முடைய தமிழகம் மாத்திரமல்ல. இந்தியாவே இன்றைக்கு பின்னோக்கிப் போய்க் கொண்டிருக்கின்ற நிலையில் நம்முடைய விளையாட்டுத் துறை இருந்து

கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, நம்முடைய இந்தியாவில் வருகிற இரண்டாயிரத்து ஆண்டினுடைய துவக்கத்தில் ஒலிம்பிக் போட்டியைக் கூட நடத்துவதற்காக முடிவு எடுத்திருக்கின்ற ஒரு நல்ல செய்தி நமக்குக் கிடைத்திருக்கின்றது. ஆகவே, இந்த நேரத்திலாவது நாம் அந்த ஒலிம்பிக் போட்டியில் பல நாடுகளில் போய்க் கலந்து கொண்டிருக்கிறோம். இந்தியாவின் சார்பில் அதிலே சிறப்பான பரிசுகளைப் பெறமுடியாத நிலைமையிலே தான் நம்முடைய இந்தியா இருந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக இந்தியாவில் நடைபெற இருக்கின்ற அந்த ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் பெறுகின்ற சூழ்நிலையைப் பெறாவிட்டாலும் குறைந்தது ஒரு வெண்கலப் பதக்கமாவது பெறுகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு ஆங்காங்கு இருக்கின்ற நம்முடைய மாநகராட்சி விளையாட்டுத் திடல்களைச் சீர்படுத்தி, சுத்தப் படுத்தி, விளக்குகளையெல்லாம் பொருத்தி, விளையாட்டுக் கருவிகளையெல்லாம் அமைத்து, நம்முடைய விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்துகின்ற ஒரு சிறப்பான முயற்சியில் கூட ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, இன்றைக்கு சென்னை நகரத்தில் எங்கு பார்த்தாலும் பன்றிகள். அதை ஒரு குடிசைத் தொழிலாகவே சிலர் செய்து கொண்டிருக்கிற நிலைமை. நான் பல நேரங்களில் மாநகராட்சி அதிகாரிகளையெல்லாம் கூட அழைத்துச் சென்று, அதேபோல் அமைச்சர் அவர்களை அழைத்துச் சென்று அந்தப் பகுதிகளையெல்லாம் அவர்களிடத்திலே காட்டியிருக்கிறேன். இந்தப் பன்றிகளை வளர்க்கிறபோது, இந்தப் பன்றிகள் மீது கொசுக்கள் உட்கார்ந்து, அந்தப் பன்றியினுடைய ரத்தத்தைக் குடித்து, குடித்ததற்குப் பிறகு மனிதனுடைய ரத்தத்தை அந்தக் கொசு குடிக்க வருகிறது. ஆக, அப்படி வருகிறபோது அதில் நாம் பாதிக்கப்படுகிறோம். அந்த நிலையிலேதான் ‘என்சபலிட்டிஸ்’ என்கிற மூளைக்காய்ச்சல் இதன் மூலமாகத்தான் வருகிறது என்று இன்றைக்கு மருத்துவத் துறையில் இருக்கிற அதிகாரிகள் ஆதாரத்தோடு எடுத்துச் சொல்கிறார்கள். ஆக, இதைத் தடுத்தாக வேண்டும் என்றால் இன்றைக்கு இருக்கின்ற பன்றிகளையெல்லாம் உடனடியாக ஒழிக்கின்ற பணியில் நம்முடைய அரசு ஈடுபட வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, முக்கியமாக மாடுகள் பிரச்சினை. அந்த மாடுகள் பிரச்சினையைப் பொறுத்தவரையில், மாடுகளையெல்லாம் ஒழிக்கவேண்டும் என்ற கொள்கையோடு நான் பேசுகிறேன் என்று யாரும் தயவு செய்து கருதிவிடக்கூடாது. அதை வைத்துக் கொண்டு பலர் பிழைப்பு நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறார்கள் என்ற அந்த உண்மையை நான் அறியாமல் இல்லை. ஆனால் அந்த மாடுகளை நாம் சென்னை நகரத்திற்கு அப்பால், அல்லது



நகரத்திற்கு அப்பால்—இன்றைக்கு பம்பாய், டெல்லி நகரங்களிலே இதற்காக ஒரு இடம் ஒதுக்கப்பட்டு, அங்கே பெரிய ஷெட்டுகளை எல்லாம் போட்டு அங்கே அவர்களுக்குப் பல்வேறு வசதிகளைச் செய்து தந்திருக்கிறார்கள். இன்றைக்கு ஏறக் குறைய 35 கோடி ரூபாயை நம்முடைய சென்னை மாநகராட்சிக் காக ஒதுக்கி, அந்த மாநகராட்சி சுத்தப்படுத்த வேண்டும். சீர்படுத்தவேண்டும் என்று கருதுகிறோம் அல்லவா ? மாடுகளை ஒழிக்காமல் இந்தத் தொகையை ஒதுக்கி, என்னதான் நாம் காரியத்தில் ஈடுபட்டாலும் நிச்சயமாக நம்முடைய எண்ணம் ஈடேறமுடியாது. ஆகவே, நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், இதிலும் நம்முடைய அரசு கவனம் செலுத்த வேண்டும்.

11-50 மணி

அடுத்து, சுடுகாடுகள். இன்றைக்கு இருக்கின்ற சுடுகாடுகள், மேலை நாடுகளில் பார்க்கிறோம். மேலை நாடுகளில் இருக்கிற சுடுகாடுகள் பூங்காக்களைப் போல், ஏன், நந்தவனம் போல்கூட இன்றைக்குக் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன. ஆக நம்முடைய சென்னை நகரத்தில் இருக்கிற சுடுகாடுகளை நந்தவனம் போல் மாற்ற வேண்டும் என்ற கருத்தை நான் சொல்கிறேன் என்று யாரும் கருத வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இந்தச் சுடுகாடுகள் சுடுகாடுகளாக இருந்து ஆக வேண்டும். இன்றைக்கு ஏழை எளியவர்கள் வீட்டில் யாரோ ஒருவர் இறந்து விட்டால் அந்தப் பிணத்தை எடுத்துக் கொண்டு உறவினர்கள் சுடுகாட்டிற்கு கொண்டுபோய் அடக்கம் செய்கிறார்கள், அல்லது எரியூட்டுகிறார்கள். ஆக இந்த நிலையில் ஈடுபடுகிறபோது பல்வேறு துன்பங்களுக்கு நம்முடைய ஏழை எளிய மக்கள் ஆளாக்கப் படுகிறார்கள். பழமொழி சொல்வார்கள். '' செத்தும் கொடுத்தான் சீதக்காதி '' அதுபோல்செத்தும் கெடுத்தான்' என்று பிணத்தை வைத்து கோபப்படுகிற நிலைமை எல்லாம் இன்றைக்கு அந்தப் பிணத்திற்கு உரிய உறவினர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே அந்த உணர்வோடு அந்த சுடுகாட்டுப் பகுதிகளை சீர் செய்கின்ற முயற்சியில் அங்கே ஏற்கெனவே சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் இருக்கின்ற சுடுகாடுகளில் மின்சாரத்தின் மூலமாக அந்தப் பிணங்களை எரியூட்டுவது போன்ற முயற்சியில் கூட ஈடுபட்டோம். ஆனால் அது முழுமையாக இன்றைக்கு செயல்பட முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே அதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்றைக்கு பொதுவாக சென்னை நகரத்தில் பல விபத்துகள் ஏற்படுகிறன என்றால் அதற்கு முக்கியமான காரணமாக இருப்பது நெருக்கடி ஒரு பக்கம் இருந்தாலும் இன்னொரு காரணம் ‘ ஆபாச சினிமா சுவரொட்டிகள் ’ இந்த ஆபாச

[திரு. மு. க. ஸ்டாலின்] [1990 ஏப்ரல் 24

சினிமா சுவரொட்டிகள் முழுவதும் ஒழிக்கப்படவேண்டும் என்று நம்முடைய பெண் சமூக அமைப்புகள், பல்வேறு அமைப்புகள் பல கோணங்களில் போராட்டங்கள், மறியல்கள் எல்லாம் செய்து இருக்கிறது. ஆகவே, அந்த ' ஆபாச சினிமா சுவரொட்டிகள், ஒட்டுகிறபோது சினிமாவில் அந்தக் காட்சி வருகிறதோ, இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் சுவரொட்டிகளில் வந்து விடுகிறது. அவர்கள் விளம்பரத்திற்காக அதைப்பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதிலே மாநகராட்சியினுடைய முத்திரையை பதித்து அந்த விளம்பரத்தைப் பயன்படுத்துகிறார்கள். இன்றைக்கு சினிமாவுக்கு என்று ஒரு சென்சார் போர்டு இருக்கிறது. அதிலே ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு அந்தப் படத்தைப் பார்க்கிறது. வேண்டாத காட்சியை வெட்டுகிறது அல்லது அந்தக் காட்சி இருக்கவேண்டும் என்ற ஒரு சூழ்நிலை வருகிறபோது அதற்கு ஒரு சர்டிபிகேட் தந்து விடுகிறார்கள் அதாவது '' ஏ '', '' யூ '' சர்டிபிகேட், ஏதோ ஒரு சர்டிபிகேட் தந்து விடுகிறார்கள். ஆக அதற்கு ஒரு சென்சார் போர்டு இருப்பது போல் இந்த ஆபாச சினிமா சுவரொட்டிக்கும் ஒரு சென்சார் போர்டை அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவை அல்லது பொது நிறுவனங்களில் இருக்கின்ற பெரியவர்களைக் கொண்ட குழுவை' இதுபோன்ற பல்வேறு குழுக்களை அமைத்து இதை சீர்படுத்த வேண்டும். இல்லை என்றால் காரில் போகிறவர்கள் சைக்கிளில் போகின்றவர்கள், ஸ்கூட்டரில் போகின்றவர்கள் ஆகியோருக்கு அதனால் பல்வேறு விபத்துகள் எல்லாம் ஏற்படுகிறது. அனுபவம் பேசுகிறதா என்று கேட்டு விடாதீர்கள். இருக்கின்ற நிலைமையை நான் சொல்கிறேன். ஆகவே, அதை தயவுசெய்து நம்முடைய அமைச்சர் அவர்களே கூர்ந்து கவனித்து இதிலே ஒரு முறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, முக்கியமானது சாலையில் அமைக்கப்பட்டு இருக்கின்ற தெரு விளக்குகள். ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு, இன்றைக்கு எரியாத விளக்குகள் எல்லாம் சிறப்பான வகையில் எரிந்து கொண்டிருக்கிறது. நான்கூட ஆயிரம் விளக்குத் தொகுதியில் தேர்தல் நேரத்தில் சட்டமன்ற வேட்பாளராக நின்றபோது என்னுடைய தொகுதி மக்களை சந்தித்து வாக்குகள் கேட்டபோது அவர்கள் சொன்னார்கள். உன்னுடைய தொகுதிக்குப் பெயர், நம்முடைய தொகுதிக்குப் பெயர் ஆயிரம் விளக்கு, ஆனால் ஒரு விளக்கு கூட எரிவது இல்லை என்று எல்லாம் நம்முடைய தாய்மார்களும், பெரியவர்களும் என்னிடத்தில் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு என்ன நிலை என்றால் நம்முடைய அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு இன்றைக்கு தீவிரமாக நம்முடைய மாநகராட்சி அதிகாரிகள் அதில் தனிக் கவனம் செலுத்தி இன்றைக்கு எரியாத விளக்குகளை எல்லாம் எரிய வைத்துக்கொண்டு இருக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் அதிலே ஒரு



1990 ஏப்ரல் 24] [திரு. மு. க. ஸ்டாலின்]

கருத்தை நான் எடுத்துக் கூற விரும்புவது, முன்பு எல்லாம் விளக்குகளைப் பொறுத்தவரையில் கம்பங்களில் அந்த வட்டத்தினுடைய எண், அதற்குப் பிறகு அந்த விளக்கினுடைய நம்பர் அந்த போஸ்ட்டு கம்பத்தினுடைய நம்பர் இவைகளை அதிலே எழுதி ஒட்டி வைத்து இருப்பார்கள் அல்லது வரைந்து வைத்து இருப்பார்கள், ஆக அதை வைத்துக்கொண்டு ஏதேனும் புகார் செய்யவேண்டும் என்றால் மக்கள் தொலைபேசி மூலமாக அந்த நம்பரைச் சொல்லி புகார் சொன்னாலே அது சரி செய்யப்படுகின்ற நிலை உண்டு. ஆனால் இன்றைக்கு அந்த நிலை இல்லை. ஆகவே, அதிலே நம்முடைய அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த கொள்கை குறிப்புப் புத்தகத்தில் கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது, மாநகராட்சியின் பராமரிப்புப் பணிகள் ஒவ்வொரு வட்டமும் 15 கோட்டங்கள் கொண்ட 10 அலுவலர்களின் சிறப்பான மேற்பார்வையில் நடைபெற இருக்கிறது என்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதேபோல் இன்றைக்கு இருக்கின்ற நிலை என்ன என்றால், 15 வட்டங்களுக்கு ஒரு சர்க்கிள் ஆபீஸ் அமைக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் 10 வட்டங்கள் இருக்கின்றன. அந்த 10 வட்டங்களும் ஒரு சர்க்கிள் ஆபீஸில் தொடர்புகொள்ள முடிவதில்லை. என்ன காரணம் என்றால், 10 வட்டத்திலே 4 வட்டங்கள் ஒரு சர்க்கிள் ஆபீசுக்கு செல்ல வேண்டியிருக்கிறது. இன்னொரு 4 வட்டங்கள் இன்னொரு சர்க்கிள் ஆபீசோடு தொடர்புகொள்ள வேண்டியிருக்கிறது. அதற்கு பிறகு இன்னொரு 2 வட்டங்கள் இன்னொரு சர்க்கிள் ஆபீசோடு தொடர்புகொள்ள வேண்டியிருக்கிறது. ஆக இது போன்ற நிலை இருக்கின்ற காரணத்தால் எங்களுடைய தொகுதி மட்டும் அல்ல சென்னையில் இருக்கின்ற எல்லாத் தொகுதிகளும் இதே நிலையில்தான் இருக்கிறது. ஆக இதை நாம் முறைப்படுத்த வேண்டும். ஒரு சட்டமன்றத் தொகுதிக்குக் கூட ஒரு சர்க்கிள் ஆபீஸ் என்ற பொறுப்பினை நீங்கள் ஏற்படுத்தித் தந்தால் சிறப்பான வகையில் நாம் எண்ணுகின்ற வகையில் காரியங்கள் ஈடேற வாய்ப்பு உண்டு. இதையும் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆயிரம் விளக்கு சென்னை நகரத்தினுடைய மையப் பகுதியாக இருக்கிற தொகுதி ஆகும். ஆயிரம் விளக்குத் தொகுதியில் தான் வள்ளுவர் கோட்டம் இருக்கிறது. அந்த வள்ளுவர் கோட்டத்திற்கு எதிரில் ஒரு தெரு 107-ஆவது வட்டம், பிரகாசம் முதலி தெரு. பெயர் தான் பிரகாசம். ஆனால் அங்கே உள்ளே போய்ப் பார்த்தால் அது பிரகாசம் இல்லாத தெருவாகத்தான் இன்றைக்கு அமைந்து இருக்கிறது. நான் யாரையும் குறை சொல்லவில்லை. 5, 6 முறை மாநகராட்சியினுடைய ஆணையாளர் அதை வந்து பார்த்திருக்கிறார்கள்.

11-55 மணி

அதைப்போல ஏற்கெனவே பொறுப்பிலேயிருந்த நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் வந்து பார்த்தார்கள். அவருக்கு அடுத்து பொறுப்பு ஏற்றிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு அண்ணன் கோ. சி. மணி அவர்கள் வந்து பார்த்தார்கள். 5, 6 முறை அதை சோதனை யிட்டிருக்கிறோம். என்ன காரணம் என்றால், அந்தத் தெருவில் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள் காரிலே செல்ல முடியவில்லை. ஆட்டோவிலே செல்ல முடியவில்லை. சைக்கிளிலே செல்ல முடியவில்லை. நடந்துகூட செல்ல முடியாத நிலையில் இன்றைக்குத் தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்றால், சென்னை நகரத்திற்கு குடிநீர் சப்ளை செய்கின்ற மெட்ரோவினுடைய ஃபில்லிங் பாயின்ட் அங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் முக்கியமான ஒரு பிரச்சினைதான். சென்னை நகரத்திலே இருக்கிற மக்களுக்கு தண்ணீர் சப்ளை செய்துதான் தீரவேண்டும், இருக்கிற குடிநீர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு. அதற்காக 24 மணி நேரமும் லாரிகள் வந்து போய்க்கொண்டு இருக்கின்றன. இப்படி வந்து போகின்ற காரணத்தால்தான் அங்கேயிருக்கின்ற சாலை கள் சிரழிந்த நிலையிலே இருந்துகொண்டு இருக்கின்றன.

நம்முடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கருதி, தார்ச்சாலைகளைப் போடுவதைவிட கான்கிரீட்டாலான சிமெண்ட் சாலையைப் போடலாம் என்று முடிவெடுத்து சிமெண்ட் சாலைப் பணியைத் தொடங்கினார்கள். தொடங்கி பாதியளவுதான் முடிந்திருக் கும். அதற்குள்ளாக போட்ட அந்த சிமெண்ட் சாலையும் உடைந்து போயிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், அந்த ரோடு போடுகிற கான்ட்ராக்டரைக் கேட்டால் அவர் என்ன பதில் சொல்கிறார் என்றால், நாங்கள் சாலை களைப் போடுகிறோம், சிமெண்ட் ரோடு போடுகிறபோது அது கியூரிங் ஆவதற்கு 15 நாட்கள், குறைந்தபட்சம் ஒரு 10 நாளாவது வேண்டுமென்று சொன்னார். ஆனால் லாரிகள் அங்கே செல் லாமல் இருக்க முடியாது. காரணம் தண்ணீர் பிரச்சினை. நாம் அதையும் கவனிக்க வேண்டும். ஆகவே, இதற்கு ஒரு மாற்று வழி என்ன செய்வது என்று பல முறை யோசித்து யோசித்து நம்முடைய அமைச்சர் அவர்கள், அதற்குப்பிறகு குடிநீர் வாரி யத்தினுடைய பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிற நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், 10 நாட்களுக்கு முன்புகூட அந்த இடத்திற்கு நேரடியாக வந்து சோதனையிட்டு, உரிய அதிகாரி களிடத்திலே உத்தரவிட்டிருக்கிறார்கள். என்ன உத்தரவு என்றால், தற்காலிகமாக அந்த ஃபில்லிங் பாயின்டிலிருந்து நீண்ட பைப்பைக் கொடுத்து, லாரிகளை வேறு பக்கத்திலே நிற்க வைத்து தண்ணீரை நிரப்பி அனுப்பிவைக்க வேண்டுமென்ற



ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் முடிவு எடுக்கப் பட்டிருக்கிறதே தவிர இன்னும் அந்தப் பணிகள் தொடங்கப் படவில்லை. ஆகவே, விரைவாக அந்தப் பணியைத் தொடங்கு வதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டு மென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். பிரகாசம் இல்லாத தெருவாக இருக்கிற அந்தப் பிரகாசம் தெருவுக்கு, அந்தத் தெருவிலுள்ள மக்களுக்கு, ஒரு சிறப்பான பிரகாசத்தை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சென்னை நகரத்திலே இருக்கிற குடிசை மாற்று வாரியம். அந்தக் குடிசைமாற்று வாரியக் கட்டிடங்கள் இருக்கின்ற பகுதிகளில் குப்பைகள் மலைபோல் கொட்டப் பட்டிருக்கின்ற ஒரு கொடுமையான நிலை இருந்து கொண் டிருக்கிறது. அந்தக் குப்பைகளை எடுக்க வேண்டுமென்று சொல்கிறபோது அந்தத் துறையிலே இருக்கிற அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், இதை மாநகராட்சி அதிகாரிகள் தான் வந்து எடுக்க வேண்டும், அவர்களுடைய கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது, அவர்களிடம் சொல்லுங்கள் ; அவர்கள்தான் வந்து எடுக்கவேண்டுமென்று அவர்கள் தட்டிக் கழிக்கிறார்கள்.

அதைப்போல, கழிவு நீர். இதை அப்புறப்படுத்த வேண்டு மென்றால், மெட்ரோவுக்குச் சொல்லுங்கள் என்று சொல்கிறார் கள். இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைத்து ஒரு சிறப்பான முடிவை எடுத்தாக வேண்டும். அதுமாத்திர மல்ல, பல லட்சம் ரூபாய் செலவு செய்து தார் ரோடு போடு கிறார்கள். ரோடு போட்டுவிட்டு சென்ற ஒரு வார காலத் திற்குள்ளாக எலக்ட்ரிசிட்டி போர்ட்டுகாரர்கள் வருகிறார்கள் அல்லது டெலிபோன் ஊழியர்கள் வருகிறார்கள். அதைத் தொடர்ந்து பி.டபுள்யூ.டி., அதைத் தொடர்ந்து மெட்ரோ ; இப்படி வருகிறவர்களெல்லாம் ஒரு இடத்திலே பள்ளத்தைத் தோண்டி விட்டு அந்த இடத்திலே மண்ணை எடுத்துப்போட்டு மூடிவிட்டு போய்விடுகிறார்கள். சிலபேர் மண்ணைக்கூட போடாமல் அப்படியே விட்டுவிட்டுப் போய்விடுகிற ஒரு நிலையும் இருக்கிறது. இதுபோன்ற நிலைமைகளையெல்லாம் உடனடியாக சரிபடுத்த வேண்டும். அதிலும் குறிப்பாக, நம்முடைய சென்னை நகரத்தில் இன்றைக்கு அரசு சம்பந்தப் பட்டு இருக்கிற பல்வேறு துறைகள் இருக்கின்றன. உதாரண மாக, கார்ப்பரேஷன், மெட்ரோ, குடிசைமாற்று வாரியம், வீட்டுவசதி வாரியம், பி.டி.சி., எம்.எம்.டி.ஏ., ஹைவேஸ், போலீஸ், போக்குவரத்து இப்படி பல துறைகள் சேர்ந்து சென்னை நகரத்தை இன்றைக்கு ஆக்கிரமித்துக் கொண்டிருக் கின்றன. சென்னையை ஆக்கிரமித்துக்கொண்டு இருக்கிறதே தவிர இன்றைக்கு அவர்களுக்குள்ளே ஒரு கோ-ஆர்டினேஷன் அதாவது ஒருங்கிணைப்பு செயல்பாடுகள் இல்லாமல் இருந்து

கொண்டிருக்கிறது. ஒரு ஒருங்கிணைப்போடு, ஒரு கோ-ஆர்டினேஷனோடு இதை கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், மொத்தமாக இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்றால் நான் மிகுந்த பணிவோடு இந்த அவையிலே கேட்டுக்கொள்ள விரும்புவது, சீஃப் சிட்டி டெவலப்மெண்ட் கமிஷன் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அந்த அமைப்புக்கு, இன்றைக்கு சீஃப் செக்கரட்டரி இருப்பதுபோல, அந்தத் தகுதியுடைய ஒரு அதிகாரி அதற்குப் பொறுப்பேற்று, எல்லா துறைகளிலும் இருக்கிற அதிகாரிகளோடு தொடர்பு வைத்துக்கொள்வதற்கு, எல்லா துறை சம்பந்தப்பட்டிருக்கிற அதிகாரிகளோடு தொடர்பு வைத்துக்கொண்டு பல்வேறு பணிகளை ஆற்றுவதற்கு இதை முறைப்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

*12-00 மணி*

அதைத் தொடர்ந்து நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சில நாட்களுக்கு முன்பு வெளியூரில் ஒரு பேட்டி தந்து அந்த பேட்டிகூட பத்திரிக்கையிலே செய்தியாக வந்திருக்கிறது. வருகிற செப்டம்பர் மாத இறுதிக்குள்ளாக மாநகராட்சித் தேர்தலை நடத்தப்போகிறோம் என்ற உறுதிமொழியைத் தந்திருக்கிறார்கள். ஆக அந்த உறுதிமொழியைக் கேட்கிறபோது எங்களுக்கு எல்லாம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. காரணம், சென்னையிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்குத்தான் அந்தக் கொடுமை தெரியும். இன்றைக்கு நாங்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக சென்னையிலே இருக்கிறோம் என்றால், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் செய்கின்ற வேலைகளையும் சேர்ந்து இன்றைக்கு நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் 10 வட்டங்கள் இருக்கின்றன. ஒரு சில தொகுதிகளில் 13 வட்டங்கள் இருக்கின்றன. ஆக ஒரு சட்டமன்ற உறுப்பினர் பல வட்டங்களைப் பார்க்க வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. ஆக அந்தப் பிரச்சினைகளில் தலையிடுகின்றோம். ஆனால் உடனடியாக முடிவடையாத நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் மக்களுடைய பிரச்சினை, அன்றாடப் பிரச்சினை உடனுக்குடன் தீர்க்கப்பட வேண்டுமென்றால், ஒரு வட்டத்தினுடைய மக்கள் எல்லாம் சேர்ந்து தேர்தெடுக்கின்ற ஒரு மக்கள் பிரதிநிதி இருப்பாரேயானால், நிச்சயமாக உடனுக்குடன் எல்லா காரியங்களையும் நிறைவேற்றுவதற்கு உண்டான வாய்ப்பு உண்டு. ஆகவே உடனடியாக அந்தத் தேர்தலை நடத்துவதற்காக நான் இந்த அரசை மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



அப்படி நடத்துகிறபோது இன்னொன்றையும் இந்த அரசு சிந்திக்க வேண்டும். இன்றைக்கு சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் மக்களுடைய தொகை கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு வட்டத்திற்கு 10,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். இன்னொரு வட்டத்திற்கு 15,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். இன்னொரு வட்டத்திற்கு 20,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். இதிலே குறிப்பாக சைதை தொகுதியில் இருக்கின்ற புற நகர்ப் பகுதியைச் சேர்ந்த 148 வட்டத்திற்கு மாத்திரம் இன்றைக்கு 45,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். ஆகவே வட்டத்திற்கு வட்டம் இன்றைக்கு மாறுபட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில்தான் வாக்காளர்கள் அமைந்திருக்கிறார்கள். ஆகவே இதை ஒரு முறைப்படுத்தி வட்டத்திற்கு இவ்வளவு வாக்காளர்கள்தான் இருக்கவேண்டுமென்ற அடிப்படையில் அந்த வட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் 150 வட்டங்கள் இருக்கின்றன என்றால் குறைந்தது 200 வட்டங்களாக மாற்றி, 50 வட்டங்களை அதில் அதிகமாக சேர்த்து, 200 வட்டங்களைக் கொண்ட ஒரு அமைப்பாக ஏற்படுத்தி, அதற்குப் பிறகு அந்த மாநகராட்சித் தேர்தலை நடத்தினால் சிறப்பான வகையில் நாம் இவ்வளவு கோடியை ஒதுக்கியிருக்கிறோம் என்றால், அந்த இவ்வளவு கோடியும் சிறப்பான வகையில், பயன்பெறத் தக்க வகையில் அது அமையும். ஆக அந்த முயற்சியில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த அவையில் அவைத் தலைவர் மூலமாக நம்முடைய அமைச்சர் அவர்களையும், அரசையும் கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்த அவைத் தலைவருக்கு நன்றி கூறி அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

**திரு. எஸ். ஏ. தங்கராஜன்:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, ஊராட்சி வளர்ச்சி மன்றத்தினுடைய கொள்கை அறிக்கையின் மீது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

அறிக்கையின் முன்னுரையில் கடந்த காலத்திலிருந்த ஆட்சியாளர்களால் பறிக்கப்பட்ட உரிமைகள் திரும்ப வழங்கப்பட்டதையும், ஜனநாயக உரிமைகள் விரிவுபடுத்தப்பட்டதையும் அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. உள்ளபடியே நான் அதை வரவேற்கின்றேன். ஜனநாயக அமைப்புகளைக் கொண்ட முறையில் இந்த உள்ளாட்சி அமைப்புகள் இயங்குவதன் மூலம்தான் மக்களின் ஜனநாயக கடமைகள், தேவைகள் நிறைவேறும் என்ற முறையில் அத்தகைய அணுகுமுறை சரியானது என்பதைச் சொல்கிறபோதே செய்ய வேண்டிய அடிப்படையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

சிறப்பான ஒரு கொள்கை இருந்தால் மட்டும் போதாது. அந்தச் சிறப்பான ஒரு கொள்கையை அமல்படுத்துவதற்கு சிறப்பான நடைமுறையும் இணைந்து இருந்தால்தான் கொள்கையும், நடைமுறையும் இணைந்து இருப்பதன் மூலம்தான் இந்தத் திட்டங்கள் நிறைவேற முடியும்.

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்கள் நகராட்சித் தலைவர்களின் கூட்டத்திலே கலந்து கொண்டு பேசுகின்ற போது இந்த உண்மையைச் சரியாகச் சொன்னார். மாநில அரசு போடுகின்ற திட்டங்கள் அனைத்தையும் இந்த உள்ளாட்சி அமைப்புகள்தான் நிறைவேற்றுகின்றன. ஆகவே ஆட்சியாளர்கள் போடுகின்ற திட்டங்களை நிறைவேற்றும்படியான பெரும் கடமை இந்த அமைப்புகளுக்கு உண்டு என்பதை தெளிவாக எடுத்துக் கூறினார். அது முற்றிலும் உண்மை. அதே சமயம் இந்த உள்ளாட்சி அமைப்புகள் அனைத்தும் மாநில அரசினுடைய நிதியை எதிர்பார்த்துத்தான் இயங்குகின்றன. மாநில அரசு எவ்வாறு மத்திய அரசாங்கத்தினுடைய நிதி ஆதாரத்தோடு செயல்படுகின்றனவோ அதுபோன்று இந்த உள்ளாட்சித் துறை அமைப்புகள் அனைத்தும் மாநில அரசினுடைய நிதி ஆதாரத்தைக் கொண்டுதான் இயங்குகின்ற காரணத்தால் ஒரு புதிய பொருளாதார அணுகுமுறை மாநில அரசுக்கு இருக்க வேண்டுமென்பதை இங்கு நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். நீண்ட நெடுங்காலமாக எத்தகைய கொள்கையை இந்த மாநில அரசு இந்த உள்ளாட்சித் துறை நிறுவனங்களின்பால் பொருளாதார கொள்கையை அனுசரித்து வந்ததோ, அதில் எவ்வித மாற்றமும் இல்லாத நிலையில் இருப்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர நான் ஆசைப்படுகிறேன்.

உதாரணமாக மாநில அரசு வழங்கும்படியான மானியம் உயர்த்தப்படாமலேயே பழைய நிலையிலேயே இருந்து கொண்டிருக்கிறது. கொடுத்து வந்த சில மானியங்களும் குறைக்கப்பட்டிருக்கின்றன. அத்தோடு இந்த நகராட்சிகள், மாநகராட்சிகள், நகரியங்கள் தனது நிதியை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு, கட்டிடங்களை உண்டு பண்ணுவதற்கு, மூலதன முதலீடுகளை செய்வதற்கு மாநில அரசு நிதி ஆதாரத்தை அதிகமான அளவிற்கு ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

12-05 மணி

மேலும் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருக்கும் 30 லட்சம் ஊழியர்களின் ஊதியத்தை மாநில அரசே நேரடியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆசிரியர்களின் ஊதியத்தை அரசு ஏற்றுக் கொண்டு இருப்பதைப்போல, துப்புரவுப் பணியாளர்களுடைய ஊதியத்தையும் அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும்.



கான்ட்ராக்ட் முறை என்று ஒரு கொடுமையான முறை
உள்ளாட்சி நிறுவனங்களில் இருக்கிறது. அந்த கான்ட்ராக்டர்
களுடைய கொள்ளைக்கு எல்லையே கிடையாது. சிமெண்ட்
இல்லாமல் கட்டிடம் கட்டுகிறார்கள். கட்டி முடிந்த 6
மாதத்தில் அந்தக் கட்டிடங்கள் தகர்ந்து விடுகின்றன. இவை
களையெல்லாம் இங்கே விரிவாகச் சொல்வதற்கு நேரம் ஆகும்.
உள்ளாட்சித் துறையில் குப்பை வண்டிகளை இழுக்க மாடுகள்
இருக்கின்றன. அந்த மாடுகளுக்கு தீவனம் வினியோகிக்க
கான்ட்ராக்ட் விடுகிறார்கள். அந்தக் கான்ட்ராக்ட்காரனுக்கு
மாட்டைப் பராமரிப்பதில் அக்கறை இருக்க முடியுமா
என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். 3000 ரூபாய்க்கு வாங்கப்
படுகிற மாடு 6 மாதத்திலேயே 800 ரூபாய்க்கு ஏலத்தில்
போகிறது. அவன் சப்ளை செய்கிற அந்த உணவு முறை,
மாட்டுக்குப் போடுகிற தீவன முறையின் கொடுமையின்
காரணமாக அப்படி நேரிடுகிறது. ஆகவே மாநில அரசு
கொடுக்க வேண்டிய மானியத் தொகை நகராட்சிகளுக்கு
மிகப் பெரிய அளவில் நிலுவையில் இருக்கிறது. என்னுடைய
தொகுதியில் திண்டுக்கல் நகரசபையின் மானியத் தொகை
நிலுவை மட்டும் ரூ. 80,87,400. பல்வேறு தலைப்புகளில்
கொடுக்க வேண்டிய மாநில அரசின் மானியத் தொகை,
அரசு நகராட்சிகளுக்குக் கொடுக்காத நிலையும் நீடிக்கிறது
என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

மேலும் இத்தகைய உள்ளாட்சி நிறுவனங்கள் தங்களது
சொந்த நிதி ஆதாரத்தில் இயங்குவதற்கு மாநில அரசு
திட்டவட்டமான, தெளிவான ஒரு அடிப்படைக் கொள்கையை
அனுஷ்டிக்க வேண்டும் என்பது எனது தாழ்மையான
கோரிக்கை. நகராட்சிகள், மாநகராட்சிகள் ஏராளமான
கடைகளைக் கட்டலாம். புறம்போக்கு நிலங்களில்
உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, அந்த இடங்களில் எல்லாம்
சர்க்காரோ, நகராட்சிகளோ, ஊராட்சி மன்றங்களோ
கடைகளைக் கட்டினால் ஏராளமான நிதியைப் பெறலாம்.
திருமண மண்டபங்கள் கட்டலாம். இன்றைக்கு திருமண
மண்டபங்களை பதிவு செய்து கொண்டுதான் திருமணங்களே
நடக்கின்றன. அவைகளைக் கட்டலாம். திரையரங்கு
களைக் கட்டலாம். டவுன் ஹால்களைக் கட்டலாம்.
வாரச் சந்தைகளை நவீனப்படுத்தலாம். பஸ் ஸ்டாண்டுகள்,
லாரி நிலையங்களை நவீனப்படுத்துவதற்கு சர்க்கார் நேரடி
யாக நிதி ஆதாரங்களை இந்த உள்ளாட்சி நிறுவனங்களுக்குச்
செய்து தந்தால்தான் இந்த உள்ளாட்சி அமைப்புகள்
சொந்த பலத்தில், சொந்தக் காலில் நிற்க முடியும்
என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்னொரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். மேற்கு வங்காள அரசு, தனது மொத்த வருவாயில் 50 சதவீதத்தை இந்த உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ஒதுக்குகிறது. அது மட்டுமல்ல, கான்ட்ராக்ட் அபாலிஷன் ஆக்ட் என்ற சட்டத்தையே கொண்டு வந்து உள்ளாட்சி நிறுவனங்கள் கான்ட்ராக்ட் முறையில் பணிகளைச் செய்யக்கூடாது என்று தடை விதித்ததன் விளைவாக, மக்களின் நேரடியான பிரதிநிதிகளின் மூலம் அபிவிருத்தி வேலைகளை நடத்த உத்தரவாதமாகவும், உள்ளாட்சி மன்றங்கள் நிதி ஆதாரத்தைப் பெருக்கக் கூடிய விதத்திலும் செயல்படுவது ஒரு நல்ல அணுகுமுறையாக இருக்கிறது என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நகரியங்களுக்குத் தேர்தலை நடத்தாமலேயே நியமன உறுப்பினர்களைக் கொண்டு வந்து அவர்கள் இருந்து வருகிறார்கள் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நகரியங்களில் இருக்க வேண்டுமென்பதையும், நகரியங்களை நகராட்சிகளாக மாற்றுவதைத் தடை செய்திருக்கிற காரணத்தால், அந்தத் தடையை நீக்கும் சட்டமொன்றை இயற்ற வேண்டுமென்றும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன். 10—15 ஆண்டுக்கு முன்பு இருந்த மக்கள் தொகையின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட நகராட்சிகளின் வார்டுகள் இருப்பதாக இன்றைக்கு அளிக்கப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பிலே அரசே ஒத்துக் கொள்கிறது. 1981-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டை விட 65 சதவீதம் மக்கள் தொகை இப்போது உயர்ந்து இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு கணக்கெடுத்தால் கிட்டத்தட்ட 80 சதவீதம் ஜனத்தொகை உயர்ந்து இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை என்று நான் உணருகிறேன். ஆனால் இவ்வளவு பெரிய ஜனத் தொகை வளர்ந்ததற்குப் பிறகும், பழைய வார்டுகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியங்களையும் நகராட்சிகளையும் வைத்திருப்பதை மாற்ற வேண்டுமென்றும் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு இருக்கக்கூடிய முக்கியமான, ஆக்கப் பெரும் பணி என்னவென்றால், கல்வி, மருத்துவம், குடிநீர், சாக்கடை வசதி போன்ற அடிப்படையான சமுதாயப் பணிகளைச் செய்ய வேண்டுமென்பதுதான். 65 சதவீத ஜனத் தொகை பெருகி, குடியிருப்புகள் கூடியும், இந்த துப்புரவுப் பணியாளர்கள் மட்டும் கிட்டத்தட்ட 50 ஆண்டுக் காலமாக புதிதாக நியமிக்கப்படவில்லை என்றால் அந்த வேலைகள் எல்லாம் எப்படி சரியாக இருக்கும்? தமிழகத்தின் துப்புரவுப் பணி செம்மையாக நடைபெறும் வாய்ப்பு இருக்குமா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



12-10 மணி

ஒவ்வொரு நகரசபையும்,ஊராட்சி ஒன்றியமும் தங்களுக்கு துப்புரவுப் பணியாளர்களை அதிகப்படுத்த வேண்டுமென்ற தீர்மானங்களை நிறைவேற்றி பல ஆண்டுகளாக மாநில அரசின் இருப்பில் இருந்து கொண்டிருப்பதை இந்த சமயத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். எனவே அந்த துப்புரவுப் பணியாளர்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்தத் துப்புரவுப் பணி என்பது சமுதாயத்ினுடைய அடிப்படையான பணி. ஆனால் அந்த மக்களின் நிலைமை ஒரு நாடு விடுதலை பெற்று 43 ஆண்டுகளுக்குப் பிறகும், இந்தத் துப்புரவு தோட்டித் தொழிலாளர்களின் வாழ்க்கையில் ஒரு முள்ளுமுனை மாற்றம் கூட இல்லாத நிலையை ஒதுக் கொண்டு, அடுக்கப்பட்ட மூட்டைகளில் அடி மூட்டையாக அமிழ்ந்து கிடக்கும்படியான நிலையை இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டு வர ஆசைப்படுகிறேன். அந்தத் தொழிலாளர்கள் மனிதனின் மலத்தை தன் கையாலே எடுத்து, தன் தலையிலே எடுத்து சுமக்கும்படியான கொடுமை 43 ஆண்டுகளாக இந்த நாட்டில் நடக்கிறது. உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் இத்தகைய கொடுமை இல்லை என்பதையும் இந்த அவையின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். பன்றிகள் வாழும் கேவலமான குடிசைகளில் இந்த துப்புரவுத் தொழிலாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ குடிசை மாற்று வாரியத் திட்டங்களை நாம் தீட்டிக் கொண்டிருக்கிறோம். இந்தத் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும்படியான பணியை செவ்வனே செய்ய வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மாதச் சம்பளத்தைக் கூட மாதா மாதம் போட முடியாத நிலைமை இந்த உள்ளாட்சி அமைப்புகளில் இருந்து கொண்டிருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்தில் பகுதி நேர ஊழியர்கள்—'பார்ட் டைம் ஓர்க்கர்ஸ்' என்று வைத்திருந்தார்கள். அதேபோல் இன்றைக்கும் இந்தத் துப்புரவுப் பணியாளர்களை பகுதி நேர ஊழியர்களாக வைத்துக் கொண்டு, ரூ. 100, முதல் ரூ. 200 வரை சம்பளமாகக் கொடுத்து வேலை வாங்குகின்ற நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் ஒரு ஆதாரத்தை நான் சொல்ல வேண்டும். அது முற்றிலும் உண்மை. முழு நாள் விடுப்பு இல்லாத தொழிலாளர் தமிழகத்தில் ஒருவர் உண்டு என்று சொன்னால், அது இந்த நகர சுத்தி தொழிலாளர்களுக்குத்தான் முழு நாள் விடுப்பு இல்லாத கொடுமை இன்றைக்கும் நீடித்துக்கொண்டிருக்கிறது. நான் அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இந்த உழைப்பாளி மக்களுக்கு முழு நாள் விடுப்பு அளிப்பதற்குச் சட்டம் கொண்டுவரவேண்டும்.

[திரு. எஸ். ஏ. தங்கராஜன்] [1990 ஏப்ரல் 24

1973-ஆம் ஆண்டு இந்த துப்புரவுப் பணியாளர்களுக்கு பென்ஷன், கிராஜுவிட்டி சட்டம் என்று அரசு கொண்டு வந்தது. ஆனால் இன்று வரையிலே அந்தச் சட்டம் அமல் நடத்தப்பட வில்லை. அமல் நடத்தப்படவில்லை என்று தொழிலாளர்கள் நீதிமன்றத்துக்குச் சென்றார்கள், தொழிலாளர் நீதிமன்றத் திற்கு— கோவை, சேலம், திண்டுக்கல், மதுரை ஆகிய நீதிமன்றங் களுக்கு. தொழிலாளர்கள் நீதிமன்றம், கொடுக்காதது தவறு, அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்ற தீர்ப்பைச் சொல்லியது. இந்த ஸ்தலஸ்தாபன அதிகாரிகள்—அரசே—உயர்நீதிமன்றத் திற்கு அப்பீல் செய்திருக்கும்படியான கொடுமையை, அநீதியை இந்தச் சபைக்கு நான் நினைவிற்குக் கொண்டுவர ஆசைப் படுகிறேன். அரசு போட்ட சட்டத்தை அரசு நிறுவனங்களே நிறைவேற்றவில்லையென்றால், தனியார்த் துறையில் தொழி லாளர்கள் எவ்வளவு சிரமப்படுவார்கள் என்பதை நான் இங்கு சொல்லத் தேவையில்லை. ஆகவே இந்தத் துப்புரவுத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்கின்றபோது அவர்களுடைய குழந்தைகளை வீதியிலே விட்டுவிட்டுச் சென்று விடுகிறார்கள். அவை தெரு முழுவதும் சுற்றித் திரிகின்றது. அவர்களுக்கு குழந்தை காப்பகம் என்ற ஒரு அமைப்பை அரசு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கைகளை எல்லாம் வலியுறுத்தியதன் விளைவாக 1989-ஆம் ஆண்டு தமிழகத்தினுடைய செயலாளர் திரு. ஷெட்டி அவர்கள் இந்த தொழிலாளர் தலைவர்களையும் அரசு அதிகாரிகளையும் கூப்பிட்டு ஒரு முத்தரப்பு மாநாட்டை நடத்தினார். அதில் கொள்கை ரீதியாக இந்த கோரிக்கைகள் எல்லாம் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் முத்தரப்பு மாநாட்டில், அரசு கூட்டிய மாநாட்டில் ஒப்புக்கொண்ட கோரிக் கைகளைக் கூட இன்று வரை அமல் நடத்தாத நிலை நடக்கிறது என்பதையும் தமிழக அரசுக்கு நான் கொண்டு வந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட அழகாக ஒரு விஷயத்தை எடுத்துச் சொன்னார்கள். ஒரு ஐஸ் கட்டியை ஒருவன் கையில் கொடுத்து கடைசி மனிதன் கைக்கு அது மாறுகிறபோது ஒரு சொட்டுத் தண்ணீராக மாறிவிடுகின்றது என்று எடுத்துச் சொன்னார்கள். அரசு போடுகின்ற திட்டங்களும் சட்டங்களும் இவ்வாறு இருக்கிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். மாண்புமிகு ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்று சொல்கிறேன். நாளை 25-ஆம் தேதி காலை தமிழகம் முழுவதும் இருக்கின்ற துப்புரவு ஊழியர்கள் அரசைச் சந்தித்து, தங்களது கோரிக்கைகள் கோட்டையின் வாயிலை எட்ட வருகின்றார்கள். அவர்களைச் சந்தித்து, அவர் கள் மனுக்களை ஏற்று, சர்க்கார் போடுகின்ற உத்தரவை நிறைவேற்றுவதற்கு நீங்கள் ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வருகின்ற அந்தப் பேரணி மேம்பாலம் வரை வருவதற்கு அமைச்சரவர்கள் அனுமதிக்கவேண்டுமென்று கேட்டு, என் உரையை முடிக்கின்றேன்.



1990 ஏப்ரல் 24]

12–15 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கடிதம் கொடுத்தார்கள். இரண்டு நாட்கள் ஆயிற்று. அந்தக் கடிதத்திலேயே நாங்கள் பேரணி யாகத் திரண்டு வந்துதான் இந்தக் கோரிக்கையைச் சொல் வோம் என்று எழுதி இருந்தார்கள். நான் அந்த மனுவைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். பரிசீலித்துக் கொண்டும் இருக்கிறேன். ஆனால் ஊர்வலம் வருவதற்கு அனு மதிக்கிற பொறுப்பு என்னிடத்தில் இல்லை. அது வழக்கமாகக் கூட இல்லை. ஊர்வலம் வந்து கொடுக்கக்கூடிய வழக்கம் இல்லை. எனவே அதற்கு நான் பொறுப்பு ஏற்கவும் இல்லை.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, அவர்கள் கோட்டைக்கு வரவேண்டும் என்று நானும் விரும்பவில்லை. அண்ணா சமாதி வரையில் அந்த பேரணி வருவதற்காவது நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோரிக்கைகளை சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் அவர்களே என்னிடத்தில் தந்து விவாதித்து அதில் முடிவு ஏதும் ஏற்படாமல் போனால் அதற்குப் பிறகு ஊர்வலத்திற்கு நீங்கள் தயார் செய்திருக்க லாம். ஆரம்பக் கட்டத்திலேயே ஊர்வலத்திற்குத் தயார் செய்து விட்டால், அப்படி வர வேண்டும் என்று சொன்னவர் களுக்கு இதை நீங்கள் அறிவுரையாக வழங்கி இருக்கலாம். இருந்தாலும் சட்ட மன்ற உறுப்பினருடைய கோரிக்கையாக அதை ஏற்றுக் கொண்டு முழுமையாக நான் பரிசீலிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி யினுடைய நிர்வாகம் 1973-லேயிருந்து சிறப்பு அதிகாரி யிடத்திலே இருந்து வருவது ஜனநாயகத்திற்கு ஏற்புடையதல்ல, நகர வளர்ச்சிக்கு வழி வகுக்கக் கூடியதாகவும் அது இல்லை. எனவே இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு மாநகராட்சி மன்றத்திற்கான தேர்தல் விரைந்து நடை பெறும் என்றும், செப்டம்பர் மாதத்திற்குள் தேர்தல் நடைபெறும் என்றும் அறிவித்திருப்பதை நான் வரவேற்ப தோடு இன்றைக்கு இருக்கிற வட்டங்களைப் பிரித்திடும் போது யதார்த்த நிலைகளைக் கருத்தில் கொண்டு வட்டங் களைப் பிரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது தொடர்பாக சென்னையிலிருக்கின்ற சட்ட மன்ற

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1990 ஏப்ரல் 24

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

உறுப்பினர்களுடைய கூட்டம் ஒன்றை நம்முடைய மாநகராட்சி மன்றம் கூட்டி அவர்களுடைய ஆலோசனைகளையும் பெற்றிருக்கிறது. தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள 150 வட்டங்களையும் நாம் ஏற்றுக் கொள்வோமேயானால் ஒவ்வொரு வட்டத்திலும் ஏதோ பாதி சட்ட மன்ற உறுப்பினர் தொகுதியிலே வருகிற அளவுக்கு வாக்காளர்களுடைய எண்ணிக்கை வருகிறது என்ற காரணத்தால் ஏறக்குறைய 12,000. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கு ஒரு சிறிய இடைவேளை. அடுத்து நீங்கள் தொடர்ந்து பேசலாம். இப்போது மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

### 6. அரசினர் தீர்மானம்.

**பேரவை விதிகள் 36 மற்றும் 37-ஐத் தளர்த்தி விதி 95-இன் கீழ் ஒரு தீர்மானத்தை அவையில் எடுத்துக் கொள்ளுதல்.**

***மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதிகள் 36, மற்றும் 37 ஆகியவற்றைத் தளர்த்தி மேற்படி விதிகளில் விதி 95-ன் கீழ் ஓர் அரசினர் தீர்மானம் கொண்டு வர அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி அளிக்கப் பெற்றது.

### 7. அரசினர் தனித் தீர்மானம்.

**காவிரி நீர்ப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்க மத்திய அரசைக் கோருதல்.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக அவசரமாக இந்தத் தீர்மானத்தை முன்மொழிய வேண்டிய அவசியம் வந்ததற்கான காரணத்தை நான் விளக்க வேண்டியவனாக இருக்கிறேன்.



1990 ஏப்ரல் 24] [டாக்டர் மு. கருணாநிதி]

உச்ச நீதிமன்றத்தில் காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையை உடனடியாக மத்திய அரசு நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டும் என்று தஞ்சை மாவட்ட விவசாயிகள் தொடர்ந்துள்ள வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்றைய தினம் அந்த வழக்கில் பேச்சு வார்த்தையினுடைய முடிவு என்ன என்பதை அறிந்து கொள்ள உச்ச நீதிமன்ற நீதிபதி ஆவலாக இருக்கிறார். அந்த முடிவு 24 ஆம தேதி அன்று நடைபெறுகிற இந்த விசாரணைக்கு முன்பு தெரிய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் சொன்னதன் விளைவாக டெல்லியிலே ஒரு முறை பேச்சுவார்த்தை மத்திய அரசினுடைய அமைச்சர் முன்னிலையில் தமிழகத்தின் சார்பிலும், கர்நாடகத்தின் சார்பிலும், கேரளத்தின் சார்பிலும், புதுவை மாநிலத்தின் சார்பிலும், முதலமைச்சர்களும், தொடர்புடைய அமைச்சர்களும் கலந்து கொண்டு பேச்சுவார்த்தை நடைபெற்று, டெல்லியில் பேச்சுவார்த்தை வெற்றி அடையாமல் முடிவுற்றது.

12-20 மணி

நமது கர்நாடக முதலமைச்சர் அவர்கள், தமிழக முதலமைச்சரிடத்திலே முதலமைச்சரும் நானும் சென்னையிலே கலந்து பேசி நல்ல முடிவு எடுக்கலாம் என்று சொல்லும்போது நான் கர்நாடக திட்டவட்டமாகக் கேட்டுக் கொண்டேன். அப்படி நடைபெறுவதாக இருந்தால், 24 ஆம் தேதி சுப்ரீம் கோர்ட் விசாரணை தொடங்குவதற்கு முன்பே, நடைபெற்றாக வேண்டும் என்று கூறி, அதற்காகத் தான் 19 ஆம் தேதி சென்னையில் அந்தப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, நானும், கர்நாடக முதலமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்களும் அந்தப் பேச்சுவார்த்தையை நடத்தினோம். அந்தப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்திருக்கிறது. அதற்குப் பிறகு, அவர் விடுத்த அறிக்கைகளில் பேச்சுவார்த்தை தொடரலாம் என்றும், அவரே ஒரு அறிக்கையில் இனி மேல் பேச்சுவார்த்தை இல்லையென்றும முரண்பட்ட செய்திகளைச் சொல்லியிருக்கிறார். நமக்கு அதில் முரண்பாடான கருத்து இல்லை, முழுமையான கருத்து, பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து விட்டது என்பதுதான். கடந்த 20 ஆண்டுகளாகப் பேசிப் பேசிப் பார்த்து, எந்த விதமான ஒரு முடிவுக்கும் வர முடியாமல், 26 அல்லது 27 தடவைக்கு மேல் பேசிய பிறகும், இனியும் பேச்சுவார்த்தை தொடரலாம் என்பது காலங் கடத்துகின்ற ஒரு முயற்சியாகும். பேச்சுவார்த்தை என்கிற பெயரிலேயே, கடந்த நான்கைந்து ஆண்டுக் காலத்தில், நமக்கு அளிக்க வேண்டிய தண்ணீரின் அளவு, மிக மிகக் குறைந்து, 140 டி.எம்.சி., 150 டி.எம்.சி., என்கின்ற அளவுக்குக் குறைக்கப்பட்டு விட்டது. அவர்கள் மேலும் பேச்சுவார்த்தை என்று காலம் கடத்தினால், தமிழ்நாடு மிக மிகக் கடுமையாகப் பாதிக்கப்படும் என்று

காரணத்தினால், இனி பேச்சுவார்த்தைக்கே இடமில்லை; பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து விட்டது என்ற செய்தியை நாம் உச்ச நீதிமன்றத்திற்குச் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். அதைத்தான், நான் இங்கே ஒரு தீர்மானமாக முன் மொழிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' காவிரிப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று, உச்ச நீதிமன்றம், மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டுமென்று, தஞ்சை விவசாயிகள் சார்பில் தொடர்ந்துள்ள வழக்கில், தமிழக அரசு தன்னையும் இணைத்துக் கொண்டிருப்பது ( Implead ) தெரிந்ததே. இன்று, உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கின் மீது, விசாரணை தொடர்ந்து நடக்கிறது. கடந்த 19 ஆம் தேதி, தமிழக முதலமைச்சருக்கும், கர்நாடக முதலமைச்சருக்கும் இடையே நடந்த இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து விட்டது என்றும், இனி பேச்சுவார்த்தைக்கே இடமில்லை என்றும், எனவே, உச்ச நீதிமன்றம், காவிரிப் பிரச்சினையை, உடனடியாக நடுவர் தீர்ப்புக்கு விடுவதற்கு, மத்திய அரசு உத்தரவிட வேண்டுமென்றும், நமது தமிழக அரசின் சார்பில், உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உண்மை நிலையை, மத்திய அரசின் சார்பிலே மறைக்காமல் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்து உரைக்க வேண்டுமென்றும் பேரவையின் சார்பில், தமிழக அரசு, மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது ''.

இந்தத் தனித் தீர்மானத்தை அனைவரும் ஆதரித்து, நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக.

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மானியக் கோரிக்கைகள், 1990–91, விவாதமும்
வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உத்தேசித்துள்ள 150 வட்டங்கள் என்று ஏற்கெனவே உத்தேசிக்கப்பட்ட நிலையில் இந்தப் பிரச்சினை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, குறிப்பாக சென்னை மாநகரத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுடைய கூட்டங்களை நடத்தி, ஒரு பொது கருத்து உருவாக்கப்பட்டது. 12 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரம் வாக்காளர்களுக்கு மேற்படாமல், ஒவ்வொரு வட்டமும் உருவாக்கப்பட வேண்டும்; எண்ணிக்கையைப் பற்றி கவலை இல்லை. 200-க்கும் மேற்பட்ட வட்டங்கள் ஏற்பட்டாலும், போதிய அளவுக்கு தேர்ந்தெடுக்கப்படுகிற மாநகராட்சி மன்ற உறுப்பினர், தன்னுடைய வட்டத்திலே இருக்கிற மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டும்



அவர்களுடைய அபிலாஷைகளை-தேவைகளை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பினைப் பெறக்கூடிய வகையிலேயும், மக்களுடைய எண்ணிக்கை—வாக்காளர்களுடைய எண்ணிக்கை அமைந்திட வேண்டும் என்கிற ஒரு ஒத்தக் கருத்து உருவாக்கப்பட்டது. அரசு அந்தக் கருத்தை, கருத்திற்கொண்டு, வட்டங்களைப் பிரிக்கும்போது, ஜனத்தொகையை, வாக்காளர்களுடைய எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தி, வட்டங்களினுடைய எண்ணிக்கை கொஞ்சம் உயர்ந்தாலும் பரவாயில்லை என்கிற அளவுக்கு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

12-25 மணி

அதே நேரத்தில் வட்டங்களைப் பிரிக்கும்போது, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை மக்களுடைய வாய்ப்புகளைக் குறைத்திடும் வகையிலே பிரிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். சில இடங்களில், குறிப்பாக சிறுபான்மை மக்கள் ஒட்டுமொத்தமாக வாழ்கிற தெருக்களை இரண்டு வட்டங்களிலும், 3 இடங்களிலும் ஒரே தெருவைப் பிரித்து, இணைத்து இருக்கக்கூடிய யோசனைகள் சொல்லப்பட்டிருப்பது, அது ஆய்வில் இருப்பது ஏற்புடையதல்ல. அதுமட்டுமல்லாமல், அது சிறுபான்மை மக்களுக்கு அநியாயம் செய்யக்கூடிய ஒரு நடவடிக்கை என்பதையும் நான் திட்டவட்டமாக சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

உதாரணமாக சேப்பாக்கம் தொகுதியிலே, சிறுபான்மை மக்கள் பெருவாரியாக வாழ்கிற தெருக்களை சின்னா பின்னப்படுத்தி, ஏற்கெனவே எந்த நோக்கத்தில் இது செய்யப்பட்டிருக்கிறதோ தெரியவில்லை, இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை, என்றாலும் இறுதி முடிவு எடுக்கும்போது அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினருடைய கருத்தையும் அறிந்து முடிவு எடுப்பதுதான் சரி. அதுபோல மாண்புமிகு முதலமைச்சருடைய தொகுதியில் இப்போது 50-வது வட்டம் என்று குறிக்கப்படுகிற வட்டத்தை பெண்களுக்காக ஒதுக்கீடு செய்திருப்பதாக கேள்விப்படுகிறேன். அல்லது அது தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாக கேள்விப்படுகிறேன். ஏற்கெனவே 14-வது வட்டமாக இருந்த துறைமுகம் தொகுதியிலே ஒரு சில வட்டங்களிலே தான் சிறுபான்மை மக்கள் வர வாய்ப்பு உள்ளது என்பதால் அந்த வட்டத்தைத் தாழ்த்தப்பட்டவர்களுக்கோ அல்லது பெண்களுக்கோ ஒதுக்கீடு செய்யாமல், அப்படி செய்வது சிறுபான்மை மக்களுக்கு உள்ள வாய்ப்பை பறித்து விடுவது மட்டுமல்லாமல் சிறுபான்மை மக்கள் வாழ்கிற ஓர் இடத்தை வேறு நிலைக்குக் கொண்டுபோய் விடுவதும் ஆகும் இது சரியல்ல. ஆனால் இது எந்த நோக்கத்தில் செய்யப்படுகிறதோ, தெரியவில்லை. இருந்தாலும், செப்டம்பர் மாதத்திற்குள் தேர்தல் நடைபெற வேண்டுமென்ற விருப்பம் இன்றைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன், செப்டம்பர்

மாதம் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு, சென்னை மாநகரத்திலுள்ள பிரச்சினைகளை அரசு முறையாக ஆய்வு செய்து அவற்றை தீர்த்திட முயலவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு சென்னை நகரத்திலுள்ள பிரச்சினைகளுக்கே காரணம், வருமானம் சென்னை நகரத் திற்கு போதுமானதாக இல்லை. எவ்வளவு வருமானம் வரு கிறதோ அது அதனுடைய செலவினங்களுக்கு ஏற்ப இல்லை என்கிற கருத்து ஒப்புக்கொள்ளப்படுகிறது. கடந்த பல ஆண்டு களாக சென்னை நகரத்தில் சொத்து வரி உயர்த்தப்படவில்லை. தொழில் வரி உயர்த்தப்படவில்லை. சொத்துவரியைப் பொறுத்தவரையில் நிலத்தினுடைய மதிப்பு மற்றும் வீட்டினுடைய மதிப்பு உயர்ந்திருக்கிறதிற்கு ஏற்ப, அதன் விகிதாச்சாரத்திற்கு ஏற்ப எந்த அளவுக்கு உயர்த்தப்பட வேண்டுமென்று ஆய்வு செய்யப்பட்டிருக்கிறதா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. எனவே, முறையாக சொத்துவரியை உயர்த்துவதற்கு உரிய வழிவகைகளை, சென்னை மாநகராட்சியிலே மட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும் இருக்கின்ற எல்லா உள்ளாட்சி அமைப்பு களிலும் செய்யப்பட வேண்டுவது இன்றியமையாதது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு பல நகராட்சி மன்றங்களிலே, மாநகராட்சி மன்றங்களிலே இருக்கின்ற பல்வேறு குறைகளுக்குக் காரணமே போதிய அளவு நிதியில்லை, ஒருசில நகராட்சி களின் ஊழியர்களுக்குக் கூட மாதா மாதம் சம்பளம் கொடுக்க வழிவகை இல்லை. எனவே, காலதாமதம் ஏற்பட்டு, ஊழியர் களிடையே அது ஒரு கொந்தளிப்பு நிலையை ஏற்படுத்தி, மேல் அதிகாரிகளுக்கு அடங்காத, இன்டிசிப்ளின் நிலை ஏற்படு கிறது என்பதை நாம் ஒத்துக்கொண்டாக வேண்டும். ஆகவே, இதுகுறித்து எல்லாம் சிந்தித்து செயல்பட்டாக வேண்டும்.

இன்றைக்கு நகராட்சிகளில் வருகிற முக்கியமான நிதி ஆதாரங்களில் மிகவும் முக்கியமானது சொத்து வரி ஆகும். அடுத்து கேளிக்கை வரி மூலம் வருகின்ற வருமானம். ஸ்தல ஸ்தாபனங்களில் வருகிற முக்கியமான நிதி ஆதாரம் இது ஆகும். நிதி வாயில்களிலே, கேளிக்கை வரியிலே, விற்பனை வரி மிகக் கூடுதல் வரி என்று சொல்லப்படுவதிலே எல்லாம் இன்றைக்கு மிகுந்த வரி ஏய்ப்பு நடைபெறுவதை நாம் மறந்து விடக் கூடாது. எனவே, வரி ஏய்ப்பை எப்படி தடுத்திட வேண்டும் என்பதற்கு ஒரு முறையான திட்டம் வேண்டும். இந்த வரி ஏய்ப்பை குறைக்க வேண்டுமென்று சொன்னால், அது ஒரு தனி மனிதனால் முடியுமா என்றால் எனக்கு சந்தேகமாக இருக்கிறது. ஏற்கெனவே இது புரையோடி விட்ட ஒன்றாக இருக்கிறது. ஆகவே, ஓர் இடத்திலே உள்ள பொந்தை



அடைத்தால், வேறொரு இடத்தில் அது தோன்றிவிடும் என்கிற அளவுக்கு கேளிக்கை வரியிலே, சொத்து வரியிலே எல்லாம் வரி ஏய்ப்பு நடைபெறுகிறது. ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் மிகுந்த அளவுக்கு, பெருமள வுக்குத் தடைப்படுகிறது. அதை முறைப்படுத்தி, எந்த அள வுக்கு, கூடுமான அளவுக்கு நாம் முறையாக வசூலிக்க வேண்டு மென்பது குறித்தும் நாம் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**12-30 மணி**

மாண்புமிகு உறுப்பினர், நம்முடைய தம்பி திரு. ஸ்டாலின் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். நம்முடைய எலக்ட்ரிசிட்டி டிப்பார்ட்மெண்ட் தனியாக வேலை செய் கிறது. மெட்ரோ தனியாக வேலை செய்கிறது. சாலை பரா மரிப்புத் துறை தனியாக வேலை செய்கிறது. துப்புரவுத் துறை தனியாக வேலை செய்கிறது. ஒருவருக்கொருவர் ஒருங்கிணைப்பே இல்லை என்பதை அவர் அழகாகச் சுட்டிக் காட்டினார்கள். அது உண்மை. எனவே ஒட்டுமொத்தமாக இவ்வளவு துறைகள் காரியத்தைச் செய்யும்போது, ஒரு ஒருங்கிணைப்பு—அக்கே ஷனல் கன்டசல்டேஷன்—ஆவது இருக்க வேண்டும். இவர் களிடத்திலே ஷிப்டபிலிட்டி ஆப் ரெஸ்பான்சிபிலிட்டி என்ற டென்டன்சி இன்றைக்கு அதிகமாக இருக்கிறது. எனவே இது குறைக்கப்பட வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மாதத்திற்கு ஒரு முறையாவது அல்லது 3 மாதத்திற்கு ஒரு முறையாவது தொடர்புடைய துறைகள் எல்லாம் ஒன்றுகூடி, ஒருங்கிணைந்த முறையில் ஆய்வு செய்து, எப்படி எல்லாம் ஒருங்கிணைந்த முறையில் பணியாற்ற வேண்டுமென்பதற்காக வழிமுறைகளை, செயல் திட்டங்களை அவர்கள் வகுத்தால் தான், இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். வேறு வகை யிலே இதைத் தீர்க்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு அமைச்சரவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு சென்னை நகரத்திலே எல்லா இடங் களிலும் ஒரு திக் விஜயமே செய்திருக்கிறார்கள். அதிகாரிகள் கூட கொஞ்சம் பயந்து கொண்டிருக்கிறார்கள். எந்த நேரத்திலே அமைச்சர் வருவாரோ தெரியாது என்று. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, இந்தத் துறையை நிர்வகித்துக் கொண் டிருந்த மாண்புமிகு வீரபாண்டி ஆறுமுகம் அவர்களாக இருந் தாலும் சரி அல்லது இப்போது நிர்வகித்துக் கொண்டிருக்கும்

மரியாதைக்குரிய திரு. கோ.சி. மணி அவர்களாக இருந்தாலும் சரி, இவர்கள் இன்றைக்கு இதிலே முனைப்பு காட்டுகிறார்கள். அவர்களே அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள். பல இடங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் போகும்போது, அந்தந்த சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினர் என்ற முறையில் அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டு, காரியங்களைச் செய்கிறார்கள். ஆனால் அமைச்சர்கள் எடுத்துக்கொள்கிற அக்கறை அளவுக்கு அதிகாரிகள் எடுத்துக் கொள்கிறார்களா மனத்தளவிலே என்பது கேள்விக்குறி. எனவே நான் மறைத்துப் பேசி பிரயோசனம் இல்லை. உண்மையை எடுத்துச் சொல்ல வேண்டும். அமைச்சர்கள் வரும்போது குறிப்புகள் எடுக்கப்படுகின்றன. நாங்கள்கூட தொகுதிகளில் சுற்றுப் பயணம் செய்யும்போது, எல்லா அதிகாரிகளும் வருகிறார்கள். ஒவ்வொருவரும் குறிப்பு எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் அந்தக் குறிப்பு என்ன ஆகிறது? பிறந்து, வளர்கிறதா? வளர்ந்து அதற்கு வாழ்வுண்டா? அது செயல்முறை என்ற சூரியனையாவது பார்க்கிறதா? அல்லது கருவிலேயே இறந்துவிடுகிறதா என்பதெல்லாம் கேள்விக்குறியாக இருக்கிறது, குறிப்புகளை எடுத்துக்கொள்வதில் எந்த விதமான குறைச்சலும் இல்லை. அதற்குப் பிறகு தொடர் நடவடிக்கை என்ன? தொடர் நடவடிக்கை என்ன என்பதை தயவு செய்து அந்தத் துறையினரிடம் கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை அதிகாரிகளையும் அழைத்துக் கொண்டு தெரு வீதிகளிலே உலா வரும்போது மக்கள் பார்க்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் வந்திருக்கிறார். அமைச்சர் வந்திருக்கிறார், பார்வையிட்டிருக்கிறார், குறைகள் தீரும், கரைகள் எல்லாம் அகற்றப்படும், தொல்லைகள் எல்லாம் நீங்கும் என்று எதிர்பார்க்கும்போது, அன்றைக்கு இருந்த நிலைதான் இன்றைக்கும் என்று இருந்தால் மறுபடியும் சட்டமன்ற உறுப்பினர் போகும்போது கேவலமாகப் பார்க்கிறார்கள். ஏதோ ஒரு காரியத்திற்காக, ஒரு வேஷத்திற்காக வருகிறார்களே தவிர, ஒரு காரியமும் நடக்கவில்லை, போ என்று அந்த முறையிலே பெண்கள் பேசுகிறார்கள். நான் அதை இந்த அவையிலே சொல்ல முடியாது. அந்த முறையிலே இது கேவலமாகிப் போவதை அதிகாரிகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாங்கள் எல்லாம் வரும்போது, நீங்கள் குறிப்புகளை எடுக்கும் போது, குறிப்புகள் இவ்வளவு எடுத்தோம், அதற்குரிய நடவடிக்கைகளை இவ்வளவு மேற்கொண்டிருக்கிறோம், இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாததற்கு இது காரணம், இந்தக் காலவரையறைக்குள் நடவடிக்கைகளை எடுப்போம் என்ற குறிப்பையாவது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பக்கூடாதா? ஏதோ பாழுங் கிணற்றிலே கல்லைப் போட்டது மாதிரி, போட்டது போட்டதுதான். இது மிகவும் வேதனைக்குரியது. இல்லாவிட்டால், நாங்கள் மக்கள் பிரச்சினைகளாகத் தான் இதை மாற்ற முடியும். நாங்கள் இதை மக்களிடத்திலே தான் எடுத்துச் சொல்ல முடியும். நாங்கள் எல்லாம் வந்த பிறகும் ஒன்றும் நடக்கவில்லை என்று சொன்னால் உங்களை



எப்படி நடக்க வைக்க வேண்டுமென்பதற்காக நாங்கள் நடந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அவ்வளவுதான் என்னால் சொல்லமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது, தெருக்களையே ஆக்கிரமிப்பு செய்கிறார்கள். சென்னையிலே உள்ள பிரச்சினைகளிலே இது பெரும் பிரச்சினை. பிளாட்பாரங்களிலே வாழக்கூடிய மக்கள் சென்னையில் லட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஒரு முன்று வேண்டும், ஒரு வரையும் வேண்டும். பூராவும் தெருவிலேயே வாழ்வது, தெருவிலேயே குடித்தனம் நடத்துவது அந்தத் தெருவுக்கு வேறு யாருமே போக முடியாது என்ற நிலைமை உருவானால் அது ஏற்புடையதல்ல.

12-35 மணி

சில தெருக்களுக்கு நம்மால் இரவு நேரங்களில் போக முடியாது; வண்டியும் போக முடியாது; ஆளும் போக முடியாது. தெரு என்பது பொது மக்களுடைய ஒரு வசதிக்காக ஏற்பட்டு இருப்பது. ஆனால் அதை முழுமையாக ஆக்கிரமித்துக்கொண்டு குடும்பம் நடத்துவதோடு மட்டுமல்லாமல், சென்னையில் நடக்கிற பல திருட்டுகளுக்கு, பல்வேறுவிதமான தவறுகளுக்கு எல்லாம் காரணமாக நம்முடைய தெருக்கள்தான் அமைந்து விடுகின்றன. பெண்கள் எல்லாம் இரவு நேரத்தில் தனியாகப் போக முடியாது என்ற நிலை இருக்குமேயானால் அது ஒரு நாகரீக சமுதாயத்துக்கு ஏற்புடையது அல்ல என்பதை நான் மிகுந்த பொறுப்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பூங்காவைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் சொன்னார்கள். பூங்காக்கள் சென்னையிலே ஒரு காலத்தில் இருந்தன. ஆனால் இப்போது பூங்காக்கள் இருக்கின்றனவா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஏனென்றால் அந்தப் பூங்காக்கள் பழைய காலத்தில் தூங்குமூஞ்சிப் பூங்காவாக இருந்தன. சென்னையிலே பழைய ஸ்ரீராமுலு நாயுடு அவர்கள் ஒரு சினிமா எடுத்துக்கொண்டு இருந்தார். அவர் பெயரில் ஒரு பூங்கா வைத்தார்கள். ஆனால் அதற்குப் பெயர் என்ன வந்துவிட்டது தெரியுமா? தூங்குமூஞ்சிப் பூங்கா என்று பெயர் வந்துவிட்டது. ஊரில் இருக்கிற சோம்பேறிகள் எல்லாம் அங்கே தான் போய் தூங்குவது என்று ஆகிவிட்டது. நல்ல மனிதர்கள் செல்ல முடியாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. சென்னையில் என்னுடைய தொகுதியில் பீட்டர் புகழ் மிக்க

பேரறிஞர் அண்ணாவிலே இருந்து எல்லோரும் வந்து போய்க் கொண்டு இருந்த நேப்பியர் பூங்கா அபாயத்துக்கு ஆளாகிக் கொண்டு இருக்கிறது. நேப்பியர் பூங்கா ஆக்கிரமிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் அது அனாச்சாரமான காரியங்களுக்கும் பயன்படக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டு இருக்கிறது. எனவே அத்தகைய பூங்காக்களை நீங்கள் காப்பாற்ற வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுடைய தொகுதியில் புளியந்தோப்பிலே ஒரு பூங்கா இருக்கிறது. அங்கு காயிதே மில்லத் பூங்கா இருக்கிறது. அந்தக் காயிதே மில்லத் பூங்காவிலே சத்துணவுத் திட்டத்துக்காக சத்துணவு வழங்குகிற கூடத்தைக் கட்டினார்கள் அதைக் கட்டிய பிறகு பார்த்தால் அந்தப் பூங்காவினுடைய போர்டு இருக்கிறது, ஆனால் சுவர் இல்லை, அங்கு இருக்கிற செடி கொடிகள் இல்லை; புஷ்பங்கள் பூக்கின்ற செடிகள் எதுவும் அங்கு இல்லை. எப்போதாவது கழுதைகள்—அதை அவரோ சுட்டிக்காட்டினார்கள்; ஒரு ஜீவன், பன்னி என்று சொன்னார்களே—அவைகள் எல்லாம் வாழ்வதற்குப் பயன்படுகிறது. (மணி அடிக்கப் பெற்றது). எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன் தயவு செய்து, அந்தப் பெருமகனாருடைய பேருக்காவது நீங்கள் அந்தப் பூங்காவைச் சீர்திருத்த வேண்டும். அதுமட்டுமல்லாமல் சென்னையில் இருக்கக்கூடிய பூங்காக்களையும் நீங்கள் சீர்திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிசைப் பகுதிகளிலே சென்று துப்புரவு வேலைகளைச் செய்வதிலே நம்முடைய ஊழியர்கள், தொழிலாளர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். அது உண்மை.

It is psychological. There should not be any denial of the fact. அதை நாம் மறந்துவிடக் கூடாது. குடிசைப் பகுதிகளிலே போய் அங்கே என்ன குப்பை வாருவது, அங்கே என்ன சாக்கடை தள்ளுவது, அங்கே என்ன கழிவிடங்களை எல்லாம் சுத்தப்படுத்துவது என்ற உணர்வு நம்முடைய தொழிலாளர்களிடத்தில் இருக்கிறது. அடிக்கடி நான் சொல்கிறேன். நம்முடைய சத்தியவாணி முத்து நகர், ஜோதியம்மாள் நகர், காக்ஸ் காலனி, லாக் நகர், பார்டர் தோட்டம் என்ற பகுதிகளில் எல்லாம் தொல்லைகள் நிரந்தரம்; சாக்கடைகள் அங்கு வந்துவிட்டால் அதுதான் என்னுடைய தாய் வீடு; இங்கு இருந்து நான் போக மாட்டேன் என்று அந்தப் பகுதிகளின் மீது அந்த சாக்கடைத் தண்ணீர் காதல் கொண்டு அந்தப் பகுதியை விடமாட்டேன் என்று நின்றுவிடுவதும்—பாவம் அவர்களை ஏன் பிரிக்க வேண்டும் என்று நம்முடைய ஊழியர்களும் வராமல்



இருப்பதும் வாடிக்கையாகிவிட்டது. (மணி அடிக்கப்பெற்றது). எனவே தயவுசெய்து அந்தப் பகுதிகளைப் பற்றியும் நீங்கள் கொஞ்சம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு சென்னை நகரத்தில் ஏதாவது ஒரு பகுதிக்கு ஒரு பூங்காவுக்கோ அல்லது வேறு எதற்காவது நம்முடைய சுயமரியாதை இயக்க காலத்திலிருந்த பலருடைய பேர் வைத்து இருக்கிறார்கள் என்று சொன்ன காரணத்தால் இதையும் சொல்கிறேன். சுயமரியாதை இயக்க காலத்திலே இருந்து பேரறிஞர் அண்ணா அவர்களாலே—அவர் நியமித்த 6 சர்வாதிகாரிகளில் ஒருவர், நாலாவது சர்வாதிகாரியாக தந்தைப் பெரியார் அவர்களால் நியமிக்கப்பட்ட திருப்பூர் மொய்தீன் அவர்களுடைய பெயரை வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அவர்களைப் போன்றவர்களை எல்லாம் நாம் மறந்துவிடக் கூடாது. அவர்கள் எல்லாம் போட்ட அஸ்திவாரத்தில்தான் இன்றைக்கு மாளிகை கட்டி இருக்கிறோம். எனவே திருப்பூர் மொய்தீன் சுயமரியாதை இயக்கத்துக்கும், திராவிடர் கழகத்துக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் ஒரு முஸ்லீம் லீக்கை சேர்ந்தவராக இருந்தாலும், அவர் அந்த அத்துணை இயக்கங்களுக்கும் சொந்தக்காரராக இருந்தது மட்டுமல்லாமல், அவரையே பெரியார் நாலாவது சர்வாதிகாரியாக நியமித்தார். அப்பேர்பட்ட திருப்பூர் மொய்தீன் அவர்களுக்கு நீங்கள் ஒரு நினைவுச் சின்னமாக சென்னையிலே ஒரு இடத்திற்கு பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) சிலை எல்லாம் நாங்கள் ஒருவருக்கும் வைப்பது இல்லையே. ஒரு தெருவுக்கோ, ஒரு பூங்காவுக்கோ, ஒரு நூலகத்திற்கோ அவருடைய பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12-40 மணி

இறுதியாக உருது பள்ளிகள் 15 ஆண்டுகளுக்கு முன்பு மாநகராட்சி மன்றம் எத்தனை பள்ளிகளை நடத்திக்கொண்டு இருந்தது? பிறகு அந்தப் பள்ளிகளினுடைய எண்ணிக்கை எவ்வளவு என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அவைகள் மூடியிருந்தால் என்ன காரணம்? உருது பேசுகின்றவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டதா அல்லது கேட்பதற்கு ஆள் இல்லை என்ற எண்ணமா மாநகராட்சி மன்றத்திற்கு? எனவே, உருது பள்ளிகளை மூடாதே, மூடிய பள்ளிகளைத் திற என்கின்ற கோஷத்தை நாங்கள் எழுப்புவோம். என்னிடத்திலே கணக்கு இருக்கிறது. அத்தனை உருது பள்ளிகளையும் மாநகராட்சி மன்றம் திறக்க வேண்டுமென்றும், அதைத் திறம்பட நடத்த வேண்டும் என்றும், இல்லாவிட்டால் வேறு 'வழி

யில்லாமல், நானே தலைமை ஏற்று நடத்தி, மாநகராட்சி மன்றத்தினுடைய அதிகாரிகளுக்கு விரோதமாகப் போராட்டம் நடத்துவேன் என்பதை நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய பகுதியிலே இரண்டு உருது பள்ளிகளை மூடி விட்டார்கள். ஒரு உருது பள்ளியை ஒரு மண்டிக்காரனுக்கு—தோல் மண்டிக்காரனுக்கு விற்று விட்டார்கள். இல்லையா என்று கேளுங்கள். ஒரு பள்ளியை—மாநகராட்சி மன்றத்திற்குச் சார்ந்த சொத்தை தனிப்பட்டவருக்கு விற்ற கொடுமை இங்கே நடந்திருக்கிறது. நான் பல தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். சிறுபான்மை மொழி—அதுவும் சென்னையிலே அது மிக முக்கியமான மொழி. அந்த மொழியினுடைய குரல் வளையை நெறிக்கும் வகையில்..........

திரு. இளம்வழுதி : தலைவரவர்களே, மாநகராட்சி அதிகாரிகளுக்கு எதிராக நான் போராட்டம் நடத்துவேன் என்று மாண்புமிகு அண்ணன் லத்தீப் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாநகராட்சி ஆணையாளர் ஒரு முஸ்லீம்தான் என்பதை அண்ணன் அறிவாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : ஏன் முஸ்லீமாக இருந்தால் அவர் உருதுவுக்கே சப்போர்ட்டாக இருப்பார் என்று ஏதாவது இருக்கிறதா? ஆகையினாலே, மாநகராட்சி மன்றத்தினுடைய தற்போதைய ஆணையர் அவர்கள் ஒரு நல்ல அப்பட்டமான சுத்த சுயம் பிரகாச தமிழர். எனவே, அவர் தமிழ் உணர்வோடு இருக்கிறார். தமிழ் உணர்வு இருக்கிற காரணத்தினாலே உருதுவுக்கோ மற்ற மொழிகளுக்கோ அவர் விரோதி என்று நான் சொல்லவில்லை. ஆனால் நமக்குச் சிறுபான்மை மொழியினர் மீதும் அக்கறை உண்டு; அவர்களுடைய உரிமையையும் காப்பாற்றுகின்ற கடமை உண்டு என்ற முறையிலேதான் நான் இதைச் சொல்கிறேன்.

ஏதோ நான் உருது மொழிக்காகப் பேசுகின்ற காரணத்தினாலே நான்—என்னைப் பற்றி நான் அதையெல்லாம் சொல்ல விரும்பவில்லை. ஆகையினாலே உருது பேசுகின்றவன் தான் இப்படிப் பேச வேண்டும் என்பது அல்ல. சிறுபான்மை மொழி. அந்த மொழிகளிலே நான் ஒரு மொழிக்காக வாதாடுகிறேன். டிவிஷன் ஆப் லேபர். அவ்வளவுதானே தவிர வேறு அல்ல. எனவே, அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



இந்தச் சென்னை நகரத்திற்குக் கொடுக்கப்படுகின்ற மானியம் உயர்த்தப்பட வேண்டும். மத்திய அரசிடம் மானியம் பெற வேண்டும். பம்பாய்க்கு ஆயிரம் கோடி ரூபாய் செல வழிக்கும் பொழுது நாம் 150 கோடி ரூபாயையாவது சென்னைக் காகச் செலவழிக்க வேண்டும். அதுகூட இல்லாமல் மாநக ராட்சி மன்றத்திலே ஷெட்யூல்ட் வங்கிகளிலேயிருந்து கடன் வாங்கித்தான் சம்பளம் கொடுக்க வேண்டும். செலவினங் களைச் செய்ய வேண்டும் என்ற இழிநிலையையெல் லாம் மாற்றுவதற்கு எந்த அளவிற்கு இதனுடைய நிதி ஆதா ரத்தைப் பெருக்க முடியுமோ அதைப் பெருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, மோகன் வந்திருக்கின்ற காரணத்தி னால் விடை பெற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. மோகன்) : நன்றி.

*திரு. எல். மூக்கையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும் பற்றிய மானியக் கோரிக்கையில் உரையாற்றுகின்ற வாய்ப்புக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். மக்களுக்குத் தேவையான சட்டங்களையும், திட் டங்களையும் நிறைவேற்றுகின்ற பாராளுமன்றம், சட்டமன் றத்தினுடைய ஆயுட்காலம் ஐந்தாண்டுக் காலமாக இருக்கும் பொழுது அந்தப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் படுகின்ற சட்டங்களையும் திட்டங்களையும், சட்டமன்றத்தில் நிறை வேற்றப்படுகின்ற சட்டங்களையும், திட்டங்களையும் செயல் படுத்துகின்ற ஜனநாயக அமைப்பாக விளங்கிக்கொண்டிருக் கின்ற உள்ளாட்சி மன்றத்தினுடைய ஆயுட்காலத்தை ஐந்தாண்டுகளாக இருந்ததைக் கடந்த அ.தி.மு.க. அரசு மூன் றாண்டுகளாகக் குறைத்தது.

ஆனால், இன்றைய தினம் கழக அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற வகையில் மீண்டும் உள்ளாட்சி மன்றங்களு டைய பதவிக்காலத்தை, தலைவர் கலைஞர் அவர்கள் ஐந் தாண்டுகளாக நீடித்து, உள்ளாட்சி மன்றத் தலைவர்களுக்கு உரிய அதிகாரத்தையும் வழங்கியிருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்களை நான் பாராட்டுகின்றேன்.

பெரும்பாலான நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் போதுமான நிதி வசதி இல்லாத காரணத் தினால், குடிதண்ணீர் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார் பம்பு செட்டுகளுக்கும், எரிகின்ற தெரு விளக்கு களுக்கும் மின் கட்டணம் செலுத்த முடியாத நிலைமையும், பணி புரிகின்ற துப்புரவுத் தொழிலாளிகளுக்கும், பணியாளர் களுக்கும் மூன்று மாதங்கள், நான்கு மாதங்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலையும்தான் இருந்து வருகிறது.

[திரு. எல். மூக்கையா] [1990 ஏப்ரல் 24

இப்படிப்பட்ட அவல நிலை நீங்கிட வேண்டுமென்றால், நகராட்சிக்கு நிரந்தரமான வருமானத்தை ஏற்படுத்த வேண்டும். நகராட்சிக்குச் சொந்தமான, நகரில் முக்கிய பகுதிகளாக இருக்கின்ற இடங்களில், வணிக வளாகங்கள், தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள், தியேட்டர்கள் போன்ற வற்றை அரசு கட்டிக் கொடுத்து, நகராட்சியின் நிதி நிலையை நிரந்தரமாக உயர்த்திட வேண்டும். அப்பொழுதுதான் அரசின் நிதி உதவி இல்லாமலேயேகூட, நகராட்சி மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சிகளில் பலயிடங்களில் ஊராட்சி மன்ற அலுவலகம் கட்டிடம் இல்லை. இதனால் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கூட்டம் கூட்டப்படுவது இல்லை. ஊராட்சி மன்றத்திற்கு என்னென்ன சொத்துக்கள் இருக்கின்றன என்பது தெரியாத நிலை. இதை அறிந்துதான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர வர்கள் அனைத்து ஊராட்சிகளிலும் ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்றும், அனைத்து ஊராட்சி களிலும் ஊராட்சிகளுக்குச் சொந்தமான சொத்துக்களின் விவரம் அடங்கிய பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும் என்றும் அதிகாரிகளைத் துரிதப்படுத்தி, இன்றையதினம் அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

12-45 மணி

கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய குடிநீர் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார்களுக்கு மின்கட்டணம் செலுத்த முடியாத நிலை இருக்கிற காரணத்தால், அந்த குடி நீர் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார்களுக்கு அரசு இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

கிராமப்புறங்களில் சாக்கடை ஆறாக ஓடிக்கொண்டிருக் கிறது. பெண்களுக்கு கழிப்பறை வசதி இல்லை. நடைபாதை களை கழிப்பறையாக பெண்கள் பயன்படுத்திக் கொண்டிருக் கிறார்கள். தெரு விளக்குகள் போடப்பட்டும், பல்பு இல்லாமல் இருண்டு இருக்கிறது. பல இடங்களில் ஊராட்சி பள்ளிகள் பழு தடைந்து, மரத்தடியில் மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் நிலை இருக்கிறது. பல கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் இல்லாமல், பஸ் போக்குவரத்து இல்லாமல், மக்கள் நடந்து செல்லும் அவல நிலை இருக்கிறது. இந்த நிலையெல்லாம் கழக அரசு காலத்தில் மாறும் என்று மக்கள் எதிர்பார்த் துக் கொண்டிருக்கிறார்கள்.



1990 ஏப்ரல் 24] [திரு. எல். மூக்கையா]

இன்றையதினம் 10 ஆம் வகுப்பு படித்து விட்டு வேலை இல்லாமல் இருக்கக்கூடிய கிராமப்புறத்தைச் சார்ந்தவர் களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற வகையில், 10 ஆம் வகுப்பு படித்தவர்களை எல்லாம் மக்கள் நல பணியாளர்களாக ஊராட்சியில் நியமிக்க இருப்பதை வரவேற்கிறேன். இவர்கள் எல்லாம் ஊராட்சிகளில் பணியாற்றுகிறபோது அரசு நிறை வேற்றுகிற நல்ல பல திட்டங்களை சிறப்பான முறையில் நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறோம்.

சத்துணவு மையங்களில் கழக ஆட்சியில் முட்டையோடு கூடிய சத்துணவு வழங்கப்பட்டாலும் அதிலே நடைபெறுகிற தவறுகள் இன்னும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. சத்துணவு மைய அமைப்பாளர்களிடம் தவறுகளைச் சுட்டிக் காட்டினால் அவர்கள் சொல்கிறார்கள். மாதா மாதம் குடும்பக் கட்டுப்பாடு கேஸ்போடச் சொல்கிறார்கள்; அதிகாரிகள் கட்டாயப் படுத்துகிறார்கள். அரசு கொடுக்கும் உதவி பணத்தை மட்டும் கொடுத்து கேஸ் போட எங்களால் முடியவில்லை. ஒரு கேஸ் போடுவதற்கு கூடுதலாக 200 ரூபாய் நாங்கள் கையிலிருந்து தரவேண்டியிருக்கிறது. அந்த 200 ரூபாயை சரிக்கட்ட வேண்டு மென்றால் சத்துணவு மையங்களில் நாங்கள் தவறு செய்தால் தான் முடியும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அரசு சத் துணவு மையங்களில் பணிபுரிகிற பணியளார்களை, அமைப் பாளர்களை, குடும்பக் கட்டுப்பாடு கேஸ் போடச் சொல்லி கட்டாயப்படுத்தாமல் இருக்கவும், அதை காரணமாகச் சொல்லி சத்துணவு மையங்களில் தவறு செய்பவர்கள் மீது கடுமை யான நடவடிக்கை எடுக்கவும் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சத்துணவு மையங்களில் நடைபெறும் தவறு களை உடனுக்குடன் கண்டுபிடித்து நடவடிக்கையெடுக்க தனி யாக ஆணையாளர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சிகளில் சுமார் 4000 பேர் 20 ஆண்டுகளுக்கு மேலாக எழுத்தர்களாகப் பணிபுரிகின்றார்கள். இவர்களுக்கு மாதந்தோறும் மிகவும் குறைவான சம்பளம் தான் வழங்கப் படுகிறது. 1,500 மக்கள் தொகை உள்ள ஊராட்சியில் 40 ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. இது மிகவும் குறைவான சம்பளம். இப்படி குறைவாகக் சம்பளத்தைப் பெறுகிற காரணத்தால் இந்த எழுத்தர்கள் எல்லாம் பல தவறுகளுக்கு ஆட்படுகிறார்கள். இவர்களுக்கு எல்லாம் அரசு அதிக சம்பளம் வழங்க உத்தரவு வழங்கிட வேண்டும்.

1984 ஆம் ஆண்டு வரையில் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்து 5 ஆண்டுகள் எழுத்தர்களாக பணிபுரிந்தவர்களை அரசு பதவி உயர்வு கொடுத்து இளநிலை உதவியாளராக, ஊர்நல அலு வலராக நியமித்தது. கடந்த கால அரசு அதை நிறுத்தி விட் டது. நம்முடைய அரசு மீண்டும் அவர்களுக்கு இந்த பதவி உயர்வை தந்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சிகளின் நிதியாதாரத்தை ஆராய்ந்து அவற்றை வலுப்படுத்திட முன்னாள் சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் தலைமையில் வல்லுநர் குழு நியமித்து இருப்பது வரவேற்கத் தக்கது. இந்தக் குழு நகராட்சிகளின் நிதியாதாரத்தையும் ஆராய்ந்து அவற்றையும் வலுப்படுத்திட நல்ல வழி காட்டுமென்று நம்புகிறோம்.

நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களை அரசுப் பணியாளர்களாக ஆக்கி அவர்களுக்கு ஊதியத்தை 1-4-1990 முதல் அரசு வழங்குவதால் அந்த ஆசிரியர்கள் குடும்பத்தில் அனைவரும், பணியாளர்கள் குடும்பத்தில் அனைவரும் மகிழ்ச்சியோடு இந்த அரசையும், தலைவர் கலைஞர் அவர்களையும் பாராட்டுகிறார்கள். இவர்களுக்கு அரசு சம்பளம் வழங்குகிறது என்ற காரணத்தால் நகராட்சிகளில் நிதிப் பற்றாக்குறை பெருமளவிற்கு குறைந்து, நகராட்சிகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கு உடன் சம்பளம் கிடைக்கிற வாய்ப்பு உருவாகி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலத்தில் மக்கள் நகராட்சிகளில் அவர்கள் வீடுகளுக்கும், சொத்துக்களுக்கும் வரி செலுத்துகிற நேரத்தில் வரி வசூல் செய்யும் ஒரு சில அதிகாரிகளால் ஏற்பட்ட தவறுகளும், அதனால் மக்களுக்கு ஏற்பட்ட சிரமங்களும் நீங்கி இன்றைக்கு அரசு அறிவித்துள்ள வங்கியின்மூலம் வரி செலுத்துகிற புதிய திட்டத்தை நகராட்சிப் பகுதி மக்கள் அனைவரும் வரவேற்கிறார்கள். டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டுகிறார்கள்.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நகர்மன்றப் பகுதிகளில் சாலைகள் அமைக்க 12 கோடியே 91 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதிலே 100 ஆண்டுகளுக்கு மேலாகி, நூற்றாண்டு விழா கொண்டாட இருக்கும் பெரியகுளம் நகராட்சியின் சாலைகளை செப்பனிடவும், புதிய சாலைகளை அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1990 ஆம் ஆண்டில் நகராட்சிகளில் பல திட்டங்களை நிறைவேற்ற இந்த அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. நகராட்சி ஊழியர்களுக்கு வீடுகட்ட முன்பணம் அளிக்க ரூ. 50 லட்சமும், குடிசைப் பகுதி மேம்பாட்டுத்திட்டத்திற்கு ரூ. 70.2 லட்சமும், ஒருங்கிணைந்த பிற்படுத்தப்பட்ட பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 15 லட்சமும், சாலைகள் சீரமைக்க பாதி கடன், பாதி மானியமாக 50 லட்சம் ரூபாயும், முழுக் கடனாக ரூ. 35 லட்சமும் அரசு ஒதுக்கி இருக்கிறது.



12-50 மணி

இந்தத் திட்டங்களை எல்லாம் பெரியகுளம் நகராட்சியில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நகரங்களில் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்கள் பயன்படும் வகையில் நேரு வேலை வாய்ப்புத் திட்டம் என்ற பெயரில், இளைஞர்களுக்குச் சிறுதொழில் அல்லது வியாபாரம் செய்வதற்கு 75% வங்கியிலிருந்து கடன் வாங்கிக் கொடுத்து, 25% மைய அரசும் மாநில அரசும் நகராட்சியும் மான்யமாக வழங்க இருக்கிற இந்தத் திட்டம் ஒரு சிறப்பான திட்டமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்குக் கூடுதலாக மானியம் ரூ. 5,000 வழங்கப்படுகிறது. இதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் வளமானதாக அமையும் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

அதைப் போல் நகராட்சிப் பகுதியில் இருக்கும் ஏழை, எளிய மக்களுக்கும் ஐ.ஆர்.டி.பி. கடன் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நகராட்சிப் பகுதியில் இருக்கும் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஏழை, எளிய மக்களுக்கும் அரசு இலவசமாக, வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த 12 ஆண்டுகள் ஆட்சியில் பராமரிப்புப் பணி எதுவும் நடைபெறவில்லை. நகராட்சிகள் எல்லாம் நரகாட்சியாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன. குப்பைகளை அகற்றுவதற்கு லாரி, டிராக்டர்கள் இல்லை. இருக்கிற லாரிகளும் 50 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கியுள்ளதால், பயனற்றுப் போய்க் கிடக்கின்றன. அதனால் குப்பை குவிந்து கிடக்கின்றன. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள், அசுத்தம் அகற்றப்பட வேண்டுமா அலங்கார விளக்குகள் அமைக்கப்பட வேண்டுமா என்று கேட்டால், நான் அசுத்தம் அகற்றப்பட வேண்டுமென்றுதான் சொல்வேன், அலங்கார விளக்கைப் போட்டு, அதற்குக் கீழே அசிங்கம், அசுத்தம் இருப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொல்வார்கள். எனவே தான் இந்த ஆண்டு குப்பையை அகற்றுவதற்கு லாரி இல்லாத நகராட்சிக்கு லாரி வாங்கி தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பெரியகுளம் நகராட்சியைப் போன்று வாகனங்கள் இருந்தும் பழுதடைந்த நிலையில் இருக்கக்கூடிய அந்த நகராட்சிகளுக்கும் லாரி வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களில் பல்வேறு பயன்படக்கூடிய திட்டங்கள் இன்றைய தினம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய ஏழை, எளிய மக்களுக்கு பயன்படக் கூடிய ஐ.ஆர்.டி.பி. கடன்

வழங்குகின்ற திட்டம் இன்றைய தினம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏழை, எளிய மக்களை, அங்கே தேர்வு செய்து அவர்களுக்குக் கறவை மாடுகள் வாங்கவும், ஆடுகள் வளர்க்கவும் தொழில்கள் செய்யவும் வண்டி மாடுகள் வாங்கவும் மூன்றில் ஒரு பங்கு ரூபாய் மானியத்துடன், கூடுதலாக ஏறத்தாழ ரூ. 6,500 வரை வங்கியில் கடனாக வழங்கப்பட்டு, அதன் மூலம் ஏழை, எளிய மக்கள் வேலை வாய்ப்பினைப் பெற்று, தங்களுடைய வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப் போல், இன்றைய தினம் கிராமப்புற இளைஞர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சுய வேலை வாய்ப்புத் திட்டம் இன்றைய தினம் நிறைவேற்றப்படுகிறது. அந்தத் திட்டத்தின்கீழ், படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கக் கூடிய இளைஞர்களை ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் தேர்வு செய்து, ஆர்.இ.டி.சி., ஐ.டி.ஐ. போன்ற நிறுவனங்களில் 3 மாதங்களிலிருந்து 1 வருஷம் வரை பல்வேறு தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறுகின்ற அவர்களுக்கு உதவிட பணமாக, மாதம் ரூ. 100-லிருந்து, ரூ. 200 வரை வழங்கப்படுகிறது. பயிற்சி முடிந்தவுடன் அவர்களுக்கு ரூ. 500 மதிப்புள்ள தொழில் கருவிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சி பெற்ற பின் அவர்கள் தனியார் நிறுவனங்களிலும் அரசு நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பு பெறுகின்றனர். வேலை வாய்ப்பு கிடைக்காதவர்கள் சொந்தமாகத் தொழில் செய்கின்றனர். அதைப் போல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு சிறு விவசாயிகளுக்கு, குறு விவசாயிகளுக்கு, கடன் வழங்கி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தத் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களுக்குக் கிணறு தோண்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும், மோட்டார் பம்ப் செட் வழங்கவும் நிலங்களைச் சீர்படுத்தவும், சிறு விவசாயிகளுக்கு 25 சதவீதம் மானியத்துடன் இன்றைய தினம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன் அளிக்கப்படுகிறது. அந்தக் கடனைப் பெற்று விவசாயிகள் பயன் பெறுகிறார்கள்.

அதைப் போல், தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை உறுதி திட்டம், இந்த இரண்டு திட்டங்களும் சேர்ந்து ஜவகர் வேலை வாய்ப்பு திட்டம் என்று உருவாக்கப் பெற்று, அந்தத் திட்டத்திற்கு மைய அரசு 80 சதவீதமும் மாநில அரசு 20 சதவீதமும் கொடுத்து, கிராமப் பகுதிகளுக்குப் பல்வேறு திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சாலைகள் அமைத்தல், ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடம் கட்டுதல், சாக்கடை கட்டுதல், சத்துணவு மையம் கட்டுதல், நவீன கழிப்பிடம் கட்டுதல், இப்படிப் பல்வேறு பணிகள் இந்தத் திட்டத்தின் மூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதைப் பாராட்டுகின்றேன்.



என்னுடைய தொகுதியில் ஒரு சில நல்ல திட்டங்கள் நடைபெற வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். பெரியகுளம் பகுதி மக்கள் நீண்ட நெடுநாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற திட்டம், நீண்ட கால கோரிக்கை பெரியகுளத்திற்கு வடக்கே கொடைக்கானல் மலைப் பகுதியிலிருந்து வருகிற பாம்பாறின் குறுக்கே வெளவால்துறை அணைத் திட்டத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை, பெரியகுளம் நகர மக்களுடைய நீண்ட கால கோரிக்கை—அதை இந்த அரசு நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெரியகுளத்தைப் பொறுத்த வரையில், அத்தனை விவசாயிகளும் நம்பியிருப்பது மாம்பழத்தைத்தான். அங்கே ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்களில் மாம்பழம் விளைந்து கொண்டிருக்கிறது. விளைந்த மாம்பழங்களை இந்தூர், நாக்பூர், பெங்களூர் போன்ற வெளியூர்களுக்கு அனுப்புகிற காரணத்தால் அவர்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. ஆகவே, இந்த அரசு பெரியகுளத்தில் ஒரு மாம்பழத் தொழிற்சாலையை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

12-55 மணி

அதைப்போல, கொடைக்கானல் மலைப் பகுதியை எடுத்துக் கொண்டால் அங்கே சாலை வசதியே இல்லை. அதனால் மக்கள் பெருத்த கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது நோய்வாய்ப்பட்டால் அங்கே வாகன வசதி இல்லாமல் தொட்டில் கட்டி, பல மைல் தூரம் தூக்கிச் சென்று, வாகன வசதி பெற்றுத்தான் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய அவல நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கொடைக்கானல் மலைப் பகுதியில் இருக்கக் கூடிய கூக்காலிருந்து படிம்புத்தூர் வரையில், பூம்பாறையிலிருந்து படிம்புத்தூர் வரையில், பூண்டியிலிருந்து போளூர் வரையில், தும்பளப்பட்டியிலிருந்து பூலத்தூர் வரையில், பாச்சலூரிலிருந்து செம்பிராங்குளம் வரையில்—இப்படிப்பட்ட சாலைகளை எல்லாம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையைப் பொறுத்த வரையில் தமிழ் நாட்டிலே ஏழை எளிய மக்களுடன் அன்றாடம் ஒன்றி இணைந்திருக்கிற ஒரு துறை இது. ஆனால் இன்று தமிழ் நாட்டின் உள்ளாட்சித் துறையின் நிர்வாகம் மிக மிக மோசமாக இருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்ற உடன் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை எல்லாம் அழைத்து ஒரு மாநாடு போல ஏற்பாடு செய்து

அங்கே உள்ளாட்சித் துறையிலே நாங்கள் இன்னும் அதிகமான அதிகாரங்களைத் தருகிறோம் என்று கூறினார்கள். உடனே நாங்கள் எல்லாம் பழைய அதிகாரங்களை எல்லாம் கொடுத்து விடுவார்கள் என்று எண்ணினோம். ஆனால் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு துறையிலே ஒன்றைச் சொல்லுகிறார்கள்.

கல்வித் துறையை எடுத்துக் கொண்டால் இந்தக் கோரிக்கையை ஏற்கவில்லை என்று சொல்கிறார்கள். அதைப் போல வேறு துறைகளை, வருவாய்த் துறையை எடுத்துக் கொண்டால் ஒன்றியத்தினுடைய கட்டுப்பாட்டில் இல்லை என்று சொல்கிறார்கள். ஒவ்வொன்றிலும் இப்படி இருப்பதினால் இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்று தெரிந்து கொள்ள முடியவில்லை.

அதே நேரத்தில் ஒவ்வொரு ஒன்றியத்தையும் எடுத்துக் கொண்டால் இன்றைய தினம் ஒன்றியத்திற்கு இரண்டு ஆணையாளர்கள் இருக்கிறார்கள். ஒரு துணை ஆணையாளர் இருக்கிறார். 3 மேலாளர்கள் இருக்கிறார்கள். இவை எல்லாம் இப்போது ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேவை தானா என்று சிந்திக்க வேண்டும். ஒரு ஆணையாளருக்கே வேலை இல்லாத நேரத்தில் 2 ஆணையாளர்கள், 1 துணை ஆணையாளர், 3 மேலாளர்கள் தேவை தானா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். படித்த பட்டதாரிகளுக்கு வேலைகள் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்திலே ஊராட்சி ஒன்றியங்களில் இன்னும் அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துகிறார்களே தவிர வேறு எதுவும் இல்லை. ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி அங்கே வேலை வாய்ப்பை அதிகப்படுத்தினால், அந்த வருமானத்தில் அவர்களுக்கு சம்பளம் கொடுக்க வசதியாக இருக்கும். வேலை இல்லாமல், 2, 3 ஆணையாளர்களை நியமித்திருப்பதினால் அங்கே ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்வதற்குத்தான் நேரம் சரியாக இருக்கிறது.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றிய அலுவலர்களை வட்டார வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தாமல் அவர்களை அதிகமாக குடும்ப நலப்பணிகளில் ஈடுபடுத்துகிறீர்கள். குடும்ப நலத் துறையிலே தான் அவர்கள் அதிகமாகக் கவனம் செலுத்துகிறார்கள். இது எந்த வகையில் நியாயம் என்று தெரியவில்லை. அவர்களை குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஆள் பிடித்து வரச் சொல்வது சரியாக இல்லை. வட்டார வளர்ச்சிப் பணிகளுக்கு ஆவன செய்யுங்கள் என்று சொன்னால், மாவட்ட ஆட்சித் தலைவர் குடும்ப நலத் திட்டத்திற்கு உடனடியாக 200 கேஸ்கள் கொண்டு வர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார், அதைத்தான் முதலில் செய்வோம் என்று சொல்கிறார்கள். பாவம், அந்த அதிகாரிகள் பாடு மிக மிக மோசமாக இருக்கிறது.



அவர்கள் தெருத் தெருவாகச் செல்கிறார்கள். அங்கே மகளிரை அணுகி, 'நீங்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளுங்கள்' என்று கூறுகிறார்கள். அவர்கள் இப்படி சிவப்பு விளக்குகள் எரியக் கூடிய பகுதிகளிலே செல்லக்கூடிய நிலைமை தமிழ் நாட்டில் இருக்கிறது. இதைக் கண்டிப்பாக மாற்ற வேண்டும். அதற்கு என்று ஒரு துறை இருக்கிறது. அந்தத் துறை தான் இதைச் செய்ய வேண்டும். தயவுசெய்து உள்ளாட்சித் துறை அதிகாரிகளை இதிலே தலையிட வைக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சனை. உள்ளாட்சித் துறையிலே இருந்து அதிகப் பணத்தைச் செலவிடுகிறார்கள். ஆனால் ஆங்காங்கே வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட முடியவில்லை. பயணப்படி என்ற பெயரில் பணம் கொள்ளையடிக்கப்படுகிறது. ஒரு அதிகாரிக்கு பயணப்படி என்று முதலிலே 600 ரூபாய் எடுக்கிறார். அந்த அதிகாரியின் கையிலே 100 ரூபாய் தான் கொடுக்கிறார்கள். மீதி 500 ரூபாயை குடும்பக் கட்டுப்பாட்டிற்குச் செலவிடுகிறார்கள். இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் அவையின் அலுவல் நேரம் 5 மணித்துளிகள் நீட்டிக்கப்படுகிறது.

13-00 மணி

திரு. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசும்போது, தமிழ் நாட்டில் சிவப்பு விளக்குப் பகுதி என்றெல்லாம் பேசினார்கள். அவர்கள் எந்தப் பகுதியை சிவப்பு விளக்குப் பகுதி என்று குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிறகு சிவப்பு விளக்குப் போடும்போது சொல்கிறேன். (சிரிப்பு).

திரு. கே. ஆர். இராமசாமி : அலுவலகத்தைப் பொறுத்த மட்டில், இளநிலை உதவியாளர் ஒருவர், பதிவறை எழுத்தர்கள், சாலை ஆய்வாளர்கள், அலுவலக ஊழியர்கள், ஆயாக்கள், இவர்கள் 19 பேர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து சம்பளம் கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அரசாங்கமே இந்தச் சம்பளத்தைக் கொடுத்தால், ஊராட்சி ஒன்றியத்தினுடைய வளர்ச்சிப் பணிகளை இன்னும் சிறப்பாகச் செய்வதற்கு சௌரியமாக இருக்கும் என்று நான் கூற விரும்புகிறேன்,

[திரு. கே. ஆர். இராமசாமி] [1990 ஏப்ரல் 24

மற்றொன்று, அந்தப் பதவிகளை நியமனம் செய்யும் உரிமை ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவரிடம் இருந்தது. ஆனால் இப்போது அரசாங்கமே நியமனம் செய்கிறார்கள். நியமனம் செய்யும் உரிமை அரசாங்கத்திற்கு. ஆனால் சம்பளம் கொடுக்கக் கூடிய உரிமை ஊராட்சி ஒன்றியங்களுக்கு என்ற நிலை இருக்கிறது. இதை மாற்றியமைத்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரையில், எங்களது மாவட்டத்திலே பசும்பொன் தேவர் மாவட்டம், ராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மிக மிக மோசமான நிலைமையிலே சாலை வசதிகள் இருக்கின்றன. அடிப்படை வசதியே இல்லாத பல ஊர்கள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் வந்து பார்க்கலாம். நிச்சயமாக இன்னும் ஊர்களுக்கு உள்ளே கார்கள் செல்ல முடியாத பல ஊர்கள் இருக்கின்றன. நீங்கள் ஒதுக்கீடு செய்யும்போது, கோவையிலே இருக்கக் கூடிய ஒன்றியத்திற்கோ, அல்லது தஞ்சையிலே இருக்கக் கூடிய ஒன்றியத்திற்கோ என்ன நிதியை ஒதுக்குகிறீர்களோ, அதைத் தான் இப்போது ராமநாதபுரம் மாவட்டத்திற்கும், தேவர் திருமகன் மாவட்டத்திற்கும் ஒதுக்குகிறீர்கள். நீங்கள் வாருங்கள், நான் உங்களுக்குக் காண்பிக்கிறேன். முழுமையாக மாட்டு வண்டியே செல்ல முடியாத பல ஊர்கள் இருக்கின்றன. நீங்கள் கொடுக்கும் நிதியை வைத்துக் கொண்டு, நாங்கள் எவ்வாறு சாலைகளை அமைப்பது என்பது எங்களுக்குத் தெரியாத நிலைமையிலே இருக்கிறோம். நான் ஒரு கேள்வியின் மூலமாக ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கக் கூடிய அரிசியினுடைய இருப்பு. . . . . .

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, ஊராட்சிகளுக்கு நிதி ஒதுக்குவது தேவையின் அடிப்படையிலே ஒதுக்கினால், செல்வாக்கு அங்கே இடம் பெற்று விடும். அதற்காகத் தான் மக்கள் தொகை அடிப்படையிலேதான் நிதி ஒதுக்க இயலுமே தவிர, தேவையின் அடிப்படையிலே ஒதுக்குவது என்பது சிரமமான காரியம். அது இயலாத காரியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படியானால், மக்கள் தொகையைப் பெருக்கிக் கொண்டால் நிதியை அதிகமாக ஒதுக்குவதற்கு வாய்ப்பு இருக்குமா ?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இப்போதும் முயற்சி செய்யலாம். (சிரிப்பு)



1990 ஏப்ரல் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இங்கே அமைச்சர் அவர்கள் அந்த வகையிலே சிறந்த வழிகாட்டியாக அமைவார்கள் என்று நம்புகிறேன். (சிரிப்பு)

**திரு. கே. ஆர். இராமசாமி :** இங்கே அமைச்சர் அவர்கள் கூறினார்கள், அதிலே மாறுபட்ட கருத்து உடையவனாக நான் இருக்கிறேன் நிச்சயமாக எங்கள் பகுதி மிகவும் பின் தங்கிய பகுதி. இங்கே பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு முழுமையாகத் தெரியும். நிச்சயமாக மற்ற மாவட்டங்களை விட எங்களது மாவட்டம் மிக மிக பின்தங்கிய நிலையிலே இருக்கிறது. இப்போது ஜனத்தொகை அடிப்படையிலே அளிக்கக் கூடிய பணத்தை முன்பே ஆதி காலத்திலிருந்தே ஜனத்தொகை அடிப்படையிலே பிரித்துக் கொடுத்திருந்தால், அந்தப் பகுதியும் முன்னேறியிருக்கும். ஆனால் முன்பிருந்த அரசு அவ்வாறு செய்யாததால், நகரங்களையே அதிகமாக கவனத்தில் கொண்டிருந்த நிலைமை இருந்ததால் இப்போது எங்கள் பகுதி மிக மிக பின்தங்கிய நிலைமையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஒரு கேள்வியின் மூலமாக இரண்டு நாட்களுக்கு முன்பாக நமது அமைச்சர் அவர்கள் வாயிலாக தெரிந்து கொண்டேன். அரிசி இருப்பிலே மிக மிகக் குறைவாக இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டேன். அங்கே அரிசியை சேமித்து வைப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்களிலே இப்போது குடோன்கள் கிடையாது. அவ்வாறு இருக்கக் கூடிய ஒன்றியங்களில் சிறப்பாக குடோன்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று ஆணையிட வேண்டுகிறேன். தமிழகத்திலே இருக்கக் கூடிய மொத்த அரிசிக் குறைவு எவ்வளவு ? அவர்கள் மீது தயவுசெய்து நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலே தாட்கோ திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கிறார்கள். அதிலே அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். அவர்கள் எங்கிருந்து செயல்படுகிறார்கள் என்பதை சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கக் கூடிய எங்களுக்குத் தெரியவில்லை. அவர்களாகத் தேர்ந்தெடுக்கிறார்கள், அவர்களாக கட்டுகிறார்கள். இது என்ன நோக்கம் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஊராட்சி ஒன்றியங்களுடைய பெருந்தலைவர்களோ, சட்ட மன்ற உறுப்பினர்களோ அதிலே தலையிட முடியாத நிலைமை இருக்கிறது. இதிலே நீங்கள் தலையிட்டு எங்களது ஆலோசனைகளையும் அவர்கள் பெற வேண்டும் என்று கட்டளையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. ஆர். இராமசாமி] [1990 ஏப்ரல் 24

அடுத்து எனது தொகுதி இரண்டு மாவட்டங்களிலே இருக்கிறது. அந்த இரண்டு மாவட்டங்களினுடைய வட்டார வளர்ச்சிக் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாத ஒரு தடை இருக்கிறது. நமது சட்டத்தைத் திருத்துவதாக கூறியிருக்கிறார்கள். அதை விரைவிலே செய்து, நான் இரண்டு வட்டார வளர்ச்சிக் கூட்டங்களிலும் கலந்து கொள்ள வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மாவட்டங்கள் தோறுமாவது, ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு மாவட்டத்தை விட்டு இன்னொரு மாவட்டத்திலே தொகுதிகள் இல்லாமல்—இப்போது என்னுடைய தொகுதி என்றால், அதிலே 4 ஒன்றியங்கள் இருக்கின்றன, ஒன்றை ராமநாதபுரத்தில் வைத்து விட்டு, மற்றதை தேவர் திருமகன் மாவட்டத்திலே வைத்திருக்கிறது. திருவாடானை ஒன்றியத்தை எனது மாவட்டத்திலே, தேவர் திருமகன் மாவட்டத்திலே சேர்த்தால் இன்னும் சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

13-05 மணி

அடுத்ததாக பஞ்சாயத்துக்குச் சொந்தமான மரங்களை, காட்டு கருவேல மரங்களை வெட்டுவதற்கு, அதனுடைய அதிகாரம் இப்பொழுது, 'ரெவன்யூ சைடிலே' இருப்பதாக அறிகிறேன். அதை வெட்ட வேண்டும் என்று பஞ்சாயத்துத் தலைவரோ, பஞ்சாயத்து யூனியனோ, ஆணையாளரோ நினைத்தால் அதை செய்ய முடியாத நிலைமை. மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அந்தப் பொறுப்பை கொடுத்தால் நிதி ஆதாரங்கள் திரட்டுவதற்கு இன்னும் சவுகரியமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக எனது தொகுதியிலே நகராட்சி ஒன்று இருக்கிறது. தேவக்கோட்டையிலே அது மிகமிக நலிவுற்ற நிலையிலே அது இருக்கிறது. அங்கே வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கு பல மாதங்களாக சம்பளம் கொடுக்க முடியாத நிலைமை. தயவுசெய்து அந்த நகராட்சிக்கு இன்னும் நீங்கள் நிதியை அதிகமாக வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த நகராட்சியைப் பொறுத்த மட்டில் அங்கே குப்பைகளை அள்ளுவதற்கு லாரி இல்லை. அதை உடனடியாக வாங்கிக் கொடுக்கும் படி கேட்டுக்கொண்டு, இப்பொழுது வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் இன்று 16-00 மணிக்குக் கூடும்.



1990 ஏப்ரல் 24]

பின்னர் பேரவை 13-07மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது

16-00 மணி

மீண்டும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் மாலை 16-00 மணியளவில் பேரவைக் கூடியது.

**திரு. செங்கைசிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கான வாய்ப்பளித்த உங்களுக்கு மனமார்ந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோரிக்கை எண் 28 மானியத்தை வரவேற்றுப் பேசுவதிலே நான் மெத்தவும் மகிழ்ச்சியடைகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசுஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்னாலே தேர்தல் அறிக்கையில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ரூ. 100 கோடிக்கு மேலே ஒதுக்கி சென்னை மாநகரத்தை சீர் செய்வோம் என்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். படிப்படியாக செய்வோம் என்று எடுத்துக் கூறினார்கள். ஆக இரண்டு ஆண்டுக்காலத்தில் ஏறக்குறைய ரூ. 55 கோடியை ஒதுக்கி மாநகரத்தினுடைய அடிப்படை வசதிகள் இன்றைக்குச் செய்யப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக சாலைகள் புதுப்பிக்க 1989-90ஆம் ஆண்டில் ரூ. 4 கோடி ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டன. 1990-91 ஆம் நடப்பாண்டில் ரூ. 5 கோடியை இத்திட்டத்திற்குச் செலவிட தீர்மானித்து இருக்கிறது. ஆக அதுமட்டுமல்லாமல், தற்போது சென்னையிலே ரூ. 60,000-க்கும் மேற்பட்ட குழல், மெர்குரி, சோடியம் விளக்குகள் இன்றைக்கு பொருத்தப்பட்டு இருந்தாலும்கூட, அவ்விளக்குகளைப் பராமரிக்க கடந்த காலத்தில் 30,000 தெரு விளக்குகள் இருந்த காலத்தில் 2,000 பேர் பணியாளர்களாக இருந்தார்கள். இன்றைக்கு 60,000 விளக்குகள் இருக்கின்ற இந்த நேரத்தில் 800-க்கு மேற்பட்டவர்கள்தான் பணியாளர்களாக இருக்கிறார்கள். ஆகவே போதுமான பணியாளர்கள் இல்லையென்பதை நான் இந்த நேரத்திலே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். மேலும் மின்சாரத் துறையைச் சார்ந்த ஊழியர்களை வேலைக்கு அமர்த்தும் திட்டத்திற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்குக் காலையிலே இங்கு பேசிய எங்களுடைய மாண்புமிகு இளைஞர் அணியினுடைய தளபதி ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் அன்புக்குரிய ஸ்டாலின் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். சென்னை மாநகரத்திலே இன்றையதினம் குப்பைகள் சூழ்ந்து கொண்டிருக்கிறது என்று எடுத்துச் சொல்லி, இன்றைக்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்காக எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளை அவர்கள் வரவேற்றுப் பேசினார்கள். அதையேதான் நான் வழிமொழிந்து பேசுகின்றேன். நாள் ஒன்றுக்கு 2,500 டன் குப்பை சென்னை நகரத்திலே சேர்கிறது. ஆனால் அவைகளில் 1,500, 1,300 டன் குப்பைகள்தான் அகற்றப்படுகிறது. மீதியிருக்கின்ற குப்பைகள் அப்படியே இருந்து மீண்டும் மீண்டும் சேர்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலை மாறுவதற்கான துரித நடவடிக்கைகள் இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், மேலும் பணியாளர்களை நியமித்து, இதற்கு கூடுதலான லாரிகள் மற்றும் வாகனங்கள், வண்டிகள் இவைகளை கூடுதலாக இன்றைக்கு ஏற்படுத்தி, அனைத்துக் குப்பைகளையும் சென்னையிலே இருக்கின்ற குப்பைகளை அகற்றி விட்டால், சென்னை சிங்காரச் சென்னையாக மாறக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், சென்னையிலே இன்றையதினம் 1,134 கழிப்பிடங்கள் இருந்தாலும்கூட, பல ஆண்டுக்காலமாக. 13 ஆண்டுக்காலமாக அவைகள் சரிவர பராமரிக்கப்படாத காரணத்தால் பெரும்பாலான 100-க்கு 75 சதவீதம் பொதுக் கழிப்பிடங்கள் இன்றைக்கு குடிசைப் பகுதியிலேதான் இருக்கிறது. அவைகள் அனைத்தும் பழுதடைந்து, குடிநீர் வசதி, விளக்கு வசதி போன்றவை இல்லாமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலையை இன்றைக்கு நாம் பார்க்கிறோம். கடந்த ஆண்டு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த திராவிட முன்னேற்றக் கழகம் ஏறக்குறைய ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பின்னாலே சென்னை மாநகராட்சி 200 கழிப்பிடங்களை புதுப்பித்தது. நடப்பாண்டில் புதிதாக 30 கழிப்பிடங்களை தண்ணீர் மற்றும் விளக்கு வசதியோடு கட்ட திட்டமிட்டிருப்பதை நான் வரவேற்றுக் கூற விரும்புகிறேன்.

16-05 மணி

அதுமட்டுமல்ல. காலையிலே எங்களுடைய தளபதி அவர்கள் பேசும்போது சொன்னார்கள். மின்சார எரியூட்டுகின்ற இடுகாடுகளிலே அப்படிப்பட்ட நிலை என்று சொன்னார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் 1986-87-ல் வட சென்னையில் ஒன்றும், தென் சென்னையில் ஒன்றும் அமைப்பதற்கு 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் அது எந்த நிலையில் இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஒன்றுமட்டும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக என்னுடைய தொகுதியில் மகாகவி பாரதி நகர் பகுதி இருக்கிறது. அங்கு





இஸ்லாம் மக்கள் அதிகமாக இருக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் நீண்ட நெடுங்காலமாக நான் வந்ததிலிருந்து வலியுறுத்திக் கொ.ண்டிருக்கிறேன். ஒரு கபர்ஸ்தான் ஒரு சுடுகாடு தேவை என்று வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறேன். அதையும் கவனத்திலே ஏற்று உடனடியாக அரசு செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னை நகரில் 88 பூங்காக்கள், 80 விளையாட்டு மைதானங்கள் இருக்கின்றன. 88 பூங்காக்களும் காலையிலே உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அவைகள் பாழடைந்த நிலையில் சமூக விரோதிகளுடைய இருப்பிடமாக காட்சி அளிக்கின்றன. நான் இன்னொன்றையும் சொல்கிறேன். சென்னையிலே சத்துணவுக் கூடங்கள் கட்டுவதற்கான இடங்கள் இருந்தும் கடந்த ஆட்சிக் காலத்தில் அவசர அவசரமாக சென்னை நகரத்தினுடைய அனைத்துப் பூங்காக்களிலும் சத்துணவுக் கூடங்களைக் கட்டிவிட்டார்கள். அந்த சத்துணவுக் கூடங்கள் சரிவர கட்டப்பட்டனவா என்றால் எல்லாம் இடிந்து விழக்கூடிய நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. அனைத்துப் பூங்காக்களும் சத்துணவுக் கூடங்களாக மாறி விட்டன என்று இந்த நேரத்தில் இந்த மானியத்தின்மீது பேசுகின்றபோது வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தபோது சென்னை நகரத்திலே பூங்காக்கள் மிக அழகாக காட்சியளித்துக் கொண்டிருந்தன. சுகாதாரத்தை அளிக்கக்கூடிய அப்படிப்பட்ட நிலையில் இருந்தது. இன்றைக்கு சீரழிந்து போகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதை புதுப்பித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 80 விளையாட்டுத்திடல்கள், ஒலிம்பிக் பற்றியெல்லாம் சொன்னார்கள். நான் சென்னை விளையாட்டுக் குழுவினுடைய தலைவராக இருக்கின்றேன். ஆகவே இதிலே உள்ள கஷ்டம் எனக்குத்தான் தெரியும். காலை 6 மணியிலிருந்து $7\frac{1}{2}$ மணி வரை நிச்சயம் விளையாட்டுத் திடலில் இருக்கக் கூடிய ஒரு சூழ்நிலை. எவ்வளவோ விளையாட்டு வீரர்கள் இன்றைக்கு கஷ்டப்படுகிறார்கள். ரோடுகளிலே ஓடுகிறார்கள். சாலை ஓரங்களில் ஓடுகிறார்கள். இவைகளை உடனடியாகப் போக்குவதற்கு முன்வர வேண்டும். அழிந்து போய் இருக்கின்ற விளையாட்டுத் திடல்களை புதுப்பித்து சுற்றுப்புறச் சுவர்களை கட்டித்தர வேண்டும். சமீபத்தில் மாநகராட்சி அதற்கான நடவடிக்கைகளை துரிதமாக எடுத்துக் கொண்டிருக்கிறது. என்னதான் துரிதமான நடவடிக்கை இருந்தாலும் 13 ஆண்டுக்கால ரிப்பேர் ஆயிற்றே, கூடிய சீக்கிரம் முடிவடையாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே கன்னிகாபுரம், சத்தியமூர்த்தி நகர் பக்தவச்சலம் காலனி போன்ற பகுதிகளில் சுற்றுப்புறச் சுவர்கள் கிடையாது. அவற்றை நீங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செங்கைசிவம்] [1990 ஏப்ரல் 24

அதுமட்டுமல்ல மருந்தகங்கள். இன்றைக்குச் சென்னையிலே 71 மருந்தகங்கள் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அவைகள் சரிவர பராமரிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. சென்ற ஆண்டில் ஆட்சிக்கு வந்த பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ரூ. 113.90 இலட்சம் ஒதுக்கிட்டு அதற்கு செப்பனிடும் பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன. நடப்பு ஆண்டில் ரூ. 119 இலட்சம் ஒதுக்கி அந்த மருந்தகங்களை புதுப்பிக்கின்ற சூழ்நிலையை நான் வரவேற்கிறேன்.

இன்றைக்கு சென்னையிலே 58 குழந்தைகள் நல நிலையங்கள் இருக்கின்றன. சென்னையிலே பெரும்பாலான குழந்தைகளில் 25 சதவிகிதம் இந்த மாநகராட்சி குழந்தைகள் நல நிலையங்களில்தான் பிறக்கின்றன. ஆகவே இந்த நிலையங்களை சீர்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே உதயசூரியன் நகர், சத்தியமூர்த்தி நகர் போன்ற குடிசைப் பகுதிகளில் அமைத்துத்தர வேண்டும்.

இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். திருமணங்கள் செய்துக் கொள்வதற்கு தனியார் திருமணக் கூடங்களில் ஆயிரக்கணக்கான ரூபாய்களைத் தரவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. சென்னையிலே 9 சமூகக் கூடங்கள் இருக்கின்றன. அதற்கு ஆண்டுக்கு 5 இலட்சம் வருமானம் வருவதாகக் கூறுகிறார்கள். ஆகவே சென்னையிலே இருக்கின்ற மிகச் சாதாரண மக்கள், ஏழை மக்கள் பயன்பெறக்கூடிய முறையில் தொகுதிக்கு ஒரு சமூகக் கூடம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் குடிசைப் பகுதிகள்—ஆந்திர மக்கள் வாழ்கின்ற குடிசைப் பகுதிகளிலே ஒரு கோடி ரூபாயை ஒதுக்கி அவர்களுக்கு பாதாள சாக்கடையை அமைத்துத் தருகிற திட்டத்தை மாநகராட்சியின் கழிவுநீர் துறையும், குடிநீர் வடிகால் வாரியமும் சேர்ந்து இன்றைக்கு திட்டத்தை தீட்டியிருக்கிறார்கள்.

16-10 மணி

இதில் குடிசை மக்கள் பெரும்பாலும் பயனடைகிறார்கள். இந்தத் திட்டத்தை நான் வரவேற்று, அது மட்டுமல்ல, இன்றைக்கு காலையிலே பேசியதைப்போல, குடிசை மாற்று வாரியம், வீட்டுவசதி வாரியம், வருவாய்த் துறை மற்றும் பல்வேறு துறைகள் இன்றைக்கு பராமரிக்கிற ரோடுகள் மற்றும் குப்பைகளை அகற்றுதல், தெரு விளக்குகள் இதைப் போன்ற நிலைகளை அரசு மாநகராட்சியிடம் ஒப்படைத்து அவைகளைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று, நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இரண்டு நிமிடமாவது எனக்குக் ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மிக முக்கியமான கருத்து..



1990 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் உங்களை விட முக்கியமான கருத்துக்களை ஸ்ரீதர் வைத்திருக்கிறார். திரு. செங்குட்டுவன் வைத்திருக்கிறார். இன்னும் 15 பேர் வைத்திருக்கிறார்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. செங்கைசிவம்: 1989 சனவரித் திங்களில் தமிழக முதல்வர் அவர்கள் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டிற்கு அளித்திருக்கிற பேட்டியில் மூன்று எண்ணங்களை வெளியிட்டிருக்கிறார்கள். சென்னையிலே தண்ணீர்த் தட்டுப்பாடு, கொசுத் தொல்லை, குடியிருப்பு பற்றாக்குறை — இவை மூன்றையும் நிறைவேற்றுவதுதான் என்னுடைய மகத்தான பணி என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே சமீபத்தில், சென்னையில் 1993-க்குள் சென்னைக்கு நிரந்தர குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்காக தெலுங்கு கங்கைத் திட்டத்தை 505 கோடி ரூபாய் திட்டத்திலே அதை நிறைவேற்ற இருக்கிறார்கள். ஆண்டுக்கு 1,200 மில்லியன் கனஅடி தண்ணீர் கிருஷ்ணா நதி மூலம் நமக்குக் கிடைக்கின்ற ஒரு பெரிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே, தலைவர் அவர்கள் அன்றைக்கு பேட்டியளித்தார்கள். இன்றைக்கு அந்தக் காரியம் நிறைவேற்றப்பட இருக்கிறது. அதுமட்டுமல்ல. இரண்டாவதாக அவர்கள் சொன்னது குடியிருப்புப் பற்றாக்குறை.

சென்ற ஆண்டு 2,000 வீடுகள் குடிசை மாற்று வாரியம் மூலமாகக் கட்டப்பட்டு, நடப்பாண்டிலே 12,000 வீடுகளைக் கட்டுவதற்கு நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திட்டத்தைத் தீட்டியிருக்கின்றார்கள். அது மட்டுமல்ல, மிக முக்கியமானது, கொசுத் தொல்லை. அந்தக் கொசுத் தொல்லை என்பது சென்னையிலே இருக்கிற அனைவரும் இன்றைக்குப் பாதிக்கப்படக்கூடிய ஒரு தொல்லையாக இருக்கிறது. சென்னை மாநகரில் கொசுத் தொல்லையினால் மலேரியா காய்ச்சல், யானைக்கால் நோய், டிங்கி ஜுரம் போன்றவைகள் இன்றைக்கு அதிகமாகக் காணப்படுகின்றன. கடந்த மூன்று ஆண்டுக்காலத்தில் மட்டும் ஒரு இலட்சத்து பன்னிரண்டாயிரம் பேர் அந்த நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பம்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற நகரங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சென்னையைப் பற்றி மட்டும் பேசுங்கள். (குறுக்கீடு) அடுத்து திருவாளர் ஜி. பழனிச்சாமி (குறுக்கீடு) வேறு வழியில்லை. நீங்கள் மனு மாதிரி எழுதி அமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள். 17 பேர் இன்னும் பேசியாக வேண்டும். (குறுக்கீடு) எங்களுடைய கஷ்டத்தை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். கொசுத் தொல்லையைக் கூடத் தாங்கிக் கொள்ளலாம். உங்கள் தொல்லையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. (சிரிப்பு)

[1990 ஏப்ரல் 24

திரு. செங்கைசிவம்: ஆகவே, கல்கத்தா, பம்பாய், டெல்லியைப் பார்த்தால், சென்னைதான் முதலிடம் வகிக்கிறது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொன்ன, கொசுத் தொல்லையைக்கூடத் தாங்கிக் கொள்ளலாம் என்று சொன்ன கருத்து இருக்கிறதே. ஒரு வகையில் வரவேற்கத்தக்கது. ஏனென்றால் தங்களையெல்லாம் அதற்காகத்தான் தேர்ந்தெடுத்து இருக்கிறோம், (சிரிப்பு).

திரு செங்கைசிவம்: துணைத் தலைவர் அவர்களே, கொசுக்களில் இரண்டாயிரம் விதமான கொசுக்கள் இருக்கின்றன, சென்னையில். அதிலே மூன்று விதமான கொசுக்கள் தான் மலேரியா நோயை உற்பத்தி செய்கின்றன. மலேரியா நோய்க்கே காரணமாக இருக்கிறது. அதிலே இன்னொன்று ஒரு எண்ணம் என்னவென்றால், ஆண் கொசு சைவம். பெண் கொசு அசைவம். அந்தப் பெண் கொசுதான் மனிதர்களைக் கடிக்கிறது. (சிரிப்பு) ஆகவே, ஆண் கொசு அப்படிப்பட்ட நிலையிலே இல்லை. பெண் கொசு, காரணம் என்னவென்றால், முட்டை இடுகிற காலத்தில் இவைகளுக்குப் புரோட்டீன் தேவைப்படுகிறது. ஆகவே, அந்தப் புரோட்டீனுக்காகத்தான் இவைகள் அந்த ரத்தத்தை உறிஞ்சுகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மணியடிக்கப்பெற்றது).

16-15 மணி

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சமுதாய வளர்ச்சி நகராட்சி மாநகராட்சி நிர்வாகத்தில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல முன் வருகிறேன். இன்றைய தினம் நடைபெறக்கூடிய இந்த மானியக் கோரிக்கை என்பது நாட்டிலே இருக்கக்கூடிய கீழ்த்தரப்பட்ட மக்களுடைய நேரடியான பணிகளை மேற்கொள்ளக்கூடிய நல்ல பல திட்டங்களை அமல்படுத்தக்கூடிய காரியங்களாகும். ஆனால் இன்றைய தினம் சுதந்திரமடைந்து 43 ஆண்டுகளுக்குப் பிறகும்கூட முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தினை நிறைவேற்றுகிற வரையில் எட்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலே போடப்பட்டிருக்கிற திட்டங்கள் அனைத்தும் கிராமப்புற, நகர்ப்புற மக்களுடைய நலத் திட்டங்கள் இன்றைய தினம் இருந்து இருக்கிறது, குறிப்பாக சொல்ல வேண்டுமானால், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நிதி ஒதுக்கிய போதும்கூட, கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய, நகரப்புறத்தில் இருக்கக் கூடிய அடிப்படையான பிரச்சினைகளை இன்று வரை தீர்க்க முடியாத, அதையும் பரிசீலிக்க முடியாத நிலையில்தான் இந்த



[திரு. ஜி. பழனிச்சாமி]

1990 ஏப்ரல் 24]

நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. பொதுவாக சொல்ல வேண்டும் என்று சொன்னால் ஒதுக்கப்படுகின்ற நிதி, கிராமப்புற மக்களுக்கு, நகர்ப்புற மக்களுக்கும் போய் முழுமையாக சேர முடியவில்லை. நகராட்சி அமைப்புகளில், பேரூராட்சி அமைப்புகளில் அதேபோல் மாநகராட்சி அமைப்புகளில் மக்களுடைய நேரடியான பிரச்சினைகள் குடிநீர், சாலை வசதி, சுகாதார வசதிகள் இதுபோன்ற பிரச்சினைகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கக்கூடிய அதுவும் கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய, நகரப்புறத்தில் இருக்கக் கூடிய அன்றாட மக்களோடு தொடர்பு வைத்து இருக்கக்கூடிய அந்தப் பகுதியினுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக கருத்து அறிந்து, அவர்களுடைய பிரச்சினைகள் அறிந்து தேவைகளை முழுமையாக செய்யக்கூடிய அமைப்புகள் ஆகும். ஆனால் கடந்த காலங்களில் இந்த உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக பல ஆண்டுக்காலமாக தேர்தல் நடைபெறாமல் தனி அதிகாரிகள் மூலமாக நிர்வாகம் நடைபெற்றதால் பஞ்சாயத்து நிர்வாகமே முழுமையாக சீர் கெட்டு அப்படி ஒரு அமைப்பு இருக்கிறதா, ஒரு நிர்வாகம் இருக்கிறதா என்கிற நிலைமைகளுக்கு ஆளாக்கப்பட்ட நிலைமைகள் எல்லாம் நாம் பார்த்தோம். தமிழகத்தில் தொடர்ந்து பல ஆண்டுக்காலம் போராடி அதற்குப் பிறகு இந்தத் தேர்தல் நடைபெற்றது. அதற்குப் பிறகு சட்ட மாற்றங்கள் பல வந்து இருக்கின்றன. 3 ஆண்டு, 5 ஆண்டு என்று எல்லாம் சட்ட மாற்றங்கள் வந்து இருக்கின்றன. 40 ஆண்டுக்காலமாக அந்த ஏழை எளிய மக்கள், உழைக்கின்ற மக்கள், விவசாயிகள், நகர்ப்புற மக்களுடைய தேவைகளை 8 ஐந்தாண்டுக் காலத் திட்டத்தில் கூட நிறைவேற்ற முடியாமல் இன்னும் அவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றியே நாம் சிந்தித்துக் கொண்டு இருக்கக்கூடிய ஒரு அவல நிலைமையைத்தான் நாம் பார்க்க முடிகிறது. முழுமையாக அவர்களுக்கு ஒதுக்குகின்ற நிதி அவர்களுக்கு நேரடியாகப் போய் சேர முடியாத நிலை இருக்கிறது. இருந்தாலும் அதை செம்மைப்படுத்தி அதில் இருக்கக்கூடிய ஊனங்களைப் போக்கி இன்றைய தினத்தில் முழுமையான மாற்றங்களை கண்டு அறிந்து அதை போக்குவதற்கான முயற்சியை எடுத்துக் கொண்டதற்கு உண்மையில் நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் இன்னும் உள்ளாட்சி அமைப்புகளில் இந்த அறிக்கையில் என்ன கூறப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய மக்களை ஆராய்ந்து கணக்கு எடுத்து அவர்களின் வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு பாடுபடுவோம் என்றும் அதற்கான நிதி நிலையை ஆராய்ந்து அறிந்து அவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் காணுவோம் என்றும் இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு விஞ்ஞான பூர்வமாக மாறுதல் பல வந்து இருக்கின்றன.

[திரு. ஜி. பழனிச்சாமி]

[1990 ஏப்ரல் 24

அப்படி பார்க்கின்றபோது நகர்ப்புறங்களுக்கும் கிராமப்புறங்களுக்கும் வித்தியாசம் காண முடிகிறது. இன்றைக்கு நகரப்புறங்களில் ரோடை எடுத்துக் கொண்டால், நகர்ப்புறங்களில் ஒரு தூசிப் படியாத ரோடுகள் பலயிடங்களில் காண்கிறோம். ஆனால் கிராமப்புறங்களில் அடிப்படையான வசதிகளான சாலை வசதிகள் கிடையாது, சுகாதார வசதிகள் இன்னும் போய் சேரவில்லை, எந்தக் காலத்தில், எந்த ஆண்டில் அது போய் சேரப் போகிறது, அப்படிப்பட்ட ஒரு நிலைமை அந்த மக்களுக்கு எப்போது வரப்போகிறது என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகளை இன்றைக்கு நாம் பார்க்க வேண்டும். அதேபோல் கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய மக்களுடைய வாழ்க்கை நிலைமை எப்படி இருக்கிறது என்றால், வறட்சியால், வெள்ளத்தால், புயலால் இதுபோன்ற பல்வேறு இயற்கைச் சீற்றங்களுக்கு ஆளாக்கப்பட்டு, அந்த மக்களுடைய வாழ்க்கை நிலைமை என்பது படு மோசமான நிலைமையை நேரடியாக அவர்கள் அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே பக்கத்தில் இருக்கிற அருகில் இருக்கக் கூடிய மாநிலங்களைப் பார்க்கிறபோது பாண்டிச்சேரியை எடுத்துக் கொண்டால் அங்கே இருக்கக்கூடிய சாலை அமைப்புகள், குடிநீர் பிரச்சினைகளுக்கு ஒரு காலக் கட்டத்தை நிர்ணயித்து அவர்களுடைய பிரச்சினைகளை முடித்து விடுகிறார்கள். அடுத்ததாக ஒதுக்கக்கூடிய அதாவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டை பல்வேறு திட்டங்களை சந்திக்கிற அளவுக்கு அதை விட ஒரு முன்னேற்றமான வேலை செய்வதற்கு இன்றைக்கு உதவி அளிக்கக்கூடிய நிலையில் பக்கத்தில் இருக்கக்கூடிய பாண்டிச்சேரி மாநிலம் நமக்கு உதாரணமாக திகழ்கிறது. அங்கே எல்லா கிராமங்களுக்கும் சாலைகள் இருக்கின்றன, எல்லாத் தெருக்களுக்கும் மின்சார வசதிகள் இருக்கின்றன, எல்லா ஊர்களுக்கும் குடிநீர் இருக்கிறது, ஆனால் நம்முடைய தமிழகத்தில் தொடர்ந்து 40 ஆண்டுக்காலமாக எந்த ஒரு ஊராட்சி ஒன்றியத்திலும் அவைகளை முழுமையாக நிறைவேற்ற முடியாத, தன்னிறைவு பெற முடியாத நிலையில் நாம் இருக்கிறோம். அதற்காக நான் குறிப்பாக ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும். ஊராட்சி ஒன்றிய தேர்தல் நடந்த பின்னால் நம்முடைய கட்சியின் சார்பாக ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராக அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களிடத்திலே ஒரு கணக்கு கிடைத்தது, ஒரு ஒன்றியத்தில் ஒரு கிணறு ஒன்று 40 ஆயிரம் ரூபாய் செலவு செய்து கட்டப்பட்டதாக ஒரு கணக்கு இருந்தது. அந்த இடத்தைப் போய் பார்வையிட்டார்கள். ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவரும், நானும், அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளும் பார்வையிட்டோம். கிணற்றைக் காணோம். ஆகவே அங்கே இருக்கக் கூடிய காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தோம் கிணறு காணாமல் போய்விட்டது. ஆகவே உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி பெட்டிஷன் புகார் ஒன்று நாங்கள்



1990 ஏப்ரல் 24] [திரு. ஜி. பழனிச்சாமி]

கொடுத்தோம். ஆனால் போலீஸ் அதிகாரி அதற்கு மறுத்தார்கள், கிணறு காணவில்லை என்று சொன்னால் நாங்கள் எங்கே போய் தேடிக் கொடுப்பது என்று சொன்னார்கள். ஆனால் அதற்கு பிறகு ஒரு மிகப் பெரிய மாடி வீட்டிலே கட்டியதாகவும், அது பஞ்சாயத்து இடத்திலே வீடு கட்டி இருக்கின்ற இடத்திலே கிணறு வெட்டியதாகவும் கணக்கு இருந்தது. இப்படிப்பட்ட பல்வேறு மோசடிகள் அந்த நேரத்திலே நடந்தன. ஊராட்சி ஒன்றியங்களுக்கு தனி அதிகாரிகள் ஆட்சி நடத்திய காலத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நடந்து அந்த நிர்வாகத்தினுடைய செலவினங்கள் அதிகமாகி இன்றைக்கு யூனியன் நிர்வாகம் கடன் பெற்றிருக்கிறது. ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஆட்சி பொறுப்புக்கு வந்து, முழுமையான நிதி நிலைமையை மக்களுக்கு சேர்க்க முடியாத, பணிகளைச் செய்ய முடியாத இந்தச் சூழ்நிலையில் இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வரக்கூடிய நிதிகள் அனைத்தும் உடனடியாக அவர்கள் வாங்கியிருக்கிற கடன்களை வரவு வைக்கிற ஒரு முறை இன்றைய தினத்திலே இருக்கிறது. அது எந்த அளவிற்கு நியாயமாக இருக்கும். யாரோ செய்த தவறுக்கு இன்றைக்கு பொறுப்பிலே இருக்கக்கூடிய ஊராட்சி மன்ற பெருந் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர்கள் வழிவகை செய்ய வேண்டிய மிக மோசமான நிலைமை இன்றைய தினத்திலே இருக்கிறது. ஆகவே, இதுபோன்று இருக்கின்ற கடன்களை அகற்றுவதற்கு மறுபரிசீலனை செய்து, அதை திரும்ப வசூலிக்காத அளவிற்கு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

16-20 மணி

அதேபோல பேரூராட்சி. இன்றைக்கு நகராட்சிக்கும் ஊராட்சிக்கும் இடைப்பட்டிருப்பது பேரூராட்சியாகும். நகராட்சிக்கு இருக்கக்கூடிய சலுகைகள் அளிக்கப்படவில்லை. ஊராட்சியிலே இருக்கக்கூடிய சலுகைகளும் கிடைக்காத அளவிற்கு இன்றைய தினம் பேரூராட்சிகள் அமைப்புகள் இருக்கின்றன. அதேபோன்று, பேரூராட்சியிலே கிராமப்புறமாக இருக்கக்கூடிய இடங்களில் இன்றைக்கு காலனி வீடுகள். அதேபோன்று ஐ.ஆர்.டி.பி. மூலமாகக் கிடைக்கக்கூடிய திட்டங்கள் பல பேரூராட்சிக்கு கிடைக்க முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் போக்குவதற்கு இன்றைய தினம் சட்ட மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு, அதற்கான முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, பயிற்சித் திட்டங்கள் மூலம் இன்றைக்குப் படித்து இருக்கக்கூடிய கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கு 3 மாதத்திலிருந்து 1 வருடம் வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு 350 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரையிலும் அளிப்பதுடன் பயிற்சிக்கான உதிரிப் பாகங்களும் வழங்கப்பட்டு, அவர்கள் தொழில் துவங்குவதற்கான முயற்சிகளையும் அரசு எடுத்திருக்கிறது. ஆனால் அவர்கள் பயிற்சி முடித்துவிட்டு வந்ததற்குப் பின்னால், அவர்களுக்கு சொந்த நிதி ஆதாரம் இல்லாமல், அவர்களுக்கு வழங்கப்பட்ட பொருள்களை விற்று விட்டு, வேறு தொழில்களைப் பார்க்க வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. அவர்களுக்கு ஐ.ஆர்.டி.பி. மூலமாகக் கடன் வழங்கியும், ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக வேலை வாய்ப்பு வழங்கவும் அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, இந்த நேரத்தில் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். 20 ஆண்டுக்காலமாக, மாநகராட்சி, பேரூ ராட்சிகளில் இருக்கக்கூடிய வாகனங்கள், அதாவது, டிராக்டர் கள், லாரிகளெல்லாம் பழுதடைந்து அவைகள் ஏலத்திலே விடக்கூடிய நிலைமையிலே இருக்கின்றன. ஆகையால் அவை களைப் புதுப்பிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இது உண்மையான யதார்த்தம். 20 ஆண்டுக் காலங்களில் எப்படிப் பட்ட நிர்வாகம் இருந்திருக்கிறது என்று சொன்னால், 20 ஆண்டுக்காலத்தில் மக்களுடைய பெருக்கம், மக்களுடைய வளர்ச்சி, வாகனங்களுடைய அபிவிருத்தி போன்றவற்றிற்கு ஏற்றவகையில் இன்றைக்கு துப்புரவுத் தொழிலாளர்களை அதிகப்படுத்த வேண்டும். 1973ஆம் ஆண்டு முதல் 1983 ஆண்டு வரையிலும் பணி செய்த துப்புரவுத் தொழிலாளர்கள் தங்க ளுடைய வேலையிலிருந்து ஓய்வு பெற்றார்கள் என்று சொன்னால், அவர்களுக்குப் பென்ஷன் இல்லை என்று சொல் கிறார்கள். ஆகையால், பென்ஷன் திட்டத்தில், அவர்களுக்கு பென்ஷன் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இது குறித்து இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நகராட்சி, பேரூராட்சிகளிலே பணியாற்றக்கூடிய துப்புரவுத் தொழிலாளர்கள் நான்கு தடவை கையெழுத்து போடவேண்டியிருக்கிறது. ஜெயிலிலே இருக்கிற குற்றவாளி கள்கூட இரண்டு தடவைதான் கையெழுத்துப் போடுகிறார் கள். இவர்கள் 4 தடவை கையெழுத்து போட வேண்டிய நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையை மாற்றி அவர்கள் இரண்டு தடவை கையெழுத்து போட்டு, அவர்களுடைய பணி யைச் செய்வதற்கான முயற்சியை அரசு பண்ண வேண்டும் என்று கேட்பதோடு, துப்புரவுத் தொழிலாளர்களை அதிகப் படுத்த வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன்.





*திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம் மன்றத்திலே வைக்கப் பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக, இந்த பண ஒதுக்கீடு, ஏதோ ஒரு பகுதிக்கு மட்டும் அதிக அளவிலும் சில பகுதிகளுக்கு, புறக்கணிக்கப்பட்ட நிலையிலே ஒரு ரீஜினல் இம்பேலன்ஸ் இருக்கக்கூடிய அளவிற்கு இந்த ஒதுக்கீடு இருக்கிறது என்பதனால் நான் பாராட்ட விரும்ப வில்லை. ஏன் என்றால், பெரும்பாலும், கிராமங்கள், கிராமப் புறத்தையொட்டி இருக்கின்ற நகரங்கள், அந்த நகரத்தின் பக்கத்திலே இருக்கின்ற பகுதிகளினுடைய வளர்ச்சிக்காக நம்முடைய திட்டத்திலே எந்த அளவிற்கு அக்கறை காட்டி இருக்கிறோம் என்று பார்க்கின்றபோது, பொதுவாக பெரும் நகரங்களுக்கு காட்டியிருக்கின்ற அந்தப் பெரிய மனப்போக்கு சிறிய நகரங்கள், பஞ்சாயத்துக்கள் போன்றவற்றின் வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை என்று நான் இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

16-25 மணி

பல பேர் இன்றைய தினம் சென்னை மாநகரத்தின் வளர்ச்சியைப் பற்றியும், அதன் நிலைமைகளைப் பற்றியும் எடுத்துரைத்தார்கள். என்னைப் பொறுத்த வரையில், கிராமங் கள், கிராமப் பஞ்சாயத்துகள், நகராட்சிகள், பேரூராட்சி கள், பஞ்சாயத்து ஒன்றியங்கள் இவைகள் போன்றவை களுக்கு அவ்வப்போது ஆண்டுதோறும் பல நிலைகளில் உதவிகள் அளித்து அதனுடைய வளர்ச்சிக்கு, முன்னேற்றத் திற்கு பாடுபடுகிறோம். முழுமையாக அந்தப் பலன்கள் அந்த பஞ்சாயத்துக்கோ, பேரூராட்சிகளுக்கோ, கிராமப்புற மக்க ளுக்கோ அவர்கள் பெறுகின்ற அளவுக்கு திட்டங்கள் போய்ச் சேரவில்லை. அதற்கு முக்கியக் காரணம், பொறுப்பேற்றிருக்கிற அந்தந்த வட்டார அதிகாரிகள் தொடர்ந்து அந்த நிலையி லிருந்து ஒவ்வொரு நிலையிலும் கண்காணித்து சிறப்பான முறையில் நிறைவேற்றித் தர ஏற்பாடு செய்கிற நிலையில் அவர்கள் இல்லை. இன்னும் அந்த மனப்போக்கு அவர்களிடம் மாறவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் நடக்கின்றன. அதிலே ஒவ்வொரு முறையில் எடுத்துரைக்கப்படுகின்ற காரியங்கள், ஒரு வருடம், இரண்டு வருடமாகியும் கூட கவனம் செலுத்தாமல் அப்படியே தொடர்ந்து செயல்படாமல் இருப்பதாலே அதனுடைய வளர்ச்சி குன்றி, மக்களுக்கு நல்ல காரியம் போய் எட்டி விடாமல் பார்த்துக் கொள்கிற நிலையில்தான் இருக்கிறதே தவிர, நாம் போடுகின்ற

[திரு. கோ. பூவராகன்]

திட்டங்கள், நாம் செலவழிக்கின்ற பணம் அவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்றால், மிகக் குறைவாகத்தான் எட்டியிருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் துறைக்கான அமைச்சர் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, சென்னை நகரத்தின் மீது ஆர்வம் காட்டி, விரைந்து தினந்தோறும் ஒரு பகுதிக்குச் சென்று அங்குள்ள கஷ்ட நஷ்டங்களைப் போக்க பாடுபடுகிறார்கள். அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும், மாதத்தில் ஒரு சில தினங்களாவது கிராமப் பகுதிகள், நகராட்சிப் பகுதிகளுக்கு திடீர் விஜயம் செய்து, அங்குள்ள குறைகளையும் போக்கும் நிலைமைகளை முறையாக அதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு முன் வந்தால் அவர்களை நான் பெரிதும் வரவேற்பேன். அவ்வாறு செய்ய வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையைப் பொறுத்தவரையில் ஓரளவுக்கு, அது எழுந்து நடப்பதற்கு ஏற்பாடாகியிருக்கிறது. இன்னமும் விரைந்து செயல்பட முற்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். காலையில், மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்கள் சொன்னதைப்போல. அவர்கள் எல்லாப் பகுதியிலும் நகர் வலம் வந்தார்கள். ஆனால் ஒரே ஒரு பகுதிக்கு மட்டும் செல்ல வில்லை. நேரம் இல்லாததால் விட்டுவிட்டார்கள் என்று கருதுகிறேன். அந்த அளவுக்கு எல்லா பகுதிகளைப் பற்றியும் பேசினார்கள். கடற்கரைப் பகுதி எல்லாப் பகுதி மக்களும் செல்கின்ற இடம். அந்த ஒரு இடத்தைப் பற்றி.......

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடற்கரைப் பகுதி ஆயிரம் விளக்குத் தொகுதியில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன் : நான் அதை குறையாகச் சொல்ல வில்லை. சென்னை நகரத்தை முழுமையாகப் படம் பிடித்துக் காட்டி ஒரு யதார்த்த நிலைமையைச் சொல்லியிருக்கிறீர்கள் என்று சொன்னேன். அப்படிச் சொல்லும்போது, எல்லா மக்களுக்கும் சொந்தமாக இருக்கின்ற, அந்த இடத்தில் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும். எல்லாப் பகுதி மக்களும் வந்து போகின்ற இடம் அது. அதை உங்கள் தொகுதியில் சேர்த்தாலும் எனக்கு ஆட்சேபம் இல்லை. அதிலேயும் கொஞ்சம் கவனம் வையுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு அங்கே நடக்கிற நிலைமைகளைப் பார்த்தால், சென்ற ஆண்டு அங்கே ஒரு நினைவாலயம் துவங்கப்பட்டது. அதற்குப் பக்கத்தில் கடை வீதிகள் 3 பக்கத்திலும் வரிசை வரிசையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே பார்த்தால் ஜகஜோதியாக இருக்கும். என்ன நடக்கிறது.



[திரு. கோ. பூவராகன்]

எப்படி நடக்கிறது என்று யாரும் பார்க்க முடியாது. கடற்
கரையில் இப்படி இருந்தால் எவ்வாறு நடப்பது? யாருடைய
அனுமதியின் பேரில் இதெல்லாம் நடக்கிறது? புல்வெளி ஒழுங்காக
இல்லை. அதெல்லாம் பூங்காக்கள் வந்துவிட்டது. எப்படி
வந்தது? யார் ஏற்பாடு செய்தார்கள்? அதை அகற்றுவதற்கு
என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டன? எத்தனை இலாக்காக்கள்
அதில் பாடுபடுகிறார்கள், எவ்வாறெல்லாம் செய்கிறார்
கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சென்னையில்
ஒரு பகுதியையாவது தூய்மையாக வைப்பதற்கு முயற்சி
எடுக்கக்கூடாதா? எந்த அளவுக்கு முயற்சி எடுக்கிறோம்? ஏன்
அதில் வெற்றிகாண முடியவில்லை என்பதை எண்ணிப்
பார்த்து குறைந்த பட்சம் கடற்கரைப் பகுதியையாவது
தூய்மையாக வைக்க ஏற்பாடு செய்தால் ஓய்வு நேரத்தில்
எல்லாத் தரப்பு மக்களும் ஒரே இடத்தில் அமர்ந்து, பார
பட்சம் இல்லாமல் அங்கே வருகிற காற்றை அவர்கள் பெற
ஏற்பாட்டை செய்து சமதர்மமாக காற்றையாவது பெறுவதற்கு
ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே
போன்றுதான் எல்லாப் பகுதிகளிலும் என்குரோச்மெண்ட்
இருக்கின்றன. கடை என்று சொன்னால், வீதிகளில் இருக்கிற
கடைகளை எல்லாம் அகற்றுவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய
வேண்டும்.

16-30 மணி

அதுதான் அவர்கள் சொன்னார்கள். எந்தப் பகுதியானாலும்
சரி, அதாவது இன்றையதினம் 15 அடி, 10 அடி என்று நடை
பாதை போட்டிருக்கிறோம் என்று சொன்னால் அதிலே 15 அடி,
10 அடி என்று அகலத்திற்குத் தகுந்த மாதிரி 2 வரிசை, மூன்று
வரிசை, 4 வரிசை என்று கடைகளை அமைத்து விட்டார்கள்.
ஆக இன்றைக்கு கட்டடத்திற்குள்ளே இருக்கின்ற கடைகளில்
நடக்கிற வியாபாரத்தை விட, இந்த கடை வீதிகளில் இருக்கிற
கடைகளில் தான் வியாபாரம் பன்மடங்கு அதிக அளவில்
நடக்கிறது. வரி இல்லாமல், அதிக முதலீடு இல்லாமல், அந்தக்
கடைக்காரர்களே, ஏற்பாடு செய்து எதிர் வரிசையில் அந்தக்
கடைகளை வைத்து, நல்ல வியாபாரத்திற்கு ஏற்பாடு செய்து
நன்றாக வருமானத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள்.
அதற்கு நடைபாதை என்று பெயர் வைக்க வேண்டாம். கடை
பாதை என்றே பெயர் வைத்து விடலாம். அதாவது நடை
பாதை என்ற பெயரை அகற்றிவிட்டு இதெல்லாம் சென்னை
மாநகரத்தில் இருக்கின்ற கடை பாதைகள், அதை நீங்கள்
எல்லோரும் கவனித்துக் கொள்ளலாம் என்று சொல்லி அந்தப்
பெயரை மாற்றி விடலாம் என்று இந்தச் சமயத்தில் நான் கேட்டுக்
கொள்கிறேன்.

இந்த முறையைக் களைவதற்கு ஒரு ஏற்பாடு செய்து பார்க்க
லாம். சிங்கப்பூர், மலேசியாவில் வாரத்திற்கு ஒரு முறை பெரிய
சாலையாக இருக்கிற பகுதியில் மாலை நேரங்களில் போக்கு
வரத்து வசதியைத் தடை செய்து விட்டு கடைகளை அங்கே

[திரு. கோ. பூவராகன்]

வைத்துக் கொள்ளலாம் என்று அனுமதிக்கிறார்கள். 4 மணி
யிலிருந்து 10 மணி வரையில் அந்தக் கடை இருக்கும் அந்த
வாரத்திலே அந்தப் பகுதியிலே போக முடியாது. . அப்படி
ஏதாவது ஒரு பெரிய சாலைப் பகுதியை நீங்கள் இந்த மாதிரி
நடை பாதைக் கடைக்காரர்களுக்கு என்று ஒதுக்கி வைத்துவிட்டு
அந்தப் பகுதியிலே மாலை நேரத்திலே இருந்து இரவு நேரம்
வரை கடைகளை வைத்துக் கொள்ளலாம் என்று அனுமதித்தால்
ஓரளவுக்கு அவர்கள் நம்முடைய கட்டுப்பாட்டுக்குள் வருவார்
களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது எங்கே
பார்த்தாலும் நடைபாதைக் கடைகள் இருக்கின்றன என்று
சொன்னால் அந்தக் கடைகளை அகற்றுவதற்கு என்ன ஏற்பாட்
டைச் செய்திருக்கிறீர்கள். இங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்
இருக்கிறார். போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள். நிர்வாகம்
இருக்கிறது. இரண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள்
இந்த சென்னை மாநகரத்திற்கு. அவர்கள் நமக்குத் துணையாக
இருந்து வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்
கிறார்கள். நாமெல்லாம் கூட இங்கே வந்து போகிறோம்.
அமைச்சர்கள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள். அப்படி இருந்
தும்கூட, இதை அகற்றுவதற்கு என்ன ஏற்பாடு செய்து இருக்
கிறோம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இதிலே
அரசியல் தலையீடு, குறுக்கீடு என்றெல்லாம் இருக்கலாம்.
இருந்தாலும் கூட எல்லோரும் ஒட்டு மொத்தமாகப் பேசி, பல
அரசியல் கட்சிகளையும் அழைத்துப் பேசி இந்த மாதிரி பொது
இடங்களில் ஆக்கிரமிப்பு செய்து கடை வீதிகளில், நடைபாதை
களில் கடைகளை வைப்பதைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்ய
வேண்டும். கடற்கரையிலே எல்லா காரியங்களுக்கும் இடம்
கொடுப்பது என்ற நிலைமைகள் எல்லாம் இருப்பதை மாற்று
வதற்கு நீங்கள் அழைத்துப் பேசி ஒரு விதமான ஒத்த கருத்தை
உருவாக்கி நல்ல நிலையை நகரத்திற்கு நீங்கள் உருவாக்க
வேண்டும் என்று இந்தச் சமயத்தில் நான் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

நகராட்சியைப் பொறுத்த வரையில் நகரின் வளர்ச்சிக்காக
உலக வங்கியிலே இருந்து உதவி அளிக்கிறார்கள். அதிலே கூட
பார்க்கிறோம், சென்ற முறை விருத்தாசலம் நகரத்திற்கு 25
இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருந்தார்கள். ஆனால் அப்படி
ஒதுக்கப்பட்ட பணம் எல்லாம் திரும்ப வேறு எதற்கோ மாற்றப்
பட்டுவிட்டது. என்ன காரணத்தினால் மாற்றினார்கள் என்பது
கூட தெரியாது. விருத்தாசலம் நகரம் நெய்வேலியை ஒட்டி
இருக்கின்ற ஒரு நகரம். நாளொரு மேனியும், பொழுதொரு
வண்ணமும் என்று சொல்கிற அடிப்படையில் தினந்தோறும்
வளர்ந்துகொண்டு வருகிற நகரம். எனவே கடைகள், பஸ்
நிற்கும் இடம் போன்றவற்றைக் கட்டுவதற்காக, அதன் வளர்ச்
சிக்கு உதவுகின்ற வகையில் 25 இலட்சம், 30 இலட்சம் ரூபாய்



 [திரு கோ. பூவராகன்]

என்று மற்ற நகரங்களுக்கு நீங்கள் ஒதுக்குவது போல் விருத்தா
சலம் நகரத்திற்கும் நீங்கள் ஒதுக்கித் தர வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

பல நகரங்கள் இன்றையதினம் விடுபட்டு இருக்கின்றன.
அந்த விடுபட்ட நகரங்களுக்கெல்லாம் நீங்கள் தர வேண்டும்
மேலும் ஏற்கெனவே கொடுத்த இடங்களுக்கே திரும்பத் திரும்ப
உதவி அளிப்பதை விட இதுவரையில் உதவி போய்ச் சேராத
இடங்களுக்கு உதவி அளித்து அதனுடைய வளர்ச்சிக்கு நீங்கள்
ஏற்பாடு செய்வது நல்லது என்று நான் இந்தச் சமயத்தில் தெரி
வித்துக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு அளிக்கப்படுகின்ற பணம்
எல்லாம் செவ்வனே நல்லமுறையில் செலவழிக்கப்படுகிறதா என்று
பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். சமீபத்திலே
நீங்கள் எல்லோரும் பார்க்கலாம். தென்னாற்காடு மாவட்டத்
தில் 1984—86 ஆம் ஆண்டில் அதாவது அந்த இரண்டு ஆண்டு
களில் $2\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு தவறான கணக்குகளை எழுதி,
சாமான்கள் வாங்கச் செலவிட்டதாகக் கணக்கெழுதி அது சம்பந்
மாக 20, 30-க்கும் மேற்பட்ட அதிகாரிகள் சஸ்பென்சனிலே
இருக்கிறார்கள் என்று பேப்பரிலே பார்த்தோம். இதெல்லாம்
தன்னிறைவுத் திட்டம் இருந்தபோது நடந்தது. ஆகவே
தன்னிறைவுத்திட்டம் இருந்தபோது அவர்களுடைய தன்னிறைவை
பார்த்துக் கொண்டார்களே தவிர, அந்தந்தப் பகுதிகள்
தன்னிறைவு அடைகின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்யவில்லை
இது ஒரு பகுதியில் அல்லது ஒரு மாவட்டத்தில் மட்டுமல்ல,
எல்லா மாவட்டத்திலும் இந்தக் குறைபாடு இருக்கிறது. இதைப்
போக்க ஒரு முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன். இன்றையதினம் பி.டீ.ஓ. ஆடிட் பீ.டீ.ஓ.
எல்லாம் இருக்கிறார்கள். ஒரு தடவை ஒருவர் தப்பு
பண்ணுகிறார் என்று சொன்னால் அப்புறம் ஆடிட் பி.டீ.ஓ.
ஆகி அவரே அந்தக் கணக்கைச் சரி செய்கிறார். எனவே
இதிலே எந்த முறை சரியாக இருக்கும் என்று நீங்கள் எண்ணிப்
பார்க்கவேண்டும். ஒரு பி.டீ.ஓ. ஒரு பஞ்சாயத்திலே யூனியனிலே
பொறுப்பாக இருக்கிறார்கள் என்று வைத்துகொண்டால் அப்புறம்
இரண்டு, மூன்று வருஷங்கள் பொறுத்து, அவரே ஆடிட் பி.டீ.ஓ.
ஆகவருகிறார் என்றால் அவர் எந்த அளவுக்குக் கணக்கை சரிபார்க்க
வழிவகை செய்வார் என்பதை எல்லாம் நாம் எண்ணிப்பார்க்க
வேண்டும். இந்த மாதிரி முறைகேடுகள் இருப்பதைத் தவிர்த்து
நல்லவிதமாக நீங்கள் ஏற்பாடு செய்தால் நல்லது.

குறிப்பாக சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில்,
செப்டம்பர் மாதத்தில் தேர்தல் நடத்த ஏற்பாடாகிக் கொண்டு
இருக்கிறது. ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். மிகவும் நான்
வரவேற்கிறேன். அதற்கு முன்னாலே, இதிலே ஏற்றத் தாழ்வு

16-35 மணி [திரு. கோ. பூவராகன்]

இருக்கிறது. வாக்குகள் ஒருபகுதியிலே 45 ஆயிரம், இன்னொரு பகுதியிலே 25 ஆயிரம், 15 ஆயிரம் என்று இப்படியெல்லாம் பாகுபாடு இருக்கிறது மொத்தமாக இப்போது 150 டிவிஷன்கள் இருக்கின்றன. இந்த 150 டிவிஷன்களிலும் ஏற்கெனவே கணக்கிட்டபோது இருந்த ஜனத்தொகை வேறு இப்போது நாளுக்கு நாள் நம்முடைய ஜனத்தொகை கணக்கு ஏராளமாகி இருக்கிறது. ரேஷன் கார்டு கணக்கில் இருப்பது வேறு, நம்முடைய கார்ப்பரேஷன் கணக்கில் இருப்பது வேறு. இந்த மாதிரி கணக்குகள் பலவிதத்தில் மாறி மாறி இருப்பதனாலே, ஒவ்வொரு பகுதியும் சரியான முறையிலே குறைந்த பட்சம் ஒரு 20 ஆயிரம் அல்லது 15 ஆயிரம் என்று குறையாத அளவுக்கு வைக்கிறீர்களோ, அந்தக் குறையாத அளவுக்குத் தகுந்தவாறு எல்லா டிவிஷன்களையும், நீங்கள் மாற்றியமைத்து அதற்குப் பிறகு தேர்தல் வைப்பது நல்லது. அதனால் கால தாமதம் ஆகுமென்று சொல்லி, காலத்தைக் கடத்துவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. அதற்கு அதிக நாட்களும் பிடிக்காது. ஏனென்றால், மதுரை, கோயம்புத்தூர் பகுதிகளில் ஏற்கெனவே 60 ஆக இருந்தது 72 ஆக செய்ய வேண்டும் என்றெல்லாம் ஏற்பாடு ஆகியிருக்கிறது. இங்கு 150 என்று இருப்பதை ஏன் 200 செய்யக் கூடாது? 220 ஆக ஏன் செய்யக் கூடாது? அப்படிச் செய்வதால், பரவலாக எல்லாப் பகுதிகளுக்கும் ஒரு சீரான வோட்டு எண்ணிக்கை வருமென்று நான் இந்த சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஏற்பாட்டினை நீங்கள் செய்ய வேண்டும். அதேபோலத்தான் இந்த வருடத்தில் அல்லது அடுத்த வருடத்தினுடைய ஆரம்பத்தில், நம்முடைய பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியங்கள் ஆகியவற்றுக்கு தேர்தல் வர இருக்கிறது. நகராட்சி தேர்தல் வர இருக்கிறது. அந்த அமைப்புகளுக்குக்கூட, சில பஞ்சாயத்து ஒன்றியங்களிலே குறைந்த பட்சம் 60, 70 அல்லது 80 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. சில இடங்களில் 40 இருக்கின்றன. இவ்வாறு இருக்கின்றதை மாற்றி, 2 பகுதியாக—அதிகமாக பஞ்சாயத்துக்கள் இருக்கின்ற பகுதியை இரண்டாகப் பிரித்து, அதற்கு புதிய பஞ்சாயத்து ஒன்றியங்களை ஏற்பாடு செய்வது நல்லது.

அதேபோல், பல இடங்களில் இன்றையதினம் புதிய நகராட்சிகள் ஆரம்பிக்கின்றபோது அந்தந்தக் கிராமங்களை அதிலே சேர்த்து விடுகிறோம். குறிப்பாக, விருத்தாசலம் நகராட்சியைப் பொறுத்த வரையில், 5 ,6 பஞ்சாயத்துக்களை அதனோடு இணைத்து இருக்கிறோம். (மணியடிக்கப் பெற்றது) வெகுதூரத்திலே அந்தப் பகுதியிலே இருக்கிற கிராமங்கள் எல்லாம் ஒன்றாக இணைத்து, அதிலே இன்றைய தினம் நகராட்சியாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கிராமத்திலே ஏற்கெனவே இருந்த வசதி அந்தப் பகுதி, நகராட்சியாக ஆகிவிட்ட பிறகு, அவர்களுக்குக் கிடைக்கவில்லை. போதுமான பாதை வசதி இல்லை; குடி தண்ணீர் வசதி இல்லை. அதோடு விளக்குகள் கொடுக்கின்றபோது, ஒவ்வொரு ஆண்டும் நகரங்கள்



[திரு. கோ. பூவராகன்]

வளர்ந்து, ஆங்காங்கு புதிய மனைக்கட்டுகள் போட்டு, வீடுகள் வருகிறபோது, இந்த நகராட்சிக்கு ஒரு வருடம் 200 கொடுக்கிறோம்; 150 தான் விளக்குகள் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னாலும், அது கூட சரியாக வந்து சேர்வது இல்லை. இந்த நிலையை மாற்றி, விளக்குகள் விஷயத்திலாவது கொஞ்சம் தாராளமாக நீங்கள் ஏற்பாடு செய்தால் நல்லது. போடுகின்ற விளக்குகள் எரியாமல் இருப்பதையும் தடுக்க வேண்டும் நல்லவிதமாக இந்த விளக்கு வசதிகள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்

இந்த நகராட்சியைப் பொறுத்த வரையில், புதிய நகராட்சியாக வருகிறபோது, அதற்குத் தனிக் கவனம் காட்டி, அதிகப் பணத்தை ஒதுக்கித் தர வேண்டும். குறிப்பாக, விருத்தாசலம் நகராட்சியைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே பேரூராட்சியாக இருந்தபோது, எவ்வளவு துப்புரவுப் பணியாளர்கள் இருந்தார்களோ, அதே அளவுக்குத்தான் நகராட்சியாக வந்துவிட்ட பிறகு, 2, 3 ஆண்டுகள் ஆகிவிட்ட பிறகும் கூட, அதற்குக் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. அது அனுமதிப்பதிலே என்ன சங்கடம் இருக்கிறது? ஜனத்தொகை அதிகம் இருக்கிறது. வரவு இருக்கிறது. அவர்கள் அதிகமான துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். கேட்கின்றபோது, அனுமதி அளித்து, குறைந்தபட்சம் 10 பேர் கேட்டால், 5 பேராவது அளித்து, அந்த நகராட்சியை சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், நடை பாதைக் கடைகளை அகற்றுவதற்கு, குறைந்த பட்சம் கடற்கரையையாவது தூய்மையாக வைத்துக் கொள்வதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு முறை, மலேசியா நாட்டுக்குப் போனபோது, பினாங்கு நகரத்திலே ஒரு டாக்டர் அந்த ஊரைச் சேர்ந்தவர், மாங்கொட்டையை அந்த கடற்கரையிலே வீசிவிட்டார் அதற்காக அங்கு இருக்கின்ற போலீசார் அவரைப் பிடித்து வைத்து, விடாப்பிடியாக, அவருடைய வேலையே போகக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. அவ்வ்வவு தூரம் அவர்கள் கண்டிப்பாக, கண்காணிப்போடு அவ்வாறு தூய்மையை காப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். அந்த அளவுக்கு நாம் போகாவிட்டாலும் கூட, ஓரளவுக்கு தூய்மையாக வைத்துக் கொள்வதற்கு எல்லோரும் இணைந்து நிறைவேற்றுகின்ற ஒரு திட்டத்தை அமைத்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, அதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

16-40 மணி

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி துறை மானியக் கோரிக்கை யின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப் பளித்தமைக்கு மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மானியத்திலே பேசுவதிலே எனக்கு ஒரு புதிய நம்பிக்கை. காரணம் என்னவென்றால் எங்களுடைய தானைத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள்

'' இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்''

என்று உள்ளாட்சித் துறையை மாண்புமிகு அமைச்சர் திரு. கோ. சி. மணி அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். எந்தப் பதவியும் இல்லாத காலத்திலேயே, மேக்கிரிமங்கலத்திலே போராட்டம் நடத்தி ஊர் குளத்தை வெட்டி எல்லோருக்கும் குடி தண்ணீர் வழங்கிய அந்தத் தொண்டு வரலாறு படைத்தவர் அவர். எனவே, அவரிடத்தில் இந்தத் துறை கொடுக்கப்பட்ட உடனே, தூங்கிக் கொண்டிருந்த இந்தத் துறை துள்ளி எழுந்து பணியாற்றக்கூடிய விதத்திலே, சென்னை நகரமே சிறப்பான முறையிலே இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. முன் பெல்லாம் வட்ட அலுவலகத்திலே போய் கேட்டால், யாரைக் கேட்டாலும் அங்கே போயிருக்கிறார், இங்கே போயிருக்கிறார் என்று சொல்வார்களே தவிர எங்கே இருக்கிறார் என்று கண்டுபிடிக்க முடியாது. ஆனால் அமைச்சர் அவர்கள் பொறுப் பேற்ற உடனே அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை இருந்த இடத்திலிருந்து கொண்டே கண்டுபிடிக்கும் முறையிலே ஒரு சிறப்பான முறையை வகுத்து சிறப்பாக வேலை வாங்கிக்கொண் டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அப்படி வேலை வாங்குகிற காரணத்தினால் பெரிய அதிகாரிகள் முதற் கொண்டு சிறிய சாதாரண ஊழியர்கள் வரை சிறப்பாக சென்னை நகரத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு சென்னை நகரம் ஒரு முன்னேற்றப் பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. அதுமாத்திரமல்லாமல், வெறும் கையிலே முழம் போட முடியாது. எனவேதான், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அதற்கான பணத்தையும் கொடுத்து, சென்னை நகரை சீர்படுத்தச் சொல்லி கட்டளையிட்டிருக் கிறார்கள். அவர்களுடைய கட்டளையை சிரமேற் தாங்கி இன்றைக்கு சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

உங்களுக்கு இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், கொள்கை குறிப்பிலே 45 இலட்சம் ஜனத் தொகை என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த 45 இலட்ச



ஜனத் தொகைக்கு 150 வட்டங்கள். ஒரு வட்டத்திற்கு குறைந் தது 30 ஆயிரம் பேர். 30 ஆயிரம் பேருக்கு ஒரு மாநகராட்சி மன்ற உறுப்பினர் இருந்து நல்ல முறையில் பணி செய்ய முடியுமா? ஒவ்வொருவருடைய கோரிக்கையையும் கவனிக்க முடியுமா? எனவே குறைந்தது, பம்பாயில் இருப்பது போல, 200 வட்டங் களாக அதை ஆக்கி அங்கே 20 ஆயிரம் மக்களுக்கு ஒரு வட்டம் என்று சொல்லக் கூடிய அளவிலே அல்லது 25 ஆயிரம் மக்களுக்கு ஒரு வட்டம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு 200 வட்டங்களாக உயர்த்த வேண்டும். அப்படிச் செய்து சென்னை மாநகராட்சி நல்ல முறையிலே, சிறப்பான முறையிலே நடைபெற ஆவன செய்ய வேண்டும். அதிலே ஒரு சுயநலம் எனக்கு. எப்படி பெண் களுக்கு 30 சதவிகிதம் என்று ஒதுக்கிவிட்டு, பிறகு இந்த 15 —ல 45 சீட்டை பெண்களுக்குக் கொடுத்துவிடும் நிலையில், இன்றைக்கு 200 சீட்டுகள் என்கிற நிலை ஏற்பட்டால் அதில் 30 சதவிகிதம் அதாவது 60 சீட்டுகள் போய்விட்டால் எஞ்சிய 140 சீட்டுகள் மிஞ்சி எங்களுக்கு கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே 200 சீட்டுகளாக இதை செய்வார்கள், செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் இங்கே வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, சுற்றுப்புற சூழல் ஆண்டு என்று நேற்று முதல் இந்த ஆண்டு கொண்டாடப்படுகிறது. சுற்றுப்புற சூழல் என்று பார்க்கிறபோது நம் வீட்டைச் சுற்றிலும் தான் சுத்தமாக வைத் துக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறோமே தவிர, சுற்றுப் புறத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் யாருக்கும் இல்லை, என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். அந்த எண்ணத்தை நாம் வளர்த்துக் கொள்ளவில்லை. எனவே, அந்த சுற்றுப்புறச் சூழலை வளர்ந்துக் கொள்வதற்கு சென்னை நகரைப் பொறுத்தவரையில் முக்கியமாக காலையிலே பேசிய இளைஞர் அணி தளபதி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள் சிறப்பாக பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக் கிறார்கள். நானும் ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்பு கிறேன். அதாவது சென்னை நகரில் ஏறக்குறைய 2 ஆயிரம் எண்ணெய் லாரிகள் தினமும் வந்து செல்கின்றன. சென்னை நகர சாலைகள் வழியாக தண்டையார் பேட்டைக்கு சென்று, கொருக்குப்பேட்டைக்குச் சென்று அங்கிருந்து எண்ணெய் பிடித் துக் கொண்டு வருகின்ற அந்த லாரிகள் மறுபடியும் சென்னை நகருக்கு உள்ளே வராமல் இருந்தால் இந்த சாலைகள் சீர் கெடாமல் இருக்கும். அந்த சாலைகள் சீர்கெடாமல் இருந்தால் சென்னை நகரின் அழகை ஓரளவு பேணிக் காக்க முடியும். எனவே, அந்த எண்ணெய் டெர்மினல்களை தாம்பரம், ரெட்ஹில்ஸ போன்ற பகுதிகளுக்கு குழாய் மூலம் கொண்டு போய் அங்கே வைத்து விட்டால், இந்த 2 ஆயிரம், 3 ஆயிரம் லாரிகள் சென் னைக்கு தினமும் வந்து செல்வது குறையும். அதனால் சென்னை நகரத்திற்கு ஒரு மிச்சம் ஏற்படும்.

[திரு. என். கணபதி] [1990 ஏப்ரல் 24

இன்னொன்று, அதையொட்டிய கருத்து. ஏறக்குறைய 1,600 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் நம்முடைய மாநக ராட்சிக்கு உள்ளன. அதே நேரத்தில் 350 கிலோ மீட்டர் சாலைகளில் பல்லவன் பஸ்கள் போய்க் கொண்டிருக்கின்றன. பல்லவன் பஸ்கள் வரி கட்டுவது இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். பல்லவன் பஸ்கள் வரி கட்டவில்லை என்று. வரி கட்டிதான் பஸ்களை ஓட்டிக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போகிற போக்கில் அடித்துவிட்டுப் போகிறாரா ? (சிரிப்பு).

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தவறுக்கு வருந்துகிறேன். எங்களுடைய கார்களில் நாங்கள் வில்லையை மாட்டிக் கொள்வதால், வில்லைகள் பஸ்களில் நான் பார்க்கவில்லையாதலால் அப்படிச் சொன்னேன். (மணி யடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மணியடிப்பதற்கும் வருந்துகிறேன்.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். எனவே, 350 கிலோமீட்டர் சாலைகளில் பல்லவன் பஸ்கள் செல் வதால் பஸ்களுக்கு மாத்திரமல்லாமல் சாலைகளுக்கும் சேதாரம் அதிகமாக ஆகிறது. அந்த அளவுக்கு ரோடுகளை மெயின்டெயின் பண்ணுவதற்கு கார்ப்பரேசனுக்கு அரசாங்கத்திலிருந்தோ அல் லது பல்லவன் போக்குவரத்து கார்ப்பரேசனிலிருந்தோ நிதியுதவி கொடுத்தால் ஓரளவு கார்ப்பரேசனுடைய நிதியை சீர்படுத்த முடியும். அப்படி செய்தால்தான் இந்த முற்போக்கு வேலைகளை எல்லாம் சிறப்பாகச் செய்ய முடியும்.

அதே நேரத்தில் சுற்றுப்புறச் சூழல் என்பதற்கு மந்திரியிலே **தனி** அமைச்சர், திருமதி மேனகா காந்தி அவர்கள் அமைச்சராக இருக்கிறார்கள். அதே போல இங்கேயும் தனி அமைச்சர் போட்டால் சிறப்பாக சுற்றுப் புறச் சூழல் அமையும். அதிலும் மகளிரைப் போட்டால் அழகோடு, கலை உணர்வோடு சுற்றுப் புறச் சூழலை அவர்கள் போற்றுவார்கள், பாராட்டுவார்கள் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





1990 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒவ்வொரு முறை மானியக் கோரிக்கையில் பேசும்போதும் ஓர் அமைச்சருக்குப் பதவி அளித்துக்கொண்டிருக்கிறீர்கள்.

திரு. என். கணபதி : வாய்ப்பந்தல் போட்டுக்கொண்டிருக் கிறோம். அடுத்தாற்போல் இங்கே சென்னை நகரைப் பொறுத் தவரையில் குடிநீர், சாக்கடை வசதி செய்வதெல்லாம் முன்பு மாநகராட்சி வசம் இருந்தது. ஒரே இடத்தில் இருந்தால் குறிப் பிட்ட அதிகாரிகள் அதைப் பார்த்து சீர் செய்யச் சுலபமாக இருந்தது. இன்றைக்குக் குடிநீருக்கும், சாக்கடைக்கும் தனி வாரியத்தைப் போட்டுவிட்டு, தனித் தலைவரைப் போட்டுவிட்டு, மாநகராட்சிக்குத் தனியாகத் தலைவரைப் போட்டிருப்பதால் இரண்டும் போதுமான தொடர்போ அல்லது ஒற்றுமையோ இல்லாமல் காரியங்கள் சரியாக நடைபெறவில்லை. குறைந்தது இவைகளை ஒன்றாக்க வேண்டும். அல்லது மாநகராட்சியின் கமிஷனராக வருகிறவர்கள் ஒரு சீனியர்-மோஸ்ட் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக, தலைமைச் செயலாளர் அந்தஸ்த்தில் இருக்கக் கூடியவராக இருந்து, அவரே குடிநீர் வடிகால் வாரியத்தின் தலை வராக ''எக்ஸ்-அபிஷியோ'' என்ற முறையில் இருந்தால், இரு வரும் சேர்ந்து பணியாற்ற நல்ல வாய்ப்பு ஏற்படும். அடுத்து, நடைபாதைகள் சீர்படுத்தப்பட வேண்டும். நடைபாதைகளிலே பல்வேறு பங்குகள் திடீர் திடீரென்று வருகின்றன. மீன் விற்பதற்கு வருகிறது, ஊனமுற்றவர் என்று வருகிறது, தையல் வேலை என்று வருகிறது, சக்கிலித் தொழிலாளி என்று வருகிறது. இவைகள் எல்லாம் அனுமதி பெற்று வருகிறதா என்பது தெரியவில்லை (மணி அடிக்கப்பெற்றது). அவைகளை நாம் பரிசீலிக்க வேண்டும். அதைப்போல நடமாடும் உணவகங்கள் அதிகமாகிவிட்டன எனவே, சுகாதாரத்தைப் பேணிக் காக்க வேண்டும். என்னுடைய தொகுதியிலே பக்கிங்காம் கெனால் ஓடுகிறது. அதைச்சீர்படுத்த வேண்டும். கூவத்தைச் சீர்படுத்த வேண்டும். அடையாரைச் சீர்படுத்த வேண்டும். லஸ்ஸையும் மந்தவெளியையும் இணைக்கும் பக்கிங்காம் கெனால் பாலத்தை புதிய பாலமாகக்கட்டித்தர வேண்டுமென்ற கோரிக்கையோடு, என் உரையை முடிக்கிறேன்.

திரு. மு. சின்னக்குழந்தை : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, சமுதாய நலத் திட்டங்கள், நகராட்சி நிர்வாகம் என்ற மானியக் கோரிக்கைகளில் நான் சார்ந்துள்ள அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பேச அழைத்தமைக்கு தங்களுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். உள்ளாட்சித் துறை என்பது ஊராட்சியாக இருந்தா லும் சரி, நகராட்சியாக இருந்தாலும் சரி, பேருராட்சியாக இருந்தாலும் சரி, மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி, சாலை வசதி

[திரு. மு. சின்னக்குழந்தை] [1990 ஏப்ரல் 24

சாக்கடை வசதி, விளக்கு வசதி போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத்தான் இருக்கிறது. அப்படிப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்கள் நல்ல முறையில் செயல்படுகின்றனவா என்பதை நாம் அறிவோம். அந்த அடிப்படையிலேதான் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற கிராமப்புற மக்களை மேலே கொண்டு வருவதற்கும், பல ஆண்டுகளாக சீர்கெட்டிருக்கும் கிராமங்களை நல்ல முறையில் வளப்படுத்துவதற்கும் எங்களுடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டுவந்து, எந்தெந்த கிராமங்களுக்குச் சாலைகள் இல்லையோ, பள்ளிக்கூட வசதிகள் இல்லையோ, மயானச் சாலைகள் இல்லையோ, சமுதாயக் கூடங்கள் இல்லையோ, அந்தக் கிராமங்களில் எல்லாம் அவற்றை ஏற்படுத்தித் தந்தார்கள். ஆனால், அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள உள்ளாட்சி நிறுவனங்களுக்குப் போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால், போட்ட சாலைகள், கட்டிய கட்டிடங்கள் இன்றைக்கு பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அவற்றைத் தமிழக அரசு பழுது பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல அன்று விட்டுப்போன நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு மீண்டும் கட்டிட வசதிகள், சமுதாயக் கூடங்கள் எல்லாம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றால், மீண்டும் தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்து, அதன் மூலமாக எல்லா வேலைகளையும் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கொள்கிறேன்.

1988—89-இல் ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின்கீழ் பயனீட்டாளர்களைத் தேர்ந்தெடுக்க ஒன்றியப் பெருந்தலைவரைக் கொண்ட ஒரு டாஸ்க் போர்ஸ் கமிட்டி அமைக்கப்பட்டது. ஆனால், 1990-லே பெருந்தலைவர் அந்தக் கமிட்டியிலிருந்து எடுக்கப்பட்டார். ஆனால், பெருந்தலைவர் போன்றவர்கள் அந்தக் கமிட்டியில் இருந்ததால்தான் கிராமங்களில் இருந்து வருகிறவர்களில் நல்லவர்கள் யார், வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டக்கூடியவர்கள் யார் என்பது தெரியும். ஆனால், இப்போது கமிட்டிகள் இருந்தாலும், ஊராட்சி மன்றத் தலைவர்கள் அந்தக் கமிட்டிக்குக் கொடுக்காமலேயே, கிராம சேவக்குகளிடமோ அல்லது ஊராட்சி ஒன்றிய ஆணையரிடமோ லிஸ்ட் கொடுக்கும் காரணத்தால் உண்மையாக வறுமைக் கோட்டுக் கீழே இருப்பவர்களுக்கு அந்தக் கடன் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல முறையில் கொண்டுவர உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 24] [திரு. மு. சின்னக்குழந்தை]

16–50 மணி

அதேபோலத்தான் ஊராட்சி தேர்தல் நேரங்களில் ஒவ்வொரு ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்கு நிற்க வேண்டுமென்றால் அவர் அந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஒப்பந்தக்காரராக இருக்கக் கூடாது என்று ஒரு சட்டம் இருக்கிறது. ஆனால் இந்த நிலையில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரிசனங்களுக்கு கட்டப்படுகின்ற தொகுப்பு வீடுகளானாலும் சரி, மற்றக் கட்டிடங்களானாலும் சரி அவைகளை ஊராட்சி மன்றத் தலைவர் செய்வதால் அவரும் மறைமுகமாக ஒரு ஒப்பந்தக்காரராக ஆவதோடு, அந்தக் கிராமத்தில் தலைவர் எடுத்து வேலை செய்கின்றபோது அதைக் கேள்வி கேட்பதற்கு அதாவது அந்த வேலையை நல்ல முறையில் செய்யவில்லை என்றால் கேள்வி கேட்க முடியாத ஒரு சூழ்நிலை வருகிறது. ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டங்கள் போன்ற வேலைகளை டெண்டர் மூலமாக விட ஆவன செய்ய வேண்டும்.

அரிசனங்களுக்குக் கட்டிக் கொடுக்கின்ற வீடுகளை தாட்கோ மூலம் கட்டிக் கொடுப்பதற்கு வழி செய்ய வேண்டும். ஒவ்வொரு ஊராட்சித் தலைவருக்கும் இப்போது புதிதாக ஒரு உத்திரவு வந்து இருக்கின்றது. என்னவென்றால் ஏற்கெனவே போடப்பட்டு இருக்கின்ற விசைப் பம்புகளின் மோட்டார் கெட்டு விட்டால்—முன்பு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரிப்பேர் செய்து கொடுத்தார்கள். ஆனால், இப்போது ஊராட்சி மன்றமே ரிப்பேர் செய்து கொள்ள வேண்டும் என்று உத்தரவு போட்டு இருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். சில ஊராட்சிகளுக்கு லைட் வாங்குவதற்குக்கூட பணம் இல்லாத நிலை இருப்பது. அவைகள் அந்த நிலையில் இருக்கின்றபோது, ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலே கடன் கேட்கின்ற சூழ்நிலை வந்தாலும், சில ஒன்றியங்களிலே பொது நிதியும் இல்லை, என்கிற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் இப்படிப்பட்ட ரிப்பேர் வேலைகளை குடிநீர்வடிகால் வாரியமே செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

100 போர் குழாய்கள் இருக்கின்ற இடங்களுக்கு 2 பிட்டர்களை நியமித்து இருக்கிறார்கள். ஆனால், தற்போது நிலவுகின்ற கடுமையான வறட்சியான நேரத்தில்—இதுவரை அவர்கள் 3 உதவியாளர்களை வைத்துக்கொண்டு ஒரு ஒன்றியத்தில் இருக்கின்ற நூற்றுக்கணக்கான கிராமங்களுக்குச் சென்று ரிப்பேர் செய்வது என்பது முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அவர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு, ஒன்றியங்களிலே கட்டுகின்ற கழவுநீர் குட்டைகளை
மண்வளப் பாதுகாப்பு அதிகாரிகள் தான் கட்ட வேண்டும் என்ற
ஒரு முறை இருக்கிறது. ஆனால், இலக்கைத் தேர்ந்தெடுப்பதற்
கும், அந்த இலக்கைக் கொடுப்பதற்கும் ஆணையாளரும், அந்த
ஒன்றியமும் செயல்படுகின்றபோது அந்த வேலையையும் ஒன்
றியமே செய்வதற்கு அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்
டுக்கொள்கின்றேன்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் பொது நிதி நன்றாக
இருக்கின்றபோது அந்த ஊராட்சி ஒன்றியத்துக்குத் தேவையான
அத்தியாவசியமான வேலைகளைச் செய்வதற்கு ஒன்றியத்தினு
டைய தீர்மானத்தின் அடிப்படையில் ஆணையாளர் செய்வதற்கு
வழி செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நேரங்களிலே மாவட்ட
ஆட்சித் தலைவர்களையோ மற்ற அதிகாரிகளையோ கலந்து
செய்வதற்கு நேரம், காலம் அதிகம் ஆகின்ற காரணத்தால்
அவற்றுக்கு ஒன்றியத்தின் தீர்மானம் மூலமாக செய்வதற்கு அரசு
ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் இருக்கிற ஜீப்புகளுக்கு
200 லிட்டர் டீசலோ அல்லது 200 லிட்டர் பெட்ரோலோ என்று
தான் அலாட்மென்ட் இருக்கிறது. இதை வைத்துக்கொண்டு,
ஒரு ஆணையாளரோ, ஊராட்சி ஒன்றியத் தலைவரோ பல
கிராமங்களுக்குச் சென்று பார்ப்பது என்பது மிகப் பெரிய குறை
யாக இருக்கிறது. சில நேரங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரின்
நேர்முக உதவியாளரோ, அரசாங்கத்திலிருந்து வருகிற அதிகாரி
களோ ஜீப்பை எடுத்துச் சென்றுவிட்டால், அவர்களுக்கே அந்த
டீசல் அல்லது பெட்ரோல் சரியாகப் போகின்ற காரணத்தால்,
200 லிட்டர் என்பதை 300 லிட்டராக உயர்த்திக் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இருக்கின்ற கிராம ஊராட்சி
துவக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளிகளுக்குப் போதுமான கட்டிட
வசதியோ, கரும்பலகை வசதியோ, பெஞ்ச், நாற்காலியோ
இல்லாமல் இருக்கின்றது. இவற்றைச் செய்வதற்கு, பொது நிதி
யிலிருந்து எடுத்துச் செய்வதற்கோ அல்லது கல்வி நிதியிலிருந்து
எடுத்துச் செய்வதற்கோ ஆணையாளருக்கு உத்திரவு வழங்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றுக்கு மேற்பட்ட பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகளை
1958இல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் நியமித்து இருக்
கிறார்கள். அவர்களுக்கு என்ன வேலை என்றால், பஞ்சாயத்துக்
கணக்குகளைச் சரி பார்ப்பது தான். ஆனால், பஞ்சாயத்துக்
கணக்குகளைச் சரி பார்ப்பதற்கு தணிக்கை பி.டி.ஓ.க்கள் இருக்
கின்றபோது அவர்கள் வேலை இல்லாமல் இருக்கின்ற ஒரு சூழ்
நிலை இருக்கிறது. ஆகையினால் தணிக்கை பி.டி.ஓக்களை
எடுத்துவிட்டு அந்தக் கணக்கைப் பார்க்கின்ற வேலைகளை அந்த
விஸ்தரிப்பு அதிகாரிகளுக்குக் கொடுக்க அரசு ஆவன செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கால்நடை விஸ்தரிப்பு அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் ஏற்கெனவே பி.எஸ்ஸி., படடம் வாங்கி, கிட்டத்தட்ட 3,000 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குகின்ற அவர்களுக்கு வேலையே ஆட்டு லோன், மாட்டு லோன் வாங்கிக் கொடுப்பதோடு சரி. அவர்களுக்கு அதைத் தவிர வேறு வேலை இல்லாமல் இருக்கின்ற காரணத்தால் இந்த வேலையைத் தவிர மற்ற நேரங்களில் கிராமங்களுக்குச் சென்று கால்நடைகளைப் பராமரிக்கிற பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக் கொள்ள அரசு உத்திரவிட வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

16–50 மணி

144374

என்னுடைய தொகுதியாகிய பெரணமல்லூர் தொகுதியில் மூன்று ஒன்றியங்கள் இருக்கின்றன. அதில் தெள்ளார் ஒன்றியத்திலே மட்டும் 78 கிராமங்களுக்கு மேல் இருக்கின்ற காரணத்தினால், ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக இருந்த, மறைந்த துரை அவர்கள் அந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பதற்குத் தீர்மானம் போட்டு, தேசூர் ஒன்றியம் என்றும், தெள்ளார் ஒன்றியம் என்றும் பிரிக்க வேண்டுமென்று தீர்மானத்தைப் போட்டு அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரணமல்லூர் தொகுதியில் இருக்கின்ற சேத்துப்பட்டு பேரூராட்சியில் 40,000-க்கும் மேற்படட ஜனத் தொகை இருக்கிறது. அந்தக் காரணத்தினால் அந்தப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரணமல்லூர் பேரூராட்சிக்கும், தேசூர் பேரூராட்சிக்கும் இரண்டு பேருந்து நிலையங்களைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரணமல்லூரிலிருந்து வந்தவாசிக்குச் செல்லுகின்ற ஒரு சாலை, வல்லம், தாடிநல்லூர் வழியாக அந்தச் சாலை வேண்டும். அந்தச் சாலையைப் போட்டுத் தந்தால் கிட்டத்தட்ட இருபது ஊர்களுக்குப் பஸ் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கும். ஆகவே, பெரணமல்லூர் ஒன்றியத்திலே மட்டும் இரண்டு கிலோ மீ டர் தூரத்திற்கு அந்தச் சாலையை ஒன்றிய நிதியிலிருநமதா அல்லது ஜவஹர் வேலை வாய்ப்பு நிதியிலிருந்தோ செய்து கொடுக்குமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மோரைக்கனியூர் என்ற ஊரிலிருந்து அல்லியேந்தல் வரை செல்லுகின்ற சாலையை இரண்டு மூன்று பேர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால் அந்த ஆக்கிரமிப்பை அகற்றி அந்த ரோட்டைப் போட்டுத் தருவதற்கு அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

D
V211,31'N90
N90.30.2

[திரு.மு.சின்னக்குழந்தை] [1990 ஏப்ரல் 24

நகராட்சிகள் என்று வருகின்றபொழுது, எங்களுடைய நகராடசி ஆரணி நகராட்சி என்பது அனைவருக்கும் தெரியும். அந்த நகராட்சிக்கு வி.ஏ.கே. நகர் என்று ஒரு விஸ்தரிப்புநகர் இருக் கிறது. அது சட்டப்படி, விதிப்படி, அதற்கு அப்ரூவல் வாங்கிய பிறகுதான் அங்கே குடியிருப்புகள் வந்திருக்கின்றன. ஆசிரியர் களும், அரசுத் துறை அதிகாரிகளும் அதிகமாக வாழ்கின்ற அந்தப் பகுதிக்கு மின்சார வசதியோ, குடிதண்ணீர் வசதியோ, சாலை வசதியோ இல்லாமல் இருக்கிறது. அந்த வார்டினு டைய கவுன்சிலரைக் கேட்டால், சேர்மனிடத்திலே தீர்மானம் கொடுத்திருக்கிறேன் என்று சொல்லி சேர்மனை கேட்டால் தீர் மானம் போட்டுவிட்டோம் என்று சொல்கிறார். அங்கேயிருக்கின்ற ஆணையாளரைக் கேட்டால், தீர்மானம் போட்டு அரசினிடத் திலே மூன்று இலட்சம் ரூபாய் கேட்டிருக்கிறோம், வந்த பிறகு செய்கிறோம் என்று சொல்கிறார். அந்த அடிப்படையிலே அந்தத் தீர்மானம் வந்தால், நகராட்சிக்கு மூன்று இலட்சம் ரூபாயை ஒதுக்கிக் கொடுத்து, வி.ஏ.கே. நகர் என்ற விஸ்தரிப் புக்குத் தேவையான, அவசியமான பணிகளைச் செய்து கொடுக்குமாறு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. பி. எச். பாண்டியன் :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சித்துறை, ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க முற்படுகிறேன். நகராட்சித் துறையைப் பொறுத்தவரையில், சென்னையில் இன்றைக்குக் கோடை காலத்தில் குடிப்பதற்கும் முழுமையாக எல்லோராலும் தண்ணீர் பெற முடியாத இந்தக் கால கட்டத்தில், இந்தத் துறையில் இன்னும் அதிகமான மறு மலர்ச்சி தேவை என்பதுதான் என்னுடைய முதல் வேண்டுகோள் ஆகும்.

முன்பெல்லாம் சென்னை மாநகரத்திலேயிருந்த ஏரிகளெல் லாம், இன்றைக்கு அவைகளெல்லாம் நிரப்பப்பட்டு, ஆங்காங்கே கட்டிடங்கள் இன்றைக்கு எழுப்பப்பட்ட காரணத்தினாலேதான் கோடைக் காலங்களில் சிப்பேஜ் என்று ஆங்கிலத்தில் சொல் வார்களே அதுபோல, கிரவுண்ட் வாட்டர் லெவல் இன்றைக்கு இல்லாத காரணத்தினால் குடிநீர்ப் பற்றாக்குறை கொஞ்சம் அதிகமாகவே நமக்கு இருக்கிறது.

கோட்டூர்புரம், நுங்கம்பாக்கம் ஏரி இதுபோன்ற பழங் காலத்தில் இருந்த ஏரிகளெல்லாம்—இன்னும் பல ஏரிகள் நகரத்தைச் சுற்றியுள்ள ஏரிகளெல்லாம், மழைக் காலங்களில் அங்கே தண்ணீர் கொஞ்சம் தேங்கி நிலத்தடி நீர் கிடைக்கக் கூடிய ஒரு வாய்ப்பு இருந்தது. ஆனால் இன்றைக்கு அந்த ஏரிகளெல்லாம் தாமாகவே நிரப்பப்பட்டு, ஆங்காங்கே பல்வேறு கட்டிடங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. நம்முடைய வள்ளுவர்



1990 ஏப்ரல் 24] [திரு. பி. எச். பாண்டியன்]

கோட்டம் இருக்கக்கூடிய இடமே ஒரு ஏரிதான். அந்த அள விற்கு இன்றைக்கு நம்முடைய நகர மக்களுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் அதிகமாகக் கிடைக்காததற்குக் காரணமே, இன் றைக்கு கிரவுண்ட் லெவல் வாட்டர் குறைந்த காரணம்தான் என்பதை நான் இங்கே சொல்ல ஆசைப்படுகின்றேன். ஒருவேளை இப்படியே நிலை போய்க்கொண்டிருந்தால் கீழே தண்ணீரே இல்லாத காலகட்டத்தில் கடல் நீரே அந்தப் பகுதிக்கு வந்து, நம்முடைய சென்னை நகரத்தின் நிலத்தடி நீரே கடல் நீராக மாறக்கூடிய அபாயமே இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகவே, இனிமேலாவது எங்கேயாவது ஒரு இடம் கிடைத்தால் அதை ஒரு சிறிய ஏரியாக உருவாக்கி நிலத்தடி நீரைத் தேக்கி வைப்பதற்கு, நாம் அதனு டைய வளர்ச்சியைக் காட்டுவதற்கு முற்பட வேண்டுமென்ற வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**17-00 மணி**

நகராட்சியின் வருமானம் பொறுத்தவரையில் கடை களானாலும், அங்காடிகளானாலும் அரசாங்க உத்தரவின் மூலமாகத்தான் நாம் இன்றைக்குச் சில நபர்களுக்குக் கொடுக்கி றோம். அதற்கு விதிமுறை கிடையாது. ஆகவே, முனிசிபல் சட்டத் தில் அதற்கான விதிமுறை இன்றைக்கு கிடையாது. சென்ற ஆண்டு வரையில் அந்த விதிமுறை இருந்தது. இன்று Tamil Nadu Municipal Expenditure and Income Rules அதன் படி தான் இன்றைக்கு நேரடியாகவே நாம் அங்காடிகளை, அந்த கடைகளை நடத்தக்கூடியவர்களுக்கு நாம் குத்தகைக்கு கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, அதற்கு ஒரு சட்டம் தேவை. காரணம் நகராட்சியின் வருமானம் வர வேண்டுமென்றால், நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட இடங்களில் அங்காடிகள், கடைகள் அமைத்து அதன் மூலமாக வருமானத் தைப் பெருக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே அவை முன்னாலே வைக்கிறேன்.

அதைப்போல ஊராட்சி மன்ற அங்காடிகள், கடைகள், ஊராட்சி மன்ற அங்காடிகள், கடைகளுக்கு, அந்த குத்தகைதாரர் களுக்கு ஆண்டு தோறும் புதுப்பிப்பதற்கு சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. Renewal of lease அந்த நிலை, அந்த பாதுகாப்பு ஊராட்சி மன்றச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருக் கிறது. முனிசிபல் சட்டத்தில் அது கிடையாது. ஆகவே, நகராட்சி, ஊராட்சி வருமானத்தைப் பெருக்குவதற்கு புதிய சட்ட விதிகளை உருவாக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பி.எச். பாண்டியன்] [1990 ஏப்ரல் 24

அடுத்து, நகராட்சி மன்ற விதிகளை கட்டடங்கள் கட்டுவோர் மீறுவார்களானால் நம்முடைய சென்னை நகரைப் பொறுத்த வரையில் Madras City Municipal Corporation Act 262 பிரிவின்படி கட்டிய கட்டிடம் இடிக்கப்படவில்லை என்றால்அது ஒரு a Continuing Offence நாள்தோறும் அதற்கு அபராதம் It is குறைந்தபட்சம் ரூ. 50 என்று எழுதப்பட்டிருக்கிறது. உண்டு. வருமானத்தை பெருக்குவதற்கு இந்தச் சட்டப் பிரிவை எனவே, படுத்தி—Section 262 of the Madras City Municipal Corporation Act அதைப் பின்பற்ற வேண்டுமென்ற பயன் வருமானத்தைப் பெருக்குவதற்கு நான் இங்கே வேண்டுகோளை கொள்கிறேன். தெரிவித்துக்

ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் நிதிப் பற்றாக் குறையால் இன்றைக்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியத்தில் ஆறு நகரப் பஞ்சாயத்துகள் இருக்கின்றன. கல்லிடைக்குறிச்சி நகரப் பஞ்சாயத்து, கோபாலசமுத்திரம் நகரப் பஞ்சாயத்து, மேலச்சேவல் நகரப் பஞ்சாயத்து, பத்தமடை நகரப் பஞ்சாயத்து, வீரவநல்லூர் நகரப் பஞ்சாயத்து, இப்படி ஆறு நகரப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அதிலே மேலச் சேவல் நகரப் பஞ்சாயத்திலே சிப்பந்திகளுக்கு சம்பளம் போடு வதற்கே பணம் கிடையாது. அப்படி வருமானம் இல்லாத நகரப் பஞ்சாயத்திலே இன்றைக்கு மின் கட்டணம் கட்டுவதற்கு கூட பஞ்சாயத்திலே பணம் கிடையாது. அங்கே தாழ்த்தப் பட்ட மக்களுக்கு காலனிகள் கட்ட வேண்டுமென்றால் நகரப் பஞ்சாயத்திலே கட்டக்கூடாது என்ற விதி இருப்பதாக இங்கே யுள்ள நண்பர்கள் சொன்னார்கள். ஆகவே, நகரப் பஞ்சாயத் திலே அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு என்னென்ன வகையிலே வழி செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில நகரப் பஞ்சாயத்திலே மக்களுக்கு நன்மை செய்ய முடி யாத நிலை இருக்கிறது. மக்களிடமிருந்து வரியை அதிகமாக பெற முடியாத, இயலாத நகரப் பஞ்சாயத்துக்களை கிராமப் பஞ்சாயத்தாக ஆக்குங்கள் என்ற வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் கிராமப் பஞ்சாயத்தாக இருந்தால் நேரடியாகவே அரசாங்கத்தின் மூலமாக ஐ.ஆர்.டி.பி. சலுகை கிடைக்கிறது. இன்னும் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன. நகரப்பஞ்சாயத்தான காரணத்தால் அவர்கள் அதிகமான நன்மை பெற முடியவில்லை. அந்த நன்மையைப் பெறுவதற்கு, நகரப் பஞ்சாயத்தின் வருமானத்தைப் பெருக்குவதற்கு அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும். வருமானத்தைப் பெருக்குவதற்கு அங்காடிகள் அதிக அளவில் குத்தகைக்குச் செல்லுவதற்கு நட வடிக்கை எடுக்கவேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 24] [திரு. பி எச். பாண்டியன்]

அதைப்போல பக்கத்திலே இருக்கிற பாப்பாக்குடி பஞ்சாயத்து யூனியன். அங்கே முக்கூடல் பஞ்சாயத்து ஒன்றுதான நகரப் பஞ்சாயத்து, அங்கேயும் இதே பிரச்சினைதான். அருகிலே இருக்கிற கிராமப் பஞ்சாயத்திலேயும் இதே பிரச்சினைதான். காரணம் நகரமக்களே வரி செலுத்த இயலாத, முடியாத நிலை யில் முன்வராத நிலையில் கிராம மக்கள் எப்படி வரியை ஏற்றுக் கொள்வதற்கு முன் வருவார்கள்? படித்தவர்கள், பக்குவம் உள்ள வர்கள் வரியைச் செலுத்தி நன்மையை பெறவேண்டுமென்ற ஒரு ஆதங்கத்தைப் பெறாத மாநகரத்தில் வாழக்கூடிய மக்கள் இருக் கக்கூடிய இந்த நாட்டில், கிராம மக்கள் வரி செலுத்துவதற்கு, வரியை ஏற்றுக்கொள்வதற்கு முன் வரமாட்டார்கள். ஆகவே, அப்படிப்பட்ட கிராம மக்களின் வாழ்விற்கு மறுமலர்ச்சியை உண்டாக்குவதற்கு அரசாங்கம் புதிய திட்டங்களை வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே தெரிவித்துக் கொள் கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தில் பல்வேறு நன்மைகள் உருவாக்கப் பட்டன. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் கட்டடங்களாகத் தான் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக எழுப்பப்பட்டு அங்கே இருக்கின்றன. காரணம் சாலைகளைப் போட்டால் மணலை அடித்துக்கொண்டு போய் விடுவார்கள்; மழை பெய்தால் அடித்து போய்விடும் என்பதால், அப்படி கட்ட டங்கள் எல்லாம் எழுப்பப்பட்டு இருக்கின்றன.

17-05 மணி

ஆகவே ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஊராட்சி மன்றக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு, ஊராட்சி மன்ற மருந்தகங்களுடைய கட்டிடங்களைக் கட்டு வதற்கு ஒரு திட்டத்தை வகுங்கள். கட்டிடங்களைக் கட்டு வதற்கு எந்தத் திட்டத்தைப் போட்டாலும் யாரும் அதிலே கையை வைக்க முடியாது. அதையும் எடுத்துச் செல்ல முடியாது. காரணம் மண்ணை அள்ளிப் போட்டால்தான் அதில் ஏதாவது அள்ளிக் கொண்டுபோக முடியும். கட்டிடங்களைக் கட்டுவதற்கு பாதுகாப்பு உண்டு. ஆகவே, கிராம மக்களுக்கு இந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்ற இந்த வேண்டுகோளை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கடயம் நகரப் பஞ்சாயத்து, கடயம் யூனியன், அங்கே யும் ஏழு கிராமப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அங்கேயும் இதே நிலைதான். அங்கேயுள்ள மக்களுக்கும் இதே நிலைதான். கிராமத்திற்குள் சென்றால் லைட் கிடையாது. கேட்கிறார் கள். எங்களுக்கு லைட் இல்லை. உங்களுக்கு வாக்களித் தோமே, எங்களுக்கு லைட்டைப் போடச் சொல்லுங்கள், எங்களுக்குஇந்த நன்மையைச் செய்து தாருங்கள் என்று கேட்கிறார்கள்.

இன்னொன்றையும் நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன். எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. இன்னும் கிராமத்திலே லைட் எரியவில்லை என்றால், எம்.எல்.ஏ.-வைத்தான் கேட்கிறார்கள். இன்னும் கிராம மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை என்றால், எம்.எல்.ஏ.-வைத்தான் கேட்கிறார்கள். ஆகவே, ஊராட்சி மன்றத் தலைவருக்கு இந்தப் பணி, ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கு இந்தப் பணி, நகராட்சி மன்றத் தலைவருக்கு இந்தப் பணி என்று அரசாங்கமே வரையறுத்து இது இன்னாருடைய பொறுப்பு என்று ஒரு அறிக்கை வெளியிட்டுவிடுங்கள். காரணம், அந்தப் பொறுப்புக்கு வந்தவர்கள் சும்மா இருந்து கொண்டு, நாங்கள் தேர்தல் நேரத்தில் செல்லும்போதுதான் இதோ பாருங்கள், கால்வாய் சுத்தப்படுத்தப்படாமல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். கள்ளிடைக்குறிச்சிப் பஞ்சாயத்திற்கு நேரிடையாக நான் தேர்தல் நேரத்தில் சென்றபோது, பார்த்து அனுபவித்தவன். ஆகவே, அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன், கிராம மக்களுக்குத் தெளிவுபடுத்துங்கள். ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் நிற்கும்போது, யோசித்து நிற்க வேண்டும். நம்மால் இந்தக் கிராமத்திற்கு தண்ணீர் கொடுக்க முடியுமா? நம்மால் இந்தக் கிராமத்திற்கு லைட் போட முடியுமா என்று. அதேபோன்று ஊராட்சி ஒன்றியத் தலைவரும் இந்தப் பணியை அவர்கள் செய்வதற்கு உத்தரவாதம் கொடுத்துவிட்டு வாக்குகளைப் பெறவேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். அதற்காக தெளிவுபடுத்திவிடுங்கள். அங்கே போகும்போது, பெரிய பெரிய பிரச்சினைகளைக் குறித்து எங்களை அணுகிக் கேட்கின்ற காரணத்தால்தான் இங்கே நான் இந்த வேண்டுகோளை வைக்கிறேன். கிராம மக்களுக்குத் தெரியாது, இது எம்.எல்.ஏ. வேலை, இது ஊராட்சி மன்றத் தலைவர் வேலை என்று அவர்களுக்குத் தெரியாது, ஆகவே, இந்த நிலையை தெளிவுபடுத்துங்கள்.

இன்றைக்குச் சென்னை நகரத்தில் 5, 6 இடங்களில் பெசன்ட் நகர், எழும்பூர், ராஜா அண்ணாமலைபுரம் போன்ற பகுதிகளில் பூங்காக்கள் இருக்கின்றன, விளையாட்டு மைதானங்கள் இருக்கின்றன. விளையாட்டு மைதானங்கள் இன்றைக்கு பயன்படுத்தப்படுகிறதா, சாதாரண சாமானிய ஏழை எளியவர்களால் அந்த விளையாட்டு அரங்கம் பயன்படுத்தப்படுகிறதா என்பதை சென்னை மாநகரத்தில் இருக்கக்கூடிய விளையாட்டு அரங்கங்கள் எந்த அளவிற்கு செயல்படுகிறது, பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பார்த்துக்கொள்ளுங்கள். காரணம், டென்னிஸ் விளையாட்டுக்காக மட்டும் பயன்படுத்தப்படுவதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. நம்முடைய சாதாரண மக்கள் இதைப் பயன்படுத்துவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்து, நகராட்சிகளுடைய வருமானத்தைப் பெருக்க வேண்டுமானால், எங்கேயும் போக வேண்டாம். நகராட்சிச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள். இன்றைக்கு நகராட்சி சொத்து வருமானம் எவ்வளவு, அந்தச் சொத்து வருமானம் முழுமையாகக் கணிக்கப்பட்டு இருக்கிறதா? இந்த வீட்டுக்கு இவ்வளவு ரூபாய் சொத்து வரி என்றால், அந்த வீட்டுக்கு ஏன் குறைவாக வரி இருக்கிறது என்பதை எடை போட்டுப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப் போனால் ஒவ்வொரு வீட்டுக்கும் முன்னாலே இருக்கக்கூடிய வாசலிலேயே இந்த வீட்டின் சொத்து வரி இவ்வளவு என்றுபோட வேண்டும், பெரிய பெரிய கட்டிடங்கள் இருக்கக்கூடிய இடங்களில். அப்போதுதான் தெரியும், பக்கத்து வீட்டில் இருப்பவர்களுக்குத் தெரியும். இவ்வளவு பெரிய வீட்டுக்கு வரிகுறைவா? இவ்வளவு சிறிய வீட்டுக்கு இவ்வளவு அதிக வரியா என்று தெரிய வேண்டாமா? ஆகவே இதைப் போன்ற மறுமலர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுங்கள் என்று சொல்லி, இந்த மானியத்தை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. டி.ஆர் கஜபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டுக்கு உள்ளாட சித் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டு இருக்கிற மானியக் கோரிக்கைகள்மீது ஒரு சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆற்காடு வட்டத்தை தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவித்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சி நிர்வாகம் மாநகராட்சிகள் குறித்த கொள்கைக் குறிப்பிலே பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. நகராட்சி ஊழியர்கள் வீடுகட்டமுன் பணம், விரைவுப்படுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த பிற்படுத்தப்பட்ட பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம், இன்றியமையாத வசதிகள் அளிக்க நகராட்சிகளுக்கு உதவித் தொகை அளித்தல், சாலைச் சீரமைப்புக்காக மானியம் என்று இப்படி பல்வேறு திட்டங்களை அறிவித்து இருப்பது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரியதாகும்.

17-10 மணி

1990–91 ஆம் ஆண்டு துப்புரவு வண்டிகளின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்காக 40 லட்சமும், இடுகாடுகள், சுடுகாடுகளைச் சீர் அமைப்பதற்காக 15 லட்சமும், சொந்தமாக லாரி வைத்திராத 15 நகராட்சிகளுக்கு லாரி வாங்க 40 லட்சமும்

ஒதுக்கியுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய பணிகளுக்காக ஆண்டுக்காண்டு அதிக நிதியை ஒதுக்கி, மாநிலத்திலுள்ள அத்தனை நகராட்சிகளிலும் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ஆற்காடு நகராட்சி துப்புரவு வண்டிகள் ஐந்து வாங்குவதற்கும், சுடுகாடு-இடுகாடு சீரமைத்திட 2 லட்சமும் ஒதுக்கித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். செங்கல்பட்டுக்கும், திருவண்ணாமலைக்கும், ஆற்காட்டுக்கும் லாரி வழங்கிட அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நகரசபைகளில் வரி மேல்முறையீட்டுக் குழுவின் நகர மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மட்டுமே அங்கம் வகிக்க வேண்டுமென்பதை கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். வரிக் குறைப்பு 5 சதவிகிதத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்கிற கட்டுப்பட்டை நீக்கி, நியாயமான நேர்வுகளில் போதிய அளவுக்கு வரியைக் குறைப்பதற்கு வசதியாக விதிகள் மாற்றப்பட்டுள்ளதை நான் மனதார வரவேற்கிறேன்.

என்னுடைய தொகுயில் அமைந்துள்ள ஆற்காடு நகராட்சியின் மையப் பகுதியில் ஒரு கால்வாய் உள்ளது. இதனால் நகரின் சுகாதாரமே பாதிக்கப்பட்டு, மக்கள் பெருத்த இன்னல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கால்வாயை வந்து பார்வையிட்டு சென்றிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள், 10 ஆண்டுக் காலத்திற்கு மேலாக புறக்கணிக்கப்பட்டு வந்த அந்த நிலையை மாற்றி, விரைவிலே கால்வாயை நன்கு சீர் அமைத்திட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு அந்தப் பகுதியில் வாழும் பொதுமக்களின் சுகாதாரமே பாதிக்கப்பட்டிருக்கிறது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று சொல்லுகிறோம். எனவே, சொல்வதைச் செய்யும் நம்முடைய அரசு, வருமுன் காப்போனாக இருந்து, அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை பெருமனதுடன் நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுகொள்கிறேன். தற்போது ஆற்காடு நகரின் ஒரு பகுதியான தோப்புகானா பகுதிக்கு குடிநீர் கிடைக்காத நிலை இன்றைக்கு இருந்து வருகிறது. எனவே அங்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மக்கள் நலத் திட்டங்களை 167.2 கோடி செலவில் நிறைவேற்றி சென்னை, மதுரை, கோவை மாநகராட்சிகளையும், 26 நகராட்சிகளையும் தேர்வு செய்துள்ளார்கள். அதிலே என்னுடைய மிகவும் பிற்படுத்தப்பட்ட ஆற்காடு நகராட்சியையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



[திரு. டி.ஆர் கஜபதி]

நகராட்சி, பேரூராட்சி ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவித்த அரசை அனைவரும் பாராட்டுகின்றனர். ஆனால் அவர்களுக்கு எல்லாம் தற்போது ஊதியம் வழங்குவதற்குக்கூட இயலாத பல பேரூராட்சிகளும், நகராட்சிகளும் இருக்கின்ற காரணத்தால், அரசாங்கமே அவர்களுக்கு ஊதியத்தை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, அரசு ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பள்ளிப் பணியாளர்களின் ஊதியத்தை 1-4-1990 முதல் அரசே வழங்கும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே அறிவித்திருப்பது உள்ளபடியே மகிழ்ச்சியான செய்தியாகும். அதற்காகவும் என்னுடைய நன்றியைத் தெரித்துக் கொள்கிறேன்.

ஆற்காடு தொகுதியில் அமைந்துள்ள திமிரி ஊராட்சி ஒன்றியத்தில் அதிக பஞ்சாயத்துக்கள் இருக்கின்ற காரணத்தால், நிர்வாக வசதிக்காகவும், வளர்ச்சிப் பணிகளைச் செம்மையாக நிறைவேற்றிடவும் அதனை இரண்டாகப் பிரித்து திமிரி ஊராட்சி ஒன்றியம் எனவும், கலவை ஊராட்சி ஒன்றியம் எனவும் அமைத்திட வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் வைக்க விரும்புகிறேன். அதேபோல் தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய ஒன்றியமான உத்திரமேரூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க ஆவன செய்ய வேண்டும். அடுத்து, ஆற்காடு ஊராட்சி ஒன்றியத்தில் 14 கிராமப் பஞ்சாயத்துகள் ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் 67 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தன. தற்போது அது இராணிப்பேட்டை தொகுதியில் இணைக்கப்பட்டுள்ளது. மீண்டும் அந்த கிராமங்களை ஆற்காடு தொகுதியோடு இணைக்க வேண்டுமென்ற அந்த மக்களின் கோரிக்கையை பரிவோடு ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அனைத்து ஊராட்சிகளிலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சுடுகாட்டுக்குச் செல்ல சரியான பாதை இல்லாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. இன்றைக்கு இந்த நிலை தமிழகம் பூராவும் உள்ளது. நாம் எவ்வளவுதான் இந்த அவையிலே தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி பேசினாலும், பல்வேறு சட்டங்களை இயற்றினாலும், கீழ் மட்டத்திலே வேலைகள் நடைபெறுவதில் சுணக்கம் இருக்கிறது. என்பதை வருத்தத்துடன் தெரித்துக் கொள்கிறேன். அவர்கள் எல்லாம் இன்றைக்கு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை தங்கள் எதிர்கால வாழ்வின் ஒளிவிளக்காக கருதிக் கொண்டிருக்கிறார்கள். கலைஞர் அவர்களின் ஆட்சியிலேதான் தங்களுக்கு வேண்டியது கிடைக்கும், தங்கள் வாழ்க்கையும் செம்மையடையும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்புகளை எல்லாம் நிறைவேற்றும் வகையில் அவர்கள் மனதிலே உருவாகும் நிழல்களை நிஜமாக்கும் வகையில் சிறப்பான திட்டங்களைத் தீட்டும் தமிழகத்தின் தானைத் தலைவர் அவர்கள், அந்தப் பலன்கள் ஏழை எளியவர்களைச் சென்றடைகிறதா என்பதை உயர் அதிகாரிகளைக் கொண்டு கண்காணிக்க வேண்டும்.

17-15 மணி

இன்றைக்கு பல இடங்களில் அவர்களுக்கும் சுடுகாடு இல்லை சுடுகாட்டுக்குச் செல்லும் பாதை இல்லை என்ற நிலையை மாற்றி அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் பல்வேறு இனக் கலவரங்களைக் கூட நம்மால் தடுத்து நிறுத்த இயலும். தமிழகத்திலே உள்ள 12,616 ஊராட்சிகளில் 9,612 ஊராட்சிகள் தொலைக்காட்சி அஞ்சல் பெறும் நிலையில் உள்ளன என்றும், அரசு இதுவரை 4,417 தொலைக்காட்சிப் பெட்டிகளை மானியமாக வழங்கியுள்ளது என்றும், 2,000 ஊராட்சிகளில் நிதிநிலை நெருக்கடி காரணமாக தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லை எனவும், அவற்றிலே 1,000 ஊராட்சிகளுக்கு இந்த ஆண்டு அரசே தொலைக் காட்சிப் பெட்டிகளை வழங்க இருக்கிறது என்பதும் பாராட்டுக்குரியதாகும். மீதமுள்ள ஊராட்சிகளுக்கும் விரைவில் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும். அடுத்து, கொடுக்கப்பட்டுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகள் பல ஊராட்சிகளில் சரியாக இயங்கவில்லை என்ற செய்தி பரவலாகக் கிடைக்கிறது. எனவே ஒவ்வொரு ஒன்றியமும் பழுதடைந்த தொலைக்காட்சிப் பெட்டிகளை உடனுக்குடன் பழுது பார்த்துக் கொடுக்கும் அளவுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தாட்கோ மூலம் ஊராட்சிகளில் வீடு கட்டிக் கொடுக்கும் நல்ல திட்டம் நடைமுறையில் உள்ளது. இந்தத் திட்டத்தைப் பேரூராட்சிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் 6,481 ஊராட்சி மன்றங்களுக்குச் சொந்தக் கட்டிடம் இல்லாமல் இருக்கிறது. எனவே இந்த ஆண்டு குறைந்தது 2,000 ஊராட்சிகளுக்கு சொந்தக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில் 3 ஆண்டுகளில் அனைத்து ஊராட்சிகளுக்கும் சொந்தக் கட்டிடங்களை நாம் கட்டிக்கொடுத்துவிட இயலும். இதனையும் நான் வரவேற்கின்றேன்.

திருக்கழுக்குன்றம் பேரூராட்சி குடிநீர் விரிவாக்கத் திட்டத்தை நிறைவேற்றித்தர கேட்டுக் கொள்கிறேன் ஊராட்சிகளுக்கு, ஒதுக்கப்படும் கடன் தொகையை முன்பு ஒதுக்கியது போல் ஒதுக்காமல், ஒவ்வொரு ஊராட்சிக்கும் இவ்வளவு தொகை என்றும். பயன் பெறுவோர் எண்ணிக்கையையும், அறிவித்து விட்டால், அந்தப் பகுதியில் வாழ்கிற மக்களின் விருப்பத்திற்கு ஏற்றாற்போல், கடன்களை வழங்கி, அவர்களின் வாழ்வில் ஏற்றம் காணலாம், இது குறித்து பரிசீலித்து, நல்லதொரு ஆணையை விரைவில் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நகராட்சி,



ஊராட்சி ஒன்றிய தலைவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் தொகை போதுமானதாக இல்லை. அதை ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும். ஏனென்றால் இதனால், அரசுக்கு நஷ்டம் இல்லை. பொது நிதியில் இருந்துதான் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஐ.ஆர்.டி.பி. கடன் வழங்குவது சம்பந்தமான ஊராட்சி அளவில் அமைக்கக்கூடிய குழுவை நீக்கிவிட்டு ஒன்றிய அளவில் ஓரே குழுவை செயல்படுத்தலாம். இன்றைய தினம் ஆற்காடு தொகுதி கடும் வறட்சிக்கு ஆட்பட்டிருக்கிறது. குடிநீர்ப் பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது. எனவே ஒவ்வொரு ஊராட்சியிலும் கைப் பம்பு அமைத்து, குடி தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க ஆவன செய்ய வேண்டுமென்று கோருகிறேன். இதற்குத் தேவையான நிதியை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கி, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் வருகின்ற மே, ஜூன் மாதங்களில் மேலும் நிலைமைகள் மோசமாவதற்குள் வேண்டிய ஏற்பாடுகளை இப்போதே செய்வது நன்மை பயக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் பல பள்ளிகளுக்கு கட்டிடங்களே இல்லை. குறிப்பாக வாழைப்பந்தல், தாமரப்பாக்கம், காவனூர், ஆற்காடு ஆகிய ஊர்களில் உள்ள மேல்நிலைப் பள்ளிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. ஆற்காடு மேல்நிலைப் பள்ளியில் 3 ஆண்டுகளுக்கு முன்பாக இட நெருக்கடி காரணமாக அடிக்கல் நாட்டப்பட்ட அந்த வேலை அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. உடனடியாக அந்தப் பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கி பள்ளிக் கட்டிடங்களை உருவாக்கித்தர வேண்டுமென்று கோருகிறேன்.

அடுத்து, போக்குவரத்து வசதியும் மிகக் குறைவாக இருக்கிறது. இதனால் கிராம மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். உடனடியாக லாபத்தைக் கருதிப் பார்க்காமல் மக்கள் நலனைக் கருதி எல்லாக் கிராமங்களையும் போக்குவரத்தால் இணைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

ஓராசிரியர் பள்ளிகளை திமிரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பள்ளக்குடிசை, நங்கமங்கலம், புதுப்புங்கனூர், மருத்துவாம்பாடி போன்ற இடங்களிலே ஆரம்பிக்க வேண்டுமென்று கோருகிறேன். ஆற்காடு தொகுதியில் வளையாத்தூர் கிராமத்திலே 3 ஆண்டுகளுக்கு முன்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நின்றுபோய் இருக்கின்ற கால்நடை மருத்துவமனையை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை அனுப்பியும் அதன் மேல் எந்தவித நடவடிக்கையும் இல்லை. அதையும் விரைவிலே ஏற்படுத்தித்தர வேண்டும். அடுத்து விளாப்பாக்கத்திலே ஒரு பிரைமரி ஹெல்த் செண்டர் இருக்கிறது. அதற்குப் போதுமான இட வசதி இல்லை. எனவே உடனடியாக அதற்குத் தேவையான கட்டிடங்களை கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை

இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மேலும் விளாப்பாக்கத் திலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க வேண்டுமென்று சொல்லி, கடந்த ஆண்டே தீர்மானம் வரும் என்று கிராம மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அது நிறைவேறவில்லை. அதையும் இந்த ஆண்டாவது நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, இந்த அளவோடு முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

*திரு ஜே. அசேன்: பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மானியத்தின் மீது என்னுடைய கருத்தைச் சொல் கின்ற வாய்ப்பினை தந்தமைக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் ஜனநாயகத் தின் ஆணிவேராக இருந்து கொண்டிருக்கின்ற உள்ளாட்சிகள் அதிகாரம் அற்ற நிலையில் ஆங்கிலேயரிடம் அகப்பட்ட ஆற் காடு நவாபுகளைப் போல தவித்துக் கொண்டிருந்த நிலையை மாற்றி தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த ஆண்டு பிப்ரவரி முதல் வாரத்திலே இராஜாஜி மண்டபத்திலே சொன்னார்.

17-20 மணி

''நகராட்சிகளுக்கு உரிய அதிகாரங்களை நாங்கள் வழங்கு வதற்குத் தயாராக இருக்கிறோம்'' என்று அவர் அறிவித்து விட்ட பிறகு, சொன்னபடியே நகராட்சிகளிடமிருந்து பறிக்கப் பட்ட அதிகாரங்கள் அத்தனையையும் அவர் திரும்பத் தந்திருக் கிறார். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், ஒரு விழாவுக்குக் கூட நகரமன்றத் தலைவர் தலைமை தாங்க முடியாது என்ற நிலை இருந்ததை மாற்றி, விழாவிற்குத் தலைமை தாங்குகின்ற ஒரு சாதாரண அதிகாரம், அதை இப்போது நகரமன்றத் தலை வருக்குத் தந்து இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, வரிக் குறைப்பு கமிட்டிகளுக்கு நகரமன்றத் தலைவர்கள் பார்வையாளர்களாக, ஒரு அங்கத்தினராக உட் காரக் கூடிய ஒரு சூழ்நிலையைக் கடந்த ஆட்சி ஏற்படுத்தி இருந் தது. ஆனால் தமிழகத்து முதலமைச்சர் அவர்கள் அதிகாரி களைக் கொண்ட வரி முறையீட்டுக் குழு இருந்ததை மாற்றி, நகர்மன்றத் தலைவர் தலைமையிலேயே அந்தக் குழு செயல்பட வேண்டுமென்று அந்த அதிகாரத்தையும் தந்திருக்கிறார். இன்னும் ஒன்றை அவர் செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் நகரமன்றத்தினுடைய கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தால், நகரமன்றத் தலைவர் தலைமை ஏற்றிருக்கிறபோது, பக்கத்திலே சட்டமன்ற உறுப் பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்த அவையிலே



உட்கார்ந்து கொண்டு பார்வையிடுவதற்கு ஒரு வாய்ப்பு இருந் தது. அதை இப்போது குறைத்து எதிர் வரிசையிலே சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்த அவையிலே உட்காரலாம் என்ற விதி இருக்கிறது, அதையும் தளர்த்தி, நகரமன்றம் என்று சொன்னால், நகரமன்றத் தலைவர் மட்டும் தலைமை தாங்கி, தன்னிச்சையாகச் செயல்படுவதற்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்பதற்காக, சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்த அவையிலே இருக்கக் கூடாது என்ற ஒரு உத்தரவை அவர் வகுத்துத் தரவேண்டும் என்று இந்த அவையிலே நான் பணி வோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் நகராட்சிகளிலே .......... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்காரம், உட் காருங்கள், திரு. அசேன், உங்களுக்கு அந்தப் பிரச்சினை இருக் காது என்று நினைக்கிறேன்.

திரு ஜே. அசேன்: மன்னிக்க வேண்டும். நான் நகரமன்றத் தலைவராகக் கூட இருக்கிறேன். இருந்தாலும்கூட நகர மன்றத் தலைவருடைய பொறுப்பை நான் ஆற்றுகின்றபோது எப்படிப்பட்ட இடைஞ்சல்கள் ஏற்படும் என்பதை நான் உணர்ந் திருக்கிற காரணத்தாலே சொல்கிறேன். எனவே, உள்ளாட்சிகள் என்பது தன்னிச்சையாகச் செயல்படக்கூடியவை. அதற்குக் குறுக்கீடுகள் இருக்கக்கூடாது. அதை ஆட்டிப் படைப்பதற்கு ஒரு அதிகாரம் படைத்தவர்கள் மேலே உட்கார்ந்து கொண்டி ருந்தால், என்னைப் பொறுத்தவரையில் கவலை இல்லை. ஆனால் மற்றவர்களுக்கு அது தொந்தரவு ஏற்படுத்தும் என் பதற்காக பணிவோடு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர் களைக் கேட்டுக்கொள்கிறேன், சட்டமன்ற உறுப்பினரோ அல்லது பாராளுமன்ற உறுப்பினரோ அவையிலே இருக்கக் கூடாது என்கின்ற உத்தரவை நீங்கள் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நகராட்சிகளுடைய வருமானம் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையிலே எதுவுமே இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், அரசாங்கம் கொஞ்சம் கொஞ்சமாக நகராட்சிகளுடைய அதிகாரத்தைப் பறித்துக் கொண்டு வந்திருக்கிறது. அதற்கு உதாரணமாக எடுத்துச் சொல்ல வேண்டுமானால், மோட்டார் வாகனங்களின் மீது நகராட்சிகள் வரி விதித்து அதன்மூலம் வரி வசூல் செய்து கொண்டிருந்த காலம் இருந்தது. நகராட்சியிலே மோட்டார் வாகனங்கள் மீது வரி வசூல் செய்து கொண்டிருந்தது. அதை மாற்றி, 1940-இல் அந்த அதிகாரத்தை அரசே ஏற்றுக்கொண்டு

ஒரு மானியமாக கொஞ்சம் தொகையை உங்களுக்குத் தருகிறோம் என்று சொல்லி அந்தச் சட்டத்தை எடுத்துக் கொண்டார்கள். அதனுடைய விளைவு என்னவென்றால், 1940-இலே சுமார் 10,000 ரூபாய் தருவதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிகழ்ச்சி இன்றையதினம் 50 ஆண்டுகள் கழிந்து பிறகு கூட, 10,000 ரூபாய் தான் தந்து கொண்டிருக்கிறார்கள். சொல்லப்போனால் மோட்டார் வாகன வரி மூலமாக அரசிற்கு ஏறக்குறைய 2,00 கோடி ரூபாய் வருகிறது. ஆனால் அந்தப் பணம் அரசிற்குப் போகிறதேயொழிய, நகராட்சிகளுக்குப் போகவில்லை. அதையே கூட, 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்களின் வரிச் சட்டத்தில் பிரிவு எண் 17-இல் அரசிற்குக் கிடைக்கும் வருவாயை, அரசும், நகராட்சிகளும் பங்கிட்டுக் கொள்ளவேண்டும் என்கின்ற ஒரு உத்தரவு இருக்கிறது. ஆனால் இதுவரையில் அது கடைப்பிடிக்கப்படவில்லை. எனவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி மோட்டார் வாகனங்கள் மீது வருகின்ற வரியை ஒட்டுமொத்தமாகக் கணக்கிட்டு நகராட்சிகளுக்குக் குறைந்த பட்சம் 25 சதவிகிதமாவது நீங்கள் தரவேண்டும். அப்படி 25 சதவிகிதம் நீங்கள் தந்தால் அந்தப் பணத்தைக் கொண்டு சாலைகளைப் போடுவதற்கு, மோட்டார் வாகனங்கள் போவதற்கு வேண்டிய சாலைகள் போடுவதற்கு வசதியாக இருக்கும். சாலைகள் போட்டால்தான் விபத்துக்கள் இல்லாமல் இருக்கும். இன்றையதினம் சாலைகள் சரியாக இல்லாத காரணத்தினால் விபத்துக்கள் ஏற்பட்டு விடுகின்றன. அப்படி விபத்துக்களிலே சேலைகள் சிக்கிக் கொண்டால், சாலை விபத்திலே சேலைகள் சிக்கிக்கொண்டால் சில பெரிய மனிதர்களுக்கு அதிகப்படியான வேலைகள் வந்து விடுகின்றன. எனவே, சாலை விபத்துக்களைத் தவிர்க்கவேண்டும் என்பதற்காகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அருள்கூர்ந்து, நகராட்சிகளுக்கு..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேட்டி சிக்கினால் ஒன்றும் பிரச்சினை இல்லையா ? (சிரிப்பு)

திரு. ஜே. அசேன் : பல வேட்டிகள் விபத்திலே சிக்கியிருக்கின்றன. இருந்தாலும் யாரும் இவ்வளவு பெரிய பிரச்சினையை எழுப்பவில்லை. சேலை சிக்கியபோதுதான் பிரச்சினையே எழுப்பப்பட்டு இருக்கிறது. எனவே, சாலைகளைச் செப்பனிட வேண்டுமென்றால் அந்தப் பணத்திலே 25 சதவிகிதத்தை நீங்கள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



17-25 மணி

அடுத்து, கடந்த ஆண்டு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது தொழில் வரியை அரசு வசூலிக்கும் என்ற தகவலைத் தந்து இருக்கிறர்கள். என்னைப் பொறுத்த வரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுவது எல்லாம் தொழில் வரியை வசூலிக்கின்ற உரிமையை தயவுசெய்து நகராட்சிகளிடம் விட்டு விடுங்கள். காரணம் இன்றையதினம் அரசியல் சட்டத்தில் 250 ரூபாய் தொழில் வரி என்பதை 2,500 ரூபாய் வரை வசூலிக்கலாம் என்ற நிலை இருக்கிறது. எனவே, நகராட்சிகளே அந்தப் பணத்தை வசூல் செய்தால் அதனுடைய வளர்ச்சிக்கு என்ன என்ன உதவிகளை மக்களுக்காக செய்ய முடியுமோ அதை செய்வதற்கு எங்களுக்கு வசதியாக இருக்கும்.

அடுத்து பேருந்து நிலையங்கள். நகராட்சிகளில் பேருந்து நிலையங்கள் கட்ட வேண்டும் என்று சொன்னால், நகராட்சிகளே கட்ட முடியாது. அதற்காக அரசிடமிருந்து கடன் வாங்குகிறோம் அப்படி கடன் வாங்குகின்றபோது அதற்கு அரசு ஏறக்குறைய 12 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையில் அதற்கு வட்டி வாங்குகிறது. இப்படி வட்டி 12 சதவீதம் முதல் 14 சதவீதம் வரை தரப்படுவதால் பேருந்து நிலையம் கட்டுவதற்கு பதிலாக அங்கே கடைகள் தான் கட்டவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. காரணம் அந்தப் பணத்தைத் திருப்பித் தரவேண்டும், நகராட்சிகள் வாங்குகின்ற கடனை திருப்பி அடைக்கவேண்டும் என்பதற்காக பேருந்து நிலையம் முழுமையாக கட்டுவதை விட்டுவிட்டு பேருந்து நிலையத்தில் கடைகள் கட்டவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அருள்கூர்ந்து இதை கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நான் ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்கள் வாலாஜா நகராட்சி பழம்பெரும் நகராட்சி. இது தமிழ்நாட்டில் முதன் முதலில் அமைக்கப்பட்ட நகராட்சி ஆகும். அதுமட்டும் அல்லாமல் தமிழ்நாடும் ஆந்திராவும் சேர்ந்து 'மெட்ராஸ் பிரசிடென்சி' என்று இருந்த காலத்தில் முதல் முதலில் உருவாக்கப்பட்ட நகராட்சி வாலாஜா நகராட்சி ஆகும். அதற்குப் பிறகு உருவாக்கப்பட்ட நகராட்சி மதுரை, அதற்கு பிறகு ஆதோணி நகராட்சி. அவை எல்லாம் இன்றையதினம் வளர்ந்து விட்டது, ஆனால் இந்த வாலாஜா நகராட்சி மட்டும் வளராத சூழ்நிலையில் உள்ளது. அதற்குக் காரணம் என்ன என்று சொன்னால், அரசியல் குறுக்கீடு என்று நான் சொல்வேன். உதாரணமாக சொல்கிறேன், 1986 ஆம் ஆண்டு நான் நகராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அங்கே இருக்கின்ற பேருந்து நிலையம் சரியாக இல்லை, போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறது, பொது மக்களுக்கு வசதி இல்லை என்பதற்காக அந்த பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும்

என்பதற்காக பேருந்து நிலையத்திற்கு எதிரில் இருக்கின்ற 17 கடைகளை இடிக்க வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைப்போட்டு அரசுக்கு அனுப்பினோம். நிலைமை என்ன என்று சொன்னால், அன்றையதினம் ஆளுங்கட்சியில் உள்ள பிரமுகர்கள் சாதாரணமாக ஒரு கடிதம் எழுதி அந்தக் கடைகளை இடிக்கக்கூடாது என்று சொல்லி அரசுக்கு அனுப்பி,பிறகு அரசினுடைய செயலாளர் ஸ்டே கொடுக்கிறார். நகர மன்ற உறுப்பினர்கள் சேர்ந்து ஒரு தீர்மானம் போட்டு பொதுமக்களுக்கு இது தேவை என்று அரசுக்கு அனுப்புகிறோம், ஆனால் ஆளுங்கட்சியில் இருக்கின்ற பிரமுகர் சொல்கிறார் என்பதற்காக இதுவரையில் அந்தக் கடைகளை இடிக்க முடியாத ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது என்று சொன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்களே காலையில் நான் சட்டப்பேரவைத் தலைவர் அவர்களிடம் ''ஸ்டே'' கொடுத்த நகலை காட்டியிருக்கிறேன். இந்த நகலை உங்களிடம் தருகிறேன். எப்போது வாலாஜா நகராட்சிக்கு நாங்கள் பேருந்து நிலையத்தை விரிவு செய்ய முடியும், கடைகள் எப்போது இடிக்க முடியும். பொதுமக்களுக்கு எப்படி வசதி செய்து கொடுக்க முடியும் என்பதை நீங்களே ஆலோசித்து ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) ........ 1986 ஆம் ஆண்டில் (மணியடிக்கப்பெற்றது).

அதேபோல் நான் நகர மன்றத் தலைவராக இருக்கின்ற காரணத்தால் எனக்கு நகராட்சிகள் நிலைமை தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த தடவை சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் கொஞ்சம் அதிகமாக நேரம் கொடுக்கிறேன்.

**திரு. ஜே. அசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராணிப்பேட்டை நகராட்சியில் பேருந்து நிலையம் கட்டினார்கள். விளைவு என்ன என்று சொன்னால் மக்களுக்கு எங்கு பேருந்து நிலையம் தேவைப்படுகிறதோ அங்கே கட்டப்படவில்லை. தேவை இல்லாத இடத்தில் கட்டி விட்டார்கள். காரணம் கடந்த ஆட்சிக் காலத்தில் மக்களுடைய எண்ணங்களைப் புறக்கணித்து மக்களுக்கு எது தேவையோ அது செய்யப்படாமல் எது தேவை இல்லையோ அது செய்யப்பட்ட காரணத்தால்தான் பேருந்து நிலையம் மக்களுக்கும் பேருந்து நிலையத்திற்கும் தொடர்பு இல்லாத இடத்தில் கட்டப்பட்டதால் இன்றையதினம் அந்த பேருந்து நிலையத்தால் பயன் இல்லாத நிலையில் ராணிப்பேட்டையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, மீண்டும் ஒரு புது பேருந்து நிலையத்தை நகராட்சியினுடைய மையப் பகுதியில் கட்டவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, குடிநீர் வடிகால் வாரியம் என்று ஒன்று இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன் அப்படிப்பட்ட ஒரு குடிநீர் வடிகால் வாரியம் என்ன பணி செய்கின்றது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இதுவரையில் மக்களுக்கு குடிநீர்ப் பிரச்சினை தீர்க்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட அந்த குடிநீர் வடிகால் வாரியம் ஒரு பயனும் இதுவரையில் செய்யவில்லை. திட்ட முதலீடு ஏறக்குறைய நான் குற்றச்சாட்டாக சொல்லவில்லை, பொது மக்களுடைய எண்ணங்களை பிரதிபலிக்கின்ற வகையில் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். ராணிப்பேட்டை நகராட்சியைப் பற்றி நான் கடந்த முறை கூட சொன்னேன். 1 கோடியே 11 லட்சம் ரூபாயில் திட்டம் தீட்டப்பட்டு இதுவரையில் பூர்த்தி செய்யப்படவில்லை. இப்படி கால தாமதம் செய்கின்ற காரணத்தால் என்ன ஏற்பட்டு இருக்கிறது என்று கேட்டால் திட்டத்தினுடைய முதலீடு அதிகமாகியிருக்கிறது. அதனுடைய விளைவாக திட்டத்தை சரியாக செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது, எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், குடிநீர் வடிகால் வாரியத்தை கொஞ்சம் துரிதமாகச் செயற்படுத்துவதற்கு வேண்டிய வாய்ப்பை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**17-30 மணி**

அடுத்து, ஒரு முக்கியமான பிரச்சினை, பஞ்சாயத்து இருக்கிறது; ஒரு தீர்மானம் போடுகிறது. சிப்காட் என்கின்ற ஒரு இடம் ராணிப்பேட்டைக்குப் பக்கத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த சிப்காட்டின் பகுதிக்கு டாக்டர் கலைஞர் நகர் என்கின்ற பெயரைச் சூட்டினார்கள் 1974லே, அதற்கான பின்கோடும் வந்துவிடுகிறது டாக்டர் கலைஞர் நகர் என்று சொல்லி. பஞ்சாயத்து தீர்மானத்தினுடைய அடிப்படையிலே பெயர் வைக்கப்படுகிறது. திடீரென்று ஆட்சி மாறுகிறது. அந்த அரசு வந்தவுடனே பஞ்சாயத்துத் தீர்மானம் தூக்கியெறியப்பட்டு அந்தப் பெயர் பலகையும் நீக்கப்படுகிறது. இது எந்த அளவிற்கு நியாயம் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். மீண்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எடுத்துச்சொல்லி, ஏற்கெனவே இருந்த டாக்டர் கலைஞர் நகர் என்கின்ற பெயரைச் சூட்ட வேண்டுமென்று நான் கேட்டபோது, அதற்கு இதுவரையில் பதில் இல்லை. ஏறக்குறைய 3 மாதங்களாக அலைந்து கொண்டிருக்கிறேன். ஏற்கெனவே இருந்த பெயரை நீக்கி இருக்கிறார்கள். மீண்டும் டாக்டர் கலைஞர் பெயரை வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே ஒன்றை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நகராட்சிகள் எல்லாம் பணப் பற்றாக்குறையால் கஷ்டப்படுகின்றன. மின் விளக்குகளுக்கு பாக்கி இருக்கிறது நகராட்சிகளில் என்பதை

ஏற்றுக்கொள்கிறோம். அசலை நாங்கள் கட்டி விடுவதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால், அரசு என்ன சொல்கிறது என்று சொன்னால், அசல் மட்டும் போதாது, வட்டியும் கட்ட வேண்டும்; வட்டிக்கு வட்டியும் கட்டவேண்டுமென்று சொல்லி, வட்டிக் கடையைப்போல கேட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில் நாங்கள் நகராட்சித் தலைவர்களாக இருந்துகொண்டு எங்களால் என்ன செய்யமுடியும் என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, வட்டிக்கு வட்டி கேட்கின்ற அந்த அரசு ஆணையை தயவுசெய்து நீங்கள் திரும்பப் பெறவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மின் விளக்குகளைப்பற்றி நான் ஏற்கனவே சொன்னேன், மின் விளக்குகளை நகராட்சிகளே போட்டுக் கொள்ளலாம் என்ற அதிகாரத்தைத் தந்திருக்கிறீர்கள். உள்ளபடியே அதனாலே நகராட்சிகளுக்கு எந்தவித லாபமும் இல்லை. டியூப்லைட்டை ஒரு இடத்திலே வாங்க வேண்டும்; சோக் ஒரு இடத்திலே வாங்க வேண்டும். இப்படி பொருட்களை பல இடங்களில் வாங்க வேண்டி இருப்பதன் காரணத்தினாலே ஒழுங்கான பொருள்கள் எங்களுக்கு கிடைப்பதில்லை. நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை எடுத்துச் சொன்னேன். ஏறக்குறைய 500 டியூப்லைட்டு களை ஒரு மாதத்திலே போட்டேன். எல்லாம் குளோஸ். எதுவும் எரியவில்லை. அதன் விளைவாக பொதுமக்கள் எங்களைப்பார்த்து கேலி செய்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்த ஆட்சியைப் பார்த்துக்கூட குறை சொல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே மின் விளக்குகளைப் பழையபடியே மின்சார இலாக்காவே பராமரிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கு வணக்கத்தைக்கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திருமதி பி. லட்சுமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அசேன் அவர்கள் நகராட்சி மன்றத் தலைவராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும், ஆக, இரண்டுமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இரண்டு முறையும் மக்களுடைய வாக்கு களைப்பெற்று நகராட்சிமன்றத் தலைவராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் இன்றையதினம் அவர்கள் அங்கம் வகிக்கின் றார்கள். எனவே அவர்களுக்குள்ள குறையை, அவர் இரண்டு பொறுப்பிலும் அங்கம் வகிப்பதால் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் கூட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாது என்ற அதிலுள்ள பிரச்சினைகளை எடுத்து விளக்கமாக கூறினார்கள். அதனால் சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களைப் போன்றவர்கள், நாங்களும் மக்களுடைய வாக்குகளைப் பெற்று சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான். எங்களது பிரச்சினைகளையும், எங்களுடைய தொகுதி மக்களுடைய குறைகளையும் நாங்கள் அந்த ஊராட்சி மன்றக் கூட்டங்களில்



பேசுகின்ற வாய்ப்பினையும் அந்த ஊராட்சி மன்றத் தலைவர் களுடன் கலந்து பேசுகின்ற வாய்ப்பினையும் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அன்றையதினம் ஏற்படுத்தித் தந்தார்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் நகர மன்றத் தலைவர் களுடனோ அல்லது ஊராட்சி மன்றத் தலைவர்களுடனோ சமமாக, நாடாளுமன்ற உறுப்பினர்களோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்களோ அவர்களுடன் விவாதத்தில் கலந்துகொள்ளக் கூடாது என்றும் பஞ்சாயத்துத் தலைவர்கள் எங்கு அமர்ந்து இருக்கிறார்களோ அந்த இடங்களில்தான் சட்டமன்ற உறுப்பினர் களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமர வேண்டுமென்ற ஒரு ஆணையினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப் பேற்றவுடன் பிறப்பித்திருந்தார்கள். அந்த ஆணையைக்கூட வேண்டாம் என்று, அந்த ஆணையை நீக்க வேண்டுமென்று மாண்புமிகு அண்ணன் அசேன் அவர்கள் கூறினார்கள். அவர் களுக்கு இரண்டு முறை வாக்களித்த மக்களுக்காக எப்படி பணி யாற்ற வேண்டுமென்ற அந்தத் தளராத நம்பிக்கையை வைத்து வாதாடுகின்றார்களோ அதைப்போல சட்டமன்ற உறுப்பினர் களாகிய எங்களுக்கும், வாக்களித்த அந்த மக்களுக்கு செய்ய வேண்டிய பணிகளைச் செய்கின்ற ஆர்வம் உள்ளது என்பதை மட்டும் தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த ஊராட்சி மன்றக் கூட்டங் களிலும், நகரமன்றத் தலைவர்களின் கூட்டங்களிலும், சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இருக்கிற அந்த ஆணையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன். சென்ற வருடம்..............(குறுக்கீடு).

*17-35 மணி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அசேன் ஒன்றைக் கவனிக்கவேண்டும். அவர்கள் ஏற்கெனவே ரொம்ப தயக்கத் தோடு பேசிக்கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் குறுக்கிட்டால் பேசமுடியாது. திருமதி லட்சுமி பேச்சில் யாரும் குறுக்கிடக் கூடாது. உட்காருங்கள்.

**திருமதி பி. லட்சுமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி.

**திரு. சி. கோவிந்தராஜன் :** இப்படிப்பட்ட பாதுகாப்பு எங்களுக்கும் கிடைக்குமா என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன் (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது பெண் குலத்திற்கே உள்ள தனி உரிமை (சிரிப்பு).

திருமதி பி. லட்சுமி: இப்போது வேளாண்மைத்துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த நேரத்தில், சேலம் மாவட்டத்தில் ஊராட்சி எழுத்தர்கள் சங்க மாநாட்டில் கடந்த 10-11-1989 அன்று நடந்தபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்தில், அந்த ஊழியர்களுடைய குறைபாடுகளைக் கேட்டறிந்து அந்தக் குறைகளை நிவர்த்தி செய்யும் வண்ணம் கோரிக்கைகளை கேட்டறிந்தார்கள். அந்தக் கோரிக்கைகள், ஊழியர்களின் உழைப்பிற்கேற்ப ஊதியம் கிடைப்பதில்லை என்ற கோரிக்கையை வைத்தார்கள். அதைப்போல அரசு ஊழியர்கள் இறந்தால் ரூ. 40,000 நஷ்ட ஈடு வழங்குகிறார்கள். அதைப்போல எங்களுக்கும் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். இதுபோன்ற பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துக் கூறினார்கள். அந்தக் கோரிக்கையை எடுத்துக் கூறுகிற சமயத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் நான் இங்கே புறப்பட்டு வரும்போது உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்து இன்றைய தினம் வேளாண்மைத்துறை அமைச்சராக இருக்கிற அவர்கள், இருந்தாலும் உங்களுடைய கோரிக்கைகளை பரிசீலனை செய்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி, உங்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவேன் என்ற வாக்குறுதியையும் அளித்து அந்தக் கூட்டத்தில் 300 ரூபாய் வருமானம் வருகிற ஊழியர்களுக்கு 600 ரூபாய் வரை பெறுவீர்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்தத் துறையில் எஸ்.எஸ்.எல்.சி.யும் அதற்கு மேலும் படித்தவர்கள் 10 சதவீதத்தினரை அரசு ஊழியர்களாக்கும் என்று அரசு சொன்னதையும் சுட்டிக் காட்டினீர்கள். இதற்கு சர்வீஸ் கமிஷன் மூலமாகவோ, அல்லது இந்தத் துறையின் மூலமாகவோ பரீட்சை நடத்தியோ, அல்லது 10 சதவீதம் பேரைத் தேர்ந்தெடுத்தோ பதவி உயர்வு தர உத்தரவு தரப்பட்டிருக்கிறது என்று, இந்த மாதிரி கோரிக்கைகளுக்கு பதிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மாநாட்டில் தெரிவித்து விட்டு வந்தார்கள். ஆனால் அந்தக் கோரிக்கையானது இன்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துவிட்டு வந்ததோடு, அந்தக் கோரிக்கைகள் அப்படியே நிற்கின்றன. இன்றையவரைக்கும் அந்த ஊழியர்களுக்கு எந்த பதவி உயர்வும் அளிக்கப்படவில்லை. அந்த சம்பள உயர்வும் அளிக்கப்படவில்லை. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் தந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது வால்பாறை தொகுதியைச் சேர்ந்த வால்பாறை நகரியத்திற்குட்பட்ட இடத்தில், பல்வேறு பகுதிகளில் இன்றைய தினம் குடிநீர் பற்றாக்குறை இருக்கிறது. மின்சார வசதி, ஆரம்பப்பள்ளிக் கூடங்கள், சாலைப் போக்குவரத்துக்கள் சரிவர இல்லாத சூழ்நிலை இன்றைய தினம் இருந்து வருகின்றன. குறிப்பாக எனது வால்பாறை தொகுதியைப் பொறுத்த வரையில்,



குரங்குமுடி, சோலையார் நகர் அருகில் உள்ள பெரியார் நகர், பாரதிதாசன் நகர் போன்ற இடங்களில் எல்லாம் ஒவ்வொரு இடத்திலும் 300, 400 குடும்பங்களுக்கு மேற்பட்டவர்கள் அங்கே குடியிருந்து வருகின்றார்கள். இதுநாள் வரையிலும் அங்கே குடியிருப்பவர்களுக்கு குடிதண்ணீர் வசதியோ, மின்வசதியோ, சாலை வசதியோ இப்படி எந்த வசதியும் இல்லாத சூழ்நிலையில் அங்கே இருப்பவர்கள் வாழ்ந்துவருகிறார்கள். மேலும் வால்பாறை நகரத்திற்குட்பட்ட பகுதியில் சிறுவர் பூங்கா என்று ஒரு இடம் அமைந்திருக்கிறது. அது பெயருக்குத்தான் சிறுவர் பூங்கா என்று உள்ளதே தவிர அந்த இடத்தில் சிறுவர் பூங்காவே கிடையாது. அங்கே சுமார் 30, 40 ஆண்டுகளாகத் தாழ்த்தப்பட்ட, கூலிவேலை செய்து வாழ்கிற சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், மற்ற இனத்தைச் சேர்ந்தவர்களும், சிலர் வீடுகள் கட்டியும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் குடிசைகள் அமைத்தும் அங்கே வாழ்ந்து வருகிறார்கள். அந்த இடத்தைத் தவிர, வால்பாறை நகரத்திற்கான சாபமோ என்னவோ தெரியவில்லை, அவர்களுக்கு வேறு போக்கிடங்களே இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் 30, 40 வருடங்களாக குடியிருந்து வருகிறவர்களுக்குப் பட்டா அளித்து அவர்களுக்கு அந்த குடித்தண்ணீர் வசதி, சாலை வசதி ஆகியவற்றைச் செய்து தர நகராட்சிக்கு ஆணை பிறப்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

17-40 மணி

அடுத்து சாலை ஓரங்களை சில வசதி படைத்தவர்கள் ஆக்கிரமித்துக்கொண்டு அங்கே கடைகளை வைத்து வியாபாரம் செய்து வருகிறார்கள். அவ்வாறு கடைகளை வைத்து வியாபாரம் செய்கிற நபர்களை அப்புறப்படுத்தி வால்பாறை நகரியத்தின் மூலமாக அங்கே கடைகளைக் கட்டி அந்தக் கடைகளின் மூலம் நகரியத்தின் வருமானத்தைப் பெருக்கி அந்த வருமானத்தின் மூலமாக அந்த தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்குக் குடிநீர் வசதி, சாலை வசதி, மின்வசதி போன்ற வசதிகளைச் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் பழுதடைந்துள்ள டிராக்டர்கள் மற்றும் லாரிகள், வாகனங்களை வாங்குவதற்கு 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அப்படி லாரிகள், டிராக்டர்கள் வாங்க வேண்டும் என்றால்—சில ஊராட்சி ஒன்றியங்களில் குப்பைகளை எடுத்துக் கொண்டு செல்வதற்கு வசதி இல்லாத சூழ்நிலையில், உதாரணமாக வால்பாறை நகரியத்தில் குப்பைகளை ஒரே இடத்தில் அதுவும் மக்கள் வசிக்கின்ற இடத்திலே கொட்டுவதால் துர்நாற்றம் ஏற்பட்டு அதனால் சில நோய்கள் பரவுகிற சூழ்நிலை இன்றையதினம் ஏற்பட்டு வருகிறது. அதை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும். ஆனால் நகரியத்தில் பணம் இருந்தாலும் கூட அந்தக் குப்பைகளை அகற்றுவதற்காக அங்கே

டிராக்டர் வாங்குவது கிடையாது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வால்பாறை நகரியத்திற்கு குப்பைகளை அகற்ற உடனடியாக டிராக்டர்கள் வாங்க வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்தக் குப்பைகளைக் கொட்டுவதற்கு வால்பாறை நகரியத்திலே இடம் கிடையாது. ஆனால் அதே நேரத்தில் ஆனைமலை கிளப் என்ற இடத்தில் ஒரு நில உரிமையாளர் 40 ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறார். அதிலே இரண்டு சென்ட் இடத்தைத் தந்தால் அந்தக் குப்பைகளை அங்கே கொட்டுவதற்கு ஏதுவாக இருக்கும். நகராட்சி மூலம் பல முறை கேட்டும் அவர்கள் தர மறுக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை உடனடியாகச் செய்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்தத் தொகுதிகளில் சுற்றுப் பயணம் செய்வதற்காக மாதத்திற்கு இரண்டு தடவை அங்குள்ள வாகனங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஆணை உள்ளது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் அந்த ஊராட்சி அலுவலர்களிடத்திலே அணுகி, தொகுதி சுற்றுப்பயணத்திற்காக எங்களுக்கு இரண்டு நாட்களுக்கு வாகனங்கள் ஒதுக்கித் தாருங்கள் என்று கேட்கிறபோது, ஒன்று, அது பழுதடைந்துள்ளது அல்லது ஊராட்சி ஒன்றியத் தலைவர் அதை வெளியே எடுத்துச் சென்றுள்ளார். அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அழைத்தார், அதனால் அங்கே சென்றுள்ளது என்றும் அல்லது கண் சிகிச்சை முகாம் அல்லது குடும்பக் கட்டுப்பாடு முகாம் என்று இப்படி பல்வேறு இடங்களுக்குச் சென்றுள்ளது என்று ஒவ்வொரு முறையும் சாக்குகள் சொல்லி எங்களுக்கு அந்த மாதத்தில் வாகனங்கள் தருவதற்கு முடியவில்லை. வசதியுள்ள உறுப்பினர்கள் சொந்த வாகனங்களைப் பயன்படுத்தி தொகுதிகளில் குறைகளைக் கேட்டறிய செல்வார்கள். ஆனால் என்னைப் போன்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த வசதியற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த வாகனங்களைப் பயன்படுத்தித்தான் தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிய ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. அதனால் அந்த ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அந்த வாகனங்களைத் தர இயலாத காலத்தில் மாற்று வாகனங்களுக்கு நாங்கள் ஏற்பாடு செய்தால் அந்த வாகனத்திற்கான வாடகையாவது, எங்களிடம் வவுச்சர் பெற்றுக்கொண்டு எங்களுக்குப் பெற்றுத் தர வேண்டும் அல்லது சம்பளப் பணத்துடன் அதற்குரிய தொகையையும் நீங்கள் சேர்த்து வழங்க வேண்டும் என்ற எங்களுடைய நியாயமான கோரிக்கையை மனிதாபிமானத்தோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).



17-45 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாடகையோடு நிற்கட்டும். (சிரிப்பு)

திருமதி பி. லட்சுமி : இறுதியாக, வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடைசியாக அவர்கள் சொன்ன கோரிக்கையை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். திரு. ரா. சொக்கர், அடுத்து பேசுவார்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றக் கூட்டங்களிலே, மக்களிடம் வாக்கு பெற்றதால், சட்டமன்ற உறுப்பினர்களும் அதிலே கலந்து கொண்டு, அந்த விவாதத்தில் ஈடுபட வேண்டும் என்ற வாதம் ஏற்றுக் கொள்ளப்படுமேயானால், இங்கே சட்டமன்றத்திலும், பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு விவாதத்தில் ஈடுபடவேண்டும் என்ற வாதமும் நியாயப்படுத்தப்பட்டு விடும். எனவே, அந்த அடிப்படையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்தைப் பார்க்க வருகின்றபோது, எப்படி அவர்களுக்கு விசேஷமாக அமைக்கப்பட்ட காலரியிலிருந்து பார்க்கிறார்களோ, அதே அடிப்படையில்தான், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளாட்சி மன்றக் கூட்டங்களிலே அவர்களுடைய தொடர்பை வைத்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டு........

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் ஆறு மாதம்தான் இருக்கிறது. (சிரிப்பு.)

திரு. ஆர். சிங்காரம் : அடுத்து தேர்தல் வரும்; அநேகமாக நாங்கள்தான் வருவோம்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், உள்ளாட்சி நகரங்களில் ......

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் பேசுகின்றபோது, அடுத்து தேர்தல் வருமென்று சொன்னார். அதற்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள், அடுத்து நாங்கள்தான் வருவோம் என்று சொல்கிறார். அப்படியானால், திரு. சிங்காரம் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1990 ஏப்ரல் 24

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது நான் சொன்னது நகர மன்றத் தலைவராக வருவேன்; அவர் சொன்னது, சட்டமன்ற உறுப்பினராக வருவார். ஆகவே, இருவருமே தேர்ந்தெடுக்கப் படுவோம்.

நகராட்சிப் பணிகளிலே குடிநீர் இல்லை; சுகாதாரம் காணப்படவில்லை; சாலை வசதிகள் இல்லை; விளக்குகள் இல்லை என்று பல்வேறு குறைகள் கூறப்பட்டாலும் கூட, இவை அத்தனைக்கும் காரணம், போதுமான நிதியாதாரம் இல்லை என்பதுதான். இந்த நிதியாதாரம் இந்த நிலையை அடைந்ததற்குக் காரணம், இந்த அரசோ, அல்லது இதற்கு முந்தைய அரசோ, அல்லது அதற்கு முந்தைய காங்கிரஸ் அரசோ என்று நான் சொல்ல மாட்டேன். 1940 ஆம் ஆண்டிலிருந்து, வெள்ளையன் ஆட்சி காலத்திலே இருந்து, இந்தக் கொடுமை ஆரம்பிக்கப்பட்டது. 1940இல் மோட்டார் வாகன வரியிலிருந்து வரக்கூடிய அத்தனை வருமானமும் அரசுக்கு மாற்றப்பட்டு விட்டது. அதன் பிறகு 1971–77-ல் விற்பனை வரி சட்டத்தின் மூலமாக, சர்சார்ஜிலிருந்து வரக்கூடிய வருமானம் நகராட்சிக்குத்தான் செல்ல வேண்டுமென்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு இருந்தாலும் கூட, அது ஏனோ, இன்று வரையில் நடைமுறைக்கு வரவில்லை. ஆனால், இப்போது இது 20 சதவிகிதமாகக் கிடைப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அரசியல் நிர்ணயச் சட்டத்தை அமைத்தவர்கள் கூட, 'கான்ஸ்டிட்யூஷனலி' உள்ளாட்சி அமைப்புகளுக்கு போதிய பாதுகாப்பு, ஏனோ கொடுப்பதற்குத் தவறி விட்டார்கள். 'என்டெர்டெய்ன்மென்ட் டாக்ஸ்' லிருந்து வந்து கொண்டிருந்த வருமானம் 90 சதவீதத்திலிருந்து 70 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுவிட்டது. 'பிராபர்ட்டி டாக்ஸை' 'குன்குனியல் ரிவிஷன்' மூலமாக 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ரிவைஸ் செய்து மறு சீராய்வு செய்வது, 17 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டு விட்டது. இறுதியாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு, இப்போது பொறுப்பெற்றவுடன் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி, அரசு ஊழியர்களுக்குச் சம்பளத்தை அதிகமாக்கி அறிவித்தது, அது ஒரு காரணமாக இருந்தது. ஆகவே இப்படிப் பல கால கட்டங்களில் நகராட்சிகள் எல்லாம் புறக்கணிக்கப்பட்ட நிலையில், அன்றாடம் அலுமினியத் தட்டைக் கையில் எடுத்து, சத்துணவுக்குக் கையேந்தும் குழந்தைகளாக ஆக்கப்பட்ட நிலையில் இன்று நகராட்சி அமைப்புகள் எல்லாம் ஆகிவிட்டன என்பதை வேதனையோடு ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும். 'பால் நினைந்தூட்டும் தாயாக' இருந்து, அரசு நகராட்சிகளுக்கு உணவு கொடுப்பது போக, தனக்கு பசி எடுக்கின்ற நேரத்திலே நகராட்சியிலே வந்து குழந்தையின் தட்டிலே வைத்த சத்துணவை எடுத்து, தன்னுடைய பசியை ஆற்றிக் கொள்ளக் கூடிய ஒரு நிலையிலே அந்த அளவுக்கு ஒரு சீர்கேடான நிலையிலேதான், நகராட்சிகளினுடைய நிதி நிலை வந்து விட்டது.



1990 எப்ரல் 24] [திரு. ரா. சொக்கர்]

17–50 மணி

இந்தக் கருத்தை எல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் எடுத்துச் சொன்னபொழுது, அந்தக் கருத்தினுடைய உண்மையைப் புரிந்து கொண்டு கடந்த ப்ரீ பட்ஜெட் செஷனில் 1–4–1990-லிருந்து நகராட்சியில் பணிபுரிகிற ஆசிரியர்களுக்கு எல்லாம் நேரடி சம்பளம் வழங்கப்படும் என்று அவர்கள் அறிவித்து அதனை இப்பொழுது நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். அதன்மூலமாக ஓரளவுக்கு நமது சுமை குறைந்திருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறோம். ஆனால் அந்த அறிவிப்பு செய்யும்போது அவர்கள் சொன்னார்கள், 1986-ஆம் ஆண்டில் நகராட்சியில் பணி புரியக்கூடிய ஆசிரியர்களை எல்லாம் முந்தைய அரசு, அரசு ஊழியர்களாக அறிவித்திருந்தாலும் அதனை அவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை. அவர்கள் செய்யாமல் விடுத்ததை இந்த அரசு செய்கின்றது. நேரடியாக இனிமேல் சம்பளம் வழங்கும் என்று சொன்னார்கள். ஆனால், இந்த அரசு வந்த பிறகுதான் இவ்வாறு நகராட்சி ஊழியர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக அறிவித்து இருக்கிறார்கள். அந்தக் கூற்று உண்மையாக இருக்குமானால் இதர நகராட்சி ஊழியர்களுக்கும் அரசே நேரடியாகக் கருவூலத்தின் மூலமாக, சம்பளத்தை உடனடியாக வழங்குவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதனால், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 45 கோடி செலவு கூடுதலாகும். ஆனால், இன்று இருக்கக்கூடிய நிதிச் சுமையில் ரூ. 45 கோடியை அரசிடமிருந்து உடனடியாக எடுப்பது என்பது கண்டிப்பாக இயலாத காரியம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆக, அதற்கு வழி என்ன என்பதைப் பார்க்கும்போது, நகராட்சிகளுக்குச் சொத்து வரியிலிருந்து வரக்கூடிய வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 40 கோடி வருகிறது. நகராட்சியிலிருந்து சம்பளம் போடக்கூடிய சுமையை அரசே எடுத்துக் கொள்ளக்கூடிய காரணத்தால், சொத்து வரியின் வருமானத்தில் 75 சதவீதத்தை நகராட்சி அமைப்புகள் அரசுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்ற ஒரு உத்தரவைப் போட்டோமானால் ரூ. 40 கோடியிலிருந்து ரூ. 30 கோடி அரசுக்கு வந்துவிடும். ஆகவே, கூடுதல் இழப்பு ரூ. 15 கோடிதான் ஆகும். ரூ. 4,000 கோடிக்கு மேலே ஆகக்கூடிய இந்த பட்ஜெட்டில், ரூ. 15 கோடி செலவழிப்பதன் மூலமாக, அத்தனை நகராட்சி அமைப்புகளும் நிதி சிக்கலிலிருந்து விடுபடுமானால் இதனை கண்டிப்பாக அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களாக, நகராட்சி ஊழியர்களை அறிவித்த பொழுது சில குறைபாடுகள் இருக்கின்றன. அதைச் சுட்டிக் காட்ட நான் கடமைப்பட்டு இருக்கிறேன். விடுப்பு காலச் சலுகை, வீட்டு வசதி வாரியத்தில் உள்ள வீடுகள் பெறுவது போன்ற சலுகைகள் இன்னும் வழங்கப்படாமல் இருக்கின்றன. இது மற்ற அரசு ஊழியர்களுக்கு உண்டு. ஆனால், அவர்களுக்கு இல்லை. நகராட்சிகளிலிருந்து ஓய்வுபெறும்

பணியாளர்களுக்கு மருத்துவப் படி வழங்கப்படாமல் இருக்கிறது. அதுவும் போக இப்பொழுது நகராட்சியிலிருந்து ஓய்வு பெறுகின்றவர்களுக்கு ஓய்வூதியம் பெறுவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. இதுநாள் வரையிலும் அவர்கள் நகராட்சி ஊழியர்களாக இருந்ததால் எக்சாமினர் ஆப் லோக்கல் பண்டு ஆடிட்தான் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி வந்தார்கள். அரசு ஊழியர்களாக இருந்தால் அதனை அக்கவுண்ட்டன்ட் ஜெனரல்தான் கொடுக்கவேண்டும். அரசு ஊழியர்களாக அறிவித்த பொழுது இந்த அறிவிப்பையும் சேர்த்து அறிவிக்காத காரணத்தால், கடந்த 7, 8 மாதங்களாக நகராட்சிப் பணியிலிருந்து ஓய்வு பெறக்கூடிய ஊழியர்கள் தங்களுடைய ஓய்வூதியங்களைப் பெற முடியாத ஒரு நிலையிலே இருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, நான்காவது சம்பளக் குழுவுக்குப் பிறகு, ஒரு நபர் குழுவினுடைய பரிந்துரையின் பேரில், ஐ.டி.ஐ.யில் தேர்வு பெற்ற பொறியாளர் பணியாளர்களுக்குச் சிறப்பு ஊதியம் வழங்கப்பட்டது. அதுவும் தவறுதலாக விடப்பட்டது. இவை எல்லாம் கிளெரிக்கல் எரர். அல்லது எரர்பை ஓவர்சைட் என்று நினைக்கிறேன். அவற்றையெல்லாம் திருத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எல்லா ஊதியம் பெறுபவர்களுக்கும் இரண்டு அடுக்கு, கூடுதல் நிலையில் தேர்வு நிலை வழங்குவதைப் போல, அடிப்படை சம்பளம் ரூ. 825 வாங்குகிறவர்களுக்கு மட்டும் ஒரே ஒரு கட்ட நிலைதான் வழங்கப்பட்டிருக்கிறது. இதுவும் ஏதோ தவறாகத்தான் நடந்திருக்க வேண்டுமென்று கருதுகிறேன். இதுவும் திருத்தப்பட வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நகராட்சிக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது ஓரளவுக்கு உண்மை என்றாலும்கூட, அரசினுடைய உணர்வுகள் அதிகாரிகளால் இன்னும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை. இன்னும் தெளிவாக இரண்டு உதாரணங்கள் மூலமாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1935-ஆம் ஆண்டு விருதுநகர் நகராட்சிக்குத் தண்ணீர் குழாய் அமைக்கப்பட்டது. 1972 ஆம், ஆண்டு வேறு திட்டம் அமுல்படுத்தப்பட்ட காரணத்தால், அந்தக் குழாய்கள் தேவையில்லையென்று முடிவு செய்யப்பட்டது. அந்தக் குழாய்கள் எல்லாம் மண்ணுக்குள் இருந்து, இத்துப்போய், யாருக்கும் பலனற்ற நிலையில் போய்விட்டன. பல குழாய்கள் களவு போகின்றன. ஆகவே, அவற்றை பொது ஏலத்தின் மூலமாக விற்பனை செய்ய அதிகாரம் வழங்கவேண்டுமென்று நகரமன்றத்தினுடைய தீர்மானம் 29-6-1988-ஆம் தேதி போடப்பட்டது. அதற்குப் பிறகு 18-8-1988,



11-10-1988, 4-1-1989 என்று பல தினங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நாங்கள் பலமுறை கடிதம் எழுதியும், சுமார் 1½ ஆண்டுகள் கழித்து, அதற்கான கோப்புகள் எங்களிடம் இல்லையென்ற பதில் எங்களுக்கு வந்திருக்கிறது. ஆனால் நகரமன்றத்திற்கு அதிகமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் நகராட்சிக்குச் சொந்தமான குழாய்களை நகரமன்றத்தின் தீர்மானத்தின் மூலமாக பொது ஏலத்தின் மூலமாக விடுவதற்குக்கூட நகரமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றால் அதிகாரம் கூடுதலாக வழங்கப்பட்டிருக்கிறது என்பது வெறும் ஏட்டளவில்தான் இருக்கிறது என்பதை நான் வேதனையோடு இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**17-55 மணி**

அடுத்தபடியாக நகராட்சியில் பலவிதமான அபிவிருத்திப் பணிகளைச் செய்வதற்கு சிமெண்ட் வேண்டுமென்று 71,000. ரூபாயை 'டான்சமிற்கு' 7-3-1990-ல் செலுத்திவிட்டோம். அதன் பிறகு 20-3-1990, 4-4-1990, 11-4-1990 ஆகிய தேதிகளில் நேரடியாக ஆட்கள் அனுப்பப்பட்டார்கள். அதற்குப் பிறகு தந்தி மூலமாக 14-4-1990 அன்று சென்னைக்கும் ஆலங்குளம் ஃபாக்டரிக்கும் செய்தி அனுப்பப்பட்டது. அதன் பிறகு டெலிபோன் மூலமாக 26-3-1990, 28-3-1990, 2-4-1990, 6-4-1990, 18-4-1990 ஆகிய தேதிகளில் நினைவூட்டப்பட்டிருந்தாலும்கூட, ஆலங்குளம் ஃபாக்டரியிலிருந்து நகராட்சிக்குத் தேவையான சிமெண்ட் கிடைக்கவில்லை. ஆனால் தனியார் ஃபாக்டரியில் சிமெண்ட் விற்பனை செய்வதற்கு அவர்கள் எவ்வளவு சிரமப்படுகிறார்கள்? ஆகவே, நகராட்சிகள் கண்டிப்பாக ஏன் ஒரே ஃபாக்டரியிலிருந்துதான் சிமெண்ட் வாங்கவேண்டுமென்று கட்டுப்படுத்த வேண்டும். ஆக, ஒரு பக்கம் கட்டுப்பாட்டை வைத்துவிட்டு, மறுபக்கம் அதிக அதிகாரம் கொடுத்துவிட்டோம் என்று சொல்வது வெறும் கண் துடைப்புதான் என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, நகராட்சிகளிலே பலவிதமான சிக்கன நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்கலாம் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் 'ஹெல்த் ஆபீசர்' என்ற போஸ்டே தேவையில்லை. இது எப்படி நடைமுறையில் இருக்கிறது என்று பார்த்தால் கடந்த 4 ஆண்டுக்காலத்தில், நான் நகரமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த பின்னால், 3 ஆண்டுகள் 2 மாதங்கள் 15 நாட்கள் ஹெல்த் ஆபீசர் அங்கே இல்லை. ஹெல்த் ஆபீசர் என்பவர் ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டராக இருக்கிறார். குப்பை அள்ளுவதற்கும் சாக்கடை சுத்தமாக வைக்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்கும் ஒரு எம்.பி.பி.எஸ்,

டாக்டரை நாம் பயன்படுத்துகிறோம் என்றால் We are utilising their capacity to a minimum level அப்படி இல்லை என்றால் under utilisation of human resources என்றுதான் நான் சொல்வேன். சில சமயங்களில் மலேரியா அல்லது காலரா போன்ற Epidemic diseases break out ஆனால், அங்கே இருக்கிற டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீசர் மூலமாகவோ அல்லது டிஸ்டிரிக்ட் மெடிக்கல் ஆபீசர் மூலமாகவோ நடவடிக்கை எடுத்து, நகராட்சியில் இருக்கிற ஹெல்த் இன்ஸ்பெக்டர் மூலம் அந்தப் பணியைச் செவ்வனே செய்ய முடியும். ஆகவே, ஹெல்த் ஆபீசர் என்ற போஸ்டை நகராட்சியிலிருந்து எடுத்துவிடலாம்.

அப்படி நகராட்சியிலிருந்து இந்த போஸ்டை எடுத்துவிடுவதன் மூலம் 98 எம்.பி.பி.எஸ். டாக்டர்களைத் தேவையான வேறு இடங்களில் பயன்படுத்திக்கொள்ளலாம். அதனால் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 50 இலட்சம் ரூபாய் அரசாங்கத்திற்கு மீதமாகும்.

அதுமட்டுமல்ல. அதிகமான அதிகாரிகளை நகராட்சியிலே போடுவதனால் அவர் பெரிதா இவர் பெரிதா என்று பதவி சண்டை வந்து, வேலை சுணக்கம் ஏற்படுகிறதே தவிர ஒரு இணக்கமான சூழ்நிலை அவர்களிடையே அமையவில்லை.

அடுத்து ஸ்காவஞ்சர்ஸ், ஸ்வீப்பர்ஸ் அதிகமாக வேண்டுமென்று பல நகராட்சிகளிலிருந்து தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ஆனால் எங்கள் விருதுநகர் நகராட்சியில் அதிகமாக வேண்டாம் என்று தீர்மானம் போட்டிருக்கிறோம். இப்போது இருக்கக்கூடிய 245 ஸ்காவஞ்சர்களை வைத்து திறமையாகச் செயல்பட முடியும் என்று சொல்லியிருக்கிறோம். அது எப்படி என்றால் தொழிலாளர்களுக்குத் தேவையான உபகரணங்களை வாங்கிக் கொடுக்க வேண்டும். வீல் பரோஸ் வாங்கிக் கொடுக்க வேண்டும், ட்ரை சைக்கிள் வாங்கிக் கொடுக்க வேண்டும், டில்லர்ஸ் வாங்கிக் கொடுக்க வேண்டும். Time Motion study, Work study should be done, Modern method should be introduced. இவை எல்லாம் வாங்கிக் கொடுத்தால் ஒரு ஆள் செய்யக்கூடிய 'ஒர்க் டர்ன் அவுட்டை' நாம் அதிகமாக்க முடியும்.

அதைப்போல, டவுன் பிளானிங் செக்ஷனில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். இங்கே டைரக்டர் ஆஃப் டவுன் அண்ட் கண்ட்ரி பிளானிங் இருக்கிறார். அவரிடம் எந்த எந்த விண்ணப்பம் வந்தாலும் சரி, நகராட்சியில் சாலை 40 அடி தேவையில்லை. 30 அடி சாலை தேவையில்லை, 30 அடி சாலையை 15 அடியாக்ச் சுருக்கலாம் என்று நகராட்சியின் ஒப்புதல் இல்லாமலேயே



ஒப்புதல் அளித்துவிடுவதால் நகராட்சியின் வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படுகின்றன. பில்டிங் பிளான் பர்மிஷன் இல்லாத இடங்களில் கட்டடங்கள் கட்ட தடை செய்ய வேண்டும். அதைத் தடுப்பதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நகராட்சியினுடைய அங்கீகாரம் இல்லாமல் கட்டக்கூடிய கட்டடங்களுக்கு மின் இணைப்பு வழங்கக்கூடாது என்ற ஒரு சட்டத்தைப் போட்டு, அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சிகளிலும் ஊராட்சிகளிலும் கம்ப்யூட்டர்களை அறிமுகப்படுத்தி, ஜனத்தொகையை அதில் பதிவு செய்ய வேண்டும். அதன் மூலமாக தவறான ரேஷன் கார்டுகள் கொடுக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, செலவை மிச்சப்படுத்தலாம். சுமார் 20 இலட்சத்திற்கு மேல் தவறான ரேஷன் கார்டுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் தொகையை கம்ப்யூட்டர் மூலம் பதிவு செய்து நடவடிக்கை எடுத்தால், அதற்காகும் செலவுகள் அனைத்தையும் ஒரே ஆண்டில் எடுத்துவிட முடியும். கீழே இருந்துதான் 'டேட்டா பேஸ்' வர வேண்டும். அதோடு ஊராட்சிகளிலும் நகராட்சிகளிலும் கம்ப்யூட்டர்ஸ் நிறுவப்பட்டு, அதை அடிப்படையாக வைத்து முழுமையாக நிர்வாகச் சீரமைப்புக்கு ஒரு வழி காணவேண்டுமென்று கூறி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

18–00 மணி

திரு கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும் குறித்த மானியக் கோரிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழ்நாட்டிலுள்ள ஜனத்தொகையில், ஐந்தில் ஒரு பங்கு, பேரூராட்சி நிர்வாக அமைப்புகளில் வசிக்கிறார்கள். சற்றேறக்குறைய 1 கோடி மக்களுக்கு மேலே பேரூராட்சி எல்லைக்குள்ளே வாழ்கிறார்கள். அந்த மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்ய வேண்டுமானால், போதிய நிதி ஆதாரங்கள் இந்தப் பேரூராட்சிகளுக்கு இல்லை. கடந்த 30 ஆண்டுக்காலமாக, 1958 ஆம் ஆண்டு முதல், காட்பாடியில் இன்றுவரை தலைவராக இருக்கிறேன். இந்த 30 ஆண்டுக் காலத்திலே, பேரூராட்சிக்கு அரசிலிருந்து எந்தவித மானியமும் வழங்கப்படவில்லை. தூசு படியாத சாலைக்கு என்று சொல்லி 5 சதவிகித மானியமும், ஆண்டுதோறும் எப்போதாவது சில பொருள்களும் கிடைத்ததே தவிர வேறு எந்தவிதமான உதவியும் கிடையாது. நகராட்சிகளுக்கு, ஊராட்சிகளுக்கு வழங்குகிற நிதி ஆதாரங்கள் பேரூராட்சிகளுக்கு வழங்கப்படுவதில்லை. மாற்றாந்தாய் மனப்பான்மையில் இன்றைக்குப் பேரூராட்சிகள் நடத்தப்படுகின்றன என்பதை நான் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த மக்களுக்கு நன்மை

செய்ய, வருவாயைப் பெருக்க, ஊராட்சிகளுக்கு வழங்குவது போல ஈட்டு மானியம் வழங்கப்படவேண்டும். அதே போன்று கேளிக்கை வரியிலே ஏறக்குறைய 90 சதவிகிதம் பங்கு என்று இருந்தது. பல ஆண்டுகளுக்கு முன்பு அதை 30 சதவிகிதமாக ஆக்கிவிட்டார்கள். அதை 60 சதவிகிதமாக உயர்த்தி கொடுக்க வேண்டும்.

பேரூராட்சிகளுக்கு உள்ளே, அந்தப் பகுதிகளிலே இருக்கிற பாறைகள், கனிமங்கள் மூலம் கிடைக்கிற வருவாய் பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும். அதுபோல பேரூராட்சிகளுக்கு எல்லைக்கு உள்ளே மதுபானத்திலே ஏலத்திலே வருகின்ற வருவாயிலே 25 சதவிகித பங்கு பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும். அதுபோல பேரூராட்சிகளின் எல்லைகளுக்கு உள்ளே பலன் தரக்கூடிய மரங்கள், செடிகள் இருக்கின்றனவே, அவற்றின் மூலம் வருகின்ற வருமானத்தைப் பேரூராட்சிகளே அனுபவிக்கும் வகையில் இதற்கும் ஆவன செய்ய வேண்டும். அதுமாதிரி, பேரூராட்சிப் பகுதியில் வசூலிக்கப்படுகின்ற விற்பனை வரி, மோட்டார் வாகன வரி இவைகளில் ஒரு பகுதியைப் பேரூராட்சிக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி வழங்குவதன்மூலம்தான், பேரூராட்சி மக்களுக்கு அடிப்படை பணிகளை அந்தந்த பேரூராட்சி மன்றங்கள் சிறப்பாக நிறைவேற்ற முடியும். இவைகளை எல்லாம் செய்ய வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே, இங்கே பல உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது பேரூராட்சிகளிலே பணிபுரிகின்ற ஊழியர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக அறிவித்திருகிறார்கள். அப்படி அரசு ஊழியர்களாக அறிவித்திருந்தாலும் கூட, சம்பளம் கொடுப்பது பேரூராட்சிகளின் வருவாயிலிருந்துதான். ஆகவே, பேரூராட்சிகளில் பணிபுரிகின்ற நிர்வாக அலுவலர்கள், ஊழியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் போன்ற அனைவருக்கும் அரசே ஊதியம் வழங்க வேண்டும்.

அடுத்தபடியாக, சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் அரசே நேரடியாக மானியம் வழங்க வேண்டும். இன்றைக்கு, சமுதாய நலப் பணிகள் பேரூராட்சி எல்லைக்குள்ளே நடைபெறுவதில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. ஏற்கெனவே, அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிற நேரத்தில் இந்த ஆண்டிலே தொகுப்பு வீடுகளைக் கட்ட பேரூராட்சிகளுக்கு அனுமதி வழங்க அரசு முடிவு எடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுபோல ஒரு குடிசை விளக்கு திட்டம், அந்தத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டும்,



அடுத்து, பேரூராட்சிகளிலும், கிராம ஊராட்சிகளிலும் பல்வேறு சமுதாய நலப் பணிகள் செய்வதற்காக, அரசு அதற்கு நிதியுதவி செய்கிறது. ஏற்கனவே இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். டாஸ்க் போர்ஸ் மூலமாக கிராம மக்களுக்கு, வறியவர்களுக்கு நிதியுதவி செய்வதாகச் சொன்னார்கள். சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அமைக்கப்பட்ட அந்த கமிட்டியில் நான் இடம் பெற்றிருந்தேன். அப்போது பல கிராமங்களுக்கு நான் சென்றிருந்தேன். நேரடியாக நானே பலருக்கு சிபாரிசு செய்தேன். இன்றுவரை அந்தப் பணம் கிடைக்கவில்லை. என்ன சொல்கிறார்கள் என்றால், ஏற்கனவே அந்தக் கிராமத்தில் பணம் வாங்கியவர்கள் கட்டவில்லை. அதனால் இவர்களுக்குக் கொடுக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். சில நேரங்களில் மானியம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள்.

இதைப்பற்றி எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும். அதுபோல வறியவர்களுக்கு உதவி செய்ய கடன் வழங்கப்படுகிறது. ஆனால் அந்தக் கடன்களைக் கூட வங்கிகள் வழங்கவில்லை என்று சொல்கிறார்கள். அது மாத்திரமல்ல. டாஸ்க் போர்ஸ்ஸோ, நகராட்சி மன்றங்களோ பரிந்துரை செய்தால்கூட வழங்கப்படாத பணம் கொடுக்கப்படாத நிலை இருக்கிறது என்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்தும் பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து, கிராமங்களிலே, பேரூராட்சி மன்றங்களிலே, நவீனக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டன. அவை எல்லாம் இன்றைக்கு உபயோகத்தில் இல்லை. கிராமப்புறங்களில், பேரூராட்சிகளில் முக்கியமாக ஏழை எளிய மக்கள் அதிகமாக வாழ்கிற பகுதியில் பொதுக் கழிப்பிடங்கள் கட்டிக் கொடுக்கப் பட வேண்டும்.

18-05 மணி

ஏற்கெனவே கட்டப்பட்ட பொதுக் கழிப்பிடங்களில் தண்ணீர் வசதியில்லை. அவை பாழடைந்து இருக்கின்றன. எனவே நவீனக் கழிப்பறைகளைக் கட்டும்போது, அங்கே நீர் ஆதாரத்தை ஏற்படுத்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே கிராமங்களிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கெல்லாம் இலவசமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோம். ஆனால் நகராட்சிகளிலே, பேரூராட்சிகளிலே வேலை செய்யும் ஆதி திராவிட மக்கள், ஆதி தெலுங்கர்கள் துப்புரவுத் தொழிலில் ஈடுபட்டு, வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதியில்லை. அவர்களுக்கு முன்னுரிமை அளித்து, வீட்டு வசதி செய்து கொடுக்க போதிய நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. ஆர். சுந்தரம்] [1990 ஏப்ரல் 24

துப்புரவுத் தொழிலாளர்களைப் பற்றி ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். 1958, 1960-லே நியமிக்கப்பட்ட ஊழியர்கள்தான் இன்றும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். பல்வேறு துறைகளிலே வளர்ச்சி பெற்று, 30 ஆண்டுக் காலத்தில் ஜனத்தொகையும் அதிகரித்து, நகரங்கள் ஆங்காங்கே ஏற்பட்டாலும், ஊழியர்கள் வேண்டுமென்று கேட்டால் அதற்கு அரசு அனுமதியில்லை. என்னுடைய பேரூராட்சியில் நிதி வசதி இருக்கிறது. எனவே, ஊழியர்களை அமர்த்த வேண்டுமென்று அரசுக்கு 3 ஆண்டுக் காலமாக பல கடிதங்கள் எழுதிவிட்டேன். ஆனால் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை. அதற்கு நார்ம்ஸ் கமிட்டி போட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்தக் கமிட்டியின் சிபாரிசு என்னவாயிற்று என்று தெரியவில்லை.

இன்றைக்கு இருக்கிற வேலைப் பளு பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பேரூராட்சிகளிலே 95,000 வீடுகள் இருப்பதாகவும், அந்த வீடுகளில் கழிப்பறைகளைச் சுத்தம் செய்யும் 629 ஊழியர்கள் இருக்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். அப்படி என்றால் சராசரியாக ஒரு ஊழியர் 150 வீடுகளை இன்றைக்குச் சுத்தம் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. ஒரு ஊழியர் 40 வீடுகளில் வேலை செய்யலாமென்று இருக்க, இன்றைக்கு 150 வீடுகளில் வேலை செய்வது எந்த அளவுக்குச் சரி என்பதைப் பார்க்க வேண்டும். இதனால் வேலைப் பளு என்பதோடு, வேலை சரியாக நடைபெறவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஊராட்சிகளின் நிதி நிலைமையைப் பார்த்தால் தெரியும். ஊராட்சிகளிலே தெரு விளக்குக்கான மின்சாரக் கட்டணம், குடிநீர் வழங்குவதற்கான மின்சாரக் கட்டணம் ஆகியவற்றைக் கட்டக்கூட நிதி வசதியில்லை. ஆகவே, ஊராட்சிகளின் தெரு விளக்குகள், பேரூராட்சிகளின் தெரு விளக்குகள், குடிநீருக்கான மின்சாரம் ஆகியவற்றுக்கான செலவை அரசே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்கள் பற்றி ஏற்கெனவே பல உறுப்பினர்கள் சொன்னார்கள். கிராமப் புறங்களிலே பள்ளிக் கட்டிடங்கள் இல்லை, சாலை வசதிகள் இல்லை. அந்த ஊராட்சிகளிடம் போதிய வசதியில்லை. இன்றைக்கு ஒரு கேள்விக்கு, அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். தேவையின் அடிப்படையில் செய்ய முடியாது. மக்கள் தொகை அடிப்படையில் செய்ய முடியுமென்று சொன்னார்கள். அதை வரவேற்கிறோம். ஆனால் 1958 ஆம் ஆண்டு ஜனத்தொகை விகிதாச்சாரப்படிதான் மானியத் தொகை தரப்படுகிறது. இது போதுமானதல்ல. இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற விலைவாசி உயர்வு, மக்கள் தேவை ஆகியவற்றுக்கு ஏற்றாற்போல மானியத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 24] [திரு. கே. ஆர். சுந்தரம்]

கிராமப் புறங்களில் தொகுப்பு வீடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கட்டப்படுகின்றன. அனைத்து ஊராட்சிகளிலும் தொகுப்பு வீடுகளைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து கிராமப்புறங்களிலே குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்ட உடன், அதைப் பராமரிக்கும் பணி ஊராட்சி மன்றத்திடம் ஒப்படைக்கப்படுகிறது. அந்த மேல் நிலைத் தொட்டியை பராமரிக்கும் ஆப்பரேட்டர்களுக்கு மாதச் சம்பளம் 30 ரூபாய், 50 ரூபாய் என்று இருக்கிறது. 8 மணி நேரம் வேலை செய்யும் ஊழியர்களுக்கு 30 ரூபாய், 50 ரூபாய் என்றால் அது போதுமானதாக இருக்குமா ? அவர்களுக்கு 400 அல்லது 500 ரூபாய் வரையில் ஊதியம் கொடுத்தால்தான் அவர்களால் வாழ முடியும். இன்றைக்குக் கொடுக்கும் சம்பளம்கூட அவர்களுக்கு முறையாகக் கொடுப்பதில்லை. காரணம், ஊராட்சியிலே பணமில்லை. ஊராட்சியிலே பணம் இல்லாவிட்டாலும் கூட ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதியிலிருந்து கொடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அனுமதி கேட்டோம். மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கு அனுமதி வழங்கினார்கள். அதற்குப் பின்னாலும் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. அவர்களுடைய ஊதியம் உயர்த்தப்பட வேண்டும். அந்த ஊதியமும் மாதாமாதம் கிடைக்க, ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி மன்றத்திலே உள்ள எழுத்தர்களைப் பற்றி சகோதரி லட்சுமி குறிப்பிட்டார்கள். கடந்த ஆண்டிலே மாநாடு நடத்தி அன்றைக்கு பொறுப்பிலே இருந்த மாண்புமிகு அமைச்சர் திரு. ஆறுமுகம் அவர்களை அழைத்து குறைகளைச் சொன்னார்கள். அன்றைக்கு, அவர்கள் வாங்கும் 300 ரூபாய் சம்பளத்தை நிச்சயமாக 600 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க ஆவன செய்வேன் என்று சொன்னார்கள். அந்தக் கோரிக்கை இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. அவர்களைப் படிப்படியாக அரசு ஊழியர்களாக்க முயற்சி மேற்கொள்ளப்படுமென்று சொன்னார்கள். அதுவும் நிறைவேற்றப்படவில்லை.

18-10 மணி

தற்போது கிராமங்களிலே மக்கள் நலப் பணியாளர்களை நியமிக்கின்ற காரணத்தினால் கிராமப் பஞ்சாயத்தில் வேலை செய்கிற எழுத்தர்களுடைய வேலை பாதிக்கப்படும் என்ற அச்சம் இருக்கின்றது. அவர்களுடைய பணியைப் பாதுகாக்க வேண்டும்; நிரந்தரப்படுத்த வேண்டும்; ஏற்கெனவே அளிக்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையிலே ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நகராட்சிகளின் நிலைமைகள் பற்றி எல்லாம் சொன்னார்கள். நான் அதிகம் அதற்குள் போகவில்லை. தற்போது குறிப்பாக பொன்மலை நகராட்சியை எடுத்துக் கொண்டால் அங்கு நகராட்சியின் வருமானத்தைப் பெருக்க அங்காடி கட்டுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். அங்குள்ள நகராட்சியின் இடத்தை ஆக்கிரமித்துள்ளதால் அங்கு அந்தக் கடைகளைக் கட்டுவதற்கு இயலாமல் உள்ள நிலை இருக்கிறது. பொன்மலை நகராட்சி இன்றைக்கும் ஒரு வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டு இருக்கிறது. அதற்கு தனியாகக் கட்டிடம் கட்ட வேண்டுமென்று கோரி இருக்கிறார்கள். தனியாக நகராட்சிக்குக் கட்டிடம் கட்டுவதற்கு வேண்டிய உதவிகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது தமிழகம் முழுவதும் இருக்கின்ற பேரூராட்சிகளால், நகராட்சிகளால் பாதுகாக்கப்படுகின்ற பேருந்து நிலையங்கள் எல்லாம் மிகச் சீர்கேடாக இருக்கின்றன என்பதை நான் அரசினுடைய கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரே ஒரு உதாரணம். சென்னையிலே உள்ள பெரியார் பஸ் ஸ்டாண்டுக்குப் போனால், அங்குள்ள பாதையே இன்றைக்குக் கழிவறையாக இருக்கிறது. அங்கு ஒரு இடத்தில் கூட நிற்பதற்கு முடியாத நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைதான் தமிழகத்தில் பல்வேறு பேருந்து நிலையங்களிலும் இருக்கிறது. குறிப்பாக பழனியை எடுத்துக் கொண்டால் அங்கு பக்தர்கள் அதிகமாக வருகின்ற இடம்; அங்கு ஒரு சிறு பஸ் நிலையம் இருக்கிறது. அது போதுமானதாக இல்லை. அங்கு திருவிழாக் காலங்களில் இலட்சக் கணக்கானவர்கள் கூடுகிறார்கள். அப்போது அவர்கள் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடத்தில் தங்க வைக்கப்படுகிறார்கள். இலட்சக்கணக்கான ரூபாய் அங்கு செலவழிக்கப்படுகிறது. அந்த பஸ் நிலையத்தை பை-பாஸ் ரோடு வரை விஸ்தரித்தால் அரசுக்கும் பணம் மிச்சமாகும்; போதிய வேலைகளை இப்போது நிச்சயமாகச் செய்ய முடியும் என்ற முறையிலே அமைச்சர் அவர்கள் அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது). ஒரே ஒரு நிமிடம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இன்று குடிநீர் தட்டுப்பாடு அதிகமாக இருக்கின்றது. இந்த நேரத்தில் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கு குடிநீர் வடிகால் துறையைச் சேர்ந்தவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் அமைச்சர் அவர்கள் அழைத்துப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குடிநீர் தட்டுப்பாடு மக்களை அதிகம் பாதித்துக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் எங்கெங்கு குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறதோ அங்கெல்லாம் அதைத் தீர்த்து வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்





ஆரம்பத்தில் நான் சொன்னதைப் போல, பேரூராட்சியின் வருவாயைப் பெருக்குவதற்கு நான் சொன்ன ஆலோசனைகளை ஏற்று உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. ஏ. செங்குட்டுவன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நான் உள்ளாட்சித் துறை மானியத்தின் மீது பேச வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நான் இடைத் தேர்தலிலே முன்பு வெற்றி பெற்று வந்தவன். சென்ற ஆண்டு நான் உள்ளாட்சி மன்ற மானியத்தில் பேச வேண்டுமென்று விரும்பி, வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்த ஆண்டும் பேச வேண்டுமென்று நினைத்து முயற்சித்து—பேசக் கூடாது என்று மறுத்ததற்குப் பிறகும், எப்படியாவது பேசிவிட வேண்டும் என்று முயற்சித்து, இறுதியாக மாண்புமிகு கொறடா அவர்கள் அனுமதி தந்தமைக்காக நான் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறை அமைச்சர் ஒரு சாதாரணமான நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர். ஊராட்சிமன்றத் தலைவர் பொறுப்பிலிருந்து இன்று உள்ளாட்சித் துறையின் அமைச்சராக வந்து இருக்கிறார். அவர்கள் ஊராட்சியினுடைய கஷ்டங்கள், இன்றைய சூழ்நிலைகள் எல்லாவற்றையும் உணர்ந்து, இந்தத் துறைக்கு அதிக நிதி உதவி செய்து இருப்பதற்கு அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நோயற்ற வாழ்வே உள்ளாட்சித் துறை மூலம் தான் வழங்க முடியும். சுகாதாரம், சாலை வசதி, குடிநீர், மின்சாரம் மற்றும் அனைத்துத் திட்டங்களும் நகராட்சிகள், உள்ளாட்சித் துறைகள் பொறுப்பிலேதான் நடத்தப்பட்டு வருகின்றன. மக்களுக்கு நோயற்ற வாழ்வை வழங்க வேண்டுமென்றால், அதற்கு உள்ளாட்சித் துறை சிறப்பாக இயங்கினால்தான், அதன் மூலம் மக்களுக்குச் சேர வேண்டிய அந்த நோயற்ற வாழ்வு கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதற்குப் பெரு நிதியை இப்பொழுது வழங்கியிருந்தாலும், மேலும் அதிக நிதி உதவியை அரசு வழங்க வேண்டுமென்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

18-15 மணி

வரி முறையீட்டுக் குழுவுக்கு முந்தைய அரசில், தலைமைப் பொறுப்பில் அரசு அதிகாரிகள் இருக்கக்கூடிய சூழ்நிலைமையும், 5 சதவீதத்திற்கு மேல் வரியைக் குறைக்கக் கூடாது என்றும்

நிலை இருந்தது. அதை நம்முடைய அரசு நீக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கியதற்காக நான் ஊராட்சி, நகராட்சி மன்றத் தலைவர்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, விழாக்களுக்கு அரசு அதிகாரிகள்தான் தலைமை ஏற்க வேண்டும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அதிகாரம் இல்லை என்ற நிலை முந்தைய அரசில் இருந்தது. பெருவாரியான இடங்களில், உள்ளாட்சிகளில் திராவிட முன்னேற்றக் கழகமும், அதைச் சார்ந்திருக்கின்ற எதிர்க்கட்சிகளும் இடம் பிடித்து விட்டதை உணர்ந்து, அந்த விழாக்களில் கூட தலைமை ஏற்கக் கூடாது என்ற நிலை இருந்ததை, நம்முடைய அரசு ஜனநாயகப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு வாய்ப்பைத் தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்களுக்குக் கடந்த ஆண்டுகளில் ஐந்தாண்டுக் காலம் என்று இருந்தது. 1985இல் 4 ஆண்டுகள் என்றும், 1986இல் 3 ஆண்டுகள் என்றும் குறைத்து இருந்தது. மூன்றாண்டுகள் என்று இருந்த நிலையை நமது அரசு உணர்ந்து ஐந்தாண்டுகளாக ஆக்கியதற்கு நான் ஊராட்சி மன்றத் தலைவர்களின் சார்பில் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

ஊராட்சிகளில் பல்வேறு இடங்களில் பல்வேறு குழுக்கள் இருக்கின்ற நிலையை அறிந்து கொள்வதற்கு, ஊராட்சிகளினுடைய நிலையை உயர்த்துவதற்கு ஒரு குழுவை அமைத்து—அதனுடைய ஆய்வுக்கு முன்னாள் சட்டமன்றத்தினுடைய மேலவை உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களைக் கொண்டு நிலைமையை அறிந்து கொள்ள குழு அமைத்திருப்பது, நகராட்சியினுடைய வளர்ச்சிக்கு மேலும் வளர்ச்சியை உருவாக்குவதற்குப் பயன்படும் என்பதை இந்த நேரத்தில் தெரியப்படுத்தாமல் இருக்க முடியவில்லை.

மயிலாடுதுறை நகரில் நம்முடைய மறைந்துவிட்ட பழைய தலைவர்களுடைய பெயரைச் சூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இருக்கிறோம். முதலாவதாக அரசு மருத்துவமனைக்குத் தந்தை பெரியார் அவர்களுடைய பெயரையும், அதைப் போல இந்த மாமன்றத்தில் உறுப்பினராக இருந்த மரியாதைக்குரிய கிட்டப்பா அவர்களுடைய பெயரைக் கூறைநாடு மேல்நிலைப் பள்ளிக்கும், குடியரசுப் பூங்காவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அங்காடிக்கு அமரர் பழனிசாமி அவர்களுடைய பெயரையும் வைத்திருக்கிறார்கள். அதற்காகத் தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பல பெயர்களை வைக்க நகராட்சி மன்றத்தின் மூலம் நிறைவேற்றியிருக்கிறோம். அதையும் வைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



சினிமாவினுடைய கேளிக்கை வரி நகராட்சிகளுக்கு 90 சதவீதம் என்று இருந்தது. அதை மாற்றி இப்பொழுது 65 சதவீதம் என்று வழங்கப்படுகிறது. நகராட்சியினுடைய நிதி நிலையே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இந்த நிலையில், 90 சதவீதம் பெற்றிருந்த நகராட்சிகளுக்கு இப்பொழுது 65 சதவீதமே வழங்கப்படுகிறது. 35 சதவீதத்தை அரசு எடுத்துக் கொள்கிற நிலையைத் தவிர்த்து, முன்பு இருந்ததைப்போல, 90 சதவீதம் கேளிக்கை வரியை நகராட்சிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரப் பதிவில் பல்வேறு தவறுகள் நடைபெறுகின்றன. நகராட்சியில் விற்கப்படுகின்ற கட்டிடங்கள், கடைகள் போன்றவைகளினுடைய பத்திரப் பதிவில் பத்திரப் பதிவு அலுவலகத்தில் குறைந்த மதிப்பீடு செய்து பதிவு செய்து விடுகிறார்கள். அதோடு, நகராட்சி சட்டம் பிரிவு 16-ஏ (பி)யில் ஐந்து பர்செண்டுக்கு மிகாமல் என்று உள்ளது. அதை 5 பர்செண்டுக்குக் குறையாமல் என்று சட்டத்தைத் திருத்தி நகராட்சிக்கு வருவாயை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வரி 1920 ஆம் ஆண்டு உயர்ந்தபட்சம் 125 ரூபாய் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்களுடைய வருவாய் அரசுக்குத் தெரிந்த காரணத்தால் ரூபாய் 125 என்று நிர்ணயித்து வசூலித்து விடுகிறார்கள். ஆனால், பல்வேறு தொழில்கள், பெரிய தொழிற்சாலைகள், குறிப்பாக எம்.ஆர்.எப்., டயர் கம்பெனி, அசோக் லேலண்ட், துணி உற்பத்தி செய்கின்ற மில்கள், பெரிய வணிக நிறுவனங்களுக்கெல்லாம் கூட இதே 125 ரூபாய்தான். அவர்களிடம் 10, 20 டயர் வாங்கி விற்கிற அந்த வியாபாரிக்கும் 125 ரூபாய்தான். அவர்கள் வருமான வரி, சேல்ஸ் டாக்ஸ், இன்கம்டாக்ஸ் கட்டுகிற தொகைக்கு ஏற்ற வகையில் ஒரு சதவீதம் என்றாவது நகராட்சிக்கு வருவாய் ஏற்படுத்துகிற வகையில் ஒரு சட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

18-20 மணி

கடைகள் அரசு உதவியுடன் கட்டப்படுகின்றன. கட்டப்படும் கடைகள் ஏலம் விடப்படுகின்றன. ஏலம் எடுத்த கடைக்காரர்கள் அந்த ஏலத் தொகையைக் கட்டாமல் கோர்ட்டிற்கு சென்று விடுகிறார்கள். இதனால் நகராட்சி வாங்கி இருக்கிற கடனுக்கு வட்டியும், அசலும் கட்ட முடியாத சூழ்நிலை உருவாகிறது. உயர்நீதிமன்றத்தில், உச்ச நீதிமன்றத்தில் இருக்கிற வழக்குகளை உடனடியாக தீர்வு செய்ய வேண்டும். இதன் மூலம் நகராட்சிக்கு ஒரு கணிசமான அளவிற்கு நிதி கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அத்துடன் மாவட்ட அளவில் அந்த வழக்குகளைத் தீர்விற்குக் கொண்டு வர வேண்டும். அதற்காக ஏற்படுகிற

நீதிமன்றச் செலவைக் கூட நகராட்சிகளிடமிருந்து பெற்றுக் கொள்வதில் நியாயம் இருக்கிறது. அப்படிப்பட்ட காரியங் களைச் செய்தால் நகராட்சிக்கு நல்ல வருவாய் கிடைக்கும். வரி தள்ளுபடி பொறுத்த வரையில், மிகச் சாதாரணமான ஏழை கள், தரைக் கடை வைத்திருப்பவர்கள், தலையிலே தூக்கிச் செல்கிற ஏழை எளிய மக்களிடமிருந்து தலைச்சுமை வரி என்று நகராட்சி வசூலிக்கிறது. ஏலம் எடுத்தவர்கள் அதிகமாக தலைச்சுமை வரியை அந்த ஏழை எளிய மக்களிடம் வசூலிக்கிறார் கள். நகராட்சிக்கு அதனால் கெட்ட பெயர் வருகிறது. அது மட்டுமல்லாமல் சைக்கிள், மாட்டு வண்டி, குதிரை வண்டி, சைகிள் ரிக்ஷா போன்றவைகளுக்கு லைசென்ஸ் இருக்கிற முறையை ரத்து செய்யலாம். எனவே, அதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் ஏழைகள் சிரிப்பில் இறைவனைக் காணக்கூடிய நம்முடைய அரசு அதை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த ஏழைகள் குளிரும் வகையில் அதைச் செய்யவேண்டும்.

விழாக்களைப் பொறுத்த வரையில் மத்திய அமைச்சர்கள், குடியரசுத் தலைவர் வருகிற விழாவிற்கு 500 ரூபாய், மாநில முதலமைச்சர், கவர்னர் மற்ற அமைச்சர்கள் வருகிற விழாவிற்கு 250 ரூபாய் என்று இருக்கிறது. இது அழைப்பு அடிக்கிற காசு கூட இல்லை. இதை உயர்த்தித் தர வேண்டும். அப்படிச் செய்வது விழாக்களை ஏற்பாடு செய்கிற உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் நல்ல முறையில் விழாக்களை அமைக்கப் பயன்படும்.

மயிலாடுதுறையில் மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் வாழ்ந்த இடம், கவிஞர் வேதநாயகம் அவர்கள் வாழ்ந்த இடம் ஆகி யவற்றை அரசுடைமையாக்கி, அவர்களுக்கு நினைவிடம் அமைக்க வேண்டுமென்று நகராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. அதை நடைமுறைப்படுத்திக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் நகராட்சிப் பணி காரணமாக வெளியூர் பிரயாணம் செல்ல வேண்டுமென்றால் அந்தக் காலத்தில் விதிக்கப்பட்ட பிரயாணப்படிதான் இன்றைக்கும் இருக்கிறது. அதை மாற்றி உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

நகராட்சியின் தேவைகள்—சாக்கடை தண்ணீர் எடுக்கும் வண்டி, ஜீப், குப்பை எடுக்கும் வண்டி ஆகியவை கூட இல்லை. மயிலாடுதுறை நகராட்சி 117 ஆண்டுகள் முடிந்த நகராட்சி. அது தேர்வுநிலை நகராட்சி. ஒரு ஜீப் வேண்டுமென்று பலமுறை கேட்டும் நகராட்சி நிதியிலிருந்து பெற்றுக்கொள்ள இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. அதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மயிலாடுதுறை எல்லா



விதமான வாய்ப்பு வசதியும் பெற்றுள்ள நகரம். அந்த நகரம் தொன்மை வாய்ந்த நகரம். அது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும் தெரிந்த நகரமாகும். அந்த நகரத்தை மையமாக வைத்து மாவட்டம் பிரிக்கப்படுகிற நேரத்தில், மயிலாடுதுறையைத் தலைநகரமாக்கித் தர வேண்டுமென்று மயிலாடுதுறை மக்கள் சார்பாக சிரம் தாழ்த்திக் கேட்டுக் கொள்கிறேன்.

18-25 மணி

இறந்தவர்கள், ஓய்வு பெற்றவர்கள், நகராட்சி மன்றத்தில் பணியாற்றியவர்களுடைய இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்றன. அந்த இடங்கள் பல ஆண்டுக் காலமாக நிரப்பப் படாமல் இருக்கின்றன. அந்த இடங்களை நிரப்புவதற்கு இங்கே சென்னை வரை வந்து போகின்ற அந்தக் கஷ்டத்தைப் அகற்றும் வகையிலே, மாவட்ட அளவிலே, நடவடிக்கை எடுக்க வேண்டும் (மணியடிக்கப்பெற்றது).

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு சட்டப் பேரவையி னுடைய துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிர்வாகம், மாநகராட்சிகள் என்ற கோரிக்கை எண். 28-ல் பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கிய நம்முடைய துணைத் தலைவர் அவர் களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சென்னை மாநகரத்தில் ஒவ்வொரு வட்டத்திலும் விளை யாட்டுத் திடலை அவசியமாக அமைத்திட வேண்டும் என்ற அன்பு வேண்டுகோளை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரி வித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த விளை யாட்டுத் திடல்களின் சிறந்த பராமரிப்புக்காக வங்கிகள் மூலமாகவும், சமூகநல இயக்கங்களின் மூலமாகவும் ஏற்பாடு செய்து அவர்களிடம் ஒப்படைக்கலாம் என்பதை இந்த நேரத் திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தெருக்கள் சீரமைப்புப் பெற நடைமுறையில் உள்ள பிரச்சினை பொதுத் தெருக்கள் என்றும் தனியார் தெருக்கள் என்றும் பிரிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை நாம் அறிந் திருக்கிறோம். நகரத்திலே இருக்கிற 1,700 தனியார் தெருக் களில் இப்போது 67 தெருக்களில்தான் பாதாளச் சாக்கடை போடப்பட்டு இருக்கிறது. 830 தெருக்களுக்கு மற்ற வசதிகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அந்தத் தெருக்களில் பாதாள சாக்கடை போட்டால்தான் அது பொதுத் தெருவாக அறிவிக்கப்படும் என்று மாநகராட்சியும், அதைப் போலவே குடிநீர்வடிகால் வாரியத்தைக் கேட்டால், பொதுத் தெருவாக அறிவித்தால்தான் நாங்கள் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை

அமுல்படுத்துவோம் என்று சொல்கிற முரண்பாடுகள் இருந்து கொண்டு இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அண்மையிலே கூடிப் பேசுகிறபோது எல்லாத் தெருக்களையும் பொதுத் தெருவாக எடுத்துக் கொண்டு பணியாற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்காக இந்த நேரத்திலே நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நிதிநிலை பற்றாக்குறை என்பது இன்றைக்கு நேற்றல்ல, தொடர்ந்து வருகிற ஒரு பிரச்சினையாகும். சென்னை மாநகரத்தினுடைய வளர்ச்சிக்காக நிதி நமக்கு அவசியமாகத் தேவைப்படுகிறது. சிகரெட் குடிக்கிறவர்கள் போடுகின்ற துண்டுகளை எல்லாம் நம்முடைய மாநகராட்சிதான் அப்புறப்படுத்திக் கொண்டு இருக்கிறது. அதனால் ஒரு சிகரெட்டுக்கு ஒரு பைசா வீதம் அந்த வரி மாநகராட்சிக்கு வருவதற்கான வழிவகைகயைச் செய்தால், ஏராளமான பணம் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதைப்போலவே ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு ஒரு பைசா என்று நமக்கு ஒதுக்கித் தருவார்களானால் ஏராளமான, கோடிக்கணக்கான பணங்கள் மாநகராட்சிக்கு வருமானம் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

சென்னையிலே பொதுவாக இருக்கிற பூங்காக்கள் அனைத்திலும் பெரும்பகுதியான பூங்காக்கள் செப்பனிடப்படாமல் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணமாகச் சொல்லவேண்டும் என்றால், ராயப்பேட்டையில் உள்ள 'சன்டே அப்சர்வர்' பூங்கா சென்னையிலே மிகத் தெளிவான முறையிலே, அழகான முறையிலே உருவாக்கப்பட்டு இருந்தது. அதைப்போல அமைச்சர் கோவிந்தசாமி என்ற பூங்கா கோட்டூரில் இருந்தது. இவை எல்லாம் இன்றைக்கு க்ஷீணித்துப் போயிருக்கின்றன என்பதைச் சொல்வதில் தவறு இல்லை என்று நான் கருதுகிறேன்.

அதைப்போலவே பள்ளிக்கூடம் என்று எடுத்துக்கொண்டால் கூட சுத்தமாக கடந்த 13, 15 ஆண்டுக் காலமாக பள்ளிக்கூடங்கள் எல்லாம் எந்தவிதமான பராமரிப்பும் இல்லாமல், அதை மாநகராட்சி செய்வதா, அல்லது அரசாங்கம் செய்வதா என்கிற நிலைமையிலே இன்றைக்கும் நீடித்துக்கொண்டு இருக்கிறது என்பது நமக்குத் தெரியாத ஒன்றல்ல. இதையெல்லாம் அரசாங்கமாவது அல்லது மாநகராட்சியாவது சரியாகப் பராமரிக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.



மாநகராட்சி ஊழியர்கள் நீண்டநெடுங்காலமாக எங்களுக்கு மாநகராட்சியினுடைய நிலத்திலே வீடு கட்டிக்கொள்வதற்கு இடம் தரவேண்டும் என்று பலமுறை வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றுகிற வகையிலே, மாநகராட்சி ஊழியர்களுக்கு, சொந்த வீடு இல்லாதவர்களுக்கு இடங்களை ஒதுக்கித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல், இங்கே தளபதி ஸ்டாலின் அவர்கள் பேசுகிறபோது, ஒன்றைக் குறிப்பிட்டார்கள். குடிசை மாற்று வாரியத்திற்கும், குடிநீர் வடிகால் வாரியத்திற்கும், சென்னை மாநகராட்சிக்கும் செல்கிறபோது, இது எங்களுடைய பணி அல்ல என்று அவரவர்கள் சொல்லி, தட்டிக் கழிக்கிற சூழ்நிலை இருக்கிறது, ஆகவே அதற்கு ஒரு கோ-ஆர்டினேசன் கமிட்டி போட்டு, நல்லமுறையிலே பணியாற்றிட வேண்டும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அதைப்போலவே ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் வைத்துக் கொண்டு இருக்கக்கூடிய தோழர்கள் ஏராளமானவர்கள் லைசென்ஸ் வாங்குவதிலே சிக்கல்கள் இருக்கின்றன. அவர்கள் லைசென்ஸ் வாங்கச் செல்லும்போது, அவர்களிடத்திலே பிளானின் பெர்மிசன் வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்களும் லைசென்ஸ் வாங்காமல் தொழில் நடத்துகிறார்கள். அதே நேரத்தில் அவர்கள் தொழில் செய்வதை நிறுத்துவதில்லை. அதற்காக மாநகராட்சி கடுமையாக நடவடிக்கை எடுத்து, அந்த உரிமங்களை எல்லாம் பெறாத காரணத்தால் அவர்களுடைய கடைகளை மூடுகின்ற அளவுக்கு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு, பிளானின் பெர்மிசன் இல்லாமல் அவர்களுக்கு அனுமதி வழங்கவேண்டும் என்று மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே நமக்கு 100 கோடி ரூபாய் வருமானம் வருவதற்கான சூழ்நிலை மாநகராட்சியிலே இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நம்முடைய துணைத் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

18–30 மணி

தற்போது வரிவிதிப்பு முறைகளில் நிறைய தவறுகள், பிரச்சினைகள் ஏற்பட வழிவகையுண்டு. குடியிருப்பு பகுதிகளிலே, வணிக வரிவிதிப்பு பகுதி, 'ரெசிடன்சியல்' என்றும் 'காமர்சியல்' என்றும் பிரித்து 'பிளாட் ரேட் சிஸ்டம்' கொண்டு வந்தால்

[திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்] [1990 ஏப்ரல் 24

ஒரு சதுர அடிக்கு இவ்வளவு என்று சொன்னால், நிச்சயமாக 100 கோடி ரூபாய் வருமானம் வர இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே, 1973 ஆம் ஆண்டு சென்னையிலே 37,000 தெரு விளக்குகள் இருந்தன. ஆனால் இன்றைக்கு 58,000 தெரு விளக்குகள் இருக்கின்றன. அதே நேரத்தில் 1973 ஆம் ஆண்டு 900 பணி ஆட்கள்தான் இருந் தார்கள். அவர்களிலே பலபேர் இறந்துவிட்டார்கள், பலபேர் ஓய்வு பெற்று இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குப் பதிலாக இதுவரை ஆட்களே நியமிக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, அந்தக் காலத்திலே மாநக ராட்சியிலே 'அப்பாய்ன்மெண்டு கமிட்டி' ஒன்று இருந்தது. அதைப் போலவே 'அப்பாய்ன்மெண்டு கமிட்டி' போட்டு அதை யெல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத் திலே பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே இடுகாடுகள் எல்லாம் எந்த அளவுக்குச் சரியாக இல்லை என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறேன். அதைப்போலவே நகரை அழகு செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட நாளை ஒதுக்கி சென்னையில் இருக்கிற அனைத்துக் குடிசை களையும் கணக்கிட்டு, அதற்குப் பிறகு குடிசைகளே வரக் கூடாது என்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு மென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கழகத் தலைவர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர் களுக்கும், நம்முடைய ராஜாஜி அவர்களுக்கும், கருமவீரர் காமராஜர் அவர்களுக்கும் நினைவகம் கட்டினார்கள். முன்னாள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கும் சதுக்கத்தை நிறுவினார்கள். ஆனால் ஆதிதிராவிட மக்களின் விடிவெள்ளி யாகத் திகழ்ந்து கொண்டிருக்கிற முதல்வர் அவர்கள் அண்ணல் அம்பேத்கார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட உத்தேசமிட்டி ருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற கருமவீரர் காமராஜர் நினைவகத்திற்கு அருகிலேயே அம்பேத்கார் நினைவகம் ஒன்று கட்ட வேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே ஆலந்தூர் நகர மன்றக் கட்டிடத்திற்கு ஆலந்தூர் ஆப்ரகாம் நினைவு மாளிகை என்ற நினைவு பெயர் இட வேண்டும் என்று இந்த நேரத்திலே மிகப் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். கழகத் தலைவர் அவர்கள் 13 கோடி ரூபாய் செலவில் அங்கே மிகப் பெரிய பாலத்தை கட்டுவதற்கு, அதற்கான நடவடிக்கை எடுக்க அனுமதி தந்திருக்கிறார்கள். சைதாப் பேட்டையும் கழகத்தினுடைய தொகுதி என்பது எல்லோருக்கும் தெரிந்தது. சைதாப்பேட்டையிலே இரண்டு சுரங்கப் பாதைகள் கட்ட வேண்டும் என்று இந்த நேரத்திலே மிகப் பணி வோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சைதாப் பேட்டையிலே அங்காடி அருகில் பயன்படுத்தப்பட்டு வரும்



1990 ஏப்ரல் 24] [திரு, ஆர்.எஸ். ஸ்ரீதர்]

மாட்டுத் தொழுவத்தை அங்காடியாக மாற்றி நடைபாதை வியாபாரிகளுக்குக் கடை அமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமூகநலக் கூடங்கள்—140-வது வட்டத்திலே மாநகராட்சிக்குச் சொந்தமான மிகப் பெரிய இடம் ஒன்று இருக்கிறது. அதிலே, மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்திலே, ஏழைகள், நடுத்தர மக்கள் சென்று பயனடைகின்ற வகையில் ஒரு சிறிய சமூக நலக் கூடம் அமைக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாய் வளர்க்க உரிமம்—மாநகரிலே நாய்த் தொல்லை குறைய, நாய் வளர்ப்பதற்கு உரிமம் வழங்க கட்டணம், 6 மாதத்திற்கு ரூ. 2 ஆக இருக்கிறது. அது 25 ரூபாயாக மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தங்கும் விடுதிகள்—நம்முடைய மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. முரசொலி மாறன் அவர்கள் சென்னையிலேயும், டெல்லியிலேயும் பல நகரங்களிலேயும் சென்று ஆங்காங்கே இருக்கக் கூடிய குடிசைப் பகுதிகளையெல்லாம் பார்வையிட்டு நமக்காக மைய அரசின் நிதியுதவியோடு இரவு நேர தங்கும் விடுதிகளைக் கட்டியிருக்கிறார்கள். அதிலே 400-க்கும் உட் பட்டவர்கள்தான் தங்க இயலும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்னையிலே 18,000-க்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஆக எல்லா வட்டங்களிலும் அந்தமாதிரி விடுதிகள் கட்டப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

18–35 மணி

உச்சவரம்பு நிலங்கள்—அதாவது 'சீலிங் லாண்டு' என்று சொல்லுகின்ற நிலத்தில் ஏராளமானவர்கள் வீடுகளைக் கட்டி யிருக்கிறார்கள், அல்லது சாலைகள் போடப்பட்டிருக்கின்றன, விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த வீடுகளை இடித்துவிடுவேன் என்று பயமுறுத்துகிறார்கள். அதற்காக நம்முடைய அரசாங்கம் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்கின்ற அரசாங்கம், அந்த 'அன் ஆத்தரைஸ்டு லேஅவுட்டை' எல்லாம் யார் யாருக்கு, என்று அரசாங்கத்தின் மூலமாகக் கணக் கெடுத்து அவர்களுக்கு எல்லாம் அந்த நிதியுதவியை உடனடியாக வழங்குவார்களேயானால் ஏராளமான அரசாங்கத்தில் பணி யாற்றுகின்ற ஊழியர்கள், மற்ற துறைகளில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் அதிலே சிக்கித் திகைத்துக் கொண்டிருக்கிறவர்கள் பயனடைவார்கள். அதற்கு நம்முடைய அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கழகத் தலைவர் கலைஞர் அவர் களால் அறிவிக்கப்பட்ட திருமண உதவித் திட்டத்தின் கீழ் 614 பேர்கள் உதவி பெற்றிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில்

மட்டும் 4-ல் 1 பகுதியினர் அதிலே நன்மை அடைந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே அத்தனை காரியங்களும் செயல்பட அமைச்சர்கள் அனைவரும் எல்லா நேரங்களிலும் ஒத்துழைத்து இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த நேரத்தில் நன்றியறிதலையும், வணக்கத்தையும் தெரிவிவித்துக்கொண்டு மேலும் பல காரியங்களுக்கு உறுதுணையாக அவர்கள் இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு இந்த நல்ல வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த நம்முடைய சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கும் எங்கள் தலைவர் ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த அளவோடு அமர்கின்றேன். வணக்கம்.

திரு. பெ. வெங்கடாசலம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்'' என்ற உறுதிமொழிக்கேற்ப சங்கத்தமிழ் படைத்த—சிங்கத்தமிழ் மகன்—மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையிலே செயல்பட்டுவரும் நல்லாட்சியில் உள்ளாட்சியில் பேச வாய்ப்பு கொடுத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். கழக அரசின் சாதனைகள் தொடரும்; மேன்மேலும் அதிகரிக்கும் என்பதற்கு இவ்வாண்டின் நிதிநிலை அறிக்கையின் மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள திட்டங்களும், சலுகைகளுமே எடுத்துக்காட்டாகும். கிராமங்கள் தான் இந்தியாவின் முதுகெலும்பு, அறுதிப் பெரும்பான்மையான மக்கள் கிராமங்களிலேதான் வாழ்கிறார்கள், ''நீர் உயர நெல் உயரும்'' என்பது போல கிராமங்கள் உயர்ந்தால் நாடு உயரும், கிராமங்களை முன்னேற்ற இரண்டு முனைகளாகத் திட்டமிட்டு செயலாற்றுகிறது இவ்வரசு.

கடந்த ஆண்டில், கழக ஆட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அடைந்துள்ள வெற்றிகளில் சிறப்பானது ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டப் பணிகளைச் செயல்படுத்தியதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் பெற்றதுதான். இதுமட்டுமல்ல, டாக்டர் கலைஞர் வழிநடத்தும் இந்த அரசு அனைத்துத் துறைகளிலும் இந்தியாவிலேயே முதலிடம் பெறும் என்பதில் ஐயமில்லை. அந்நாள் தொலைவில் இல்லை.

கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் குடிநீர் வசதியில்லாத கிராமங்கள் மற்றும் குக்கிராமங்கள் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 10,300 இருந்தன. இந்த அரசு அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி ஏற்படுத்த முனைந்து செயல்படுத்தி வரும் திட்டம் வரும் மே திங்களில் முடிவுறும்;



அதன் பின் குடிநீர் வசதியில்லாத கிராமமே மாநிலத்தில் இருக்காது. ஆக, குடிநீர் வசதி பெற்ற கிராமங்கள் நூறு சதவீதமாகக் கொண்டுள்ள மாநிலங்களின் முன்னணியில் தமிழகம் இடம் பெறும். இவ்வாறான அடிப்படை வசதிகள் கிராமங்களுக்கு வழங்கும் சீரிய நோக்கத்துடன் அடுத்த ஐந்து ஆண்டுகளில் முழுமையாக நிறைவேறும் வண்ணம் ஒரு மாபெரும் திட்டத்தை தலைவர் கலைஞர் அவர்கள் தீட்டியுள்ளார்கள். ஐந்து ஆண்டுகளில் மொத்தம் ரூபாய் இருநூற்றி ஐம்பது கோடி செலவில்—ஒவ்வொரு ஆண்டும் ஐம்பது கோடி ரூபாயாக—அரசு இருபத்தைந்து கோடியும், ஊராட்சி ஒன்றியங்கள் இருபத்தைந்து கோடியுமாக—இத்திட்டத்தை ஊராட்சி ஒன்றியங்களே பொறுப்பேற்று நடத்தும் என்று அறிவித்துள்ளார்கள். இதை நான் மனமார வரவேற்கின்றேன்.

கிராமங்களில் பொருளாதார—சமூக நிலையில் மிகவும் பின் தங்கி, வறுமையில் வாடும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு அரசால் ஏற்கனவே 42,000 இலவச வீடுகள் கட்டித் தரப்பட்டன. வரும் ஆண்டில், மேலும் 47,000 இலவச வீடுகள் 56 கோடி ரூபாய் செலவில் கட்டப்படவுள்ளன. வேலைவாய்ப்பின்றி இருக்கும் கிராம இளைஞர்கள் 25,000 பேர்கள்—ஆண், பெண் இருபாலரும், சம விகிதத்தில்—மக்கள் நலப் பணியாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இதே போல நகராட்சி, பேரூராட்சிகளில் 10,000 பேர்கள்—ஆண், பெண் இருபாலரும்—சம விகிதத்தில் நியமிக்கப்படுகிறார்கள். சிற்றூர்களிலும், கிராமங்களிலும் கூட, ஓராசிரியர் பள்ளியாவது இருக்கும் இந்தக் காலத்தில், கிராமங்களுக்கு அடிப்படை வசதிகள், வேலையற்றோருக்கு வேலை வாய்ப்புகள், சிறு விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகள், தாழ்த்தப்பட்டோருக்கு இலவச வீடுகள் போன்ற எண்ணற்ற திட்டங்கள், இவ்வளவும் முடிந்தபின், இந்தியாவிலேயே கிராம வளர்ச்சியில், எந்த மாநிலமுமே தமிழகத்திற்கு இணையாகத் திகழப் போவதில்லை. தெளிவான சிந்தனையும், விரிந்து பரந்த பொது அறிவும், சீரான கண்ணோக்கும், துடிப்பான செயல் வேகமும் உள்ளார்ந்த ஈடுபாடும் ஒருங்கே பெற்ற தமிழ்த்தாயின் தவப்புதல்வன் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களை முதல்வராகப் பெற்றுள்ள தமிழ்நாடு அந்தச் சிறப்பினை உறுதியாகப் பெறும்.

உள்ளாட்சித் துறையில் ஏற்பட்டுள்ள மாபெரும் சீர்திருத்தம்—மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்த நிர்வாகச் சீர்திருத்தம் தான். ஏற்கனவே கடந்த கால ஆட்சியில் ஊராட்சி ஒன்றிய நகராட்சி தலைவர்களின் பதவிக் காலம் 3 ஆண்டுகளாக இருந்ததை 5 ஆண்டுகளாக நீடித்து மீண்டும் கணிசமான அதிகாரங்களை வழங்கிய மாண்புமிகு கலைஞர் அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன்.

[திரு. பெ. வெங்கடாசலம்] [1990 ஏப்ரல் 24

ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலையை மேம்படுத்த முன்னாள் மேலவை உறுப்பினர் திரு. ஏ.ஆர். தாமோதரன் அவர்கள் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். ஏறத்தாழ ஒரு கோடி மக்கள் வசிக்கும் பேரூராட்சிகளின் மேம்பாட்டுக்கான பல்வேறு திட்டப் பணிகள் வகுக்கப்பட்டுள்ளன. பேரூராட்சிகள் என்று வரும்போது எனது கோரிக்கை ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக, திறந்த சாக்கடைகள்தான் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள காற்றை அசுத்தமாக்கி பொது சுகாதாரத்தைப் பாதி கெடுக்கிறது. அனைத்துப் பெரு நகரங்களிலும் முழுவதுமாக மூடிய சாக்கடைகள் அமைக்கப்பட வேண்டும். கூவம் உள்பட.

அடுத்து திட்டப் பணிகளுக்கு ஆகும் செலவினங்களில் உள்ளாட்சி அமைப்புகளும் பங்கேற்க வேண்டியுள்ளன. இதற்கு, தற்போது விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியின் மீதான மேல் வரி (சர்சார்ஜ்)யில் அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கவுள்ள 20 சதவிகிதம் போதாது. எனவே, சென்னை மாநகராட்சிக்கு அரசு வழங்குவதாக அறிவித்துள்ள மேல் வரியில் 50 சதவீதம் பங்கை உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அளிக்க முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

18–40 மணி

சற்றொப்ப ஆயிரம் ஆண்டுகட்கு முன் தமிழகத்தில் இராசராச சோழ மன்னன் ஆட்சியில் கிராமங்களில் நிலவிய உள்ளாட்சி முறை, நேரடியாக கிராம மக்களே உள்ளாட்சிக் குழுவைத் தேர்ந்தெடுக்கும் குடவோலைத் தேர்தல் முறை ஆகியவை எல்லாம் இன்றும் உலக அளவிலே வரலாற்றுச் சிறப்பு மிக்க இடத்தையும், வியப்புக் கலந்த பாராட்டையும் பெறுகிறது. அதே போன்று, அதே தந்தைத் தரணியிலே பிறந்து இன்று நம்மை ஆளும் கலைஞர் அவர்கள் ஆட்சியில் அவர் உள்ளாட்சித் துறையில் கொண்டு வந்துள்ள சீர்திருத்தங்களும் வரலாற்றுச் சிறப்பு மிக்க புகழைப் பெறும் என்பது உறுதி.

தென்றலாய் வாழ்ந்து, குறுகிய காலமே ஆட்சிப் பொறுப்பிலிருந்து மின்னலாய் மறைந்தாரே பேரறிஞர் அண்ணா — அவர் சொன்னதைப் போல், அவர் காட்டிய பாதையிலே தமிழ் மக்களை இட்டுச் செல்லும் சொல்லாட்சி மிக்க தானைத் தலைவர் கலைஞர் அவர்களின் நல்லாட்சியில் ஏழைகள் சிரிக்கிறார்கள், அவர்கள் சிரிப்பினில் இறைவனைக் காண்கிறோம். இந்த நல்லாட்சியில், உள்ளாட்சித் துறையின் சிறப்பு மிக்க பணிகளைப் பாராட்டுகின்றேன்.



1990 ஏப்ரல் 24] [திரு. பெ. வெங்கடாசலம்]

மேலும், அரசின் கவனத்திற்கு சில கோரிக்கைகளை இந்த மாமன்றத்தின் முன்பு வைக்கிறேன். கிராமப்புறத் திட்டத்தில் அந்த அந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள்தான் பணிகளைச் செய்ய வேண்டுமென இருப்பதில் சில முறைகேடுகள் நடப்பதினால் அதை மாற்றி, அரசு அதிகாரிகள் மூலம் டெண்டர்கள் விட்டு திட்டப் பணிகளைச் செய்திடல் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டப் பேரவை உறுப்பினர்கள் சத்துணவுக் கூடங்களைப் பார்வையிடும்போது சில குறைபாடுகளைப் பார்வையாளர் புத்தகத்தில் குறிப்பிடுகின்றனர். ஆனால் அந்தக் குறைகள் போக்கப்படுவதாகத் தெரியவில்லை. தவறுகள் செய்யும் ஊழியர்களைக் குறைந்த பட்சம் ஒன்றியங்களில் வேறு இடங்களுக்கு மாறுதல் செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் இரண்டு ஆணையாளர்கள் உள்ளனர். மனுக்களைப் பொது மக்கள் கொடுக்கின்ற காலத்தில், யாரிடம் கொடுப்பது எனப் புரியாமல் குழப்பம் அடைகிறார்கள். ஒரு ஒன்றியத்திற்கு ஒரு ஆணையாளர் என்று நியமித்து, தேவைப்படுமாயின் ஒரு உதவி ஆணையாளரை நியமிக்குமாறு மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பள்ளிக் கட்டிடங்கள் பழுதடைந்து இருந்தால் அதைச் சீர் செய்ய ரூ. 5,000 ஒதுக்கப்பட்டுள்ளதை வரவேற்கின்றேன். சில இடங்களுக்குப் போதுமானதாக இல்லை. அதற்கு அதிக நிதி ஒதுக்கிட அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

பேரூராட்சிகளில் வாழும் மக்கள் ஒன்றியத் தலைவர்களுக்கு நேரடியாக வாக்களிக்கின்றனர். ஆனால் பேரூராட்சி நிர்வாகத்தில் நேரடியாகத் தலையிட முடியவில்லை. வாக்களித்த மக்களுக்கு முறையாகப் பணி செய்ய முடியவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேரூராட்சி நிர்வாகத்தை பழைய முறைப்படி ஒன்றிய நிர்வாகத்தோடு இணைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகம், நகராட்சி அலுவலகம் ஆகியவற்றில் பொது மக்களின் குறைகளைக் கேட்கின்ற வகையில் தனி அறை ஒதுக்கிக் கொடுக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது வீரபாண்டி தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு சில கோரிக்கைகளை நான் வைக்க முற்படுகின்றேன். எனது தொகுதியில் வீரபாண்டி ஒன்றியம், சேலம் ஒன்றியத்தில் 20 பஞ்சாயத்துக்கள், சூரமங்கலம் நகராட்சி அடங்கிய பகுதிகளும் அடங்கும். வீரபாண்டி தொகுதியைப் பொறுத்த வரை

உலக வங்கித் திட்டத்தின் கீழ் நெடுங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று உள்ளது. மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குடிநீர்ப் பிரச்சினை குறித்த கலந்துரையாடலின்போது இத்திட்டம் மூன்று ஆண்டுகளுக் குள் முடிக்கப்படும் என்று கூறினார். அவ்வாறு முடிக்கும் போது எனது தொகுதியில் பெரும் பகுதிகள் பிரச்சினையில் இருந்து மீளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் குடிநீர் கிடைக்காத கிராமங்களுக்கு முன் னுரிமை கொடுத்து ஆழ் துளைக் கிணறுகள் அமைக்க வேண்டு மாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இளம் பிள்ளையில் அரசு பொது மருத்துவமனைக் காக நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் பொதுத் தேர்தலின்போது அந்தப் பகுதி மக்களுக்கு அரசு பொறுப்பேற்றவுடன் ஆவன செய்வதாகக் கூறினார். நடப்பு ஆண்டுத் திட்டத்தில் இதை எடுத்து நீண்ட கால மக்கள் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஆட்டையாம்பட்டி பகுதியில் ஊராட்சி ஒன்றி யத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட இடம் ஒன்று உள்ளது. அது பஸ் நிலையத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட இடம். இவ்விடத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒன்றியப் பெருந்தலைவர் பி. வேங்கா கவுண்டர் என்பவர் ஆக்கிரமித்து உள்ளார். இதில் கொடுமை என்ன வென்றால், 1972-இல் திராவிட முன்னேற்றக் கழகத்தினை விட்டுப் பிரிந்து தனியாக கட்சியை ஆரம்பித்து 1974-ல் இடைத் தேர்தலில்தான் இரட்டை இலை சின்னம் வழங்கப்பட்டது. ஆனால் 1980-இல் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு 1972 என்றும், இரட்டை இலைச் சின்னமும் பதிக்கப்பட்டு உள்ளது. ஆகவே, தமிழக முதல்வர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இந்த ஆக்கிரமிப்பை அகற்றி இவ்விடத் தில் பஸ் நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் சேலம் ஸ்டீல் என்பது உலக அரங்கில் சிறப்பினைப் பெற்றுள்ளது. ஆஸ்திரேலியாவில் உள் விளையாட்டு அரங்கமே சேலம் ஸ்டீலைக் கொண்டு அமைக்கப்பட்டதாகப் பத்திரிகை களில் வந்தது. இவ்வளவு தரம் வாய்ந்த இரும்பை உருவாக்கு வது, வெறும் உருட்டாலையாக உள்ளது. இதனை உருக் காலையாக மாற்றுவதற்கு மத்திய அரசை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். மேலும் வற்புறுத்தி, இவ்வாண்டே நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



மேலும் சேலம் ஒன்றியத்தைப் பொறுத்த வரையில், இரண்டு பஞ்சாயத்துக்கள், சீலநாயக்கன்பட்டி பஞ்சாயத்து 30 ஆயிரம் மக்கள் தொகை கொண்டதும், அன்னதானப்பட்டி பஞ்சாயத்து 20 ஆயிரம் மக்கள் தொகை கொண்டதுமான பகுதிகளாக இருக் கின்றன. இது வெறும் கிராமப் பஞ்சாயத்தாக இருப்பதால் அங்குள்ள மக்களுக்கு எந்த ஒரு அடிப்படை வசதியும் செய்யா மல், செய்ய முடியாத நிலை இருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரூராட்சியாக மாற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

18–45 மணி

மேலும் என்னுடைய தொகுதியில் சூரமங்கலம் நகராட்சி ஒன்று இருக்கிறது. அங்கு அது வெறும் நகராட்சி என்று இருக் கிறதே ஒழிய அதற்கு அடிப்படை வசதிகள், போதிய வசதிகள் இல்லை. ஆகவே, சூரமங்கலம் நகராட்சியைப் பொறுத்த வரையில் அந்தப் பகுதி மக்கள் பயன் பெறக் கூடிய அளவுக்கு நல்ல திட்டங்களை ஏற்படுத்தித் தர வேண்டும். சூரமங்கலம் பகுதியில் போடிநாயக்கன்பட்டி, ஆண்டிப்பட்டி போன்றப் பகுதிகளில் இதுவரையில் அவர்களுக்கு பாதை வசதிகள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்த போடிநாயக்கன்பட்டி, ஆண்டிப்பட்டி பகுதிகளுக்குச் செல்லும்போது இருப்புப் பாதையைக் கடந்து செல்கின்றனர். இதனால் விபத்துக்கள், காலதாமதம், அதிகாரிகளின் தொல்லைகளுக்குப் பெரும் அவதிக்கு உள்ளாகிறார்கள். எனவே இருப்புப் பாதைக்குக் கீழ் சுரங்கப் பாதை அமைத்து பொது மக்கள் பயன் அடைகின்ற வகையில் அதை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். போடிநாயக்கன்பட்டி, திருவாக்குண்டம் போன்ற இடங்களில் தாய்சேய் நல விடுதி ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சூரமங்கலம் பகுதியில் உலக வங்கி உதவியுடன் ஓவர் டாங்க் கட்டப்பட்டு வருகிறது. அதைக் கட்டி முடிக்க இன்னும் 6 மாத காலம் ஆகும் என்று நினைக்கின்றேன். இருப்பினும் ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிந்த பிறகுதான் இந்தப் பகுதி மக்களின் குடிநீர் திட்டம் முடிவு பெறும். இந்தத் திட்டம் முடிவு பெற குறைந்தது 5 ஆண்டுகள் ஆகும். ஆகவே, சூரமங்கலம் பகுதிக்கு அருகில் உள்ள டால்மியா மேக்னசைட் பகுதியிலிருந்து ஒரு பெரிய கிணறு வெட்டி அதிலிருந்து குடிநீரை இந்த மேல் நிலைத் தொட்டிக்கு கொண்டு சென்று இந்தப் பகுதி குடிநீர் தட்டுப் பாட்டைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக எனது வீரபாண்டித் தொகுதியைப் பின்தங்கிய தொகுதியாக அறிவித்து, எனது தொகுதியில் ஆட்டையாம் பட்டி, நைனாம்பட்டி, மருளையாம்பாளையம், வேலநத்தம்

கைபுதூர், வேம்படிதானம், பெருமா கவுண்டம்பட்டி, இளப்பிள்ளை, சீரகபாடி, முருங்கப்பட்டி, ஏல்நாய்க்கன்பட்டி போன்ற பகுதிகளில் நெசவாளர்கள் 100 சதவீதம் வாழ்கின்றனர். இவர்களின் நீண்ட கால கோரிக்கையான ஒரு கூட்டுறவு நூற்பாலையைத் தொடங்கி வைத்து அவர்களின் வாட்டத்தைப் போக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சி, நகராட்சிகள் நிர்வாகம், மாநகராட்சிகள் போன்ற மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்பினை உருவாக்கித் தந்து இருக்கிறார்கள்.

நம்முடைய உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரம் தருவதாக தேர்தல் நேரத்தில் நீங்கள் வாக்குறுதி தந்து இருக்கிறீர்கள். கடந்த காலத்தில் நகராட்சிகளிடமிருந்தும், ஊராட்சிகளிடமிருந்தும், பஞ்சாயத்துகளிடமிருந்தும், பறிக்கின்ற அதிகாரத்தை திரும்பக் கொடுப்பது மட்டும் அல்ல, மேலும் மக்களுக்குக்காக பணியாற்றுவதற்காக அதிக அதிகாரங்களும், நிதி ஆதாரங்களும் வழங்கப்படும், மாநில சுயாட்சி கோருகிற எங்களால் தான் உள்ளாட்சிக்கு தன்னாட்சி தர முடியும் என்ற நிலையை நீங்கள் அன்றைக்கு கோடிட்டுக் காட்டியிருக்கிறீர்கள்.

இப்போது ஆரம்பக் கல்வி முறை மீண்டும் உள்ளாட்சித் துறைக்கு கொடுக்கப்படும் என்று நீங்கள் சொன்னீர்கள், ஆனால் கொடுக்கவில்லை. விவசாய துறை முழுமையாக ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படும் என்று சொன்னீர்கள், ஆனால் கொடுக்கவில்லை. பொதுச் சுகாதாரம் முழுமையாக ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படும் என்று சொன்னீர்கள், ஆனால் கொடுக்கவில்லை. கால் நடை துறை மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கப்படும் என்று சொன்னீர்கள், ஆனால் ஒப்படைக்கப்படவில்லை. ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்களிடமிருந்து அதிகாரங்களை நீங்கள் பறித்து இருக்கிறீர்கள். என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி., அதே போல் ஐ.ஆர்.டி.பி. கடன் திட்டத்தில் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் அதிலே தலைவர்களாகப் பொறுப்பு ஏற்று பணிகளை ஆற்றிக் கொண்டு இருந்தார்கள், அதை நீங்கள் பறித்து இருக்கிறீர்களே தவிர அவர்களுக்கு அதிகாரங்களை நீங்கள் வழங்கவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.



குறிப்பாக திட்டப் பணிகளைச் செய்வதற்காக ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு அங்கே அதிகாரம் இல்லை. புரட்சித் தலைவர் ஆட்சியில் திட்டப் பணிகளைச் செய்வதற்கும், ஐ.ஆர்.டி.பி. கடன் வழங்குகின்ற நேரத்தில் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் அதிலே இடம் பெற்று இருக்கிறார்கள். அந்த நிலையைக் கூட நீங்கள் இன்றைக்கு மாற்றி அமைத்து இருக்கிறீர்கள். ஊராட்சி ஒன்றியங்களுக்கு பகுதி நேர எழுத்தர்கள் வேண்டும் என்று ஊராட்சி மன்றங்களில் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் இன்றைக்கு மக்கள் நலப் பணியாளர்களை நியமித்துக் கொண்டு இருக்கிறீர்கள். இந்த மக்கள் நலப் பணியாளர்கள் எதற்கு என்று சொன்னால் அதிக அதிகாரம் தருகின்ற, தன்னாட்சி தருகின்ற ஊராட்சி ஒன்றியங்களாக, ஊராட்சி மன்றங்களாக இருக்க வேண்டும் என்று நீங்கள் கோடிட்டுக் காட்டுகிறீர்களே தவிர, ஊராட்சி மன்றத் தலைவர்களைக் கண்காணிப்பதற்காகத்தான் இந்த மக்கள் நலப் பணியாளர்கள் என்று நியமித்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களை அங்கே இடம் பெறச் செய்து இருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். குறிப்பாக இதைச் சொல்லுகிற போது 400 ரூபாய் அவர்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஊராட்சி மன்றங்களில் இருக்கிற துப்புரவுப் பணியாளர்களுக்கு மாதத்திற்கு 100 ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. ஒரு நாளைக்கு 3 ரூபாய் பெற்று 100 ரூபாய் சம்பளத்திலே அவர்கள் பணியாற்ற வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்தித் தந்திருக்கலாம். பகுதி நேரப் பணியாளர்கள் அங்கே இருக்கிறார்கள். அந்தப் பகுதி நேரப் பணியாளர்களுக்கெல்லாம் 35 ரூபாய் 40 ரூபாய்க்கு அவர்கள் வேலையில் இருக்கிற காரணத்தினாலே 4 ஊராட்சி மன்றங்களைப் பார்வையிடுகிற கிளார்க்குகளாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிற ஒரு அவல நிலை இருக்கிறது. ஆகவே, நிரந்தரப் பணியாளர்களை அங்கே நியமித்தால் அந்த ஊராட்சி மன்றங்களுடைய வரிப் பணத்தை வசூல் செய்யவும் ஊராட்சி மன்றங்களிலே போடுகின்ற பல்வேறு வரிகளை, வீட்டு வரியாக இருந்தாலும், குடிநீர் திட்ட வரியாக இருந்தாலும் அதை அவர்கள் வசூல் செய்வதற்கு நிரந்தரப் பணியாளர்களாக அவர்களை நியமிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

18-50 மணி

மக்கள் நலப் பணியாளர்கள் என்ற நிலையில் நீங்கள் இன்னை திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த நண்பர்களைப் போடுகிறபோது, ஊராட்சிமன்றத் தலைவர்க க்கு அவர்கள

தன்னாட்சியாக இயங்க முடியாத ஒரு நிலையை நீங்கள் உருவாக்கி இருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்திலே மீண்டும் ஒரு முறை சுட்டிக்காட்ட நான் கடமைப் பட்டிருக்கிறேன். அதைப் போலத் தான்ஊராட்சி மன்றங்களுக்கு நீங்கள் பல அதிகாரங்களைத் தருவதாக கோடிட்டு காட்டியிருக்கிறீர்கள். இருண்ட ஆட்சி 12 ஆண்டுக் காலம் நடைபெற்றது என்று குற்றம் சாட்டி பல நண்பர்கள் இங்கே பேசினார்கள்.

அப்படிச் சொல்கிற போது 12 ஆண்டுக் காலத்திலே அந்த ஆட்சி இருண்ட ஆட்சியாக நடைபெற்றது என்பதை கோடிட்டு காட்டினார்கள். புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலேதான் தன்னிறைவுத் திட்டம் என்கின்ற திட்டத்தை கொண்டு வருகின்றபோது 376 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஏறத்தாழ அவர்கள் தந்த நிதி 186 கோடி ரூபாய். அதை மூன்று ஆண்டுக்காலங்களில் திட்டப் பணிகளுக்காக அவர்கள் செலவு செய்து உள்ளார்கள். அதைப் போல 98 நகராட்சிகளுக்கு ஏறத்தாழ நகராட்சிக்கு 25 இலட்சம் ரூபாய் செலவில் 24 கோடியே 50 இலட்சம் ரூபாயை செலவு செய்திருக்கிறார் என்பதை இங்கே குறிப்பிட்டுக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்றைக்கு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு காட்டுகிற போது 22 கோடி ரூபாய் இந்த ஆண்டு நாங்கள் செலவு செய்கிறோம் என்று சொல்லி பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக என்று நீங்கள் கோடிட்டுக் காட்டுகிறபோது ஏறத்தாழ 200 கோடி ரூபாய்க்கு மேலே 3 ஆண்டுக்கால ஆட்சியிலே அன்றைக்குச் செய்து காட்டியிருக்கிறார்கள். பாதை வசதிகளைச் செய்திருக்கிறார்கள். பள்ளிக் கட்டிடங்களைக் கட்டித் தந்திருக்கிறார்கள். சமூகக் கூடங்களைக் கட்டித் தந்திருக்கிறார்கள். குடிநீர் வசதிகளைச் செய்து தந்திருக்கிறார்கள். கிராமப் புறங்களிலே கிராம ராஜ்யம் வளர வேண்டுமென்று அண்ணல் காந்தியடிகளும், பேரறிஞர் அண்ணா அவர்களும் கண்ட கனவுகளை நிறைவேற்றித் தந்தவர் புரட்சித் தலைவர் என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்றைக்கு நீங்கள் 22 கோடி ரூபாயை செலவு செய்து விட்டு நாங்கள் எத்தனையோ செய்கிறோம் கிராமப்புறங்களிலே இருக்கிற மக்களுக்காக; பல்வேறு வசதிகளை நாங்கள் செய்ய இருக்கிறோம் என்று நீங்கள் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். அந்த 22 கோடி ரூபாயில் 10 கோடி ரூபாய் பாதை வசதிகளுக்காகவும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் நீங்கள் செய்கிறீர்கள் என்று சொன்னால் ..........

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாலே, திட்டப்பணி என்று சொலலி 00 சொச்சம் கோடி ரூபாய் செலவு செய்ததாகச் சொன்னார் ள். அந்த 200 சொச்சம் கோடி ரூபாயையும் இன்றைக்கு



வரையில் கடனாகப் பிடித்துக்கொண்டு, மேற்கொண்டு திட்டப் பணிகள் செய்ய முடியாத அளவிற்கு, அங்கே வேலை செய்பவர்களுக்குக் கூட சம்பளம் கொடுக்க முடியாத அளவிற்கு ஊராட்சி ஒன்றியங்களுடைய நிலை இப்போது இருந்து கொண்டிருக்கிறது. அந்த 200 சொச்சம் கோடி ரூபாயும் ஓராண்டு இரண்டாண்டு அல்ல இன்றைக்கு வரை செலவு செய்த தொகையாகத் தான் கொள்ளவேண்டுமே தவிர ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்கான திட்டப்பணிக்காக அல்ல என்பதையும் இன்று வரையில் ஒவ்வொரு ஒன்றியமும் கடனில்தான் இருந்து கொண்டிருக்கின்றது. சம்பளத்திற்குக்கூட பணம் இல்லாமல் இருந்து கொண்டு இருக்கின்றது. அரசாங்க கஜானா மட்டுமல்ல, உள்ளாட்சித் துறை கஜானா கூட காலியாக இருக்கிறது.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுக் காட்டுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். 1982-வது ஆண்டு, 83-வது ஆண்டு, 84-வது ஆண்டுகளுக்குத் தான் தன்னிறைவுத் திட்டத்திலே அரசாங்கத்தினால் கொடுக்கப் பட்ட பணம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைக்கு வரையில் ஊராட்சி ஒன்றியத்திலேயிருந்து அந்தப் பணம் ஒரு ரூபாய் கூட பெறப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் அறிந்தோ அல்லது அறியாமலோ தவறான ஒரு கருத்தை இந்த அவைக்குச் சொல்கிறார்கள். தன்னிறைவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒன்றியத்திலே இருந்த பணமும் எடுக்கப்பட்டது. அப்படிப் பணம் இல்லாத ஒன்றியங்களுக்கு அரசாங்கமே பணத்தை வட்டிக்குக் கடனாகக் கொடுத்து, எங்களுடைய தொகுதியிலேகூட துரிஞ்சாபுரம் ஒன்றியத்திலே இன்று வரையில் அந்தக் கடன் பிடிக்கப்படுகிறது என்பதை உங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 80 சதவீதம் தன்னிறைவுத் திட்டத்திலே முழுமையாக மானியத்தையும் 20 சதவீதம் கடனும் அவர்கள் கொடுத்தார்கள். ஆனால் அந்த 20 சதவீதத்தைக் கூட கட்ட முடியாத ஒன்றியங்களுக்கு கடனாகத் தந்தார்கள். இருந்தாலும் கூட இன்றைக்கு நீங்கள் போட்டிருக்கிற திட்டம் 22 கோடி ரூபாய்க்குத்தான். அதை நீங்கள் மறுக்க முடியாது. 22 கோடி ரூபாய் என்று சொன்னால் ஏறத்தாழ 200 கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் நீங்கள் ஆட்சிப் பொறுப்பிலே 10 ஆண்டுக் காலத்திற்கு இருந்து பணியாற்ற வேண்டும். அது முடியுமா என்பதை நான் இந்த நேரத்திலே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

18-55 மணி

முடியும் என்றால் தேர்தலைச் சந்திப்போம். அப்போது பார்த்துக் கொள்ளலாம். இருந்தாலும் நீங்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். மின்சார வசதி என்று எடுத்துக் கொண்டால், 2 ஆண்டுக் காலமாக நகராட்சிகளும், ஊராட்சி மன்றங்களும் மின்சாரத் துறைக்கு அனுமதி கேட்டு, பல்வேறு இடங்களில் தெரு விளக்குகள் அமைக்கப்படவில்லை. இரண்டு ஆண்டுக்கு முன்பே பணம் கட்டி, அனுமதி பெற்றும், மின்சாரத் துறையால் மின்சார விளக்குப் பொருத்தப் படவில்லை. அந்தப் பகுதிகள் எல்லாம் இருள் சூழ்ந்து கிடக்கின்றன.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி** : துணைத் தலைவர் அவர்களே, 1977-ல் இருந்து பணம் கட்டி அனுமதி கேட்கப்பட்ட மனுக்கள் பரிசீலிக்கப்படாமல் இருந்தன. அவை எல்லாம் இப்போது பரிசீலிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. செங்கோட்டையன்** : அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவது, இன்னமும் பரிசீலித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள், முடிக்கவில்லை என்று. இரண்டு ஆண்டுகளாக முடிக்கவில்லை என்று தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, படிப்படியாக பரிசீலித்து முடிக்கப்பட்டு, தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு அது பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டு வருகிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. செங்கோட்டையன்** : மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டுக் காட்டுகிற போது, 1987-ல் எவ்வளவு விண்ணப்பம் தேங்கிக் கிடந்தன? எவ்வளவு மின்சாரம் வழங்கினார்கள் என்பதை நீங்கள் பேசுகிறபோது குறிப்பிட்டுக் காட்டவேண்டும். அதற்குப் பிறகு எவ்வளவு புதிய மின் விளக்குகள் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் சுட்டிக் காட்டினால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி** : மாண்புமிகு துணைத் தவைர் அவர்களே, தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவ்வளவு தேங்கி இருக்கிறது என்று சொன்னால், அதை நான் பிறகு தெரிவிக்கிறேன்.

**திரு. கே. ஏ. செங்கோட்டையன்** : சுமாராக 1½ லட்சத்திற்கு மேற்பட்ட புதிய விளக்குகள் அங்கே அமைக்கப்படவில்லை என்று, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பேசும்போது கூடச் சொன்னார்கள். பெரியார் மாவட்டத்தில் மட்டும் ஒரு புள்ளி



விவரம் தந்தார்கள். 810 புதிய விளக்குகள் அமைக்க வேண்டுமென்று மின்சாரத் துறையிடம் கேட்டோம். ஆனால் 10 சதவீதம் கூட செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு கூட அரசிடமிருந்து ஒரு உத்தரவு வந்தது. எப்படியென்றால் நகராட்சிகள், உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி ஆதாரங்கள் இருந்தால் அந்த உள்ளாட்சி மன்றங்கள், நகராட்சிகள் அமைத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு வந்தது. அதற்குப் பிறகு ஒரு வாரம் கழித்து, அதாவது 2, 3 நாட்களுக்கு முன்பு அதையும் நீங்கள் அமைக்கக் கூடாது என்று போடி போன்ற நகராட்சிகளுக்கு உத்தரவு வந்தது. 72 புதிய விளக்குகள் வாங்கி அங்கே அமைக்கலாம் என்று கருதியபோது, ஏற்கனவே மின்சார விளக்குகள் அமைக்கக்கூடாது என்று மின்சாரத் துறையிலிருந்து வந்து இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே போல, பேரூராட்சிகள், ஊராட்சி மன்றங்களில் நிதி இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். பேரூராட்சிகளில் நிதி ஆதாரம் இல்லாத நேரத்தில் பேரூராட்சிகளை நடத்த முடியாத நிலை இருக்கிறது. ஒரு பேரூராட்சியின்கீழ் 15, 20, 30 கிராமங்கள் இருக்கிறபோது, பேரூராட்சியால் பல்வேறு பணிகளைச் செய்ய முடியவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதே போல, ஊராட்சி ஒன்றியங்களில் ஜீப் இருக்கிறதே, அந்த வாகனங்கள் ஓடவில்லை. 10, 20 ஆண்டுக் காலமாக அவை ''கண்டம்'' செய்யப்படாமல் பஞ்சாயத்து ஒன்றியங்களிலேயே இருக்கின்றன. அரசு ஊழியர்களோ, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களோ அங்கே செல்கிறபோது அந்த.......................

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து 1 வருடம் 4 மாதம்தான் ஆகிறது.

**திரு. கே. ஏ. செங்கோட்டையன்** : 1 வருடம் 4 மாதமானாலும் கூட, 2, 3 மாதத்திற்கு முன்பு ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் எல்லாம் உங்களிடம் சொல்லியிருக்கிறார்கள். அதை ''கண்டம்'' செய்து விட்டு பெட்ரோலில் ஓடுகிற காரணத்தால் அதிகமான செலவாகிறது, அவற்றை டீசலில் ஓடும் வண்டிகளாக மாற்ற வேண்டுமென்று நிலைமைகளைச் சொல்லி இருக்கிறார்கள். நீங்கள் வந்து 1 ஆண்டு காலம் தான் ஆகிறது என்று சொல்லி தட்டிக் கழிக்க முடியாது.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி** : அவர்கள் ஆட்சிக் காலத்தில் இருந்து பழுதாகக் கிடந்து, அவைகளைப் பராமரிக்க செலவு அதிகமாக இருக்கிற அத்தனை ஜீப்புகளையும் இன்றைய தினம் ஊராட்சி ஒன்றியங்களின் சார்பாக வாங்கிக் கொள்கிற அனுமதியை இன்றைக்கு இந்த அரசு வழங்கியிருக்கிறது.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : நீங்கள் பின்னாலே பேச இருக்கிறபோது செய்கிற அறிவிப்பை முன்னாலே நான் எப்படி அறிய முடியும்? அன்றைக்குச் சொன்னீர்கள், 75 சதவீத தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றி விட்டோம் என்று சொன்னீர்கள். சொல்லவில்லை என்று கூற முடியாது. 6 மாதத்திற்கு முன்பு சொல்லியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் இவை பயன்படுத்திய ஜீப்கள் பழுது அடைந்திருந்தால், அவைகளைக் ''கண்டம்'' செய்வதாக இருந்தால் அரசுக்கு வந்து அனுமதி பெற்றுத்தான் பிறகு அவர்கள் ஏலம் விட முடியும். அப்படி ஒரு நிலை இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன், ''கண்டம்'' செய்யக் கூடிய அளவுக்கு வண்டிகள் இருந்தால் மாவட்ட ஆர்.டி.ஓ.விடம் சான்றிதழ் பெற்று ஏலத்திற்கு விட்டுவிட்டு புதிதாக வாங்கிக் கொள்ளலாம், நிதி ஆதாரமுள்ள ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் வாங்கிக் கொள்ளலாம் என்று ஏற்கெனவே உத்திரவிட்டிருக்கிறது இந்த அரசு.

19-00 மணி

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது ஜீப் கண்டம் ஆகிவிட்டால் கண்டம் சர்டிபிகேட் வாங்கி விட்டுத்தான் நிதியாதாரம் இருக்குமேயானால் புதியதாக ஊராட்சி ஒன்றியங்களில் ஜீப் வாங்கிக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் எத்தனை ஊராட்சி ஒன்றியங்களில் நிதியாதாரங்கள் இல்லை. அதற்கு அரசு என்ன திட்டங்களை வைத்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் கேட்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு எல்லாம் அதிக அதிகாரம் தந்திருக்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால் ஊராட்சி ஒன்றியத்திலே போடப்படுகிற தீர்மானங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அனுமதியைப் பெற வேண்டும். அவ்வாறு அனுமதி பெற்ற பிறகு எந்தெந்தப் பணிகளை எடுத்துக் கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உத்திரவு வழங்க வேண்டும். அதற்குப் பிறகு, மூன்று மாத காலத்திற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே இருந்து ஊராட்சி ஒன்றியத்திற்கு வரும். அப்படி ஊராட்சி ஒன்றியத்திற்கு வருகிறபோது ஊராட்சி ஒன்றியத்தில் அவர்கள் மதிப்பீடுகள் தயாரிக்க வேண்டும். அப்படி மதிப்பீடுகள் தயாரித்ததற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெற வேண்டும். அனுமதி பெற்றதற்குப் பிறகு இரண்டு மூன்று மாதங்கள் ஆகும். அதற்குப் பிறகு டெண்டர் விட வேண்டும். டெண்டர் விட்ட பிறகு பணிகளைத் துவங்க வேண்டும் என்றால் ஏறத்தாழ ஓராண்டு காலம் ஆகும். இதற்கு



முன்னால் இருந்த ஆட்சிக் காலங்களில் தீர்மானம் நிறைவேற்றுகிறபோதே எந்தெந்தப் பணிகளை நாம் எடுத்துக் கொள்ளலாம் என்பதை அவர்கள் கருத்தில் கொண்டு மதிப்பீடுகள் தயாரிக்கிறபோதே எந்தெந்தத் திட்டப் பணிகளை அவர்கள் செய்யலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அன்றைக்கே அங்கீகாரம் வழங்கினார்கள். அதைப் போல வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் பற்றி உங்களுக்குத் தெரியும் அதிலே ஓர்க் ஆர்டர் கொடுக்கிறார்கள். அந்த ஓர்க் ஆர்டர் கொடுக்கிறபோது ஊராட்சி மன்றத் தலைவருக்கு எத்தனையோ சிக்கல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் அந்தப் பணிகளைச் செய்கிற போது அதிலே பல்வேறு தடைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் மனித சக்தியை வைத்துக் கொண்டு பணிகளைச் செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்கள். குளங்கள், ஏரிகளுக்குத் தூர் எடுக்க வேண்டும் என்று சொன்னால் அவற்றுக்கு 30,000 ரூபாய் 40,000 ரூபாய் என்று செலவழிக்கிறபோது, மனித சக்தியை வைத்துக் கொண்டு அவர்கள் செய்கிறபோது அதில் ஓரளவுக்குத் தான் தூர் எடுக்க முடிகிறதே தவிர முழுவதும் செய்ய முடியவில்லை. எனவே இதிலே பல்வேறு குறைபாடுகள் இருக்கின்ற காரணத்தால் மதிப்பீடு தயாரித்து டெண்டர் விடப்பட்டு, பணிகளைச் செய்கிற போதுதான் அவை சிறப்பாக இருக்கும் என்று நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து அங்கே இருந்து கோதுமை, அரிசி என்று வழங்கப் படுகிறது. அந்த அரிசியையும், கோதுமையையும், அங்கே மனித சக்தியாக இயங்கிக் கொண்டு இருக்கிற அந்தப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அவற்றை அவர்கள் அப்படியே லம்ப் ஆக வேறு இடங்களில் விற்றுவிடுகிற நிலைமை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒத்துக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே அந்தத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு..............

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது இந்த ஆண்டுதானா, அல்லது கடந்த காலத்திலும் இந்தப் பழக்கம் இருந்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் இன்று மட்டும் அல்ல. இதற்கு முன்பும் இருந்து கொண்டிருக்கிறது. எனவே குறைகளைத் தவிர்க்க வேண்டும் என்று தான் சொல்கிறேனே தவிர எங்கள் ஆட்சியில், உங்கள் ஆட்சியில் என்று நான் சொல்லவில்லை. எல்லா ஆட்சியிலும் இருக்கிறது. நீங்கள்

ஓராண்டுக் காலத்தில் 75 சதவீத வாக்குறுதிகளைச் செய்து முடித்து விட்டோம் என்று சொல்கிற காரணத்தால்தான் நான் இதைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதைத் தான் நான் சுட்டிக் காட்டுகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது மத்திய அரசின் வழி காட்டுதல் பேரில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் என்பதன் கீழ் நடைபெறக் கூடிய காரணத்தால் தான் அந்த முறை இருக்கிறது. மாநில அரசு திட்டமிட்டுச் செய்வதாக இருந்தால் இந்தக் குறையை இந்த அரசு உடனே களைந்திருக்கும்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலும் அவர்கள் கூட்டாட்சித்தான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் (குறுக்கீடு). மன்னிக்க வேண்டும். மத்தியிலே கூட்டாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இங்கேயும் கூட்டாட்சி வந்தாலும் வரலாம். சொல்ல முடியாது. ஜனதாவிலே இருப்பவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். வலியுறுத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் வந்தாலும் வரலாம். மத்தியிலே இப்போது கூட்டாட்சி நடத்துகிற நேரத்தில் மாநிலத்தில் சுயாட்சி கேட்டுக்கொண்டு இருக்கிறீர்கள். எனவே அந்த அடிப்படையிலே நீங்கள் அதை நிறைவேற்றித் தரலாம்.

இன்றைக்குப் பல்வேறு குறைபாடுகள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டுகிறபோது உங்கள் ஆட்சிக் காலத்தில் என்ன செய்தீர்கள் என்று கேட்கக் கூடாது. அமைச்சர் அவர்கள் அங்கே அமர்ந்து கொண்டு அந்தப் பணிகளில் இருக்கின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்கிறோம் என்று சொல்வதைத் தவிர உங்கள் ஆட்சியில் என்ன செய்தீர்கள் என்று அங்கே இருந்து கொண்டு கேட்பது சரியல்ல. அதற்கு நீங்கள் அங்கே இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே குற்றங்கள் சொல்கிற போது.......... ..

மாண்புமிகு திரு. கோ.சி. மணி : இல்லை. அதைத்தெரிந்து கொண்டு புரிந்துகொள்வதற்காகத்தான் கேட்டேன். வேறு ஒன்றும் இல்லை.

திரு. கே ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைச் சுட்டிக் காட்டுகிறபோது அதை நீங்கள் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல்தான் சென்னை மாநகராட்சி பற்றி இங்கே நீங்கள் குறிப்பிட்டுக் காட்டினீர்கள். அன்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் இங்கே குறிப்பிட்டார்கள். குப்பைகளைக் கூட இங்கே அகற்ற முடியவில்லை. 2,000, டன் 3,000 டன் என்று குப்பைகள் தேங்கிக் கிடக்கின்றன நாள்தோறும் என்று சொல்கிறார்கள். அந்த அளவுக்குப் பணிகளை வேகமாக நீங்கள் செய்யவில்லை



என்று திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களேகூட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போல் குற்றம் சொன்னார்கள். அவர்கள் இப்படி பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். குடிநீர் வசதி இல்லை. பாதை வசதி இல்லை. குப்பைகளை அகற்ற முடியவில்லை, அந்தத் துப்புரவுப் பணிகல் எல்லாம் சரியாகச் செய்யப் படவில்லை என்றெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் ........

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, குப்பைகள் எல்லாம் அகற்றப்படவில்லை என்று குற்றம் சொன்னதாகச் சொன்னார். புதிதாக பொறுப்பேற்றுள்ள நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு சென்னை எந்தச் அளவுக்குச் சீர்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத்தான் சொன்னார்கள். ஏற்கெனவே மலைபோல் தேங்கி இருந்த குப்பைகளைப் பார்த்தபோதெல்லாம், அன்றைக்கு அந்தக் காட்சியைப் பார்த்தபோதெல்லாம் அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த திரு. காளிமுத்து அவர்களுடைய முகம்தான் எங்களுக்கெல்லாம் தெரிந்தது. ஆனால் அந்தக் குப்பைகள் எல்லாம் அகற்றப்பட்டு சீராக இருக்கிறபோது அண்ணன் திரு. கோ. சி. மணி அவர்களுடைய மகிழ்ச்சியான முகம் எங்களுக்குத் தெரிகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

19-05 மணி

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : சொல்வதற்கு நன்றாகத்தான் இருக்கும். நீங்கள் பேசுகிற பேச்சை, சட்டமன்றத்திலே பேசிய பேச்சை எடுத்துப் பார்த்தால் தெரியும். ஒரு நாளைக்கு 50 சதவிகிதம் குப்பைகளை அகற்ற முடியவில்லை என்ற நிலையை நீங்கள் சொன்னீர்கள். இல்லையென்று சொல்ல முடியாது. அப்படி நீங்கள் சொல்கிறபோது, அந்தப் பணியினை நீங்கள் செவ்வனே செய்ய முடியாத ஒரு சூழ்நிலை உங்களிடத்திலே இருக்கிறது, குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நீங்கள் ஒத்துக் கொண்டாகத்தான் வேண்டும். அதைப் போலத்தான் நீங்கள் சொன்னீர்கள், மாநகராட்சித் தேர்தலை செப்டம்பர் மாதத்திலே நடத்தியே தீருவோம் என்று சொன்னீர்கள். நடத்தப் போவதில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சவாலாகச் சொல்கிறேன். என்ன காரணம் என்று சொன்னால், இங்கே இருக்கிற மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், அதைப்போல மாண்புமிகு திரு. இரகுமான்கான் அவர்களும் முன்பு, இதைப்பற்றி குறிப்பிடும்போது பல நேரங்களிலே சொன்னார்கள். சென்னை மாநகராட்சி தேர்தலை உங்களால் நடத்த முடியாது ; அத்தைக்கு மீசை முளைத்தாலும் முளைக்குமே தவிர, மாநகராட்சிக்குத் தேர்தலை உங்களால் நடத்த

முடியாது; அதைப்போல, கிழக்கிலே உதிக்கின்ற சூரியன் மேற்கிலே உதித்தாலும் உதிக்குமே தவிர, நீங்கள் மாநகராட்சித் தேர்தலை நடத்த முடியாது என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு எங்களிடத்தில் பேசுகிறபோது, குறிப்பிட்டுக் காட்டுகிறீர்கள். குறிப்பிட்டுக் காட்டுகிறபோது ......

திரு. இளம்வழுதி : பாயிண்ட் ஆப் ஆர்டர்: கடந்த காலங்களிலே சென்னை மாநகராட்சிக்கு எத்தனை முறை தேர்தல் நடத்தி இருக்கிறீர்கள் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்கு நடத்தவில்லை. மதுரை மாநகராட்சிக்கு நாங்கள் தேர்தலை நடத்தினோம். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், மே மாதத்திலே நீங்கள் தேர்தல் நடத்துவதாகச் சொன்னீர்கள். மே மாதத்திற்குப் பிறகு இடைத் தேர்தல் வந்தது. இடைத் தேர்தலை சந்தித்த நீங்கள், அதற்குப் பிறகு—மருங்காபுரி தேர்தலுக்குப் பிறகு, மாநகராட்சி தேர்தலைச் சந்திக்கத் தயங்கினீர்கள், இல்லை என்று உங்களால் மறுக்க முடியாது. நான் இன்றைக்கு அமைச்சர் அவர்களைப் பார்த்து சொல்கிறேன் : செப்டம்பர் மாதம் தேர்தலை உங்களால் நடத்த முடியாது என்ற சவாலை நான் விடுகிறேன். ஏனென்றால், நீங்கள் இப்போது சொன்னீர்கள் ; வட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்று. அப்படிச் சொல்கிறபோது, வட்டங்களைப் பிரிப்பதற்கு காலதாமதம் ஆகுமென்று நீங்கள் சொல்லக் கூடும். அதற்காகத்தான் வட்டங்களைப் பிரிக்கவேண்டும் ; 46 அல்லது 20 ஆயிரம் பேர் ......

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள், சென்னை மாநகராட்சி தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்கிறாரா ? அல்லது நடத்தக்கூடாது என்று எங்களிடத்திலே இந்தச் சவாலை விடுகிறாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, போன ஆண்டிலேயே நடத்துவதாக நீங்கள் சொன்னீர்கள். ஆனால், வாக்குறுதி தவறி விட்டது. செப்டம்பர் மாதத்திலே நடத்தப்போவதாகச் சொல்கிறீர்கள் அதையும் நடத்த முடியுமா என்பதைத்தான் நான் கேட்கிறேன். நடத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. நீங்கள் அதை நடத்த வேண்டும் என்பதற்காகத்தான் நான் சிலகருத்துக்களை இங்கே சுட்டிக் காட்டினேன். வட்டங்களைப் பிரிக்க வேண்டும் அதே போல ....



மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 13 ஆண்டுக்காலம் பொறுத்திருந்த நீங்கள், இந்த செப்டம்பர் 30ஆம் தேதி வரை தயவு செய்து பொறுத்திருங்கள். அதற்குப் பிறகு பேசிக் கொள்ளலாம்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : நீங்கள்தான் அன்றைக்குச் சொன்னீர்கள் ; நாங்கள் வந்தால் ஒரே ஒரு ஆண்டுக் காலத்தில் தேர்தல் நடத்துவோம் ; 75 சதவிகிதம் வாக்குறுதிகளை நாங்கள் நிறைவேற்றி கொண்டிருக்கிறோம் என்று. அதனால் தான் நாங்கள் சொல்கிறோம். மாநகராட்சித் தேர்தலை நடத்துகிறபோது, அடையாள அட்டை தந்தாக வேண்டும் ; யார் அந்த வாக்காளர் என்பதை அடையாளம் காட்டுகிறபோதுதான், வாக்காளர் கள்ள ஓட்டு போடுவதைத் தடுக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். இதை நீங்கள் தர வேண்டும். ஏனென்று சொன்னால், அடையாள அட்டை இல்லையென்று சொன்னால், யார் வேண்டுமானாலும் இன்றைக்கு நீங்கள் பழனியிலே ஓட்டு போட்டதைப் போல (குறுக்கீடு) .... ஆகவே, இதுபோன்ற நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதைப்போல தான், மதுராந்தகத்தில் ......

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இன்றைக்கு, பழனியிலே போட்டதைப் போல என்று சொன்னார் ; உங்களுடைய தோழமைக் கட்சி காங்கிரஸ் அங்கே ஜெயித்தது. ஆகவே, அப்படி போட்டுத்தான் ஜெயித்தீர்களா ? (சிரிப்பு)

திரு.கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழனி வாக்காளர்களைச் சந்தித்துக் கேட்டால் சொல்வார்கள். நீங்கள் எப்படி வாக்குகளைப் போட்டீர்கள் ; எத்தனை பூத்துக்களை கேப்சர் செய்தீர்கள் என்பதையெல்லாம் அங்கே போய் மக்களிடத்திலே கேட்கிறபோதுதான் தெரியும். 65, 70 வாக்குச் சாவடிகளை—பூத்துகளை நீங்கள் கேப்சர் செய்து, வாக்குகளைப் போடுவதற்கு இல்லாமல், அதிகாரிகளை வைத்து, அதிகார பலனை வைத்து, நீங்கள் அன்றைக்குச் செய்த அந்தக் குற்றச்சாட்டு, மக்களிடத்திலே கேட்டால்தான் தெரியும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதே போல .... (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்ள ஓட்டு போட்டதாகச் சொல்வது தவறு ; எதையும் ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை அமைச்சர் அவர்கள், தனது பதிலுரையில் தெரிவித்துக் கொள்வார்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, புதிய ஓட்டு போட்டதை விட, 50 ஆயிரம் ஓட்டுகள் புதியதாகச் சேர்க்கப்பட்டு, அதற்குப் பின்னர் அது ரத்து செய்யப்பட்டது. அதை யார் பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள்? (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : சேர்த்தது அவர்களாகக் கூட இருக்கலாம்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேர்க்கின்ற அதிகாரிகள் எங்கள் கையில் இல்லை. இருந்திருந்தால், நாங்கள் சேர்த்திருப்போம். ஆனால் அதிகாரிகளை உங்கள் கையில் வைத்திருக்கிறீர்கள் (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கோ.சி. மணி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் எங்கள் பக்கம் இருந்திருப்பார்களேயானால், அதை நீக்கியிருக்க மாட்டார்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : நீக்கியது, மத்திய சர்க்காரில் இருக்கிற, எலக்ஷன் கமிஷன் ஆபீஸர். அவர் இங்கே வந்தது நாங்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் நீக்கிவிட்டார் என்பதை மறந்து விடாதீர்கள்.

*19-10 மணி.*

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிட்டுக் காட்டுகிற போது இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. குமரி அனந்தன் அவர்களுக்குத் தெரியும். இந்தப் பிரச்சினையை இத்துடன் விட்டுவிடுகிறேன். இருந்தாலும், மதுராந்தகம் நகராட்சியில் 1987-ஆம் ஆண்டிலேயே மறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரை வைக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதற்கு இன்றுவரை அனுமதி வழங்கவில்லை. 1987-ல் தீர்மானம் போட்டு, 4, 5 முறை உங்களை அணுகியபோதும் இதுநாள்வரை நீங்கள் அதற்கு அனுமதி வழங்கவில்லை. இதற்கு உடனடியாக அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, அதிக அதிகாரங்கள் தந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தீயணைப்புத் துறை, கூட்டுறவு முறையில் வீடுகள் கட்டுதல், கால்நடை மருத்துவமனை, மின்சாரம், கேஸ் விநியோகம் செய்தல், வீடுகள் கட்டுமானம் செய்தல், மக்கள் வளர்ச்சிப் பணிகளுக்குக் கடன் வழங்குதல் போன்ற



பல்வேறு திட்டங்களை அஸ்ஸாம், ஒரிசா, குஜராத், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், கர்நாடகம் போன்ற பல்வேறு மாநிலங்களிலுள்ள நகராட்சிகளுக்காக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் நிறைவேற்றி இருக்கிறீர்களா என்றால், கிடையாது. அதிக அதிகாரம் தருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அதிகாரத்தைத் தரவில்லை. நிதியும் தருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் நிதியும் தரவில்லை. ஆகவே, பல்வேறு வாக்குறுதிகளைத் தந்திருக்கிறீர்கள். இந்த ஆட்சியைப் பற்றி மக்கள் தெரிந்துகொள்வார்கள். அதுபோல, மதுரையைப் பொறுத்தவரையில், தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். பல்வேறு பணிகளை அங்கே செய்ய வேண்டுமென்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதுபோல, தலைவர், துணைத் தலைவர் பல்வேறு நகராட்சிகளில் இறந்துவிட்டபடியால் ஆறு மாத காலமாகியும் தேர்தல் நடைபெறவில்லை. அதையும் நான் மாண்புமிகு அமைச்சரிடத்தில் நேரில் கொடுக்கிறேன் காரணம் இங்கே பேசினால் நேரமாகிவிடும் என்று குறிப்பிட்டுக் காட்டி, மதுரை மாநகரில் குடிதண்ணீர் வசதி பிரச்சினை, மின்சார வசதி பிரச்சினை போன்ற பல்வேறு திட்டங்களையும் அங்கே நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி இத்துடன் முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு. திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்று சொன்னார் அண்ணல் காந்தி. ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்றார் பேரறிஞர் அண்ணா. பேரறிஞர் அண்ணாவின் அடியொட்டி சீர்மிகு ஆட்சி நடத்தும் தமிழக முதல்வர் அவர்கள் 17—3—1990 அன்று சட்டமன்றத்தில் அளித்த நிதிநிலை அறிக்கை தமிழகத்தில் ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கியிருக்கிறது என்று அனைவராலும் போற்றப்படுகிறது. குறிப்பாக, ஊரக வளர்ச்சித் துறையின் வரலாற்றில் இந்த நிதி நிலை அறிக்கை ஒரு பொன் ஏடாக அமைந்துள்ளது. கிராமங்கள் வளர்ச்சி அடையவும், கிராம மக்கள் நல்வாழ்வு பெறவும், ஊராட்சி நிறுவனங்கள் வெகு வேகத்தோடு செயல்படவும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் ஒரு கணிசமான நிதி ஒதுக்கீட்டை அறிவித்திருக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு 50 கோடி ரூபாய் வீதம், 5 ஆண்டுகளுக்கு மொத்தம் 250 கோடி ரூபாயும், சென்ற ஆண்டு முதல் இந்த ஆண்டுவரை, சென்னை மாநகராட்சிக்கு 5 ஆண்டுகளுக்கு 100 கோடி ரூபாய் என்ற முறையில் இந்த ஆண்டுக்கு 20 கோடி ரூபாயும், சிறப்பு நிதியாக சாலைப் பராமரிப்புக்காக ஒரு 10 கோடி ரூபாயும் அவர்கள் தனித்து, இந்தியாவில் எந்த மாநிலத்திலும், மாநில அரசுகள் தனித்த சிறப்பு நிதியினை அளிக்க முடியாத அளவுக்கு அளித்துள்ளதை ஏற்று, இதற்காக தமிழகத்தில் 12, 616 ஊராட்சி

19-15 மணி

களுக்கு, 684 பேரூராட்சிகளுக்கு, 384 ஊராட்சி ஒன்றியங்களுக்கு மற்றும் 106 நகராட்சிகளுக்கு சிறப்பாக அளித்ததற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகின்றேன். குறிப்பாக, இன்றைய தினம், இந்தத் துறையினுடைய கோரிக்கை குறித்த விவாதத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிச்சாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள். முடித்து வைத்த அன்பு சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் உட்பட 23 உறுப்பினர்கள் இம்மானியத்தின்மீது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்கள். இதுவரை நடைபெற்ற எந்த விவாதங்களையும் விட இன்றுதான் அதிகமான உறுப்பினர்கள் நல்லமுறையில் பங்கேற்று உரையாற்றியிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியையும், அப்படிப்பட்ட உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை ஏற்று, அதில் இருக்கும் நல்ல பணிகளை நிறைவேற்ற இந்த ஆட்சி என்றும் தயாராக இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதோடுகூட, நான் இன்றையதினம் ஏராளமாக உங்கள் மத்தியில் பேசலாம் என்று இருந்தாலும்கூட, நேரம் ஒப்புக்கொள்ளாமல் இருந்தாலும், இங்கே சொல்லப்பட்ட குறைகள், குற்றங்கள் அனைத்தையும் நான் மறந்துவிட்டாலும் கூட திட்டப் பணிகளைப் பற்றி அறிவித்தேதான் ஆக வேண்டுமென்ற முடிவுக்கு நான் வந்திருக்கிறேன். அதற்குக் காரணம், திட்டங்கள் சில ஆண்டுகளாகப் போடப்பட்டாலும், திட்டங்களுக்கு குறியீடுகள் நிர்ணயிக்கப்பட்டாலும், அவை நிறைவேற்றப்படுகிற காலக்கெடுவை வைத்துவிட்டு இடையிலே தொடர்புப் பணியை நெருங்கிப் பார்க்காத காரணத்தால் பல திட்டங்கள் நிறைவேற்றப்படாமலும், காலம் தாழ்ந்தும், சீர் கெட்டும், ஊராட்சிமன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் நகராட்சிமன்றங்கள், இவைகளிலே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லாமல் இருந்த காலத்தில் ஏற்பட்ட தொய்வினையும், அது தொடர்ந்து தற்சமயம் கொஞ்சம் கொஞ்சம் தலைகாட்டி கொண்டிருப்பதையும், தவிர்ப்பதற்காக நான் கொஞ்சம் திட்டங்களை அறிவிக்கலாம், முறைப்படுத்தப்பட்டதை அறிவிக்கலாம் என்று தெரிவித்து கொஞ்சம் பொறுத்திருந்து நீங்கள் கேட்க வேண்டுமென்று என்னுடைய பணிவான, அன்பான வேண்டுகோளை முதலிலே இங்கே வைக்கிறேன். ஊராட்சிச் சட்டங்கள் அடிப்படையில் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பணிகளை ஆய்வு செய்து, கண்காணிக்கும் பொறுப்பு இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதுமட்டுமின்றி, மக்கள் ஆட்சித் தத்துவத்தில் இயங்கும் இந்த நிறுவனங்களுக்கு உற்ற நண்பனாகவும், வழிகாட்டியாகவும் ஆலோசகனாகவும் இருந்து, நீங்கள் அனைவரும்



கிராமங்களின் அடிப்படைத் தேவையான குடிநீர் வசதி, சாலை வசதி மற்றும் போக்குவரத்து வசதி, பள்ளிக் கட்டிட வசதி பற்றி நீங்கள் கருத்துக்களைப் பேசியபோது நானும் உங்களோடு சேர்ந்து அந்தக் கருத்துக்களிலே ஈடுபட்டிருந்தேனே தவிர, தனிப்பட்ட கருத்தில் நான் நிச்சயமாக இருக்கவில்லை. கூடுமான வரையில் அப்படிப்பட்ட பணிகளை எல்லாம் திறம்படச் செய்ய வேண்டுமென்ற உணர்வோடு இந்த அரசு இருப்பதால், நீங்கள் சுட்டிக் காட்டியவைகளை எல்லாம் உறுதுணையாக ஏற்றுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்க்கட்சியிலே இருந்தாலும் சரி, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, நீங்கள் சொன்ன கருத்துக்களை அடிப்படையாக வைத்து, குற்றம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவைகளைச் சீர்திருத்தக் கொள்ள வேண்டும், செம்மையாகச் செயல்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்த மானியக் கோரிக்கை உங்கள் மத்தியிலே வைக்கப்பட்டிருக்கிறதென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும் கூட்டி, நமது முதலமைச்சரவர்கள் ஒரு மாநாடு நடத்தி, இருந்த குறைகளைக் கேட்டு, அதற்கு நிவர்த்தி செய்து, பல அதிகாரங்களைக் கொடுத்ததையும், இநத அதிகாரங்கள் கொடுத்தது போதாது என்ற அடிப்படையிலே நம்முடைய விருதுநகர் நகராட்சி மன்றத் தலைவர் குறிப்பிட்டதையும், இறுதியிலே பேசிய திரு. செங்கோட்டையன் அவர்கள் குறிப்பிட்டதையும் நானும் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். கொடுத்த பல அதிகாரங்களை விட்டுவிட்டு, ஒன்றிரண்டை நிர்வாக வசதிகளுக்காகவோ அல்லது வேறு பல காரணங்களுக்காகவோ இன்னும் கொடுக்கப்படாமல் இருப்பதைக் காட்டி, இதைச் சேர்த்தீர்களா, அதைச் சேர்த்தீர்களா, இதை விட்டீர்கள், அதை விட்டீர்கள் என்று சொன்னால், விட்டவர்களே சேர்த்தீர்களா என்று கேட்டால் நாங்கள் என்ன செய்யமுடியும்? சொல்லுங்கள். 13 வருடங்கள் ஆகிவிட்டது நீங்கள் அத்தனையும் விட்டுத் தொலைத்து நாங்கள் எடுப்பதாகச் சொல்லி 13 மாத காலமாகிறது. இந்த 13 ஆண்டுக்காலத்தில் விட்டதை எடுப்பதற்கு, ஒன்றிரண்டைக் கோடிட்டுக் காட்டும் சூழ்நிலையில் நாங்கள் அடையாளமாகக்கூட வைத்திருக்கிறோம். அவைகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறோம். வேளாண்மைத்துறை இன்றைக்கு ஒன்றியத்தில் இணைந்து பணியாற்றுகிறது. அதைப்போல கால்நடைத் துறையும் இன்றைக்கு அந்தத் துறையோடு சேர்ந்து பணியாற்றுகிறது. அதற்கு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது?

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்போது விருதுநகர் நகரமன்றத் தலைவர் ......

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி** : 23 உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் பேசியபோதுதான் 2 தடவை நான் எழுந்திருந்து கேட்டேன். அதுவரை நான் குறுக்கீடே செய்யவில்லை. எனவே என்னுடைய பேச்சை குறுக்கீடு செய்யாமல் இருந்து, 10 மணியானாலும் சரி, நான் பதிலுரை அளித்த பிறகு . . ... . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : 12 மணியானாலும் சரி . . . . (சிரிப்பு)

திரு. வி. கே. சின்னசாமி : 2 மணியானாலும் நாங்கள் தயார்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி** : மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு தெரிந்தால் நான் பதில் சொல்லுகிறேன். தெரியாவிட்டால் பிறகு தெரிந்து, இந்த அவையில் அறிவிக்கிறேன். இடையிலே குறுக்கீடு வேண்டாம். நான் பொறுத்திருந்தேன். நீங்கள் பேசுகிற நேரம் பூராவும் நான் பொறுத்திருந்தேன். என்ன செய்தீர்கள், எதைச் செய்தீர்கள், எந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வந்தீர்கள் என்று கேட்டதற்கு சற்று கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களின் பதவிக் காலத்தை மீண்டும் 5 ஆண்டுகளாக மாற்றி இருக்கிறோம். அது உண்மையா, இல்லையா? தேர்தல் தாமதமின்றி நடத்த சட்டத் திருத்தம் தற்போது செய்திருக்கிறோம், இந்த ஆட்சி வந்த பிறகு. ஊராட்சிகளில் பெண்களுக்கு அதிக இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு நீக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் அளித்திருக்கிறோம். ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கூடுதலாக அதிகாரம் வழங்கியுள்ளோம். ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு நியமன முறையில் உறுப்பினர்களைச் சேர்த்ததை நீக்கியது. இப்படி பல்வேறு திட்டங்களையும், பல்வேறு சட்டங்களையும் நாம் திருத்தியும், மாற்றியும் குறிப்பிட்ட கொஞ்ச காலத்திற்குள் செய்து முடித்திருக்கிறோம். ஒரு வல்லுனர் குழு அமைக்க வேண்டுமென்ற யோசனை வெகு நீண்ட காலமாக இருந்தது.

*19-20 மணி*

ஆனால் இந்த அரசுதான் ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம் இவைகளுக்கான நிதி நிலையை ஆராய்ந்து அவைகளினுடைய செலவினங்களைக் கணக்கிட்டு அவர்களுடைய நல்வாழ்வுக்காக ஒரு அறிக்கை தர வேண்டுமென்று மாண்புமிகு தாமோதரன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.



அதோடு கூட சாதாரணமாக ஒரு கட்டிடம் கட்டினால் அதற்குப் புகழ் பெற்றவராகவோ, வயதானவராகவோ, சிறிய வயதுடையவராகவோ இருந்தாலும், புகழ் பெற்றவருடைய பெயரை வைக்க வேண்டும் என்று நீண்ட நெடிய காலமாக இருந்து வந்த ஒரு வழக்கத்தை, உயிரோடு இருப்பவருடைய பெயரை அதற்கு வைக்கக் கூடாது என்று ஒரு சட்டம் கொண்டு வந்து அதை நிறுத்தினீர்கள். அதனாலே சில பேர் நன்கொடை கொடுத்து தன்னுடைய பெயரை வையுங்கள் என்று சொன்ன போதுகூட ஊராட்சி மன்றங்களுக்கு நட்டம் ஏற்பட்ட வரலாற்றை நீங்களும் நானும் சேர்ந்தே அனுபவித்து இருக்கிறோம். அதைக் கூட இந்த ஆட்சி வந்து தான், அதற்கு ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்து அப்படிப்பட்ட நல்ல புகழ் பெற்றவர்களுடைய பெயர்களை ஊராட்சிமன்றக் கட்டிடங்களுக்கோ, சாலைகளுக்கோ, பூங்காக்களுக்கோ, வேறு எதற்கோ வைக்கலாம் என்று ஒரு சட்டத்தை தற்போது கொண்டுவந்து நிறைவேற்றி இருக்கிறோம். நான் அந்த சட்டத் திருத்தத்திற்குள்ளே போகமால் மற்றப்படி திட்டங்களுக்கு வரலாம் என்று கருதுகிறேன்.

ஆண்டுதோறும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக பல கோடி ரூபாய் முதலீட்டில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இந்தத் திட்ட முதலீட்டில் மத்திய அரசு வழங்கும் நிதியும், மாநில அரசினால் ஒதுக்கப்படும் நிதியும் இணைந்து உள்ளது. இந்த முதலீட்டின் மூலமாக பல ஆயிரக் கணக்கான சமுதாயச் சொத்துகள் உருவாக்கப்படுகின்றன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் மூலமாக நலிந்த பிரிவினரின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. அரசு முதலீட்டின் பயன் முழுமையாக மக்களைச் சென்றடைய வேண்டும் என்பது இந்த அரசின் முக்கிய நோக்கமாகும். இதனைக் கருத்தில் கொண்டு கடந்த ஆண்டுகளைவிட திட்டங்களைச் செயல்படுத்துகின்ற தன்மையிலும், திட்டங்களை அமல்படுத்துகின்ற முறையிலும் சிறப்புத் தன்மையோடு அது இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் அதனுடைய முதலீடு எவ்வளவு இருந்தாலும், முதலீட்டுக்குத் தக்கவாறு அந்தத் திட்டங்களின் பணிகளின் தரம் இருக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு இந்த அரசு பணிகளை இந்த ஆண்டு துவங்க இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் முதலில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதோடு ஊரக வளர்ச்சித் துறை மூலமாக ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் இதர திட்டங்கள் மூலமாக வளர்ச்சிப் பணிகளுக்கு 1989–90-ல் 268 கோடி, 80 இலட்சம் ரூபாய் பயன்படுத்தப்பட

உள்ளது. இது தவிர ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்தும், ஊராட்சி நிதிகளிலிருந்தும் கணிசமான தொகை வளர்ச்சிப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட உள்ளது. அவைகள் அத்தனையையும் செய்து முடித்து, பணிகள் சிறப்புற மார்ச் 31 ஆம் தேதியோடு குறியளவை எட்டி இருக்கிறது என்பதையும் பின்னர் நேரம் இருந்தால் எந்தெந்தப் பணிகள் எவ்வளவு குறியீடு நிர்ணயிக்கப்பட்டது, எவ்வளவு முடிக்கப்பட்டது என்ற விவரத்தைக் கூட உங்கள் அனுமதியோடு நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் மத்திய அரசு 80 சதவீதம் செலவையும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 50 சதவீதச் செலவையும் ஏற்றுக் கொண்டு உள்ளது. ஊரக வளர்ச்சித் துறை மற்றத் துறைகளுக்கு முன்னோடியாக மக்களின் நலம் பேணும் துறையாக செயல்பட்டு மக்கள் துயர் தணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளது.

ஆதி திராவிடர்களுக்காக வீடுகள் பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடங்கள், சாலைகள், பாலங்கள் போன்ற சமுதாய சொத்துகளும், தனி நபர்களுக்கு ஜீவன்தாரா கிணறுகள் போன்ற நிரந்தரச் சொத்துகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஏழைகளிலும் ஏழைகளாக இருப்பவர்களை இனம் கண்டு அவர்களுடைய நல்வாழ்வை உயர்த்துவதற்காக அவர்களுக்கு கறவை மாடுகள், உழவு மாடுகள், வண்டி மாடுகள் முதலியன கொடுத்தும் உதவிகள் செய்யப்பட்டுள்ளன. சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுப்பதுடன் சுய வேலைத் தொழிலுக்கும் வழி வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. மகளிர், குழந்தைகள் நலத்திற்காக தனித் துறைகள் இருந்தாலும் இத்துறையின் மூலமாகவும் மகத்தான சாதனைகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. இந்த ஆண்டின் ஜீவன்தாரா கிணறுகளுக்கும், தனியார் கிணறுகளுக்குமாக செலவிடுவதோடு கூட ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக சமுதாயக் கிணறுகள் அமைக்கலாமா என்ற யோசனையும் உறுப்பினர்களுடைய ஆதரவோடு அதையும் நிறைவேற்றலாம் என்ற எண்ணத்தையும் நான் இந்த அவையில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நடப்பு ஆண்டில் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பேரூராட்சிகளின் சாலை மேம்பாடு, அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல், வடிகால் அமைத்தல், சிறிய குடிநீர் திட்டங்கள் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்வதற்குக் காரணம், இங்கே பேசிய உறுப்பினர்கள் அத்தனை பேரும் நம்முடைய அன்புச் சகோதரர் பாண்டியன் அவர்கள் கூட அதை நகரப் பஞ்சாயத்து, நகரப் பஞ்சாயத்து என்று சொன்னார்; இப்படிப் பல பேர் சொல்லிய காரணத்தால் தான் அதற்கு வந்த நன்மை கூடக் கெட்டுப் போய்விட்ட



இனிமேல் அதை நகரப் பஞ்சாயத்து என்று சொல்லாதீர்கள். அதைப் பேரூராட்சி என்று சொல்லுங்கள் என்று அவரை நான் தனிப்பட்ட முறையில் சொன்னேன். அந்த எண்ணத்திலே தான் நான் ஆரம்பத்திலே உங்களுக்கு இந்த அரசின் கொள்கை ஒன்றைச் சொன்னேன். பேரூராட்சிகளை ஒரு பெரிய ஊராட்சியாக நாம் இன்றைய தினம் கருதுகிறோம். அவ்வளவுதான். ஊராட்சிகளுக்கு எந்தெந்தத் திட்டங்கள், எந்தெந்த முறையில் நாம் அங்கே செலுத்துகிறோமோ அவைகளைக் கூடுமானவரை யில் பேரூராட்சிகளுக்கும் செயல்படுத்தலாம் என்ற கொள்கையை இந்த அரசு தற்போது எடுத்துக் கொள்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

19-25 மணி

அதோடுகூட, ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அவர்கள் சொன்னார்கள், வேலையெல்லாம் வீணாகப் போய் விட்டது, தேங்கிப் போய் விட்டது என்று திரு. செங்கோட்டையன் அவர்கள் சொன்னார்கள். அதிலே ஒன்றை நான் இங்கே— கொஞ்சம் நேரம் ஆனாலும்கூட சொல்வதற்குக் காரணம், மேற்கொள்ளப்பட்ட பணிகள் எத்தனை சதவீதம்— மார்ச் 31 கணக்குதான் இதுகூட, இது ஏப்ரல் கணக்கு கூட அல்ல. எங்களுக்கு உடனுக்குடனே எடுக்க முடியவில்லை. ஏனென்றால், இந்த மானியக் கோரிக்கையை நாங்கள் தீர்மானித்ததற்குப் பிறகு இவைகள் வந்து சேர்ந்தால் பயன் இல்லை. ஆகையினால் அதற்கு முன்னால் எடுக்கப்பட்ட ஒரு கணக்கைச் சொல்கிறேன்.

எதுவும் காலதாமதம் ஆகவில்லை. அது கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களைப் பார்க்கலாம்; செய்து முடித்த பணிகளைப் பார்க்கலாம்.

ஆகையினாலேதான் நான் தெளிவாகச் சொல்கிறேன். தமிழகத்தில், 1989-90 இல் மேற்கொள்ளப்பட்ட பணிகளுடைய விவரம்: தொகுப்பு வீடுகள்—மேற்கொள்ளப்பட்டது 42,070; அதிலே முடிக்கப்பட்டது 41,666 மார்ச் 31-க்குள்.

ஜீவன்தாரா கிணறுகள்— மேற்கொள்ளப்பட்டவை 2,969; அதிலே கட்டி முடிக்கப்பட்டவை 2,692.

பள்ளிக்கூடங்கள்—பள்ளிக் கட்டிடங்கள் 178 திட்டமிடப்பட்டது; 141 கட்டி முடிக்கப்பட்டது, மார்ச் 31-க்குள்.

சாலைப் பணிகள் 37,787 எடுத்துக் கொள்ளப்பட்டன; 37,084 பணிகள் சாலை சம்பந்தமாகமுடிவுற்றது.

சிறு பாசனப் பணிகள் 17,833 எடுத்துக் கொள்ளப்பட்டன; முடிக்கப்பட்டவை 16,790.

இதர கட்டிடங்கள்—எடுத்துக் கொள்ளப்பட்டவை 3,132, முடிக்கப்பட்டது 2,929.

வடிகால் 9,206; முடிக்கப்பட்டது 9,191.

இதர வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டது 14,308; முடிக்கப்பட்டது 13,975.

ஆக கூடுதல் முதலில் நிர்ணயிக்கப்பட்ட பணிகள் 1,26,488; முடிக்கப்பட்ட பணிகள் 1,24,468.

நீங்கள் இப்பொழுது சொல்லுங்கள். சென்ற ஆண்டு தவறுகள் இருக்கலாம்; அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குற்றங்கள் இருக்கலாம், குறைகள் இருக்கலாம். காலதாமதமாகவோ அல்லது வேலைகள் விடுபட்டு விட்டதாகவோ இதில் ஏதாவது சொல்ல முடியுமா என்பதைத்தான் நான் இங்கே நம்முடைய உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வி. கே. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும், மாண்புமிகு அமைச்சரவர்கள். இப்பொழுது சொன்ன விவரங்கள், ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நடைபெற்ற பணிகள்தான். ஒவ்வொரு ஆண்டுக்கும் திட்டங்கள் இவ்வளவு என்று நிதியை ஒதுக்கித் தருகிறார்கள். பள்ளிக்கூடங்கள் இவ்வளவு, சாலைப் போக்குவரத்து இவ்வளவு என்று ஒதுக்கித் தருகிறார்கள். அதை ஒவ்வொரு ஆண்டும், அதிகாரிகளாக இருந்தாலும் சரி, பேரூராட்சித் தலைவராக இருந்தாலும் சரி, அதை ஊராட்சி மன்றம், நகராட்சி மன்றம் செய்து தான் வந்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லாத நேரத்திலே கூட இந்தப் பணிகளைத் தொடர்ந்து நடத்திக் கொண்டுதான் வந்தார்கள். இது வருஷா வருஷம் தொடர்ந்து நடைபெறுகின்ற நிகழ்ச்சி என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** சரி, அப்படியென்றால் வருஷா வருஷம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இப்படித்தான் சொல்வது பழக்கம் என்பதை நான் எடுத்துக் கொள்ளலாமா?

**திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் குறிப்பிடுகின்றபொழுது இந்தப் பணிகள் முடிக்கப்படவில்லை என்ற நிலையைச் சொல்லவில்லை. மத்திய அரசு குறிப்பிட்ட காலவரைகொடுத்து அந்தப் பணிகளைச் செய்கிறார்கள். அதை நாம் செய்கிறோம். மாநில அரசும், மத்திய அரசும் சேர்ந்து. ஆனால் நான் குறிப்பிட்டது, ஒர்க் ஆர்டர் கொடுக்கிறார்களே, அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதை நான் கோடிட்டுக் காட்டினேனே தவிர, அதை டெண்டர் முறையிலே வைத்து பணிகளை



**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** நீங்கள் சொன்னது டெண்டர் விடுவதில் காலதாமதம், ஒர்க்கை எடுத்துக் கொள்வதில் காலதாமதம், அதற்கு அனுமதி வழங்குவதில் காலதாமதம், ஆகையினால் பணிகள் ரொம்பக் கெட்டு விட்டது என்று சொன்னீர்கள். அதற்காகத்தான் இதை நான் படித்தேன்.

**திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** துணைத் தலைவரவர்களே, நான் சொன்னது, ஊராட்சி ஒன்றியத்தினுடைய பொது நிதியிலே இருக்கின்ற பிரச்சினைக்குத்தான் அதைச் சொன்னேன் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திலே ஒர்க் ஆர்டர் கொடுப்பதிலே கொடுத்து இருக்கிறார்கள். ஒர்க் ஆர்டர்களை அவர்கள் வைத்துக் கொண்டு, ஊராட்சி மன்றத் தலைவர்கள் தங்களுடைய பணிகளைச் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதையும், அதை டெண்டர் முறையிலே மாற்றி அந்தப் பணிகளைச் சீரான முறையிலே செய்ய வேண்டுமென்பதையும் தான் நான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** காலம் தாழ்ந்து ஒத்துக் கொண்டதற்கு நன்றி.

கடந்த ஆண்டுகளிலே ஆதி திராவிட மக்களுக்காகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் ஓட்டு வீடுகளாகக் கட்டப்பட்டன. கூரையில் பனைச் சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது. சட்டம், ரீப்பர் முதலியவை தரக் குறைவாக இருந்ததால் அநேக வீடுகள் பழுதாகிவிட்டன. இம்மாதிரி நிகழக் கூடாது என்ற நோக்கத்தோடு நம்முடைய முதலமைச்சரவர்கள், ஆதி திராவிடர்கள், பழங் குடியினருக்குக் கட்டப்படுகின்ற வீடுகள் அத்தனையும் ஏற்கெனவே நம்முடைய ஆட்சி இருந்த பொழுது கட்டிக் கொடுக்கப்பட்டதைப் போல, கான்கிரீட் வீடுகள்தான் கட்ட வேண்டுமென்று திட்டமிடப்பட்டு, சென்ற ஆண்டே 42,000 வீடுகள் குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. மேல்கூரை மட்டும் தளம் கான்கிரீட் போடுவதற்கு ஏற்கெனவே மத்திய, மாநில அரசாங்கங்கள் கொடுத்த உதவிகள் போக தமிழ்நாடு அரசாங்கம் 42,000 வீடுகளுக்கு 4,000 ரூபாய் அதிகரித்து ஏறத்தாழ ரூ. 16.80 கோடி இந்த அரசு செலவழித்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

19.30 மணி

இதே வசதியுடன் 1990—91 ஆம் ஆண்டில், அதே கான்கிரீட் வீடுகள் இந்த ஆண்டில் ஏறத்தாழ 47,000 வீடுகள் கட்டப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்காக நம்முடைய அரசாங்கம் தனித்து ரூ. 18.80 கோடி செலவழிக்க ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தொகுப்பு வீடுகள் தவிர கண்மாய்கள் மராமத்து, ஊராட்சி மன்றக் கட்டிடங்கள், பள்ளிக் கட்டடங்கள், ஜீவன்தாரா கிணறுகள் போன்ற பணிகளும் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

(திரு. கோ. சி. மணி) [1990 ஏப்ரல் 24

அதோடு 1989–90இல் ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள்
கட்டப்பட்ட இடத்தில் வீடுகள் கட்டப்பட்டு, அவைகளில் சில
பேர் அந்த நேரத்தில் 20 வீடுகள்தான் கட்டிக் கொடுப்போம்,
அதற்கு மேல் இருந்தால் கட்ட மாட்டோம் என்று சொல்லிய
காரணத்தால் ஒன்றிரண்டு வீடுகள் விடுபட்டு, 20 வீடுகளுக்கு
மத்தியில் 2 குடிசைகள் இருப்பதைப் பார்க்கிற போது, அந்தக்
குடிசையில் வாழ்கிறவர்கள் நிலை பரிதாபமாக இருக்கிறது.
எனவே, அப்படி சென்ற ஆண்டு கட்டப்பட்ட இடங்களில் அந்த
ஊராட்சி ஏற்கெனவே கட்டி விட்டது என்பதை கணக்கில்
எடுத்துக் கொள்ளாமல், இரண்டொரு வீடுகள் இருக்குமானால்,
அதையும் இந்த ஆண்டு கான்கிரீட் வீடாகக் கட்டிக் கொடுப்
பதற்கு இந்த அரசு தீர்மானித்து இருக்கிறது என்பதை நான்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு பிரச்சினை 20 வீடுகள் இருந்தால் தான் கட்ட
முடியும் என்பது போல ஒரு தோற்றம் இருக்கிறது. அதனை
மாற்றி 20 வீடுகள் என்பதை கொஞ்சம் நிபந்தனையை தளர்த்த
லாமா என்பதைப் பற்றி இந்த அரசு ஆலோசித்துக் கொண்
டிருக்கிறது.

பேரூராட்சிப் பகுதியிலும் இந்த ஆண்டு ஆதி திராவிட
களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்படும்
என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 1990 ஆம்
ஆண்டிற்கு எல்லா பேரூராட்சிகளுக்கும் விஸ்தரிக்கப்படும். ஏழா
வது ஐந்தாண்டுத் திட்டத்தில் வறுமைக் கோடு என்பதன் கோட்
பாடு மத்திய அரசால் மாற்றப்பட்டு, 6,400 ரூபாய்க்குக் கீழ்
ஆண்டு வருமானம் பெறுகிற ஊரகக் குடும்பங்கள் வறுமைக்
கோட்டிற்குக் கீழே இருப்பதாக நிர்ணயிக்கப்பட்டது. இருப்பினும்
ரூ. 4,800 வரையில் வருமானம் உள்ள குடும்பங்களை முன்
னேற்றுவதை நோக்கமாகக் கொண்டு முதற்கண் 3,500 ரூபாய்
வரையில் வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உடன் உதவி
அளிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்க இருக்கிறோம்.
ரூ. 4,800 வரையில் வருமானம் உள்ளவர்களுக்கும் கடன் வழங்
கப்படும்.

சென்ற ஆண்டு 1989–90 இல் பயனாளிகளுடைய குறியீடு
1,92,337 குடும்பங்கள். அதிலே சாதனை 2,28,900. நிதி
ஒதுக்கீடு ரூ. 4,940.564 இலட்சம். அதிலே சாதனை ரூ.5,107.99
இலட்சம். இந்த ஆண்டு 1990–91 பயனாளிகள் குறியீடு
1,57,041 குடும்பங்கள். சென்ற ஆண்டு ஒதுக்கியதைப் போல
ரூ. 4,140.564 இலட்சம். ஆனால் இந்த ஆண்டு பயனாளி
களுடைய எண்ணிக்கை சற்று குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு
என்ன காரணம் என்றால் சென்ற ஆண்டு கடன் கொடுத்த
வகையில் ஒரு காரியத்திற்குக் கொடுக்கிற போது, அதை முடிக்க
முடியவில்லை என்று கோரிக்கைகள் நமக்கு வந்தன. ஆகவே



1990 ஏப்ரல் 24] [திரு. கோ. சி. மணி]

இந்த ஆண்டு சற்று அந்தத் தொகையை உயர்த்தலாம் என்ற
நோக்கத்தோடு பயனாளிகளுடைய எண்ணிக்கை சற்று குறைந்
தாலும் திருப்திகரமான அளவிற்கு அந்தக் கடன் வழங்க வேண்டு
மென்ற நோக்கத்தோடு நாம் அதைச் செய்திருக்கிறோம்.
அதோடு கிராமப்புற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புத்
திட்டம், அதற்கான பயிற்சி, அளிக்கப்படும் என்று சென்ற
காலத்திலும் அறிவிக்கப்பட்டது. அதைத் தற்போது கொஞ்சம்
முறைப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இந்த அரசு
இருக்கிறது.

19.35 மணி

இதிலே ஒரு முடிந்த முடிவாக ஒரு 3 மாதம் பயிற்சி, ஒரு ஆறு
மாதம் பயிற்சி, எனவே 6 மாதத்திற்கு மேல் பயிற்சி அளிக்கக்
கூடாது என்று ஒரு சட்டம் இருந்தது, அதிலே சில பேர்கள்
பயிற்சி பெற முடியாமலும், அந்தத் தொழிலுக்குத் தக்க பயிற்சிக்
குரிய அவகாசம் இல்லாத காரணத்தாலும், சிலர் பலன் இல்
லாமல் அதில் நடுவிலே கொஞ்சம் தொய்வு விழுந்தது என்பதை
நாம் எல்லோரும் அறிவோம். ஆதலால் இந்த ஆண்டு கூடுமான
வரை எந்தத் தொழிலுக்கு எத்தனை மாத காலம் பயிற்சி
பெற வேண்டும் என்ற குறியீட்டை எடுத்து, அதன் மூலம்
இந்தப் பணியைத் துவக்கலாம் என்று இந்த அரசு இருக்கிறது.
அதிலே 13,843 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது சென்ற
ஆண்டு. 7,158 நபர்கள் சுயவேலை மற்றும் ஊதியம் பெறும்
தொழில்களில் ஈடுபட்டு உள்ளனர். அதற்குப் பிறகு, டிரைசெம்
திட்டத்தின் கீழ் பல்வேறு தொழில் துறைகளில் பயிற்சி வழங்கப்
படுகிறது. மேற்கண்ட பயிற்சி தொழிலின் தரத்திற்கேற்ப 3
மாதங்கள், 6 மாதங்கள் என்று இருந்ததை, தற்போது 1 வருடமாக
இருந்தாலும் கூட பரவாயில்லை என்று உயர்த்தலாம் என்று
இந்த அரசு இருக்கிறது என்பதை, நான் உங்களுக்குத் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதோடு கிராமப்புற மகளிர் தம் திறமை மற்றும் உள்ளூர்
சூழ்நிலைக்கு ஏற்ப வருவாய் பெறத்தக்க வேலைகளை உரு
வாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டம்
தற்போது பெரியார், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, தென்னாற்
காடு, வடாற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர்,
புதுக்கோட்டை மற்றும் சேலம் மாவட்டங்களில் செயல்படுத்த
பட்டு வருகிறது. 1989–90 ஆம் ஆண்டு 344 மகளிர் குழுக்கள்
அமைக்கப்பட்டு, 4,439 பெண்கள் பயன் பெற்றார்கள். இந்த
ஆண்டு மேலும் தஞ்சை மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு
மாவட்டங்களிலே கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்
பாட்டுத் திட்டம் விரிவுபடுத்தப்பட இருக்கிறது.

அதோடுகூட சுகாதாரத் திட்டம். இது ரொம்ப முக்கிய
மானது. இதில் முழுமை பெற நம்மால் முடியாது. ஊராட்சி
களோ, பேரூராட்சிகளோ, நகராட்சிகளோ, நகரியங்களோ
சுகாதாரத்தை முழுமையாக நடத்த முடியவில்லை என்று நீங்கள்

சொன்னதில் நான் உங்களோடு உடன்படுகிறேன். அதிலே எனக்கு மாற்றுக் கருத்தில்லை. ஆனாலும், இது குறைவின்றி தரத்தோடு இந்தப் பணிகள் நடத்தப்படும் என்பதில் இந்த அரசு மிக அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும். பேரூராட்சி எல்லைக்குள் ஏறத்தாழ 96 ஆயிரம் உலர் கழிப்பிடங்கள் உள்ளன. இந்த உலர் கழிப்பிடங்களில் 629 துப்புரவுப் பணியாளர்கள் மூலம் மலம் அகற்றப்படுகிறது. இந்தக் காலத்தில் மனிதனுடைய மலத்தை, மனிதனே எடுக்கிற முறைகூட இருக்கிறது என்று கவலையோடு, சொன்னார்கள். எனக்கும் அதில் உடன்பாடுதான். அதிலே ஒன்றும் தவறில்லை. ஆனாலும் அவைகளிலே, நாகரீகத்திற்கு ஏற்றவாறு மாற்றங்கள் வேண்டும். இங்கேகூட என்னிடத்திலே தங்கராஜன் அவர்கள் ஒரு மனு கொடுத்தார்கள். கையுறை இல்லாமல் அந்தப் பணி யிலே ஈடுபடுகிறார்கள், அவர்களுக்கு கையுறை கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதைப்போல சிறு தள்ளு வண்டி இல்லை என்று சொன்னார்கள். சில இடங்களில் கொடுக் கப்பட்டு இருக்கின்றது. எனவே இன்றைக்கு இந்தக் கோரிக் கையை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, அதிகாரிகள் இடத்திலே நான் தெரிவித்திருக்கிறேன். எந்தெந்த ஊராட்சிகளில், எந் தெந்த நகராட்சிகளில், எந்தெந்த பேரூராட்சிகளில் இப்படிப் பட்ட கையுறை இல்லாமல், அல்லது சிறு கைவண்டி இல்லாமல், தலையிலே தூக்குகின்ற நிலையை யார் வைத்து இருந்தாலும், நாளைக்கே அது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அவைகள் அத்தனைக்கும் கைவண்டியும், கையுறையும் கொடுக்க வேண்டும் என்றும், இதைப்பற்றி நாளைய தினமே தெரிவிக்க வேண்டும் என்றும் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். இது நிச்சயமாக நிறைவேறும் என்று நம்புகிறேன்.

பல்வேறு திட்டங்களில் எண்ணிக்கைக் குறைந்த செலவிலான சுகாதாரக் கழிப்பிடங்கள் கட்டும் பணி 189 இலட்சம் செலவில் 1989-90 ஆம் ஆண்டு மேற் கொள்ளப்பட்டது. நடப் பாண்டிலும் மத்திய அரசு நகர்ப்புற வளர்ச்சி நிதி உதவி மூலம் சுகாதாரக் கழிப்பிடங்கள் அமைத்து, துப்புரவுப் பணியாளர் களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் 10 பேரூராட்சிகளில் இந்தத் திட்டம் செயல்பட உள்ளது. 2,534 சுகாதாரக் கழிப் பிடங்கள் கட்ட திட்டமிடப்பட்டு தண்ணீர் வசதியோடு கூடிய, அதாவது உலர் கழிப்பிடங்கள் இல்லாமல், அவைகளில் தண்ணீர் ஊற்றி அலம்பி சுத்தம் செய்யக் கூடியதாக, யாரும் அதை எடுக்காமல், அதுவே கழிந்து விடுகிற நிலைக்கு, இந்த லெட்ரின் கள் அமைக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதிலே 60.4 லட்சம் மத்திய அரசு நகர்ப்புற வளர்ச்சி நிதிக் கடனாக 46.4 இலட்சம், மானியமாக ரூ. 17.10 இல்ட்சம், உபயோகிப்பாளர்களின் பங்காக ரூ. 4.9 இலட்சமும் பெறப்பட்டு உள்ளது. இத்தனைக்கும் மேலாக



இதற்கு அடுத்தாற்போல நகராட்சியைப் பொறுத்த வரையில், நம்முடைய நகராட்சி மன்றத் தலைவர்கள் பல பேர்கள் இங்கே இருக்கிறார்கள். நகராட்சி மன்றத் தலைவர்களோடு கூடிய சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு பதவிக்கும் உள்ள பொறுப்புகளை ஏற்று, ஒவ்வொரு வரும் போட்டியாக இரண்டு தரப்பிலேயும் எழுப்பினார்கள். நீங்கள் அதை ஏற்றுக் கொண்டால், எனக்கும் ஒன்றும் கவலை யில்லை. அவர்கள் இங்கே வரக் கூடாது, இவர்கள் அங்கே வரக்கூடாது என்று சொன்னதை எல்லாம் நான் கவனத்தில் கொள்ள விரும்பவில்லை. காரணம் அவரவர்களுக்கு இருக்கிற எண்ணத்தை அவர்கள் வெளியிட்டார்கள். இதற்கு முன்னாலே இருந்த அரசுகள் என்ன நடைமுறைப்படுத்தி வந்ததோ, அதைத் தான் இந்த அரசும் இப்போது நடைமுறைப்படுத்தப் போகிறது இதைப் பொறுத்தவரையில், ஆனாலும் இந்த நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், நகராட்சி மன்ற நிர்வாகங்களைப் பொறுத்தவரையில், நல்ல பெரு நோக்கத்தோடு இந்த ஆண்டு ஒரு முறையை நம்முடைய அரசு கடைப்பிடிக்க இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**19—40 மணி.**

சென்ற ஆண்டு எல்லாம் இங்கே இருக்கின்ற நகராட்சி மன்றத் தலைவர்களுக்கு எல்லாம் தெரியும் என்று கருதுகிறேன், ஆண்டு ஆரம்பத்தில் ஒரு நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றம் நிறை வேற்றுவது போல அந்த நகராட்சி மன்றங்களும் நிதிநிலை தயா ரிக்கின்ற வாடிக்கை உண்டு. தயாரிக்கிறபோது வரவையும் சேர்த்துக்கொண்டு, செலவையும் அதிகரிப்பதற்காக ஒதுக்கீடு வேண்டும் என்பதற்காக தயாரித்து எந்தத் துறைக்கு எவ்வளவு ரூபாய் ஒதுக்குகிறார்களோ அந்தப் பணியை முழுமையிலும் நிறை வேற்றாத நிலை இதுவரை இருந்திருக்கிறது. நான் அதை எடுத்துச் சொல்வதற்குக் காரணம், அவர்கள் மேல் குறை சொல்ல வில்லை. அவர்களுக்குப் பல இடையூறுகள் அந்த நேரத்திலே இருந்தது. நகராட்சி மன்றத் தலைவர்களுக்கு, நகராட்சிகளுக்கு பல இடையூறுகள் இருந்தது. ஒரு பெரிய பொறுப்பை அவர்கள் சுமந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் நடத்துகிற பள்ளி களின், ஆசிரியர்களுக்கும் அதிலே இருக்கிற இதர பணியாளர் களுக்கும் சம்பளம் கொடுக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு வந்தது. அதிலே ஒவ்வொரு மாதமும் அந்தத் தகராறுகள் வருமே என்பதற்காக சில நகராட்சி மன்றத் தலைவர்கள் குறிப்பிட்டத் தொகை ஒதுக்கி வைத்துக்கொண்டு, பணியை நிராகரிக்கின்ற நிலைமை ஏற்பட்டு வந்தது. அவைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கிற வகையிலேதான் நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு உத்திரவைப் பிறப்பித்தார்கள். இந்த 1—4—1990 முதல் நகராட்சி மன்றத்தில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அத்தனைப் பேரும் இனிமேல் அரசாங்கத்திலிருந்து சம்பளம் பெறுவார்கள் என்று அறிவித்தார்கள். எனவே, பெரும் சுமை நகராட்சி மன்றங்களுக்குத் தீர்ந்து விட்டது. இனிமேல் உங்கள்

[திரு. கோ. சி. மணி] [1990 ஏப்ரல் 24

வேலையை, மன்னிக்க வேண்டும், நீங்கள் சொன்ன வேலையை
நீங்களே செய்துதான் ஆக வேண்டும். அதிலே எந்தவிதமான
சந்தேகமும் இல்லை. அதற்கு என்ன குறுக்கீடுகள் இருந்தாலும்,
என்ன தாமதம் இருந்தாலும், இந்த அரசாங்கம் அதைத் தவிர்ப்
பதற்குத்தயாராகஇருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்
கொள்கிறேன். நீங்கள் போடுகிற நிதிநிலை அறிக்கையில்
சாலை பராமரிப்புக்கு எவ்வளவு ஒதுக்குகிறீர்களோ, எந்தெந்
தச் சாலைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பட்டியலைத்
தயாரித்து இருக்கிறீர்களோ, அந்தச் சாலைகள் அந்தப் பட்டி
யலுக்குட்பட்டு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதற்குரிய
தொகையை செலவழிக்க வேண்டும் என்பதை எடுத்துச் சொல்
வதற்காகத்தான் புதிய ஒரு திருப்புமுனையை இந்த
அரசு ஏற்படுத்தி இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அத்தோடுகூட நகராட்சிப்
பணியாளர்களுக்காக சென்ற ஆண்டு 50 இலட்சம் செலவில்
வீடு கட்டுகிற பணியை நாங்கள் செய்து இருக்கிறோம். இப்
போதுகூட கோரிக்கையெல்லாம் சொன்னார்கள். அந்தக் கோரிக்
கைகளை பிற்பகுதியிலே நான் சொல்கிறேன். இருந்தாலும்,
சாலை பணிகளைப் பொறுத்தவரையில் நகராட்சி மன்றங்களில்
இருக்கிற சாலைகள் ஏராளமான சாலைகள், அந்தச் சாலைகளி
னுடைய பணியை அவர்கள் நிறைவேற்றுகின்ற தகுதிஇல்லை.
ஆனாலும், நம்முடைய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு,
சிலத் திட்டப் பணிகளின் மூலம், அவைகளை ஏற்று நடத்தலாம்
என்று ஆலோசனைகள் தற்போது இந்த அரசாங்கம் வழங்கி
இருக்கிறது. சென்ற ஆண்டுகளையெல்லாம் விட இந்த ஆண்டில்
நிச்சயமாக ஒவ்வொரு நகராட்சி மன்றமும், சாலைப் பணி
களை மேற்கொண்டு நடத்துவதில் ஒரு முக்கியமான கவனத்தைச்
செலுத்தும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.
அத்தோடுகூட தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத்
திட்டத்தின் கீழ் நகராட்சிகளுக்கு வருவாய்த் தரத்தக்கத்
திட்டத்தை மேற்கொள்ள அரசு 500 இலட்சம் வழங்கியுள்ளது.
இதன்படி 32 நகராட்சிகளில் அங்காடிகள் பேருந்து
நிலையங்கள் போன்றவைகளை அமைப்பதற்காக இதுவரை
ரூ. 192.41 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில்
அந்தத் தொகையை செலவழிப்பதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.
இதைப் போன்ற பல நகராட்சிகளுக்கு இன்னும் அந்த மனுக்கள்
வந்தவண்ணம்தான் இருக்கின்றன.

நகராட்சி துப்புரவுப் பணிகள் செம்மையாக நடைபெற
போதுமான லாரிகள் இல்லை. இங்கே உறுப்பினர்கள் எல்லாம்
சொன்னார்கள். கண்டமே செய்யவில்லை என்று சொன்னார்கள்.
அதை கண்டம் ஆக்கியதும் நாங்கள் இல்லை. அதைக் கண்டம்
என்று சொல்லாமல் மறுத்ததும் நாங்கள் இல்லை. நாங்கள்
வருவதற்கு முன்பே அது கண்டம் ஆகிவிட்டது. அந்தக்
கண்டத்தை இப்பொழுது நாங்கள் மறைக்கவில்லை. மாநகராட்சி
யிலே கூட எத்தனை கண்டமான லாரிகள், டிராக்டர்கள், டிரிப்
பர்கள் இருக்கிறதோ அவைகளில் எத்தனை ஏலம் போடுவதற்கு



1990 ஏப்ரல் 24] [திரு. கோ. சி. மணி]

தகுதி படைத்தவையாக இருக்கிறதோ அவற்றை ஏலம் போட்டு
விடலாம் என்ற உத்தரவை நகராட்சிகள், மாநகராட்சிகள் அத்
தனைக்கும் கொஞ்ச நாட்களுக்கு முன்னதாகவே நாங்கள்
போட்டு விட்டோம். இப்பொழுதுகூட மாண்புமிகு முதல்
அமைச்சர் அவர்கள் எந்த நகராட்சிகளில் ஒரு லாரி கூட இல்
லாமல் இருக்கிறதோ அந்த நகராட்சிகளுக்கு இந்த ஆண்டு
உடனடியாக லாரிகளோ அல்லது டிராக்டர்களோ கேட்டால்
வாங்கிக் கொடுப்பது என்று உத்திரவு போட்டு இருக்கிறார்கள்.
அதன் அடிப்படையில் 80 இலட்சம் ரூபாய் மானியமாக அதற்
காக வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

19–45 மணி

லாரிகள், டிராக்டர்கள் ஒன்று கூட இல்லாத அல்லது லாரிகள்
டிராக்டர்கள் வாங்கி வெகு நாட்களாகி பழுதடைந்து கிடந்து
இனிமேல் தேறாது என்ற நிலையில் இருக்கின்ற நகராட்சிகள்,
நிதி வசதி படைத்தவர்கள், பாதி மானியத்திலும் பாதி சொந்த
நிதியிலும் வாங்கிக்கொள்ளலாம், நிதியே இல்லாமல் வாங்க முடி
யாத சூழ்நிலையில் இருப்பவர்களுக்கு முழு மானியமாகவும் இந்த
ஆட்சி அவர்களுக்குக் கொடுத்து உதவ இருக்கிறது. ஏறத்தாழ
கணக்கீட்டுப்படி 11 நகராட்சி மன்றங்களுக்கு இப்படி முழு
மானியமும் வழங்கக்கூடிய சூழ்நிலை இருக்கும் என்று நான்
கருதுகிறேன். நிச்சயமாக அவைகள் பட்டியல் எடுக்கப்பட்டு
கொடுத்து உதவப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்
கொள்கிறேன். டிராக்டர்கள் வாங்க மானியம் வழங்கப்படும்.
31 நகராட்சிகளில் ஒரு லாரி கூட இல்லாத 15 நகராட்சிகளுக்கு
முதலிடம் தரப்படும். பாக்கி இருக்கிற 16 நகராட்சிகளுக்கு பாதி
மானியமும் பாதி அவர்களுடைய நிதியும் சேர்த்து வாங்க வழி
செய்யப்படும். இதிலே ஊர்கள் எல்லாம் கூட படிக்கத் தேவை
யில்லை. காரணம் நாங்கள் அதை முடிவு பெற செய்து
விடுகிறோம். எத்தனை இடத்திற்கு இல்லையோ அத்தனை
இடத்திற்கு வாங்கச் சொல்கிறோம். எங்கெங்கே பழுதோ அங்கே
யெல்லாம் மானியத்தோடு வாங்க விடுகிறோம். பட்டியல் போட
வேண்டிய அவசியம் நிச்சயமாக இல்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். அதற்குப் பிறகு நீளம் உள்ள சாலைகள்.
நகராட்சிகள் தற்சமயம் கணக்குப் பார்த்தால் அவர்கள் வசத்தில்
98 நகராட்சிகளுக்கும், 8 நகரியங்களுக்கும் கணக்குப் பார்த்து
சேர்த்த வகையில் ஏறத்தாழ 6,375 கிலோ மீட்டர் இருக்கிறது.
இவைகளை இந்த ஆண்டிலோ இரண்டு ஆண்டுகளிலோ செய்ய
இயலாது. எனவே, ஒரு 5 ஆண்டுத் திட்டம் போடப்பட்டு
அவைகள் மூலம் அதை நிறைவேற்றலாம் என்று இந்த அரசு
இருக்கிறது. அத்தோடு கூட நிர்வாகச் சீர்திருத்தத்திற்கெனவும்
சிலத் திட்டங்களை இந்த அரசு புதியதாகத் தீட்டியிருக்கிறது.
ஒரு திட்டத்தை அறிவித்துவிட்ட பிறகு அந்தத் திட்டம்

செம்மையாக நடைபெறுகிறதா, அந்தத் திட்டம் குறிப்பிட்டக் காலத்தில் முடிந்துவிடுமா அல்லது திட்டத்தை மேற்பார்வை இடுகின்றவர்கள் காலத்தில் மேற்பார்வை இடுகிறார்களா என்பதை மேலேயிருந்து கவனிக்கின்ற சூழ்நிலை சற்றுக் குறைவாக தற்போது வரை இருந்து வருகிறது. அதை மாற்றி இங்கிருந்தும் மாவட்ட முகமையிலிருந்தும் அது போல மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும் அந்தப் பரிசோதனைகளும் மற்ற திடீர் சோதனைகளும் நடைபெறுவதற்கான ஆய்வை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு கூட, இப்பணிகள் உலக வங்கி மூலம்—நான் ஆரம்பத்திலே குறிப்பிட்டது போல்—கடன் பெற்று நிறைவேற்றப்படுகின்ற திட்டங்கள், அதாவது வணிக வளாகம், பேருந்து நிலையங்கள் மற்ற மற்ற இடங்கள் இன்னமும் யாராவது அடுத்த ஆண்டுக்குத் தேவைப்படுகிற—இப்போது நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பூவராகன் அவர்களும் குறிப்பிட்டார்கள். விருத்தாச்சலம் நகராட்சிக்கு உலக வங்கிகள் மூலம் நாங்கள் மனு தயாரித்திருந்தோம். அது வேறு வழிக்கு திருப்பிவிடப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். நான் உடனடியாக விசாரித்தேன். அவர்களிடத்தில் எந்த புரோபோசலும் வரவில்லை என்பதைத் தெரிவித்தேன். திரும்பவும் அவர்களிடத்திலே சொன்னேன். நீங்கள் அதற்குரிய படிவத்தை தயாரித்து அனுப்புங்கள், நாங்கள் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைப்போல கழிப்பிடங்கள் முக்கியமானது ஆகும். சென்னை மாநகராட்சிக்குள் தொள்ளாயிரத்து சொச்சம் கழிப்பிடங்கள் இருக்கின்றன. இந்தக் கழிவறைகள் அத்தனையும், மதுரை, சென்னை, கோவை மாநகராட்சிகள் மற்றும் இருக்கின்ற 98 நகராட்சிகள், 8 நகரியங்கள் எதுவானாலும் கழிப்பிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்றுதான் சொல்லப்படுகிறதே தவிர தண்ணீர் வசதி இருக்க வேண்டும் என்று அறிவித்திருப்பது ஒரு தொட்டியைக் கட்டி ஒரு குடம் தண்ணீர் ஊற்றி வைத்து எப்போதோ அதிலே ஒரு தகரக் குவளை போட்டுவிட்டு அத்தோடு நின்றுவிட்ட கணக்கைத்தான் இத்தனை நாள் சொல்லி வந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த மன்றத்திற்குச் சொல்லிக்கொள்கிறேன். அதிக அசுத்தம் உண்டாவதற்குக் காரணமே அந்தக் கழிவறைகள் என்பதை நான் கண்டறிந்துதான் அதை இங்கே குறிப்பிடுகிறேன். எனவே, மாநகராட்சி அத்தனையிலும் இருக்கின்ற கழிவறைகள் அவ்வளவும் விளக்கு வசதியும், கீழே குழாய் அடித்து மேலே டாங்க் கட்டி தண்ணீர் அதிலே நிரப்பி அதுவும் முனிசிபல் டேப்பிலே கூட எடுக்காமல் தனித்து தண்ணீர் வசதி கொடுத்து ஒவ்வொரு அறைக்கும் டேப் கனக்ஷன் கொடுக்கின்ற அளவிற்கு இருந்தால்தான் தண்ணீர் வசதி பெற்ற கழிப்பறையாக கருதப்படும் என்று அவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு 3 மாநகராட்சிகளும் ஜூலை மாதம் 30 ஆந் தேதிக்குள் அனைத்தும் தண்ணீர் வசதியும் விளக்கு வசதியு



பெறத்தக்க அளவிற்கு அவை செப்பனிடப்படவேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நகராட்சி மன்றங்களைப் பொறுத்த வரையில் அனைத்தும் ஒரே நேரத்தில் செய்ய இயலாததாக இருக்கிறோம்.

19-50 மணி

காரணம், அவர்களுடைய நிதிநிலையையும் சற்றுக் கணக்கிட்டு, நாங்கள் கொடுக்கிற நிதியையும் கணக்கிட்டு இந்த ஆண்டு நிச்சயமாக 50 சதவீதம் கழிவறைகளுக்குத் தண்ணீர் வசதிகளை, எல்லா நகராட்சி மன்றங்களிலும் இருக்கிற கழிவறைகளுக்குக் கொடுக்கலாம் என்று நான் நினைக்கின்றேன். இது நிச்சயமாக முடிக்கலாம் என்று நான் நம்புகிறேன்.

ஒரு முக்கியமான கழகத்தை நம்முடைய அரசு நிறுவி இருக்கிறது. நிதி நலிவுற்ற நகராட்சி மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள கடன்கள் வழங்குவதற்கு, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்ளமைப்பு மேம்பாட்டுக் கழகம் 1989ஆம் ஆண்டு தான் ஏற்படுத்தப்பட்டது. பல வல்லுநர்கள் எல்லாம் ஏற்கெனவே பேசிக்கொண்டிருந்தார்கள். இப்படி நிபுணர்கள் பேச்சைக் கேட்டு, கேட்டு அப்போது ஆரம்பிக்காமல் ரொம்பக் காலந் தாழ்ந்து, நம்முடைய ஆட்சி வந்த பிறகு, சென்ற ஆண்டு அது ஆரம்பிக்கப்பட்ட இக்கழகத்தின் மூலதனத் தொகை 2 கோடியாகும். அதில், மாநில அரசின் பங்கு 1.02 கோடியாகும். மூன்று மாநகராட்சிகளும், 106 நகராட்சிகளும் சேர்ந்து 78 இலட்சம் ஆகும். 78 இலட்சத்திற்கு பங்குத் தொகை அவர்கள் வாங்குவார்கள். ஹட்கோ நிறுவனம் 20 இலட்சத்திற்குப் பங்குத் தொகைகள் வாங்குவார்கள். இக்கழகம் மார்ச்சு மாதம் முதல் செயல்படத் துவங்குகிறது. மாநில அரசின் பங்குத் தொகை 1.02 கோடியும் ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது. கொஞ்சம் காலத்திற்கு முன்னாலே இதை ஆரம்பித்து இருப்போமேயானால், இது ஓரளவு நகராட்சிகளுக்கு உறுதுணையாக இருந்திருக்கும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாதாரணமாக, அடித்தளத்து மக்களுடைய வீடுகளைப் பழுது பார்ப்பதற்கு, அதிலே சிறு வேலைகளைச் செய்வதற்கு ஒரு திட்டத்தை நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக குடியிருப்பு வீடுகள் மேம்படுத்தும் பணி என்ற ஒன்று ஆரம்பித்திருக்கிறோம். 23 நகராட்சிகளில் 15,000 வீடுகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, ஹட்கோ நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு, அவைகளில் 18 நகராட்சிகளின் திட்டங்களுக்கு ஹட்கோ நிறுவனத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதனால், 11,800 குடியிருப்புகள் 489.7 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும் என்பதை, நடப்பு ஆண்டில் மேம்படுத்தப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் இங்கே சொன்னார்கள். இப்போதுதான் குப்பைமேடெல்லாம் பார்க்கிறோம். குப்பை நிறைய இருக்கிறது என்று ஆளுங்கட்சிக்காரர்களே சொன்னார்கள் என்று ஒன்றைச் சொன்னார்கள். அதற்கு ஒரு விவரத்தை நான் சொல்லலாம் என்று கருதுகிறேன். சென்ற ஆண்லே 4 மாதம், 5 மாதத்திற்கு முன்னாலே, ஒரு கணக்கெடுப்பு எடுக்கப்பட்டது. அந்தக் கணக்கின்படி, சென்னை நகரில் நாளொன்றுக்கு சுமார் 2,800 மெட்ரிக் டன் எடையுள்ள குப்பைக்கூளங்கள் சேர்கின்றன. இக்குப்பைக் கூளங்களை அகற்ற நாள்தோறும் சுமார் 8,000 துப்புறவுப் பணியாளர்கள் 9,000 தெருக்களில் துப்புரவு பணி செய்கிறார்கள். சுமார் 240 லாரிகள், 750 மாட்டு வண்டிகள், 50 டெம்பர்கள் ஆகியவைகளைப் பயன்படுத்தி சுமார் 1700 முதல் 1800 மெட்ரிக் டன் வரைதான் குப்பைக்கூளங்கள் அகற்றி வெளியே போவது. பாக்கி அத்தனையும் ஒரு 500 டன் தெருவிலே இருந்தது. பாக்கி இருப்பது சென்னை நகரத்திற்குள்ளேயே இருந்தது. நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இதைச் சொல்லாமல் இருந்தால் கூட, காலத்தின் அருமை கருதி நான் இதைச் சொல்லாமல் விட்டிருப்பேன்.

சமீபத்தில், அதாவது 4 மாதத்திற்குள் நம்முடைய அரசாங்கம் மாநகராட்சிக்கு அறிவுரை வழங்கி கூடுதலாக 1;011 தொழிலாளர்கள் துப்புரவுப் பணிக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். அதன் அடிப்படையில் அப்படி ஈடுபடுத்தப்பட்டு, அதனால் இதுவரை தினசரி துப்புரவு செய்ய முடியாமல், 2 நாள், 3 நாள் தாண்டிச் செய்து தெருக்களைக் கூட்டியதை மாற்றி இப்போது அன்றன்றைக்கு குப்பைகள் கூட்டப்படுவதோடு மட்டுமல்லாமல் கூட்டிய குப்பைகள் இன்றையதினம் லாரிகளிலே ஏற்றப்பட்டு—புதிய லாரிகள் கொஞ்சம் வாங்கிக் கொடுத்ததன்காரணமாக—லாரிகளில் ஏற்றப்பட்டு—நான் உண்மையான கணக்கை, பல தெருவாசிகளை விசாரித்தபிறகு சொல்கிறேன்—2200 மெட்ரிக் டன் இந்த சென்னை நகரத்தை விட்டுத் தாண்டிவிட்டது என்பதை நான் திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறேன்.

நான் இந்தக் குப்பையைப் பற்றிச் சொல்கிறேன் என்று தயவு செய்து நீங்கள் கருதிவிடக்கூடாது. அசுத்தத்தைச் சுத்தம் செய்வதே ஒரு அழகு என்ற குறிக்கோளை எட்டியது நம்முடைய ஆட்சி. ஆகையினாலேதான் அவர்களும் இதைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்டது எனக்கு ஒரு நல்லதாக அமைந்துவிட்டது. அதைப் பயன்படுத்தி இதை நான் இங்கே குறிப்பிடுகிறேன்.



19—55 மணி

இதற்காக துப்புரவுப் பணிகளை நவீனப்படுத்தும் முறையில் 15 சிறிய 6 கன மீட்டர் கொள் அளவு உள்ள குப்பை இறுக்கி வாகனங்கள் மற்றும் 3 பெரிய 14 கன மீட்டர் கொள் அளவு உள்ள குப்பை இறுக்கி இயந்திரங்கள் வாங்கி இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியில் குறிப்பாக சில நேரங்களில் சொன்னார்கள், அவர்கள் திட்டத்திலே குறைத்து விட்டார்கள், அப்படி எல்லாம் திட்டத்திற்குச் சரியான வகையில்—நாங்கள் தன்னிறைவுத் திட்டத்திற்கு ஏகப்பட்ட ரூபாய் செலவு செய்தோம். இப்போது நீங்கள் அதை எல்லாம் செய்யவில்லை என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள்கூட நினைவுபடுத்தினார்கள். அவர் நினைவுப்படுத்திய காரணத்தினால் இதை நான் நினைவோடு இங்கே சொல்வதற்கு வந்திருக்கிறேன். காரணம், சென்னை மாநகராட்சிக்கு பல்வகை பணிகளுக்காக சென்ற ஆண்டு ஒதுக்கிய தொகை 9.12 இலட்சம் ரூபாய். அதே செலவுக்காக இந்த ஆண்டு ஒதுக்கி இருக்கிற தொகை 15 இலட்சம் ரூபாய், மழை நீர் வடிகால்கள், பழைய புதை கம்பிகளுக்குப் பதிலாகப் புதிய கம்பிகள் அமைப்பதற்குச் சென்ற ஆண்டு நிதி நாம் ஒதுக்கவில்லை. இந்த ஆண்டு அதற்கு மட்டும் தனியாக ஒதுக்கி இருக்கிற தொகை 15 இலட்சம் ரூபாய். தெரு விளக்குகள் வசதிக்காகச் சென்ற ஆண்டு 45 இலட்சம் ரூபாய்; இந்த ஆண்டு 45 இலட்சம் ரூபாய். தனியார் தெருக்களைப் பற்றிச் சொன்னார்கள். அவைகளிலே பாதாள சாக்கடை போட்டால்தான் அது பொதுத் தெருவாக அழைக்கப்படுகிறது, இல்லை என்றால் அது தனியார் துறை தெருவாக அழைக்கப்படுகிறது என்று எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் சொன்னார்கள். அதை சற்று மாற்றுவதற்காகத் தான் தனியார் தெருக்களைக்கூட மேம்படுத்துவதற்காக இந்த ஆண்டு 45 இலட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிறப்புத் திட்டங்களுக்காக எல்லாப் பணிகளும் சேர்ந்து இணைந்து சிறப்பாக தனித்து தேவையானதை செய்து முடிப்பதற்காக 600 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக நகராட்சிகளுக்கு மொத்தத்தில் நேரு வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக 2,332 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது. குறைந்த செலவிலான கழிவறை கட்டும் திட்டம் நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல் 21 நகராட்சிகளுக்கு 2,902 இலட்சம் ரூபாய் செலவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இதிலே தனித்து வெறும் மாநி

அரசுத் திட்டங்கள் மட்டும் நகர மேம்பாட்டு நிதிக்காக 3 மாநகராட்சிகள் மற்றும் 26 நகராட்சிகளுக்கு மாநில அரசால் மட்டும் 4,618 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட தனித்து தனித்து வேறு மத்திய, மாநில அரசுகள் அளிக்கிற திட்டங்கள் விடுத்து தனியாகவும் இந்த தமிழக அரசு தனித்து ஒரு சிறப்பு நிதி திட்டத்திற்கு வழங்கியிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத் தான் காலம் தாழ்த்தாமல் இதை நான் உங்கள் மத்தியில் சொல்ல ஆரம்பித்தேன். அதோடுகூட கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், கடந்த ஆண்டு பள்ளிக்கூடங்கள் 6.90 இலட்சம் ரூபாய் செலவு செய்து பழுது பார்க்கிற இன்னொரு முக்கியமான செய்தியை உங்களுக்கு நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

சாலைப் போக்குவரத்து, அதோடு கூட பள்ளி பராமரிப்பு மற்றும் முக்கியமான பணிகள், சாலைகள், பள்ளிக்கூட கட்டிடங்கள், ஊராட்சி மன்றங்களில் இருக்கிறது. ரொம்ப காலமாக அவைகள் இருக்கின்றன. அந்த ஊராட்சி மன்றங்கள் அனைத்திலும் கட்டிடங்கள் இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. அதுபோன்ற பல கட்டிடங்கள் பழுதடைந்தவைகளாகவும் இருக்கின்றன. அவைகள் அனைத்திற்கும் கட்டிட வசதி செய்துதர வேண்டும் என்று நாம் தற்போது விரும்புகிறோம். விரிவுபடுத்திய சாலைகளை மேம்பாடு செய்வதற்கு இது போன்ற திட்டத்திற்கு மதுரை மாநகராட்சிக்கு 15 இலட்சம் நிதி உதவியை நாம் செய்து இருக்கிறோம். கூடுதலாக சேர்க்கப்பட்ட பகுதிகள் திறந்தவெளி வடிகால்கள் கட்டுவதற்கு மதுரை மாநகராட்சிக்கு 10 இலட்சம் ரூபாய் நாம் இங்கேயிருந்து ஒதுக்கியிருக்கிறோம். இப்படி ஒவ்வொரு திட்டத்தையும் எடுத்துப் பார்த்தால் ஏராளமான தொகையை நாம் இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிறோம் என்பதைச் சொல்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியை அடைகிறேன். நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல் 1,255 கழிவறைகளில் ஜூலை மாதத்திற்குள் 145.97 இலட்சம் ரூபாய் செலவில் எல்லா வசதிகளும் புதுப்பிக்கப்படும் என்பதை இந்த மன்றத்திற்குத்தெரிவித்துக் கொள்ள நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஊராட்சி சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள் இவைகளைப் பற்றி இங்கே எல்லோரும் பேசினீர்கள். இந்த சாலைகள் பழுது இல்லாமல் இல்லை. அது உண்மைதான். அதை நான் மறுக்கவில்லை. அதற்குக் காரணம் சில சாலைகளையே காணோம்.

20-00 மணி

அதைக்கூட இங்கே குறிப்பிடலாம் என்று இருந்தேன். நீங்கள் சொல்லாவிட்டாலும் நானே சொல்லலாம் என்று இருந்தேன். ஏற்கெனவே, தி.மு.க. ஆட்சி நடந்த காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக இருந்த



காலத்தில் அவர்களிடத்தில் நான் வந்து எங்களுடைய ஊராட்சி ஒன்றியத்தில் என் சொந்த ஊருக்கு போகிற சாலையை அந்த ஊராட்சி மன்றத்தால் நிர்வகிக்க முடியவில்லை. மண் சாலையாகவே இருக்கிறது. கப்பி சாலையாகக்கூட போடமுடியவில்லை. ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிதி அதற்கு ஒத்துவரவில்லை. 6 கிலோ மீட்டர் சாலை பாழாய் கிடக்கிறது என்று அவர்களிடம் நான் முறையிட்டேன். அதை எப்படிச் செய்யலாம் என்று அதிகாரிகளை அழைத்து நான் கேட்கிறேன். நீ போ என்று சொன்னார். அதற்குப் பிறகு அதிகாரிகளை அழைத்து வைத்து, நானும் சற்று நேரம் அங்கே நின்றுகொண்டு இருந்தேன். அவரே ஒரு யோசனை சொன்னார். நான் குறிப்பிட்டு அவர்களிடத்திலே சொன்னேன். ஹைவேஸ் டிபார்ட்மெண்டுக்குச் சொந்தமான ரோடுகளுக்கு நீங்கள் பணம்கொடுக்கிறீர்கள், அவர்கள் அந்தப் பணியைச் செய்கிறார்கள். ஊராட்சிகளுக்கு பணம் இல்லை. ஊராட்சி ஒன்றியத்திற்குப் பணம் இல்லை. ஆகவே, அவர்களால் செய்யவே முடியவில்லை. ஆகையால் நீங்கள் அந்தச்சாலைகளுக்கும் கொஞ்சம் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, அவர்களே அறிவித்தார்கள். அதற்கு ஏற்கெனவே இருந்த ஹைவேஸ் டிபார்ட்மெண்டோடு கூடி ஹைவேஸோடு ரூரல் ஒர்க்ஸ் என்ற டிபார்ட்மெண்டையும் சேர்த்து மண் சாலையை கப்பிச்சாலையாக மாற்றி ஹைவேஸ் இடத்தில் ஒப்படைக்கலாம்; அதுபோல கல் சாலையை தார் சாலையாக மாற்றி ஹைவேஸ் டிபார்ட்மெண்டிடத்தில் ஒப்படைக்கலாம் என்று உத்தரவு போட்டார்கள். அதன்படி படிப்படியாக 5 ஆண்டுகாலத்திற்குள்ளாக வெகு சாலைகள் ஊராட்சி ஒன்றிய, ஊராட்சி மன்றச்சாலைகள் பழுது பார்க்கப்பட்டு செங்கல் கப்பி போடப்பட்டு அதற்குப் பிறகு கருங்கல் கப்பி போடப்பட்டு தார்ச்சாலையாகவே ஆக்கப்பட்டது. நம்முடைய ஆட்சிக் காலத்தில், மண் சாலையை கப்பிச்சாலையாக மாற்றுவதற்கும், கப்பிச்சாலையை தார்ச்சாலையாக மாற்றுவதற்கும் ஒரு திட்டத்தை வகுத்தோம். என்ன காரணத்தினாலேயோ, 10, 12 வருடங்கள் கழித்து நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. நாம் எப்படி மண் சாலையை கப்பிச்சாலையாக மாற்றி, பிறகு கருங்கல் சாலையாக மாற்றி, தார்ச்சாலையாக மாற்றினோமோ அது போல தார்ச்சாலை கருங்கல் சாலையாக மாறி, கருங்கல் சாலை கப்பிச்சாலையாக மாறி, கப்பிச்சாலை மண் சாலையாக மாறி, மண்சாலை மாஜி சாலையாக மாறி விட்டது. யாராவது 7, 8 வருடங்களுக்கு முன்னாலே துபாய்க்கோ அல்லது சிங்கப்பூருக்கோ போய்விட்டு, திரும்புகிறவர்கள் உட்கிராமங்களுக்குப் போவதற்கு யாராவது வந்தால் இங்கே ஒரு சாலை இருந்ததே அது எங்கே என்று கேட்கிற நிலை பல கிராமங்களிலே ஏற்பட்டு விட்டது. அதைக்கூட, அழைத்து வந்தவனே சொல்கிறான், அதை வெட்டிக்கொத்தி நான்தான் நட்டிருக்கிறேன், அடுத்த வருடம் அறுத்துவிட்டு விட்டுவிடலாம் என்று இருக்கிறேன் என்பான். அப்படிப்பட்ட நிலையிலே தமிழ்

நாட்டில் பல ஆயிரக்கணக்கான கிராமங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. நான் இதைக் குறிப்பிட்டு சொல்வதற்குக் காரணம், இரண்டு நாட்களாக வேறு வேலையே பார்க்காமல் தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை பஞ்சாயத்துக்களுக்கும் சொந்தமான சாலைகள் எத்தனை? ஒன்றியச் சாலைகள் எத்தனை? அவை எத்தனை கிலோ மீட்டர் இருக்கின்றன? அதில் என்னென்ன சாலைகள் இருக்கின்றன என்று ஒரு கணக்கைப்போட்டோம். பஞ்சாயத்து வாரியாக, ஒன்றிய வாரியாக உங்களிடத்தில் படித்து போரடிக்க நான் விரும்பவில்லை. ஆனால் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஒன்றியம் மற்றும் ஊராட்சி இவைகளுக்குச் சொந்தமான மண் சாலைகள் 31,432 கிலோ மீட்டர்; சரளைக் கற்கள் பரப்பிய சாலைகள் 21,599 கிலோ மீட்டர்; கருங்கல் ஜல்லி சாலை மற்றும் தார்ச் சாலைகள் 35,661 கிலோ மீட்டர். ஆக மொத்தம் 88,692 கிலோ மீட்டர் சாலைகள் இருக்கின்றன. இவைகளில் ஊராட்சி மன்ற சாலைகள், ஒன்றிய பெருஞ்சாலைகள் எதுவாக இருந்தாலும் மண் சாலையை சிகப்பு கப்பியாக மாற்றுவது; அதை கருங்கல் கப்பியாக மாற்றுவது; கருங்கல் ஜல்லியாக இருப்பதை ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததைப் போல மறுபடியும் தார்ச்சாலையாக மாற்றுவது என்ற அடிப்படையிலே ஒரு கணக்கைப் போட்டால் ஊராட்சி சாலைகளுக்கு 234 கோடியே 40 இலட்சம் தேவைப்படுகிறது. ஊராட்சி ஒன்றிய சாலைகளுக்கு 286 கோடியே 66 இலட்சம் தேவைப்படுகிறது. பேரூராட்சி சாலைகளுக்கு 62 கோடியே 19 இலட்சம் தேவைப்படுகிறது. எனவே, கூடுதலாக 588 கோடியே 25 இலட்சம் இருந்தால்தான் அவைகளை நாம் பூர்த்தி செய்யலாம். அதற்குத்தான் எல்லா சாலைகளையும் மேற்கொள்ள முடியாது என்ற காரணத்தால் நாம் சிற்சில சாலைகளைக் கணக்கிட்டு, அதுவும் திட்டமிடப்பட வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம். எவ்வளவு குறைவாக இருந்தாலும்கூட விரைவாக எடுத்து, குறிப்பிட்ட காலத்தில் முடிக்க வேண்டுமென்பதற்காக கிராமச்சாலைகள் மற்றும் பாலங்கள் மேம்பாடு திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்து, சாலைகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன.

20-05 மணி

ஊராட்சி ஒன்றியச் சாலைகள் சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். தற்போது அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், 500 மக்களுக்கு மேல், 1,000 மக்கள் தொகைக்குக் கீழ் உள்ள குடியிருப்புகளின் மொத்த எண்ணிக்கை 26,645. இவற்றில் பேருந்து வசதி கொண்ட குடியிருப்புக்களின் எண்ணிக்கை 12,713 தான். பேருந்து வசதி



உள்ள குடியிருப்புகளில் 9,014 குடியிருப்புகள் தார்ச்சாலை வசதி
யைக் கொண்டவை. 3,703 குடியிருப்புகளுக்கு தார்ச்சாலை
வசதிகள் இல்லை. இந்த 3703 குடியிருப்புகளுக்கான தார்ச்
சாலைகளின் மொத்த நீளம் 6,816 கிலோ மீட்டராகும். மேற்
படி சாலையின் நீளத்திற்கு 1/3 பங்காகிய 2,272 கிலோ மீட்டர்
சாலையை இவ்வாண்டில் தார்ச்சாலையாக மாற்றியமைக்க
வேண்டிய அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள
4,544 கிலோ மீட்டர் சாலையை வருகின்ற இரண்டாண்டு
களில் 1991–92 மற்றும் 1992–93–ல் தார்ச்சாலைகளாக
மாற்றியமைக்கப்படும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. பேருந்து
வசதியில்லாத 13,928 குடியிருப்புகளுக்கு அமைக்கப்பட
வேண்டிய கற்சாலைகளின் நீளம் 10,919 கிலோ மீட்டர். அதிலே
முக்கியமானது என்னவென்றால், 10 கிலோ மீட்டர் பஸ் போகும்,
2 கிலோ மீட்டர் கிராமச்சாலை இருக்கும். அந்தக் கிராமத்
தில் மண் சாலையாக இருப்பதால் அங்கே பஸ் போகமுடியாமல்
இருக்கும். 10 மணிக்கு 12 மணிக்கு இங்கே இறங்கி, 2, 3 கி.மீ
தூரம் நடந்து போகிற நிலை இன்றைக்கும் பல கிராமங்களில்
இருக்கிறது. அதற்காகத்தான் இதை ஒரு முன்னோடித் திட்ட
மாக, பேருந்து வசதி செய்து கொடுக்கிற நிலையில் உள்ள
அளவுக்கு 10,919 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட சாலைகளின்
நீளத்தில் 1/5 பங்காகிய 2,184 கி.மீ. சாலையை இவ்வாண்டி
லேயே (1990-91) கற்சாலையாக மாற்றுவது என்று திட்டம்
இடப்பட்டுள்ளது. மீதமுள்ள 8,735 கிலோ மீட்டர் சாலையை
நான்காண்டுகளில் 1991–92 முதல் 1994–95 வரை, கற்சாலை
யாக மாற்றியமைக்கப்படலாம்.

எனவே இப்படிப்பட்ட ஒரு குறியீட்டை, நிர்ணயித்து இப்படிப்
பட்ட ஒரு பணியைத் தொடர்ந்து உருவாக்கிவிட்டால் 3 வருட
காலத்திற்குள் சாலைப் பராமரிப்பு ஏற்பட்டுவிடும் என்ற நல்ல நம்
பிக்கை நமக்கு வருமென்ற காரணத்தால்தான், இந்தத் திட்டத்
டத்தை ஒரு முன்னோடித் திட்டமாக நாம் துவக்கியிருக்கிறோம்.
அதைத்தான் தனது முன்னுரையில் இந்த ஆண்டின் வரவு செலவுத்
திட்டத்தை இங்கே வைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள்
பேசியபோது, சாலைகளுக்கு என 10 கோடி ரூபாயை ஊராட்சி
ஒன்றியங்களுக்கு சாலை வசதிகளை நிவர்த்தி செய்வதற்கு
தந்தார்கள். அந்த தைரியத்தில்தான் இந்தத் திட்டத்தை
இந்தத் துறை உங்கள் மத்தியில் அறிவிக்கிறது என்பதை நான்
பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டும்
போதாது, அதோடு மீதமுள்ள தொகை — வறுமை ஒழிப்புத்
திட்டத்தின் ஒதுக்கீட்டிலிருந்து சிறிது தொகை எடுக்கப்பட்டு,
அதையும் இணைத்து — இது முக்கியமான பணியாக இருப்பதால்
இது நிறைவேற்றப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். அதற்குப் பிறகு சாலைகள் அங்கே
போட்டுவிட்டாலும், ஒரு சின்ன வாய்க்கால் குறுக்கிட்டால்,
நாம் என்ன எண்ணினோமோ அந்த எண்ணம் ஈடேறாது.

[திரு. கோ. சி. மணி] [1990 ஏப்ரல் 24

அங்கும் சாலை, இங்கும் சாலை, நடுவில் வாய்க்கால் இருந்தால் அது நிச்சயமாக நாம் நினைத்த அளவுக்கு பலனை அடைய முடியாது. அதற்காக ரொம்ப சிரமப்பட்டு, 5 கோடி ரூபாயில் அதுபோல வாய்க்கால்கள் குறுக்கிடுகிற சாலைகளில் சிறிய நடுத்தர பாலங்களைக் கட்டுவதற்கும், தடுப்புச்சுவர்கள் அமைப்பதற் காகவும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சிகளுக்கும் நாம் ஒதுக்க இருக்கிறோம்.

அடுத்ததாக பள்ளிக் கட்டிடங்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நீங்களேகூட சொல்லி அறிவித்தீர்கள். அதை முன்னாலே தெரிந்துகொண்டுதான் பள்ளிக்கூடங்களே இல்லை, மரத்தடியில் இருக்கிறார்கள், பள்ளிகளில் கூரைகள் இல்லை, வசதிகள் இல்லை என்று சொன்னீர்கள்.

20-10 மணி

இருக்கின்ற பள்ளிகள் அத்தனையும் உருப்படாமல் இருக் கிறது ; மழை பெய்தால் ஒழுகுகிறது. வெயில் அடித்தால் தலையில் வெயில்படுகிறது என்றெல்லாம் நான் போகிற இடங்களில் கூட பலர் என்னிடத்திலே சொன்னார்கள். ஆகவே இந்த அரசு இந்த ஆண்டு ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. ஏன் இந்த முடி வுக்கு வந்தோம் என்றால் ஒரு பெரும் பொறுப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். நகராட்சிக்கோ, ஊராட்சி ஒன்றியத்தினுடைய பள்ளிகளுக்கோ இருக்கின்ற சிறப்புகள்— ஆசிரியர்களுடைய சம்பளங்கள் முதலிய வற்றை நாங்கள் அவர்களுக்குக் கொடுத்துவிடுகிறோம், நீங்கள் கவலைப்படாதீர்கள் என்று ஒரு ஆறுதல் அளித்துவிட்ட காரணத்தால் நகராட்சியைப் பொறுத்தவரையிலும் சரி, ஊராட்சியைப் பொறுத்தவரையிலும் சரி சற்று துணிந்து திட்ட மிட்டு நாம் ஒரு நிலைக்கு வந்திருக்கிறோம்.

தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் உயர் தொடக்கப் பள்ளிகள் சொந்தக் கட்டடம் இல்லாமல் 779 பள்ளிகள் இருக்கின்றன. அந்த 779 பள்ளிகளுக்கும் சுத்தமாக கட்டட வசதியே இல்லை. அந்த 779 பள்ளிகளுக்கும் இந்த ஆண்டு நிச்சயமாக புதிய கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக கல்வி நிதியிலிருந்து 3 கோடி ரூபாயும், ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து 3 கோடி ரூபாயும் இந்த ஆண்டில் எடுத்து அதில் ஏதாவது பற்றாக்குறை வருமேயானால் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கொஞ்சம் பணத்தை எடுத்து இதை முழுமையாகச செய்துவிடலாம் என்று இந்த அரசு நம்பிக்கையோடு பணியாற்றுகிறது. நிச்சயமாக முடித்துத் தருவோம் என்ற உறுதியை இந்த அவையில் நான் கூறிக்கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 24] [திரு. கோ. சி. மணி]

தமிழகத்தில் மொத்தம் உள்ள 23,408 ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் 11,532 பள்ளிக்கூடக் கட்டிடங்கள் பழுதுபட்டுக் கிடக்கின்றன. நீங்கள் சொன்ன பள்ளிகள் எல்லாம் இந்தக் கணக்கில் வருகின்றன. பழுதடைந்து போய், பிள்ளைகள் படிக்க முடியாமல், அங்கே வேறு எந்தக் காரியமும் செய்ய முடியாமல் 11,532 கட்டடங்கள் இருக்கின்றன. இதுவரையில் அவற்றைப் பழுதுபார்ப்பதற்கான முழுமையான, முறையான எந்தத் திட்டமும் மேற்கொள்ளப்படவில்லை என்று சொன் னார்கள். இது இன்றைக்கு, நேற்று அதாவது ஒரே ஆண்டில் ஏற் பட்ட பழுதல்ல. பல ஆண்டுகளாக இருக்கிறது. இன்னும் கூட எனக்கு பயமாகக்கூட இருக்கிறது. ஒரு மதிப்பீட்டைச் சொல்லிவிட்டு அதைக் கையிலே வைத்து பிரித்து வேலை ஆரம் பிக்கின்ற வேளையிலே, இன்னொரு மதிப்பீடும்கூட வந்து விடுமோ என்ற அச்சம் எனக்குத் தோன்றுகிறது. இருந்தாலும் ஒரு மதிப்பீட்டைப் போட்டிருக்கிறோம். அந்த வகையில் அதற் காக அதாவது இந்த 11,532 பள்ளிக்கூட கட்டடங்களையும் 6 கோடி ரூபாய் செலவில், அத்தனை கட்டடங்களையும் இந்த ஆண்டு பழுது பார்த்து முடித்துவிடுவோம் என்று நிச்சயமாக இந்த அரசு உங்களிடத்திலே அறிவிக்கிறது என்பதை நான் தெரி வித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து பழைய காலத்திலும் சொன்னார்கள், இப்போதும் கூடச் சொன்னார்கள். நாங்கள் பீ.டி.ஓ.-வைப் பார்க்கப் போனால் அவர் கலெக்டர் ஆபீஸ்-க்குப் போய்விட்டார் என்று சொல்கிறார்கள். அல்லது அவர் டீ.டீ.ஓ. ஆபீஸ்க்கு போய் விட்டார் என்று சொல்கிறார்கள். அங்கே கூட்டம் நடக் கிறது, இங்கே கூட்டம் நடக்கிறது, எனவே இங்கே நிர்வாக அலுவலகத்தில் இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். அதிலே ஓரளவுக்கு உண்மை இருக்கிறது. அதை மறுக்கவில்லை. ஆனாலும் கூட ஒரு வரையறை ஏற்கெனவே செய்யப்பட்டிருக் கிறது. இப்போதும் ஒரு வரையறை செய்திருக்கிறோம். ஒரு வாரத்தில் இத்தனை நாட்கள் அவர்கள் கட்டாயம் அலுவலகத் தில் இருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு நிச்சயமாக இருக்கிறது. அது நிச்சயமாக நடைமுறைப்படுத்தப்படும். இன்னொன்று, அந்த அதிகாரிகள் அத்தனைபேரும் ஒரு வாரத்தில் ஒரு நாளாவது ஒவ்வொரு ஊராட்சியிலும், ஐந்தாறு ஊராட்சிகள் இருந்தால் அத்தனை பேரும் அங்கே இருக்கின்ற துணை அதிகாரிகளோடு சென்று மக்கள் குறை கேட்க வேண்டும் என்ற ஒரு நியதியை இந்த ஆண்டு ஏற்படுத்தியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அங்கே போய் அவரைப் பார்க்க முடியாது என்று சொன்ன காலம் மாறி, அவர்களே உங்களை வந்து பார்க்க வேண்டும் என்று சொல்கின்ற வகையில், இந்த அரசு இப்போது திட்டமிட்டிருக் கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு கூட 12,616 ஊராட்சிகளில் 6,135 ஊராட்சிகள் சொந்தக் கட்டடத்தில் உள்ளன. 1989–90 ஆம் ஆண்டில் அதாவது சென்ற ஆண்டில் 812 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்குத் திட்டமிட்டு கட்டப்பட்டன. மீதம் உள்ள 5,669 ஊராட்சி மன்றங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும். அவைகளுக்குக் கட்டடம் இல்லை. நீங்கள் பலவற்றைச் சொன்னீர்கள். எனவே, இந்த அரசு நடப்பாண்டில் 2,000 ஊராட்சிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுப்பது என முடிவெடுத்திருக்கிறது. எஞ்சிய 3,669 ஊராட்சிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் இரண்டாண்டுகளில் கண்டிப்பாக கட்டி முடிக்க வேண்டும் என்று இந்த அரசு ஊராட்சிகளுக்கு வலியுறுத்தி அறிவித்திருக்கிறது.

20-15 மணி

அதைவிட ஒரு பெரிய குறை சொன்னார்கள். பேரூராட்சிகள் நாதியற்றதாக இருக்கிறது. எந்தத் திட்டமும் எங்களுக்கு வரவில்லை. போன வருஷம் கூட கட்டடங்கள் ஊராட்சிக்குத்தான் கட்டினார்கள். இப்போதுகூட, பேரூராட்சிகளுக்குக் கட்டவில்லை என்று சொன்னார்கள். இருக்கிற 648 பேரூராட்சிகளிலே, 560 பேரூராட்சிகளுக்கு சொந்த அலுவலகக் கட்டிடங்கள் உள்ளன. மீதமுள்ள 88 பேரூராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடங்கள் இல்லை. அந்த 88 பேரூராட்சிகளுக்கும் இந்த ஆண்டு முழுமையாக கட்டிடங்களைக்கட்டி முடிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு கூட, நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டம். அதை ஒரு ஏட்டளவில்தான் நமக்குக் கொடுத்தார்கள். அதற்கு நாம் முழுமையாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்கள் அல்ல. அந்தத் திட்டத்தை கிராமப்புறத்தில் நாம் திட்டமிடுகிறோம் என்பதற்காக, நமக்கு அதை சற்று இணைத்திருக்கிறார்கள், நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டம் என்று. இதுகாறும், 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை என்று சுழற்சி முறையில் நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் நீர் ஆதாரங்கள் சீர்படுத்தப்பட்டு வந்தன. ஆனால், இந்த முயற்சியின் விளைவாக, முழுமையான திருப்தியை உருவாக்கவில்லை. எனவே, நடப்பு ஆண்டில் இரண்டு விதமான திட்டங்களை அமல்படுத்த இருக்கிறோம். ஆற்றோரம், மற்றும் ஆற்றுப் பாசனப் பகுதிகளில் அமைந்துள்ள கால்வாய்களைத் தூர் எடுத்து, செம்மைப் படுத்தும் பணி குடி மராமத்து அடிப்படையில் மேற்கொள்ளப்பட உள்ளது. 1971 ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடந்தபோது, நம்முடைய முதல்வர் அவர்கள், அந்தத் திட்டத்தை அறிவித்தார்கள். ஆனால், அந்த ஒரு வருடத்தில் தஞ்சை மாவட்டத்தில் ஒரு பஞ்சமே நீடித்தது. குறைந்த தண்ணீரை வைத்துக் கொண்டு





விவசாயிகள் அந்த நீர்ப்பாசனத்தை செப்பனிட்டு செய்து வந்தார்கள். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே, இந்த ஆண்டு இரண்டாகப் பிரித்து ஆற்று ஓரம் மற்றும் ஆற்று பாசனப் பகுதிகள் எங்கு இருக்கிறதோ, அங்கே உள்ள கால்வாய்களைத் தூர் எடுத்து,செம்மைப்படுத்தும் பணி, குடிமராமத்துத் திட்டம் என்ற முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. யார் யார் உழவர்களோ, அவர்களே உறுப்பினர்களாக சங்கம் அமைத்து, அதிலே குழு அமைத்து அவர்களே ஏ.பி.சி. என்று மூன்று வாய்க்கால்களாக இருந்தாலும், எத்தனை கிராமங்களிலே பாய்கிறதோ, அத்தனை கிராமங்களிலேயுள்ளவர்கள், அங்கத்தினர்களாக சேர்ந்து,அவர்கள் அனைவருமே ஒரு குழுவை அமைத்து, அந்தக்குழுவே அந்தப் பணியை நேராகச்செய்யலாம். காண்டிராக்ட் விடக் கூடாது. அதிகாரிகளிடத்திலே விடக் கூடாது. யார் அந்த நிலத்திற்கு உரியவனோ, யாருடைய நிலத்திற்குத் தண்ணீர் தேவையோ, அவனே அதற்கு உறுப்பினராக இருந்து, குழுவின் தலைவராக இருந்து, அதைச் செய்யலாம் என்று 1971-வது ஆண்டு அமல்படுத்தப்பட்ட அந்த குடிமராமத்துப் பணி, இந்த ஆண்டு, இந்த அரசு துவங்க இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 100 ஏக்கர் பாசனத்திற்கு உட்பட்ட பொதுப் பணித் துறைக்கு சேராத ஸ்தல பாசனக் கண்மாய்கள், சிறு பாசனக் கண்மாய்கள், முன்னாள் ஜமீன் கண்மாய்கள், வகைப் படுத்தாதக் கண்மாய்கள் போன்றவைகள் எல்லாம் வண்டல் படிந்து, மேடிட்டு பல பகுதிகளில் அது குளமா அல்லது தரையா என்று எண்ண முடியாத அளவுக்கு தரை மட்டமாகி இருக்கிறது. தண்ணீர் வந்தால் நிற்க முடியாது. அப்படிப்பட்ட வண்டல் படிந்த பகுதி முழுமையும் தேவைப்படும் அளவுக்கு ஆழப்படுத்துதலும், கரையைப் பலப்படுத்துதலும், மடைகளையும், மதகுகளையும் பழுது பார்த்துத் தருதலும், தண்ணீர் வரத்துக் கால்வாய்களை ஆழப்படுத்தி, சீர் படுத்துதலும் போன்ற ஒருங்கிணைந்த முழுமையான சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்படி, நடப்பு ஆண்டில், 1,000 கண்மாய்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை நான் இங்கே அறிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கு உரிய மதிப்பீட்டுப் பட்டியல், வேளாண்மைப் பொறியியல் துறையினால் தயாரிக்கப்பட்டு, அவர்களுடைய தொழில் நுட்ப உதவியோடு நடைமுறைப் படுத்தப்படும் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டொரு பேர் இங்கே தனியாக என்னிடத்திலே சொன்னார்கள் என்று கருதுகிறேன். விவசாயத்தை கால்நடைகள் அழிப்பதை தடுத்து நிறுத்த முடியவில்லை என்று என்னிடத்தில் சொன்னார்கள். அதற்காக கால்நடைப் பட்டிகள் இல்லையென்றும் சொன்னார்கள். அப்படிப்பட்ட பட்டியைப் பார்த்தே ரொம்ப காலமாகிவிட்டது. நான் வந்த ஒரு மூன்று

மாதத்திற்குள் இந்தப் பட்டியைப் பற்றி ஒரு கணக்குப் போட்டேன். 50 பட்டிகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதிலே ஒரு ஐந்தாறு ஊர்களைக் கேட்டேன். ஐந்தாறு ஊர்களைச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் 2 ஊர்களுக்குச் சென்றேன். அப்படிச் சென்றபோது, பட்டியைப் பார்த்தேன். பட்டி இருந்த இடம் தான் தெரிந்ததே தவிர, பட்டியைக் காணோம். 50 இருக்கிறது என்று சொன்னார்கள் ; ஆனால், பட்டியே காணோம். எனவே, தமிழ்நாடு பூராவும் கால்நடைப் பட்டிகள் இல்லை என்பது தற்போது தெரிய வருகிறது. ஆனால், ஒரே ஆண்டில் இதை இலக்கு நிர்ணயித்து செய்துவிட முடியாது. அதற்கு நில ஆர்ஜிதம் தேவைப்படும். தனியாக நிதி உதவி தேவைப்படும். எனவே, எங்கெங்கு யார் யார் எந்தெந்த ஒன்றியத்தில் நிலம் தற்சமயம் இருக்கிறது என்பதையும் அது பட்டி முழுமையும் பயன்படுத்த தகுந்த கிராமம் என்பதையும் அறிவிக்கிறார்களோ, அவர்களுக்கு முன்னிடம் அளித்து, இந்த ஆண்டே கால்நடை பட்டிகளைக் கட்டுவதற்கு இந்த அரசு திட்டம் இட்டிருக்கிறது. படிப்படியாக, தேவைப்படும் இடங்களில் எல்லாம் அதை செய்து முடிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

20-20 மணி

நிர்வாக மேம்பாடு பற்றி நான் ஆரம்பத்தில் சொல்லிவிட்டுவிட்டேன். திட்ட செயல்பாடு விரைவாகவும், அதே சமயத்தில் தரம் குறையாமலும் நிறைவேறும் நோக்கத்தை அடைய ஊரக வளர்ச்சித் துறையின் நிர்வாக அமைப்பில் சில மாற்றங்களைச் செய்தாக வேண்டும். தற்போதுள்ள நிர்வாக அமைப்பில், கோட்ட வளர்ச்சி அலுவலர்கள் முக்கியமான நிலையில் உள்ளனர். ஆனால் அவர்கள் செயல்படும் தன்மை முழு வேகத்தினை அடைவதில்லை. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலிருந்து சில அதிகாரங்களைப் பிரித்து, கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கு அளித்து அவர்களுடைய அதிகார வரம்பினை பலப்படுத்தியாக வேண்டும். இதன் விளைவாக, திட்ட செயல்பாடுகள் இன்னும் முனைப்பாக நடைபெற வாய்ப்பு உள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரூராட்சித் துறை 7—5—1981 முதல் தனித்து இயங்கத் துவங்கினாலும், இதற்கான பணி விதிகள் செயல்படாமல் இருந்தன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் அனைத்து பேரூராட்சிப் பணியாளர்களுக்கும் பணி விதிகள் வெளியிடப்பட்டுள்ளன, என்ற செய்தியை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன் இத்துறையில் பணி புரியும் சிறப்பு நிலை செயல் அலுவலர்களும் பதவி உயர்வு பெறும் நிலையை நாம் இன்றைக்கு உருவாக்கியிருக்கிறோம்.



எல்லாவற்றையும் விட இன்னொரு வேடிக்கை. ஊராட்சி மன்றத்திற்கென சில சொத்துக்கள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியத்திற்கு என்று சில சொத்துக்கள் இருக்கின்றன. அசையும் சொத்துக்கள் இருக்கின்றன. அசையாச் சொத்துக்கள் இருக்கின்றன. அதுபோல மரங்களும், காடுகளும், எல்லாம் இருக்கின்றன. இவைகளை பற்றி கர்ணம் அல்லது வி.ஏ.ஓ.-க்களை ரகசியமாகக் கேட்டால் தெரியுமே தவிர, அந்த ஊராட்சி அலுவலகக் கட்டிடத்தில் உட்கார்ந்துக் கொண்டு இந்தப் பஞ்சாயத்துக்கு என்ன சொத்து இருக்கிறது, அந்த ரெஜிஸ்டரை எடு என்று கேட்டால் பதிவேடே இல்லை. நான் இரண்டு மூன்று ஊராட்சி ஒன்றியங்களுக்கும், இரண்டு மூன்று ஊராட்சி மன்றங்களுக்கும் சென்று பார்த்தேன். எங்கேயாவது நீங்கள் பதிவேடு வைத்திருக்கிறீர்களா ? உங்கள் சொத்து எங்கெங்கே இருக்கிறது ? உங்களுக்கு என்னென்ன சொத்துக்கள் இருக்கின்றன என்று நான் கேட்டேன். ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும் தெரியவில்லை. அங்கே இருக்கிற கிளார்க்குக்கும் தெரியவில்லை. ஊராட்சி மன்றத்திற்குத்தான் தெரியவில்லை, பேரூராட்சி மன்றத்திற்காவது தெரிகிறதா என்றால் பேரூராட்சி மன்றத்திற்கும் தெரியவில்லை. பேரூராட்சி மன்றத்திற்குத்தான் தெரியவில்லை, ஊராட்சி ஒன்றியம் என்ற ஒன்று இருக்கிறதே, அது ஒரு பெரிய நிர்வாகம், அங்கேயாவது தெரிகிறதா என்றால் அங்கேயும் தெரியவில்லை. இத்தனை நாள் வரையில் சொத்துக் கணக்கு பதிவேடு ஊராட்சிகளிலும் இல்லை, ஊராட்சி ஒன்றியங்களிலும் இல்லை. இந்தத் துறையிலே அவர்கள் இதனை வைத்திருக்கவில்லை. எனவே, இனிமேல் நிச்சயமாக ஒவ்வொரு ஊராட்சியும், ஒவ்வொரு ஊராட்சி மன்றங்களும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களும் சொத்துப் பதிவேட்டை தயாரித்து வைக்க வேண்டும். அவை பரிசீலனைக்கு உட்பட்டவை. எந்த அதிகாரி இனிமேல் பொறுப்பு ஏற்றுக் கொண்டாலும் அந்த அதிகாரி உடனடியாக பஞ்சாயத்தை சுற்றிப் பார்த்து அந்தச் சொத்துக்களை சரி பார்த்த பிறகு தான் பொறுப்பேற்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அடிப்படையில்தான் சொத்துக்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நியதியையும் ஏற்படுத்தி இருக்கிறோம்.

இன்னொன்றையும் சொல்வேன். பேரூராட்சிப் பகுதிகளில் விலை மதிப்புள்ள சொத்துக்கள் எல்லாம், அதாவது மனைகள், சில கட்டிடங்கள் கூட இருக்கின்றன. அவை நமக்குச் சொந்தமா அல்லது மற்றவர்களுக்குச் சொந்தமா என்று தெரியாத அளவுக்கு பல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளுக்கும் இந்த ஆணை பொருந்தும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

இவைகள் நகராட்சி மன்றங்களுக்கும் பொருந்தும் வகையில் இவை விஸ்தரிக்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) சென்னை மாநகராட்சியில் இது இருப்பதாக சொன்னார்கள். (திரு. இரா. மோகன் எழுந்து நின்றார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மோகன் வரைக்கும் விரிவுபடுத்தப்படும்.......மோகன் உங்களுக்கும் விரிவுபடுத்த லாம். இருங்கள். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மதுரை மாநகராட்சிக்கும், கோவை மாநகராட்சிக்கும் 28, 29, 30 ஆகிய தேதிகளில் செல்ல இருக்கிறேன். அங்கே சில ஆய்வுகளை நடத்திப் பார்க்க இருக்கிறேன். அவைகளையும் பார்த்து அவர்களுக்கு நேரில் அறிவுரை வழங்க இருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஓர் உள் ஆய்வு முறை, எந்தக் கணக்கிலே பண்டங்களை வாங்குவது என்பதைப் பற்றி தெரியாமலேயே, யாருக்கும் தெரியாமலேயே இரும்பு வாங்குவது, சிமெண்ட் வாங்குவது, ஸ்டேஷனரி வாங்குவது, பம்ப் சாமான்கள் வாங்குவது, மற்றபடி விளக்குமாறு அல்லது துடப்பமாறு (சிரிப்பு) வாங்குவது போன்ற நிலைமைகள் இருக்கின்றன. நான் கூடக் கேள்விப் பட்டேன். ஒரு பஞ்சாயத்துக்கு ஆயிரம் விலக்குமாறு வாங்கி யிருக்கிறார்கள். ஒரு 5, 6 வருடத்திற்கு முன்னாலே வாங்கி யிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறு, சின்னசாமி அவர்கள் சொல்கிறார், விலக்குமாறு வீடுதோறும் இலவச மாகக் கொடுத்திருப்பார்கள் என்று. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் கொடுத்திருந்தால் கூடப் பரவாயில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அவரே விளக்கு மாறு கேட்கலாம். (சிரிப்பு)

20.25 மணி.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : நான் இதைத் தெரிவித்துக் கொள்வதற்குக் காரணம், ஒரு ஆயிரம் விலக்குமாறுகள், 500 விலக்குமாறுகள் வாங்கப்பட்டு, கிராமப் பஞ்சாயத்திற்குக் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நான் இதைச் சொல்வதற்கு காரணம், விலக்குமாறுகள் கிராமத்திற்குத் தேவைப்படாது. ஒரு பிளாச்சிலே கட்டி, கையாலே தள்ளுவார்கள். அதுதான் கிராமங்களிலே வழக்கம். மாறு என்பது சிமென்ட் ரோட். தார் ரோட் இவைகளிலே ஓரத்திலே கூட்டுவதற்குத் தான்



உபயோகப்படும். ஆனால் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு ஆயிரம் விளக்குமாறு, 500 விலக்குமாறு வாங்கப்பட்டிருக் கிறது. இவைகளைச் சொல்வதற்குக் காரணம், இந்த முறைகளிலே ஒரு மாற்றம் வேண்டும். இந்தப் பணிகளுக்காக இவைகளை வாங்க வேண்டுமென்று முதலிலேயே ஒரு செக்-அப் செய்து கொள்ள வேண்டும், ஒரு இனிஷியல் மேலதிகாரிகளிடம் பெற்றுக் கொண்டு, அந்தப் பொருள் களை வாங்க வேண்டுமென்று ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே நான் இப்போது உத்தரவிட்டிருக்கிறேன். ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த மாநிலத்தில் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 300 கோடி ரூபாய் பல வளர்ச்சித் திட்டங்களுக்கு செலவிடப்படுகிறது. அதிலே 4 முக்கியமான பணிகள். தொகுப்பு வீடுகள், சமூகக் காடுகள், ஊராட்சிப் பள்ளிக் கட்டிடங்கள், சாலைகள் மற்றும் இதர வேலைகள். இவைகளை எடுத்துக் கொள் வதற்கு தற்போது நாம் உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். உள் ஆய்வு என்று சொன்னால், ஆரம்பத்திலே ஆய்வு என்று சொன்னால் அதை ஏ, பி, சி, என்று 3 பிரிவுகளாகப் பிரித்திருக் கிறோம். ஆரம்பத்திலே ஒரு பணியைத் துவக்குவதற்கு முன்னால் இந்தப் பணிக்கு இந்த இந்த சாமான்கள் தேவைப்படுமென்று ஒன்று கொடுக்க வேண்டும். எந்த அதிகாரி செய்யப் போகி றாரோ அவருக்கு மேலுள்ள அதிகாரியிடம் எந்தெந்த சாமான்கள், எவ்வளவு வாங்கப் போகிறோம் என்பதற்கு ஒரு அனுமதி பெறவேண்டும். அந்த அனுமதி பெறுவதற்கு 'ஏ'. அதற்குப் பிறகு அதை வாங்கினேன் என்று சொல்ல வேண்டும். அது 'பி'. அதற்குப் பிறகு வழக்கம் போல் இருப்பது 'சி'. அந்தக் கணக்கில் அவைகளைச் சேர்க்கலாம். இந்த ஒரு இடை ஆய்வை இப்போது ஏற்படுத்தி இருக்கிறோம். இதெல்லாம் அனுபவத்தை ஒட்டித் தான். நாங்களாக இதைச் செய்யவில்லை. திடீர் திடீரென்று நீங்களே கேள்வி கேட் கிறீர்கள். ஒரு மாவட்டத்தைக் குறிப்பிட்டு, அங்கே அரிசி குறைவு இருப்பது உங்களுக்குத் தெரியுமா என்று கேட்கிறீர் கள். ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்காகக் கொண்டு வரப்பட்ட அரிசி குறைவு உங்களுக்குத் தெரியுமா என்று கேட்கிறீர்கள். அப்போதுதான் அந்த விவரம் எனக்கும் தெரிந்தது. நான் போய்ப் பார்த்தபோது 5 பஞ்சாயத்து ஒன்றியங்களில் ஒரு லட்சத்து இருபத்தெட்டாயிரம் ரூபாய்க்கு அரிசி இருப்பு குறைந்துள்ளது என்று சொன்னார்கள், எப்படிக் குறைந்தது என்று தெரியவில்லை. எனவேதான் இந்த மாதிரியான காரியங்களுக்கு இவைகளை நாங்கள் வைத்திருக் கிறோம். அதற்குப் பிறகு ஒன்றியங்களுக்கு, மாவட்ட அளவில் கொள்முதல் குழு அமைக்கிறோம். ஒன்றியங்களுக்கு, சாமான்களை வாங்க மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர்—தலைவர், திட்ட அலுவலர்—துணைத் தலைவர், நேர்முக உதவியாளர்—செயலாளர், செயற் பொறியாளர், குடிநீர் விநியோகம்—உறுப்பினர், செயற் பொறியாளர், மின்

வாரியம்—உறுப்பினர். இரண்டு ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், வளர்ச்சி மன்றத்தில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் 2 உறுப்பினர்கள்—இக்குழு 50 ரூபாய்க்கு மேற்பட்ட சாமான்களை வாங்க வேண்டுமென்றால், இவர்கள் பரிசோதித்து, இவர்கள் கொடுக்கும் விலை நிர்ணயத்தின் அடிப்படையில்தான் அவர்கள் வாங்க வேண்டும். இது ஒரு புதிய திட்டம். அதற்குப் பிறகு மாநில அளவில் ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். ஏனென்றால் 22 ரூபாய் டியூப் லைட் 50 ரூபாய் ஆகியிருக்கிறது. இதெல்லாம் ஒரு அனுபவம். அந்த அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன். 22 ரூபாய் டியூப்லைட் 50 ரூபாய், 45 ரூபாய் என்று ஆகியிருக்கிறது. ஆகையால் தான் டியூப் லைட்டுகள், பல்புகள், ஸ்டார்ட்டர்கள் இவைகள் எல்லாம் வாங்குவதற்கு ஒரு குழு அமைத்திருக் கிறோம். அரசுச் செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை— தலைவர், ஊரக வளர்ச்சி இயக்குநர்—உறுப்பினர், பேரூராட்சி களின் இயக்குநர்—உறுப்பினர், நகராட்சிகளின் இயக்குநர்— உறுப்பினர், தலைமைப் பொறியாளர், மின்சார வாரியம்— உறுப்பினர் இவர்கள் கூடி, பெரிய தரமான கம்பெனிகளை வரவழைத்து, அவர்களிடத்திலே பட்டியல் வாங்கி, அதிலே குறைந்த விலை எதுவோ அந்தவிலைக்கு யார் யார் தருகிறார் களோ அவர்களை எல்லாம் பட்டியலிலே சேர்த்து, அவர்கள் மாவட்ட அளவில், ஒன்றிய அளவில் கொடுக்க வேண்டு மென்ற நிபந்தனையோடு அவைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இன்னொரு காரியத்தை நாம் செய்திருக்கிறோம். அந்தக் கம்பெனிகளிடம் கேட்டிருக்கிறோம். எல்லா டியூப் லைட்டுகளிலும் அரசாங்க முத்திரை போட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அந்த அரசாங்க கோபுர முத்திரை அந்த பல்பில் போட வேண்டும். அதற்குக் கொஞ்சம் காசு கூட ஆனாலும் பரவாயில்லை. அதற்கு தனிச் செலவானாலும் தருகிறோம் என்று நாங்கள் தெரிவித்து இருக்கிறோம். அது பற்றி இன்னும் அந்தக் கம்பெனியிலிருந்து தகவல் வரவில்லை இதனுடைய கொள்முதலை அவர்கள் நிர்ணயிப்பார்கள்.

2.00 மணி

அடுத்து துப்புரவுப் பணியாளர்களுக்கு வீடு கட்டித் தர வேண்டும் என்று தங்கராசு சொல்லி இருந்தார். ஊராட்சி மன்றம், பேரூராட்சிகளில் வேலை செய்கின்ற துப்புரவுப் பணியாளர்களுக்கு இந்த ஆண்டு முதல் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் அவர்களை இணைப்பதற்கு இருக்கிறோம். காரணம் அவர்களில் பெரும்பாலோர் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் ஆக இருக்கிறார்கள். அப்படி அவர்கள் இருந்தால், அவர்கள் வாங்குகிற சம்பளத்தின் அடிப்படையில் மற்ற திட்டங்களுக்குப் போனால் அதில் சில தவறுகள் வரும்



என்று கருதி நாங்கள் இந்தத் திட்டத்திலே கிட்டத்தட்ட யாருக்கு இந்த ஆண்டு நிலம் இருக்கிறதோ, யார் யார் குடி இருக்கிறார்களோ அந்த இடத்தில் அந்த நிலம் அவர்களுக்குச் சொந்தமாக இருந்தால் அல்லது கொஞ்ச காலத்துக்குள் சொந்தம் ஆக்கிக் கொண்டால் அவைகளிலே அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே அந்த துப்புரவுப் பணியாளர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்ற திட்டத்தை இன்று முதல் நாங்கள் அறிமுகப்படுத்துகிறோம் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு மாதம், 2 மாதம், 6 மாதம் எல்லாம் சம்பளம் வாங்காமல் துப்புரவுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்ற ஒரு குறை இருந்தது. அது பற்றி விசாரித்த வகையில் அதில் உண்மையும் இருந்தது. அதற்காக நாங்கள் ஒரு புதிய ஏற்பாட்டைச் செய்யலாம் என்று இருக்கிறோம். அடுத்த மாதம் சம்பளம் கொடுக்க முடியாது என்று இந்த மாதத்தில் ஊராட்சி மன்றத்துக்குத் தெரிந்தால், விரும்பினால் ஊராட்சி ஒன்றியத்தில் கடன் பெற்று அவர்களுக்கு சம்பளத்தைக் கொடுத்துவிட வேண்டும்; அதற்குப் பிறகு ஊராட்சி மன்றத் துக்கு நிதி நிலை வருகிறபோது ஊராட்சி ஒன்றியத்தினர் அதைப் பிடித்தம் செய்து கொள்ள வேண்டும் என்று ஒரு ஆணை பிறப் பிக்க இருக்கிறோம்.

துப்புரவுத் தொழிலாளர்களுக்கு ஒரு வாரத்துக்கு ஒரு நாள் கூட ஓய்வு இல்லை; அவர்களுக்கு லீவு கொடுக்கவில்லை என்று ஒரு குறை சொன்னார்கள். அது சில இடங்களில் நடக்கிறது; சில இடங்களில் லீவு கொடுக்கிறார்கள். மாநக ராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும், ஊராட்சியாக இருந்தாலும், பேரூராட்சியாக இருந்தாலும் அங்கே பணியாற்றுகிற துப்புறவுத் தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும் வாரத்துக்கு ஒரு நாள் கண்டிப்பாக லீவு வழங்கப் படும்; அப்படி அவர்களுக்கு வழங்காமல் இருக்கும் அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு துப்புரவுப் பணியாளர் இறந்து விட்டால்—ஊராட்சி மன்றத்திலோ அல்லது நகராட்சியிலோ பணியாற்றுகிற துப்புரவுத் தொழிலாளர் இறந்து விட்டால் அவர்களுக்குத் தரப் பட வேண்டிய நிதி உதவிகள் 6 மாதம், 1 வருடம், 2 வருடம் கழித்துக் கூட கிடைக்கவில்லை; அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றுகுறை எங்களுக்கு வந்தது. அவர்கள் என்றைக்கு ஓய்வு பெறு கிறார்களோ அன்றையிலிருந்து 60 நாட்களுக்குள்ளாக அவர்களு டைய கணக்கைப் பார்த்து உரிய தொகைகளைப் பட்டுவாடா செய்துவிட வேண்டும் என்று நாங்கள் உத்தரவிடுகிறோம் என் பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கி றேன்.

மயானம், இடுகாடு இவைகளுக்குச் சாலைகள்இல்லை என்றுஒரு குறை இருந்தது. நான் இந்த மாமன்றத்தில் இருக்கிற நம்முடைய உறுப்பினர்களுக்குச்சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாளைக்கு சட்டமன்றக் கூட்டம் முடிந்து மே மாதம் ஊருக்குத் திரும்பிய நீங்கள்உடன் நீங்கள் அனைவரும் ஒன்றியத் தலைவர், ஊராட்சி தலைவர்களைச் சந்தித்து எந்தெந்தஊர்களுக்கு மயானங்களுக்கு சாலை இல்லாமல் இருக்கிறதோ அவைகளுக்கு சாலை பராமரிப்பு இல்லாமல் சொந்தமான இடம் இருந்தால் அல்லது யாரிடமாவது 'கன்சென்ட் லெட்டர்' வாங்கித் தந்தால் நான் அடுத்த மாதத்திலே அந்தப் பணியைத் தொடங்கி, படிப்படியாக அதை நிறைவேற்றித் தருகிறேன் என்ற உறுதியை உங்களுக்குத் தருகிறேன். ஆனால் இதற்கு உங்கள் ஒத்துழைப்பு கொஞ்சம் அதிகம் இருக்க வேண்டும். காரணம் ஆரம்பத்தி லேயே நிலம் கிடைக்காது. ஆகையினால் அதை நீங்கள் செய்து தர வேண்டும் என்று உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

20-35 மணி

துப்புரவுப் பணியாளர்களுக்கு அவர்களுக்கு மருத்துவப்படி நகராட்சி மன்றத்தில் அல்லது ஊராட்சி ஒன்றியத்தில் பணி யாற்றுகிறவர்களுக்கு, ஓய்வு பெற்று விட்டால், நகராட்சி மன்றங்களுக்குத்தான் முதலில் குறிப்பிடப்படுகிறது—நகராட்சி தில் ஓய்வு பெற்ற அதிகாரிகளுக்கு மாதம் 15 ரூபாய் மருத்துவப் படி வழங்க வேண்டும், எங்களுக்கு வழங்கவில்லை என்று கோரிக்கை வைத்தார்கள். அந்தப் படியை, அந்த 15 ரூபாயை இந்த 1—4—1990 ஆம் தேதியிலிருந்து வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் அனைவருக்கும் மருத்துவப்படியாக 15 ரூபாய் மாதாமாதம் வழங்கப்படும் என்பதை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சின்னசாமி அவர்கள் ஏதோ கேட்கிறார்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்பு மிகு அமைச்சரவர்கள் சொன்னதை நிச்சயம் செய்வார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதுவும் நிச்சயமாக 10 மணி இல்லாமல் அவர்கள் முடிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு எழுந்துள்ள காரணத்தினால், தினம் தோறும் வருவாய் வருகின்ற போக்குவரத்துத் துறை அமைச்ச ரவர்கள், எல்லோரும் சாப்பிடுவதற்கு ஒரு ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால், ஓட்டலை பத்து மணிக்கு முன்னாலே சாத்தி விடுகிறார்கள், எம்.எல்.ஏ. ஆஸ்டல் ஓட்டலை. (சிரிப்பு)



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சின்னசாமி அவர்கள் சாப்பாடு கேட்கும் பொழுது இல்லை என்று மறுக்கக் கூடாது. தைரியம் இருந்தால் அவர் என்னோடு வரலாம், வீட்டில் சாப்பாடு தயாராக இருக்கிறது. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சின்னசாமி தைரி யத்தைப் பற்றிச் சொல்லப் போகிறார் இப்போது. (சிரிப்பு)

திரு. வி. கே. சின்னசாமி : பேரவைத் தலைவரவர்களே, அவர் கொங்கு மண்டலத்தைச் சேர்ந்தவர், நானும் அதே இடத்திலிருந்து வந்தவன்தான். நான் தைரியத்தோடு அவர் களோடு சென்று அவர்கள் வீட்டிலே உணவு அருந்தத் தயாராக இருக்கிறேன். ஆனால், இங்கே இருக்கின்ற அனைவருடைய நிலைமை என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத் தனியாகக் கவ னிப்போம்.

திரு. வி. கே. சின்னசாமி : எல்லோருக்கும் அதைச் செய்தால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது திரு. சின்னசாமியை நீங்கள் அழைத்துக் கொண்டு போவது என்று முடிவு செய்தாகிவிட்டது அல்லவா? சரி, முடிந்தது.

திரு. வி. கே. சின்னசாமி : தலைவரவர்களே, என்னைக் கொஞ்சம் காப்பாற்றுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சின்னசாமிக்கு ஒரு கொசுறு.

திரு. வி. கே. சின்னசாமி : தலைவரவர்களே, அவர் சாப்பாட்டுக்குத்தான் அழைத்தார். நான் அதைத்தான் சொல்ல வந்தேன். எல்லா உறுப்பினர்களையும் அழைத்துச் சென்று அவர்கள் இல்லத்திலே சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்தால் மிக நன்றாக இருக்கும். ஏனென்றால் பத்து மணிக்கு ஓட்டலை மூடிவிடுவார்கள். டெல்லியிலே இரயில்வே போர்டு செய்கிறார்கள். நமக்கு இரயில்வே போர்டு இல்லை, போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள்தான் இருக்கிறார் கள். ஆகவே, அதை நிச்சயமாக அவர் கடைப்பிடிப்பார். ஏனென்றால் பத்து மணிக்குள்ளே நிச்சயமாக முடிக்க மாட்டார். நன்றாகத் தெரிகிறது. அதிகாரிகளே கூட இப்பொழுது என்ன செய்யப் போகிறார் என்று தெரியாமல் அவர்களும் உட்கார்ந் திருக்கிறார்கள். (சிரிப்பு)

**திரு. அ. இரகுமான்கான் :** தலைவரவர்களே, ........ (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்குச் சார்பானது தான் சொல்கிறார்.

**திரு. அ. இரகுமான்கான் :** பேரவைத் தலைவரவர்களே, ........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் என்ன ரம்ஜான் கஞ்சி ஊற்றப் போகிறேன் என்று சொல்கிறீர்களா? (சிரிப்பு)

**திரு. அ. இரகுமான்கான் :** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் தர வேண்டிய விளக்கங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் சென்னை நகரத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள். ஆகையினாலே ரொம்பவும் நேரமாகிவிட்டது என்று உறுப்பினர்கள் சொல்லி, அதில் உற்சாகம் இல்லாமல் போய் விடுகிற காரணத்தினாலே நம்முடைய அமைச்சரவர்களை அன்போடு ஒரு வார்த்தை மட்டும் இங்கே குறுக்கிட்டுக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் சென்னை நகரத்திலே, எல்லாத் தொகுதிகளுக்கும், எந்தச் சட்டமன்ற உறுப்பினர் அழைத்தாலும் தட்டாமல் மூன்று மணிக்கே வந்து, மிக அதிகமான நேரம் சுற்றி எல்லா இடங்களையும் பார்க்கிறார்கள், நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் பல பகுதிகளில், என்னுடைய தொகுதியிலே உள்ள குறைபாடுகளை அதிகாரிகளும் குறித்துக் கொள்கிறார்கள். என்ன follow up action என்ன நடவடிக்கை என்பது குறித்து—அத்தனை பேரும், சட்டமன்ற உறுப்பினர் கணபதி, சகோதரர் ஸ்டாலின், இளம்வழுதி எல்லோரும் கேட்கச் சொன்னார்கள். அவர்கள் சார்பாகக் கேட்கிறேன். அந்த follow up action எங்களுக்கு அதிகாரிகள் உடனடியாக எழுதுவதற்குச் சேர்த்து அமைச்சர் அவர்கள் அதையும் கவனப்படுத்திப் பேச வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது நாங்கள் 'follow' செய்வது திரு. சின்னசாமி வேண்டுகோளைத்தான் (சிரிப்பு) எங்களுக்கு அதுதான் அவசரம்.

**திரு. அ. இரகுமான்கான்:** எங்களுக்கு அதிகாரிகள் கடிதம் எழுதுவதற்கு அமைச்சர் அண்ணன் கோ. சி. மணி அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே காங்கிரஸின் பங்கு இல்லையே என்று திரு. சொக்கர் வருத்தப்படுகிறார்.



**திரு. ரா. சொக்கர் :** பேரவைத் தலைவரவர்களே, போகின்ற போக்கைப் பார்த்தால், காலையில் bed coffee-க்கும் சேர்த்து ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டியிருக்குமோ என்று அச்சப்படுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** Bed coffee-க்கு ஏற்பாடா? (சிரிப்பு)

20—40 மணி

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஒரு வேண்டுகோளை இங்கே வைத்தார்கள். நான் அவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் சேர்த்தே இங்கே ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் 2, 3, 4 மணி நேரங்களில் சுற்றிப் பார்த்து என்னென்ன வேலைகளை கண்டிப்பாகச் செய்ய வேண்டுமென்று அங்கேயே உத்தரவாகச் சொல்கிறேன். ஆனால் அந்த வேலைகள் அத்தனையும் ஒரு நாளில் முடிக்க முடியாத வேலையாகக் கூட இருக்கிறது. சில வேலைகள் முடிக்கப்பட மாதக் கணக்கில் கூட ஆகலாம். எனவே, பரவலாக இந்த வேலையை ஆரம்பித்து விட்டுள்ள நிலையில் நான் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலும் சொல்லி இருக்கிறேன். நீங்கள் ஒரு வாரம் கழித்து அந்த இடத்தைப் போய்ப் பாருங்கள். நானே பார்க்கிறேன். கொத்தவால்சாவடிக்கு ஆறுமுறை போய் இருக்கிறேன். கொத்தவால்சாவடியை சுத்தம் செய்வோம் என்று சொன்னதை செய்திருக்கிறார்களா என்று பார்ப்பதற்கு நான் 5 முறை, 6 முறை போய் இருக்கிறேன். அதைப் போல நீங்களும் பார்க்க வேண்டும். நான் அதிகாரிகளுக்கும் சொல்கிறேன். அந்த வேலையைச் செய்கிற உங்களுக்கு, இந்த வேலையை நாங்கள் செய்திருக்கிறோம் என்று அவர்களுக்குச் சொல்வதில் ஒன்றும் சங்கடம் இல்லை. காலக் கட்டத்தை வைத்து கொண்டு அவர்கள் தெரிவிக்கலாம் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. அ. இரகுமான்கான் :** தலைவர் அவர்களே, தெரிவிக்கலாம் என்பதற்குப் பதிலாக தெரிவிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். இது ரொம்ப முக்கியமான செய்தி. சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் எங்களுக்குள்ள மிகப் பெரிய பிரச்சினை சட்டசபையில் பேசுகிறோமா என்பது கூட முக்கியம் இல்லை. தொகுதிக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் வருகிறார்களா, அமைச்சர்களை அழைத்துக் கொண்டு வந்து காட்டுகிறார்களா, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கிறார்களா என்று மக்கள் பார்க்கிற காரணத்தால், நாங்கள் அடிக்கடி மக்கள் குறைகளை கேட்க தொகுதிக்குப் போய் வருகிறோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை

கேட்டுக் கொள்வது, என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எங்களுக்குத் தெரிவித்தாலே போதுமானது. நாங்களும் அதைத் தொடர்கிறோம்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, அவர்கள் தெரிவிக்க நான் அறிவுரை வழங்குகிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** சபாநாயகர் அவர்களே, சென்னையில் இருக்கிற சட்டமன்றத் தொகுதிகளை எல்லாம் நமது அமைச்சர் அவர்கள் சுற்றிப் பார்த்து உடனுக்குடன் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பது கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். சில வாரங்களுக்கு முன்னால் அமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதமே எழுதியிருந்தேன். அவர்களுடைய பார்வைக்கு வந்ததா என்று தெரியவில்லை. என்னுடைய சாத்தான்குளம் தொகுதிக்கு அவர் ஒன்றிரண்டு நாட்கள் வர வேண்டும். அவர்கள் வருகிற நேரத்தில் எனக்கும் தகவல் வந்தால் —கிராமங்களை நன்றாகத் தெரிந்தவராக இருக்கிறார்கள். பல தகவல்களைச் சொல்கிறார்கள். ஆங்காங்கே உத்தரவு போடுவதற்கு வசதியாக இருக்கும் என்று நான் கடிதம் எழுதியிருந்தேன். அவர்கள் அதன்படி எங்கள் தொகுதிகளுக்கும் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, நான் கடிதத்தைக் கண்டேன். அதிலே ஒன்றும் தவறு இல்லை. ஆனால் சட்டமன்றத் தொடர்க் கூட்டம் நடந்துக் கொண்டிருக்கிற காரணத்தால், அவைகளை எல்லாம் வாங்கி கோர்த்து, தொகுத்து வைத்திருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேதி நிர்ணயித்து அனுப்பப் போகிறேன். நிச்சயமாக நம்முடைய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவருக்கும் தெரிவிப்பேன். விருப்பம் இருந்தால் அவர் என்னோடுகூட அந்த பணியிடங்களுக்கு வரலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** இப்போது 30 விழுக்காடு அடிப்படையில் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள், (சிரிப்பு).

**திருமதி பாப்பா உமாநாத் :** தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் அழைத்த போது அமைச்சர் அவர்கள் உடனடியாகச் செல்வதாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். ரொம்ப நல்லது. ஆனால் நாங்கள் எல்லாம் என்ன பாவம் செய்தோம்? எங்களுடைய மாவட்டத்திற்கு அமைச்சர் அவர்கள் வருவார்களா? இதுவரை அவர் வரவில்லை. பலமுறை நான் அழைத்து இருக்கிறேன் என்பது ஒன்று. இரண்டாவது, அவர் ஊராட்சி மன்றத்தைப் பற்றியும், பேரூராட்சிப் பற்றியும் சால்லும்போது புதிய கட்டடம் என்று சொன்னார்



நகராட்சிக்கும் உண்டா? குறிப்பாக பொன்மலை நகராட்சி நெரிசலான ஒரு இடத்தில் நடந்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொண்டு அதற்கும் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் ஒரு வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறார்கள். அதிலே தங்களுடைய நகராட்சி மன்றத்திற்கு பெண்களுக்கு கழிப்பறை இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு கழிப்பறை கட்டடம் கட்டினால் 10 அறைகள் பெண்களுக்கு, 10 அறைகள் ஆண்களுக்கு என்று தான் கட்டுவது வழக்கம். அங்கே 5 கழிப் பறை இருப்பதாக நேற்று மாலையில் அந்த நகராட்சியிலிருந்து நாங்கள் தகவல் தெரிந்து கொண்டோம். மேலும் அங்கே வீடுகளுக்கு—நான் ஏற்கெனவே ஒரு திட்டத்தின் அடிப்படையில் சொன்னேனே—அந்த கழிப்பறைகளைக் கட்டிக் கொடுக்க, அந்தத் திட்டம் உங்கள் நகராட்சிக்கும் அரசு அமல்படுத்த இருக் கிறது. இருந்தாலும் உங்கள் வேண்டுகோளை ஏற்று, உங்க ளுடைய பொன்மலை நகராட்சிக்கு—நீங்களும், ஆணையரும், பெருந்தலைவரும் சந்தித்து காட்டப்படுகிற இடத்தில் ஒரு கழிப்பறை கட்டுவதற்கு இந்த அரசாங்கம் அறிவுரை வழங்கி, அது கட்டி முடிக்கப்படும். (குறுக்கீடு) நீங்கள் கழிப்பறையும் கேட்டிருக்கிறீர்கள், கட்டடமும் கேட்டிருக்கிறீர்கள். கட்ட டத்தை நானாகக் கட்ட முடியாது. உறுப்பினர் விவரம் தெரிந் தவர். அங்கே போய், நகராட்சி மன்றத்தை அணுகி, அங்கே யிருந்து புரப்போசல் அரசாங்கத்திற்கு அனுப்பி, அதைப் பரிசீலித்து, தகுதியிருந்தால், கடன் வழங்கி, நிச்சயமாக—கடன் கூட அலுவலகக் கட்டடத்திற்கு வழங்க முடியாது. அதன் சொந்த நிதியிலேயும், வேறு ஏதாவது நிதி இருந்தால் அதிலே செய்ய முடியுமே தவிர, நகராட்சிக்கு அலுவலகக் கட்டிடம் கட்ட பணம் கடன் கிடையாது. வளாகம் கட்டலாம், அதிலே பேருந்து நிலையம் கட்டலாம், இப்படி வருவாய்க்குத் தக்க பலன் வருவதற்குக் கட்டலாமே தவிர, வேறு வகையில் கட்ட முடியாது. புரப்போசல் அனுப்பினால் அதை நான் கவனிக் கிறேன்.

20–45 மணி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், வயிறாரச் சாப்பிட்டுவிட்டு வந்து ஆர அமர உட்காருகிறார்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** அவர் விவரம் தெரிந்தவர். அதைச் செய்திருப்பார் என்று நானும் நினைக்கிறேன். (சிரிப்பு).

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது சாப்பிடுகிற நேரம் அல்ல எனக்கு. நான் இரவு பன்னிரண்டு மணிக்குத்தான் சாப்பிடுவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாங்கள் தவறாகக் கணக்கிட்டுக் கொண்டோம். (குறுக்கீடுகள்). அமைச்சர் அவர்கள் சொல்லி முடிக்கட்டும். முடித்த பிறகு கேட்கலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இயன்றவரை விரைவில்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : 23 பேர்கள் பேசினீர்களே, நான் கேட்டுக் கொண்டு தானே இருந்தேன். நான் எழுந்திருந்தேனா. பேசியதை எல்லாம் பேசி விட்டீர்கள். நான் எல்லாவற்றுக்கும் ஏதாவது திருப்பிச் சொன்னால்தானே, மந்திரிக்கு அழகு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், இந்த 23 பேர்கள் பேசிய நேரத்தையும் திருப்பிப் பேச வேண்டுமா என்று கேட்கிறார்கள், வேறு ஒன்றும் இல்லை. (சிரிப்பு).

மாண்புமிகு திரு கோ. சி. மணி: அனைத்து நகராட்சிகளிலும் மற்றும் நகரியங்களிலும் பணி புரியும் சுகாதாரப் பணியாளர்களுக்கு தூசிப் படியாக மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் வழங்க உத்தரவிட்டு இருக்கிறோம். நாங்களும் இந்தத் தூசியில் கிடந்துதானே இருக்கிறோம், எங்களுக்கும் அந்தப் படியை ஏன் வழங்கக் கூடாது என்று அந்த வேலையை மேற்பார்வையிடுகிறவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதற்காக அவர்களுக்கும் துப்புரவுப் பணியை மேற்பார்வையிடுகிற மேற்பார்வையாளர்களுக்கும் தூசிப் படியாக மாதம் ஒன்றுக்கு 15 ரூபாய் இந்த 1-4-1990 முதல் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து நகராட்சிகளிலும், நான் முதலிலே அறிவித்ததற்கு இணங்க இந்த 15 ரூபாய் படியும் இந்த மாதம் முதற்கொண்டு வழங்கியிருக்கிறோம். அதேபோல், பல திட்டங்களை உங்களுக்குச் சொன்னோம். 3 நகராட்சிகளிலும், 2 மாநகராட்சிகளிலும்—மாநகராட்சிகள், மதுரை, கோயம்புத்தூர், நகராட்சிகள், கரூர், தஞ்சாவூர் போன்ற 3 நகராட்சிகள் இன்றையதினம் மின்சாரம் வினியோகிக்கும் பொறுப்பை அவர்கள் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதிலே 15 வருடமாக ஒரு குறைபாடு இருந்து வந்தது. முதலிலே அவர்களை மின்சார இலாக்காவிற்குப் போ என்றார்கள். பிறகு அவர்களை திரும்ப நகராட்சிக்கு வா என்றார்கள். இந்தச் சம்பளம் தான் வாங்கலாம் என்றார்கள், பிறகு அந்தச் சம்பளம் தான் வாங்கலாம் என்றார்கள். அதற்குப் பிறகு 1-10-1978-க்கு முந்தி இருந்தவர்கள் இதிலே இருக்கலாம் என்றார்கள். பிறகு 1-10-1978-க்குப் பிறகு இதிலேதான் இருக்க வேண்டும் என்றார்கள். அந்தக் குறையைப் போக்க ஏறத்தாழ 7 இலட்சம்



ரூபாய் செலவில், அனைத்து ஊழியர்களுக்கும் இந்த மின்சார வாரியத்திற்கு உரிய சலுகைகள் அத்தனையும், அவர்கள் இறந்துவிட்டால், குடும்பத்திற்கு 40 ஆயிரம் போன்ற உதவிகளைச் செய்ய இந்த அரசாங்கம் உத்தரவாதத்தைச் செய்யும் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் பல அறிவிப்புகள் இருக்கின்றன. இனிமேல் தாக்குப் பிடிக்க மாட்டீர்கள் என்பதை நான் உணர்கிறேன். (சிரிப்பு) இங்கே நமது மாண்புமிகு தலைவர் அவர்கள் வாயிலாக நான் இதைப் புரிந்து கொண்டேன். இருந்தாலும் நான் அடிக்கடி இனிமேல் உங்களை நேரிலாவது சந்தித்து, விவரங்களைச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்து, நான் இப்போது அரைகுறையாகத்தான் முடிக்கிறேன் (சிரிப்பு). இனிமேல் உங்களைக் கேள்வி கேட்க அனுமதிக்க மாட்டேன் நான். நான் விரும்பமாட்டேன், எழுந்து சொல்ல மாட்டேன், என்னைப் பேசவிட்டால், உங்கள் கேள்வியையே நான் பதிலாக்குவேன். நான் முடித்து உட்கார்ந்த பிறகு நீங்கள் கேட்பது நியாயமில்லை. எனக்கும் பசிக்கும் அப்புறம். அந்த கன்டிசனோடுதான் உட்காருவேன். (சிரிப்பு).

எனவே ஏறத்தாழ இதுவரையில் 23 உறுப்பினர்கள் சீரிய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். ஏறத்தாழ 73 பேர்களுக்கு மேல் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். எனக்கு ஒரு நல்ல அனுபவத்தைக் காட்டியிருக்கிறீர்கள். ஒவ்வொரு வெட்டுத் தீர்மானத்திலேயும் ஒரு கருத்தை அடக்கியிருக்கிறீர்கள். உங்களுடைய வெட்டுப் பிரேரணைகள் அனைத்தையும் நான் படித்தேன். உங்களுடைய வெட்டுப் பிரேரணைகள் அனைத்தையும் என் மனதில் வைத்திருக்கிறேன். உங்களுக்குப் பதிலை இந்த நேரத்திலே நான் தெரிவித்தாலும்கூட, நிறைவேற்ற முடியாது என்று சிலருக்குத் தெரிவித்தாலும் கூட, காலத்தில் பல பணிகளை நிறைவேற்றுவதற்கான தகுதியில் நான் இருக்கிறேன் என்ற உறுதியைத் தந்து இந்த மானியத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டு, நிறைவேற்றித் தர வேண்டும் என்று பணிவோடு கேட்டு அமர்கிறேன்.

20-50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும்

திரு. எஸ். டி. உகம் சந்த், திரு. ஆர். சிங்காரம், திரு. வி. இராமசாமி ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிருவாகமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 224,86,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளை காலை (25–4–1990) 9 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை இரவு 20-51 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

8. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

72. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1985–86 ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை [1971ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

73. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

74. தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1986-87ஆம் ஆண்டிற்கான கணக்குகள் [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

121. கோரிக்கை எண். 23 - சமுதாய வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (ஆங்கிலம்).

122. கோரிக்கை எண். 28 - சமுதாய வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ்).

128. கோரிக்கை எண். 28 - நகராட்சி நிருவாகமும், மாநகராட்சிகளும், 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

129. சமுதாய வளர்ச்சி குறித்த செயல்வினை முறைத் திட்டம், 1990-91 (தமிழ்).

130. நகராட்சி நிருவாகமும், மாநகராட்சிகளும் குறித்த செயல்வினை முறைத் திட்டம், 1990-91 (ஆங்கிலம்).

131. பேரூராட்சிகள் நிருவாகமும் குறித்த செயல்வினை முறைத்திட்டம். 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

132. அரசு உறுதி மொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கை' 1989-90.

133. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் ஐந்தாவது அறிக்கை, 1989-90.

134. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (ஏழாவது பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை).

135. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எட்டாவது பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை).

136. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (ஒன்பதாவது பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை).

## இணைப்பு—I

(198-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### சமுதாய நல வளர்ச்சி.

முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடங்கப்பட்ட சமுதாய வளர்ச்சி திட்டங்கள், சாதி சமய, பொருளாதார வேறுபாடின்றி, கிராம சமுதாயம் முழு வளர்ச்சி அடைவதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தன. இத் திட்டங்கள், கிராம மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கையை மாற்றி யமைக்கும் பணியில் நாட்டம் செலுத்தின. ஊரக மேம்பாட் டிற்கு முக்கியத்துவம் அளிக்கின்றபோது, அது தொடர்பானத் திட்டங்கள், அங்கு வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் பொதுவாக இருக்கவேண்டும். என்பது அவசியமானதும், முக்கியமானதும் ஆகும். மக்கள் அங்கம் வகிக்கின்ற உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக, சமூகப் பொருளாதார மாற்றங்களை கொண்டுவர பாடுபடுவது எனத் தொடக்கத்தில் கருதப்பட்டது. இத்தகைய உள்ளாட்சி அமைப்புக்கள், நலமுடைய அரசிய லமைப்புச் சட்டத்தின் அடிப்படையாக அமைந்துள்ள மக்களாட்சி முறையை வலுப்படுத்தப் பெரிதும் உதவும் எனக் கருதப்பட்டது. இத்தகைய சமுதாய வளர்ச்சியின் முக்கியத்துவம் பற்றியும், சமுதாய வளர்ச்சிப் பணியில் கிராம மக்கள் ஆற்ற வேண்டிய பணி பற்றியும், கிராம மக்கள் அறிந்து கொண்டு, மக்களாட்சி முறையில் கிராம மக்கள் தங்களுடைய நிலை பற்றியும் அவர்கள் அறிந்துகொள்ளச் செய்ய வேண்டும். எனக் கருதி சமுதாய வளர்ச்சிப் பணியும், மக்களாட்சி முறையும், ஒருங்கிணைந்து செயற்பட்டு ஒன்றை ஒன்று வலுப்படுத்தும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. செயற்படுத்தும் நிலையில் இத்திட்டங்கள் கிராம மக்களின் செயல்திறனை அதிகரிப்பதற்கும், அவர் களுக்குச் சிறந்த வாழ்க்கைத் தரத்தை அளிப்பதற்கும் உரிய கிராமப் பொருளாதாரத்தில் அனைத்துத் துறைகளின் வளர்ச்சி யையும் ஒருங்கிணைக்க உதவுகின்றன. இத்திட்டங்களின் மூலம் கிராமப் பகுதியில் காணும் அனைத்துப் பிரச்சினைகளையும் மிகுந்த ஈடுபாட்டுடன் பரிசீலித்து, அவற்றிற்குத் தீர்வு கண்டு, தற்போதுள்ள வாழ்க்கை முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி, கிராம மக்கள் வாழ்க்கையில் எவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதை அறிவுறுத்தி, அவர்கள் மேற்கொள்ள வேண் டிய அடிப்படைப் பணியை வரையறுக்க முயற்சி மேற்கொள்ளப் பட்டு வருகிறது. கிராம மக்களுக்கு சமத்துவம், சமூக நீதி ஆகியவற்றுடன் கூடிய வளர்ச்சிக்கு வகை செய்யும் ஐந்தாண்டுத் திட்டங்களின் வழிகாட்டிக்கொள்கைகளும், நோக்கங்களும் கிராமப் பகுதிகளில் விரும்பத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ''சமுதாய வளர்ச்சித் திட்டங்களே,'' தக்க சாதனம் என்று வலி யுறுத்துகின்றன. இத்திட்டங்கள் ஆரம்பத்தில் பஞ்சாயத்துராஜ் அமைப்பை வலுப்படுத்த உதவின. ஆனால், சில ஆண்டுகளுக்கு பிறகு பஞ்சாயத்து ராஜ் அமைப்புக்கள் சீர்குலைந்தன.





வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, பிற துறைகள் ஆகியவற்றில் வகுக்கப்படும் திட்டங்கள் பல கூறுகளாகப் பிரிக்கப்படுவது அதி கரித்துக் கொண்டே போனதால், அவற்றை நிருவாகத்திலுள்ளோர் அவர்களின் பதவி நிலை, வரிசை முறைப்படி செயலாக்கவேண்டிய தாயிற்று; அதன் காரணமாக, இத்திட்டங்கள் பற்றி உள்ளாட்சி அமைப்புகள் தெரிந்து கொள்ள இயலாமல் போனதோடு, வளர்ச்சி திட்டங்களைச் செயலாக்குகையில் ஊராட்சி அமைப்புகள் அவற்றை ஏற்றுக்கொண்டதற்கு எந்தவித அறிகுறியும் தெரிய வில்லை.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பிற்பகுதியில் பிற துறை களில் சிறந்து விளங்கினாலும், கிராமப் பகுதிகள் போதிய வளர்ச்சி அடையாத காரணத்தால் வளர்ச்சித் தொடர்பாக முன்னர் பின்பற்றிவந்த நடைமுறைகளிலிருந்து பலதிறப்பட்ட ஒருங்கிணைந்த வளர்ச்சியை எய்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று வலியுறுத்தப்பட்டது. '' ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி'' என்பது தேசிய அளவிலும், உலக அளவிலும், பரவலாகப் பேசப்பட்டு, குறைந்த வருமானமுள்ள வளர்ந்து வரும் பல நாடுகளில் ஊரகப் பொருளாதார வளர்ச்சிக்கு இது முக்கிய அடித்தளமாக ஆகியுள்ளது. இதற்கான அணுகுமுறை, வேளாண்மைத் துறைகளையும், வேளாண்மையல்லாத பிற பணித் துறைகளையும் உள்ளடக்கிய பல துறை அணுகுமுறையாகும், பாசனம், பயிர், நிருவாகம், வேளாண்மைப் பணிகள், வேளாண் விளைப் பொருட்களைச் செய்முறைப்படுத்தல், சாலைகள், கட்டிடங்கள், கட்டுமானங்கள், பொது சுகாதாரம், நல்வாழ்வு, மகப்பேறு, சத்துணவு, குடும்ப நலம், கல்வி, வனங்கள், கிராமத் தொழில்கள் போன்ற மக்களுக்கு நேரடியாகப் பயன்படுகின்ற பணிகளை உள்ளடக்கும் வகையில், இயற்கை வளங்களை, ஒருங்கிணைந்த முறையில் நன்கு பயன்படுத்த, அறிவியல் தொழில் நுட்பக் கண்டுபிடிப்புக்களை மனிதத் திறனுடனும் தேர்ச்சியுடனும் ஒன்று சேர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. பொருளாதார வளர்ச்சிக்காகவும், முழு வேலை வாய்ப்பு அமைப்பதற்காகவும், இந்தப் பணிகள் உதவுகின்றன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கொள்கைகளும், நோக்கங் களும், வருகின்ற எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அணுகு முறைகளும், ஊரக வளர்ச்சியின் இந்த அம்சங்களையேத் தொடர்ந்து வலியுறுத்துகின்றன.

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், தமிழ்நாட்டில் சமு தாயப் வளர்ச்சி பற்றிய பணிக்குழு, ஊரக வளர்ச்சி பற்றிய பிரச்சினையை ஒட்டுமொத்தமாக காணுகின்ற, நன்கு ஒருங் கிணைந்த அணுகுமுறை இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி

பின்வருமாறு தெரிவிக்கிறது. " ஊரக வளர்ச்சி " தற்போ
துள்ளவாறு பின்வரும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய
தாக இருக்க வேண்டும் :—

(1) வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன் வளம், சமூகக்
காடு வளர்ப்பு போன்ற உற்பத்தியை நோக்கமாகக் கொண்டத்
திட்டங்கள்;

(2) சுகாதாரம், கல்வி, துப்புரவு, குடிநீர் போன்ற சமூகப்
பயன்பாட்டுத் திட்டங்கள்;

(3) போக்குவரத்து, விற்பனை, சேமிப்பு, மின்சாரம்,
ஊரக வங்கிப் பணி ஆகியவற்றை உள்ளடக்கிய அடிப்படை
வசதி அளிக்கும் திட்டங்கள்.

நிருவாக வசதிக்காகவும், கணக்கிடும் வசதிக்காகவும், ஒவ்வொரு
பணியும் (அல்லது) பல பணிகளும், தனித்தன்மையுடன் வடி
வமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு, தனித்தனியாகச் செயலாக்கப்
பட்டு வருகின்றன. தற்போதுள்ள தனித்தனியான அணுகுமுறை
ஊரக வளர்ச்சியில் பெருத்த மாற்றங்களை ஏற்படுத்தவில்லை.
ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கணிசமான அளவிற்கு
உயர்த்த வல்ல ஊரக வளர்ச்சியின் ஒட்டு மொத்த மேம்பாட்
டிற்காகவும் வழிவகுக்கும் திட்டமிட்ட பணியில், நாம் தொடர்ந்து
செயற்படவேண்டியிருக்கிறது. ஏற்கெனவே, தொடங்கப்பட்டுள்ள
(அல்லது) தொடங்கப்படவுள்ள பல்வேறு வளர்ச்சிப் பணிகள்
நன்கு திட்டமிடப்பட்ட, பலதிறப் பணிகளின் முக்கியப்
பகுதியாக அமைய வேண்டும்.

கிராமங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்பது
இந்த அரசின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாகும். வறுமையைப்
போக்குவதற்கும், ஏழைகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்
வதற்கும், வகுக்கப்பட்டத் திட்டங்களை ஒவ்வொரு துறையும்
செயற்படுத்தி வருகின்றன. வறுமையை எதிர்த்துப் போராடும்
இத்துறையின் கொள்கை, இரு முக்கிய அம்சங்களைக் கொண்ட
தாகும். முதலாவதாக, ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்
கீழ் வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பணிகளுக்கு
வகை செய்வதன் மூலம் கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பை
உருவாக்குவதற்குரிய திட்டங்களுக்கு வகை செய்தல், வேலை
வாய்ப்பை வழங்குவதோடு, சமுதாயத்திற்குப் பயனுள்ள நிரந்தர
சொத்துக்களை உருவாக்க வகை செய்யும் திட்டங்களுக்கு நிதி
ஆதாரங்கள் முறைப்படுத்தி அனுப்புதல். இரண்டாவது அம்சம்,
ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற தனி நபர்,
முக்கிய பங்கு வகிக்கும் திட்டங்களைச் செயல் படுத்துவது



இதில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள தனிப்பட்டவர்கள், அவர்
களுடைய வருவாய் ஈட்டும் திறனை மேம்படுத்தச் செய்யும் வகை
யில் பயனுள்ள சொத்துக்களை ஏற்படுத்த முக்கியத்துவம் அளிக்
கப்படுகிறது. இனி வரும் ஆண்டில் கிராமப் புற வளர்ச்சி குறித்த
முக்கிய நோக்கங்கள் வருமாறு :—

(அ) கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழே
யுள்ள குடும்பங்களைக் கண்டறிந்து, உதவித் தொகை,
நிறுவனக் கடனுதவி ஆகியவற்றை அளிப்பதன் மூலம், அவர்களை
வறுமைக்கோட்டிற்கு மேலே கொண்டுவர உதவி செய்தல்;

(ஆ) கிராமப் பகுதிகளிலுள்ள நிலமற்ற வேளாண்மைத்
தொழிலாளர்களுக்கும், குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர்
களுக்கும், வேலை வாய்ப்பின்றி இருப்பவர்களுக்கும் (ஆண்,
பெண் ஆகிய இரு சாராருக்கும்) பொதுப்பணித் திட்டங்கள்,
மூலம் பயனுள்ள, கூடுதல் வேலை வாய்ப்பை உருவாக்குதல்;

(இ) கிராமப்புறங்களிலுள்ள ஏழை மக்களின் பொருளாதார
நிலை விரைந்து வளர்ச்சியடையவும், அவர்களுடைய
வருமானம் படிப்படியாக உயரவும் வழி வகுக்கும் கிராமப் புற
அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்குரிய, நீண்ட காலம்
நிலைத்திருக்கக்கூடிய சமுதாயச் சொத்துக்களை ஏற்படுத்துதல்;

(ஈ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மாற்றுவகை எரிபொரு
ளைக் கண்டுபிடித்து, அதன் உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய
தேசியத் திட்டத்தின் ஓர் அங்கமாக தனி நபருக்கும், சமுதாய
அமைப்புகளுக்கும் சாண எரிவாயு அடுப்புகளையும், புகையில்லா
அடுப்புகளையும் நிறுவுதல்;

(உ) சிறு பாசனக் கிணறுகள் தோண்டுவதற்கு அல்லது தற்
போதுள்ள கிணறுகளைப் பழுதுபார்ப்பதற்கு அல்லது பம்புச்
செட்டுகளை நிறுவுவதற்கும், நில சீர்திருத்தத்திற்கும் உதவித்
தொகையும் கடனுதவியும் வழங்குவதன் மூலம் சிறு விவசாயிக்
கும் குறு விவசாயிக்கும் உதவுதல்;

(ஊ) தேசியக் காடு வளர்ப்புப் பெருந் திட்டத்தின் ஒரு
பகுதியாக, காடுகளை அழியாமல் பாதுகாத்தல், உயிரின வாழ்க்
கைச் சூழல் சமன்பாட்டினை பேணுதல் ஆகிய இரு தேவைகளை
யும் கருத்திற்கொண்டு, ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும்
சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இயன்ற அளவு நிலப்
பரப்பில் காடு வளர்த்தல்.

உள்ளூர் மக்களாட்சி அமைப்புகளாலும், உள்ளூரிலேயே முடி
வெடுக்கும் தன்மையாலும் மட்டுமே ஏழைகளின் பிரச்சினை
களைப் பரிவுடனும், திறம்படவும் தீர்க்க முடியும் என்பதை

நோக்கமாகக் கொண்டு, இந்த அரசு, பஞ்சாயத்து நிர்வாக அமைப்புகளை வலுப்படுத்த முடிவு செய்துள்ளது. ஊராட்சிகள் சட்டத்தில், 1989ஆம் ஆண்டில் செய்த பெருமளவு மாற்றங்கள் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பெரும் பொறுப்புகளையும், அதிகாரங்களையும் அளிப்பதற்கும், முடிவு எடுப்பதிலும், திட்டத்தைச் செயற்படுத்தும் பணியிலும் இந்த அமைப்புகளைப் பெருமளவு ஈடுபடச் செய்வதற்கும் வகை செய்துள்ளன. ஊராட்சிகள் சட்டத்தில் 1989ஆம் ஆண்டில் செய்யப்பட்ட திருத்தங்கள் ஏனையவற்றிற்கிடையே, ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் முன்பிருந்த அதிகாரங்களை மீண்டும் வழங்க வகை செய்கின்றன.—

(அ) ஊராட்சி நிர்வாகக் கொள்கைகளுக்கு முரணானவையாகும் என்றும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்புகளின் அதிகாரங்களையும், செயற்பாடுகளையும் குறைத்து விடும் என்றும் கருதப்பட்ட இச்சட்டத்தில் காணப்பெறும் சில அம்சங்கள் இச்சட்டத்திலிருந்து நீக்கப்பட்டன. முன்பிருந்த விதிகள் மீண்டும் இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டன. இதன் காரணமாக, தற்போது ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு, அவற்றிற்குரிய சட்டப்படியான அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

(ஆ) ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் பதவிக் காலம் ஐந்தாண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. பதவிக் காலம் முடிவடைந்ததும் தேர்தல் நடத்துவது கட்டாயமாக்கப்பட்டு, அவற்றின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு அரசுக்குள்ள அதிகாரங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

(இ) கலைக்கப்பட்ட அல்லது நீக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஆறு மாதங்களுக்குள் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்; அவ்வாறு தேர்ந்தடுக்கப்பட்ட உறுப்பினர், அந்த ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியக் குழுவின் எஞ்சிய பதவிக் காலத்திற்கு பதவி வகிப்பார்.

(ஈ) ஒவ்வொரு ஊராட்சியிலும் 30 சதவீத இடங்கள் மகளிருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

(உ) பொருளாதார முன்னேற்றம் தொடர்பான திட்டங்களையும், பணிகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு செயற்படுத்தும் பணியை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்க சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. பல்வேறு முகவரமைப்புகள் செயற்படுத்தும் திட்டங்கள், பணிகள் நடவடிக்கைகள் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியங்கள் ஆய்வு செய்வதற்கு இயலும் வகையிலான விதிமுறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



(ஊ) ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களில் நிதிநிலையை ஆய்வு செய்து, அவற்றின் நிதிநிலையை மேம்படுத்தவதற்குரிய பரிந்துரையை அரசுக்கு அளிக்க வல்லுனர் குழு ஒன்றை ஏற்படுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது.

(எ) ஊராட்சிகளுக்கு அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான கிராமம், சாலை அல்லது சொத்துக்களுக்கு உயிரோடு இருப்பவர்களின் பெயரை வைப்பதற்கான தடை அகற்றப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சிக்குரிய பல்வேறு திட்டங்கள், உள்ளூர் மக்களாட்சி அமைப்புக்களான ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் :

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மத்திய அரசு பொறுப்பேற்கும் வறுமை ஒழிப்புத் திட்டமாகும். இதற்குரிய நிதியை மத்திய அரசும் மாநில அரசும் சமமாக அளிக்கின்ற இத்திட்டமானது, 1980–81ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன :—

(i) சுய வேலலைவாய்ப்பை அதிகரிப்பதன் மூலம் கிராமப்புறங்களில் நிலவும் வேலையின்மை, போதிய வேலை வாய்ப்பின்மை ஆகியவற்றைப் போக்குதல்;

(ii) கிராமப்புறங்களில் வறுமையால் வாடுகின்ற ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

இந்நோக்கங்களை எய்தும் பொருட்டு, கிராமப் பகுதிகளில் உள்ள சரியாக கண்டறியப்பட்ட, வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மிகுந்த ஏழ்மையில் வாடுகின்ற ஏழைக் குடும்பங்களுக்கு வருமானம் தரத்தக்க மூதலீடுகளுக்கு வகை செய்யப்படுகிறது. சொத்துக்களை உருவாக்க, வணிக வங்கிகளிடமிருந்து பெரும் கடனோடு மானியத் தொகையும் அளிக்கப்படுகிறது. இந்த மானியத்தை மத்திய அரசும், மாநில அரசும் 50 : 50 என்ற விதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. ஒவ்வொரு ஊராட்சியும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறது.

பொருளாதார வளர்ச்சிப் பணிகளுக்காக கீழ்க்கண்ட முறையில் நிதியுதவி அளிக்கப்படுகிறது.—

| | |
|---|---|
| சிறு விவசாயிகளுக்கு 25 சதவீதம். | வறட்சிப் பாங்கான பகுதிகள் அல்லாத பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வறட்சிப் பாங்கான பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு 4,000 ரூபாய் என்ற உச்ச வரம்புக்கு உட்பட்டு இந்த மானியத் தொகை இருக்கும். |
| குறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு 33.3 சதவீதம். | |
| பழங்குடியினர் குடும்பங்களுக்கு, 50 சதவீதம். | கிராமப் பகுதிகள் அனைத்திலும் வாழும் குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு 5,000 ரூபாய் என்ற உச்ச வரம்புக்குட்பட்டு இந்த மானியத் தொகை இருக்கும். |

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 3,600-க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உள்ள குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருந்தது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 6,400 ரூபாய்க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உள்ள குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும், உதவி மானியம் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களின் ஆண்டு வருமானம் 4,800 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த அளவிற்குள் கூட, 3,500 ரூபாய்க்கும் குறைவான வருமானம் உடைய அனைத்துக் குடும்பத்திற்கும் உதவி அளிக்கப்பட்ட பின்னரே ஆண்டு வருமானம் 3,500 ரூபாய் முதல் 4,800 ரூபாய் வரையுள்ள குடும்பத்தினருக்கு உதவி அளிப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ஒரு வளர்ச்சி வட்டாரத்திற்கு, ஓராண்டிற்கு, சராசரியாக 600 குடும்பங்கள் என்ற வீதத்தில் மொத்தம் 13.69 இலட்சம் குடும்பங்களுக்கு, அரசு உதவி மானியமாக மொத்தம் 14.66 கோடி ரூபாயை அளித்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், உதவி பெற்றவையும் பல்வேறு காரணங்களினால் வறுமைக் கோட்டைத் தாண்டி வர இயலாதவையும், உதவித் தொகை பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவையுமான குடும்பங்கள் அனைத்திற்கும் மறு உதவி செய்து முந்தைய திட்டத்தின் பயன்களை ஒன்று சேர்த்து அளிப்பதும் அதன்பின் இயன்ற அளவு புதிய குடும்பங்களுக்கு உதவி வழங்குவதுமே ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1988–89 ஆம் ஆண்டு வரையுள்ள முதல் நான்கு ஆண்டுகளில் கருதியுள்ள நோக்கங்கள் ஆகும்.



ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தின் இறுதி ஆண்டான 1989–90-ல் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள புதிய குடும்பங்கள் மட்டுமே உதவியளிக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு தெரிவித்துள்ள இலக்கின்படி 1989–90 ஆம் ஆண்டில் 92,337 பயனடைவோர்கள் உதவியளிக்கப்படுவார்கள். 1989–90 ஆம் ஆண்டுக்கான தற்காலிக நிதி ஒதுக்கீடு ரூ. 49.40 கோடியாகும். இத்தொகை மத்திய, மாநில அரசுகளால் சமமாக பகிர்ந்து கொள்ளப்படும்.

ஏழாவது திட்ட ஆண்டு முடிவின் இறுதி நோக்கம். வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்கள் மொத்த சதவீதத்தை 48 லிருந்து 23 சதவீதமாகக் குறைப்பதேயாகும்.

1985–86லிருந்து நிகழ்த்தப்பட்டு வரும் இலக்குகளும் சாதனைகளும் பின் வருமாறு :—

| ஆண்டு. | | உதவியளிக்கப்பட்ட குடும்பங்கள். | | நிதி முன்னும். | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு. | சாதனை. | இலக்கு. | சாதனை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | (ரூபாய் கோடியில்.) | |
| 1985–86 .. | மொத்தம் .. | 1,96,239 | 2,09,696 | 30.24 | 29.86 |
| | ஆதி/பகு .. | 98,120 | 96,996 | | |
| | பெண்கள் .. | 62,080 | 62,284 | | |
| 1986–87 .. | மொத்தம் .. | 2,47,000 | 2,58,823 | 41.95 | 43.23 |
| | ஆதி/பகு .. | 1,15,500 | 1,19,913 | | |
| | பெண்கள் .. | 82,333 | 86,921 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1987–88 | — | மொத்தம் ... | 2,69,380 | 2,76,415 | 42.85 | 47.43 |
| | | ஆதி/பகு ... | 1,34,690 | 1,27,421 | | |
| | | பெண்கள் ... | 89,793 | 89,534 | | |
| 1988–89 | — | மொத்தம் ... | 2,24,928 | 2,57,203 | 46.98 | 52.90 |
| | | ஆதி/பகு .. | 1,14,777 | 1,26,941 | | |
| | | பெண்கள் ... | 75,616 | 87,765 | | |
| 1989–90 | — | மொத்தம் ... | 1,92,337 | 2,22,906 | 49.41 | 40.95 |
| | | ஆதி/பகு .. | 87,565 | 99,275 | | |
| | | பெண்கள் .. | 64,112 | 68,803 | | |

தனிப்பட்டவர்கள் பயனடையும் திட்டங்கள் மிகவும் திறம்பட செயல்படுத்துவதற்கு ஏதுவாக உள்ளமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட மான்யத்தில் 10 சதவீதம் பயன்படுத்தப்பட முடியும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் உள்ளமைப்பு வசதிகள் உண்டாக்கும் திட்டத்தின்கீழ் பணிக்கூடங்கள் அமைத்தல், பால் குளிர்பதன நிலையங்களுக்கு உதவி, பால் கொண்டு செல்லும் பாத்திரங்கள் வாங்குவது முதலியன வசதிகள் செய்து கொடுக்கப்படும். 1988–89 மற்றும் 1989–90 ஆம் ஆண்டுகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் உண்டாக்கப்பட்ட உள்ளமைப்பு வசதிகளின் கீழ் செய்யப்பட்ட நடவடிக்கைப் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—



உள்ளமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது.

1988–89 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அரசு அனுமதியளித்துள்ளது :—

| | திட்டம். (1) | அனுமதித்த தொகை. (2) ரூபாய். |
|---|---|---|
| 1 | திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கட்டிடம் கட்ட மற்றும் பால் பரிசோதனைக் கருவி வாங்க. | 1,06,495 |
| 2 | சிதம்பரனார் மாவட்டம் நாகலாபுரம் நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு பணிக்கூடம் கட்ட. | 41,500 |
| 3 | சிதம்பரனார் மாவட்டம் அந்தோணியார் புரத்தில் பனை பொருள் விற்பனை மைய கட்டிடம் அமைக்க. | 2,04,000 |
| 4 | காமராசர் மாவட்டம் விருதுநகர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க. | 5,65,000 |
| 5 | வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், பிஞ்சி ஆதி திராவிடர் பல நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு கட்டிடம் அமைக்க. | 2,19,000 |
| 6 | பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் சிவகங்கையில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க. | 9,00,000 |
| 7 | பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், சாக்கோட்டை வட்டாரம் கந்தனூரில் கதர் விற்பனை நிலையம் கட்டிடம் கட்ட. | 3,20,000 |
| 8 | தென்னாற்காடு மாவட்டத்தில், ''டோக்ரா'' திட்டத்தில் வானூர், செஞ்சி, கடலூர் ஊராட்சி ஒன்றியங்களில் மகளிர் குழுக்களுக்கு பணிக்கூடம் கட்டுதல். | 2,70,000 |
| 9 | தஞ்சாவூரில் ''லாப்டி'' நிறுவனத்திற்கு கூடுதல் டிராக்டர் வாங்க. | 59,251 |

| திட்டம். (1) | அனுமதித்த தொகை. (2) ரூபாய். |
|---|---|
| 10 உருச்சி பாய் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் பணிக்கூடம் கட்ட. | 40,000 |
| 11 கரூரில் கல்பட்டை தீட்டும் மையத்திற்கு பணிக்கூடம் கட்ட. | 5,37,000 |
| 12 மனந்தட்டை கிராமத்தில் ''டோக்ரா'' ரெடிமேட் ஆடை தயாரிக்கும் குழுவிற்கு பணிக்கூடம் கட்ட. | 40,000 |
| 13 திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் பனைபொருள் 97 உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு கருவிகள் வாங்க. | 20,00,000 |
| மொத்தம் | 53,02,246 |

1989-90 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது :—

| திட்டம். (1) | அனுமதித்த தொகை. (2) ரூபாய். |
|---|---|
| செங்கை-அண்ணா மாவட்டம். | |
| 1 மதுராந்தகத்தில் ஊரக இறைச்சிக் கூடம் கட்ட மற்றும் கருவிகள் வாங்க. | 4,85,000 |
| 2 மணிமங்கலத்தில் மீன் வளர்ப்புப் பண்ணை அமைக்க மீதமுள்ள தொகை ரூ. 4 இலட்சத்தை விடுவிக்க அரசு ஆணை வழங்கப்பட்டது. | 4,00,000 |
| திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம். | |
| 3 பொன்னூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்குச் சங்க கட்டிடம் கட்ட. | 75,000 |



| திட்டம். (1) | அனுமதித்த தொகை. (2) ரூபாய். |
|---|---|
| திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம். | |
| 4 ஐயம்பாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு பால்கேன்கள் மற்றும் பரிசோதனை கருவிகள் வாங்க. | 19,651 |
| தஞ்சாவூர் மாவட்டம். | |
| 5 ஆறு தடமாடும் கால்நடை மருந்தகங்களுக்கு 12 நைட்ரஜன் குடுவைகள் வாங்க. | 54,000 |
| காமராசர் மாவட்டம். | |
| 6 காமராசர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு ஆய்வகத்துடன் கூடிய வைப்பறை கட்ட. | 2,05,000 |
| பெரியார் மாவட்டம். | |
| 7 பெரியார் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு புல் போன்ற தீவன பயிர்களை உற்பத்தி செய்ய பண்ணை அமைக்க, வடிகால் வசதி செய்ய, விவசாய கருவிகள் வாங்க. | 1,03,500 |
| மொத்தத் தொகை.. | 13,42,051 |

புதிய ஏற்பாடாக, 1990-91 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டக் கடன்கள் அனைத்து பேரூராட்சி பகுதிகளுக்கும் கூட விரிவு படுத்தப்படும்.

போதாத மூலதனமும், சொத்துக்களை வைத்திருப்பதில் குறைவும்தான் இத்திட்டத்திலுடைய முக்கிய குற்றச்சாட்டாக இருந்து வந்திருக்கிறது. இந்த அரசு பயனடைவோர்களைத் தொடர்பு கொண்டு அவர்களிடமுள்ள சொத்துக்களை நேரே சரிபார்க்க முடிவு செய்துள்ளது. பயனடைவோர்களிடமுள்ள சொத்துக்கள் நல்ல உபயோகமும் வருமானமும் வருமளவிற்கு உள்ளதா என எப்பொழுதும் கண்காணிப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது. 1990-91-ன் முதல் காலாண்டில் ஒரு விரிவான சொத்துக்களின் சர்வே செய்து முடிக்கப்படும்.

[1990 ஏப்ரல் 24

## கிராம இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்பிற்கான பயிற்சி அளித்தல் (TRYSEM)

சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகும். பயிற்சிபெற்ற பின்னர் சொந்தமாகத் தொழில் தொடங்கவோ வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த நடவடிக்கைகள், தொழில்கள், பணிகள், வியாபாரம் ஆகியவற்றில் ஈடுபட்டு வருமானம் தரும் வேலையைச் செய்ய இயலும் வண்ணம் வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த கிராம இளைஞர்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சியளிப்பதே கிராம இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் பயிற்சிக்குரிய உதவித்தொகை, கருவிகள் முதலியவை குறித்து ஏற்படும் செலவு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து செய்யப்படுகிறது.

பயிற்சிக்கென்று தெரிந்தெடுக்கப்படும் இளைஞர்கள், 18 வயதிலிருந்து 35 வயது வரையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இவர்களுக்குப் பல்வேறு தொழில்களில் 3 மாதங்கள் முதல் ஓராண்டுவரை பயிற்சி அளிக்கப்படும். ஊராக விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள், அரசின் தொழிற்பயிற்சிக் கூடங்கள் மற்றும் தனியார் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. வட்டார அளவில் பயிற்சிக்கு தகுதி வாய்ந்தவர்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர், பயிற்சி நிலையங்களிலுள்ள உணவு, தங்கும் வசதி ஆகியவற்றுக்கு ஏற்ப ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 100 முதல் ரூ. 250 வரை பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தின்போது, பல்வேறு தொழில்களில் பயிற்சி பெறுவோருக்கு, பயிற்சியாளர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 40 முதல் அதிக பட்சம் ரூ. 350 வரையிலான மதிப்புள்ள பயிற்சிக்குத் தேவையான பொருட்கள் வழங்கப்படுகின்றன. பயிற்சி முடிந்த பின்னர், பயிற்சி பெற்ற ஒவ்வொருவருக்கும் ரூ. 500 மதிப்புள்ள தொழில் கருவிகள் அளிக்கப்படுகின்றன. பயிற்சி நிறுவனங்கள், பயிற்சியாளர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ. 75 வீதம் மானியம் பெறத் தகுதியுடையவையாகும். பயிற்சியாளர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ. 50 வீதம் சிறப்புக் கைவினைஞர் மானியம் பெறத் தகுதியுடையவராவார். கிராம இளைஞர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1988–89 ஆம் ஆண்டில் 12,957 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்களில், 4,817 பேர் சுய வேலைவாய்ப்பையும் 4,755 பேர் ஊதியம் பெறும் வேலைவாய்ப்பையும் பெற்றுள்ளனர்,



1990 ஏப்ரல் 24]

1989–90 ஆம் ஆண்டில் 13,230 பேருக்கு பயிற்சி அளிப்பது என்று இலக்கு வரையறுக்கப்பட்டது. இந்த இலக்கில் 11,311 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. கிராமப்புற இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2,528 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

1989–90 ஆம் ஆண்டில் பல்வேறு பயிற்சித் திட்டங்கள் பற்றி முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு, தொழில்கள் பற்றிய புதிய பயனுள்ள பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. பயிற்சி மேலும் பயனுள்ளதாக அமையும் வண்ணம் முறைப்படுத்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெறுவோர் பயிற்சி முடிந்த பின்பு பயன்பெறும் வகையில் பயிற்சி காலம் மறு ஆய்வு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. 1990–91 ஆம் ஆண்டு இத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றவர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட கடன் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்கள் :—

| வரிசை எண்ணும் தொழில்களின் பெயரும். | பயிற்சி வழங்கப்படும் காலம். |
|---|---|
| (1) | (2) |
| 1 பட்டு வளர்ப்பு .. .. .. | 2 மாதங்கள் |
| 2 மோட்டார் ரீவைண்டிங் .. .. | 6 டி |
| 3 வானொலி மற்றும் தொலைக்காட்சி தொழில் நுட்பம். | 1 வருடம் |
| 4 மின் இணைப்புப் பயிற்சி (சிம்பில் வயரிங்) | 6 மாதங்கள் |
| 5 வெல்டிங் .. .. .. .. | 6 டி |
| 6 இரு சக்கர வாகன தொழில் நுட்பம் .. | 6 டி |
| 7 கயிறு பின்னுதல் (தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மட்டும்). | 3 டி |
| 8 குழாய் பராமரிப்பு .. .. .. | 6 [illegible] |
| ) தானியங்கி (அல்லது) உந்து ஊர்தி (ஆட்டோமொபைல்ஸ்). | |

[1990 ஏப்ரல் 24

| | | | |
|---|---|---|---|
| 10 | தச்சுத் தொழில் .. .. .. | 6 | மாதங்கள் |
| 11 | பொம்மை தயாரித்தல் .. .. .. | 3 | ஷை |
| 12 | அச்சுக் கோர்ப்பு மற்றும் புத்தக பைண்டிங் | 6 | ஷை |
| 12 | தேன் தயாரித்தல் .. .. .. | 3 | ஷை |
| 14 | டீசல் மற்றும் பெட்ரோல் இயந்திரத் தொழில் நுட்பம். .. | 6 | ஷை |
| 15 | ஆடை தயாரித்தல் .. .. .. | 3 | ஷை |
| 16 | வாழைநார் மூலம் பொருட்கள் தயாரித்தல். .. | 3 | ஷை |
| 17 | கம்பளம் தயாரித்தல் .. .. .. | 6 | ஷை |
| 18 | கொல்லுப்பட்டரைப் பயிற்சி .. .. | 6 | ஷை |
| 19 | மின் சாதன கருவிகள், காயில் கட்டுதல் மற்றும் டீசல் இஞ்சின் பழுது பார்த்தல் (தேவையான இடங்களில் இவை அனைத்தையும் சேர்த்துக்கொடுத்தல்). | 6 | ஷை |
| 20 | ஷீட் மெட்டல் .. .. .. | 6 | ஷை |
| 21 | கிளிஞ்சல் அழகுபடுத்தும் கைவினைப் பயிற்சி. | 3 | ஷை |
| 22 | பெயர்ப் பலகை எழுதுதல் .. .. | 3 | ஷை |
| 23 | கல்பட்டை தீட்டுதல் .. .. .. | 6 | ஷை |
| 24 | மொசைக்கற்கள் தயாரித்தல் .. .. | 6 | ஷை |
| 25 | ரிக் பழுது பார்த்தல் .. .. .. | 6 | ஷை |
| 26 | ரொட்டி தயாரித்தல் .. .. .. | 3 | ஷை |
| 27 | ஆட்டோ மின் வினைஞர் .. .. | 6 | ஷை |
| 28 | குளிர்சாதனப் பெட்டி தொழில் நுட்பப் பயிற்சி. | 1 | வருடம் |



1990 ஏப்ரல் 24]

| | (1) | (2) | |
|---|---|---|---|
| 29 | வீட்டுச் சாதனங்கள் மற்றும் வேளாண்மைக் கருவிகள் பழுது பார்த்தல் .. .. | 6 | மாதங்கள் |
| 30 | டிராக்டர் மெக்கானிசம் .. .. | 6 | ஷை |
| 31 | குத்து விளக்குத் தயாரித்தல் .. .. | 6 | ஷை |
| 32 | இசை .. .. .. .. | 6 | ஷை |

மேற்காணும் தொழில்களுடன் கீழ்க்காணும் இனங்களிலும் பயிற்சியளிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது :—

| | | | |
|---|---|---|---|
| 1 | கேஸ் ஸ்டவ் ரிப்பேர் .. .. .. | 1 | மாதம். |
| 2 | கம்ப்யூட்டர் பயிற்சி .. .. .. | 6 | மாதங்கள் |
| 3 | தட்டச்சு பழுதுபார்த்தல் ரோனியோ மிஷின், நெம்பர் மெஷின் பஞ்சிங் மெஷின் மற்றும் அலுவலகக் கருவிகள் பழுது பார்த்தல். | 6 | ஷை |
| 4 | கடிகாரம் பழுது பார்த்தல் .. .. | | ஷை |

கிராமப் பகுதி மகளிர் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம் (DWCRA)

இத்திட்டத்தின் கீழ் கிராமப் பகுதி பெண்களுக்குத் தொழிற் பயிற்சியும், வருவாய் தரத்தக்க கைத்தொழில்கள் செய்ய வசதியும் அளிக்கப்படுகின்றன. அதே சமயத்தில் கிராமப் பகுதிகளில் கிட்டும் வசதிகளையும் வாய்ப்புக்களையும் எளிதில் பெறுவதற்காக ஒரு குழுவாகச் செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறது. கிராமப்புற பெண்களிடம் போதிய நிதி உதவி இருந்தால் குடும்பத்தின் வாழ்க்கைத் தரமும் நன்றாக இருக்கும். இதற்கு முக்கியமான காரணம், பெண்கள் சம்பாதிக்கும் பணத்தை அவர்கள் குடும்பத்தின் உணவு, உடை குழந்தைகளின் மருத்துவச் செலவுக்கு பயன்படுத்துவதேயாகும். இந்திய நாட்டின் பல இடங்களிலும், தமிழ்நாட்டிலும் நடத்திய ஆய்வுகள் இந்த உண்மையை உணர்த்தியுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் குழு அடிப்படையில், மகளிருக்கு மானியத் தொகையுடன் வங்கி கடன் அளிக்கப்படுகிறது ஒரு குழுவில் 15 முதல் 20 பெண்கள் வரை இருக்கலாம். ஒவ்வோராண்டும் ஒவ்வொரு மாவட்டத்திலும் சராசரியாக 100 குழுக்களுக்கு

[1990 ஏப்ரல் 24

உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இத்திட்டம் செயலாக்கப் பெறும் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக அளவு 600 குழுக்கள் வரை அனுமதிக்கப்படலாம். இக்குழுக்களின் உறுப்பினர்களுக்கு உள்ளூரிலுள்ள சிறந்த கைவினைஞர்கள் மூலம் பெரும்பாலான தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகிறது.

கிராமப்பகுதி குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டமானது 1983–84 ஆம் ஆண்டில் பெரியார் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் முதன்முதலாகக் தொடங்கப்பட்டது. பின்னர் இத்திட்டம் 1986–97ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும், 1987–88 ஆம் ஆண்டில் தென் ஆற்காடு மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட்டது. 1988–89 ஆம் ஆண்டில் இத்திட்டமானது புதுக்கோட்டை, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலும் 1989–90 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட்டது.

கிராமப் பகுதி மகளிர் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட வருமானம் ஈட்டித் தருகின்ற, மிக முக்கியமான தொழில்கள் சில வருமாறு: இப்பட்டியல், எடுத்துக்காட்டாக அளிக்கப்படுகிறதேயன்றி எல்லா விவரங்களையும் கொண்டது என்ற வகையில் அளிக்கப்படவில்லை.

1. பால்பண்ணை.
2. ஆடுவளர்ப்பு-கம்பளி நெசவு.
3. கயிறு பின்னுதல்.
4. தேனீ வளர்த்தல்
5. பாய் முடைதல்.
6. பட்டுப்பூச்சி வளர்த்தல்.
7. செங்கல் தயாரித்தல்.
8. காலணிகள் செய்தல்.
9. ஆயத்த ஆடைகள் தயாரித்தல்.
10. அகர்பத்தி செய்தல்.
11. பைகள் செய்தல்.
12. மூங்கில் கூடைகள் பின்னுதல்.



1990 ஏப்ரல் 24]

13. பாசிமணி மாலைகள் தொடுத்தல்.
14. பொம்மைகள் செய்தல்
15. கையுறைகள் செய்தல்
16. மெழுகுவர்த்தி செய்தல்
17. செயற்கை இரத்தினக் கற்களுக்கு மெருகிடுதல்.
18. செயற்கை இரத்தினக் கற்களில் பட்டை தீட்டுதல்.
19. பேப்பர் பைகள் பாலிதீன் பைகள் செய்தல்.
20. கைத்தறி நெசவு.
21. புதுமுறையில் பாய் முடைதல்.
22. கோழி வளர்ப்பு.
23. மீன் வளர்ப்பு.
24. தென்னங்கீற்று பின்னுதல்.

1983–84 முதல் 1989–90 வரை அமைக்கப்பட்ட குழுக்கள் பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | பெரியார். | தருமபுரி. | திருச்சிராப் பள்ளி. | தென்-ஆற்காடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1983–84 .. | 20 | 20 | .. | ... |
| 1984–85 .. | 100 | 100 | .. | ... |
| 1985–86 .. | 100 | 100 | .. | ... |
| 1986–87 .. | 165 | 155 | 100 | ... |
| 1987–88 .. | 178 | 80 | 150 | 100 |
| 1988–89 .. | 37 | 85 | 100 | 163 |
| 1989–90 .. | 37 | 7 | 100 | 100 |
| மொத்தம் | 637 | 547 | 450 | 363 |

| ஆண்டு. | வட ஆற்காடு. | புதுக் கோட்டை. | சேலம். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) | (9) |
| 1983–84 .. | .. | .. | .. | 40 |
| 1984–85 .. | | .. | .. | 200 |
| 1985–86 .. | .. | .. | .. | 200 |
| 1986–87 .. | .. | .. | .. | 420 |
| 1987–88 .. | .. | .. | .. | 508 |
| 1988–89 .. | 90 | 100 | .. | 575 |
| 1989–90 .. | .. | .. | 100 | 344 |
| மொத்தம் | 90 | 100 | 100 | 2,287 |

இத்திட்டத்திற்காக, 1989–90 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூ. 0.204 கோடி ஆகும்.

### ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்.

**மத்திய** அரசு, 1989–90 ஆம் ஆண்டில், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தையும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தையும் இணைத்து ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் (''ஜவஹர் ரோஜ்கார் யோஜனா'') என்ற புதிய திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்திற்கு ஆகும் செலவை 80 : 20 என்ற வீதத்தில் மத்திய அரசும் மாநில அரசும் ஏற்று வருகின்றன. மத்திய அரசின் பங்கான 80 சதவிகித நிதியுதவி, நேரடியாகவே மத்திய அரசு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு அளிப்பது இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாகும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு மத்திய அரசின் நிதியுதவி அளிக் கப்பட்டது. பற்றிய தகவல் கிடைக்கப் பெறுவதன்பேரி லேயே மாநில அரசு, தன் பங்கான நிதியுதவியை அம்முகமை களுக்கு அளிக்கிறது. மொத்த நிதியில் 80 சதவீதம் ஊராட்சி களுக்கு மக்கள் தொகையின் அடிப்படையில் அளிக்க ஒதுக்கப் படுகிறது. ஆதி திராவிடர் பழங்குடியினர் பயன்பெறுவதற் கான 15 சதவீதத் தொகை செலவிடப்பட வேண்டும் என்ற



நிபந்தனைக்குட்பட்டு பயனுள்ளவை என ஊராட்சிகள் கண்டறி யும் பணிகளை ஊராட்சிகள் மேற்கொள்ளலாம். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் பங்கான 20 சதவீதத் தொகை எஞ்சியுள்ள பணிகள் உட்பட குறிப்பிட்ட பணிகள் பலவற்றை மேற்கொள்வதற்குரியதாகும். இத்திட்டம் இரண்டு நோக்கங் களைக் கொண்டுள்ளது. முடிவெடுக்கும் உரிமை ஊராட்சி களுக்கு அளித்து அதன் மூலம் திட்டத்தை தேர்ந்தெடுக்கும் பொறுப்பை சம்பந்தப்பட்ட உள்ளூர் மக்களிடம் விட்டுவிடுதல் முதல் நோக்கமாகும். வேளாண்மை நடைபெறாத காலத்தில் வேலைவாய்ப்பை உருவாக்குவதில் கவனத்தைச் செலுத்துவது இரண்டாவது நோக்கமாகும். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதே திட்டத்தின் இலக்காகும். வேலைவாய்ப்பு அளிப்பதில் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்கப்படு கிறது. இத்திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பில் பெண்களுக்கு என்று 30 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத் தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் வருமாறு:—

1. ஆதிதிராவிடர்கள்/பழங்குடியினருக்கு வீடுகள் கட்டுதல்;

2. தனிப்பட்ட ஆதிதிராவிடர்/பழங்குடியினர் முதலியோ ருக்கான பாசனக் கிணறுகள் தோண்டுதல்;

3. மண், நீர் வளப்பாதுகாப்புப் பணிகள்;

4. சமூகப் பாசனக் கிணறுகளைத் தோண்டுதல்/ புதுப்பித்தல் ;

5. ஊராட்சிகளில் அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல்;

6. ஊரக இணைப்புச் சாலைகள் அமைத்தல்;

7. தொடக்கப்பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுதல் ;

8. வடிகால், நீர் தேங்குவததைத் தடுப்பதற்குரிய பணிகள்;

9. கிளை வடிகால்களையும், பிரதான வடிகால்களையும் அமைத்தல்/புதுப்பித்தல் ;

10. ஆதிதிராவிடர்/பழங்குடியினர் உட்பட பொருளாதார நிலையில் நலிவுற்றவர்களுக்கான தனிப்பட்ட பயனீட்டாளர் களுக்கு உதவி செய்யும் திட்டம் ;

11. நில மேம்பாடு, தரிசு நிலங்களையும் தரம் குறைந்த நிலங்களையும் சீரமைத்தல்;

12. சமூகக் காடு வளர்ப்புப் பணிகள் ;

13. பண்ணைக் காடுகள் வளர்த்தல் ;

14. ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தை அதிகரிக்க உதவும் கட்டுமானப் பணிகள் ;

15. சமூக சுகாதாரக் கழிவறைகளைக் கட்டுதல்.

ஆண் அல்லது பெண் தொழிலாளர் ஒருவரின் அன்றாட ஊதியம் ரூ. 10 என்று இருந்ததை நவம்பர் திங்கள் 1989 முதல் ரூ. 15 என்று அதிகரிக்கப்பட்டது. அது கீழே குறிப்பிட்டவாறு வழங்கப்படுகிறது:—

| | | ரூ. பை. |
|---|---|---|
| (1) ரொக்கம் | .. | 11.70 |
| (2) அரிசி 1.5 கிலோ (குறைந்த விலையில்) | .. | 3.30 |
| மொத்தம் | .. | 15.00 |

ஊராட்சிகளுக்கு/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு கிடைக்கின்ற தொகையிலிருந்து செய்யப்படும் செலவுகளில் கீழ்க்கண்ட செலவுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்:—

| | | |
|---|---|---|
| (1) நிருவாகச் செலவு | .. | 5 சதவீதம் வரை |
| (2) பராமரிப்புச் செலவு | .. | 10 சதவீதம் வரை. |

இத்திட்டத்திற்குரிய எஞ்சிய நிதி, கீழே குறிப்பிட்டுள்ளவாறு வெவ்வேறு துறைப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும்:—

(அ) பொருளாதார ரீதியில் உற்பத்தித் திறன் கொண்ட சொத்துக்கள் 35 சதவீதம்.

(ஆ) சமூகக் காடு வளர்ப்புப் பணிகள் 25 சதவீதம்.

(இ) பத்து இலட்சம் கிணறுகள் தோண்டும் திட்டம் உட்பட ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கான தனிப்பட்ட பயனீட்டாளர் திட்டம் 15 சதவீதம்.

(ஈ) சாலைகள், கட்டிடப் பணிகள் உட்பட ஏனைய பணிகள் 25 சதவீதம்.



ஊராட்சிகளுக்கு வகை செய்யப்பட்ட நிதி ஒதுக்கும் ஆதி திராவிடர்/பழங்குடியினர் நேரடியாகப் பயன் பெறுவதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வித மாறுபாடுமின்றி அதற்காகவே செலவிடப்படவேண்டும். ஏனைய துறைகளில் ஏற்பட்ட செலவுகள், விவரம் தெரிவிப்பவையாக உள்ளன. மாவட்டத்தை ஓர் அலகாகக் கொண்டு இவ்வாறே பின்பற்ற முயற்சிக்கலாம். அத்தியாவசியத் தேவைகளின் அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளும்படி ஊராட்சிகள் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும்.

ஊராட்சிகளுக்கும் (80 சதவீதம்), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கும் (20 சதவீதம்) அளிக்கப்பட்ட நிதிக்கு ஆண்டு செயல் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, ஊராட்சிகளால்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளால் அனுமதியளிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்ள, ஒப்பந்தக்காரர்களை அமர்த்தக்கூடாது. திட்டத்தின் விரிவாக்கத்திற்காகவோ, நீண்ட காலம் பயன்தரத்தக்க சொத்துக்களை ஏற்படுத்துவதற்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கோ ஊதியம் அல்லாத பிற வகையில் ஏற்பட்ட மிகைச் செலவை ஏற்பதற்கோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள்/ஊராட்சி நன்கொடைகளைப் பெறலாம்.

மாநில அரசு, இத்திட்டம் மக்களுக்கு மிகுந்த பயன்தரத்தக்க வகையில் அமைவதற்காக இத்திட்டத்தைப் பின்பற்றுகையில் கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்காக 42,180 தொகுதி வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. கூடுதல் திட்டமாக இந்த வீடுகளுக்கு ஓட்டினால் கூரை அமைப்பதற்குப் பதிலாக சிமெண்ட் கற்கலவையால் கூரை அமைப்பதற்காக மாநில அரசு, தன் பங்கிற்கும் மேலாக வீடு ஒன்றுக்கு 4,000 ரூபாய் வீதம் வழங்கியுள்ளது. இது தொடர்பாக மாநில அரசுக்கு ஏற்பட்ட மொத்தச் செலவு 16.8 கோடி ரூபாயாகும். ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்குரிய மாநில அரசின் இயல்பான பங்குத் தொகையைக் காட்டிலும் இது கூடுதலாகும்.

| | 1988—89 | 1989-90 |
|---|---|---|
| | (தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டமும், ஊரக நில மற்றோர் வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டமும் இணைந்தது). (ரூபாய் கோடியில்) | (ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்.) |
| நிதி : | | |
| ஆண்டு நிதியொதுக்கம் | 131.16 | 173.46 |
| மீண்டும் வலுவூட்டப்பட்ட சிமிட்டி கற்கலவையிலான கூரை அமைப்பதற்கான மாநில அரசின் நிதிப் பொறுப்பு .. | .. | 16.80 |
| மொத்தம் | 131.16 | 190.26 |
| செலவு | 150.02 | 176.59 |
| திட்டச்சாதனை | 1988-89 | 1989-90 |
| முடிக்கப்பட்ட பணிகள் | 86,991 | 1,24,468 |
| உருவாக்கப்பட்ட உழைப்பு நாட்கள் இலக்கு | (இலட்சம்) 559.99 | 776.39 |
| எய்திய சாதனை | 773.15 | 910.81 |

**செயல் இலக்கு அட்டவணை.**

(1990 பிப்ரவரி திங்கள் வரை)

| (1) | | வேலைகள் விவரம். (2) | முடிவடைந்த பணிகள். (3) |
|---|---|---|---|
| 1. தொகுப்பு வீடுகள் | .. | 42,070 | 41,666 |
| 2. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் | .. | 178 | 141 |
| 3. இதரக் கட்டிடப்பணிகள் | .. | 3,132 | 2,929 |
| 4. ஜீவன்தாரா | .. | 2,968 | 2,692 |
| 5. சாலைகள் | .. | 37,787 | 37,084 |
| 6. வடிகால் | .. | 9,206 | 9,191 |
| 7. சிறுபாசனம் | .. | 16,839 | 16,790 |
| 8. இதரப் பணிகள் | .. | 14,308 | 13,975 |
| மொத்தம் | .. | 1,26,488 | 1,24,468 |





**நிதி பயன்படுத்தல்.**

1988-89 வரை தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் தேசிய நிலமற்றோர் ஊரக வேலை உறுதித்திட்டம் மற்றும் 1989-90 வரை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்.

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு. (1) | | இலக்கு. (2) | சாதனை. (3) | விழுக்காடு சதவிகிதத்தில். (4) |
|---|---|---|---|---|
| 1985-86 | .. | 63.44 | 65.26 | 102.87 |
| 1986-87 | .. | 82.12 | 94.19 | 114.70 |
| 1987-88 | .. | 110.49 | 97.36 | 88.12 |
| 1988-89 | .. | 112.95 | 129.45 | 114.60 |
| 1989-90 | .. | 190.26 | 175.57 | 92.28 |

**வேலை வாய்ப்பு**

1988-89-ஆம் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் தேசிய நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் 1989-90-ஆம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்.

(மனித வேலை நாட்கள் இலட்சத்தில்)

| வருடம். (1) | | இலக்கு. (2) | சாதனை. (3) | விழுக்காடு. (4) |
|---|---|---|---|---|
| 1985-86 | .. | 418.47 | 445.10 | 106.36 |
| 1986-87 | .. | 441.19 | 559.87 | 126.89 |
| 1987-88 | .. | 438.55 | 511.04 | 116.29 |
| 1988-89 | .. | 507.47 | 678.20 | 133.64 |
| 1989-90 | .. | 776.39 | 910.81 | 110.73 |

[1990 ஏப்ரல் 24

## 1990–91 ஆம் ஆண்டுத் திட்டம்

மத்திய அரசு 1990-91 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட சில மாவட்டங்களின் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் செயலாக்கப்படும். இத்திட்டம் செயலாக்கம் பெறும் மாவட்டங்களுக்கு மற்ற மாவட்டங்களை விட அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இத்தீவிர வேலை வாய்ப்பு உறுதித்திட்டம் மகாராட்டிர மாநிலத்தில் செயல்படும் திட்டத்தின் அடிப்படையில் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்புதிய திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் நிதி ஒதுக்கீடு பற்றிய விவரம் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் தொடர்ந்து செயல்படும். இத்திட்டம் அனைத்து ஊராட்சிகளிலும் செயல்படுத்தப்படும். எல்லா பேரூராட்சிகளிலும் திட்ட ஒதுக்கீடு அளிக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை போதிய நிதி வசதியின்மையால் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்பட்ட பேரூராட்சிகளில் இதனால் தேவையான வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வழி ஏற்படும்.

சிறுபாசன திட்டத்தினால் வேலை வாய்ப்பு அளிப்பது மட்டுமின்றி உற்பத்தி பெருகவும் வழிவகை செய்கிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ''சமுதாய சிறுபாசனக் கிணறுகள்'' அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் இதனைப் பயன்படுத்துவோர் பாசனத் தேவைமட்டுமின்றி விதைபெருக்குவதற்கும், விதைச் செடிகளை வளர்ப்பதற்கும் பயன்படும்.

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து 1990–91 ஆம் ஆண்டு முதல் ''குடி மராமத்து'' முறையினை மீண்டும் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. காவிரி நதி நீர்ப்படுகையின் பகுதி இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும். இதனால், வறண்ட பருவ காலத்தில் அதிகமான வேலை வாய்ப்பு பெருகுவதுமன்றி, பாசன, வாய்க்கால்களைப் பாதுகாக்கவும் வழிவகை ஏற்படும்.

தமிழ்நாட்டில் உள்ள 12,616 ஊராட்சிகளில் 6,135 ஊராட்சிகள் மட்டுமே சொந்தக் கட்டிடத்தில் இயங்குகின்றன. மீதமுள்ள 6,481 ஊராட்சிகள் சொந்தக் கட்டிடங்கள் இல்லாமல் இருக்கின்றன. இவை அடிப்படை தேவையாகும். இந்த நிதியாண்டில் 2,000 ஊராட்சிகளுக்கு சொந்தக் கட்டிடம் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.



1990 ஏப்ரல் 24]

## மீனவர்களுக்கான குடியிருப்புகள்.

23–3–1989-ஆம் ஆண்டில் முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க கடற்கரையை சார்ந்துள்ள கீழ்க்கண்டவாறு எட்டு மாவட்டங்களில், உப்புக்காற்று பாதிக்காத வீடுகள் மீனவர்களுக்காக மொத்தம் 2,311 வீடுகள் கட்டப்பட்டுள்ளன:—

| மாவட்டத்தின் பெயர். | வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| செங்கை—அண்ணா | 455 |
| தென்னாற்காடு | 304 |
| தஞ்சாவூர் | 303 |
| புதுக்கோட்டை | 209 |
| இராமநாதபுரம் | 130 |
| சிதம்பரனார் | 209 |
| திருநெல்வேலி—கட்டபொம்மன் | 50 |
| கன்னியாகுமரி | 651 |
| மொத்தம் | 2,311 |

ஒரு வீட்டினைக் கட்ட ரூ. 14,200 ஆகும். இதற்கு மேலே கூடுதல் தொகை ரூ. 300 உப்புக் காற்றால் பாதிக்கப்படாமல் இருக்க செலவிற்காக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு ரூ. 3.35 கோடி மொத்த ஒதுக்கீடாகும். இத்திட்டத்தினை செயல்படுத்தும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களால் ரூ. 1.5 கோடி இதற்காக பெறப்பட்டுள்ளது. இத்திட்ட வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு 1990–91 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

## சமூகக் காடு வளர்ப்பு.

தமிழ்நாடு வனத்துறை, 1961 ஆம் ஆண்டில், ''பண்ணைக் காடுகள்'' திட்டத்தின்கீழ் தரிசு நிலங்களில் காடு வளர்க்கும் பணியை மேற்கொண்டது. இத்திட்டத்தின்கீழ் 1979 வரை சுமார் 1.5 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலத்தில் காடு வளர்க்கப்பட்டது. வனத்துறையின் வழக்கமான பணிகளுக்கும், கூடுதலாக

இப்பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணிக்கென கூடுதலாக எவரும் நியமிக்கப்படவில்லை. 1980–81 ஆம் ஆண்டில், சுவீடனின் பன்னாடுகள் மேம்பாட்டு நிறுவனம் (SIDA) அளித்த நிதி உதவியுடனும், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமான கிராமப்புற விறகுமரம் வளர்க்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உதவியுடனும் ரூ. 10 கோடி செலவில் ஒரு மாபெரும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டம், ஐந்தாண்டுத் திட்டமாக அறிமுகம் செய்யப்பட்டது. இதற்கெனத் தனியாக ஒரு கூடுதல் தலைமை வனப் பாதுகாப்பாளர் தலைமையிலான சமூகக் காடு வளர்ப்புப் பிரிவு தொடங்கப்பட்டது. இவ்விரு திட்டங்களின்கீழ் ஆண்டுக்கு 26,000 ஹெக்டேர் நிலத்தில் காடுகள் வளர்க்கத் திட்டமிடப்பட்டது. இத்திட்டங்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்கப் பட்டுள்ளன.

.. .. ..

தமிழ்நாட்டில் உள்ள கிராம மக்களின் எரிபொருள், தீவனத் தேவைகளைப் 'பொறுத்தவரை' இம்முயற்சி மிகச் சிறிய அளவிற்கே பயன் கொடுத்துள்ளது எனலாம். கி.பி. 2000 ஆம் ஆண்டில் நாட்டில் கீழ்க்கண்ட அளவிற்குப் பற்றாக்குறை நிலவும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| விறகு (எரிபொருள்) | .. | .. | 80 விழுக்காடு. |
| வைக்கோல் | .. | .. | 55 விழுக்காடு. |
| பசும்புல் தீவனம் | .. | .. | 81 விழுக்காடு. |

இந்நிலை நீடிக்குமானால், கி. பி. 2000 ஆம் ஆண்டில் தமிழ்நாடு இப்போதிருக்கும் நிலையைவிட அதிகமான மக்கள் பெருக்கம், தூய்மைக்கேடு, உறுதியற்ற சுற்றுச்சூழல் ஆகியவற்றிற்கு உள்ளாகி பெரிய இழப்பினை சந்திக்க வேண்டிய நிலை உருவாகும். மக்கள் தொகை பெருக்கம், இயற்கை ஆதாரங்கள், சுற்றுச்சூழல் ஆகிய பெரும்பிரச்சினைகள் இப்போதே வெளிப்படையாகத் தெரிகின்றன. பல நூற்றுக்கணக்கான ஏழை மக்களுக்கு உணவும் இதர இன்றியமையாத தேவைகளும் கிடைத்தற்கரியனவாய் உள்ளன. தற்போதுள்ள போக்கினை மாற்ற அரசும் மக்களும் முனைந்து செயல்பட்டாலன்றி, அறிவியலில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டாலொழிய, பெரும்பாலான மக்களின் வாழ்க்கை நிலைமை மேலும் இடர்பாடானதாகவே இருக்கும்.

1980–81-ல் தொடங்கிய ஐந்தாண்டுகளில், ஊரக வளர்ச்சித் துறை, ஊரக வேலை வாய்ப்பு தேசிய திட்டத்தின்கீழ் சில காடு வளர்ப்புப் பணிகளை மேற்கொண்டது. ரூ. 15.86 கோடி ஒதுக்கீட்டில் ரூ. 10.63 கோடி இதற்காகச் செலவு செய்யப்பட்டது. இதன் மூலம் 1,33,528.26 ஹெக்டேர் நிலத்தில் காடுகள் வளர்க்கப்பட்டன. இத்திட்டம் ஒரு சில சமுதாய வளர்ச்சி வட்டாரங்களில் மட்டுமே செயல்படுத்தப்பட்டது. அவையும் முறையாக, அறிவியல் அடிப்படையில் செயல்படுத்தப் பட்டதாகச் சொல்ல இயலாது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின்கீழ் காடு வளர்ப்புப் பணி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.



ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாகிய 1985-86 லிருந்து ஒவ்வோர் ஆண்டும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம் ஆகிய இரு திட்டங்களிலும் காடு வளர்ப்புக்கு பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின், முதல் ஆண்டில், தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம் ஆகியவற்றின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 20 சதவீதம் சமூகக் காடு வளர்ப்புக்கு ஒதுக்கப்பட்டது. கடந்த இரு ஆண்டுகளில் இவ்விரு திட்டங்களுக்கும் வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் 25 சதவீதம், சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்திற்குக் குறிப்பிட்ட ஒதுக்கீடாக வழங்கப்படுகிறது. இவ்விரு திட்டங்களிலும் முறையே ரூ. 17.5 கோடி, ரூ. 17.5 கோடி செலவிடப்பட்டுள்ளது. மொத்தம் 443.654 இலட்சம் செடிகள் 20,742 ஹெக்டேர் நிலத்தில் நடப்பட்டன. வறுமை கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்களுக்கு 30,038 மரப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1989-90-ல் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சமூகக் காடுகள் வளர்க்கும் திட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, எய்திய சாதனை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

1. நிதி உதவி

| | | | |
|---|---|---|---|
| (1) நிதி ஒதுக்கீடு | .. | .. | ரூ. 9.816 கோடி. |
| (2) செலவினம் | .. | .. | ரூ. 8.366 கோடி. |
| (3) சதவீதம் | .. | .. | 85 சதவீதம் |

செயல்பாடு :

| | | | |
|---|---|---|---|
| (1) குறியீடு | .. | .. | 1,834 |
| (2) சாதனை | .. | .. | 1,922 |

2. உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகள் (இலட்சத்தில்)

| | | | |
|---|---|---|---|
| (1) குறியீடு | .. | .. | 345.21 |
| (2) சாதனை | .. | .. | 358.13 |

3. நடப்பட்ட கன்றுகள் (இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| (1) குறியீடு | .. .. .. | 320.786 |
| (2) சாதனை | .. .. .. | 334.773 |

4. பரப்பளவு (ஹெக்டேரில்)

| | | |
|---|---|---|
| (1) குறியீடு | .. .. .. | 12,412 |
| (2) சாதனை | .. .. .. | 13,946 |

5. வீடுகளில் வளர்க்கப்பட்ட மரங்கள் (குடும்பங்களின் எண்ணிக்கை)

| | | |
|---|---|---|
| (1) குறியீடு | .. .. .. | 39,910 |
| (2) சாதனை | .. .. .. | 76,568 |

சுவீடனின் பன்னாடுகள் மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன், சமூகக் காடுகளை வளர்க்க, வனத்துறை எடுத்துக் கொண்ட முயற்சிகள் பற்றி முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. இம்முயற்சிகளின் முக்கிய நோக்கம், பயன்தரும் மரங்களைப் பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்வதேயாகும். இந் நோக்கத்திற்குச் செயல்வடிவம் கொடுப்பதன் முதல் கட்டப் பணியாக நடப்பாண்டில் 500 சமூகக் காடு வளர்ப்புத் தோட்டங்களை ஊராட்சிகளுக்கு மாற்றக் கருதப்பட்டுள்ளது. மரங்களைப் பராமரிப்பது, மீண்டும் வளர்ப்பது, ஏலம் விடுவது, வனவள ஆதாரங்களைப் பயன்படுத்துவது ஆகிய பொறுப்புகள் முழுவதும், ஊராட்சிகளையே சாரும். இக்காடுகளை நிருவகிப்பது, சமூகக் காடு வளர்ப்புக்கான நிருவாகத் திட்டத்தைத் தயாரிப்பது ஆகியவற்றில் உதவும் பொருட்டு ஊராட்சித் தலைவர்களுக்கு தீவிர பயிற்சியளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சமூக மாறுதல் நோக்கிலான முக்கியமான இம்முயற்சியின்கீழ் மதிப்பு மிக்க காட்டு வளம், மக்களின் கையில் ஒப்படைக்கப்பட்டு, சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் தற்காலிகமாக வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தினாலும், மரத்தின் எண்ணிக்கை அளவில் சரியான முன்னேற்றம் காண முடியவில்லை. மேற்கண்ட நிலை செடிகளை நட்டபிறகு மாறுபட்ட காலநிலையிலும் செடிகளை பராமரிப்பதில் ஏற்பட்ட இடையூறுகளிலும் ஏற்பட்டது. நீர்வளம் அமைந்த இடங்களில் செடிகள் நட இடப்பற்றாக் குறையும், மரங்கள் நடுவதையும் பராமரிக்கப்படுவதையும் மேற்பார்வையிட தகுந்த ஆள்பலம் இல்லாமையும், சிறந்த செடிக் கன்றுகள் கிடைக்காமையும் இத்திட்ட செயலாக்கத்தில் குறைபாடுகளாக காணப்பட்டது. மேலும் ஊரக சமுதாயத்திற்கு தேவையான விறகுமரங்கள் வளர்வதற்கு மரங்களின் தேவையும் அதன் பயனும், அவசியமும் உணரப்பட்டதால் இத்திட்டத்தினை



கட்டுப்பாட்டுடனும் தகுந்த மேற்பார்வையுடனும் செயல்படுத்த வேண்டியுள்ளது. எனவே, 1990-91 ஆம் ஆண்டுகளில், சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் அரசால் மிகக் கவனமுடன் செயலாக்கப்படும். நீர் ஆதாரங்களைக் கண்டறிந்து சமூகக் காடுகள் வளர்க்கும் இடம் தேர்வு செய்யப்படும். தட்ப வெட்ப நிலைகளைத் தாங்கும் கன்று வகைகளும், தரமான மரக்கன்று நாற்றுக்களும் கொள்முதல் செய்யப்படும். பெரிய வட்டாரப் பகுதிகளில் நீர் ஆதாரம் சிறப்பாக உள்ள பகுதிகளில் சமூகக் காடுகள் திட்டம் செயல்படுத்த வலியுறுத்தப்படும். ஒழுங்கற்ற சிறிய அளவிலான மரக்கன்றுகள் வளர்ப்பது தவிர்க்கப்பட்டு ஒழுங்கான நிலையை கவனிக்கவும், தண்ணீர் விட்டு பராமரிக்கவும் தேவையான ஒதுக்கீடு செய்யப்படும்.

**வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காக சிறு/குறு நில விவசாயிகளுக்கு உதவி அளிக்கும் பெருந்திட்டம்.**

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காக சிறு/குறு நில விவசாயிகளுக்கு உதவி வழங்கும் இப்பெருந் திட்டம் தமிழ்நாட்டில் 1983-84ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் புதிதாக சிறுபாசன வசதிகள் ஏற்படுத்திக் கொள்ளவுோ அல்லது தற்போதுள்ள பாசன ஆதாரத்தை மேம்படுத்துவதற்கும், நிலத்தை சமப்படுத்துதல், சீர்படுத்துதல், போன்ற பணிகளை மேற்கொள்ளவும், கடன் உதவித் தொகை வடிவில் அவர்களுக்குத் தேவையான நிதி உதவி அளிக்கப்படுகிறது. சிறு பாசனத் திட்டத்தின் கீழ், கிணறுகள் தோண்டவும், ஆழமற்ற குழாய்க் கிணறுகள், வடிமுனைக் கிணறுகள், துளைக் கிணறுகள் அமைக்கவும், கிணறுகளை ஆழப்படுத்தவும், பழைய கிணறுகளை சீரமைக்கவும் பம்பு செட்டுகள், மின் மோட்டார்கள், டீசல் என்ஜின்கள் ஆகியவற்றை வாங்கவும், பம்பு அறைகள் கட்டுவதற்கும் உதவித் தொகை இணைந்த கடன் வழங்கப்படுகிறது.

இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். இத் திட்டத்திற்காகும் செலவை 50 : 50 என்ற அடிப்படையில் மத்திய அரசும், மாநில அரசும் ஏற்கின்றன. இத்திட்டத்தின் மூன்று பிரிவுகளுக்குமான மூலதனச் செலவின் சதவீதம் வருமாறு :

| | சதவீதம். |
|---|---|
| (அ) சிறு பாசனப் பணிகளுக்கான உதவித்தொகை. | 70 |
| (ஆ) விதைகள், எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள், மோட்டா ரக தானியங்கள் ஆகிய இடுபொருட்கள் வழங்குதல் (அதிக அளவு). | 10 |
| (இ) பணியாளர் செலவு உட்பட நில மேம்பாடு குறித்த செலவினம் (பணியாளர் செலவினம் ரூபாய் 4,000 என வரையறுக்கப்பட்டுள்ளது). | 20 |

[1990 ஏப்ரல் 24

சிறுபாசனத் திட்டமும், நில மேம்பாட்டுத் திட்டமும், ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்தப்படுகின்றன. விதைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகிய இடு பொருள்கள் வேளாண்மை இயக்குநர், எண்ணெய் வித்துக்கள் இயக்குநர், தோட்டக்கலை இயக்குநர் ஆகியோர் மூலம் வழங்கப்படுகின்றன.

நடப்பு நிதியாண்டில், அதாவது 1989-90 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிற்கு மொத்தம் ரூ. 11.27 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. (இதில் மத்திய அரசுப் பங்குத் தொகை ரூ. 5.635 கோடி, மாநில அரசு பங்குத் தொகை ரூ. 5.635 கோடி.)

உணவு தானியங்கள் சிறப்புத் திட்டத்தின் கீழ், ஆழமற்ற குழாய் கிணறுகளை தோண்டும் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற, அதாவது செங்கை-அண்ணா, வட ஆற்காடு-அம்பேத்கார், திரு வண்ணாமலை-சம்புவராயர், தென் ஆற்காடு, திருச்சி, புதுக் கோட்டை, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் (218 வளர்ச்சி வட்டாரங்கள்) சிறு பாசனத் திட்டத்திற்கு நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை. நில மேம்பாடு திட்டத்திற்கும், இடு பொருட்கள் வழங்குவதற்கும் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உணவு தானியங்கள் சிறப்புத் திட்டம் (SFP·) செயல் படுத்தப்படாத சேலம், தருமபுரி, பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி, திண்டுக்கல்-காயிதே மில்லத், இராமநாதபுரம், காம ராசர், பசும்பொன் தேவர் திருமகன், சிதம்பரனார், கன்னியா குமரி ஆகிய மாவட்டங்களில், மூன்று திட்டங்களுக்கும் அதாவது, சிறுபாசனம், நில மேம்பாடு, இடு பொருட்கள் வழங்குதல் ஆகிய திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

உணவு தானியம் சிறப்புத் திட்டம் வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

நடப்பு நிதியாண்டில் (1989-90) 1990 மார்ச் திங்கள் வரையில் பின்வரும் சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன:

| திட்டம். | | | செலவிடப் பட்ட தொகை. | பயனீட் டாளர் களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | | | (2) (ரூபாய் கோடியில்.) | (3) |
| 1 சிறுபாசனம் | .. | .. | 6.35 | |
| 2 நில மேம்பாடு | .. | .. | 1.54 | 26,111 |
| மொத்தம் | .. | | 7.89 | |



1990 ஏப்ரல் 24]

முறைசாரா எரிபொருள் திட்டம்.

(அ) சாண எரிவாயு மேம்பாட்டுத் தேசிய திட்டம்.

எரிவாயு மேம்பாட்டுத் தேசிய திட்டம் இம்மாநிலத்தில் நிறைவேற்றப்படுகிறது. இது மத்திய அரசின் முழு நிதியுதவி பெறும் திட்டமாகும். ஊரக வளர்ச்சித் துறை 1981-82 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தை நிறைவேற்றி வருகின்றது. இது வரையிலும், அதாவது 1981-82 ஆம் ஆண்டிலிருந்து 1988-89ஆம் ஆண்டு வரையிலும் 89,502 சாண எரிவாயு சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. 1989-90 ஆம் ஆண்டில் 12,400 சாதனங்களை நிறுவவேண்டுமென மத்திய அரசு இலக்கு நிர்ணயித் துள்ளது. 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் 11,315 சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதில் 187 சாதனங்கள் ஆதி திராவிடர்களின் பயனுக்காக நிறுவப்பட்டுள்ளன.

பயன்பெறுவோர் வகைக்கேற்ப (ஆதி திராவிடர்/பழங்குடி யினர், சிறு/குறு நில விவசாயிகள் ஏனையோர்) பொறுத்து நிதி உதவியின் அளவு வீதம் வேறுபடுகின்றது.

ஏற்பளிக்கப்பட்ட நிதி உதவி அளவு வீதங்கள்:

| திறன் அளவு க.மீ. | | ஆதி திராவிடர் பழங் குடியினர். | சிறு/ குறு நில விவசாயி கள். | ஏனை யோர் பொது. |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1 க.மீ. | .. | 1,250 | 1,250 | 1,000 |
| 2 க.மீ. | .. | 2,350 | 2,350 | 1,560 |
| 3 க.மீ. | .. | 2,860 | | 1,900 |
| 4 க.மீ. | .. | 2,860 | | 2,140 |
| 6 க.மீ. | .. | 2,860 | | 2,610 |
| 8 க.மீ. | .. | 2,860 | | 2,610 |
| 10 க.மீ. | .. | 2,860 | | 2,610 |

மத்திய அரசு 1989-90 ஆம் ஆண்டில் பயனாளிகளுக்காக ரூ. 1.72 கோடி நிதி உதவி வழங்கியுள்ளது.

1989–90 ஆம் ஆண்டில் கிராம மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக பெண்களுக்கென 200 ஒரு நாள் பயன்பெறுவோர் பயிற்சி வகுப்புகள் நடத்த திட்டமிடப்பட்டு இதில் 1990 மார்ச் திங்கள்வரை 181 வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

**மேம்படுத்தப்பட்ட அடுப்பு அமைக்கும் தேசியத் திட்டம்:**

நடப்புக் காலத்தில் எரிபொருளும், விறகும் கிடைப்பது கடினமாக இருப்பதாலும், பரந்த அளவில் காடுகள் அழிக்கப்படுவதின் காரணமாகவும், இந்திய அரசு மேம்படுத்தப்பட்ட அடுப்பு அமைக்கும் தேசிய திட்டத்தை 1983–84 ஆம் ஆண்டு கொண்டு வந்தது. இத்திட்டத்தின்கீழ் 25 சதவீத எரிசக்தியை சேமிக்கும் வகையில், பலவகையான மேம்படுத்தப்பட்ட அடுப்பு (நிலையான மற்றும் கையடக்க வகைகள்) உருவாக்கப்பட்டு அவற்றை உபயோகிக்க இந்திய அரசு சான்றிதழ்களை வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னிலையில் இருக்கிறது. நாட்டிலேயே அதிக அளவில் இவ்வடுப்புகளை நிறுவி, 1985–86, 1986–87 ஆம் ஆண்டுகளில் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது. 1987–88 ஆம் ஆண்டு 1,05,000 என்ற இலக்கையும் தாண்டி 1,55,482 அடுப்புகள் நிறுவப்பட்டன. 1988–89 ஆம் ஆண்டு 80,000 என்ற இலக்கையும் தாண்டி 1,18,043 அடுப்புகள் நிறுவப்பட்டன. அடுப்புகள் நிறுவுவதில் சுயதேவையை நிறைவு செய்யும் நோக்கத்துடன், கிராம கைவினைஞர்களுக்கு அடுப்பு அமைப்பது சம்பந்தமாகப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டு இந்த ஆண்டில் 384 ஊராட்சி ஒன்றியங்கள், 5 தொண்டு நிறுவனங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டு, 400 கைவினைஞர்களுக்கு (சுய வேலை வாய்ப்புப் பணியாளர்கள்) ஐந்து ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற சுய வேலைவாய்ப்புப் பணியாளர் ஒவ்வொருவருக்கும் தலா 300 அடுப்புகள் அமைப்பது என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அடுப்புகள் அமைத்து வருகிறார்கள். மேற்படி சுயவேலை வாய்ப்புப் பணியாளர்கள் அடுப்புகள் அமைப்பது மட்டுமின்றி, மாதந்தோறும் அவற்றின் செயல்பாட்டினை கண்காணிக்கவும்,வேண்டும். அதற்காக அவர்களுக்கு, ஒரு அடுப்புக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 10 பராமரிப்புத் தொகை வழங்கப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டில் 1,00,000 அடுப்புகள் நிறுவ வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்கு மாறாக 98,002 அடுப்புகள் நிறுவப்பட்டுள்ளன. 1989–90 ஆம் ஆண்டு இத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 0.45 கோடியாகும். இதில் மத்திய அரசு இதுவரை ரூ. 0.30 கோடி வழங்கியுள்ளது.



**மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டம் :**

கிராமப்புற மக்களில் குறைந்தது 25 சதவீதத்தினருக்காவது துப்புரவு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கிராமப்புறப் பகுதிகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் மோசமாக பாதிக்கப்படுவதற்குச் சரியான சுகாதார வசதியின்மையும் ஒரு காரணமாகும். இதுவரையிலும் இந்த வகையில் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி நிலவரப்படி, கிராமப்புற மக்களில் 0.72 சதவீதத்தினர்தான் சுகாதார வசதிகள் பெற்றுள்ளனர். எனவே ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட நோக்கங்களை நிறைவேற்ற, இந்த வகையில் பெரு முயற்சி எடுக்க வேண்டியுள்ளது.

கிராமப்புறப் பகுதிகளில் துப்புரவு வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை, அதிலும் குறிப்பாக பெண்களின் பெருமையை காப்பாற்ற வேண்டிய அவசியத்தை உணர்ந்து 1986 ஜனவரித் திங்களில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்திரவாதத் திட்டம் ஆகியவற்றின்கீழ், கிராமப் புறங்களில் கழிப்பிடங்களைக் கட்டுவதற்கான ஒருங்கிணைந்த திட்டமொன்று தொடங்கப்பட்டது. இவற்றுடன், துப்புரவு வசதிகளைப் பெருக்க வெவ்வேறு மாநிலங்களில் மாநில அரசுத் துறை திட்டங்களும் உள்ளன.

இருந்தாலும், இப்பிரச்சினையின் கடுமையைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது வெவ்வேறு திட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் போதாது. மேலும், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் / ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் ஆகியவற்றின் கீழ், ஆதி திராவிடர்கள்/பழங்குடியினரோடு கிராமப் புறங்களிலுள்ள ஏனைய பிரிவினருக்கும் இவ்வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். கிராமங்களுக்குத் துப்புரவு வசதிகளைத் தீவிரமாகச் செய்து கொடுக்கும் நோக்கத்தை எய்தும் வகையில் மாநிலங்கள்/மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் மத்திய ஊரக துப்புரவுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட வீடுகளுக்குக் கழிப்பிடங்கள் கட்டிக் கொடுக்கும் ஏற்பாட்டின்கீழ் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் பின்வரும் அளவு கோல்கள் பின்பற்றப்படுகின்றன:—

(1) ஆதி திராவிடர்/பழங்குடியினர்.

(2) வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள்.

(3) ஏனையோர்,

ஆதிதிராவிடர்/பழங்குடியினர், சிறு விவசாயிகள், சொற்ப நிலம் வைத்திருப்பவர்கள் ஆகியோரைப் பொறுத்தமட்டில் கழிப்பிடம் கட்டுவதற்கு ஆகும் செலவில் 5 சதவீதமும், ஏனையோரிடமிருந்து 20 சதவீதமும் வசூலிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துவதற்கான கிராமங்களைத் தேர்ந்தெடுக்கும்போது பின்வரும் வரையறைகள் பின்பற்றப்பட வேண்டும்:—

(1) துப்புரவுக் கழிப்பிடங்களைக் கட்டிக் கொடுக்கும்போது அதற்குத் தேவையான தண்ணீர் வசதி கிடைப்பது;

(2) ஆதி திராவிடர்/பழங்குடியினருக்குக் கிராமப் புறநிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் கழிப்பிடங்களைக் கட்டிக் கொடுக்கத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது தெரிந்தெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமங்கள்;

(3) ஏனைய திட்டங்களின் கீழ் ஏற்கெனவே கழிப்பிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ள கிராமங்கள்.

நிதி: இதற்காகும் மொத்த செலவை மாநில, மத்திய அரசுகள் 50 : 50 என்ற வீதத்தில் ஏற்றுக்கொள்ளும்.

ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப்பட்ட தொகைக்கான அறிக்கையினைத் தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கவேண்டும். மாநில அரசுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன், இத்திட்ட அறிக்கைக்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கும் என எதிர்பார்த்து இத்திட்டத்தை நிறைவேற்றலாம். 1989–90 ஆம் ஆண்டிற்கு 17,000 துப்புரவுக் கழிப்பிடங்கள் அமைக்க மாநில அரசின் 50 சதவீத பங்காக ரூ. 0.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இராமப் பணித் திட்டம் :**

**சிறப்புத் திட்டம் :**

ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் உட்பட்ட சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் சிறு பாசனங்கள் இவைகளைப் பராமரிக்கவும் தேவைப்பட்டால் விரிவாக்கும் பொறுப்புகளை ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் வழங்கியுள்ளது. ஆரம்ப காலங்களில் மேற்கண்ட பணிகளுக்காக, சட்டப்படியான மானியமும், இதர மானியமும் மாநில அரசால் வழங்கப்பட்டன. ஆனால், காலப் போக்கில் இணைப்புச் சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள், குடிநீர் வழங்கல், பாசனம் போன்ற தலைப்பினத்திற்கு ஒதுக்கீடுகள் குறைந்து, அதன்கீழ் உள்ள ஒதுக்கீடு தற்காலம் இருக்கும் சாலைகளையோ,



பள்ளிக் கட்டிடங்களையோ மற்ற ஊராட்சி சொத்துக்களையோ பராமரிக்கக்கூடப் போதுமானதாக இல்லை. ஆனால் இதனை மாற்ற இந்த அரசு புதிய துணிவுடன் முன்வந்துள்ளது மன நிறைவை அளிக்கிறது. இது பற்றி தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தனது நிதி நிலை அறிக்கையில் கீழ்க்கண்டவாறு அறிவித்துள்ளார்.

கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்கல், சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள், சுகாதார துணை நிலையங்கள், குழந்தை நல நிலையங்கள், சிறுபாசன வாயில்களைப் பேணுதல் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்காகப் பல்வேறு கணக்குத் தலைப்புகளின்கீழ் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. நமது மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரைக்கேற்ப எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக இப்பொழுது உள்ள வசதிகளைக் குறித்து விரிவான ஆய்வினை மேற்கொண்டு, அதன் மூலம் குறைபாடுகளைக் கண்டறிந்து, அடுத்த ஐந்தாண்டுகளில் திட்டமிட்ட முறையில் கூடுதல் வசதிகளை ரூ. 250 கோடிக்கு மேல் செலவிட்டு உருவாக்க முடிவெடுத்துள்ளோம். இப்புதிய திட்டத்திற்காக வரும் ஆண்டில் ரூ. 50 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். இத்தொகையில் அரசு ரூ. 25 கோடி வழங்கும், எஞ்சிய தொகையை ஊராட்சி ஒன்றியங்கள் அவற்றின் நிதி நிலைக்கேற்ப வழங்கும். இத்திட்டங்களை நிறைவேற்ற ஊராட்சி ஒன்றியங்கள் நேரடியாகப் பொறுப்பேற்கும்.

கீழ்க்கண்ட தலைப்புகளின்கீழ் முதலில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது:—

| | (ரூபாய் கோடியில்). |
|---|---|
| கிராமப் பகுதிகளில் பள்ளிக் கட்டிடங்களை பராமரிக்கும் சிறப்புத் திட்டம். | 3.00 |
| குறைந்த அளவு தேவைத் திட்டத்தை நிறைவு செய்யும் வகையில், கிராமப் புறங்களில் குடிநீர் வழங்கும் சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றுதல். | 5.00 |
| கிராமப் பகுதிகளில் சாலைகள் அமைக்கும் சிறப்புத் திட்டம். | 10.00 |
| கிராமப் பகுதிகளில் சிறு பாசன குளங்களை அபிவிருத்தி செய்வதற்கான சிறப்புத் திட்டங்கள். | 1.00 |
| இராமப் பகுதிகளில் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுதல். | 3.00 |

ஊராட்சி ஒன்றியங்களின் நிதியிலிருந்து தகுந்த ஈடுசெய்யும் நிதி வழங்கப்படும். அவசியத் தேவைகளின் அடிப்படையிலும் குறிப்பிட்ட வரைமுறைகளில் திட்டம் முடிவு செய்யப்படும்.

இணைப்புச் சாலைகள் :

இத்திட்டத்தின் கீழ், கிராமப் பகுதிகளில் இணைப்புச்சாலைகளை மேம்படுத்தும் பணியை ஊராட்சி ஒன்றியம் மேற்கொண்டு செயலாக்கியது. இப்பணி ஊரக வேலை வாய்ப்பு திட்ட நிதிகளையும், ஜவஹர் வேலை வாய்ப்பு திட்ட நிதிகளையும் கொண்டு மேற்கொள்ளப்படுவதால் இப்பணிக்கு 1986–87 முதல் ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே ஒதுக்கப்பட்டு வருகிறது.

கால்நடை வளர்ப்பு மானியம் :

ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்களுக்காக இந்த மானியத்தின் கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் அதற்கெனக் குறிக்கப்பட்டுள்ள இணை மானியம் வழங்க முன்வரவேண்டும்.

இந்த மானியங்கள் பணி முடிந்தவுடன் வழங்கப்படும். அதாவது இச்செலவு முதலில் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செய்யப்பட்டு பின்னர், கோட்ட வளர்ச்சி அலுவலர்களால் திருப்பிக் கொடுக்கப்பட்டு ஈடு செய்யப்படும்.

1989–90 ஆம் ஆண்டில் மேற்படி திட்டத்திற்கு அரசு முந்தைய ஆண்டைப் போலவே ரூ. 7.25 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. 1990–91 ஆம் ஆண்டிற்கும் இதே அளவு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் பாசன மானியம் :

வருவாய்த் துறையின் பொறுப்பில் உள்ள சிறுபாசனப் பணிகளைப் பாதுகாத்தல், பராமரித்தல் தொடர்பான அலுவல்கள் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்பட வேண்டும் என தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் 85 (i) பிரிவின்படி அரசு ஆணைகளை பிறப்பித்துள்ளது. பாசனப் பணிகளைப் பராமரிப்பதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு உள்ளூர் பாசன மானியம் வழங்கப்படுகிறது. இந்தப் பாசன ஆதாரங்களிலிருந்து பாசனம் பெறும் ஒவ்வொரு ஏக்கருக்கும் குறைந்தது ரூ. 1.50-ம் உயரளவு ரூ. 2.50 என்ற அளவுக்குட்பட்டு மானியம் முதலில் வழங்கப்பட்டது. அவ்வப்போது உயர்த்தப்படும் கட்டண வழங்கலைக் கணக்கில் கொண்டு மேற்சொன்ன வீதங்கள் நிர்ணயிக்கப்படாததால் ஆண்டுத் தேவைகளின் அடிப்படையில் இந்த



மானியம் வழங்கப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்தது. அவ்வாறே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள மாற்றப்பட்ட சிறுபாசன ஆதாரங்களையும் பராமரிப்பதற்காக 1964-65ல் தொடங்கி ஐந்தாண்டு சுழற்சி அடிப்படையில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்த சுழற்சி ஏற்பாட்டின் கீழ், அந்த ஆண்டில் மேற்கொள்ள வேண்டியிருக்கும் பழுதுபார்த்தல் பணிகளுக்கான மதிப்பீடுகளை ஒட்டி, நிதிகள் ஒதுக்கப்படுகின்றன. மாவட்ட ஆட்சியர் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதத்திலும், அக்டோபர் மாதத்திலும் இம்மானியத்தை மூன் கூட்டி வழங்குகிறார். மேற்சொன்ன திட்டத்திற்காக, 1989–90-ல் ரூ. 0.55 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | 1989–90 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய்.) |
| 1 செங்கை-அண்ணா .. .. .. | 4,65,000 |
| 2 திருவண்ணாமலை-சம்புவராயர் .. | 5,12,050 |
| 3 வடாற்காடு-அம்பேத்கார் .. .. | 3,87,950 |
| 4 தென்னாற்காடு .. .. .. .. | 4,15,000 |
| 5 தருமபுரி .. .. .. .. | 7,00,000 |
| 6 சேலம் .. .. .. .. | 1,00,000 |
| 7 பெரியார் .. .. .. | 10,000 |
| 8 கோயம்புத்தூர் .. .. .. | 40,000 |
| 9 தஞ்சாவூர் .. .. .. | 15,000 |
| 10 திருச்சிராப்பள்ளி .. .. .. | 4,50,000 |
| 11 புதுக்கோட்டை .. .. .. | 2,50,000 |
| 12 மதுரை .. .. .. .. | 3,50,000 |
| 13 திண்டுக்கல்-காயிதேமில்லத் .. .. | 1,80,000 |
| 14 இராமநாதபுரம் .. .. .. | 3,30,000 |
| 15 பசும்பொன் தேவர் திருமகன் .. | 4,00,000 |
| 16 காமராசர் | 2,90,000 |
| 17 திருநெல்வேலி-கட்டபொம்மன் .. .. | 2,45,000 |
| 18 சிதம்பரனார் .. .. .. .. | 1,60,000 |
| 19 கன்னியாகுமரி .. .. .. | 2,00,000 |
| மொத்தம் ... | 55,00,000 |

1990–91 ஆம் ஆண்டிற்கு சென்ற 1989–90 ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்டது போல ரூ. 0.55 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறுபாசன மானியம்.

சிறு பாசனங்களை மேம்படுத்துதல்.

தற்போதுள்ள சிறுபாசன ஆதாரங்கள் ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை சுழற்சி முறைப்படி பராமரிக்கப்படுகின்றன. ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைக் கொண்டு தூரெடுக்கும் பணிகளை மட்டுமே மேற்கொள்ள இயலும் என்பதால் இச்சுழற்சி முறைப்படிகூட இப்பாசன ஆதாரங்களைச் சரிவர பராமரிக்க இயலவில்லை. நாளடைவில் இப்பாசன ஆதாரங்கள் மோசமடைகின்றன. எனவே, பின்வரும் இனங்கள் குறித்து உடனடி கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது :—

(1) நீர்க்கசிவு, மண் அரிப்பு ஆகியவற்றைத் தடுக்கக் கரைகளைப் பலப்படுத்தல் ;

(2) விழுந்தோடிகளைப் பழுது பார்த்துச் சீரமைத்தல் ;

(3) 4 எக்டேர் வரையில் பாசனத்தை நீட்டிக்கவும், நீர்க்கசிவைத் தடுக்கவும், நீர் வழங்கு கால்வாயைப் புதுப்பித்து வலுப்படுத்தல் ;

(4) ஏரிகளின் பாசனப் பரப்பு மேம்படுத்தப்பட வேண்டும்;

(5) அவசியமான பணிகளை மேற்கொண்டு ஏரிகளைச் சீரமைத்து அவற்றைத் தரமுள்ளவையாக ஆக்குதல்.

1989–90 ஆம் ஆண்டில் மேற்படி திட்டத்திற்காக ரூ. 0.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாவட்டங்களுக்கு பின்வருமாறு வழங்கப்பட்டது :—

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். (1) | 1989–90 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டுத் தொகை. (2) (ரூபாய்). |
|---|---|
| 1 செங்கை-அண்ணா .. .. .. | 4,74,000 |
| 2 தென்னாற்காடு .. .. .. | 3,99,000 |
| 3 திருவண்ணாமலை-சம்புவராயர் .. .. | 2,07,000 |
| 4 வடாற்காடு-அம்பேத்கார் .. .. | 2,26,000 |
| 5 சேலம் .. .. .. .. | 1,25,000 |
| 6 தருமபுரி .. .. .. .. | 4,15,000 |
| 7 பெரியார் .. .. .. .. | 6,000 |
| 8 கோயம்புத்தூர் .. .. .. .. | 2,000 |
| 9 தஞ்சாவூர் .. .. .. .. | 16,000 |
| 10 திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 5,67,000 |
| 11 புதுக்கோட்டை .. .. .. .. | 6,83,000 |
| 12 மதுரை .. .. .. .. .. | 3,55,000 |
| 13 திண்டுக்கல்-காயிதே மில்லத் .. .. | 3,44,000 |
| 14 இராமநாதபுரம் .. .. .. .. | 1,41,000 |
| 15 காமராசர் .. .. .. .. | 1,37,000 |
| 16 திருநெல்வேலி-கட்டபொம்மன் .. .. | 1,80,000 |
| 17 சிதம்பரனார் .. .. .. .. | 84,000 |
| 18 கன்னியாகுமரி .. .. .. .. | 3,25,000 |
| 19 பசும்பொன் தேவர் திருமகன் .. .. | 3,12,000 |
| மொத்தம் .. | 50,00,000 அல்லது, 0.50 கோடி |



முன்பே குறிப்பிட்டது போல் சிறப்பு நிதி ஒதுக்கீடாக ரூ. 1.00 கோடி சிறுபாசனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதால், இத்தலைப் பினத்தின்கீழ், 1990-91 ஆம் ஆண்டிற்கு தனி ஒதுக்கீடு செய்யப் படவில்லை.

சமூகக் கல்வி மானியம்.

நமது மாநிலத்தில் 384 தகவல் மையங்களும், 12,616 சமூகக் கல்வி மையங்களும் இயங்கி வருகின்றன.

இதன் விவரங்கள் வருமாறு:—

| | மாவட்டத்தின் பெயர். | தகவல் மையங்களின் எண்ணிக்கை. | சமூகக் கல்வி மையங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | செங்கை-அண்ணா .. | 27 | 1,192 |
| 2 | வட ஆர்க்காடு-அம்பேத்கார் | 20 | 1,618 |
| 3 | திருவண்ணாமலை சம்புவராயர் | 18 | |
| 4 | தென் ஆர்க்காடு .. .. | 34 | 1,766 |
| 5 | சேலம் .. .. .. | 35 | 729 |
| 6 | தருமபுரி .. ... ... | 18 | 588 |
| 7 | பெரியார் .. ... .. | 20 | 342 |
| 8 | கோயம்புத்தூர் ... ... | 21 | 388 |
| 9 | தஞ்சாவூர் ... ... ... | 34 | 1,451 |
| 10 | திருச்சி ... ... ... | 32 | 888 |
| 11 | புதுக்கோட்டை ... ... | 13 | 498 |
| 12 | மதுரை .. ... ... | 21 | 560 |
| 13 | திருநெல்வேலி-கட்டபொம்மன் | 19 | 435 |
| 14 | சிதம்பரனார் ... ... | 12 | 408 |
| 15 | திண்டுக்கல்-காயிதே மில்லத் | 14 | 304 |
| 16 | இராமநாதபுரம் ... | 11 | 444 |
| 17 | பசும்பொன் தேவர் திருமகன் | 11 | 437 |
| 18 | காமராசர் .. .. ... | 11 | 453 |
| 19 | நீலகிரி ... .. ... | 4 | 127 |
| 20 | கன்னியாகுமரி ... ... | 9 | 88 |
| | | 384 | 12,616 |



'' தமிழரசு '', '' திட்டம் '', '' பஞ்சாயத்துச் செய்தி '' '' பஞ்சாயத்து ராஜ் '' ஆகிய பத்திரிகைகள் வாங்குவதற்காக மேற்கூறிய சமூகக் கல்வி மையங்களுக்கு மையம் ஒன்றுக்கு ரூ. 100 வீதமும், தகவல் மையங்களுக்கு மையம் ஒன்றுக்கு ரூ. 680 வீதமும் அரசு மானியமாக நிதியுதவி அளித்துள்ளது.

1989-90 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தின் மானியக் கோரிக்கை எண் 28, ஊரக வளர்ச்சி ஆணையாளரின் கட்டுப் பாட்டின்கீழ் வருபவை :—

'' திட்டப் பணிகள் '' என்பதன்கீழ் அரசு ரூ. 15.20 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. மேற்கூறிய தொகை கீழே குறிப்பிட்டுள்ளவாறு பகிர்ந்தளிக்கப்பட்டது :—

| | | ரூ. |
|---|---|---|
| 1. | சமூகக் கல்வி மையம் ஒன்றுக்கு ரூ. 100 வீதத்தில். | 12,61,600 |
| 2. | தகவல் மையம் ஒன்றுக்கு ரூ. 580 என்ற வீதத்தில் 384 மையங்களுக்கு. | 2,22,720 |
| 3. | மாநில/மாவட்ட அளவில் பொருட்காட்சிகள் நடத்துவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை. | 35,680 |
| | மொத்தம் ... | 15,20,000 அல்லது 0.152 கோடி |

கடந்த ஆண்டில் வழங்கப்பட்டது போல் 1990-91 ஆம் ஆண்டிற்கும் ரூ. 0.152 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

ஊரக குடிநீர் வழங்கு திட்டம்.

| ஆண்டு. | நிதி ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| 1986-87 ... .. ... ... | 0.50 |
| 1987-88 .. ... ... ... | 0.75 |
| 1988-89 .. .. .. ... | 1.00 |
| 1989-90 .. .. .. ... | 1.00 |

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், ஊரக வளர்ச்சி துறையும் கிராமப் பணித் திட்டத்தின்கீழ், நீர் வாயில்களை நிறுவுவதற்கான முகமைகளாகச் செயல்படுகின்றன. 1989-90 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ஊராட்சி ஒன்றியங் களுக்கு ஊரக குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ் ரூபாய் ஒரு

கோடி ஒதுக்கப்பட்டது. இந்தத் தொகை, எஞ்சியிருந்த அனைத்துப் பணிகளையும் முடிப்பதற்கும், நிலமட்ட நீர்த் தேக்கங்களைக் கட்டுவதற்கும் குடிநீர்க் குழாய் வசதிகளை நீட்டிப்பதற்கும், மீதமுள்ள தொகை முழுவதையும் 1989-90 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் புதிய பணிகளுக்குப் பயன் படுத்திக் கொள்வதற்கும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் முதலில் பயனடையும் வகையில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ள னர். ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கான நிதியில் 20 சதவீதம், ஆதி திராவிடர்/பழங்குடியினர் குடிநீர் வழங்கல் ஆதாரங்களுக்கென ஒதுக்கிவிட்டு செலவிடப் பட்டு உள்ளது. ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ், 1990 மார்ச் மாதம் வரையில் ஏற்பட்ட செலவு ரூபாய் 0.936 கோடியாகும்.

1990-91 ஆம் ஆண்டுக்கு கூட ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, சிறப்பு ஒதுக்கீடாக, குறைந்த அளவு தேவைத் திட்டத்தினை நிறைவு செய்யும் வகையில், ஊரகப் பகுதிகளில் சிறப்பு குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மாதிரி ஒதுக்கீடு செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும். இது, குடிநீர் வழங்கல் போன்ற அடிப்படை வசதிகளில் உள்ளாட்சி நிறுவனங்களின் ஈடுபாட்டின் மீது அரசு வைத்திருக்கும் முக்கியத்துவத்தை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

### கை பம்புகள் மற்றும் விசைப் பம்புகள் பராமரிப்பு

சமுதாய வளர்ச்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்பது முக்கியமான அம்சமாகும். பருவ மழை தவறிய காரணத் தினால், இன்றைய நிலையில் இதன் அவசியம் மிகவும் அதிக மாகி உள்ளது. எனவே, தமிழக அரசு, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

கிராமங்களில் ஆழ்துளை கிணறுகள் மற்றும் கை பம்புகள் அமைக்கும் பணியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளது. கை பம்புகளைப் பராமரிக்கும் பணி மூன்று அடுக்குகளில் மேற்கொள்ளப்படுகிறது. வெவ்வேறு நிலைகளில் உள்ள பணியாளர்களைப் பற்றிய விவரம் பின் வருமாறு :—

(1) கிராம அளவில் .. கை பம்புகளைப் பராமரிக்க, பயன் பெறுவோரிலிருந்து ஒருவரைப் பராமரிப்பாளராக அமர்த்துதல்.



(2) வட்டார அளவில் .. பயிற்சி பெற்ற பழுது பார்த்து பொருத்துபவர், 10 கை பம்பு களுக்கு ஒருவர் என்று வட்டார அளவில் நியமிக்கப்பட்டுள்ள கூடுதலாக உள்ள ஒவ்வொரு 30 கை பம்புகளுக்கும் கூடுதலாக ஒரு பொருத்துபவர், தற்காலிக மாக நியமிக்கலாம்.

(3) வட்ட அளவில் .. உதவிப் பொறியாளர் தலைமையில் ஒரு நடமாடும் குழு உள்ளது. இவை தவிர, மாவட்ட அளவில் விசைப் பம்புகள் பராமரிப்பதற் கான தனி அமைப்பு ஒன்று அயல் பணியில் உள்ள உதவி செயற் பொறியாளர் ஒருவரின் தலைமையில் இயங்கி வருகிறது.

இம்மாநிலத்தில், இத்துறையின் கீழ் 1990 மார்ச் வரையில் 75,165 கை பம்புகளும் 35,421 வடிமுனை குழாய்களும் 20,397 விசைப் பம்புகளும் இயங்கி வருகின்றன.

கைபம்பு மற்றும் விசைப் பம்புகள் பராமரிப்பினை குறித்து ஊராட்சி ஒன்றிய ஆணையர் தினசரி ஆய்வு செய்கிறார். கோட்ட வளர்ச்சி அலுவலர் வாரம் ஒரு முறையும், மாவட்ட ஆட்சித் தலைவர் மாதம் இரு முறையும் இது குறித்து ஆய்வு செய்கிறார் கள். மாநில அளவில் ஊரக வளர்ச்சி இயக்குநர் இப்பரா மரிப்புப் பணியினை மாதம் இரு முறை ஆய்வு செய்கிறார். ஏழு நாட்களுக்குள் பழுது நீக்கும் அனைத்துப் பணிகளையும் மேற் கொள்ள வேண்டும் என்ற திட்டம் மேற்கொள்ளப்பட்டு, மிகுதி உள்ளவை இரண்டு விழுக்காடுகளுக்கு மிகாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில் இவைகளே பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரங்கள் என்பதால் எந்த நேரத்திலும் இந்த பம்புகள் வேலை செய்யும் நிலையில் இருப்பதற்கான அனைத்து நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1989 ஏப்ரல் மாதத்தில், விசை பம்புகள் பராமரிப்பதற்காக பின்வருமாறு திருத்திய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன :

(1) ஊராட்சிகளில் உள்ள விசைப் பம்புகளின் பரா மரிப்பு அந்தந்த ஊராட்சி ஒன்றியத் தலைவரின் பொறுப் பாகும்.

(2) இப்பராமரிப்புப் பணிக்கு தேவையான செலவு களை மேற்கொள்ள ஊராட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வழக்கத்தில் உள்ளது போல் விலைப் பட்டியல் அல்லது ஒப்பந்தப்புள்ளி பெற்று இவற்றிலிருந்து

குறைந்த விலைப் புள்ளியை தேர்வு செய்வது மற்றும் ஊராட்சியின் ஒப்புதல் பெறுவது ஆகியவை ஊராட்சித் தலைவரின் பொறுப்பாகும்.

(3) தடையில்லாமல் இப்பம்புகள் வேலை செய்வது குறித்து உறுதி செய்யும் பொறுப்பு ஊராட்சித் தலைவருடைய தாகும்.

(4) ஒவ்வொரு மாதமும் ஊராட்சி ஒன்றிய ஆணை யாளருக்கு தகவலுக்காக, விசைப் பம்புகளில் ஏற்பட்ட பழுதுகள், பழுது நீக்கம் செய்த நிறுவனம் பற்றிய குறிப்பு மற்றும் பழுது நீக்கத்திற்கான செலவுகளை, ஊராட்சித் தலைவர் அனுப்பி வைக்க வேண்டும்.

சமுதாய வானொலி—தொலைக்காட்சித் திட்டம்.

தமிழ் நாட்டில் தொலைக்காட்சி ஒளி பரப்பு தொடங்கி யதை அடுத்து கிராம மக்களுக்கு நலப் பணித் திட்டங்கள் குறித்து அறிவுறுத்தும் பொருட்டு, அவர்களுக்கு கேளிக்கை வசதிகளை அளிக்கும் நோக்கத்துடனும், மாநிலம் முழு வதிலும் சமுதாய தொலைக்காட்சித் திட்டம் தொடங்கப் பட்டது. தமிழ் நாட்டில் உள்ள 12,616 ஊராட்சிகளில், 9,612 ஊராட்சிகள் தொலைக்காட்சி அஞ்சல் பெறும் நிலையில் உள்ளன. அரசு 4,417 தொலைக்காட்சிப் பெட்டிகளை மானியமாக வழங்கியது. இதைத் தவிர நிதி வசதி உள்ள ஊராட்சிகள் தனது நிதியிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டி கள் வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், 2,000 ஊராட்சிகள் தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கு வதற்கு நிதி நிலைமை இடமளிக்கவில்லை. எனவே அரசு முதற் கட்டமாக 1,000 தொலைக்காட்சிப் பெட்டிகளை மேற்சொன்ன தொலைக்காட்சி அஞ்சல் பகுதிகளில் அமைந் துள்ள ஊராட்சிகளில் அரசு உதவித் தொகையைக் கொண்டு அமைக்க முடிவு செய்துள்ளது. இதற்கு 1990—91 ஆம் ஆண்டு ரூ. 1.25 கோடி செலவிடப்படும்.

ஊராட்சிகளில் நிறுவப்பட்ட சமுதாய தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தவிர, கல்வித் துறை, பேரூராட்சிகள் ஏனைய நிறுவனங்கள் போன்ற பிற துறைகளினால் நிறுவப்பட்ட சமுதாய தொலைக்காட்சிப் பெட்டிகளையும் இத்துறை பராமரித்து வருகிறது.

ஊரக வளர்ச்சித் துறையின் 12—1—1990 ஆம் நாளிட்ட 26 ஆம் எண். அரசாணையின்படி, நிதி வசதியுடைய ஊராட்சி கள், தமது சொந்த நிதியிலிருந்து ஒப்புதலளிக்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகளில் 10 மாதிரிகளில் ஏதேனும் ஒன்றை வாங்க அரசு அனுமதித்துள்ளது.



சமுதாய தொலைக்காட்சிப் பெட்டிகளையும், வானொலிப் பெட்டிகளையும் துறையளவில் பராமரிப்பதற்கு மாநிலம் முழு வதிலும் 99 பழுது பார்க்கும் மையங்கள் உள்ளன. சென்னை, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல் வேலி ஆகிய இடங்களில் ஆறு வட்டார வானொலி அலுவலர்கள் உள்ளனர். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பழுதுபார்ப்பதற்காக, இதுவரையிலும் 18 வானொலிப் பெட்டி மேற்பார்வையாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. எஞ்சி யுள்ள வானொலிப் பெட்டி மேற்பார்வையாளர்களுக்கு 1990–91 ஆம் ஆண்டில் தொகுதி தொகுதியாக பயிற்சி யளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சமுதாய தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பராமரிப்பதற்கு கூடுதல் பழுதுபார்ப்பு மையங்கள் ஏற்படுத்துவதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

பயிற்சித் திட்டம்

இவ்வரசு, பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிற நிருவாகத்திறமையும், செயல்திறனும், சம்பந்தப்பட்ட பணி யாளர்களுக்கு அளிக்கப்படுகிற சரியான பயிற்சியையும் நினைவுகூர் பயிற்சியையும் பொருத்துள்ளது. வளர்ச்சி துறைப் பணியாளர்களுடைய பயிற்சித் தேவைகளுக்காக ஊரக வளர்ச்சி இயக்குநரின் கட்டுப்பாட்டில் பின்வரும் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன :—

(அ) மாநில ஊரக வளர்ச்சி நிலையம் (தலைமை பயிற்சி நிலையம்), சென்னை.

(ஆ) ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள் :—

(1) சத்திய விஜயநகரம், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்.

(2) தி. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்.

(3) கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டம்.

(4) பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

(5) பவானிசாகர், பெரியார் மாவட்டம்.

மேற்சொன்ன 5 ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களிலும் ஆய்வுக் கூடம்—தொழிற் பட்டறை வசதிகள் உள்ளன. அவை, கிராமப் பகுதி இளைஞர்களுக்கு கிராமப்புற இளைஞர் சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சியளிப் பதில் தீவிரப் பங்கு வகிக்கின்றன. தி. கல்லுப்பட்டியிலும், சத்திய விஜயநகரத்திலுமுள்ள ஊரக விரிவாக்கப் பயிற்சி

நிலையங்களில் மனையியல் பிரிவுகள் உள்ளன. அங்கு, பால சேவகியர்களுக்கும், சமூக நலத் துறையின் துணைப் பெண் ஊழியர்களுக்கும் (Associate Women Workers) பயிற்சியளிக்கப்படுகிறது. இம் மாநிலத்திலுள்ள ஐந்து ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களிலும் பின்வரும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன :—

(i) அமைச்சுப் பணியாளர்களுக்கு இரு திங்கள் பயிற்சி வகுப்புகள்;

(ii) கிராமப் பெண் அலுவலர்களுக்கு (நிலை- I மற்றும் நிலை- II) இரு திங்கள் பயிற்சி வகுப்புகள்;

(iii) பணிக் கணக்குகளை வைத்து வருவதில், உதவி யாளர்களுக்கு கிராமப் பெண் அலுவலருக்கு (நிலை-I), கணக்கர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் ;

(iv) சாண எரிவாயு, மேற்படுத்தப்பட்ட அடுப்புகள், கைப் பம்புகள், குறைந்த செலவிலான துப்புரவு, சமூகக் காடு வளர்ப்பு முதலிய பணி களி ல் பயிற்சிகள் ;

(V) அரசு சார்பற்ற அலுவலர்களுக்கு அதாவது ஊராட்சித் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் ஆகி யோருக்குப் பயிற்சி.

முதல் நான்கு பயிற்சித் திட்டங்களில் சுமார் 2,930 பேருக் குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. சுமார் 9,749 ஊராட்சி— பேரூராட்சித் தலைவர்கள் 1989—90 ஆம் ஆண்டில் பயிற்சி யளிக்கப்பட்டனர்.

சென்னையிலுள்ள மாநில ஊரக வளர்ச்சி நிலையத்தில் இடை நிலை அதிகாரிகளுக்கு அதாவது கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கும், மற்றும் ஏனைய மாநில அலுவலர்களுக்கும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

1989—90 ஆம் ஆண்டில், வட்டார வளர்ச்சி அலுவலர் களுக்கு, 5 அறிமுகப் பயிற்சிகளும், 5 மறு பயிற்சிகளும் ஒரு நினைவுகூர் பயிற்சியும் நடத்தப்பட்டுள்ளன. இதைத் தவிர, திட்ட அலுவலருக்கு ஒரு பயிற்சி வகுப்பும், கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கு நினைவுகூர் பயிற்சி ஒன்றும், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு நினைவுகூர் பயிற்சிகள் இரண்டும், பயிற்றுநர் பயிற்சிகள் இரண்டும் நடத்தப்பட்டன.

ஊராட்சித் தலைவர்களின் கடமைகள் பொறுப்புகள் ஆகியவை குறித்தும், வறுமை ஒழிப்புத் திட்டத்தைச் செயற் படுத்துவது குறித்தும் அவர்களுக்கு அறிவுறுத்துவதற்கான முக்கிய நடவடிக்கையாக, இம்மாநிலம் மூழுவதும் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. மொத்தம் 12,616 ஊராட்சித் தலைவர்களும் இப்பயிற்சியில் பங்கு கொண்டனர். இப் பயிற்சிக்காக மாநில ஊரக வளர்ச்சி நிலையம் சிறு புத்தக



நூல் ஒன்றைத் தயாரித்தது. இது, ஊராட்சித் தலைவர் களுக்கு நிரந்தரக் கையேடாக உதவும். இது போன்றுப் பெரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது, இருபது ஆண்டுகளில் இதுவே முதன் முறையாகும். ஊராட்சித் தலைவர்கள் அனை வரும் ஆர்வத்துடன் இப்பயிற்சியில் பங்கு பெற்றனர். இப்பயிற்சி வகுப்புகள், ஊராட்சித் தலைவர்களுக்கும் அரசுக்கு மிடையே நேரடியான கருத்துப் பரிமாற்றத்திற்கு வழி காட்டியது.

இவ்வாண்டைப் பயிற்சியாண்டாகக் கடைப்பிடிக்கக் கருதப் பட்டுளளது. முதல் நடவடிக்கையாக, விரிவாக்கப் பணி அலுவலர்கள் (ஊராட்சிகள்) 600 பேருக்கு 1990 ஏப்ரல், மே மாதங்களில் பயிற்சியளிக்கப்படும். இது ஒரு மாதப் பயிற்சி ஆகும். இப்பயிற்சியில், தணிக்கை செய்தல், கணக்கு வைப்பு முறை, ஆய்வு ஆகியவை குறித்து இவ் வலுவலர்களுக்கு விரிவாகக் கற்பிக்கப்படும். இதில் நடை முறைப் பயிற்சியும் அடங்கும். ஊராட்சி ஒன்றியங்களில் ஏனைய விரிவாக்க அலுவலர்கள், மேலாளர்கள் ஆகியோர் கொண்ட சுமார் 5,000 பேருக்கு பயிற்சியளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு 1990-91 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

கிராம அளவில் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்த உதவும் 25,000 மக்கள் நலப் பணியாளர்களுக்கு இரு வாரப் பயிற்சியளிக்கப்பட உள்ளது.

மாநில ஊரக வளர்ச்சி நிலையம் செங்கை—அண்ணா மாவட்டம், பெரமனூர் கிராமத்தில் (ஜி.எஸ்.டி. சாலையை ஒட்டி) 84.26 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ள அதன் வளாகத்திற்கு மாற்றப்படும். இந்நிலையத்திற்கான கட்டு மானச் செலவு (மாணவர் இல்ல கட்டுமானச் செலவும் உட் படும்) ரூ. 1.38 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஐரோப்பிய பொருளாதார சமுதாய நிதியுதவித் திட்டத்தின் (E.E.C.) கீழ், மாநில ஊரக வளர்ச்சி நிலையத்தை வழிப்படுத்துவதற் காக தொடரா இனச் செலவாக, மத்திய அரசு இருபது இலட்சம் ரூபாயை அனுமதித்துள்ளது. இந்நிலையத்தை, ஒரு சங்கமாகப் பதிவு செய்து, தன்னாட்சி உரிமை பெற்ற அமைப்பாக மாற்றக் கருதப்பட்டுள்ளது. இத்துறையின் பயிற்சித் தேவைகளைக் கருதி, இந்நிலையம் சுயமாகவும், தன்னாட்சி உரிமையுடனும், செயல் நோக்கத்துடனும், செயல்பட தேவையான நிருவாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

(1) வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங்கள் :—

பன்னாட்டுத் தொழிலாளர் நல அமைப்புத் திட்டம் :

ஜெனிவாவிலுள்ள, பன்னாட்டுத் தொழிலாளர் நல அமைப்பு தருமபுரி மாவட்டத்திலுள்ள தனி வளர்ச்சி வட்டாரத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக 14.97 லட்சம்

அமெரிக்க டாலர் நிதியுதவியுடன் (ரூ. 2.55 கோடி) பழங்குடியினர், ஆதி திராவிடர், ஊரக நிலமற்ற தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் ஆகியோருக்காக வேலை வாய்ப்பைப் பெருக்கி—வருமானம் கிடைக்கச் செய்யும் நடவடிக்கைகளுக்காக, பன்னாட்டுத் தொழிலாளர் நல அமைப்பின் தொழில் நுட்ப உதவியுடன் சிறப்பு பொதுப்பணித் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டம், 1988-89-லிருந்து மூன்றாண்டுகளுக்குள் முடிக்கப்படும்.

இத்திட்டம், பாசன ஆதாரங்கள் வடிவில் சமுதாயச் சொத்துக்களை உருவாக்கவும், கிராமப்புற ஏழை மக்களின் நிலையை உயர்த்துவதற்காக வருமானம் கிடைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வகை செய்கிறது. இந்தத் தொழிலாளர் நல அமைப்புத் திட்டம், சிறுபாசனத் திட்டங்கள், சமூகக் காடு வளர்ப்பு, கிராமப்புறச் சாலைகள், கதர்-கிராமத் தொழில்கள், பட்டுப்புழு வளர்த்தல் முதலிய பணிகள் மேற்கொண்டது. இத்திட்டங்களுக்காக (31-1-1990) வரை பன்னாட்டு தொழிலாளர் நல நிறுவனம் ரூ. 22.09 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது.

..

இத்திட்டத்தைச் செயற்படுத்தும் பணி, தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(2) யூனிசெஃப் நிதியுதவி பெறும் திட்டம் :—

..

தீவிர துப்புரவுத் திட்டம் :

கிராமப்புற மக்களின் உடல் நலத்திற்கும் சுகாதாரத்திற்கும் ஆதாரமாக விளங்குவது கிராமப்புறத் துப்புரவே. இதனைக் கருத்திற் கொண்டு, யூனிசெஃப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் தீவிரத் துப்புரவுத் திட்டம் ஒன்று பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த கிராமப்புற பகுதிகளில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டக் கால அளவில், பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த கிராமப்புறப் பகுதிகளில் 35,000 தனிக் கழிப்பிடங்கள் கட்டப்படவுள்ளன.

ஒவ்வொரு கழிப்பிடத்துக்காகும் செலவு ரூ. 1,600 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இச்செலவை, கீழே குறிப்பிட்டுள்ளவாறு பயனடைவோரும், மாநில-மத்திய அரசுகளும், யூனிசெஃப் நிறுவனமும் பகிர்ந்து கொள்கின்றன :—

| | ரூபாய். |
|---|---|
| (i) ஒவ்வொரு துப்புரவு கழிப்பிடத்திற்காகும் மொத்த செலவு .. .. | 1,600.00 |



| | |
|---|---|
| (ii) பயனடைவோரின் பங்கு— | |
| (அ) அவர் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள ஆதி திராவிடர்/பழங்குடியினர்/சிறு விவசாயிகள்/சொற்ப நிலமுள்ள விவசாயிகள் ஆக இருந்தால் (5 சதவீதம்) .. .. | 80.00 |
| (ஆ) வறுமைக் கோட்டிற்கு மேலே இருந்தால் 20 சதவீதம் .. .. | 320.00 |
| (iii) யூனிசெஃப் நிறுவனத்தின் பங்கு .. | 400.00 |
| (iv) மாநில அரசின் பங்கு .. .. | எஞ்சிய தொகையில் 50 சதவீதம். |
| (v) மத்திய அரசின் பங்கு .. .. | ஷை |

1990 பிப்ரவரி இறுதி வரை 9,776 கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 1.01 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில், கொத்தனார்கள், மாதர் சங்க உறுப்பினர்கள், கிராமத்தில் முக்கியமானவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள் ஆகியோருக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன மக்களிடையே சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதலும், கழிப்பிடங்களைப் பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்குதலும், இத்திட்டத்தின் வெற்றிக்கான இன்றியமையா இரு அம்சங்களாகும்.

மக்களிடையே இத்திட்டம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. பெரும்பான்மையோர் இதனை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பேரூராட்சிகள் நிர்வாகம்:

தமிழ் நாட்டின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கான சுமார் ஒரு கோடி மக்கள் 648 பேரூராட்சிகளில் வாழ்கிறார்கள். பேரூராட்சிகள் நான்கு நிலைகளைக் கொண்டுள்ளது (இரண்டாம் நிலை, முதல் நிலை, தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை).

பேரூராட்சிகளின் கடமைகள்:

பேரூராட்சிகளின் கடப்பாடு பணிகளில், சாலைகள் அமைத்து பராமரித்தல், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல், தெரு விளக்குகள் அமைத்தல், தெருக்களைத் தூய்மைப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

**பேரூராட்சிகளின் நிதி ஆதாரங்கள்:**

பேரூராட்சிகளின் முக்கிய நிதி ஆதாரம் வீட்டு வரி, தொழில் வரி மற்றும் வாகன வரி மூலம் கிடைக்கிறது.

இவை தவிர, முத்திரை வரியின் மீதான மேல் வரி, கேளிக்கை வரி, அபாயகரமானதும் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கு உரிமக் கட்டணம் மற்றும் பயன்தரத்தக்க தொழில்கள் வாயிலாகவும் பேரூராட்சிகளுக்கு வருவாய் கிடைக்கிறது.

**பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்;**

648 பேரூராட்சிகளில் 257 பேரூராட்சிகளில் கூட்டுக் குடிநீர் திடடம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 114 பேரூராட்சிகளில் குடிநீர் திட்டப் பணி முன்னேற்றத்திலுள்ளது. இதில் 44 பேரூராட்சிகளில் திட்டப் பணிகளுக்கு உலக வங்கி நிதியுதவி செய்யப்படுகிறது.

புதிதாக மேம்படுத்தப்பட்ட பகுதிகளில் மக்களின் உடனடி குடிநீர் தேவைகளை நிறைவு செய்யக் கைப்பம்புகளைப் பேரூராட்சிகள் பராமரித்து வருகின்றன. 1989-90 ஆம் ஆண்டில் குறைந்தபட்ச தேவைகள் திட்டத்தின்கீழ் ரூ. 41.16 இலட்சம் குடிநீர் திட்ட பராமரிப்புக்காக அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 1990-91 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 36.55 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**துப்புரவு**

முறையாகத் துப்புரவு செய்தலும், கழிவு நீர் மற்றும் வடிகால் நீரை அகற்றுவதும் பேரூராட்சிகளின் தலையாய கடமைகளில் ஒன்றாகும். பேரூராட்சிகளில் உள்ள மொத்தம் 10,271 கிலோ மீட்டர் நீளமுள்ள தெருக்களில் 4,736 கிலோ மீட்டர் நீளத்திற்கு மட்டும் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பேரூராட்சி பகுதிகளில் வடிகால்கள் அமைக்கும் பணிக்கு முக்கியத்துவம் தரப்பட்டு, 3,073 வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

துப்புரவுப் பணியில் உலர் கழிப்பிடங்களை குறைந்த செலவிலான நீரடி கழிப்பிடங்களாக மாற்ற வேண்டியது மற்றுமொரு முக்கிய திட்டமாகும். பேரூராட்சிகளின் எல்லைக்குள் ஏறக்குறைய 95,050 உலர் கழிப்பிடங்கள் உள்ளன. இந்த உலர் கழிப்பிடங்களில் 629 துப்புரவு பணியாளர்கள் மூலம் மலம் அகற்றப்படுகிறது. மனிதக் கழிவு இன்னும் மனிதனால் அகற்றப்பட்டு வருகிறது. இத்தகைய



விரும்பத்தகாத அருவப்பான இழி நிலையை அடியோடு ஒழித்திட மைய அரசும், மாநில அரசும், உலர் கழிப்பிடங்களைக் குறைந்த செலவிலான நவீன நீரடி கழிப்பிடங்களாக மாற்றியமைக்கும் திட்டத்திற்கு பேரூராட்சிகளுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

1989-90ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட துப்புரவுப் பணிக்காக பல்வேறு திட்டங்களின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதி விவரம் வருமாறு:—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. மனித உரிமை பாதுகாப்புச் சட்டம் (மைய அரசும், மாநில அரசும் சம பங்கேற்கும் திட்டம்) | 97.58 |
| 2. மாநில அரசு மானியம் மற்றும் கடன் உதவி (40 சதவீதம் மானியம், 40 சதவீதம் கடன், 20 சதவீதம் பயனடைவோர் பங்கு). | 15.00 |
| 3. சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் (கடன்) | 55.97 |
| 4. தீவிர துப்புரவுத் திட்டம் | 11.14 |

மேற்கண்ட திட்டங்களின் மூலம் 15,336 குறைந்த செலவிலான நவீன நீரடி கழிப்பிடங்கள் 1989-90 ஆம் ஆண்டில் அமையும்.

மைய அரசின் நகர்புற வளர்ச்சி அமைச்சக நிதி உதவி மூலம் சுகாதார கழிவறைகள் அமைத்து துப்புரவு பணியாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் முனைப்பான திட்டம்.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் துப்புரவு பணியாளர்களை அருவருக்கத்தக்க துப்புரவுத் தொழிலில் இருந்து மீட்கவும், பேரூராட்சிகளில் சுற்றுப்புற சுகாதார நிலையை மேம்பாடு செய்யவும் மைய அரசின் நகர்புற வளர்ச்சி அமைச்சகம் முனைப்பான திட்டம் ஒன்றினைத் தயாரித்துள்ளது.

தமிழ்நாட்டில் 10 பேரூராட்சிகள் இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டு, 2,534 உலர் கழிப்பிடங்களை குறைந்த செலவிலான நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றி அமைக்க கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மான்யம் மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்புற அபிவிருத்தித் திட்ட வாரியத்தினரின் கடன் உதவி மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்காக செயல்படுத்தப்படவுள்ளது.

| | நிதி சத வீதம். (%) | தரை மட்டம் வரை | நிதி சத வீதம். | கூரை வரை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் லட்சத்தில்), | | (ரூபாய் லட்சத்தில்). | |
| மைய அரசு மான்யம். | 45 | 17.10 | | |
| வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி வாரியம் கடன். | 50 | 19.00 | 90 | 27.42 |
| பயனடைவோர் பங்கு | 5 | 1.91 | 10 | 3.04 |
| மொத்தம் .. | | 38.01 | | 30.46 |

1. அச்சிரப்பாக்கம், செங்கை-அண்ணா மாவட்டம்.
2. தாராபடவேடு, வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம்.
3. திருவெறும்பூர், திருச்சி மாவட்டம்.
4. ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.
5. திருக்கோயிலூர், தென்னாற்காடு மாவட்டம்.
6. இளையான்குடி, பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்.
7. மம்சாபுரம், காமராசர் மாவட்டம்.
8. ஒட்டன்சத்திரம், திண்டுக்கல்-காயிதேமில்லத் மாவட்டம்.
9. பெண்ணகரம், தர்மபுரி மாவட்டம்.
10. மேச்சேரி, சேலம் மாவட்டம்.

இப்பெரும் திட்டம் பேரூராட்சிகளில் முதன் முறையாக மைய அரசின் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சக நிதி உதவி பெற்று செயல்படுத்தப்படவுள்ளது.



அதிக அளவில் பொதுமக்கள் கூடுமிடங்களில் கட்டணக் கழிப்பிடம் ஒன்று ரூ. 1.00 லட்சம் வீதம், 1989–90 ஆம் ஆண்டில் 10 பேரூராட்சிகளில் கட்டணக் கழிப்பிடங்கள் கட்டப் பட்டு வருகின்றன. இது பொதுமக்கள் நலமுள்ள சூழலில் வாழ உதவியாக உள்ளது. 10 பேரூராட்சிகள் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளன :—

1. சர்க்கார் சாமக்குளம், கோயம்புத்தூர் மாவட்டம்.
2. அவனியாபுரம், மதுரை மாவட்டம்.
3. திருநாகேஸ்வரம், தஞ்சாவூர் மாவட்டம்.
4. நாமகிரிப்பேட்டை, சேலம் மாவட்டம்.
5. நத்தம், திண்டுக்கல்-காயிதேமில்லத் மாவட்டம்.
6. ஒடுக்கத்தூர், வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம்.
7. தியாகதுருகம், தென்னாற்காடு மாவட்டம்.
8. திருத்தணி, செங்கை—அண்ணா மாவட்டம்.
9. குளித்தலை, திருச்சி மாவட்டம்.
10. இளையாங்குடி, பசும் பொன்தேவர் திருமகன் மாவட்டம்.

1990–91ஆம் ஆண்டிற்கு 10 பேரூராட்சிகளுக்கு ரூ. 15.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சாலைகள் :

மிகவும் அவசியத் தேவையாகக் கருதப்படும் சாலை வசதி வளர்ச்சி அடைந்து வரும் நகரப் பகுதிகளில் வாழும் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்குத் திறவுகோலாக அமைகிறது.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 4,414 எண்ணிக் கையுள்ள சாலை வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தவிர, 1989–90 ஆம் ஆண்டில் பேரூராட்சிகளில் உள்ள சாலைகளின் தரத்தை உயர்த்த ரூ. 40.00 லட்சம் அரசு மானியம் அளிக்கப்பட்டுள்ளது. இது 212 பேரூராட்சிகளில் சாலைகள் மேம்பாட்டிற்கு உதவியது. 1990–91 ஆம் ஆண்டிற்கு ரூ. 40.00 லட்சம் ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

புறநகர் மேம்பாட்டுத் திட்டம்:

பெருநகர் மற்றும் நகரங்களின் புறநகர் பகுதிகளில் அமைந்துள்ள பேரூராட்சிகளில் அடிப்படை வசதிகள் மிகவும் பின்னடைந்துள்ளன. பெரிய நகரங்களில் உள்ள அடிப்படைத் தேவைகளை புறநகர் பகுதிகளில் அமைந்துள்ள பேரூராட்சிகளில் செய்து தர அரசு முனைந்துள்ளது. பேரூராட்சிகளின் அடிப்படைத் தேவையான குடிநீர் விநியோகம், சாலை வசதி, சிறு பாலம், வடிகால் மற்றும் பேருந்து பயணியர் நிழற்கொடை அமைத்தல் போன்றவைகள் அமைக்க 10 பேரூராட்சிகளுக்கு 1989-90 ஆம் ஆண்டில் (மொத்தம் ரூ. 30.00 லட்சம்) தலா ரூ. 3.00 லட்சம் வீதம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பத்துப் பேரூராட்சிகள் பட்டியல் வருமாறு :—

1. பனமரத்துப்பட்டி, சேலம் மாவட்டம்.
2. தொரப்பாடி, வடாற்காடு—அம்பேத்கார் மாவட்டம்.
3. தாராசுரம், தஞ்சாவூர் மாவட்டம்.
4. திருநின்றவூர், செங்கை அண்ணா மாவட்டம்.
5. பெருந்துறை, பெரியார் மாவட்டம்.
6. முசிறி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
7. அவனியாபுரம், மதுரை மாவட்டம்.
8. சூலூர், கோயம்புத்தூர் மாவட்டம்.
9. மானாமதுரை, பசும்பொன்-தேவர் திருமகன் மாவட்டம்
10. சின்னாளப்பட்டி, திண்டுக்கல்-காயிதேமில்லத் மாவட்டம்

1990-91-ம் ஆண்டில் இத்திட்டம் தொடரப்பட்டு பத்து பேரூராட்சிகளுக்கு தலா ரூ. 2.50 லட்சம் வீதம் ரூ. 25.00 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பயன்தரத்தக்க முயற்சிகள்:

ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டம் ;

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்.



பேரூராட்சிகளின் வருவாயை உயர்த்தி, அவற்றின் சொந்த வருவாயைக் கொண்டு அவற்றின் கடமைகளைச் செய்ய '' ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தை '' பேரூராட்சிகளில் அரசு செயல்படுத்தி உள்ளது. இதன் கீழ் பேருந்து நிலையம் வணிக வளாகங்கள், தினசரி அங்காடிகள் முதலிய பயன்தரத்தக்க கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான நிதி, நகர் ஊரமைப்பு குழுவினால் பேரூராட்சிகளுக்கு கடனாக வழங்கப்படுகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 13.19 கோடி மதிப்பீட்டில் வேலைகள் மேற்கொள்ள நகர் ஊரமைப்பு குழுவினால் 90 பேரூராட்சிகள், தேர்வு செய்யப்பட்டு பல்வேறு நிலையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம்:

1990-91 முதல் துவங்கும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்தின் கீழ் இதுவரை 21 பேரூராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 309.80 லட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்படுகிறது. இது நகர் ஊரமைப்பு குழுவினால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் :

சிறிய மற்றும் நடுத்தர நகர மேம்பாட்டுத் திட்டம் :

மத்திய, சிறிய மற்றும் நடுத்தர நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரியலூர், ஆண்டிப்பட்டி, இராமேஸ்வரம் ஆகிய நகரங்களுக்கு ரூ. 300.00 லட்சம் அனுமதிக்கப் பட்டு பேருந்து நிலையம், வணிக வளாகம், கிடங்கு, சாலை மேம்பாடு மற்றும் குறைந்த செலவிலான கழிப்பிடம் அமைத்தல் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதில் இது வரை ரூ. 75.13 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் :

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 1990-91-ல் தலா ரூ. 200.00 லட்சம் வீதம் பத்து பேரூராட்சிகளில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர வளர்ச்சித் திட்டம் அமுல் படுத்தப்படவுள்ளது. இதற்கான பேரூராட்சிகளைத் தேவையின் அடிப்படையில் தேர்வு செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்:

1989-90-ஆம் ஆண்டில் 645 பேரூராட்சிகளில் ரூ. 1,359.70 லட்சம் செலவில் 8,183 வேலைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு பேரூராட்சி மற்றும் நகரியங்களில் சமுதாய சொத்துக்களாக உருவாக்கப்படுகின்றன.

மேற்கொள்ளப்பட்ட பணிகள் விவரம்

| | | |
|---|---|---|
| சாலைகள் | .. | 4,414 |
| வடிகால்கள் | .. | 3,073 |
| கட்டிடங்கள் | .. | 137 |
| இதர பணிகள் (சுகாதார கழிப்பிடம், குடிநீர் வசதி போன்றவை) | .. | 559 |

1990–91-ஆம் ஆண்டில் ஊரகம் மற்றும் நகரப் பேரூராட்சிகள் என்ற பாகுபாடின்றி அனைத்து பேரூராட்சிகளிலும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள பேரூராட்சிகளில் மண்வள பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பாதுகாப்புச் சுவர் கட்டுதல் போன்ற பணிகள் எடுத்துச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 1989–90-ஆம் ஆண்டில் ரூ. 4.05 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொது:

தமிழ்நாடு அரசு பேரூராட்சிகளின் வளர்ச்சிக்காக அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. பல பேரூராட்சிகளில் போதுமான நிதி வசதி இல்லாமையால் ஆக்கப் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை. எனவே, அடிப்படை வசதிகளின்றி பேரூராட்சிகள் பின் தங்கிய நிலையில் உள்ளன. பேரூராட்சிகளின் வளர்ச்சியில் விரைவான முன்னேற்றத்தை எய்த அரசு மேற்கொள்ளும் முனைப்பான நடவடிக்கைகள்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட செயலாக்கம்.

தொகுப்பு வீடுகள் கட்ட அனுமதித்தல்.

தூசி படியாத சாலைகள் அமைத்தல்.

பிரதான சாலைகளுக்கு வடிகால்கள் அமைத்தல்.

ஊரக துப்புரவு திட்டத்திற்கு அதிக முக்கியத்துவமளித்து தனியார் கழிப்பிடங்களும், கட்டணக் கழிப்பிடங்களும் கட்டுதல்.

பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள், அங்காடிகள் கட்டுதல் போன்ற பணிகளைப் படிப்படியாக நிறைவேற்றுதல்.





மேற்கண்ட வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் பேரூராட்சிகளிலும் (ஊரகம் மற்றும் நகரப் பேரூராட்சிகள்) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் வாயிலாகவும் மாநில அரசின் சிறப்புத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் வாயிலாகவும் இவை செயல்படுத்தப்படும்.

எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் அனைத்து அடிப்படை வசதிகளும் எல்லா பேரூராட்சிகளிலும் முழுமையடைய தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதர திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு வருமாறு:

| வரிசை எண்ணும், திட்டத்தின் பெயரும். | 1989-90-ல் ஒதுக்கீடு. | 1990-91-ல் ஒதுக்கீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. பேரூராட்சியின் சாலைத் தரம் உயர்த்துதல் | 40.00 | 40.00 |
| 2. வடிகால்கள் அமைத்தல் | 10.00 | 10.00 |
| 3. குறைந்த செலவிலான கழிப்பிடம் கட்டுதல் .. | 15.00 | 15.00 |
| 4. கட்டணக் கழிப்பிடம் கட்டுதல் | 10.00 | 15.00 |
| 5. பேரூராட்சிகளிலுள்ள குப்பைக் கூளங்களை இயந்திரங்கள் மூலம் அகற்றல் .. | .. | 10.00 |
| 6. உலர் கழிப்பிடங்களை நவீன நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றுதல் ... | 50.00 | 50.00 |
| 7. பெரிய நகரங்களுக்கு அருகில் உள்ள சிறு நகரங்களின் வளர்ச்சி. .. | 30.00 | 25.00 |
| 8. குறைந்தபட்சத் தேவைத் திட்டம் (குடிநீர் திட்டம்) .. | 41.16 | 36.55 |
| மொத்தம்.. | 196.16 | 201.55 |
| திட்டமல்லாதது : | | |
| தூசி படியாத சாலை அமைத்தல் .. | 20.00 | 20.00 |
| பெரு மொத்தம் .. | 216.16 | 221.55 |

## இணைப்பு 2
### கொள்கை விளக்கக் குறிப்பு

நகராட்சி நிர்வாகம்

தமிழ் நாட்டில் 98 நகராட்சிகளும் 8 நகராட்சி நகரியங்களும் உள்ளன. நகராட்சி மற்றும் நகரியங்கள் அவற்றின் ஆண்டு வருமானத்திற்கேற்ப ஐந்து வகைகளாகக் கீழ்குறிப்பிட்டவாறு பாகுபாடு செய்யப்பட்டுள்ளன :—

| வ. எண். | நகராட்சிகள் நிலை. | வரையரை (ஆண்டு வருமானம்). | நகராட்சிகள் எண்ணிக்கை. | நகரியங்கள் எண்ணிக்கை. | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் இலட்சத்தில்). | | | |
| 1. | சிறப்பு நிலை | 200.00 | 14 | .. | 14 |
| 2. | தேர்வு நிலை | 100.00 | 12 | 5 | 17 |
| 3. | முதல் நிலை | 40.00 | 29 | 1 | 30 |
| 4. | இரண்டாம் நிலை | 20.00 | 30 | 2 | 32 |
| 5. | மூன்றாம் நிலை | 10.00 | 13 | — | 13 |
| | மொத்தம் | .. | 98 | 8 | 106 |

1. நகர் மன்றத்தின் பதவிக்காலம்:

ஐந்து ஆண்டுகளாக இருந்து வந்த நகர்மன்ற உறுப்பினர் மற்றும் தலைவர்கள் பதவிக் காலம் 1985 மே மாதம் நான்கு ஆண்டு காலமாகவும், 1986 ஜனவரியில் மூன்றாண்டுகளாக மேலும் குறைக்கப்பட்டது. இதனை மாற்றி, புதிய அரசு பதவி ஏற்புக்குப்பின் மீண்டும் ஐந்து ஆண்டு காலமாக உயர்த்தப்பட்டது.



2. நகர்மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் கூடுதல் அதிகாரங்கள்:

சட்டபூர்வமாக வரி மேல் முறையீட்டுக் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர் மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மட்டுமே அங்கம் வகிக்க வேண்டும் என்பது கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்கேற்ப நகராட்சி சட்டமும் விதிகளும் திருத்தியமைக்கப்பட்டது. தன்னாட்சி நிறுவனமாக செயல்பட நகராட்சிகளுக்கு வேண்டிய தனித் தன்மை, கௌரவம் மற்றும் வேண்டிய உரிமைகள் அளிக்கப்பட வேண்டுமென்ற தற்போதைய அரசின் கருத்து படிப்படியாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

வரி மேல் முறையீட்டுக்குழு, வரி குறைப்பதில் ஐந்து சத வீதத்துக்கு மேல் குறைக்கக்கூடாது என்ற கட்டுப்பாடு நீக்கப் பட்டு மேல் முறையீட்டு மனு மீது நியாயமான அடிப்படையில் வரி குறைப்பதற்கு வசதியாக விதிகள் மாற்றப்பட்டுள்ளன.

சென்ற இருபது ஆண்டுகளில் நகரங்களின் மக்கள் தொகை மற்றும் நகரப் பகுதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது. 1961-ல் 45,11,165 ஆக இருந்த நகராட்சிகளின் மக்கட் தொகை, 1981-ல் 74,36,961 ஆக 65 சதவிகிதமும், நகராட்சிகளின் எண்ணிக்கை 64-ல் இருந்து 106 ஆகவும் அதிகரித்துள்ளது.

3. நகராட்சித் திட்டங்கள்:

நகராட்சிகள் அடிப்படைத் தேவைகளை அளிப்பதற்கும், வருவாயை அதிகரித்துக் கொள்ளவும், அரசு தொடர்ந்து. கடன் மற்றும் நிதியுதவி அளித்து வருகின்றது. தன்னிறைவுத் திட்டம், விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், பிற்படுத்தப்பட்ட பகுதிகள் வளர்ச்சிக்கான திட்டம் போன்ற திட்டங்களுக்கு ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் நகராட்சிகளுக்கு ரூ. 1,977.94 லட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது. எட்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், சாலைகள் பராமரிப்பு போன்ற திட்டங்களுக்கு ரூ. 8,650.00 லட்சம் நிதியுதவி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

[1990 ஏப்ரல் 24

1990–91 ஆம் ஆண்டு நிதியுதவி ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டங்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நகராட்சி ஊழியர்கள் வீடுகட்ட முன்பணம் அளிக்க. | 50.00 |
| 2. | விரைவுபடுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம். | 70.02 |
| 3. | ஒருங்கிணைந்த பிற்படுத்தப்பட்ட பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம். | 15.00 |
| 4. | இன்றியமையாத வசதிகள் அளிக்க நகராட்சிகளுக்கு உதவித் தொகை அளிக்க. | 15.00 |
| 5. | சாலை சீரமைப்புக்காக—பாதி கடன் பாதி மான்யம். | 55.00 |
| | முழு கடனாக | 30.00 |

4. 1990-91 ஆம் ஆண்டு புதியதாக செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் தேவைப்படும் நிதியுதவி ஆகிய விவரங்கள்:

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | துப்புரவு வண்டிகளின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்காக நகராட்சிகளுக்கு நிதியுதவி. | 40.00 |
| 2. | இடுகாடுகள், சுடுகாடுகளைச் சீரமைப்பதற்காக நகராட்சிகளுக்கு நிதியுதவி. | 15.00 |
| 3. | சொந்தமாக லாரி வைத்திராத 15 நகராட்சிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு லாரி வாங்கி வழங்க நகராட்சிகளுக்கு நிதியுதவி. | 40.00 |
| | மொத்தம் .. | 95.00 |



1990 ஏப்ரல் 24]

நகராட்சியின் முக்கிய பணி நகர்ப்புற தெருக்களில் அன்றாடம் குப்பையை அகற்றி சுத்தமாக வைத்திருத்தல் ஆகும். முக்கியமாக இந்த குப்பையை அகற்றுவதற்குத் தேவையான வண்டிகள் மற்றும் லாரிகள் போதுமானவையாக இல்லை. பல நகராட்சிகளில் 20 ஆண்டுகளுக்கு முன்னதாக வாங்கிய லாரி, டிராக்டர்கள் இன்னமும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த லாரி, டிராக்டர் பற்றாக்குறையைப் போக்குவதற்காக அவ்வப்போது அரசு கடன் மற்றும் மானிய உதவி தந்து வருகிறது. இவ்வாண்டும், 80 லட்சம் ரூபாய்க்கு சுமார் 35 லாரிகள் வாங்குவதற்கு அரசு மானிய உதவி செய்து உள்ளது. ஓரளவு நிதி வசதியுடைய ஒரு சில நகராட்சிகளுக்கு பாதி மானியம் கொடுத்தும், மிச்சம் பாதியை அவர்கள் நிதியிலிருந்து செலவு செய்து லாரி வாங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சி பாதைகளில் ஓரத்திலிருக்கும் காலி நிலங்களில் யாரும் ஆக்கிரமித்துக் கொள்ளாமல் இருக்க சிறு சிறு பாதையோர பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், வேலூர் போன்ற பிற நகரங்களில் செயல்படுத்தப்படும்.

5. நேரு வேலை வாய்ப்புத் திட்டம்:

நகர்ப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை பெருக்க ''நேரு வேலை வாய்ப்புத் திட்டம்'' என்ற பெயரில் மைய மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் அனைத்து நகராட்சிகளிலும் தொடங்கப்பட்டுள்ளது. இது மூன்று வகை உட்பிரிவுத் திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும், அவை :—

1. சுய வேலை வாய்ப்புக்கு நிதி உதவி அளித்தல்.
2. நகராட்சிப் பொதுப் பணிகளை செய்து வேலை வாய்ப்பினை ஏற்படுத்துதல்.
3. வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் குடியிருப்பு வீடுகளை மேம்படுத்தும் பணிகளை செய்வது.

1988–89 ஆம் ஆண்டு வருமானம் ரூ. 10,000-க்கு அதிகப்படாத குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறத் தகுதியுள்ளவர்கள். அந்தந்த நகரங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களின் விகிதாச்சாரத்திற்கு ஏற்ப இவ்வகுப்பு இளைஞர்களும், 30 சதவீதம் மகளிரும் பயன் பெறுபவர்களாக இருத்தல் வேண்டும்.

(i) சுய வேலை வாய்ப்புக்கு நிதி உதவி அளித்தல்:

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறத் தகுதி உடையவர்களை பொதுக் கணக்கெடுப்பின் மூலம் ஆராய்ந்து நகர் மன்றம் தேர்ந்தெடுக்கும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப சிறு தொழில் அல்லது வியாபாரம் துவங்க 75 சதவீதம் கடனும் 25 சதவீதம் மானியமும் நிதி உதவி அளிக்கப்படும். மானியத் தொகை மகளிர் மற்றும் தாழ்த்தப் பட்டவர்களுக்கு ரூ. 5,000 ஆகவும் மற்றவர்களுக்கு ரூ. 4,000 ஆகவும் தரப்படும். மானியத் தொகை மைய மாநில அரசுகள் மற்றும் நகராட்சிகளால் பகிர்ந்து கொள்ளப்படும். 75 சதவீதம் கடனுதவி வங்கிகளிலிருந்து பெற்றுத் தரப்படும். மைய அரசின் மானியத் தொகை பங்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. திட்டத்திற்காகும் செலவினை மைய அரசு, மாநில அரசு மற்றும் நகராட்சிகள் 50 : 40 : 10 என்ற விகிதத்தில் பங்கேற்கும். பயிற்சி மற்றும் உள்ளமைப்பு செய்து கொடுப்பதற்காகும் செலவினை மைய அரசு ஏற்றுக் கொள்ளும்.

(ii) நகராட்சிப் பொதுப் பணிகளை செய்து வேலை வாய்ப்பினை ஏற்படுத்துதல்:

இத்திட்டம் ஒரு இலட்சம் வரை மக்கள் தொகை உள்ள நகரங்களில் அமல்படுத்தப்படும். இந்நகரங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளில் மொத்த மதிப்பில் தொழிலாளர் ஊதியம் 50 சதவீதம் மீதித் தொகை இப்பணிக்காக பொருட்கள் வாங்க பயன்படுத்தப்படலாம். 20,000 மேற்பட்ட மக்கள் தொகை உள்ள நகரங்களில் இவ்விகிதம் 40 : 60 என இருக்க வேண்டும். இதற்கு ஆகும் செலவை நகராட்சிகள், மாநில மற்றும் மைய அரசுகள் 5 : 15 : 80 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்ளும். மைய அரசின் பங்குத் தொகை மாவட்ட ஆட்சியாளருக்கு ஏற்கனவே அனுப்பப் பட்டுள்ளது.



(iii) வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் குடியிருப்பு வீடுகளை மேம்படுத்தும் பணிகளைச் செய்வது:

இத்திட்டம் நகரங்களில் வசிக்கும் ஏழை மக்களின் குடியிருப்புகளை மேம்படுத்துவதற்காகவும், அதன் மூலம் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தவும் கடன் மற்றும் மானிய உதவி வழங்குவதாகும்.

[1990 ஏப்ரல் 24

நேரு வேலை வாய்ப்புத் திட்டம்.

| வட்டப்பிரிவின் பெயர். | பயன்பெறும் நகராட்சிகள்/மாநகராட்சிகள். | திட்டப்பிரிவின் மொத்தச் செலவு. (ரூபாய்) | மொத்தச் செலவில் பெற்றுத் தரப்படும் கடன் தொகை. | கடன் தரும் நிறுவனத்தின் பெயர். | திட்டப் பிரிவின் மொத்தச் செலவின் மானியத் தொகை. | மானியத் தொகை பங்கு விபரம். மைய அரசு அளிக்கும் பங்கு. | மாநில அரசின் பங்கு. | நகராட்சிகளின் பங்கு. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | | | | | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். |
| சுயவேலை வாய்ப்புக்கு நிதி உதவி அளித்தல். | அனைத்து நகராட்சிகள் மற்றும் சென்னை, கோவை மற்றும் மதுரை மாநகராட்சிகள். | .. | திட்டப் பிரிவின் மொத்தச் செலவில் 75 சதவீதம். | வங்கிகள் மூலம். | 679.45 இலட்சம். | 342.87 இலட்சம். | 302.922 இலட்சம். | 33.658 இலட்சம். |
| | | | | | 25 சதவீதம். | 50 சதவீதம். | 45 சதவீதம். | 5 சதவீதம். |
| நகராட்சிப் பொதுப் பணிகளைச் செய்து வேலை வாய்ப்பினை ஏற்படுத்துதல். | அனைத்து நகராட்சிகள் மற்றும் கோவை மற்றும் மதுரை மாநகராட்சிகள். | 4,44,93.76 (100 சதவீதம்) | .. | .. | 444.9375 | 355.95 | 72.019375 | 16.968125 |
| | | | | | 100 சதவீதம். | 80 சதவீதம். | 15 சதவீதம். | 5 சதவீதம். |
| குடியிருப்புகளை மேம்படுத்தும் பணிகளை செய்து வேலை வாய்ப்பினை ஏற்படுத்துதல். | 23 நகராட்சிகள், 2 மாநகராட்சிகள் (கோவை மற்றும் மதுரை). | 1 யூனிட்டிற்கு 4,000 | 3,000 | ஹட்கோ | 1,000 | 800 | 200 | .. |
| | | | (75 சதவீதம்) | 6.25 சதவீதம். | 25 சதவீதம். | 80 சதவீதம். | 20 சதவீதம். | .. |
| மொத்த யூனிட்டுகள் 33,000. | 1.00 லட்சம் மற்றும் அதற்கு மேலும் மக்கள் தொகை உள்ள நகராட்சிகளும் மதுரை மற்றும் கோவை மாநகராட்சிகள். | 1,320.00 இலட்சம். | 990.00 இலட்சம் (75 சதவீதம்). | ஹட்கோ | 330.00 இலட்சம் 25 சதவீதம். | 264.00 இலட்சம் 80 சதவீதம். | 66.00 இலட்சம் 20 சதவீதம். | .. |

1990 ஏப்ரல் 24]

[1990 ஏப்ரல் 24

**6. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மற்றும் நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனம்:**

மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் கடன் வழங்க உலக வங்கி உதவியுடன் 1987–88 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அதன் ஒரு அங்கமாக நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதி ஏற்படுத்தப்பட்டது. பல்வேறு வகையான வருமானம் தரும் திட்டங்களையும், மக்கள் நலத் திட்டங்களையும் 5 முதல் 6 ஆண்டுகளுக்குள்ளாக நிறைவேற்றிக் கொள்வதன் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 167.2 கோடி ஆகும். முதலாக இந்நிறுவனம் மாநில அரசின் பங்கான ரூ. 10 கோடி மற்றும் உலக வங்கி நிதி உதவி ரூ. 6.00 கோடியுடன் ஆக மொத்தம் ரூ. 16 கோடியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டப் பணிகளை நிறைவேற்ற தேர்வு செய்யப்பட்ட 26 நகராட்சிகளுக்கும், 3 மாநகராட்சிகளுக்கும், மொத்தம் ரூ. 46.18 கோடிக்கு அரசு நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளது. அதன் விபரம் வருமாறு:—

மாநகராட்சிகள் :

(1) சென்னை, (2) மதுரை, (3) கோயம்புத்தூர்.

நகராட்சிகள் :

(1) சேலம், (2) திருச்சிராப்பள்ளி, (3) ஈரோடு, (4) திருப்பூர், (5) அம்பத்தூர் நகரியம், (6) ஆவடி நகரியம், (7) கத்திவாக்கம் நகரியம், (8) மாதவரம் நகரியம், (9) ஆலந்தூர், (10) பல்லவபுரம், (11) திருவொற்றியூர், (12) தாம்பரம், (13) வேலூர், (14) பொன்மலை,(15) திருநெல்வேலி, (16) தூத்துக்குடி, (17) சூரமங்கலம், (18) இராஜபாளையம், (19) மேலப்பாளையம், (20) தேனி-அல்லிநகரம், (21) விருதுநகர், (22) ஸ்ரீரங்கம், (23) சிவகாசி, (24) பாளையங்கோட்டை, (25) சங்கரன்கோயில், (26) நாகர்கோவில்.

நகர்ப்புற குப்பைகளை அகற்ற மேலே தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சிகளுக்கு ரூ. 225.59 இலட்சம் செலவில் வாகனங்கள் வாங்கித் தர நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூ.187.80 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் ரூ. 300.00 இலட்சம் பிற வளர்ச்சிப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சிகளுக்கு வழங்க அரசால் அனுமதிக்கப்பட்டு இதுவரை ரூ. 150.00 இலட்சத்திற்கான



1990 ஏப்ரல் 24]

திட்டங்கள் அனுமதிக்கப்பட்டு நகராட்சிகளுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களை நிறைவேற்ற மேலும் கீழ்க்காணும் நகராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன :

நகராட்சிகள்.

1. காஞ்சீபுரம்
2. கடலூர்
3. திருவண்ணாமலை
4. தர்மபுரி
5. உதகமண்டலம்
6. கரூர்
7. புதுக்கோட்டை
8. சிவகங்கை
9. தஞ்சாவூர்
10. இராமநாதபுரம்
11. திண்டுக்கல்
12. அறந்தாங்கி
13. கும்பகோணம்
14. குடியாத்தம்
15. திருவாரூர்.

**7. திடக் கழிவுப் பொருள் பராமரிப்பு:**

திடக்கழிவுப் பொருள் பராமரிப்புத் திட்டத்தின் பணிகளுக்கு ரூ. 225.59 இலட்சம் செலவில் வாகனங்கள் வாங்க அரசு ஒதுக்கீடு செய்து இச்செலவினங்களுக்கு ரூ. 200 இலட்சம் தற்போது அரசு அளித்து உள்ளது. நடப்பு ஆண்டு பிப்ரவரி மாதம் வரை ரூ. 127.80 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**8. ஒருங்கிணைந்த குறைந்த செலவில் கழிப்பிடம் மற்றும் துப்புரவுப் பணியாளர்களை விடுவிக்கும் திட்டம்:**

மைய அரசு மான்யத்துடன் ஹட்கோ நிறுவனத்தின் கடனுதவியுடன் தமிழ்நாட்டில் 21 நகராட்சிகளிலும், 10 பேரூராட்சிகளிலும் மொத்தம் 31 நகரங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

குடியுரிமைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் அம்பத்தூர் நகரியம், விழுப்புரம் மற்றும் நாகர்கோவில் நகராட்சிகள் ஹட்கோவில் கடன் உதவி பெறும் நோக்கில் சேர்க்கப்பட்டுள்ளன.

எல்லாத் தரப்பினருக்கும் இத் திட்டத்தின்கீழ் கழிவறைகள் கட்ட கடன் கொடுக்கப்படும். தரை மட்டம் வரை கழிவறை கட்டுவதில் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளவர்களின் வீடுகளுக்கு 45 சதவிகிதம் மான்யமாகவும், குறைந்த வருவாய் உள்ளவர்கள் வீடுகளில் கட்டப்படும் கழிவறைகளுக்கு 25 சதவீதம் மான்யமாகவும் வழங்கப்படும்.

மேற்கண்ட நகராட்சிகளில் தற்போது திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு கடன் விண்ணப்பத்துடன் ஹட்கோவுக்கு அனுப்பப்படும். சமீபத்தில் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்ளமைப்பு மேம்பாட்டுக் கழகம் ஹட்கோவுடன் தொடர்பு கொண்டு, திட்டத்தை செயல்படுத்த ஒருங்கிணைந்த முகமையாக விளங்கும்.

9. தெரு விளக்குகள் பராமரிப்பு:

நல்ல முறையில் தெரு விளக்குகள் பராமரிக்கப்பட 1–10–1986 முதல் நகராட்சிகள் தங்கள் பணியாளர்களைக் கொண்டே பராமரிப்புப் பணியினை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. தற்போது இம்முறை நன்கு செயல்பட்டு வருகின்றது.

10. வரி வசூலித்தல்:

வங்கிகள் மூலம் சொத்து வரி வசூலிக்கும் புதிய முறையினால் வரி வசூல் கூடுதலானது மட்டுமின்றி வரி வசூல் திறமை அதிகரிப்பும், இது சம்பந்தமாக பராமரிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் கணக்குகள், அப்போதைக்கப்போதே பதிவு செய்யப்பட்டு, நிர்வாகத்திறனும் உயர்ந்துள்ளது. இதற்கு பொது மக்களிடமிருந்து நல்ல ஆதரவும் கிடைத்துள்ளது.

11. நகர நிதி மற்றும் உள்ளமைப்பு மேம்பாட்டுக் கழகம்:

நகர மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தும் நகராட்சிகளுக்கு ஆலோசனை மற்றும் நிதி உதவி வழங்கும் பொருட்டு இந்நிதிக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இந் நிதிக் கழகம் ரூ. 200 லட்சம் பங்கு மூலதனமாகவும், பங்கு ஒவ்வொன்றும் ரூ. 100 மதிப்பு கொண்ட இரண்டு லட்சம் பங்குகளையும் கொண்டுள்ளது. இதில் ஒரு லட்சத்து இரண்டாயிரம் பங்குகளை மாநில அரசும், 78 ஆயிரம் பங்குகளை 106 நகராட்சி நகரியங்கள் 3 மாநகராட்சிகளும், 20 ஆயிரம் பங்குகளை ''ஹட்கோ'' நிறுவனமும் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்நிதிக் கழகம் நகராட்சிகளின் நிதி நிலைக்கு ஏற்ப சிறிய திட்டங்கள் மட்டுமின்றி வீடு கட்டுதல் போன்ற பெரிய திட்டங்களுக்கு இவ்வாண்டிலிருந்து நிதி உதவி அளிக்க உள்ளது.





12. ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியல்லாத பள்ளிப் பணியாளர்கள் :

அரசு ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பள்ளிப் பணியாளர்களை அரசுப் பணியாளர்களாக்கியது. அவர்களின் ஊதியத்தை 1–4–1990 முதல் அரசு வழங்கும். இதனால் நகராட்சிகளின் நிதிப்பளு பெருமளவு குறையும்.

## சென்னை மாநகராட்சி.

சென்னை மாநகராட்சி சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் அமைந்தது. அதன் தற்போதைய பிரதேச அதிகாரப் பரப்பளவு 174 ச.கி.மீ. நகரின் மொத்த மக்கள் தொகை 45 இலட்சங்களாகக் கணிக்கப்பட்டுள்ளது.

1. நிர்வாகம் :

சென்னை மாநகராட்சி மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களது காலம், சென்ற 1973 ஆம் ஆண்டுடன் முடிவு பெற்றது. அது முதற் கொண்டு, மன்றத்தின் பணிகள் சிறப்பு அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகின்றது. ஆணையாளர் மாநகராட்சியின் தலைமை நிர்வாக அலுவலராவார். மாநகராட்சியின் பராமரிப்புப் பணிகள், ஒவ்வொரு வட்டமும் 15 கோட்டங்களைக் கொண்ட 10 வட்ட அலுவலர்களின் சிறப்பான மேற்பார்வையில் நடைபெற்று வருகின்றன.

2. நிதி ஆதாரங்கள் •

சொத்து வரி, தொழில் வரி மற்றும் அரசினரால் வசூலிக்கப்பட்டு மாநகராட்சிக்கு வழங்கப்படும் சொத்து பரிமாற்றங்களின் மீது விதிக்கப்படும் வரி, கேளிக்கை வரி, விற்பனை வரி மீது விதிக்கப்படும் கூடுதல் மிகு வரி ஆகியவைகள் மாநகராட்சியின் பிரதான நிதி ஆதாரங்களாகும்.

சென்னை மாநகராட்சியின் நிதி ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு, அரசு, 1981–82 ஆம் ஆண்டில் விற்பனை வரி மீதான கூடுதல் மிகு வரியாக 5 சதவிகித வரி விதிப்பு அறிமுகப்படுத்தியது. 1987–88 ஆம் ஆண்டு வரை, அரசு அவ்வப்போது குறிப்பிட்ட தொகைகளை மாநகராட்சிக்கு வழங்கி வந்தது. 1988–89 ஆம் ஆண்டு முதற்கொண்டு சென்னை மாநகராட்சியின் பங்காக, விற்பனை வரி மீதான கூடுதல் மிகு வரியிலிருந்து கிடைக்கும் தொகைகளில் 65 சதவிகிதத் தொகையை அரசு மாநகராட்சிக்கு வழங்கி வருகிறது.

இதன் அடிப்படையில் 1988–89 ஆம் ஆண்டுக்கு ரூபாய்
1,090.93 இலட்சங்கள் சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்
பட்டது. சென்னை நகரில் வசூலிக்கப்படும் விற்பனை வரி
யின் மீதான கூடுதல் மிகு வரியிலிருந்து, 1989–90 ஆம்
ஆண்டுக்கு சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட வேண்டிய
தொகையை நிர்ணயிப்பதற்கு முன்னர் அரசு ரூ. 912.00
இலட்சங்களை மாநகராட்சிக்கு வழங்கியுள்ளது.

இந்த நடப்பு ஆண்டில், இப்போது விதிக்கப்படும் 10 சத
விகிதக் கூடுதல் மிகுவரி 15 சதவிகிதமாக உயர்த்தப்பட கரு
தப்பட்டுள்ளது. மேலும் இந்தக் கூடுதல் மிகு வரியில் கிட்டும்
வருவாயில் மாநகராட்சிக்கு வழங்கப்படும் பங்கு 50 சதவிகித
மாக இருக்கும். இதன் விளைவாக ரூ. 12.50 கோடி அளவில்
சென்னை மாநகராட்சிக்கு கூடுதல் வருவாய் கிட்டும் என்று
எதிர்பார்க்கப்படுகின்றது.

1989–90 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியால்
நிறைவேற்றப்பட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காகவும்,
மாநகராட்சியின் சொத்துக்களை பராமரிப்பதற்காகவும்,
பல்வேறு கணக்குத் தலைப்புகளின் கீழ் ரூ. 2,248.63 இலட்
சங்களை சென்னை மாநகராட்சிக்கு வழங்கியுள்ளது. அரசு
ஆண்டில் அரசு சுமார் ரூ. 3,250.00 இலட்சங்களை சென்னை
மாநகராட்சிக்கு வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு

1990–91 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியின் மொத்த
வருவாய்கள் மற்றும் செலவுகள் முறையே ரூ. 70.44 கோடிகள்
மற்றும் ரூ. 84.76 கோடிகள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்
படுகின்றது.

### 3. நிர்வாக சீரமைபபு

நிர்வாக சீரமைப்பின் நோக்குடன் உருவாக்கப்பட்ட வட்ட
அலுவலர்களை தொடர்ந்து, பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள்
வழங்கும் பணி சீரமைக்கப்பட்டு பொது மக்கள் தாங்கள் பணம்
கட்டிய அன்றே சான்றிதழ்களைப் பெற விரும்பின் ரூ. 25
செலுத்தி பெற்றுக் கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது.
இதே போல் தொழில் உரிமம் வழங்குவதும் சீரமைக்கப்பட்டு
உள்ளது. உரிமக் கட்டணம் செலுத்தியவுடன் தொழில்
உரிமம் புதுப்பிக்கப்பட்டு உடனே வழங்கப்படுகிறது.

மாநகராட்சிப் பணியாளர்களிடத்தில் குறிப்பாக மாநகராட்சி
யின் பெரும் பகுதியை உள்ளடக்கிய துப்புரவுப் பணியாளர்
களிடத்தில் எழுத்தறிவு இயக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



### 4. சாலைகள் :

சுமார் 1,600 கி.மீ. அளவுள்ள சாலைகளை சென்னை மாநக
ராட்சி பராமரித்து வருகின்றது. இவற்றில் சுமார் 350 கி.மீ.
சாலைகள் பேருந்து வழித் தடச் சாலைகளாகும். இச் சாலை
களை சுமார் 5 ஆண்டுகளுக்கொரு முறை புதுப்பிக்க வேண்டி
யுள்ளது. 1990-91ஆம் ஆண்டில் சாலைகளை பராமரிப்பதற்
க்காக ரூ. 500.00 இலட்சங்கள் செலவிடப்படும்.

### 5. தெரு விளக்குகள் :

விஸ்தரிக்கப்பட்ட பகுதிகளில், 150 கி.மீ. மின் கம்பிகளை
புதுப்பிக்கவும், 3,000 புதிய தெரு விளக்குகள் அமைக்கவும்
திட்டமிடப்பட்டுள்ளது. கத்திபாராவிலிருந்து செங்குன்றம்
வரையில், உள் வட்டச் சாலையில், ரூ. 90.00 இலட்சம் செல
வில், சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கும் பணி விரைவில்
நிறைவேற்றப்படும். 47,600 குழல் விளக்குகளும், 4,075 மெர்
குரி விளக்குகளும் மற்றும் 7,190 சோடியம் ஆவி விளக்குகளும்
சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

### 6. மழைநீர் வடிகால்கள்:

சுமார் 10 கி.மீ. நீளம் புதிய மழைநீர் வடிகால் அமைக்கவும்
தற்போதுள்ள மழைநீர் வடிகால்களைப் புதுப்பிக்கவும், நடப்பு
ஆண்டில் சுமார் ரூ. 95.00 இலட்சம் செலவிடப்படும். மாநக
ராட்சியால் பராமரிக்கப்படும் தற்போதுள்ள மழைநீர் வடி
கால்களின் நீளம் 550 கி.மீ. ஆகும்.

### 7. துப்புரவு :

பழைய 63 குப்பை லாரிகளுக்குப் பதிலாக ரூ. 150.00 இலட்
சம் செலவில், புதிய லாரிகள் வாங்குவதுடன், மேலும் சில
புதிய லாரிகள் வாங்கி, குப்பைகளை அகற்றும் பணியில் ஈடு
படுத்துவதின் மூலம்,நகரின் துப்புரவுப் பணிகள் தீவிரப்படுத்தப்
படும். புதிய லாரிகள் வாங்கும் வரையில் வாடகை லாரிகள்
இப்பணியில் ஈடுபடுத்தப்படும். கொடுங்கையூர், பெருங்குடி
ஆகிய இடங்களிலுள்ள குப்பை கொட்டுமிடங்கள் அபிவிருத்தி
செய்யப்படும்.

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி
களில் சுத்தத்தை உருவாக்கிட துப்புரவுத் துறையில் பணியின்
திறன் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இந்த சவாலான நிலையைச்
சமாளிக்க அலுவலர்களின் பணிகள் முடுக்கிவிடப்பட்டு பணி
யாளர்களின் வருகை சீர் செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டில்,
துப்புரவுப் பணிமீது தீவிரக் கவனம் செலுத்தி சென்னை மாநக
ரத்தில் சுத்தமும் தூய்மையும் உருவாக்கக் கருதப் பட்டுள்ளது.
சென்னை நகரில் புதிய 6 ரோல் ஆன் டிப்பர்கள், 3 காம்பேக்
டர்கள் மற்றும் 15 ரெப்யூஸ்காம்பேக்டர்கள் வாங்குவதன் மூலம்
இப்பணி நிறைவேற்றப்படும்.

**8. பகுதி–II–திட்டங்கள் :**

1990-91 ஆம் ஆண்டில் பகுதி-II திட்டங்களின் கீழ் பின்வரும் பணிகளை நிறைவேற்ற ரூ. 70.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | | (ரூபாய் இலட்சங்களில்). |
|---|---|---|
| 1 | கொளத்தூர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுவதற்காக. | 35.00 |
| 2 | கொன்னூர் நெடுஞ்சாலையில் போக்குவரத்து மேம்பாடு. | 20.00 |
| 3 | பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள் அபிவிருத்தி. | 15.00 |
| | | 70.00 |

**9. மக்கள் தொகை கட்டுப்பாடு திட்டங்கள் :**

உலக வங்கியின் நிதி உதவியுடன் குடும்ப நலத் திட்டங்களைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதின் மூலம், மக்கள் தொகை பெருக்கம் கட்டுப்படுத்தப்படும். குடும்ப நலத் திட்டங்களைச் சிறந்தமுறையில் செயல்படுத்துவதற்காக, அலுவலகம், தாய்சேய் நல மருத்துவ மனைகள் போன்றவைகளுக்காகக் கூடுதலாக 47 கட்டிடங்கள் கட்டப்படும்.

**10. தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தி திட்டம் :**

திரு.வி.க. சாலையில் ரூ. 79.00 இலட்சம் செலவில் அங்காடிகள் கட்டுவதற்காகவும், ஷெனாய்நகர் புல்லா அவென்யூவில் ரூ. 81.60 இலட்சம் செலவில் கடைகள் கட்டுவதற்காகவும் நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைந்துள்ள முனிசிபல் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியுதவி வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் குடிசைப் பகுதிகளில் ரூ. 120.00 இலட்சம் செலவில் 40 பொதுக் கழிப்பிடங்கள் கட்டும் திட்டமும் விரைவில் மேற்கொள்ளப்படும்.

**11. அல்லிகுளம் பகுதியில் அங்காடிகள் கட்டுதல் :**

அல்லிகுளம் பகுதியில் அங்காடிகள் கட்டும் பணி, 1990-91-ஆம் ஆண்டில் முடிவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மூர் அங்காடியில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு, இவ்வங்காடிகளில் இடம் கொடுக்கப்படும்.





**12. பாலங்கள் :**

ஆண்டர்சன் பாலம், கெல்லீஸ் பாலம் ஆகியவற்றை விரிவுபடுத்தும் பணிகள், 1990-91 ஆம் ஆண்டில் முடிவுறலாம்.

**13. பொதுக் கழிப்பிடங்கள்:**

தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூ. 120.00 இலட்சம் நிதி உதவியைக் கொண்டு, குடிசைப் பகுதிகளுக்கு அருகாமையில், 40 புதிய பொது கழிப்பிடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்புதிய பொது கழிப்பிடங்களைப் பராமரிக்கும் பணி, சுலாப் இண்டர்நேஷனல் போன்ற சேவை நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும். இப்புதிய கழிப்பிடங்களில், போதுமான தண்ணீர், விளக்கு போன்ற வசதிகள் செய்து தரப்படும். குடிசைப் பகுதிகளில் 500 கழிப்பிடங்கள் 1990 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் கட்டப்படும். அவைகள் தண்ணீர் வசதி, மின் விளக்கு வசதி ஆகியவை முழுமையாக பெற்றுள்ளவைகளாக செயல்படும்.

**14. நேரு வேலைவாய்ப்புத் திட்டம்.**

ரூபாய் 10,000-க்கு மேற்படாத வருவாய் உள்ள குடும்பங்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக, அக்குடும்பங்களைச் சேர்ந்த வாலிபர்கள், சொந்தமாக தொழில் செய்து வருவாய் ஈட்டும் வகையில் அவர்களுக்குப் பயிற்சியும், அரசு மானியம், வங்கிக் கடன் போன்ற நிதி உதவியும், வழங்கப்படும். இந்திய அரசின் விதிமுறைகளுக்கிணங்க, நகரில் இத் திட்டம் சென்னை மாநகராட்சியினால் நடைமுறைப்படுத்தப்படும். இத் திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்கள், தொழில் ஆரம்பிப்பதற்காகும் செலவில், 25 சத விகிதத்துக்கு சமமான ரூ. 4,000-ஐ மானியமாக பெறுவர். பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினருக்கும் ரூ. 5,000 மானியம் வழங்கப்படும். பயனடைவோரில் நலிந்த பிரிவுகளைச் சார்ந்த மகளிர் 30 சதவிகிதத்தினராக இருப்பர்.

**15. சிறப்புத் திட்டங்கள்:**

மாநகராட்சியின் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக, கடந்த ஆண்டு மாநகராட்சி மேற்கொண்ட ரூ. 6.00 கோடி அளவிலான சிறப்புத் திட்டங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மாநகராட்சியில் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக, நடப்பு ஆண்டில் மேலும் ரூ. 600.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மதுரை மாநகராட்சி.

1971-ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதி முதல் மதுரை நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது. 1981-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மதுரை மாநகராட்சியின் மக்கள் தொகை 8.18 லட்சங்களாகும். இருப்பினும், தற்போதைய மக்கள் தொகை 10 லட்சங்கள் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 51.85 சதுர கிலோ மீட்டர் ஆகும். 1990-91 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீட்டின்படி வரவு ரூ. 2,882.96 லட்சங்களாகவும், மற்றும் செலவு ரூ. 2,890.71 லட்சங்களாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

1. கல்வி:

மதுரை மாநகராட்சி தற்பொழுது 55 ஆரம்பப் பள்ளிகளையும் 13 நடுநிலைப்பள்ளிகளையும் 12 உயர்நிலைப் பள்ளிகளையும் மற்றும் 8 மேல்நிலைப் பள்ளிகளையும் பராமரித்து வருகிறது. மாநகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களும், 1-6-1986 முதல் அரசு ஊழியர்களாக அறிவிக்கப்பட்டு விட்டார்கள். அரசாணை (நிலை) எண். 347 கல்வி, நாள் 9—3—1990-ல் சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களுக்கு 1—4—1990 முதல் அரசு நிதியிலிருந்து சம்பளம் வழங்கப்படவேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது. 22,580 மாணவர்களும், 1,823 முதியோர் ஓய்வு ஊதியம் பெறுவோரும், தமிழக அரசின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன் பெறுகின்றனர்.

2. சாலைகள்:

மதுரை மாநகராட்சி கீழ்க்கண்ட வகை சாலைகளைப் பராமரித்து வருகிறது.

| | சாலை வகைகள் | | நீளம். (கி.மீ.) |
|---|---|---|---|
| 1. | தார் சாலைகள் | .. | 279.738 |
| 2. | சரளைச்சாலைகள் | .. | 66.792 |
| 3. | செம்மண் சாலைகள் | .. | 31.008 |
| 4. | கல்தளம் பரவப்பட்ட நடைபாதைகள் | .. | 54.168 |
| 5. | பாதசாரிகள் செல்ல, சாலையில் இரு பக்கமும் உள்ள நடைபாதை | | 42.929 |
| | மொத்தம் கி.மீ. | | 474.635 |



1990-91 ஆம் ஆண்டில் சாலைகள் அமைப்பதற்காகவும், சாலைகளைச் செப்பனிடுவதற்காகவும், மாநகராட்சி சுமார் ரூ. 170 லட்சங்களை செலவிட உத்தேசித்துள்ளது. 1990-91 ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ், நீட்டிக்கப்பட்ட பகுதிகளில் சாலைகளை மேம்படுத்த ரூ. 15 லட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. மின்சார மயானம் அமைத்தல்.

தத்தனேரி மயானத்தில், மின் எரியூட்டு சாதனம் அமைக்கும் பணிக்கு, அரசு ஏற்கனவே ரூ. 10 லட்சம் கடனாக வழங்கியுள்ளது. இத் திட்டத்தின் உத்தேச மதிப்பீடு, ரூ. 25 லட்சங்களாகும். இவ்வேலை, பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

4. நகராட்சி நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிதிஉதவி.

நகராட்சி நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், மொத்தம் ரூ. 300 லட்சம் செலவில் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, அரசு அனுமதி வழங்கியுள்ளது:—

| | நிதி உதவி திட்டத்தின் வகைகள். | | |
|---|---|---|---|
| (1) | கடன் (2) | மான்யம் (3) | மொத்தம். (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. கழிவு அகற்றும் பணிக்குக் கருவிகள் வாங்குவதற்கு. | 37.50 | 12.50 | 50.00 |
| 2. சாக்கடை அகற்றுவதற்கு தானியங்கி கருவி வாங்குவதற்கு. | 11.25 | 3.75 | 15.00 |
| 3. கம்ப்யூட்டர் அமைப்புக்கும் அது தொடர்பான கருவிகள் மற்றும் மேஜை நாற்காலிகள் தளவாடங்கள் வாங்குவதற்கு. | 15.00 | 5.00 | 20.00 |
| 4. மின் விளக்குகளுக்காக | 150.00 | 50.00 | 200.00 |
| 5. சாலை பராமரிப்புக்கான கருவிகள் வாங்குவதற்கு. | 11.25 | 3.75 | 15.00 |
| மொத்தம் .. | 225.00 | 75.00 | 300.00 |

5. நிதி ஆதாரம் :

சென்னை நகரத்தைத் தவிர பிற இடங்களில் வசூலிக்கப்படும் விற்பனை வரியின் மீதான மேல் வரியிலிருந்து 20 சதவீதத் தொகையை, சென்னை மாநகராட்சியைத் தவிர மற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் மானியமாக வழங்கப்படும். இதன் விளைவாக மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6. துப்புரவுப் பணி:

நாளொன்றுக்கு சராசரியாக 300 மெட்ரிக் டன் குப்பையும் 10 மெட்ரிக் டன் கழிவுப் பொருளும் சேகரிக்கப்பட்டு, உரக்கிடங்கிற்கு அனுப்பப்படுகிறது. தற்பொழுது மாநகராட்சியில் 2,579 துப்புரவுப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

7. குடிநீர் வழங்குதல் :

குடிநீர் வழங்கும் அமைப்பின் கீழ் 754.87 கிலோ மீட்டர் அளவிற்குக் கீழ்க்கண்டவாறு விநியோகம் செய்யப்படுகிறது:—

| | | (கிலோ மீட்டர்) |
|---|---|---|
| 1. பாதுகாக்கப்பட்ட குடிநீர் குழாய் நீளம் | | 418.23 |
| 2. கிணற்று நீர் வழங்கும் குழாய் நீளம் | | 336.64 |
| மொத்தம் | .. | 754.87 |

குடிநீர் வழங்கும் குழாய் பொருத்தப்படாத இடங்களுக்கு 13 குடிநீர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

8. சாக்கடை அமைத்தல் :

மதுரை மாநகராட்சியுடன் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு, திறந்தவெளி சாக்கடை அமைக்கும் பணிக்காக, அரசு 1990-91 ஆம் ஆண்டின் பகுதி 2 திட்டத்தின் கீழ், ரூ. 10 லட்சம் கடனாக வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. தெரு விளக்குகள் :

மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பஞ்சாயத்துப் பகுதிகளில் உள்ள தெரு விளக்குகள், தமிழ்நாடு மின்வாரியத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள மின் விளக்குகள், தொடர்ந்து மாநகராட்சியால் பராமரிக்கப்படுகிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு:—



| | | மின்சார வாரியம். | மாநகராட்சி. |
|---|---|---|---|
| 1. சோடியம் ஆவி விளக்கு | .. | 5 | 916 |
| 2. மெர்குரி ஆவி விளக்கு | .. | 448 | 1,559 |
| 3. இரட்டை குழல் விளக்கு | .. | 1,241 | 1,120 |
| 4. ஒற்றை குழல் விளக்கு | .. | 2,881 | 5,405 |
| 5. சாதாரண பல்பு | .. | .. | 734 |
| | | 4,575 | 9,734 |

நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதியிலிருந்து கடன்பெற்று, 1990-91-ஆம் ஆண்டில் 500 சோடியம் ஆவி விளக்குகள் ரூ. 15 இலட்சம் செலவில் முக்கிய சாலைகளில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## கோயம்புத்தூர் மாநகராட்சி.

கோயம்புத்தூர் நகராட்சி, 1981 ஆம் ஆண்டு, மே திங்கள் முதல் நாள் அன்று, மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது. மாநகரத்தின் மொத்தப் பரப்பளவு 105.60 சதுர கிலோ மீட்டராகும். 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இம்மாநகரின் மொத்த மக்கள் தொகை, 7,04,514 ஆகும். மாநகராட்சியின் (பொது நிதி) 1990-91 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி முறையே வரவு ரூ. 19.50 கோடி, மற்றும் செலவு ரூ. 19.25 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்படுகின்றது.

1. சாலைகள்:

(அ) இம்மாநகராட்சி, கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி, 598.55 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளைப் பராமரித்து வருகிறது:—

| | | | (கிலோ மீட்டர்) |
|---|---|---|---|
| (i) | சிமெண்ட் கற்சாலை, தார் சாலை, சந்துகள் முதலியன. | | 469.04 |
| (ii) | கல் தளச் சாலைகள் | .. | 60.44 |
| (iii) | மண் சாலைகள் மற்றும் கல் தளமிடாத சாலைகள். | .. | 32.16 |
| (iv) | கான்கிரீட் சதுரக் கற்களுடன் நடை பாதைகள். | | 36.91 |
| | மொத்தம் | .. | 598.55 |

(ஆ) 1990-91 ஆம் ஆண்டில், கீழ்க்குறிப்பிட்டவாறு சாலைப் பணிகள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளன.

| | | செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| (i) | கல்தளச் சாலைகள் அமைத்து, தார் தளமிடுதல் (65 கிலோ மீட்டர்). | 150.00 |
| (ii) | தற்போதுள்ள சாலைகளைப் பராமரித்தல் | 200.00 |

(இ) ரூ. 20 லட்சம் மதிப்பீட்டில், பொள்ளாச்சி சாலை மற்றும் பேரூர் சாலை ஆகியவற்றை இணைக்கும் பெரியசாலை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இதுவரை, ரூ. 8 இலட்சம் செலவில் கல் தளச்சாலை அமைக்கப்பட்டுவிட்டது. 1990-91-ல் இந்தச் சாலையின்மீது, தார் சாலை அமைக்கப்படும்.

(ஈ) 1990-91-ல் சங்கனூர் பள்ளத்தில், ரத்தினபுரியில் ஒன்றும் கணபதி-ஆவரம்பாளையம் சாலையில் ஒன்றும் ஆக இரண்டு பாலங்கள், ரூ. 35 லட்சம் மதிப்பீட்டில், நெடுஞ் சாலைத் துறை மூலம் கட்டி முடிக்க உத்தேசிக்கப்பட் டுள்ளது.

(உ) சுழல் நிதியில், ரூ. 22.30 இலட்சம் செலவில், கீழ்க் குறிப்பிட்டுள்ளபடி வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| கல்தளச் சாலைகள் | .. | 10.82 கிலோ மீட்டர் |
| கழிவுநீர் வடிகால் | .. | 5.82 கிலோ மீட்டர் |

1990-91ஆம் ஆண்டில், புதியதாக அமைக்கப்பட்டுள்ள வீட்டு காலனிகளில் சாலைகள் அமைக்கவும், கழிவு நீர் வடிகால்கள் அமைக்கவும், ரூ. 30 லட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட் டுள்ளது.

2. கட்டிடங்கள் :

(i) 1989-90 ஆம் ஆண்டில், மாநகராட்சி ஊழியர்களுக் காக ரூ. 12 லட்சம் செலவில் 12 குடியிருப்புகள் கட்டி முடிக்கப் பட்டு, அவைகளில் வாடகை அடிப்படையில் மாநகராட்சி ஊழியர் களும் குடி வந்துள்ளனர். அதே போல, 1990-91 ஆம் ஆண்டில், ரூ. 35 லட்சம் மதிப்பீட்டில், 35 குடியிருப்புகள் மாநகராட்சி ஊழியர்களுக்கென கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

(ii) 1990-91 ஆம் ஆண்டில், மாநகராட்சி துப்புரவுப் பணி யாளர்களுக்காக 250 குடியிருப்புகள், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டி, அவர்களுக்கு தவணை முறையில் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.



(iii) 1989-90 ஆம் ஆண்டில் 50 கடைகள் ரூ. 20 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டன. அதே போல, 1990-91 ஆம் ஆண்டில், அவினாசி சாலையிலும் டாடாபாத்தில் உள்ள ராஜு நாயுடு வீதியிலும் வணிக வளாகங்கள் ரூ. 50 லட்சம் மதிப்பீட் டில் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

3. குடிநீர் விநியோகம் :

575 கி.மீ. நீளக் குழாய் அமைப்புகள் மூலம் மாநகர் முழு வதும், சிறுவாணி குடிநீர் வழங்கப்படுகின்றது. குடிநீர் குழாய் அமைப்புக்கள் இல்லாத பகுதிகளுக்கு, 13 தண்ணீர் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகின்றது. இம்மாநகரில், தற்பொழுது, 52,180 வீட்டு குழாய் இணைப்புகளும், 1,073 பொது குடிநீர் குழாய்களும் உள்ளன. ரூ. 15 லட்சம் செலவில் குழாய்கள் அமைத்து, குடிநீர் விநியோகத்தை மேம்படுத்த, 1990-91-ல் திட்டமிடப்பட்டுள்ளது.

4. கழிவு நீர் வடிகால் திட்டம் :

(i) கழிவுநீர் வடிகால்கள் அமைக்கும் பணியை, தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் நிறைவேற்றி வருகின்றது. இப்பணி முந்தைய நகராட்சிப் பரப்பில் மூன்று பகுதிகளை உள் ளடக்கும். பகுதி I மற்றும் பகுதி II திட்டப்பணி முடிக்கப் பட்டு, பயன்படுத்தப்படுகின்றது. பகுதி III-ல் பணிகள் முன் னேற்றத்தில் உள்ளது. மாநகரில் வடிகால் அமைக்கப்படா மல் உள்ள பகுதிகளுக்கும் புதை சாக்கடை திட்டத்தினை திட்ட மிட்ட முறையில் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ii) 1990-91 ஆம் ஆண்டில், ஏற்கனவே உள்ள மழை நீர் வடிகால்களைப் பராமரிக்கவும், புதிதாக மழை நீர் வடிகால் கள் கட்டவும் ரூ. 137.72 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

5. தெரு விளக்குகள் :

(i) மாநகராட்சி, கீழே குறிப்பிட்டுள்ளவாறு, மொத்தம், 16,055 தெரு விளக்குகளைப் பராமரித்து வருகிறது:—

| | மாநகராட்சி பராமரிப்பு. | மின் வாரியம் பராமரிப்பு. | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. சோடியம் ஆவி விளக்குகள். | 1,114 | 13 | 1,127 |
| 2. பாதரச ஆவி விளக்குகள் | 1,331 | 118 | 1,449 |
| 3. குழல் விளக்குகள் .. | 5,771 | 7,540 | 13,311 |
| 4. மற்ற விளக்குகள் .. | 168 | .. | 168 |
| | 8,384 | 7,671 | 16,055 |

(ii) 1990-91 ஆம் ஆண்டில், கூடுதலாக ஒளி வசதியுடன் மாநகரை அழகுபடுத்தும் பணியில் ஒரு கட்டமாக, மாநகரில் உள்ள நெடுஞ்சாலைத் துறை சாலைகள் மற்றும் பிரதான சாலைகளில், மையப் பிரிவில் இரு பக்க சோடியம் ஆவி விளக் குகள் அமைக்க ரூ. 32 லட்சத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், புதிதாக உருவாகியுள்ள குடியிருப்புகளில் 1,000 குழல் விளக்குகள், 1990-91-ல் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

(iii) 1989-90-ல் மின் விநியோகத்தில், குறைவான வோல் டேஜ் உள்ளது என்ற புகார்களைத் தவிர்க்கவும், மின் உபயோகம் அதிகமாக உள்ள நேரங்களில் மின் தடை உண்டாகிறது என்ற புகார்களைத் தவிர்க்கவும், இரண்டு புதிய மின்பெறும் முனைகள் (points of sumply) ரூ. 30 லட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ளன. 1990-91-ல் பீளமேட்டில், மேலும் ஒரு புதிய மின்பெறும் முனை (point of supply) ரூ. 15 இலட்சங்கள் செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6. கல்வி:

மாநகராட்சிப் பள்ளிகளில் மொத்தம் 2,429 ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியல்லாதார்கள் பணியாற்றுகின்றனர். தற்பொழுது மாநகராட்சி கீழ்க் குறிப்பிட்டுள்ள பள்ளிகளை நிர்வகித்து வரு கின்றது:—

| | | | |
|---|---|---|---|
| ஆரம்பப் பள்ளிகள் | .. | .. | 65 |
| உயர் ஆரம்பப் பள்ளிகள் | .. | .. | 13 |
| நடுநிலைப்பள்ளி (Secondary Education Patterns) | | | 1 |
| உயர்நிலைப்பள்ளிகள் | .. | .. | 23 |
| மேல்நிலைப்பள்ளிகள் | .. | .. | 9 |
| ஊமை மற்றும் காது கேளாதோர் பள்ளி | | | 1 |

1989-90-ம் ஆண்டில், பள்ளிக் கட்டிடங்களைப் பராமரிக்க ரூ. 6.90 லட்சம் செலவிடப்பட்டது. 1990-91-ல், இவை, ரூ. 12.50 லட்சம் செலவில் பராமரிக்கப்பட திட்டமிடப்பட் டுள்ளது.

7. பொதுச் சுகாதாரம் :

துப்புரவுப் பணிகளுக்காக, இம்மாநகராட்சியில் 1,857 பணியாளர்கள் பணி புரிகின்றனர். நாளொன்றுக்குச் சுமார் 500 மெ.டன் குப்பைகள் மற்றும் கழிவுப் பொருட்கள் நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்தப்படுகின்றன. 1989-90-ல் உலக வங்கி உதவியுடன், 5 லாரிகள் வாங்கப்பட்டன. மேலும் ரூ. 10 லட்சம் செலவில், ஒரு சிறப்புத் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு, துப்புரவு மேம்படுத்தப்பட்டது.



தற்பொழுது, துப்புரவுப் பணிகளுக்காக, கீழ்க் குறிப்பிட்ட வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன:—

| | | | |
|---|---|---|---|
| ஃப்ரண்ட் எண்ட் லோடர் | .. | .. | 1 |
| எக்ஸ்கவேட்டர்-கம்-லோடர் | .. | .. | 1 |
| டம்பர் ப்ளோஸர் | .. | .. | 1 |
| லாரிகள் | .. | .. | 11 |
| சிறிய லாரிகள் | .. | .. | 19 |

1989-90 ஆம் ஆண்டில், கொசுத் தொல்லையைக் கட்டுப் படுத்த ஒரு தெர்மோஃபாசின் இயந்திரம் வாங்கப்பட்டது. 1990-91 ஆம் ஆண்டில். மேலும் 4 தெர்மோ ஃபாசின் இயந்திரங் கள் ரூ. 10 லட்சம் மதிப்பீட்டில், வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

துப்புரவுப் பணிக்காக உபயோகிக்கப்பட்ட நான்கு பழைய லாரிகள் உபயோகிப்பதற்கு பயனற்றவை என்று ஒதுக்கி நான்கு புதிய லாரிகளை வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுகா தாரத் துறையில் வாகனங்களோடு, கொசுப் பகுதிகளில் பயன் படுத்த நான்கு புதிய டிப்பர்கள் அல்லது டெம்போக்களைச் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8. நகராட்சி நகர் வளர்ச்சி நிதி :

உலக வங்கியின் நிதி உதவியை, நகராட்சி நகர் வளர்ச்சி நிதி மூலம் பெற்று கீழ் குறிப்பிட்ட வேலைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது:—

| வரிசை எண் மற்றும் பெயர். | உத்தேச திட்டச் செலவு. | எதிர் பார்க்கும் ஆண்டு வருமானம். |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (1) | (2) | (3) |
| 1 மாநகர எல்லைகளில் மேட்டுப் பாளையம் சாலை மற்றும் பாலக்காடு சாலை ஆகியவை களில் லாரிகள் நிறுத்துமிடங்கள் அமைத்தல். | 100.00 | 5.00 |
| 2 ராஜவீதியில் நவீன வணிக வளாகம் அமைத்தல். | 400.00 | 63.00 |
| 3 திடக்கழிவு பொருள் நிர்வாகம் (லாரிகள் வாங்குதல்). | 121.00 | — |

9. பல்வகை :

(அ) மரங்கள் நடுதல் :

சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்த, மாநகரில் இயங்கும் பல்வேறு சேவை நிறுவனங்களின் உதவியுடனும், அரசின் வனத் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளுடன் இணைந்தும், 19,344 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மரக் காவலர்களால் அவைகள் கவனத்துடன் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த பாதுகாப்புப் பணியாளர்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் நீர் ஊற்றி அவற்றைப் பராமரித்து வருகின்றனர்.

(ஆ) சாலையோர பூங்காக்கள் :

சாலையோரப் பூங்காக்களை அமைக்க ஏறக்குறைய 120 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 32 லட்சங்கள் செலவில் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் மாநகரம் அழகு பெற்றுள்ளது.

(இ) உயிரியல் பூங்கா :

மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் உயிரியல் பூங்கா, பள்ளிச் சிறார்களுக்கு கல்வியளிக்கும் வகையில் பயனுடையதாக உள்ளது. 1989-90ஆம் ஆண்டில், மிருகங்களும், பறவைகளும் ரூ. 80,000 செலவில் வாங்கப்பட்டன. 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 2 லட்சம் மதிப்பீட்டில், இரண்டு நீர் யானைகளை வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

144374

D
V211,31(N9)
N90.31.2